உ

தமிழ்த்தாய் வாழ்க.

தமிழ்ப் பொழில்.

தஞ்சைக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு.

பிரபவ ஆண்டு.

(1927–28.)

மூன்றாம் துணர்.

பொழிற்றொண்டர்,

திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்.

திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்.

தஞ்சைக்
கரந்தைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

வேண்டுகோள்.

நமது பொழிலின் மூன்றாம் துணர், எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இன்று நிறைவுற்றது. சென்ற ஆண்டின் இறுதியிலே வெளிவந்து விடுமென எண்ணியதும், எண்ணியாங்கு இயன்றவரை முயன்றதும் திருவருட்செயலின் வழிப்பட்டன வாயின. என்றாலும், நமது பொழிலன்பர்கள், வழக்கம்போல் இத்தாழ்வினையும் பொருள் செய்யாது, பொறுமையுற்றிருந்ததற்கு நமது மனமார்ந்த நன்றியறிவினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொழிலின் வெளியீடுகள் தாழ்த்து வெளிவருவதற்குரியவை, 1. போதிய அளவு கட்டுரைகள் வேண்டுங்காலத் தின்மை, 2. பொழில் வெளியீட்டிற்கென்றே முழுநேரமும் செலவிடத்தக்க தொண்டரின்மை எனும் இவைகளேயாகும்.

சென்ற ஆண்டில் போறிஞர்கள் சிலரால் இதழாசிரியர் கழகம் ஒன்று அமைந்திருப்பதும், பொழிற்றொண்டருள் ஒருவராகக் கற்றுவல்ல போறிஞர் திரு. L. உலகநாத பிள்ளையவர்கள் வந்திருப்பதும் முதற்குறையைப் பெரிதும் நீக்கிவந்தன. இவ்வாண்டில் அக்குறைக்கே யிடனின்றி, இன்னும் பலவாய கட்டுரைகளை விரைவாக எழுதிவர, அன்னோர் யாரும் முனைந்திருக்கின்றனர் அன்றியும், பொழிற்றொண்டிற் கென்றே ஒரு பண்டிதரை ஏற்படுத்திக் கொள்ளச் சங்கம் ஒப்பம் தந்துளது. தக்க பண்டிதர் ஒருவர் விரைவில் அமைக்கப் பெறுவார். எனவே, மேற்கூறிய குறைகளிரண்டும் இவ்வாண்டில் எய்துதற்கிடனில்லை என்பது ஒருதலை.

பொழிலின் வருவாய், பொழில் நிகழ்ச்சிக்கும் போதிய தன்றாயிருக்கவும், தமிழ்வளர்ச்சியொன்றே கருதிச் சங்கம் புரிந்து வரும் இந்நற்றொண்டை, பொழிலன்பர்கள் கைவிடாது போற்றி வர மிக வேண்டுகின்றோம். மேலும், நமது பொழிலன்பர்கள் தங்கள் தங்கள் அன்பர்களையும் இந்நன்முயற்சியில் சேர்த்துக் கொண்டு பொழிலைப்புரந்துவரவும் வேண்டுகின்றோம்.

நமது பொழிலின் தாழ்ச்சியினைப் பொருள் செய்யாது மாற்றிதழ்கள் அனுப்பிவரும் இதழாசிரியர்கட்கெல்லாம் நமது மனமார்ந்த நன்றியறிவினையும் வணக்கத்தினையும் தெரிவிக்கின்றோம்.

கூடியவிரைவில் வெளிவரும் நான்காந்துணர் முதன் மலரின் வி. பி. பி. அஞ்சலை அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ள, ஆண்டு உறுப்பினராகிய பொழிலன்பர்களை மிகவும் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

இங்ஙனம்,

R. வேங்கடாசலம்,

பொழிற்றொண்டன்.

கட்டுரை எழுதிய திருவாளர்களும் கட்டுரைகளும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.



“ தந்நலங் கருதாப் பொதுநலத் தொண்டர்,
தமிழ்ப்புல வோர்கள் தம்பெருந் தோழர்,
எண்ணில் சிறார்க்குக் கண்ணருள் அன்னையர்,
உடல்பொருள் உயிரெலாம் உரிமை யாக்கித்
தமிழ்த்தொண் டியற்றும் சங்கத் தலைவர்”

திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, B A., B.L.; அவர்கள்.

உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் : ௬.	பிரபவ – சித்திரை.	மலர் : க.

இராசராசன் I.

பண்டிதர் திரு. L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

முன்னுரை

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே-மண்ணாவதுஞ்சோழ மண்டலமே" என்னும் ஆன்றோர் கட்டுரைக்கிணங்க, வான்பொய்ப்பினும் தான்பொய்த்திடாத வரத்தினையுடைய பொன்னி நன்னதி இடையறாத ஒழுகலின், வித்திய ஒன்று பத்து நூறாக விளையும் வளத்திற் சிறந்த நீர்நாட்டினை, இமய முதற் குமரியின்காறும் ஆணைசெல்ல, செங்கோல் ஓச்சிய சோழர்கள், படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டிருந்த பழந் தமிழ்க்குடியினர் என்பது முன்னோர்களின் கொள்கையாகும். அவர்கள், வரலாற்றுக் காலத்தினர், அதற்கு முற்பட்டிருந்தவர் என்றிருவகைப்படுவர். அவருள், முன்னிருந்தாரை ஒழித்துப், பின்னிருந்தவருள் தொன்மையுற்றவன் கரிகாற்பெருவளத்தான் என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மை. இவ்வளவினையடுத்து, புறநானூற்றினை யுள்ளிட்ட சங்கநூல் களினும், பிறவற்றினும் சோழர்பலர் கூறப்பட்டிருப்பினும்,

அன்னவர் வரலாறு இன்னதென அறிவதற்கேற்ற கருவிகள் கிடைத்திலாமையின், அவர்களைப்பற்றி ஆராய்வதற் கியலாதாயிற்று. ஆயினும், அரசியலார் கல்வெட்டாராய்ச்சியாளரின் ஆண்டு அறிக்கைகளால், கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டு தொட்டுச் சோழர் வரலாறு இருள் சிறிது நீங்கி ஒளிருதல் மகிழ்தக்கது. பெரும்பான்மையும், அவ்வறிக்கைகளையும், கல்வெட்டுக்களையும், சிறுபான்மை ஏனையவற்றையும் துணையாகக் கொண்டு, ஆராய்வதற்கு ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்டவன் முதலாவது இராசராசன் ஆவான். இவனுக்கு முன்னர் இராசராசன் என்னும் பெயருடையார் இல்லாமையானும், இப்பெயருடையவர் பலர் பின்னர்க் கேட்கப்படுவதானும், இவனே அவருள் முன்னவனெனக் கொள்வது சால்புடைத்தாயிற்று. இவன் அரும்பெருஞ் செய்கைபல செய்த பெருஞ்சோழனெனினும், இவனைப்பற்றி ஆராய்வதன்முன், இன்னவனது முன்னோரைப்பற்றிச் சிறிது சொல்லாதொழியின், இவனது பெருந்தகைமையும் பிறவும் இனிது விளங்காவாகலின், அவர்களைப் பற்றிச் சுருங்கக் கூறுவேன்.

இராசராசன் முன்னோர்கள்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் பல்லவர்கள் வடமேற்கு நாடுகளின் வழியாக இடை இந்தியாவிற் புகுந்து, மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆந்திரர்களை வென்று, காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு மேலான நிலைமையில் இருக்கையில், பம்பாய் இராசதானியிலுள்ள பாதாமியைத் தனக்கு அரசிருக்கையாகக்கொண்டு மிக்க உயரிய நிலையிலிருந்த சளுக்கமன்னன், இரண்டாம் புலிகேசி என்பவன், தன் நாட்டை நெடுந்தூரமளவும் பெருக்கிப் பல்லவரைக் காஞ்சியினின்றும் வெளிவராவண்ணம் அடக்கினன். அதனால், இருவருக்கும் அடிக்கடி சண்டையும் சச்சரவும் மிகுந்திட, நாடு இரண்டுபட, நகரமுழுவதும் குழப்பம் உண்டாயிற்று. அப்பொழுது காலங்கருதியிருந்த சோழன் விசயாலயன் என்பவன், ஒரு சிறு படையுடன் திடீரென வந்து

விசயாலய சோழன் கி-பி. 830

தஞ்சைநகரை எளிதிற்கைப்பற்றி, அதனைத் தன் தலைநகராகக் கொண்டு செங்கோலோச்சினன். சோழர் தலைநகர் உறையூர் என்பதொழிந்து, இவன் காலந்தொட்டுத் தஞ்சைநகரமாயிற்று. தஞ்சையைத் தலைநகராகக்கொண்ட சோழர்களில் இவனே முதலவனாவான். * இவனைப் பரகேசரிவர்மன் விசயாலய சோழ தேவன் என்பார். †

ஆதித்தன் I 880-907

விசயாலயனுக்குப்பின் அவன் மகன் இராசகேசரிவர்மன் ஆதித்தன் I அரியணை ஏறினன். அந்நாளையில், தொண்டை நாட்டின் தலைநகராகிய காஞ்சியில், பல்லவர் மிக்க சீர்குலைந்த நிலையில் ஆட்சிசெய்திருந்தனர். அதனை அறிந்த ஆதித்தன், சேரமான் தாணுரவி என்பவனோடு நட்புக் கொண்டு தொண்டைநாட்டின் மீது படையெடுத்துச் சென்றனன். அங்கிருந்த பல்லவர் தலைவன் அபாரஜிதவர்மன் என்னும் நிருபதுங்கன், கங்கர் குலத்தரசன் முதற்பிருதிவிபதியைத் துணைகொண்டு எதிர்த்தும் தோல்வியுற்றனன். கி-பி. மூன்றாம் நூற்றாண்டுதொட்டுப் பல்லவர்களின் ஆட்சியின் கீழிருந்த தொண்டைநாடு இதுமுதல் சோழரது ஆணைக்கடங்கியதாயிற்று. இப்போர்முனையில் வீரத்துடன் போர்புரிந்தவன் படைத்தலைவன் விக்கியண்ணன் என்பவன். அவனது வீரச்செய்கையை மெச்சிய ஆதித்தனும், சேரமானும், சிம்மாசனம், ஈச்சோப்பி, பல்லக்கு, முரசு, களிற்றுப்படை முதலியவற்றை அவனுக்குப் பரிசளித்ததன்றிச் செம்பியன் தமிழவேள் என்னும் பட்டமும் அளித்தனர். தொண்டைநாடேயன்றிக் கொங்குநாடும் சின்னாளில் ஆதித்தன் கைவசமாயிற்று. இவன், வடவாற்காட்டில் காளத்திக்கருகிலுள்ள தொண்டைமானாற்றூரில் இறந்தமையின், இவனைத் தொண்டைமானாற்றூர்த் துஞ்சினதேவன் என்பர்.

---

*. *Tiruvalangadu plates.*

†. *Ep. Annual Report No. 665. Public 28th July 1910. S. I. I. vol. III Part III page 221.*

ஆதித்தன் இறந்தபின்னர் அவன் மகன் பராந்தகன் I பரகேசரி என்னும் பட்டத்துடன் அரியணை ஏறினன். அவன் வாணர்களை வெல்லக்கருதி அன்னவர் நாடாகிய வாணகப்பாடியை நோக்கிச்செல்வானாயினன். வாணகப்பாடி என்பது பாலாற்றுக்கு வடக்கே வடவாற்காட்டினைத் தன்னுள்ளடக்கிய இடம் என்பர். இதனை வடுகவழிமேற்கு எனவும் கூறுப. இங்கு வாணர்க்கரசன் வித்தியாதரன் அரசு செய்திருந்தனன். இவன் தன் மகன் விசயாதித்தனோடு வந்து போர்புரியவும், பராந்தகன் வீரருட் சிறந்த வீரனாதலின், இவ்விருவரையும் வென்று இவர்கள் நாட்டினைக் கைக்கொண்டு, இப்போரில் தனக்குத் துணையாக இருந்த கங்கர்குலத்தரசன் இரண்டாம் பிருதிவிபதிக்கு அதனையளித்துச் செம்பியன் மாவலிவாணராயன் எனப் பட்டஞ்சூட்டி, அவனைத் தன்கீழ்ச் சிற்றரசனாக்கினன்.

பராந்தகன் I
907-953

இவ்வாறு வாணர்களை வென்றடக்கியபின் பராந்தகன், பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்றனன். பாண்டிநாட்டிற்குத் தலைநகராகிய மதுரையில் இராசசிம்ம பாண்டியன் செங்கோல் செலுத்தியிருந்தான். அவன் எதிர்த்து நிற்க வாற்றாது புறந்தந்தோடிட, மதுரை பராந்தகன் கைவசமாயிற்று. இதனால் மதுரைகொண்ட பரகேசரியானன் பராந்தகன்.

மதுரை
கொண்டது
909-910

புறந்தந்தோடிய இராசசிம்மன், இலங்கைமன்னன் ஐந்தாம் காசிபனைத் துணைவேண்டினன். அதற்கிணங்கி அவன், யானைப் படை குதிரைப்படைகளுடன் சிறந்த வீரர்களடங்கிய பெரிய தானையைத் தன் சாமந்தன்வசமனுப்ப, அது பாண்டியநாட்டினை அடைந்தது. அதைக்கண்டு பெருமகிழ்வுற்ற பாண்டியன், “இனி இவ்வுலகமுழுவதையும் என் குடைக்கீழ் ஆக்குவேன்” எனக் கூறித் தன்படையுடன் சிங்களவர் தானையும் ஒருங்குகூடிப் பராந்தகன்மீது செல்லுமாறு அனுப்பினன். வேளூர் என்னும் இடத்தில் கடும்போர் நடந்தது. இப்போர்க்களத்தில் பாண்டிப்படையும் சிங்களப்படையும் முற்றிலும் முறியடிக்கப்பட்டன. பாண்டியனும் அச்சுற்று மதுரையை விடுத்து இலங்கையைப் புகலிடமாக அடைந்தனன்.

பாண்டியனோடு
இரண்டாம்
போர்
918-919

சிங்கள அரசனது துணைவலியே, பாண்டியர்கள் பன் முறையும் உண்டுபண்ணும் இடர்ப்பாட்டிற்குக் காரணமாகும் என் றறிந்த பராந்தகன், இத்தகைய துன்பங்கட்கு ஏதுவாயிருப்பதை அடியோடு ஒழிப்பதே தக்கதெனக் கருதி, மிக்க சீற்றத்துடன் கடலைக் கடந்துபோய் இலங்கையை முற்றுகைசெய்து, எதிர்த்து வந்த சிங்களவரை எல்லாம் தன் வாட்படைக்கு இரையாக்கி, அன்னவர் மனைவியர் அழுத கண்ணீரால் தனது சினத்தீ சிறிது தணியப்பெற்றுத் தன் நகரை அடைந்தனன். கடலைக்கடந்து இலங்கையில் இராமனைப்போல் போர்புரிந்தமை யின், இவனுக்குச் சங்கிராமராகவன் என்னும் பெயர் உளதாயிற்று. இவ்வாறு இவன் மதுரை யையும், இலங்கையாகிய ஈழத்தையும் வென்று கொண்டமையின், 'மதுரையும் ஈழமுங்கொண்ட பரகேசரிவர் மன்' என இவனை வழங்கத்தொடங்கினர். இவனுக்குச் சோழ குலப்பெருமானார், வீரசோழன், வீரநாராயணன் என்னும் பெயர்களும் இருந்தன. சமரகேசரி, விக்கிரமசிங்கன், குஞ்சர மல்லன், சோழசிகாமணி, சூரசிகாமணி என்ற விருதுப்பெயர் களும் இவற்குண்டு. இவன் படைத்தலைவன் சிறுகுளத்தூர் செம்பியன் சோழியவரையன் என்பவன். அவன் நல்லூரில் நடந்தபோரில் சீட்புலி என்பவனைக்கொன்று ஊரையும் பாழ் படுத்தினன்.

இலங்கைமீது படையெடுப்பு

உடையபிராட்டியார் கோக்கிழானடிகளும், வில்லவன் மாதேவடிகளும் இவன் மனைவியராவார். இவனுக்கு, இராசா தித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என மக்கள் மூவர் இருந்தனர்.

இவனது இருபத்தொன்பதாவது ஆண்டினதாய கோலார் சாசனத்தும் பிறவற்றினும், கொங்குநாட்டுப் பராந்தகபுரம், கொங்குப்பெருவழி பராந்தகபுரம் எனக் காணப்படுதலின், கொங்குநாடும் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தமை விளங்கும்.

இவ்வண்ணம் பற்பல நாடுகளையும் கைக்கொண்டு, எங்கும் புகழ்பரப்பிக் கொங்கிற் பொன்கொண்டு புலியூர்ச் சிற்றம்பலத் தைப் பொன்வேய்ந்து நாட்டை நலமுற நாற்பத்தாறு யாண்டள வும் ஆட்சி புரிந்தனன்.

தெற்கே, கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள சுசீந்திரத்தும், வடக்கே, காளத்தியிலும், மேற்கே, கருவூருக்கு அடுத்த சோமூரிலும் இவனது சாசனங்கள் காணப்படுதலின், இவன் காலத்தில் சோழரது ஆட்சி நெடுந்தூரமளவும் பரவியிருந்தமை காண்க.

இப்பராந்தகனது ஆட்சியின் கடைக்காலமாகிய 947-ஆம் யாண்டில், துங்கபத்திரைக்கரையில் அரசுசெய்திருந்த இராட்டிர கூடத்தரசன் மூன்றாங் கிருட்டினனான கன்னரதேவன் என்பவன் படையெடுத்து வந்து சோழநாட்டின் வடவெல்லையிற் குழப்பத்தை உண்டாக்கினான். அப்பொழுது வடவாற்காட்டிலிருந்த இவன் மகன் இராசாதித்தன், ஒரு பெருஞ் சேனையோடு சென்று எதிர்த்திட, ஆர்க்கோணத்திற்கு ஆறு மைலுக் கப்பாலுள்ள தக்கோலம் என்னும் இடத்தில், இரு பெரும்படையும் கைகலந்து போர்புரிந்தன. கடும்போர் நடக்கையில் கன்னர தேவனது சேனை முறியுண்டது. இனிச் சோழர்க்கே வெற்றியென எவரும் கருதியிருக்கையில், கன்னரதேவன் தங்கை கணவன் இரண்டாம் பூதுகன், இராசாதித்தன் ஏறியிருந்த யானையின்மீது விரைவிற் பாய்ந்து, தன் உடைவாளை உருவிக்குத்திட, அவனும் வீழ்ந்திறந்தனன். யானைமேல் வீழ்ந்து துஞ்சினமையின், இராசாதித்தனுக்கு "யானைமேற்றுஞ்சினான்" என்னும் பெயர் வழங்குவதாயிற்று. *G. O. No. 919 Pub. 29 July 1912, Para 14.*

இராசாதித்தன் 950

இவனுக்குக்கோதண்டராமன் எனவும் பெயருண்டு. இவன் தாயார் உடையபிராட்டியார் கோக்கிழானடிகள்; பட்டத்தரசி ஈராயிரவன் தேவி அம்மனார்.

காளத்திக்கருகிலுள்ள கோதண்டராமேச்சரமும், அரக்கோணத்திற்கு அருகில் கீழைப்பாக்கத்திலுள்ள ஆதித்தேச்சரமும் இவன் எடுப்பித்த ஆலயங்கள் என்பர்.

இவ்வாறு இராசாதித்தன் இறந்துபோக, தொண்டைநாடு கன்னரதேவன் வசமாயிற்று. இராசாதித்தன் தம்பி கண்ட

கண்ட ராதித்தன் 954

ராதித்தன், இராசகேசரிவர்மன் பராந்தகன் கண்டராதித்தன் என்னும் பெயருடன் சோழ நாட்டை ஆளத்தொடங்கினான். இவன் செம்பியன் மாதேவியாரை மணந்து மதுராந்தகன் என்னும் மைந்தனைப் பெற்றுவைத்துக், கண்டராதித்த சதுர்வேதிமங்கலம் எனக் காவிரியின் வடகரையில் தன்பெயரால் ஊர் உண்டாக்கி விண்ணுலகடைந்தனன். இவனது படிமத்தைக் கோனேரிராசபுரத்துக்கோயிலுட் காணலாம்.

அரிஞ்சயன்

இவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் அரிஞ்சயன் என்பவன். இவனை அரிந்தமன் எனவும் கூறுவர். இவனைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவன் மகன் பராந்தகன் II.

பராந்தகன் II 954-970

தன் தந்தைக்குப்பிறகு பராந்தகன் II இராசகேசரி என்னும் பட்டத்துடன் சோழநாட்டின் ஆட்சி பெற்றான். 'கலியுகத்தில் வழக்குவீழ்ந்த நீதிகளை மீட்டும் நிலைநிறுத்துதல் காரணமாகப் பண்டைக்காலத்திருந்த மனுவே இன்றுவந் தவதரித்தனன் எனக் குடிகள் கொண்டாடவும், இவன் காலத்தில், பூமாலையைக் குறிக்கும் ஆரம் என்னும் மொழிக்கணுள்ள, 'ஆ' என்ற எழுத்தொலியைக் கேட்பதல்லது, குடிகள் துன்புற்று ஆ என்றலறி ஓலமிட்டு அரற்றிய ஒலியை எங்கும் கேட்டதில்லை எனப் புகழ்ந்துரைக்கவும் செங்கோலோச்சினான்' எனத் திருவாலங்காட்டுச் சாசனம் கூறுநிற்கும். இவன் சேவூர்ப்பறந்தலையில் வீரபாண்டியனோடு கடும்போர் புரிந்து அவனைப்புறந்தந்தோடிக் காட்டில் ஒளித்திடச் செய்தனன் என லீடன் சாசனம் கூறுகின்றது. அதனால் இவற்குப் பாண்டியனைச் சுரம் இறக்கின சுந்தரசோழன் என்னும் பெயர் உண்டாயிற்று. சுந்தரசோழன் என்பது இவன் பெயர்களுள் ஒன்றாகும். இவன் கடவுண்மாட்டுப் பேரன்புடையன் என்பது 'ஆழ்வார் பராந்தகன்' என்னும் சாசனப்பகுதியால் விளங்குகின்றது. இவன் தனது கடைசி காலத்தில் பொன்மாளிகையில் (சிதம்பரத்தில்) தன் மனையாளோடிருந்து காலங்கழித்திருக்கையில், புறந்தந்தோடிச் சுரத்தில் ஒளித்திருந்த வீரபாண்டியன், அற்றநோக்கிவந்து, இவனைக் கொன்றிருத்தலமையுமென்பது

‘சோழன் முடித்தலைகொண்ட வீரபாண்டியன்’ என்னும் சாசனப் பகுதிகொண்டு ஊகிக்கின்றனர். இவன் பொன்மாளிகையில் இறந்தமையால், இவற்குப் ‘பொன்மாளிகைத் துஞ்சினதேவன்’ எனும் பெயருளதாயிற்று. *G. O. No. 920, Pub. 4th August 1914, Para 15.*

இவன் இறந்தபோது இவனது மனைவியார், வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறினர். இதனைத் திருவாலங்காட்டுச் சாசனத்தாற்காண்க. அக்காலத்திய வழக்கிற்கிணங்க, இவ்விருவர் படிமங்களையும் இன்னவர் மகள் குந்தவையார் தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளுவித்து நிபந்தங்கள் கொடுத்துள்ளதைச் சாசனங்களில் பரக்கக்காணலாம். *S. I. I. Vol. II, Part I, Page 69-70.*

இவனுக்குக் குந்தவை, ஆதித்திய கரிகாலன் II, அருண்மொழித்தேவன் என மக்கள் மூவர் இருந்தனர்.

ஆதித்திய கரிகாலன் II
970–980

பராந்தகன் II பொன்மாளிகையிற் றுஞ்சினபின், அவன் மூத்தமகனாகிய ஆதித்திய கரிகாலன் அரியணை ஏறினன். இவன் தன் தந்தையைக் கொன்றவனைப் பழிக்குப்பழி வாங்கக் கருதியிருந்தவனாதலால், தான் பட்டத்துக்கு வந்த இரண்டாம் ஆண்டிலேயே, வீரபாண்டியனோடு போர்புரிந்து அவன் தலையைக் கொய்து பந்தாக உருட்டி விளையாடியதன்றி, அதனைத் தன்னாட்டில் வெற்றித்தூணாகவும் நாட்டிவைத்தனன். இதனை லீடன் சாசனத்தாலறிக. முதற் பராந்தகனுக்குப்பின் கன்னரதேவன் கைவசப்பட்டிருந்த கச்சி, இவன் காலமுதல் சோழரது ஆணையின் கீழதாயிற்று. இவனை வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரி வர்மன் எனக் கூறுவர். இவனுக்குப்பின் அரசுபுரிந்த மதுராந்தகன் இராசகேசரி எனப் பட்டந்தாங்க வேண்டியிருக்க, அவ்வாறின்றி பரகேசரி எனத் தாங்கியிருந்தமையால், இம்மதுராந்தகன் ஆதித்தனோடு பிரதிநிதியாக உடனிருந்து ஆட்சி செய்தவனாதல் வேண்டுமென்பர்.

இவ்வாறாக இராசாதித்தன் முதல், ஆதித்தன் II. உள்ளிட்ட சோழர்கள் இருபது யாண்டுகளுக்குள் அரசாண்டொழியவே,

அருண்மொழித்தேவனே அரசாளுதற்குப் பெரிதும் உரிமையுடையவனாக இருந்தான். குடிகள் இவனையே அரசுரிமையைக் கொள்ளவேண்டினர். ஆனால், இவன், தன் சிற்றப்பன் மதுராந்தகனுக்கு நாட்டாட்சி செய்வதில் விருப்பமிருப்ப தறிந்து, அவனுக்கு அவ்விருப்பம் ஒழியுமளவும் தனக்கு அரசாட்சி வேண்டியதில்லை என்று மறுத்திட, மதுராந்தகன் முடிசூட்டப்பெற்றான். இம்மதுராந்தகனைப் பரகேசரிவர்மன் மதுராந்தக உத்தமசோழன் எனவும், பரகேசரிவர்மன் கண்டராதித்தன் மதுராந்தக உத்தமசோழன் எனவும் சாசனங்கள் கூறுகின்றன. விழுப்பரையன் மகள் கோக்கிழானடிகள் இவன் மனைவியாவாள்.

மதுராந்தகன் 969-985

(தொடரும்)

இன்பப்பேறு.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், தமிழ்ப்புலவர், சலகண்டபுரம்.

உலகப்பொருட்களனைத்தும் உயிர்ப்பொருள், உயிரில்பொருள் என இருகூறுபடும். பின்னையது முன்னையதன் வாழ்க்கைக்கின்றியமையாததாகிப் பல்லாற்றானும் உதவுதல் காண்கின்றேமாதலின், உயிர்ப்பொருட்களே உலகிற் றலைசிறந்து விளங்கும் மாண்பினவாம். இனி, அவ்வுயிர்க் குழூஉக்களும் வண்ணம், வடிவு, உறுப்பமைதி யாதிய உடல் இயற்கைப் பண்புகளானும், நடத்தல், பறத்தல், ஊர்தல் முதலிய தொழிற் கூறுகளானும் பற்பல வேறுபாடுடையவேனும், அவற்றின் சிறப்பியல் பாகிய அறிவு, மெய் வாய் கண் மூக்குச் செவி முதலாய ஐவகைப் புலன்களோடும், நினைக்கும் ஆற்றல் வாய்ந்த உள்ளத்தோடும் இயை

புற்று அடைவே முறைபற்றி ஓரறிவு முதல் ஆறறிவுகாறும் பகுப்புற்று ஒன்றினொன் றுயர்வனவாகித் தம்மிற்றாழ்ந்தவற்றைத் தாம் விரும்பியவாறுபயன்படுத்துக்கொண்டாளுமாற்றலு முடையவாய் விளங்கும் முறைமையில், மனிதனே படைப்புப்பொருட்களின் தலைவனென நிற்குந் தகுதி வாய்ந்துள்ளான். பொதுமையில் எல்லாவுயிர்களும் தத்தம் வாழ்க்கைநிலையிற் கண்ணுங்கருத்துங் கொண்டு இயன்றவகையில் முயன்று தொழில் புரிந்துண்டு வாழ்வனவேனும் அவற்றின் உட்கிடையைக் கூர்ந்து நோக்கின், இன்பம் ஒன்றையே குறிக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்து திரிந்து அயர்ந்து துன்புறுகின்றன வென்னும் உண்மைபுலப்படும்.

மேற்கூறியவாறு உயிர்க் கூட்டங்கள் எத்தனை பிரிவுபடினும் அவற்றின் கருத்தனைத்தும் ஒன்றையே விழைதலின் (அதாவது இன்பத்தையே விரும்பித் துன்பத்தை அறவே வெறுத்தலின்) உயர்வு, தாழ்வு என்பதின்றி இந்நெறியில் அவை முற்றும் தம்முட் சிறிதுமாறுபாடு முடைய வல்லவெனக் காண்கின்றோம். எக்காலத்தும் எவ்வுயிர்களும், இன்பம் வேண்டாம் துன்பம் வேண்டும் என மறந்தும் கருதுவதில. அவற்றின் அறிவு, விழைவு, செயல் என்னும் இம்மூன்றின் ஒவ்வோரணுக்களும் இன்ப நாட்டத்தோடியங்குவனவே. "வளம்பட வேண்டாதார் யார்? யாருமில்லை" என்னும் பெரியோர் கூற்றும் இவ்வுண்மைக்கு நேரிய சீரிய சான்றாம்.

இங்ஙனம் பல்லுயிர்களும் ஒருசேர விழைந்து நேடும் அரும் பெறற் பொருள் இன்பம் எனின், அம்ம! இவ்வுலகினும் மற்றெவ்வுலகினும் அதனிற் சிறந்த அரும் பெரும்பொருள் வேறிராதென்கை திண்ணமே யாமன்றோ? ஆ! இன்பமே! நிகரற உயர்ந்த அரும்பெருமாண்பு நின்பாலதே! கடவுளும் நீயும் ஓராங்கு உறைவிர்போலும்! நன்று நின் நிலைமை! வாழ்க நீ நாடொறும்!!

இனி ஏனையுயிர்கள் தாழத்தாழ்த்தி நிவந்து தலைமைபூண்ட மனிதர் இவ்வின்பத்தை யாங்ஙனம் அடையமுயன்று எம்மட்டுந் துய்க்கின்றனர்? அவர்கள் அடைந்த அளவிலேயே இன்பநிலை

முற்றுறுமா? மேலும் நீண்டு செல்லுமேல் அதன் முடிவிடம் யாண்டையது? எவ்வகைச் செயல்கள் அம்முடிவை அடைவிப் பன? அவற்றை நாம் செய்தல் இயலுமா? இன்பம் நம் கையகப் படின் நம் நிலைமை எவ்வாறிருக்கும்? என்றின்னோரன்ன கடாக் களை எழுப்பி விடைகாண்டலே யாம் எடுத்துக்கொண்ட இப் பொருண்மொழியின் நோக்கமாம்.

ஒருவன் எத்துணைக் கல்வி கேள்வி அறிவாற்றல்களாற் சிறந் தானேனும், மலர்தலையுலகம் பொதுவறப்புரக்கும் மன்னவனாக வாழ்ந்தானேனும், அன்றித் தவவொழுக்கந் தலைநின்று இறை வன்பால் இடையறாப்பேரார்வ வுள்ளத்தனாய்ப் பயின்றானேனும், அன்றி மனைவி மக்கள் சுற்றத்தார் நட்பினர் தற்சூழ இல்லறம் இனிது நடாத்த இசைந்தானேனும், மற்றும் எவ்வகையுயரிய நிலைமை யுற்றானேனும், அன்னோனுள்ளத்தும் இன்பத்தை எய் துங் காதலே மிக்குப்பொங்குதல் இயல்பாதலின், அறிவுடையார் யாவர்க்கும் இவ்வாராய்ச்சி பெரிதும் விருப்பந்தரும் பெற்றித் தாய் வேண்டப்படு மென்பதொருதலை. ஆகவே இதனை நுனித் தாராய்வதிற் கற்போர்க் கெளிதாம் வண்ணம் தடை விடைகளாற் சிலசாற்றிக் காண்பாம்.

பொழுது புலருமுனம் கண்களை நிமிட்டிக்கொண்டெழுந் ததுமுதல் இரவிற் படுக்கைபுக்குக் கண்ணயருந்துணையும் ஓயாது பணம், பணம் எனக்கருதியும், கதறியும், கால்தேயக் கொட்புற் றும் வருந்தியீட்டும் பொருள் இன்பம் பயக்கும் கருவியன்றோ? "மன்னுவுலகத்து மன்னிய மூன்றின் நடுவணதெய்த விருதலையு மெய்தும்" "அப்பொருள் துன்னுங்காலைத் துன்னாதன வில்லையே" பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை "இல்லாரை எல் லாரு மெள்ளுவர் செல்வரை—எல்லாரும் செய்வர் சிறப்பு" என் றெல்லாம் தொல்லாசிரியர் சாற்றியுள்ளார்கள். ஆதலின் பொருண் மிகுதிக்கேற்ப இன்பமிகுதி தலைப்படும் எனின், அற்றன்று. "இன்னல்தரும் பொருளை யீட்டுதலும் துன்பமே"! ஆம். ஈட் டியபின் இன்புறலாமன்றோ? என்றால், "பின்னதனைப் பேணு தலும் துன்பமே"! நன்றாய்ப் பேணுவேமாயின் இன்பமன்றோ?

என்றாலும், "அன்னதழித்தலும் துன்பமே"! என் அழிப் பேன்? இம்மிக் காசேனும் ஈயாநிறுகப்பற்றி இல்லுய்க்கக்கட வேன் எனினும், அப்பொருள் நம் விருப்பமின்றிப் பிறரால் வௌவப்படுதலும் கூடும், "பிறர்பால் இழுத்தலும் துன்பமே யாம்," "துய்ப்பே மெனினே தப்புந பலவே" எனமொழியும் முன்னோருரைப்படி அது கழிவுறுஞான்று பெருந்துன்பந் தருத லின் பொருளால் அடையுமின்பம் நிலைபேறுடைய தன்றென்க.

"அங்ஙனமாயின், அப்பொருள் கொண்டு, ஐம்புலன்கட்கும் ஒருசேர இன்பமளிக்கவல்ல கற்பகப்பூங்கொம்பன்ன காமன் றன் பெருவாழ்வினைப்பெற்ற கட்டழகும் கற்புடைமையும் ஏனை நற்குண நற்செய்கைகள் முற்றும் நிரம்பிய மாதராரை மணந்தின் புறக்கடவேம். இன்பமென்பதவர்களின் முயக்கத்தால் வருவ தனையேயன்றோ? 'காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே இன்ப' மெனப் பகர்வர் நம் தமிழகப்பெரியோர். அன் பினைந்திணையி லமைந்தடங்கும் மெய்யின்பமே. ஆம் ஆம் இதுவே இன்பமடையும் எளியநெறி" என்பிரேல்,

"தாம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே." எனவும்,

"காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணம் கூற்று மஞ்சும்
காமமே கள்ளுண் டற்குங் காரணம் ஆத லாலே
காமமே நரகபூமி காணியாய்க் கொடுப்ப தென்றான்." எனவும்

மற்றும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் புகன் றிருத்தலின் அப்பொருட்டானும் இன்பம் கைபுறுவதாகாது. கையறுவதேயாம். நீவிர் முற்கூறியவாறு, கட்டழகு, நற்பண்பு, கற்புடைமைகளிற் சிறந்த மனைவியரை எய்தியவருட் சீராமன் அவள் பிரிவாலெய்திய இன்னலும், நளன் அடைந்த அல்லலும், பிறருற்ற பெருந்துன்பமும் அறிது மன்றே. மனைத்தக்க மாண் புடைய வாசுகியார் உயிர்துறந்த காலையில் செம்பொருள் செப்பி உலகைத் தம்மடிப்படுத்த செந்நாப்போதாரும் தம் மெய்ஞ்

அறிவினை அயர்த்தார்போலப்..........."பேதையே போரியோ......" எனப்புலம்பினரெனின், மனையாளின் எழிலும் குணமும் முன் கூடிய காலையிலின்பம் தந்த அளவுக்கு மேற்பட்ட துன்பத்தைப் பிரிவு நேர்ந்துழி எதிர்பாராது தருமெனக் காண்கின்றேம் அல்லவா? எடுத்தவுடல் எப்போதேனும் இறத்தல் தப்பாமையின், நிலையுறா வாழ்க்கையில் நேருமின்பம் ஓரின்பமென அறிஞராற் கொள்ளத்தக்கதன்றமென மறுக்க.

அற்றேல், அம்மடமங்கையரீன்ற மணி விளக்கன்ன "மக்கள் மெய் தீண்ட லுடற் கின்பம் அம்மக்கள்—சொற்கேட்டலின்பஞ் செவிக் கென்னுந் தமிழ்மறைக் கெதிர்மறை யிராதாகலின், எட்டாவின்பத்தைத் தளர்நடைச்சிறுர்சார்பிற்பெறுதும்" எனின், "மக்களிற் சிறந்த மடவோய்கேட்டி! நீ கருதியவாறு பொன்னும் மனைவியும் புதல்வர்ப்பேறும் கெழுமப் பெற்றுள்ளோர் எனைப்பலராக அவர்கள் இன்பந் துய்த்தவாறறிந்திலை கொல்லோ! புதல்வரைப் பெறுஞான்றும், பெற்றபின் அவர்கட்குப் பிணி எய்துங்காலையும், அப்பிணியால் வருந்தி யுயிர் துறக்கும் போழ்தும் அன்றி அதற்குத் தப்பி யுய்ந்திடினும் அவர்க்கறிவின்மைகண்டுழியும், அறிவுடையராயினும் ஏற்ற மனையாளைத் தேடி மணம்புரிவித்தலினும், அவர்கட்கு மகவுளதாக வில்லையே என்பதானும், இங்ஙனமே நீள அவர் வாழ்நாள் முற்றும் நன்மைகளை எதிர்நோக்கி யாதுறுமோ? என்னுமோ? என வண்ணான் துறை முயல்போற் கணந்தோறும் நடுக்கிடுமுள்ளத்தோடு துன்பந் துய்த்தலன்றி எட்டுணையும் மெய்யின்படைதலியலாதாம். வீண் கனவேன்? இன்பம் நமக்கெட்டாத தூரத்துள்ளது. இன்பமடைந்தேன் என்னும் எவனும் பெருந் துன்பத்தையே அறியாமையால் மாறிக்கருதி இன்பமெனக்கொண்டொழுகி வருகின்றான் என்பதில் சற்றும் ஐயப்பாடின்று. இஃது உண்ணுநீர்வேட்டோன் பேய்த்தேர் கண்டின்புற்றாற்போல்வ தொன்றே. இனி இன்பமென்பத னியல்பு யாதெனின், தானெய்திய பின்னர் யாண்டும் எவ்வாற்றானும் துன்பத் தோற்றமே யில்லாது தொலைத்து என்றும் நின்று நிலவுதலேயாம். இங்ஙனமன்றி, ஓர்காற் றுன்பமும்

ஓர்கால் இன்பமும் மாறிமாறி நம் நுகர்ச்சிக்கெய்த லுணரப் படுதலின் நாமெய்தும் இன்பம் போலியின்பமே எனக்கோடல் பொருத்த முடைத்தாம்.

ஆ! ஆ! நீர்கூறும் அத்தகைய இன்பம், இந்நிலவுகத் தென்ஞான்றும் இல்லாத தொன்றேயாக, இங்கிருந்ததனை அடையவெண்ணுதல், 'பாலவனத்திருந்து கரும்புதின்ன விரும் புதல் போலும் பேதமைத்தா யொழிந்தது. ஆகலின் "இல்லாத தொன்றனையாம் எய்துவேம் என்கின்ற—புல்லறி வாண்மை கடை" என ஓர் புதுக்குறள் பாடிவிட்டு நினைப்பினின்று நீக்குவதன்றி வேறு செயலில்லை. இனி எப்போதும் இன்பம் வேண்டுமென அவாவுதல் பயனின்று என்னும் முடிவையே இவ்வாராய்ச்சியாற் பெற்றேம்.

நண்ப! நீ மொழிந்தவாறே மெய்யின்பம் அமைந்துள்ளது. அறமும், மறமும் ஆகிய இருவினையும் கலந்து இன்பதுன்பம் நுகர்விக்கும் ஊழ்வயத்தாக; மக்கள் இவ்வுலகிற் றோன்று கின்றனரென அறிவுநூற்கள் அறைதலின், இவ்வுலகில் முழு இன்பப்பேறுறல் அருமையே. இது குறித்தே

" ஒரி னெய்தல் கறங்க ஒரி
லீர்ந்தண் முழவின் பாணி ததும்ப
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைதலுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாள
னின்னா தம்மவிவ் வுலகம்........." என்று கூறினர்

பேரறிவமைந்த சீரிய தொல்லோர். ஆயினும், இச்செய்யுள் இறுதியில் கூறப்படும் மற்றோருண்மை கருதியாராய்தற்குரியது. அஃதாவது, "இனிய காண்கித னியல் புணர்ந்தோரே" என்ப தாம். இதுகொண்டு உலகியல்பெவ்வாறாயினும் அறிவுடைப் பெரியோர் தமது கல்வியுங் கருத்துமொன்றி ஈண்டே அப் பேரின்பத்தை வருவித்துத் துய்ப்பர் என்பது உணரக்கிடக் கின்றது

இதுகாறும் ஆய்ந்தவாற்றால், மிகத்தாழ்ந்த நிலைவாழ்க்கையின் மிடிமைபுணர்ந்த குடிமையினும் உயர்நிலை வாழ்வினர் துய்த்தற்குரிய இன்பம் தோன்றும் என்பது கொண்டு,

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா வொருவற்கும்
உண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே" எனவுலகியல்பில் ஊன்றி அழுந்தி அறிந்தமேலோர் விளம்புதலின், இங்ஙனம் உயர்ந்தோர் தாழ்ந்தோர், கற்றோர் மற்றோர், அறப்பெருஞ் செல்வர், மிகப் பெருமிடியினராகிய பலர்க்கும் ஒப்பப்புலப்படும் இன்பம் மெய்யின்பமாகாதெனவும், சொறிநோய் கொண்டோரொருவன் தினவுதீரச் சொறிந்துகொள்ளுங் கணத்திற்றோன்றிப் பின் எரிச்சலாய்மாறித் துன்புறுத்துவதோர் இன்பத்திற்கினமாம் இன்பப்போலி யெனக் கழித்து உவர்க்கத்தக்கதா மெனவும் கண்டாம்.

ஆகலின், இனிக்கற்றோருடையும் நற்பேரின்பம் யாதெனக் காண்பாம். நூற்றுணையோடு உலகநுகர்ச்சிகளை யொப்ப ஆய்ந்து போந்தவாறே இதனையும் ஆய்தல் சீரிதாம். நம் தண்டமிழ் நூற்களிற் காலத்தாலும், நன்குமதிப்பாலும் முற்பட்டுச்சிறந்து மிளிரும் தொல்காப்பியத்துள் உவகைச்சுவைக்கு நிலைக்களன் கூற வந்த ஆசிரியர் தொல்காப்பியனார் "செல்வம் புலனே புணர்வு விளையாட்டெனச்--சொல்லப் பட்ட வுவகை நான்கே" என வரையறுத்துள்ளார். இந்நான்கனுள்ளும், புலனொழித்தேனை மூன்றுந்தருமுவகை மெய்யுவகையன்றாமென முன்னாராய்ந்து கழிக்கப்பட்டமையின் ஈண்டுப் புலனும் இன்பத்தையே ஆராய்வாம். "புலனே" என்பதன் ஏகாரம் இடையிட்டுக்கொண்ட எண்ணேகாரமாகாது. என்னை ? எனவென்னும் எண்ணுமொழி இறுதிக்கண்ணின்று சொற்றொறும் தொடர்தலின். மற்று, அவ்வேகாரம்,

பிரிநிலையும் தேற்றமுமாகக் கொள்ளப்பெற்று, எனைமூன்றினும் சிறியவ்வகைதோன்றும் நிலைக்களன் அதுவே எனவலி யுறுத்துவதாம். ஈண்டுப்புலனென்பது அறிவு. ஆகவே அறிவு கருவியாத் தோன்றுமின்பமே மேதக்க மெய்யின்பமாமாறறிதும்.

ஆசிரியர் வள்ளுவனார், இன்பத்தை அடைதற்குச்சில உளவு கள் கூறுகின்றனர். அவற்றுள்

"இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்" என்பதொன்று.

உலகநிகழ்ச்சிகளிலமைந்து வினைதர வருவனவாகிய இன்பதுன்பப் பேரலைகளில் அகப்பட்டுசலாடும் மக்கள் இன்பம் நேருங்காலத்தே அதனை மதித்து மகிழாது அவமதித்து,இஃதுலகியல்பே,இஃதோர் கால் துன்பத்தரும் தோற்றமேவே எனச்செப்பமுற்ற வுள்ளத்தின ராய்ப் பெருமித ஒழுக்கமேற்கொள்வாராயின் நாளடைவில் அப் பயிற்சியே பொருட்டாக என்றுந் துன்பமே தோன்றுமற் செய்து கொள்ளலாகும் என்பது இக்குறளின் நல்லறிவுறாஉவாகும். இஃது முற்றிலும் உண்மையே. இதனைச்சற்று விரித்தால் எளிதில் விளங் கும். துன்பமுறும் போழ்து துன்பமுறாதிருத்தல் இன்பப்பேற் றுக்கு நேரிய வழியாமேனும் அஃது சொல்லளவாவதன்றிச் செய் கையில் காட்டவியலாததாம். அரும்பெறல் மகவையோ, அருமந்த மனைவியையோ, கண்ணன்ன கேளிரையோ நமன் கொளக் கொடுத்தானொருவன், அவர்தம் நற்பண்பு, நற்செய்கை, தன் பால் வைத்திருந்த பேரன்பு முதலியவற்றை எண்ணி எண்ணிப் புகழ்ந்து புகழ்ந்து புலம்பி விம்மிவிம்மிக் கவலுஞான்று பிறனொரு வன் அவனைத் தேற்றுவானாகி "நீ நனிபேதை." "நமக்கு மது வழியே நாம்போமளவும்-எமக்கென்னென்றிட்டுண்டிரு" "நின் னோரன்னர் இந்நீணிலத்துப்பலர்." "கற்றோர் முற்றோன்றுகழி விரக்கம்." நாடகக்கூத்தர்போலப் பலர்தோன்றி ஆடிக்கழித லவ்வுலகியல்பென்றறியாய் கொல்? "செத்துக்கிடக்கும் பிணத் தருகே யினிச்சாம்பிணங்கள் — கத்துங் கணக்கென்னகாண்?" எனப் பலவாறு கூறுவானெனினும், அவ்விழவுதனக்கே எய்துங்கால் இவன் முன்புகன்ற ஞானம் வாய்ஞானமாகக்

கழியத் தான் தேற்றியோனினும் பெரிதுங்கவலையுற்று வாய்திறந் தாற்றி மனம் பதைப்புறுவனன்றே! ஆதலின், துன்புறுங்காலை துன்பமுறற்க என இயலாக்காரியத்தை இயம்பல் தகுதியன் றெனக்கழித்து ஓர் பொருளிற் காதல்மிக்குக் கூட்டுண்ட வின்பமேஅப்பொருட் கேட்டிற் றுன்பவுருப்பூண்டு தொடக்கி யுருத்து வருத்துதலின் முன்னறிவுடையோர், காதலித்தின்புற வருங்காலையே அப்பொருளின் நிலையற்றவியற்கை கருதி அவ் வின்பத்தைப்புறக்கணித் தொதுக்குவரேல், "யாதனின் யாதனி னீங்கியா னோதல்—அதனி னதனி னிலன்" என்னும் பொய்யா மொழிப்படி அதுபற்றி யெய்தும் துன்பத்தை எளிதிற் றடைப்பர். துன்ப அறுதியே இன்பமாதலன்றி வேறின்மையின் அதுவே இன்பமெய்தும் நல்வழியெனக் கூறியவாறும் இஃது.

எது செய்தற்கருமையோ, (எது எல்லோராலும் செய்யற் கியலாத தாகுமோ) அதனைக்கூறாது, யாவரும் சற்று முயன் றால் செய்யக்கூடியவதனையே வற்புறுத்தல் அருட்கடலாகிய அறவோரியல்பாம். ஆதலின், நம் செந்நாப்போதார், நம் மனோர்க்கிரங்கி இவ்வெளிய வழியிற் பயிற்சிபெறுமின் என உய்யும்வழி கூறிக் கட்டளையிடுவாராயினர். இவ்வாறே மற்றொரு பெரியார், நீவிர் அறஞ்செய்யும் ஆற்றலில்லேம் என்பீரேல் நுமக்கியல்பாயமைந்த வலிகொண்டு பிறரை வருத்தாதொழித லியலுமன்றோ? அவ்வணம்புரிதிர். அதுவே பேரறப்பயனும் என்று நன்மொழி புகட்டுவாராக,

"நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே" எனப் பணித்

தனர். இன்பமடைய விழைவாரொருவன் பயிலும் வழிகளில் இஃதொன்றுகண்டாம். ஒரூரை யண்முதற்குப் பலவழிகளுளவா மன்றே, அங்ஙனமே நாம் இன்பத்தை எட்டிப்பிடிக்க இன்னு முள்ள கருவிகளையும் துருவுவோம்.

"இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையும் சிறப்பு" என்பது நம் தெய்வத் தமிழ்மறையின் மற்றொரு செவியறிவுறூஉ. இவ்வின்பமய அமுதவூற்றொழுகும் கடவுண்மொழிக்கு உரைகூறப்புக்க பரிமே லழகியார் கருத்தையுமுட்கொண்டு மற்றிதனுண்மையைச் செப்ப முறக்காண்பாம். "ஒருவன் தனக்கியல்பாய் எய்தும் துன்பத் தையே, இஃதும் இன்பமே எனத்தனது மதிநுட்பம் நூலோ டுடைய திட்பத்தால் கருதுவானாயின், அஃது அவனைக்கெடு சூழும் பகைஞரும் வியந்து வேட்கையுற்றுப் பின்பற்றி வணங்கு மாறு மிகச்சிறப்பாய நிலைக்கணுய்க்கும்". துன்பத்தை இன்ப மெனக் கொள்ளல் இயலாதாலெனின், துன்பமும் ஒரு கணத்தே மனத்தின்கண் தோன்றியழியு மியல்பிற்றாயும், உயிர்க்கியல்பன்றி மனத்தின்கணிகழும் ஓர் கோட்பாடேயாயும் துணியப்படுதலின் இன்பமெனக் கோடல் அறிவின் வலியுடையார்க்கமைவதேயா மென விடுக்க. துன்பம் உயிர்க்கியல்பன்று என உண்மை கண் டார்க்கு, அதனைமாறுபட (அதாவது இன்பமாக)க் கோடல் எளிதேயாம் என்பதிக்குறளின் உள்ளுறை. முற்கூறிய இன்பக் கருவியினும் இஃது மிகநேரியதே யாயினும் இங்ஙனம் கருதுதல் உண்மையறிவு (தத்துவஞானம்) பெற்ற சில்லோர்க்கன்றி நம் போன்ற பலர்க்கு மெளியதொன்றன்றாகும்.

(தொடரும்.)

சிந்தாமணியின் நந்தாவொளிகள்.

திருவாளர் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஈபர் கல்லூரி, திருச்சி.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழியாகிய அன்னைக்குப் போணிகலங்களாக விளங்குகின்ற ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகவுள்ளது சீவக சிந்தாமணி யென்பது. இதனையியற்றிய ஆசிரியர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவராவர். பிற்காலத்திலே விருத்த யாப்பினால் பெருங்காப்பியம் இயற்றிப் போந்த கம்பநாடர் போலும் சிறிய கவிகளுக்கெல்லாம் ஓர் வழிகாட்டியாகவுள்ளது இச்சிந்தாமணி யென்றால் இதன் பெருமைக்கு வேறென்ன சான்று வேண்டும்? எப்பொருளினையும் மெய்ப்பாடு தோன்றக்கூறும் இவ்வாசிரியரது திறம் அளவிட்டுரைக்கும் தகைத்தன்று. எவ்வகைச் சுவைகளையும் செவ்விதிற் பெய்து வைத்த கொள்கலம் போன்று விளங்கும் இக்காப்பியத்தைத் தமிழறிந்தோர் யாவரும் கற்று இன்புறுதல் வேண்டும். உமாபதி சிவாச்சாரியார் போலும் சில பெரியோர்கள் இதனை யிழித்துரைத்தது மதக்கோட்பாடு பற்றியே யன்றி, செய்யுட் சுவை முதலியன பற்றியன்றென்க. மாணிக்கவாசகரை வீட்டின்றன்மையை நன்கு உணர்ந்தோரெனக்கூறிய நச்சினார்க்கினியார்தாமே இதற்கு உரை செய்திருக்கின்றார்! வீடு பேற்றின் இயல்பினை விளக்க நேர்ந்துழி 'அற்றது பற்றெனி லுற்றது வீடு' என்பது முதலிய திருவாய்மொழிப்பகுதிகளை யெடுத்துக் காட்டிய சிறிய வைணவரான பரிமேலழகரும், சிவஞானபோதம் முதலிய சைவ சித்தாந்த நூல்கட்குப் பேருரையும், சிற்றுரையும் முதலியன வகுத்தருளிய மாதவச் சிவஞான யோகிகளும் முதலாயினர் சிந்தாமணியிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாண்டிருக்கின்றனரே! இவ்வாறிருக்கவும் இக்காலத்துச் சமயப்பற்றினார் என்போரிற் சிலர் அதனைக்கண்ணால் நோக்குவதும் இழுக்குடைத்தென்று கருதுவது தாம் அதன்கண் நுழைந்து செல்லும் மதிவலி பெற்றிராமை பற்றியே போலும்!

இனி, சிந்தாமணியிலே கற்பனை நயஞ்சிறந்து சுவை கெழுமி விளங்குவனவும், அரும்பெரு நீதிகளை அறிவுறுத்துவனவுமாகிய பாடல்களிற் சிலவற்றைத் திரட்டி வெளிப்படுத்தல் கற்போர்க்குத் தமிழிலே ஆர்வத்தை யெழுப்பி நலம்பயக்கு மென்றுகருதி, அங்ஙனம் புரிய ஒருப்படுகின்றேன். இதற்கு நச்சினார்க்கினியார் எழுதியுள்ள உரை மிகச் சீரியதாயினும் இலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்றவர்களுக்கே அது பயன் படக்கூடும். ஆகலின் இங்கே தொகுக்கலுறும் பாடல்களை எளிய பொழிப்புரையுடன் வெளிப்படுத்தல் கடனாகின்றது.

நாமகளிலம்பகம்.

1. காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே.

(உரை) காய்த்தல் மாட்சிமைப்பட்ட தெங்கின் நெற்று விழுதலாலே, கமுகின் உச்சியிலுள்ள பொலிவு மிக்க தேன் போலும் இனிய நீரையுடைய பாக்குத்தாறு கிழிந்து, பலாப்பழம் பிளந்து, தேமாங்கனி சிதறி, வாழைப்பழங்கள் சிந்தும் ஏமாங்கதம் என்று பெயர் கூறப்பட்டு, புகழினாலே திசை முழுதும் சென்றதொரு நாடு உண்டென்க.

2. சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம் போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

(உரை) நெற்களானவை அரிய சூலையுடைய பச்சைப் பாம்பின் தோற்றம்போல் நேர்மையாகக் கருத்தங்கி, நின்று, குடிப்பிறவாதவர் செல்வம் போன்று தலையை நேரே நிமிர்த்தி, மெய்ப்பொருளை ஆராய்ந்த நூற்கல்வியினையுடைய மாந்தரைப் போல் மிகவும் வளைந்து விளைந்தனவென்க. (சொல்—நெல்).

3. நற்றவஞ்செய் வார்க்கிடம் தவஞ்செய் வார்க்குமஃதிடம்
நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள்செய் வார்க்கு மஃதிடம்
வெற்ற வின்பம் விழைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென
மற்றை நாடு வட்டமாக வைகு மற்ற நாடரோ.

(உரை) அவ் ஏமாங்கதம் என்னும் நாடு, விண்ணுலகமானது வெற்றியையுடைய தனதின்பத்தை உலகினை விரும்பப் பண்ணுதற்கு மகிழ்ந்து வீழ்ந்ததென்னும்படி, தன்னை யொழிந்த நாடு தனக்கு எல்லையாகப் பொருந்தியிருக்கும். அது வீடுபேறு கருதி நல்ல தவத்தினைச் செய்வார்க்கும் இடம்; அது மறுமை கருதி இல்லறம் நடத்துவார்க்கும் இடம். அது ஞானமாகிய நற்பொருள் பயக்கும் கல்வியைக் கற்பார்க்கும் இடம்; இவ்வுலக நடைக்குரிய பொருளினைத் தேடுவார்க்கும் இடமென்க.

4. எண்ணெயு நானமு மிவைமூழ்கி யிருள்திருக்கிட்
டொண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோல்
கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானாத் தகையவே.

(உரை) எண்ணெயும் மயிர்ச்சாந்துமென்கின்ற இவற்றிலே முழுகி, இருளைப்பிடித்து நீள முறுக்கி ஒள்ளியநறிய துகிற்கிழியாகிய உறையிலே பொதிந்து அதினின்றும் வாங்கப்பட்டவை போல, நோக்கினார் கண் இருளும்படி நெறிப்பு மிக்குக் கடை குழைந்த கரிய விசையையின் கூந்தல்கள் சேடியர் அழகிய பூவால் அருச்சித்து வழிப்பட்டாலும் வருந்தும் தன்மையன என்க.

5. இவ்வுருவு நெஞ்சென்னும் கிழியின்மே லிருந்திலக்கித்
தவ்வுருவு நினைப்பென்னும் துகிலிகையால் வருத்தித்தக்
கவ்வியத னோக்கினாற் கண்விடுத்துக் காதனீர்
செவ்விதிற் றெளித்தானாக் காமப்பூச் சிதறினான்

(உரை) கூறிய இவ்வுருவை ஒருப்பட்டிருந்து நெஞ்சென்னும் படத்திலே குறித்து, அதனை நினைவென்னும் எழுதுகோலால் உறுப்பு விளங்க எழுதி, தான் கைக்கொண்ட தியானத்தாலே நயன

மோக்கம் பண்ணி, அன்பென்னும் நீரைச் செவ்வையாகத் தெளித்து, அமையாத வேட்கையாகிய பூவைச் சிதறினான் என்க. (சச்சந்தன் தன் மாமன் மகளாகிய விசையையின் பேரழகில் ஈடு பட்டு அவளை விரும்பினான் என்பது இங்ஙனம் கூறப்பட்டது)

6. ஆரறி விகழ்தல் செல்லா வாயிரஞ் செங்க ணானும்
கூரறி வுடைய நீரார் சொற்பொருள் கொண்டு செல்லும்
பேரறி வுடைய நீயும் பிணையனாட் கவலஞ் செய்யும்
ஓரறி வுடைமை யென்று னுருத்திர தத்த னென்பான்

(உரை)(சச்சந்தன் நிமித்திகன் கூற்றை ஏற்றுக்கொள்ளாமைகண்டு) உருத்திர தத்தன் என்பான் பிறரால் இகழப்படாத நிறைந்த அறிவினையுடைய இந்திரனும் அமைச்சர் சொற்பொருளைக்கொண்டு நடக்கும்; அவனைப்போல் நீயும் அறிவுடையை யாயினும் இப்பொழுது இவன் சொல்லைக் கொள்ளாமையால் பெண்மான் போலும் விசையைக்கு அவலஞ் செய்யும் ஓரறிவுடையை ஆயினாய் என்றான் என்க.

7. கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரியின்றி விளைவஃகிப் பசிபு நீடிப்
பூணணி மகளிற் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி
ஆணையிவ் வுலகுகேடா மரசுகோல் கோடி னென்றான்.

(உரை) அரசன் நீதி செலுத்துவதிற் பிறழ்வானாயின், கோள்கள் நிற்கும் நிலைகுலைந்து, இரவின் நாழிகை குறையப் பகற் பொழுது கள் மிக்கு, மழையில்லாது, நீணிலம் விளைவு சுருங்கி, பசி மிக்குப் பூணணிந்த மகளிருடைய அழகிய கற்பழிந்து, அறச்சாலைகளும் இன்றி, இவ்வுலகு கெடாநிற்கும்; அரசன் ஆணை யென்றான் என்க. (கட்டியங்காரன் தன்னை அரசனாக்கிய சச்சந்தனைக் கொல்லக் கருதியபொழுது தருமதத்தன் என்னும் அமைச்சன் இருவர் பிழையையும் உட்கொண்டு கூறியது இது.)

8. சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவு மெல்லா மவை பொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்.

(உரை)-வளையலணிந்த தோள்களை யுடைய நங்காய்! இறத்தலும் பிறத்தலும் ஆதலும் அழிதலும் ஆகிய எல்லாம் தம் வினைகளின் பயனாலுண்டாகும். அவ்வாறிருக்க, இறத்தற்கும் அழிதற்கும் துன்புறுவதும், பிறத்தற்கும் ஆதற்கும் இன்புறுவதும் அறிவின்மை யன்றோ? வினைப்பயனுறுதல் பொருட்கு இயல்பாதலை உணராமையின் நீ பெரிதும் அறிவுடையை யல்லை என்றான் என்க. (அமைச்சனா யிருந்த கட்டியங்காரன் அரசனாகிய சச்சந்தனைக் கொல்லுதற்கு மாளிகையை முற்றுகை யிட்ட பொழுது வருந்துத லுற்ற விசையை யென்னும் தன் மனைவிக்கு அரசன் கூறியது இது. வருகின்ற பாட்டும் அது.)

9. தொல்லைநம் பிறவி யெண்ணில் தொடுகடல் மணலுமாற்றா
எல்லைய அவற்று ளெல்லாம் எநிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிகள் தம்முட் சேரலம் சேர்ந்து நின்ற
இல்லினுள் இரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா.

(உரை)-பழைய நம் பிறப்பை யெண்ணின் கடலின் மணலும் உறையிடப் போதாத அத்துணை மிகுதியுடையன; அப் பிறவியு ளெல்லாம் நாம் யாதும் சம்பந்த முடையோ மல்லோம். இனி இவ்வுடம்பினின்றும் நீங்கிச் செல்லும் கதிகளிலும் சேர்தல் ஒருதலை யன்று. ஆதலின் இப்பொழுது சேர்ந்து நின்ற இரண்டு நாள் உறவை உறவாகக் கருதி அதற்கு இரங்க வேண்டா என்றான் என்க.

10. உண்டெனு வுரையிற் கேட்பார் உயிருறு பாவ மெல்லாம்
கண்டினித் தெளிக வென்று காட்டுவாள் போல வாகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியளானாள்.

மோக்கம் பண்ணி, அன்பென்னும் நீரைச் செவ்வையாகத் தெளித்து, அமையாத வேட்கையாகிய பூவைச் சிதறினான் என்க. (சச்சந்தன் தன் மாமன் மகளாகிய விசையையின் பொழுகில் ஈடு பட்டு அவளை விரும்பினான் என்பது இங்ஙனம் கூறப்பட்டது)

6. ஆரறி விகழ்தல் செல்லா வாயிரஞ் செங்க ணானும்
கூரறி வுடைய நீரார் சொற்பொருள் கொண்டு செல்லும்
பேரறி வுடைய நீயும் பிணையனாட் கவலஞ் செய்யும்
ஓரறி வுடையை யென்றா னுருத்திர தத்த னென்பான்

(உரை)(சச்சந்தன் நிமித்திகன் கூற்றை ஏற்றுக்கொள்ளாமைகண்டு) உருத்திர தத்தன் என்பான் பிறரால் இகழப்படாத நிறைந்த அறிவினையுடைய இந்திரனும் அமைச்சர் சொற்பொருளைக்கொண்டு நடக்கும்; அவனைப்போல் நீயும் அறிவுடையை யாயினும் இப்பொழுது இவன் சொல்லைக் கொள்ளாமையால் பெண்மான் போலும் விசையைக்கு அவலஞ் செய்யும் ஓரறிவுடையை ஆயினாய் என்றான் என்க.

7. கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரியின்றி விளைவஃகிப் பசிபு நீடிப்
பூணணி மகளிற் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி
ஆணையிவ் வுலகுகேடா மரசுகோல் கோடி னென்றான்.

(உரை) அரசன் நீதி செலுத்துவதிற் பிறழ்வானாயின், கோள்கள் நிற்கும் நிலைகுலைந்து, இரவின் நாழிகை குறையப் பகற் பொழுது கள் மிக்கு, மழையில்லாது, நீணிலம் விளைவு சுருங்கி, பசி மிக்குப் பூணணிந்த மகளிருடைய அழகிய கற்பழிந்து, அறச்சாலைகளும் இன்றி, இவ்வுலகு கெடாநிற்கும்; அரசன் ஆணையென்றான் என்க. (கட்டியங்காரன் தன்னை அரசனாக்கிய சச்சந்தனைக் கொல்லக் கருதியபொழுது தருமதத்தன் என்னும் அமைச்சன் இருவர் பிழையையும் உட்கொண்டு கூறியது இது.)

8. சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவு மெல்லா மவை பொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்.

(உரை)-வளையலணிந்த தோள்களை யுடைய நங்காய்! இறத்தலும் பிறத்தலும் ஆதலும் அழிதலும் ஆகிய எல்லாம் தம் வினைகளின் பயனாலுண்டாகும். அவ்வாறிருக்க, இறத்தற்கும் அழிதற்கும் துன்புறுவதும், பிறத்தற்கும் ஆதற்கும் இன்புறுவதும் அறிவின்மை யன்றோ? வினைப்பயனுறுதல் பொருட்கு இயல்பாதலை உணராமையின் நீ பெரிதும் அறிவுடையை யல்லை என்றான் என்க. (அமைச்சனா யிருந்த கட்டியங்காரன் அரசனாகிய சச்சந்தனைக் கொல்லுதற்கு மாளிகையை முற்றுகை யிட்ட பொழுது வருந்துதலுற்ற விசையை யென்னும் தன் மனைவிக்கு அரசன் கூறியது இது. வருகின்ற பாட்டும் அது.)

9. தொல்லைநம் பிறவி யெண்ணில் தொடுகடல் மணலுமாற்றா
எல்லைய அவற்று ளெல்லாம் எநிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிகள் தம்முட் சேரலம் சேர்ந்து நின்ற
இல்வினுள் இரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா.

(உரை)-பழைய நம் பிறப்பை யெண்ணின் கடலின் மணலும் உறை யிடப் போதாத அத்துணை மிகுதியுடையன; அப் பிறவியு ளெல்லாம் நாம் யாதும் சம்பந்த முடையோ மல்லோம். இனி இவ் வுடம்பினின்றும் நீங்கிச் செல்லும் கதிகளிலும் சேர்தல் ஒருதலை யன்று. ஆதலின் இப்பொழுது சேர்ந்து நின்ற இரண்டு நாள் உறவை உறவாகக் கருதி அதற்கு இரங்க வேண்டா என்றான் என்க.

10. உண்டென வுரையிற் கேட்பார் உயிருறு பாவ மெல்லாம்
கண்டினித் தெளிக வென்று காட்டுவாள் போல வாகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியளானாள்.

(உரை)-வாளை யளாவிய மாளிகையில் தேவமாது போல நல் வினையின் வண்ணமாய் இன்பம் நுகர்ந்திருந்த விசையை யானவள், இப்பொழுது, உயிர்கள் துய்க்கும் பாவம் உண்டென்று நூல்களிற் கேட்போ ரெல்லாம் இனி என்னைக்கண்டு தெளிவீராக வென்று உலகத்திற்குக் காட்டுவாள் போலத் தான் தீவினையின் வண்ணமாய்க் காட்டிலே தமியளானாள் என்க. (விசையை யானவள் மயிற்பொறி யேறிச் சென்று நள்ளிருளிற் புறங்காட்டை யடைந் திருந்தமை குறித்துக் கவி சொல்லியது இது.)

11. வெவ்வா யோரி முழவாக விளிந்தா ரீமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டியாரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கு மிருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல்வேந்தே.

(உரை)--புறங்காட்டிலே மகன் பிறந்த பொழுதில் விசையை யானவள் மகனைப் பார்த்து நம் கோமானனவன் பன்னீராண்டு கறை விடுங்கள், அறச்சாலையும் கோயில்களும் நிறுவுங்கள், சிறைப் பட்டவர்களை விட்டு விடுங்கள், கருவூலத்தைத் திறந்து ஊர் தோறும் கொண்டு போய் எற்போர்க்குக் கொடுங்கள், நகரில் பண்டசாலைக ளெல்லாம் திறந்து எழு நாள் வரையில் யாரும் ஆடை அணி முதலிய எவற்றையும் எடுத்துக் கொள்ளுமாறு விடுங்கள், என்று இங்ஙனம் அறிவித்தும், யானைகளும் நவமணி களும் பட்டாடைகளும் புலவர்களுக்கு வழங்கியும், மற்றை அரசர்க்கெல்லாம் திருமுகம் போக்கியும் கணிகளாற் பிறப்பேடு செய் வித்தும் மகிழுமாறு பிறக்க வேண்டிய நீ, வேந்தே! கொடிய வாயை யுடைய ஓரியின் குரல் முழ வோசையாகவும், இறந்த வர்களின் ஈமச்சுடர் விளக்காகவும், பிறந்தார்க்கு ஒவ்வாத சுடு காடாகிய அரங்கிலே பேய்கள் நிழல்போல் அசைந்து கூத்தாடவும், கூகைகள் எவ்விடத்து மிருந்து குழறிப் பாராட்டவும் ஓ! ஓ! தீவினையேன் காண்டற்காகப் பிறக்குமாறு இத்தன்மைத்தாய் இருந்தது, இதுவோ அரசர்க் கியல்பு கூறுய் என்றாள் என்க.

12. பற்று மன்னன் நகர்ப்புறமால் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்று ரில்லாத் தமியேனால் ஒதுங்க லாகாத் தூங்கிருளால்
மற்றிஞ் ஞால முடையாய்நீ வளருமாறு மறியேனால்
எற்றே யிதுகண் டேகாதே யிருத்தி யால்என் இன்னுயிரே.

(உரை)--இவ்வுலக முடையாய் நீ கிடக்கின்ற இடம் பகைவனது நகர்ப் புறமாய் இரா நின்றது; நினது பாயல் பிணஞ் சூழ்ந்த சுடுகாடாய் ஓர் துணையுமில்லாத் தமியேனாய் இரா நின்றேன்; நின்னை அப்பாற் கொண்டு போகக்கருதின் போகலாகாத செறிந்த இருளாயிரா நின்றது; மேல் நீ வளருமாறும் அறியேனாயிரா நின்றேன் என்று பிள்ளையை நோக்கிக் கூறி, எனது கொடிய உயிரே! நீ இதை யெல்லாம் கண்டும் போகாது இராநின்றாய்; இதற்குக் காரணம் என் என்று கூறினாள் என்க.

13. அறிவினாற் பெரிய நீரார் அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயர ஐவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலுள் நின்றார்.

(உரை)--அறிவினாற் பெரிய இயல்பினை உடையாராயினார் தீவினை கழிய நின்ற நன்னெறியினைக் குறுகி நிறைந்த இன்பமாகிய கடலகத்தே நின்றனர். வேட்கை யென்னும் நஞ்சினையுடைய உடம் பென்னும் பாம்பிடத்தில் பொறி யென்னும் பெயரையுடைய ஐந்து வாயிடத்தே களிப்பைச் செய்கின்ற பொருள்களிலே அடிப் பட்டு நின்றோர் துன்பமாகிய கடலுளே அழுந்தினார் என்க. (இதுவும் பின்வரும் பாடல்களும் சீவகனுக்கு ஆசிரியன் கூறிய உறுதி மொழிகளாகும்)

14. கூற்றுவன் கொடியனாகிக் கொலைத் தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியி லுலக நோக்கி
ஆற்றுறப் போதல் தேற்றும் அளியமோ பெரிய மேகாண்.

(உரை)-கூற்றுவன் கொடியவனாய்க் கொலைக்கருவியை ஆராய்ந்து தடுத்தற்கரிய வலையை வீசி வைத்தான். அதனை அறியத்தக்க

நாமும் அறிந்து தவஞ்செய்து அவன் வலையினின்றும் தப்பிப் பேரின்ப உலகத்தை நோக்கி நெறிப்படப் போதலைத் தெளியா திருக்கின்றோம். இத்தகைய நாமும் ஓ! ஓ! பெருமையுடையமே காண் என்க.

15. பொரு ளிடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர் தரிதிற் பெற்றும் அதன் பயன் கோடல் தேற்றும்
ஓருமைம் பொறியு மோம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்தவெல்லாம்.

(உரை)-பெரிய துன்பத்தை யெல்லாம் நீக்குதற்குக் காரணமான பிறப்பறுக்கும் மனிதயாக்கையைத் தவப்பயனாற் பெற்றும்; பெற்றும் அதன் பயனைக்கொள்ள அறிகின்றிலேம். ஐம்பொறிகளையும் ஐம்புலன்களாலே பேணி உள்ள நாள் சென்றால் நெருப்பானது உடம்பைக் கவரும் பொழுது நினைத்த அறமெல்லாம் செய்யக் கூடுமோ ஓர்ந்து பாரும் என்க.

16. தழுங்குரல் முரசிற் சாற்றித் தத்துவந் தழுவல் வேண்டிச்
செழுங்களி யாளர் முன்னர் இருளறச் செப்பினாலும்
முழுங்கழல் நாகின் மூழ்கு முயற்சிய ராகி நின்ற
கொழுங்களி புணர்வி னோர்க் குணவதங் கொளுத்தலாமோ.

(உரை)--எல்லாரும் தத்துவ நெறியைத் தழுவுதல் வேண்டிப் பிரகிருதியில் மயங்கிக் கிடப்பார் முன் முரசறைந்து இருள் தீரச் சொன்னாலும் அது கொள்ளாது, முழங்குகின்ற அழல் வடிவாய நாகத்தின் மூழ்கும் முயற்சியராகும் மருண்ட அறிவினர்க்குச் சீலம் கொளுத்தலாகுமோ என்க.

17. காட்சிநன் னிலையில் ஞானக் கதிர்மணிக் கதவு சேர்த்திப்
பூட்சிசாலொழுக்கமென்னும்வயிரத்தாழ் கொளுவிப்பொல்லா
மாட்சியில் கதிக ளெல்லா மடைத்தபின் வரம்பி லின்பக்
காட்சியி லுலக மேறத் திறந்தனன் அலர்ந்த தாரான்.

(உரை) மலர்ந்த பூமாலையையுடையனாகிய சிவகன், அவனைச் சரணடைந்து, காட்சியாகிய நல்ல நிலையில் ஞானமாகிய ஒளி

பொருந்திய மணிக்கதவினைச் சேர்த்துத் திட்பம் அமைந்த ஒழுக்க மென்கிற வயிரத்தாழைக் கொளுவி, மாட்சியில்லாத பொல்லாத தீக்கதிகளை யெல்லாம் அடைத்த பின்பு, எல்லையில்லாத இன்பத்தையுடைய வீட்டுலகத்தை அடையுமாறு வழி திறந்தான் என்க.

[தொடரும்.]

உ

திருச்சிற்றம்பலம்.

வெஞ்சமாக் கூடலூர்.

திருவாளர். பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

இது கொங்கு நாட்டில் பாடல்பெற்ற சிவ தலங்கள் ஏழனுள் ஒன்று. ஒவ்வொரு தேவாரப் பதிகமே பெற்ற நூற்றைம்பத்து மூன்று தலங்களினும் ஒன்று.

இதனை "..
சீலமிகு மவிநாசி திருமுருகன் பூண்டி திருநணு கொடிமாடச் செங்குன்றூர்தானே. வெஞ்சமாக்கூடல் கொடுமுடி கருவூர் கொங்கில் மேவுமேழ்..........." என்னும், திருப்பதிக்கோவைச் செய்யுளடிகளாலும் (10, 11.);

"திருமாணிகுழி........திருவாப்பனூர் மீயச்சூரவ்வூர் தன்னிற்றிகழ்ந்த திருவிளங்கோயில் வெஞ்சமாக்கூடல் ...."
"இவைகட் கிரும்பதிக மொவ்வொன்று."

என்னும் திருப்பதிகக் கோவைச் செய்யுட் பகுதிகளாலும் (8, 9) அறியலாம்.

தலம்.

இத்தலம் கருவூரிலிருந்து அரவக்குறிச்சி நோக்கி மேற்றிசை செல்லும் வழியிலிருக்கிறது. இது, வானியாறு காவிரியோடு கூடுமிடத்தை *வானிகூடல் என்று வழங்குவதுபோலவே, குடவனாற்றோடு மற்றொரு காட்டாறு கூடுவதால் கூடலூர் எனப்பட்டு, அப்பெயரையுடைய பிறவூர்களினின்றும் பிரித்து வழங்கற் பொருட்டு இதனையாண்ட ஒரு சிற்றரசனாகிய வெஞ்சன் என்பவனது பெயரொடு படுத்து வெஞ்சமாக் கூடலூர் என வழங்கப் பட்டு வருகிறது.

இஃது நந்தம் சுந்தரமூர்த்தி நாயனாருளிய தேவாரப்பதிகம் உடையது. முல்லை நிலத்தது.

திருநணா, இரண்டாறுகளின் இடையிலிருந்தும், மருதவளம் சிறிதுமின்றிக் குறிஞ்சியாகவே யிருத்தலினால், நமது திருஞான சம்பந்தப் பெருந்தகை, தமது திருப்பதிகத்தில், அதனைக் குறிஞ்சி நிலவருணனைகள் கூறித் துதித்திருப்பதுபோலவே, ஆற்றங்கரையி லிருந்தும் முல்லை நிலத்ததாகிய இவ்வெஞ்சமாக் கூடலூரையும் நந்தம் சுந்தரமூர்த்தி நாயனார், தமது திருப்பதிகத்தில் முல்லை நில வருணனை கூறி யருளியிருப்பது கண்டறிந்து மகிழத்தக்கது.

தீர்த்தம்.

இத்தலத்தில் முற்குறித்த குடவனாற்றைத்தவிர வேறு தீர்த்த நீர் நிலைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாற்றை நந்தம் நம்பியாரூரர் "சிற்றாறு" எனத் தமது பதிகத்தில் கூறி யருள்வர். அண்ணிய தூரத்தில் ஆன்பொருநை (ஆம்பிராவதி) ஓடுகின்றதாதலின், அதனை நோக்க இது சிறியதாயிருத்தலாற் சிற்றாறென்னப்பட்டதுபோலும்.

---

* இத்தலம் - திருநணா; இதனைப் பவானிகூடலென்றனர். இவ்வாறே கிருட்டினை நதியோடு துங்கபத்திரை கூடுமிடத்தைக் கூடற்சங்கம மென்றலுங் காண்க.

பதிற்றுப்பத்தில், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைக் காணமமைந்த காசறு செய்யுட் பாணர் பாடிய ஐந்தாம்பதிகக் கடைசிச் செய்யுளிலும் அதனுரையிலும் கூறப்பட்டுள்ள குடவனாறு இச்சிற்றாறே.

அச்செய்புள்,

" மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்
கான்மயங்கு கதமுறை யாலியொடு சிதறிக்
கரும்பமல் கழனிய நாடுவளம் பொழிய
வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇச்
செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக்
காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூட லனையை" என்பதாம்.

இதனுரையாவது,

"மூன்றுடன் கூடிய கூடலென்றது, அக்காவிரிதானும், ஆன்பொருநையும், குடவனாறும் இம்மூன்றும் சேரக்கூடிய கூட்டமென்றவாறு' என்பதாம்.

இக்குடவனாறுதான்

" ஆரமணி யாரமணி யாரமணி வாரிநெடு
வாரியிடுங் குடவமா நதியான் "

என்று விறலிவிடுதூதிற் கூறப்பட்டதாம்.

" எறிக்குங் கதிர்வே யுதிர்முத்தமோ
டேலமிலவங்கந் தக்கோலமிஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திணைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்
முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல்
குருக்கத்தி கண்மேற் குயில்கூவலறு
வெறிக்குங் கலைமா வெஞ்சமாக் கூடல்
விகிர்தாவடியேனையும் வேண்டுதியே"

என்னும் தேவாரப்பதிகத்தின் முதலிரண்டடியிலும் இவ்வாற்றின் வளம் கூறப்படுகின்றது. இன்னும் 2, 3, 4, 9, இப்பதிகங்களாலும் இவ்யாற்றின் வளம் கூறப்படுகின்றது.

இவ்யாறு ஆனைமலைத் தொடர்ச்சிகளில் உண்டாகி வருகின்றது. இவ்வானைமலைச்சாரலிலும், இதனைச்சார்ந்த பூநாய்ச்சிமலைச்சாரலிலும், இன்றைக்கும் பல ஏலக்காய்த் தோட்டம் முதலியன இருக்கின்றமையும், அங்கு அவை சிறப்பாகப் பயிரிடப்பட்டுச் சாக்குகள் பலவிடங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றமையும் அறியத்தக்கன.

ஆதலின் நந்தம் நம்பியாரூர மூர்த்திகள் ஏலம், கிராம்பு, வால்மிளகு, இஞ்சி ஆகிய இவற்றைக் குடவனாறு அடித்துக்கொண்டு வருகிறதென்றது எத்துணையும் பாராட்டத்தக்கதாம்.

இவ்வாற்றோடு முற்குறித்த கான்யாறு கூடுமிடத்துக்கருகில், ஆற்றின் கீழ்க்கரையில்தான் கடவுளின் திருக்கோயில் இருக்கிறது.

கடவுளின் திருப்பெயர்.

கடவுளின் திருப்பெயர் விகிர்தேசுவரன் என்பது. விகிர்தன்-வேறானவன். அதாவது,

> " ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிங்
> நாவனக ரூரனிது நான்மொழிவ தென்றான்
> தேவரையு மாலயன்மு தற்றிருவின் மிக்கோர்
> யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான் *

என்பதிற்போலவே, மற்றைத் தலங்களினும் பார்க்க, இத்தலத்தில் தன்னடியார்க்குச் சீரியதோர் தண்ணளிபுரியும் அருளிப்பாடுடையான் என்றபடியாம். இக்கருத்தைக்கொண்டே நந்தம் நம்பியாரூர் தமது தேவாரத்து ஒவ்வொரு பதிகத்திலும் "வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே" என அடியேன்

* பெரியபுராணம் (தடுத்—37).

நின்று தண்ணளிக்குக் கொள்கல மல்லேனாயினும், விகிர்த னென்னும் பெயருடையை யாகையினால் நீ, நின் மெய்யடியாரொ டொப்ப வென்னையும் ஏற்றுக்கொள்ளற்குரியை என்னுங் கருத்தாற் கூறுகின்றனர்.

அம்மையின் திருப்பெயர்.

பண்ணேர்மொழியம்மை என்பது. அது இத்தலத்தேவாரம் நாலாம் பதிகத்தில் "பண்ணேர்மொழி யாளை யோர் பங்குடையாய்" என்று கூறியிருத்தலால் அறியலாம். இவ்வாறே, அம்மையின் திருப்பெயர் பதிகங்களிற் குறித்தலைப் பிற இடங்களி லும் அறியலாம்.

தேவாரத் திருமுறை பதித்தோரெல்லாம், தலத்தில் வழங்கு வதையேனும், பதிகங்களிற் கூறுவதையேனும் அறியகில்லாராய் வேறு பெயர் எழுதிப்போயிருக்கின்றனர். அவர் இத்தலத்து அம்மையாரை விகிர்தேசுவரி யென்றெழுதிப்போயினர்.

திருமுருகன்பூண்டியில் அம்மையார் திருப்பெயர், பதிகத்தில் "முயங்குபூண்முலை மங்கையாளொடும் ...... எத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானீரே" என்று கூறியிருப்பதையும், இங்குள்ளார் தங்கள் பெண்மக்களுக்கு 'முயங்காள்' என்று பேரிடுவதையும் அறி யாமல், வேறு பெயர் கூறியிருப்பதும், திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுரர் என்பதற்கேற்பப் பாகம்பிரியாளம்மை யென்ற அம்பிகையின் திருப்பெயர் சிறு குழந்தைகளும் இப்பக்கத்தில் கூறுவதை யறியாமல் வேறு கூறியிருப்பதும் பொருந்தாக் கூற்றுக்களேயாம்.

ஊர்.

திருக்கோயிற்கு ஊழியம் செய்வோர்களிற் சிலர் மட்டும் வாழ்ந்து வருகிற சில வீடுகள் தாம் இவ்வூரில் இப்போதிருக் கின்றன. தேவாரத்தில்,

" வளங் கொள்மதில் மாளிகை கோபுரமும்
மணிமண்டப முமிவை மஞ்சு தன்னுள்
விளங்கும் மதிதோய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியே னையும் வேண்டுதியே."

என்று கூறியிருப்பதுபோல், இது பெரிய நகரமாயிருந்து அழிந்திருக்கிற தென்பது இவ்வூரைப் பார்க்கையிலேயே தெரியும்.

வரலாறு.

முற் கூறியபடி, வேஞ்சன் என்னும் ஒரு சிற்றரசன் இந்நாட்டை ஆண்டு வந்தானென்றும், அவன், தனக்குச் சமணர்களோடு நேர்ந்த ஒரு பெரும் போரை, விகிர்தேசப் பெருமான் திருவருட்டுணை கொண்டு எளிதில் வென்று வாகை சூடினனென்றும் கூறுப. இவ்வரசன் வேட்டுவமரபினன். இதற்குச் சான்றாக இத்தலத்தைச் சூழவிருக்கும் ஊர்களில் வேடர்கள் செல்வாக்காக இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அன்றியும், பெருநிலக்கிழமை (சமீன்) பெற்ற செல்வரும் இம்மரபில் இன்றும் இச்சில்லாவில் இருக்கின்றனர். தேவாரத்திலும், " வேடர் விரும்பும் வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே" யென்று கூறியிருப்பதும் போற்றத்தக்கது.

இனிச் சுந்தரமூர்த்தி நாயனர் இங்கு வந்து தமிழ்மறை பாடிச் சிவபிரானருளைப் பெற்றுச் சென்றனர் என்பது,

" ஆயிடைநீங்கி யருளினர் செல்வா
ரருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து
பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் டமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்தவந் தடைந்தார்
தென்திருக் கற்குடி மலையில்

என்னும் பெரிய புராணத்தாலும் அறியலாம். (எயர் கோ—92)

இனிப் பெரிய புராணத்துட் கூறப்படாது அவ்வத் தலங்களில் வழங்கிவரும் வரலாறுகள் போலவே இத்தலத்து வழங்கும் ஒரு வரலாறும் உண்டு. அது,

சுந்தர மூர்த்தி நாயனர் இத்தலத்துக்கு வருவதையறிந்து தலத்து அடியார்களும், சிவநேசச் செல்வர்களும் எதிர்கொண்டழைத்துச்சென்று பல்வகை வழிபாடுகளும் செய்ய, மகிழ்ந்த நாயனர், அவர்களோடு திருக்கோயில் புகுந்து முறைமையின் வணங்கிப் பண்ணோர் மொழியாளையோர் பங்குடைய விகிர்தேசப் பெருமானைப் பாடுவாராய் ஒவ்வொரு பாட்டிறுதியையும் "வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே" என்று முடித்துத் திருக்கடைக்காப்பும் சாத்தியருளப், பாடுவார் பாடும் பரிசில்வரிசை யெல்லாம் அறியவல்லாராகிய சிவபெருமான், நாயனர் தமது தோழராதலின் அவரோடு தாம் புரியும் ஒரு திருவிளையாடலை யுட்கொண்டு, தம் திருக்குமாரர்களிருவரும், இருபார்ப்பனச் சிறுவர்களாய் உடன் வரத் தாமொரு முதிய பார்ப்பன வடிவங்கொண்டு, அவ்வாறே வந்த அம்மையாரோடும் நாயனர் முன்தோன்றி, "நல்லது, சுந்தரரே! உமது தமிழ்போல நமக்கின்பஞ்செய்வது வேறெதுவுமில்லை. இவ்வருந் தமிழுக்கு நன்கொடை யளிக்கவேண்டும். நாம் என்ன செய்வோம்? நம் கையில் ஒரு காசுக்கும் வழியில்லை. இத்தனை நாள் நாம் தேடி வைத்தவை யெல்லாம் இந்த இரண்டு (மக்கள்) செல்வத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. எனினும், இம்மக்களிருவரையும் ஈடு வைத்தேனும் எங்கேனும் பணம் கிடைக்குமானல் வாங்கித் தருவது தவிரேம். நீரும் வருக," என்றழைத்துக் கொண்டு, அவ்வூரில் தம்மை நாடோறும் போற்றி வழிபட்டுவரும் ஒரு கிழவியிடம் சென்று, 'அம்மையே! எனக்குக் கொஞ்சம் பொருள் வேண்டியிருக்கிறது. இந்த என்னருமைச் செல்வங்களாகிய இரு பிள்ளைகளையும் ஈடுவைத்துக் கொண்டு நான் கேட்கும் பொருள் தரவேண்டு' மென்றிரந்தனர். அக்கிழவியும் இக்குழந்தைகளின் அழகில் ஈடுபட்டு அவர் வேண்டிய பொன்னைக் கொடுக்க அதை நாயனருக்குக் கொடுத்தனுப்பினர் என்பதாம்.

5

இதனைக் கொங்குமண்டலசதகம் (10)

"கிழவே றியவடி வாகி விருத்தையைக் கிட்டியென்றன்
அழகாகு மக்க ளடகுகொண் டம்பொ னருடியென்றேற்
றெழுகாத லாற்றமிழ் பாடிய சுந்தரற் கீந்தவொரு
மழுவேந் தியவிகிர் தேசுரன் வாழ்கொங்கு மண்டலமே"

என்று கூறுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனாரைத் தவிரத் திருநாவுக்கரசு நாயனாரும் வந்து வணங்கிப் பதிகம் பாடியிருக்கின்றனர். பதிகமிப்போதில்லை. இதனை, வெஞ்சமாக் கூடல் மீயச்சூர் வைகா வேதிசுரம் வீவீச்சுரம்

என்னும் க்ஷேத்திரக்கோவைப் பதிகத்தால் அறியலாம். (8)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இங்கு வந்து வணங்கிப் பதிகம்பாடி யிருக்கின்றனர். பதிகமிப்போதில்லை. இதனை,

"அண்டர்பிரா னாலயங்க ளம்மருங்குள் ளனபணிந்து [னிடை
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங் கொங்கி
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்க டொழுதணைந்தார்
கொண்டல்பணி நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர்.
அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர் கோயில்
எப்பாலுஞ் சென்றேத்தி" என்னும் பெரிய புராணத்தால்
(திருஞான 324, 327) அறியலாம்,

பூசை.

இக்கோயிலில் இரண்டு காலபூசை மட்டிலும் நாடோறும் நடந்து வருகிறது. அமாவாசை, பிரதோஷம், மாதப் பிறப்பு ஆகிய இக்காலங்களில் கடவுள் விழாக் கொண்டருள்கிறார்.

கோயில் சிறிதாயிருந்தும், ஊழியம் செய்வோர் மிகச் சுருங்கிய வருவாயுடையோராயிருந்தும், இப்பக்கத்துப் பெரிய கோயில்களிலும் நடவாத ஆடல் பாடல்கள் நாடோறும் இராப் பூசையில் நடந்து வருகின்றன.

அது,

"மண்ணார் முழவும் குழலுமியம்ப மடவார் நடமாடு மணி யரங்கில், விண்ணார் மதிதோய் வெஞ்சமாக்கூடல்." (4)

"அழகார், முழவாரொலி பாடலொடாடலரு, விழவார் மறுகில் வெஞ்சமாக்கூடல்" (6)

"பாடல் முழவுங் குழலுமியம்பப் பணைத்தோளியார் பாடலொடாடலரு, வேடர் விரும்பும் வெஞ்சமாக் கூடல்" (8)

என்று கூறும் நந்தம் சுந்தரமூர்த்தி நாயனாரது திருமொழியின் சிறப்பென்று கொள்ளத்தகும்.

இவ்வளவு பெருமையும் பழமையுமுடைய திருக்கோயில் மிகவும் சிதைவுற்று இருக்கிறது. நன்னிலைமையிலுள்ள கோயிலை யெல்லாம் இடித்துப் புதுக்கும் வணிகமணிகள் இதனை யறியாதது தான் வியப்பாயிருக்கின்றது. இதன்கட் பல கல்வெட்டுக்களிருக்கின்றன.

சிறுவர்க்குரிய பக்கங்கள்.

உ

வாசுகியம்மையார்.

திருவாளர். L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

தொண்டை நாட்டிலே, காவேரிப்பாக்கம் என்னும் ஊரிலே, உழுவித்துண்ணும் வேளாளர் மரபிலே, ஆயிரம் ஏர்வைத்து உழு தொழில் நடத்திய மார்க்கசகாயர் என்ற ஒருவர் இருந்தார். அவரது அருமந்த மகள் வாசுகியம்மை. இவர் 'விளையும் பயிர்

முளையிலே தெரியும்' என்று கண்டவர் வியக்கும் மேன்மையும், நற்குண நற்செய்கையும் பெற்று, அழகின் கொழுந்து வளர்வது என வளர்ந்து, மணப்பருவம் சார்ந்தனர்.

இவர் செய்கை இவ்வாறாக இவரது தந்தை மார்க்கசகாயர் தமது விளைபுலங்களில் விதைத்த விதையெல்லாம் முளைத்துத் தழைத்துக் கருக்கொள்ளும் பொழுதில், கருகி அடியோடழிந்து பாழ்படக்கண்டு மனம்வருந்தி, பலவாறு முயன்றும் ஒன்றும் புலனாகாமையால், 'இக்குறையை நீக்கவல்லவர் யாராயிருப்பினும், அவர்க்கு என் மகள் வாசுகியம்மையை மணஞ்செய்து தருவேன்' என வாக்களித்திருந்தும், ஒருவரும் முன்வாராமையின், கவலையோடிருந்தனர். அப்பொழுது, உயிர்தரு மருந்துபோன்ற நண்பரொருவர் 'அன்பரே! மயிலாப்பூரில் ஒரு பெரியார் இருக்கின்றார். அவர் பெயர் திருவள்ளுவர்; தெய்வத்தன்மை வாய்ந்தவர்; அவர்பாற் செல்வீராயின் உமது கவலை நீங்கும்; எண்ணமும் கைகூடும்' என்றுரைத்தனர்.

அதனைக் கேட்டவுடனே, மார்க்கசகாயர் கார்பெற்ற பைங்கூழ் போல மனங்குளிர்ப்பெய்தி, மயிலையை அடைந்து புலவரைத் தலைப்பட்டுக் கைகுவித்து நின்று, 'உலகம் உய்தற்பொருட்டாகத் தமிழ்மறை தந்த தண்ணளியாள! அடியேனது புலங்கள் விதைக்கினும் விளைவின்றிப் பாழ்படுகின்றன; ஏழைகள் யாவரும் பசியால் மெலிகின்றனர்; தேவரீர் கடைக்கணித்து, எளியேன் குறையை நீக்கியருளல் வேண்டும்' என்றிரந்தனர்.

நாயனாரும் அவரது வேண்டுகோட் கிணங்கி, காவேரிப்பாக்கம் சென்று, நிலங்களின் நிலைமைக்கிரங்கி அருள்ததும்பும் தமதுளத்தில், 'இப்புலம் முழுவதும் செழித்தோங்குக,' என நினைந்து கடைக்கணித்தருளினார்.

அன்று தொட்டு, அருளூரம் பெற்ற அந்நிலமெல்லாம் செழித்து விளைந்தன. எல்லோரும் பசிநீங்கி மகிழ்ந்தனர். இவற்றை எல்லாம் கண்டறிந்த மார்க்கசகாயர் இறும்பூதும் அடங்காமகிழ்ச்சியும் அடைந்து, வள்ளுவனாரை மயிலையிற்சென்று

வணங்கி, 'பெரியிர் செய்த பேருதவிக்குச் சிறியேனாற் செய்யத் தரும் கைம்மாறு ஒன்றில்லை எனினும், அடியேன் செய்து கொள்ளும் விண்ணப்பம் ஒன்றுண்டு; என்னவெனிற் சொல்கின்றேன்; என் நிலம் காரணமாக எனக்குண்டாகிய குறையை நீக்கினோர்க்கு எனது அருமந்த மகள் வாசுகியை மணஞ்செய்து தருவதாக வாக்களித்தேன்; அச்சொல் பொய்யாகா வண்ணம் திருவுளம் பற்றவேண்டும்' எனத் தம் கருத்தை மிக்க வணக்கத்தோடு வெளியிட, நாயனாரும் மார்க்கசகாயரை நோக்கி, 'ஐய! உம்மகள் யாம் தரும் இம்மணலை அட்டுத்தந்திடின் அன்னவளை மணந்திடுவேம்,' எனக்கூறினர்.

மார்க்கசகாயர் அம்மணலைப் பெற்றுத் தம் மனைக்குச்சென்று தம் மகள் வாசுகியம்மையிடம் நாயனார் குறிப்புணர்த்தி மணலைக் கொடுப்ப, அவ்வம்மையார் 'ஐயர்பணி இதுவாயின் யான் இதனை அட்டிடுவேன்' என்றெண்ணித் தந்தையார் கையினின்றும் அதனை வாங்கி, உலையிற் பெய்து சோறாக அட்டுக்கொடுத்தனர். அதுகண்ட வள்ளுவனார், 'இந்நங்கை நம் சொல் மறாது நடக்க வல்லவளே' எனத்துணிந்து, வாசுகியாரை மணஞ்செய்து கொண்டனர்.

மணம் முடிந்த பின்னர், வாசுகியம்மை, தாய் தந்தையரிடம் விடைபெற்றுக் கணவரோடு திருமயிலையை அடைந்து, அங்கு ஊர்க்குப் புறம்பே தனியிடத்திலிருந்த அவரது சிறுகுடிலை அணுகிக் கணவனோடிருக்குமிடம் காடாயினும் கற்பகச்சோலை என நினைந்து, அவர்பால் அன்புடையவராய் அங்கு இனிதிருந்து, துறந்தார் வறியவர் விருந்தினர் முதலியோரைப் பேணி, அறத்தில் வழுவாமல் மனையறம் நடத்தி வந்தனர்.

செய்தொழிலிற் றீமையில்லாதது நெய்புந்தொழில் எனத் தெரிந்த தம் கணவர் வணிகரிடத்தில் நூல் வாங்கி, ஆடை நெய்து, அதனாற் பெறும் சிறு ஊதியத்தைக் கொண்டு வந்து கொடுப்பினும், நம் அம்மையார் பெற்றதைப் பெரிதாக நினைக்கும் பெற்றியராதலால், அதனைப் போதுமென்றுவப்பார்.

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை செய்தலும், வருவிருந்தினரைப் பரிவோடுண்பிக்கும் அன்பும் உடையவர்; கணவர் விரும்பி உண்ணுமாறு பல வகையான உண்டிகளை இனிதில் அடுதலில் வல்லவர்; தம் கொழுநனையல்லது பிறதெய்வங்களைக் கனவினும் தொழாத தன்மையர்; கணவர்க்குச் செய்யும் வழிபாட்டினைக் கடவுள் வழிபாட்டினும் சிறந்தது என்னுங் கருத்தினர்; ஆதலால் கணவர் துயிலுமளவும் கால்வருடித் துயின்றபின் உறங்கி, அவர் எழுவதன்முன் துயில் நீத்தெழுபவர்; திருமகளினும் மென்மையரெனினும், கற்பு நிலையிற் கலங்காத திண்மையர்; கணவர் யாதுரைப்பினும், மாறுரையாது செய்து முடிக்கும் கடப்பாட்டினர்.

இத்தகைய மேம்பாட்டினையுடைய வாசுகியார், நகமும் தசையும் போலக் கணவரோடிருந்து இல்லற நடத்திவருகையில், ஒருவர் போந்து, 'இல்லறமோ அன்றித் துறவறமோ எது சிறந்தது?' என்று நாயனாரை வினவினர். அவர் அதற்கு விடையொன்றும் 'உரையாராய் இங்குச் சிலநாள் இருந்திடுக' என்றுரைத்திட, அவ்வாறே அவர் இருக்கின்ற காலத்து, ஒரு நாட் காலையில் தம் கணவருக்குப் பழஞ்சோறு படைத்துப் போய், அம்மையார் கிணற்றில் நீர் முகந்து கொண்டிருக்கையில், 'பெண்ணே! சோறு சுடுகின்றது; சிவிறி கொணர்ந்து சூடாற்றுக' என்றனர் ஐயர். வாசுகியார், இழுத்த குடத்தைக் கயிற்றோடு கிணற்றிலேயே விடுத்திட்டு விரையவந்து விசிறிகொண்டு விசப் பழஞ்சோற்றில் ஆவியெழுந்தது. அதன் பிறகு சென்று, கீழே விழாமல் கிணற்றில் பற்றுக்கோடின்றி நின்றுகொண்டிருந்த நீர்க்குடத்தையும் கயிற்றையும் கொண்டு வருவாராயினர்.

பின்னொரு நாட் பகலில் நாயனார் என்றும் போல ஆடை நெய்து கொண்டிருக்கையில், அவர் கையிலிருந்த நெய்யுங்கருவியாகிய குழல் கீழே விழுந்து விட்டது. அப்பொழுது, 'குழல் கீழே விழுந்து விட்டது, பெண்ணே! விளக்கெடுத்து வருக' என்றழைத்தனர். வாசுகியம்மை, கணவர் சொற்கு மாறுரையாமல் நடப்பதே கடனாகக் கொண்டவராதலால், பகலென்று கரு

தாமல், விளக்கோடு வந்து குழலை எடுத்துக்கந்தனர். இவற்றை எல்லாம் கண்டிருந்த அயலூரிலிருந்து துயர்தெளிய வந்தவர் இவரது கற்பினை வியந்து, 'சொற்றவறாத இல்லாள் வாய்க்கின், இல்லறமே சிறந்தது; இல்லையாயின் துறவறமே நன்று' எனத் தாமே உணர்ந்து, 'இம்மங்கையற்கரசியாரை இல்லாளாகப் பெற்ற இவரே பெரும் பேறு பெற்றவர்' எனப் புகழ்ந்து விடை பெற்றேகினர்.

இவ்வண்ணம், தம் கணவர் சொற்றிறம்பாதொழுகிப் புகழ் பட வாழ்கின்ற நாட்களில், ஒருநாள் இரவில், அம்மையார், நாயனூர்க்குரிய வழிபாடுகளைச் செய்துகொண்டிருக்கும்போது, 'அம்மே சோறிடுக' என்பார் ஒலி கேட்டது. தம் கணவருக்குப் பணிவிடை செய்வதினும் மேம்பட்ட நல்லறம் பிறிதில்லை என நன்கு உணர்ந்தவராதலால், வாய்பேசாது தம் பணிகளைச் செய்து முடித்த பின், சோற்றைக் கையிலேந்தி வெளியே வந்தனர். அங்கு நின்ற பெரியார்க்கு, இவரது தன்மை தெரியாது. ஆதலால், 'நெடுநேரமளவும் என்னைப் புறங்கடையில் நிற்கவைத்த இம்மங்கை என் ஆற்றலை அறிந்திலள் போலும்' எனச்சினந்து, இவர் முகத்தை ஏறப்பார்த்தனர். அவரது உள்ளக் கிடக்கையைக் குறிப்பாலுணர்ந்த அம்மையார், 'கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா' என்று கூறினர். கேட்ட பெரியார் நடுக்கமுற்று, 'இது என்ன வியப்பாயிருக்கின்றது? நெடுங்காலமாகக் காட்டிலிருந்து கடிய நோன்பியற்றுவேன்; என்பெயர் கொங்கணன் என்பதை எவரும் அறிந்திடார்; அதுவன்றி வரும் வழியில் என்மேல் எச்சமிட்ட கொக்கை ஏறெடுத்துப் பார்த்தேன், அது சாம்பராயிற்று. இவற்றை எல்லாம் என்னையன்றி அறிந்தவர் எவருமில்லை; அவ்வாறிருக்க, இத்தனையும் இங்கிருந்தே தெரிந்துரைத்த இவ்வம்மையின் பெருமையை என் சொல்லுவேன்! எவையும் தவத்திற்கு ஈடில்லை என்பர்; அதுவும் இவ்வம்மையின் கற்பின்முன் நில்லாதாயிற்று; இனி இவர் சினந்துரைக்கும் கொடுமொழிக் காளாகாது உய்யவேண்டும்' என்று துணிந்து 'தாயே என்குற்றத்தைப் பொறுத்தருள்க' என வணங்கிக் காடு சென்றனர்.

இவ்வாறு இல்லறமே நல்லறமெனை உலகம் உய்த்துணர வாழ்க்கை நடத்திய வாசுகியம்மைக்கு இறுதிக்காலம் கிட்டியது. உடம்பினின்று உயிர் பிரிவதற்குத் தத்தளிக்கையில், வள்ளுவனார், இவர் முகநோக்கினர்; யாதோ ஒன்றைக் கேட்டற்கஞ்சி வருந்துவதறிந்தனர், 'பெண்ணே! யாது சொல்ல விரும்புகின்றனை அஞ்சாமற் சொல்லுக' என்றனர்.

'என்னுயிர்த் துணைவரே! ஒன்று தெரியவிரும்புகின்றேன்; மன்னிக்க வேண்டும்; உண்கலத்தில் சோறு படைக்கும்போது, ஒரு சிறு கிண்ணத்தில் தண்ணீரும், அதனருகில் ஊசி ஒன்றும் வைக்குமாறு என்னைப் பணித்தீர்கள். தேவரீர் ஒரு நாளாயினும் அவற்றை எடுத்தாளாமையால், அவற்றின் பயன் இன்னதெனத் தெரிந்திலேன்' எனக் கூறினர்.

'நங்கையே! சோறுபடைக்கையில் சிதறி நிலத்தில் விழும் சோற்றினை ஊசியால் எடுத்து, நீரில் கழுவிக் கொள்வதற்காக வைக்கச் சொன்னேன். நிலத்தில் சோறு சிந்த நீ ஒருநாளும் படைத்திலை. அதனால், யான் அவற்றை எடுத்திலேன்' என்றுரைக்குமுன் வாசுகியம்மை, மலர்ந்த முகத்துடன் கைகுவித்துத் தம் கணவரை மனதில் நினைத்தவண்ணம் வீட்டுலகம் சென்றனர்.

இந்நில வுலகில், நங்கைமார்கள் தம்கணவர் சொற்றிறம்பாது நடத்தலாகிய கற்பினைக் கைக் கொள்வாராயின், இம்மையிற் புகழும், மறுமையில் வீட்டின்பமும் எய்துவர் என்பதை நடந்து காட்டுவதற்காக மண்ணிற்றோன்றிய இவ்வம்மையாரைப் போலக் கிடைப்பது அருமை என்பது தோன்ற, பொய்யில் புலவராகிய நாயனாரும்,

'அடிசிற் கினியாளே யன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை—யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தா
லென்றூங்கு மென்க ணெனக்கு.'

என மனமுருகிப் பாராட்டினரென்றால், இவ்வாசுகியம்மையின் அருமை பெருமைகளைக் கேட்டு எவர் தாம் இன்புறாதவர்?

முற்றுப்பெற்றது.

உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் : ரு.	பிரபவ — வைகாசி, ஆனி.	மலர் : உ, ரு.

இராசராசன் I.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 9-பக்கம்.)

இளம்பருவமும் முடிசூட்டுதலும்.

சுந்தர சோழனாகிய இரண்டாம் பராந்தகனுக்கு இளைய மகனாகிய இவன் இன்ன யாண்டிற் பிறந்தவன் என்று தெரிதற்கிடமில்லை எனினும், தஞ்சை இராசராசேச்சரத்தும், திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்தும், முறையே "உடையார் இராசராசதேவர் திருச்சதயத் திருவிழா" எனவும், "உடையார் திங்கள் சதயவிழா" எனவும், திங்கடோறும் கொண்டாடப்பட்டமையானும், செங்கற்பட்டிலுள்ள திருவடந்தை வராகப்பெருமாள் கோயிலில், யாண்டுதோறும் ஆவணித் திங்கள் சதய நாள்தொட்டு, "இராசராசன் திருவிழா" என எழுநாள் விழா எடுத்தமை G. O. No. 822. Public, 28 July 1911 பக்கம் 70 இல் அறியக்கிடத்தலானும், திருவடந்தையில், இவ்விழா, ஏனைத் திங்களில் நடைபெறாது ஆவணித் திங்களில் நடைபெற்ற

மையானும், ஆவணித் திங்கட் சதய நாளே இவன் பிறந்த நாளென்று உய்த்துணரலாம். கலிங்கத்துப்பரணியில், சோழ மரபின் தொடர் புரைக்கும் பகுதியில், "சதய நாள்விழா வுதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்" என இவனைச் சுட்டியிருத் தலின், இவன் பிறந்த நாள் விழாவைத் தான் முதன் முதலில் வென்றுகொண்ட சேர நாட்டில் ஏற்படுத்தினமை இனிது விளங்கும்.

இப் பிறந்த நாள் விழாவைப் "பெருமங்கலம்" எனத் தொல்காப்பியமும், "புண்ணிய நன்னாள்" என மணிமேகலையும் கூறும். அந்நாளில், அரசன், சிறைவிடுதலும், செருவொழி தலும், கொலை ஒழிதலும், இறை தவிர்தலும், வேண்டின கொடுத்தலுமாகிய சிறந்த தொழில்களை மேற்கொண்டு, வெள் ளணி அணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருள் நிகழ இருப்பன். ஆதலின், அதனை "வெள்ளணி நாள்" எனவும் விளம்புப. அன்று, "கண்ணார் கதவந் திறமின் களிறொடு தேர்—பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்—போர்வேந்தன் பூச லிலன்" எனவும், "ஏமாரு மன்னீர் எயில் திறமின்—காமநுகர் மின் கண்படுமின்" எனவும் ஏமமுரசம் எடுத்தியம்பும். இவற் றால், மன்னர் பிறந்த நாள்விழா தண்டமிழ் நாட்டில் தொன்று தொட்டு நடைபெற்று வந்தவாறறிக.

இனி, இவன் பிறந்தபோது, "தம் கணவற்கு இனி நிலச் சுமை குறைந்த தென்னும் மனமகிழ்ச்சியால் ஆதிசேடன் மனைவி யர் நடித்தனர்" எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு (சுலோகம் 63) கூறுமாற்றால், நிலந்தாங்கும் நீண்முடி வேந்தர்க் குரியவாகிய அகன்ற நெற்றியும், உயர்ந்த தோளும், பரந்த மார்பும், முழந்தா ளளவும் நீண்ட கையும் என் றின்னோ ரன்ன அரச அடையாளங் கள் பலவும் இவன் மேனியில் விளங்கிக் கிடந்தன போலும் என்று கருதலாம்.

ஆகவே பாராளும் பெருவேந்தர்க் குரிய தன்னமில் அடை யாளங்கள் பலவும் தன்பால் வயங்க, நல்வாழ்வுறுங் காலம் நண்ணியதெனத் நிலமகளும் வென்றிமகளும் நடித்திட, பகை

யிருளொடுங்க, இள ஞாயிறு போல ஆவணித் திங்களிற் சதய நாளிற் பிறந்த இவன், அருண்மொழித் தேவன் எனப் பெயரிடப் பெற்று வளர்ந்து, உரிய காலத்தில் நூல்கள் பலவும் நிரம்பக் கற்று, யானையேற்றம், குதிரையேற்றம், தேரேறுதல், வில்வாட் பயிறல் என் றின்னவைகளை நன்கு தேர்ந்து, சைவம் வளர்க்குந் தண்முகில், திருமுறை போற்றும் செவிலி, கற்றவர் தமக்கொரு நற்றுணை, இயலிசை படரும் கொழுகொம்பு என எவரும் எடுத்தியம்பிட, இளமையிலேயே மூதறிவிற் சிறந்திருந்தனன்.

இனி, இவனுக்கு மூத்தோனாகிய ஆதித்த கரிகாலன் இறந்த பின், இவனே அரியணை ஏறுதற்குப் பெரிதும் உரிமையுடையவ னாகவிருந்தும், குடிகள் இவனையே அரசுரிமையைக் கைக் கொள்ளுமாறு வேண்டியும், தன் சிற்றப்பன் மதுராந்தகனுக்கு அரசாள் விருப்பம் ஒழியுமளவும் தனக்கு நாடாட்சி வேண்டிய தில்லை என்று மறுத்து அவன்கீழ் இளவரசாக இருந்த இவனது தன்மையை நோக்குமிடத்து, இவன் தாயத்தார்க்குட் பகைமை கூடாதென்னும் நோக்கும், பெரியோர் கருத்திற்கு மாறுபடாது அடங்கி யொழுகும் பெற்றியும் வாய்ந்த பெருந்தகை என்பது விளங்கும். இன்னும் இவன் எடுப்பித்த இராசராசேச்சரத்திற்குத் தானும் பிறரும் தந்தனயாவையும் கல்லிற் றீட்டுதற்கு ஆணை தருபவன், "நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத் தனவும் கல்லில்வெட்டுக" என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டியவற்றுள், தமக்கையாரைக் கூறுமிடத்தெல்லாம் "இராச ராசதேவர் திருத்தமக்கையார்" என மேம்படுத்துக் கூறியதோ டமையாமல், அவர் தந்தன மட்டும் தன்னோடுடுத்து நடு விமானத்து வரைந்திடச் செய்து, பெண்டிரும் பிறரும் தந்த வற்றைத் திருச்சுற்று மாளிகையில் இடந்தொறும் இடந்தொறும் வெட்டுவித்திருப்பதை ஆராயின், இவன் தன் தமக்கைபால் கொண்டிருந்த நன்கு மதிப்பினை இனிதுணரலாம்.

இனி, இவனை அருண்மொழித் தேவன் எனத் திருவாலங் காட்டுச் செப்பேடு கூறுவதால், அது இவனது இயற்பெயர்

போலும். இவனுக்குரிய பட்டப்பெயர் இராசகேசரிவர்மன் என்பது. நெடுநாளாக உத்தமசோழன்கீழ் இளவரசாக இருந்து அரசகாரியங்களை நன்குணர்ந்த இவன், அவன் இறந்த பின்னர், ஆராய்ச்சியாளர் நுண்ணறிவாற்கண்ட கி. பி. 985 ஆம் யாண்டில் * இராசகேசரி என முடி சூட்டப்பட்டு அரசுகட்டி லேறினன்.

முடிசூட்டு விழா எடுக்குமிடத்து அவ்விழாவிற் கென்று குறித்த நன்னாளில், அரசனை யானைமீ தேற்றி மன்னரும் அமைச்சரும் பிறரும் புடையிற் சூழ்வரப் பல்லியங் கறங்க வாழ்த்தொலி பெருக நகர்வலஞ் செய்வித்துப் பின்னர்க் களிற்றினின்றும் இழிச்சி, முடிசூட்டு சாலையிற் கொடுபோய், நாற்புறமும் மாலைகள் நாலக், கொற்றக்குடை நிழற்ற, நடுவண் இட்ட அரியணைக்கண் ஏற்றி, முரசுமுழங்க முடிசூட்டி, மங்கலத் தீ வளர்த்து, நுண்ணூல் புறஞ்சூழ்ந்த பொன்னின் குடங்களில் நிரப்பிய நன்னீரை மரபுளியாட்டி விழாவயர்வர். இதனை மூர்த்திநாயனர் புராணத்துட் காண்க.

இனி, இவனுக்கு, ஓலோகமகாதேவியார், சோழமகாதேவியார், அபிமானவல்லியார், திரைலோக்கியமாதேவியார், பஞ்சவன் மாதேவியார், பிருதிவிமாதேவியார், இலாடமாதேவியார், மீனவன்மாதேவியார் என்கிற வேம்பன் சீருடையார் என மனைவியர் பலர் இருந்தமை அறியலாம். இன்னவரை மனைவியரெனத் தெரிந்து கோடற்கு அன்னவர் பெயர்க்கு முன்னர்; "உடையார் சிராசராசதேவர் நம்பிராட்டியார்" என்னும் அடைமொழி புணர்க்கப்பட்டிருத்தலே தக்க சான்றாகும்.

---

* முற்காலத்தில் சோழர்மரபில் இராசகேசரி எனவும் பரகேசரி எனவும் அரசர் இருவர் இருந்தனர் என்பதை ஆனைமங்கலத்துச் செப்பேட்டிற் காணலாம். பிற்காலத்துச் சோழரெல்லோரும் பெருமையிற் சிறந்த அன்னவர் பெயரைத் தம் பெயர்க்கு முன்னர்ப் பட்டப்பெயராகச் சேர்த்து வழங்குவாராயினர். அவ்வாறு வழங்குமிடத்துத் தந்தை இராசகேசரியாயின் மகன் பரகேசரியாக இருப்பன். இவ்விருபெயரும் தம்மில் அடுத்தடுத்து வழங்குவதே, இன்னவனுக்குப் பின்னர்ப் பட்டம் எய்தியவன் இன்னவன் என்பதை இனிதுணர்த்தும். இம்முறையில் இராசராசன் இராசகேசரியானன்.

இனி, இம்மனைவியர் பலருள் பட்டத்தரசி இன்னாரென் றறிவதும் இன்றியமையா தாகலின், அதனை ஆராயின், ஒலோக மாதேவியாரே முதன்மனைவியாதல் அமையும். எவ்வாறெனிற் கூறுவேன்.

இராசராசன் ஆணையிட்டவாறு பொறிக்கப்பெற்றுள்ள மனைவியர் கல்வெட்டுக்களில், "உடையார் ஸ்ரீராசராசதேவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் ஸ்ரீராசராசீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவதுவரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகள்" என ஒலோகமாதேவி தந்தன கூறும் கல்வெட்டே முன்னர் வெட்டப்பெற்றுள்ளது.

அரசர்கள், தம் பட்டத்தரசியுட னிருந்தே நற்காரியங்களை இயற்றுவது இயற்கை. இவன், திருவிசலூர்க் கோயிலில் துலாபாரம் புக்கபோது தந்தி சத்தி விடங்கியார் இரணிய கருப்பம் புக்கனரென்பதை, "ஸ்ரீ கோவிராச கேசரி வன்மரான ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராசேந்திர சிங்க வளநாட்டு மண்ணிநாட்டு பிரம்மதேயம் வேம்பற்றூராகிய சோழ மார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்து மகா சபையோம் கையெழுத்து. நம்மையுடைய சக்கிரவர்த்தி உடையார் ஸ்ரீராசராச தேவர் இவ்வூர் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீகோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியார் இரணியகருப்பம் புக்கருளி, இத் திருவிசலூர் மகாதேவர்க்கு அக்காரடலை அமுதுக்கு வேண்டும் நிபந்தங்களுக்காக வைச்ச காசு சாருமஅ" என்னும் கல்வெட்டா லறிக.

தந்தி சத்தி விடங்கியார் என்பது ஒலோகமாதேவியார்க்கே பெயரென்பதை, "உடையார் ஸ்ரீராசராசதேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியரான ஸ்ரீ ஒலோகமாதேவியார் வடகரை ராசேந்திர சிம்ம வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்றுப் பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவி ஈச்வரம்" என்னும் பகுதி நன்குணர்த்தும்.

இன்னும், ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவர், தஞ்சை இராசராசேச்சரத்தில், இராசராசன் படிமத்தோடு ஏனைய மனைவியர் படிமங்களை எழுந்தருளச் செய்யாது, ஒலோகமாதேவியார் படிமத்தையே எழுந்தருளுவித்தமை, "உடையார் சிராசராசீச்வரம் உடையார்க்கு ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் சிராசராசீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவதுவரை எழுந்தருளுவித்த செப்புப் பிரதிமங்கள்..................பாதாதி கேசாந்தம் ஒரு முழமே நால் விரலரை உசரத்து இரண்டு திருக்கைபுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த பெரிய பெருமாள் (இராசராசன்) பிரதிமம் ஒன்று, இருபத்து இருவிரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கைபுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த இவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமம் ஒன்று" என S. I. I. vol. II. Part II பக்கம் 155 இல் அறியக்கிடக்கின்றது.

ஆகவே, தந்தி சத்தி விடங்கியார் என்னும் ஒலோகமாதேவியாரே, இதுகாறும் கூறியவாற்றால், இராசராசன் முதற்பெருந்தேவி என விளங்கிநிற்றல் காண்க.

இவனுக்கு, இராசேந்திரன் என்ற மகனும், குந்தவை என்ற மகளும் இருந்தனர். இவர்களையன்றி மாதேவடிகள் எனப் பெயரியமகளும் உண்டென்பது, "சிராசராசதேவர் திருமகளார் மாதேவடிகளார் திருவையாற்று ஒலோகமாதேவீச்வர முடையார்க்கு ....சாத்தியருளக் குடுத்த பட்டம் ஒன்று" என்னும் திருவையாற்று உத்தர கைலாயம் என வழங்கும் ஒலோகமாதேவீச்சர சாசனப்பகுதியால் விளங்கும். இம் மாதேவடிகளை நடுவிற் பெண்ணெனத் திருவலஞ்சுழிக் கல்வெட்டுக்கூறும். Ep. An. Rep. for 1902-3, No. 633 of 1902. ஆகவே, இராசராசனுக்கு இராசேந்திரன், மாதேவடிகள், குந்தவை என மக்கள் மூவர் இருந்தனரென்ப தறியக்கிடத்தல் காண்க.

இராசராசன் படையெழுச்சியும் வெற்றி மேம்பாடும்.

இனி, இராசராசன் வெற்றிமேம்பாட்டிற்கு இன்றியமை யாதது படையெழுச்சியாதலால் அதனை, நன்கறிவதற்கு ஏற்ற வைகள் கிடைத்திலவேனும், அவற்றினை ஒருவாறு நாம் துணிவ தற்குத் தக்க கருவியாயிருப்பன இன்னவன் சாசனத்தொடக் கத்திற் காணப்படும் மெய்க்கீர்த்திகளேயாம்.

இனி, மெய்க்கீர்த்தியாவது,

"சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வா லாறு சொல்லியு
மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"

என்னும் பன்னிருபாட்டியல் விதிக்கிணங்க, நாற்சீர்கொண்ட இரண்டடித் தொடையில், தன் வெற்றிமேம்பாட்டால் விளைந்த மெய்ப்புக ழெல்லாம் விளங்க, இராசகேசரிவர்மரான இராசராச தேவர்க்கு யாண்டெனச் சிறக்க வரைந்துள,

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்

னிண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் சிராச ராச தேவர்க்கு யாண்டு" என்பது.

இம் மெய்க்கீர்த்திகள் இல்லாவிடில், வரலாற்றாராய்ச்சிக்குச் சாசனங்கள் பயன்படாதொழியும். இவனுக்கு முன்னிருந்தவர் சாசனங்களில் மெய்க்கீர்த்தி வரைந்து பின்னர்ச் சாசனந் தொடங்கும் வழக்குக் காணப்படாமையின், அதனை ஏற்படுத்தினவன் இவனேயாவன். அஃதும் இவன் ஆட்சியின் பதினான்காம் யாண்டுமுதற் காணப்படுதலின், மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கம் இவனது பதினான்காம் யாண்டுகொட்டு ஏற்பட்டதெனக்கோடல் சால்புடைத்து.

இனி, இவன் சாசனங்களை ஆண்டுவாரியாக முறைப்படுத்து, அவற்றிலுள்ள மெய்க்கீர்த்திகளிற் சொல்லிப்போதரும் வென்று கொண்ட நாடுகளின் முறையே முறையாகவைத்து ஆராயுமிடத்து, இவன் அரியணை ஏறியபிறகு ஏற்பட்ட சாசனங்களில், எட்டு ஆண்டு அதாவது 994-ஆம் யாண்டுவரையிலும் எத்தகையவென்றியும் கூறப்படவில்லை. அதனால், ஊக்கம் பெரிதும் உடையனாகிய இவன் மடிந்திருந்தான் என்பதமையாது; பிறநாட்டின்மீது படையெடுத்தற்குப் போதிய அளவு படைகூட்டல், நாட்டிற்கு அரணமைத்தல், உள்நாட்டுக் குழப்பங்களை ஒழித்தல் என்றின்னவைகளில் காலங்கழித்திருந்தனன் எனக் கொள்வதே தக்கது.

இனி, தான் கருதிய கருவிகள் யாவும் கைவந்தவுடனே, மலைநாட்டின்மீது படைகள் செல்லுமாறு கட்டளையிட்டனன்.

காந்தளூரிற் கலம் அழித்தல் 994

போர் எப்பொழுது கிடைக்குமென் றெதிர்பார்த்திருந்த தானையும் மலைநாடு நோக்கிச் சென்றது. இப்படைக்கு தலைமைபூண்டவன் பஞ்சவன் மாராயன் என்பவன். இம்மலைநாடு, பிறர்கிட்டுதற்கரியதாய், மலையும் கடலும் சூழ்தரப் புரசாரமுனல் அமைக்கப்

பட்டதாகும் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறும். இதனைச் சாந்திமத்திவு எனக்கூறுவர். இம்மலைநாட்டுக் கடற்றுறைப்பட்டினமாகிய காந்தளூர்ச்சாலையில் போர் நடந்தது. "பாண்டியர்களையும் சேரமானையும் மலைநாட்டு எறிந்துகொண்ட பண்டாரம்" எனத் தஞ்சை ராசராசேச்சரத்துச் சாசனங்களில் பன்முறையும் கூறப்பட்டிருத்தலின், மலைநாட்டுப் போர்க்களத்தில் இவனை எதிர்த்தவர்கள் பாண்டியரும் சேரமானும் என்பது விளங்கிக்கிடப்பினும், அவர்கள் இன்னவரெனத் தெரியவில்லை. அவ்விருவரும் எதிர்த்துநின் றுவதென்னே, எலிப்பகை நாகமுயிர்ப்பக் கெடுவது போலத் தோல்வியுற்றனர். இக் கன்னிப் போரில் காந்தளூர்ச்சாலைக்கண் நின்ற மாக்கலங்கள் அழிதலுற்றன. அவற்றினை அழித்து மலைநாட்டுப் பண்டாரங்கள் பலவுங் கைக்கொண்டு, தான் பிறந்த நாளாகிய சதயநாள்விழாவை அம்மண்டலத்து நடைபெறச்செய்து மீண்டு பாண்டிநாட்டினை அடைந்தான். அப்பொழுது அங்கிருந்தவன் பாண்டியன் அமரபுசங்கன் என்பவன். அவனை முறியடித்து அவனுக்குரிய அரணமைந்த நகராகிய உதகையைக் கொளுத்திப் பாழாக்கினன் இராசராசன். பஞ்சவன்மாராயன், விழிஞம் என்னும் துறைமுகத்தைக் கைக்கொண்டனன்.

இவ்விழிஞமும் காந்தளூரை யடுத்து மேற்கடற்கோடியில் இருந்தமையின் மெய்க்கீர்த்திகள் இதனை வேறாக எடுத்தியம்பில போலும். இவன், 'மலைநாட்டைக் கைக்கொண்டு பதினெண் அரசர் சிரங்களைந்தா' னென விக்கிரமசோழ னுலாவும், 'பதினெண் அரசரைக்கொன்று உதகையைக் கொளுத்தினன்' எனக் குலோத்துங்க சோழனுலாவும் கூறுமாற்றால், மலைநாட்டு வென்றியும் உதகைகொண்டமையும் விளங்கிக்கிடப்பினும், அப்போர்க்களத்திற் கொலையுண்ட பதினெண்மர் இன்னவரென்பது சிறிதும் விளங்கவில்லை. உதகைவெற்றியும் சதயநாள் நடைபெறும் கலிங்கத்துப்பரணியால் வலியுறும். "யாண்டும் செழியரைத் தேசுகொள் கோராசகேசரிவர்மன்" என்னும் இவனது சாசனப் பகுதியால், இவன் பாண்டியர்களை முற்றும் வென்றடக்கியமை

விளங்குகின்றது. அது, இவனுக்குத் தென்னபராக்கிரமன் என்னும் விருதுப்பெயருண்மையானும், பாண்டிநாட்டிற் பற்பலவிடத்தும் இவன் சாசனம் காணப்படுவதானும், பாண்டிமண்டலம் இராசராச மண்டலமெனவழங்கப்பெற்றமையானும், வலியுற்று நிற்றல்காண்க. இவ்வாறு இவன் சேர சோழ பாண்டியர் என்கிற மூவர் நாடாட்சிக் குரிமைபெற்ற பின் இவனுக்கு மும்முடி சோழன் என்னும் பெயருண்டாயிற்று.

அதன் பின்னர் வெங்கை நாட்டின் நிலைமை இவன் செவிக்கெட்டிற்று. அந்நாடு கீழைச் சாளுக்கிய நாட்டிற்குத் தலைநகராகும். கோதாவரி, கிருட்டிணை என்னும் பெயருடன் இப்பொழுது வழங்குவது. அது அரசனில்லாமையால் குழப்பமுற்றிருந்தது. அதனை அறிந்த இராசராசன், தன் பதினான்காம் யாண்டாகிய 998-99-ல், அதன்மீது படையெடுத்துச்சென்று அமைதியை உண்டாக்கிச் சத்திவர்மன் என்பவனை அதற்கு அரசனாக்கினான்.

வெங்கை நாடு 998–99.

வெங்கை நாட்டினைக் கொண்டபின்னர், அப்பிரமேயன் என்னும் படைத்தலைவன் படைகளை நடத்திவர, இராசராசன், கங்கபாடியின்மீது படையெடுத்துச் சென்றான். கங்கர், பல்லவருள் ஒருவகுப்பினராவார். அவர்க்கு இடமாதல்பற்றி, இது கங்கபாடியெனப் பெயர் பெற்றது. மைசூர் நாட்டின் கீழ்ப்பகுதியும் அதனை அடுத்துள்ள நாடுகளும் இதனைச் சார்ந்தவைகளாம். இதற்குத் தலைநகரம் காவிரிக்கரையிலுள்ள தாலக்காடு. இங்கிருந்த கங்கரை வென்றடக்கிக் கங்கபாடியை கைக்கொண்டு, இராசராசபுரம் என அதனைத் தன் பெயரினதாக்கி, அங்கு நின்றும் புறப்பட்டு நுளம்பபாடியைத் தாக்கினான்.

கங்கபாடி 998–99.

கங்கபாடிக் கருகிப்பது நுளம்பபாடி என்பது. இங்குள்ளவரும் பல்லவ வகுப்பினைச் சார்ந்தவரே. இதனை எளிதிற் கைப்பற்றியதன்றி இவ்விரண்டிற்கும் இடையிலிருந்த தடிகை பாடியையும் தன்னதாக்கினான். இதற்குத் தடிகைவழி எனவும் பெயருண்டு.

நுளம்பபாடி தடிகைபாடி 998–99.

இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக நாடுகளைக் கைக்கொண்டு குடமலை நாடு நோக்கி நடந்ததானை. அங்குக் கொங்காள்வார் என்னும் ஒரு மரபினர் வாழ்ந்திருந்தனர். குடமலைநாடு என்றது குடகு. அதனை ஆண்டிருந்தான் மீனிசா என்பவன். பனசோகே என்னும் இடத்தில் போர் நடந்தது. அப்போர்க் களத்தில் மீனிசா பெருவன்மையுடன் போர்புரிந்தானெனினும், தோல்வியடைந்தான். அதனைக் கேள்வியுற்ற இராசராசன், அவனது வீரச்செய்கையை மெச்சி, அவனுக்கு சத்திரியசிகாமணி கொங்காள்வான் என்ற பட்டஞ்சூட்டி மாளவி என்னும் ஊரை நன்கொடை கொடுக்குமாறு தன் படைத் தலைவன் பஞ்சவன்மாராயனுக்குக் கட்டளையிட, அவனும் அதனை நிறைவேற்றினன்.

குடமலை நாடு 998–99.

G. O. No. 961, Public, 2nd August 1913, Para 20. Epigraphist Collection No. 633 of appendix B of 1912. இதனால் வீரரை நன்குமதித்து மேம்படுத்தும் தன்மை இராசராசனிடத்தில் விளங்கி நின்றமை காண்க.

அதன்பின் கொல்லத்தின்மீது சென்று, கொல்லம் கொல்லதேசம் கொடுங்கோளூரையும் கைக்கொண்டு, அங்கு இறுமாப்புற்றிருந்த அரசர்களையும், அவர் ஏவலை மேற்கொண்டொழுகிய கடலரசரையும் வென்று, கீர்த்திபராக்கிரமசோழன் எனப் பெயர்பூண்டனன். Para 22, G. O. No. 919, Public, 29th July 1912.

கொல்லம்.

இவன் செய்கை இவ்வாறாக, பஞ்சவன்மாராயன் மேலைச் சமுத்திரக்கரை முழுவதும் படையெடுத்துச் சென்று துளுவர், கொங்கணர், மலையர்களைச் சிறைகொண்டு, சேரர், தெலுங்கர், இரதிகர்களைப் புறங்கண்டு தன் அரசற்குப் பெரும்புகழ் நாட்டினன். Para 20, G. O. No. 961, Public, 2nd August 1913.

கொல்லத்தினின்று மீண்டு தன்னுடைய இராசராசன், ஒரு பெரும்படையுடன் செல்லுமாறு தன் மகன் இராசேந்திரனைக் கலிங்கநாட்டின்மீது அனுப்பினன். கலிங்கமென்பது, கோதா

வரியாற்றுக்கும் மகாநதிக்கும் இடையிலுள்ளநாடு. இப்பொழுது வடசர்க்காரிலிருப்பது. மேழைச்சளுக்கருக்கு வாழ்விடம். அங்கு மும்மடிபீமன் பிருதாங்கபீமன் என்னும் விமலாதித்தன் அரசாண்டிருந்தான். இராசேந்திரன் அவனைவென்று சிறைகொண்டு வரும்போது கஞ்சத்திலுள்ள மயேந்திரமலையில் வெற்றித்தூண் நாட்டித் தஞ்சையை அடைந்தான். சிறைப்பட்ட விமலாதித்தனை, இராசராசன், பகைவனெனக் கருதி எத்தகைய தீமையும் புரியாது, மிக்க அன்புடன் நடத்தியதன்றித் தன்மகள் குந்தவையை அவற்கு மணஞ்செய்வித்து வெங்கைநாட்டிற்குத் தலைவனாக்கினான். எண்ணித்துணிந்த இவ் வாசசூழ்ச்சியால் கீழைச் சளுக்கருக்கும் சோழருக்கும் நெடுநாளாக இருந்த பகைமைநீங்கிச் சோழநாட்டு வடவெல்லையிற் குழப்பமும் ஒழிந்தது. அதுமுதற் சளுக்கியர்கள் சோழர்பால் பெண்கொள்ளும் வழக்குடையரு மாயினர். அது, விமலாதித்தன் மகன் இராசராசன், கங்கைகொண்டசோழன் மகள் அம்மங்கதேவியையும், அவன் மகன் முதலாங் குலோத்துங்கன், இராசேந்திரதேவன் மகள் மதுராந்தகியையும், மணந்தமையால் விளங்கும்.

கலிங்கம்.

இனி, சோழநாட்டின் வடவெல்லையில் நெடுநாளாக இருந்த குழப்பம் நீங்கவே, தம்மவர்பால் பகைமை பாராட்டிவந்த இலங்கையர்மீது படையெடுத்துச் சென்றான். அங்கிருந்த சிங்களரை வென்றடக்கி ஈழநாட்டினைத் தன்கீழாக்கினான். ஈழமண்டலம், மும்முடிசோழமண்டலம் எனவும், அதனைச்சார்ந்த மாதோட்டம் என்னும் ஊர் இராசராசபுரம் எனவும், அதன்கணுள்ள கோயில் இராசராசேச்சரத்து மாதேவம் எனவும், வழங்கி வந்தமையாலும், தஞ்சை இராசராசேச்சரத்துக்கு, ஈழத்தினின்று பணமும் இலுப்பைப்பாலும் அனுப்ப எற்பாடு செய்திருந்தமையாலும், ஈழம் இவனது ஆட்சிக்குட்பட்டதென் றறியக்கிடத்தல் (கொழும்பு பொருட் காட்சிசாலையில் சேர்த்துவைத்துள்ள Epigraphist Nos, 616 and 618 of appendix B of 1912-இல்) காண்க.

ஈழம் 1001.

இவ்வென்றி இன்னவனது பதினேழாம் வருடசாசனத்தில் முதன் முதலிற் காணப்படுதலின், ஈழத்தை இவன் கைக்கொண்டது இவ்வருடத்தென்று துணியலாம்.

இனி, தம் ஆணைக்குட்பட்டவராகிய கருநடதேசத்தார்க்குரிய கங்கபாடி, நுளம்பபாடிகளை உள்ளிட்ட நாடுகளை இராசராசன் கைக்கொண்டது இராட்டிர கூடத்தாரை உறுத்திற்று. இராட்டிர கூடத்தார்க்கு மன்னவனாக இருந்த கன்னரதேவன், தம் மரபினனாகிய இராசாதித்தனை வஞ்சத்தாற் கொன்றது சோழர்கள் நெஞ்சத்தில் வேரூன்றிக்கிடந்தது. சோழரும் மேலைச்சளுக்கராகிய இரட்டரும், படைவன்மையும் தோளாற்றலும் மிகவும் வாய்ந்தவர். இவ்விருவரும் தம் வன்மையைஅளந்தறிதற் கேற்ற காலத்தினை எதிர்பார்த்திருந்தவ ராதலின், இக்காரணங்களுள் ஒன்றை முன்னிட்டு இராசராசனுக்கும் இராட்டிர கூடத்தரசனான சத்யாசிரயனுக்கும் போர் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இராட்டிர கூடர் என்பவர் தெக்கணத்திருந்த மகாராட்டிரராவர். மேலைச் சளுக்கிய குலத்தை வேறுக்க நோக்கமுற்றிருந்த இவன், ஒன்பது நூறு யிரம் போர்களடங்கிய பெருந்தானை ஒன்றினைத் தன் மகன் இராசேந்திரன் பால் அனுப்பினான். அரச கோளரியாகிய அவனும் படைகளை அணிவகுத்துநின்று,விடாமழைபோல அம்புபொழிந்து, செந்நீர் வெள்ளம் பெருக்கெடுத்தோடப், பிணமலை குவியக், கவந்தமாட, மிக்க வீரத்தோடு பொருது, நாட்டைச் சூறையாடி, நகரைக் கொளுத்திப் பாழ்படுத்தி, மகளிர், இளங்குழவி, மறையவர் என்றும் பாராமற் கொன்று, கன்னியரை மனைவியராக்கொண்டு அன்னவர் குலத்தையும் பாழாக்கி, அளவிலாத பொருளும் பெற்றுச் சினஞ் சிறிது தணிந்து தன்னாட்டை யடைந்தனன். Page 97, G. O. No. 961. Public, 2nd August 1913. இப்போர்க் களத்தில், அரசன் ஆணைக்கிணங்கிச், சத்தியாசிரயன் ஏறியிருந்த யானையைக் குத்திவீழ்த்த முயன்ற ஊற்றத்தூர் சுருதிமான் நக்கன் சந்திரனை ராசமல்ல முத்தரையன் என்னும் யானைப்படை வீரன் இறந்தனன். Epigraphist 515 of appendix B of 1912. இப்போர் நிகழ்ந்தது கி. பி. 1007–8 என ஹோட்டூர் சாசனத்

இரட்டபாடி 1007-8.

தால் விளங்குகின்றது. இப்போரில், இராசராசனுக்கு வெற்றி யென்பதற்கு, "சத்தியாசிரயனை எறிந்து எழுந்தருளிவந்து" எனவும், "சத்தியாசிரயகுலகாலன்" எனவும் இராசராசேச்சரத்துச் சாசனங்களில் காணப்படுதலும், இவ்வெற்றிக்காக தட்சிணமேரு விடங்கர்க்கு அருச்சனைக்காகப் பொற்பூக்கள் பல இவன் கொடுத்தது, "ஸ்ரீ பாத புட்பமாக அட்டித் திருவடி தொழுதன பொற்பூ" என S. I. Ins Vol II. Part IV. Page 7 ஆல் அறியக்கிடத்தலும் சான்றாகும். "இரட்டபாடி ஏழரை யிலக்கமும்" என்னும் இவனது சாசனப்பகுதியும், இவ் வெற்றியைக் குறித்ததேயாம். ஏழரை யிலக்கம் என்றது அந்நாட்டின் வருடத்திய வருவாய்; நாட்டின் வருவாயையும் உடன் சேர்த்துச் சொல்லுதல் பண்டைநாளைய வழக்கு. திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், லீடன் சாசனமும் இவ்வெற்றியை வலியுறுத்தும்.

இவன் இறக்குமளவும் வெற்றியில் நோக்கமுற்ற வீரனாதலால், அலைகடல் நடுவிற் பலகலஞ் செலுத்தி, முந்நீர்ப்பழந்திவு பன்னீராயிரமும் கைப்பற்றினன். இவ்வாறு இவன் சென்ற சென்ற இடமெல்லாம் வென்று மேம்பட்டு விளங்கினமையால், இவனுக்கு "சயங்கொண்ட சோழன்" என்னும் பெயர் உளதாயிற்று. அதுமுதல், தொண்டை மண்டலம் சயங்கொண்ட சோழ மண்டலம் எனும் பெயர் கொடு வழங்கிற்று. இவன், உய்யக் கொண்டான் மலை நாயனார்க்கு, சயங்கொண்ட சோழன் என்னும் பொற்பட்டத்தினைத் தன் இருபத்தொன்பதாவது யாண்டிற் கொடுத்துளனாதலின், இவனுக்கு இப்பெயர் ஏற்பட்டது இவ்வருடத்திதென்பது வெளிப்படை. S. I. I. Vol II. Page 312.

முந்நீர்ப்பழந் தீவு பன்னிராயிரம் 1013.

வென்றுகொண்ட நாடுகளைப் பெயர்க்கு வென்றதாக விடாமல் அவற்றில் பிரதிநிதிகளை நியமிக்கும் வழக்கம், இவன்பால் இருந்தது. அது, இவன் 14-ம் வருடத்தில் கைக்கொண்ட கங்கபாடியைச் சார்ந்த தகடூரைப் பெருந்தரம் பிரம்மாதிராசனுக்குக் கொடுத்து அதற்கு அவனைப் பிரதிநிதியாக்கியமையால் விளங்கும். Para 19, G. O. No. 665 Public, 28 July 1920.

இனி, இவனுக்கு யானைப்படை, குதிரைப்படை, காலாட் படைகளும் இருந்தன. அவை, "மும்மடி சோழத் தெரிந்த ஆனையாட்கள்", "பெருந்தனத்து ஆனையாட்கள்" "சிங்களாந்தகத் தெரிந்த குதிரைச் சேவகர்" "கேரளாந்தகத் தெரிந்த பரிவாரத்தார்" என்றின்னோரன்ன வழக்கால் நன்குணரப்படும்.

இனி, படைகள் நான்காகவும், சாசனங்களில் தேர்ப்படை காணப்படாமையின், இவன் காலத்து அஃது இல்லைபோலும் எனின்? அற்றன்று. தமிழ்நில வழக்குப்பற்றி நூல் இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியனார், "தானை யானை குதிரை யென்ற— நோனா ருட்கு மூவகை நிலையும்" எனத் தொல்காப்பியம் புறத்திணையியலில் பதினேழாம் சூத்திரத்துத் தானையுள்ளிட்ட மூன்றையுமே எடுத்துக்கூறிக், குதிரையா னன்றித் தேர் தானே செல்லாமையின், தேர்க்கு மறம் இன்றென்று அது கூறாராயினர். அது பற்றியே, தமிழ வேந்தனாகிய இராசராசன் சாசனங்களும் தேர்ப் படையென வேறே எடுத்துரைத்தில என் றுணர்ந்து கொள்க.

இனி, இவன் தற்காப்பின்பொருட்டு, மெய்க்காப்பாளரையும், குதிரைப்படை ஒன்றினையும் தன்னோடு வைத்திருந்தனன் என்பதை, "பரிவார மெய்க்காப்பாளர்", "உடனிலை குதிரைச் சேவகர்" என்பன கொண்டு உய்த்துணரலாம். இன்னும், ஒவ்வொரு படைக்கலத்து நன்கு பயின்ற தனித்தனி படையும் இருந்தமை, "பண்டித சோழத் தெரிந்த வில்லிகள்" "மூலப்பரிவார விட்டேறு" (வேற்படை) என்பவற்றால் துணியலாம். இவன்பால், மெய்யுறைபூண்ட வீரர்படையும் இருந்தது. அது, "உத்தம சோழத் தெரிந்த அந்தளகத்தாளர்" என்பதால் விளங்கும். அந்தளகம்—மெய்புறை; கவசம் (coat of mail). படைகளைக் கூறுமிடத்து வாளா கூறாது, இன்னவிடத்து வென்ற தானை இது என்பது புலப்பட, "அழகிய சோழத் தெரிந்த" "அரிதுர்க்க லங்கணத் தெரிந்த" "சண்டபராக்கிரமத் தெரிந்த" "விக்கிரமாபரணத் தெரிந்த" என்பன போன்ற அடைகொடுத்தே வழங்கப்பட்டமை ஆராயின், தானை வகையும், ஒவ்வொரு தானைக்கும் பெயரும், அவற்றினிடத் திவன் வைத்திருந்த

நன்குணரப்படும் உணரலாம். இவன், "முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டலமும், முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்" கொண்டமை மெய்க்கீர்த்தியால் அறியக்கிடத்தலின், இவன்பால், அலைகடல் நடுவிற் பலகலம் நடத்திப் போர்செயவல்ல கடற்படையும் இருந்தவா றுணரப்படும். இவைகளையன்றி இவனிடத்து உற்றிடத் துயிர்வழங்கும் வலங்கை வேளைக்காரப்படைகள் பதினொன்றிருந்தன. அப்படைஞராது பெற்றி தேறமாட்டாதார் அவரை வேலைக்காரர் எனவே மதித்தனர். அவரோ என்றால், அன்னரல்லர்; "இன்னவாறு செய்வேன், செய்யாதொழியின் இன்ன கேடுறுவேன்" என வஞ்சின மொழிந்து, சொன்னவாறு நடப்பவர். கண்ணினைக் காக்கின்ற இமைபோல அரசர்க்குத் தீங்கு நேராமற் காப்பவர். தம் சோர்வால் அவர்க்கொரு கேடு நேருமாயின் தாமும் உடனே தம்முயிரை மாய்ப்பவர். தம் அடியார்க்குக் கேடு நேராமல் முன்னின்று காத்தலின் முருகனை வேளைக்காரன் என்பர் திருவகுப்பு நூலுடையார் எனின், அவர் எத்துணை மேம்பாடுடையர் என்பதாராய்ந்து கொள்க. இன்னும், வேளைக்காரர் தன்மையை விரிவாக அறியவிரும்புவார், செந்தமிழ்ப் பதினொருந் தொகுதி மூன்றாம் பகுதி 134–143-ஆம் பக்கங்களிற் பரக்கக் காண்க. சோழர்களிற் பெரியோனாகிய இன்னவன்பால், இப்படைகளை யல்லாமல், வென்றுகொண்ட நாடுகளில் குழப்ப முண்டாகமற் காத்தற் பொருட்டு 'நிலைப்படை'யும் இருந்திருத்தல் வேண்டு மென்றுய்த்துணரத்தக்கது.

இனி, இவன் காலத்தில் எல்லாப்படைக்கும் தலைமைபூண்பாரை மகாதண்டநாயகன் எனவும், ஒவ்வொரு படைக்கே தலைவராயிருப்பாரைத் தண்டநாயகன் எனவும், சேனாபதி எனவும், சாமந்தன் எனவும் வழங்கினர். இவனது, பெரும்படைத் தலைவர், மகாதண்டநாயகன் பஞ்சவன்மாராயன் என்பவர். சேனாபதியான சி கிருட்டிணன் ராமனான மும்முடி சோழப் பிரமமாராயனும், சேனாபதி குரவன் உலகளந்தான் என்கிற இராசராச மாராயனும் படைத்தலைவராவர். இவர்களையன்றி அப்பிரமேயன் எனப் படைத்தலைவன் ஒருவன் உண்டு. மாராயம் என்பது அரசனாற் செய்யப்படும் சிறப்பு.

உ

முதலாங் குலோத்துங்க சோழன்.

(முற்றொடர்ச்சி 441 பக்கம்.)

திருவாளர், T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

ஆறும் அதிகாரம்.

குலோத்துங்கனது அரசாட்சி.

நம் இராசேந்திரன் சோழமண்டலத்தின் ஆட்சியைக் கி. பி. 1070-ஆம் ஆண்டில் எய்திய பின்னர், ஐந்தாண்டுகள் வரை இவனுக்கு இப்பெயரே வழங்கிவந்தது. அதற்கு முன்னர் இவன் வேங்கிநாட்டை யாண்டுவந்தபோது அந்நாட்டின் ஒழுகலாற்றின் படி, 'விட்டுணுவர்த்தனன்' என்ற பெயரும் அங்கு வழங்கிற் றென்பதை முன்னரே கூறியுள்ளோம். ஆயினும் சோணாட்டா சுரிமையை யடைந்தபிறகு கி. பி. 1075 முதல் குலோத்துங்க சோழன் என்ற பெயரே இவனுக்கு வாணாள் முழுமையும் நிலை பெற்றுவழங்கலாயிற்று. குலோத்துங்கன் என்ற பெயருடைய சோழமன்னருள் இவனே முதலவனாதலின், இவனை முதலாங் குலோத்துங்கன் என்று வழங்குதலே அமைவுடைத்து. இனி, நாமும் இவனைக் குலோத்துங்கன் என்றே எழுதுவோம். இப் பெயரேயன்றி இவனுக்கு வழங்கிய வேறுபெயர்களும் சில உள. அவை, அபயன், விசயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன், இராசநாராயணன் என்பன. இப்பெயர்கள் இவனைக் குறிக்குங் கல்வெட்டுக்களிலும் கலிங்கத்துப்பரணியிலும் தெளி

வாகக் காணலாம். சோழ அரசர்கள் தத்தம் ஆட்சியின் தொடக்கத்தில் ஒருவர்பின் ஒருவராகப் புனைந்துகொண்டுவந்த இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் நம் குலோத்துங்கன் இராசகேசரி என்ற பட்டம் பெற்றவன் ஆவான்.

இவ்வேந்தன்காலத்து நிகழ்ந்த போர்களுள்ளே ஒன்றிரண்டொழிய ஏஞ்சியன வெல்லாம் இவனது ஆட்சியின் பதினான்காம் ஆண்டிற்கு முன்னரே முடிவெய்தின. போர்களெல்லாம் ஒருவாறு முடிவுற்றபின்னர், கி. பி. 1084-ஆம் ஆண்டில் இவன் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டம் புனைந்து கொண்டு பல்வகையானும் பெருமையும் புகழும் எய்தி இனிது வாழ்ந்து வந்தான். இப்பட்டம் புனைந்து ஆட்சிபுரிந்த சோழமன்னருள் இவனே முதலவன் ஆவான். இவனுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த இவனது வழித்தோன்றல்களுள் ஒவ்வொருவரும் இப்பட்டம் புனைந்தே அரசாண்டு வந்தனர். 'திரிபுவனச் சக்கரவர்த்தி' என்ற தொடர்மொழி சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் ஆகிய மூன்றுக்கும் சக்கரவர்த்தி என்ற பொருளையுணர்த்தும் போலும்.

இங்ஙனம் பெருமையுடன் வாழ்ந்துவந்த குலோத்துங்கன் நாட்டிற்கு நலம் புரியக்கருதி முதலில் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் அரசர்க்கு நெடுங்காலமாகச் செலுத்திவந்த தலைவரியாகிய சுங்கத்தை நீக்கினான். ஓர் அரசன் தன் நாட்டிலுள்ள எல்லாமக்கட்கும் இனிமை பயப்பவாய்ப் பொதுவாகச் செய்யக்கூடிய நலங்களுள் இதனினும் சிறந்தது வேறு யாதுளது? இதனால் மக்கள் எல்லோரும் இவனை வாயாரவாழ்த்திச் 'சுங்கந் தவிர்த்த சோழன்' என்று வழங்குவாராயினர். 'எவருந் தவிர்க்காத சுங்கந் தவிர்த்தோன்' என்று புலவர் பெருமக்களும் இவனைப் புகழ்ந்து பாராட்டினர். தஞ்சாவூரைச் சார்ந்த கருந்திட்டைக்குடி இவனது ஆட்சிக்காலத்தில் சுங்கந்தவிர்த்த சோழனல்லூர் என்ற பெயரும் எய்திற்று. பின்னர், சோழமண்டலம் முழுவதையும் அளந்து நிலங்களின் பரப்பை உள்ளவாறு அறிந்தாலன்றி நிலவரியை ஒழுங்குபடுத்தல் இயலாது என்று

கருதி, அதனை முற்றிலும் அளக்குமாறு ஆணையிட்டான். அவ் வேலையும் அவன் பட்டமெய்திய பதினாறும் ஆண்டாகிய கி. பி. 1086-ல் தொடங்கப்பெற்று, இரண்டு ஆண்டுகளில் முடிவுற்றது. பிறகு, இவன், குடிகள் எல்லோரும் ஆறிலொருகடமை நிலவரி செலுத்திவருமாறு ஏற்பாடுசெய்தான். இங்ஙனமே இவனது பாட்டனுக்குத் தந்தையாகிய முதலாம் இராசராசசோழன் காலத்தும் சோழமண்டலம் ஒருமுறை அளக்கப்பெற்றதோடு ஆறி லொருகடமை வரியும் விதிக்கப்பெற்றது. குலோத்துங்கனது ஆளுகையில் வரி விதிக்கப்படாமல் ஒதுக்கப்பெற்ற நிலங்களும் உள. அவை, ஊர்நத்தம், குளம், கம்மாளச்சேரி, பறைச்சேரி, வெள்ளாண் சுடுகாடு, பறைச் சுடுகாடு, ஊர்நிலத்தூடறுத்துப் போன வாய்க்கால், ஸ்ரீகோயில், ஐயன் கோயில், பிடாரிகோயில், கழனிக்குளங்கள், பறைச்சேரிநத்தம், நந்தனவனம், குடியிருக்கை, ஊரிருக்கை, ஓடை, ஈழச்சேரி, வண்ணாரச்சேரி, பெருவழி, திரு முற்றம், ஊருணி, கொட்டகாரம், களம், தேவர் திருமஞ்சனக் குளம், கன்றுமேய்பாழ், சுடுகாட்டுக்குப்போகும் வழி, மனை, மனைப்படப்பை, கடை, கடைத்தெரு, மன்று, கிடங்கு, புற்று, காடு, உவர், ஆறு, ஆறிடுபடுகை, உடைப்பு, மீன்பயில் பள்ளம், தேன்பயில் பொதும்பு என்பனவாம். வரிவிதிக்கப்பெறாதமேலே குறித்துள்ள இடங்களை ஆராயுங்கால், அந்நாளில் விளை நிலங் களுக்கு மாத்திரம் நிலவரிவாங்கப் பெற்றுவந்ததேயன்றி மற்றை நிலங்களுக்கு வரி வாங்கப்படவில்லை என்பது நன்கு அறியக் கிடக்கின்றது.

நம் குலோத்துங்கன் தன் நாட்டிலுள்ள குடிகளது உழவுத் தொழில் வளர்ச்சியுறுமாறு ஆங்காங்குப் பல ஏரிகளையும் குளங் களையும் வெட்டுவித்தான்; காடுகளை யழிப்பித்து அவர்கள் வாழ்தற்கேற்ற பல ஊர்களும் நகரங்களும் அமைத்தான்; மக்க ளது தெய்வபத்தி ஓங்குமாறு ஊர்கள்தோறும் சிவபெருமானுக் கும் திருமாலுக்கும் பலபுதிய கோயில்கள் எடுப்பித்ததோடு அவற் றின் பூசை, திருவிழா முதலியவற்றிற்கு நிபந்தங்களும் விட்டான்; அன்றியும் நகரங்களிலுள்ள பழைய செங்கற்கோயில்களை இடித்து

அவற்றைக் கற்றளிகளாக எடுப்பித்தான். இங்ஙனம் இவனது ஆட்சிக்காலத்தில் மக்கட்குண்டான நன்மைகள் பலவாம். விரிப்பிற் பெருகும்.

இக்குலோத்துங்கனது ஆட்சியின் 50-ஆம் ஆண்டில் வரையப்பெற்ற கல்வெட்டுக்கள், திருச்சிராப்பள்ளி சில்லா உடையார் பாளையந் தாலூகாவிலுள்ள காமரசவல்லியிலும், தஞ்சாவூர் சில்லா மன்னார்குடித் தாலூகாவிலுள்ள கோட்டூரிலும் காணப்படுகின்றன. ஆதலால் இவன் சோழமண்டலத்தை ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆண்டிருத்தல் வேண்டும். இவன் தன் பாட்டனாகிய கங்கை கொண்ட சோழனாலும், மாமன்மார்களாகிய இராசாதிராசன், விசயராசேந்திரன், வீரராசேந்திரன் முதலானோராலும் அரும்பாடுபட்டு உயரிய நிலைக்குக் கொண்டுவரப்பட்ட சோழமண்டலத்தை, அதன் பெருமையுஞ் சிறப்பும் ஒருசிறிதுங் குறையாதவாறு, யாண்டும் அமைதி நிலைபெறச் செங்கோல் செலுத்திய பெருந்தகை ஆவன். இவனுக்கு முன்னர் அரசாண்ட சோழன் கரிகாற் பெருவளத்தான், முதலாம் இராசராசசோழன், கங்கை கொண்ட சோழன் முதலான பேரரசர்களை இவனுக்கு ஒப்பாகக் கூறலாமேயன்றி ஏனையோரைக் கூறுதல் சிறிதும் பொருந்தாது. இவன் காலத்திற்குப் பின்னர் இவனுக்கு ஒப்பாகக் கூறத்தக்க சோழமன்னன் ஒருவனும் இலன் என்றே கூறிவிடலாம். எனவே, நம் தமிழகம் தன்னைப் புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களமாக்கிக் கோடற்குச் சிற்சில காலங்களில் அரிதிற்பெறும் பெருந்தவப்புதல்வர்களுள் ஒருவனாகவே இவனைக்கருதல் வேண்டும். இவனது ஆட்சிக்காலத்தில் சோழநாடு வடக்கேயுள்ள மகாநதிமுதல் தெற்கேயுள்ள குமரிமுனைவரையிற் பரவியிருந்தது. அந்நாளில் சோழநாட்டிற்கு வடவெல்லையாகவும் மேலைச்சளுக்கிய நாட்டிற்குத் தென்னெல்லையாகவும் அமைந்திருந்தது இடையிலுள்ள துங்கபத்திரையாறே ஆகும். இப்பெருநில வரைப்பில் நம் குலோத்துங்கன் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து ஐம்பது யாண்டுகள் அமைதியாக ஆட்சிபுரிந்தது மக்களாகப்பிறந்தோர் பெறுதற்குரியனவும் அரியனவுமாகிய பெரும்பேறுகளுள் ஒன்றேயாதும் என்று கூறுதலில் தடையாதுளது ?

ஏழாம் அதிகாரம்.

குலோத்துங்கனது போர்ச்செயல்கள்.

நம் குலோத்துங்கன் நடத்திய போர்களுள் ஒன்றிரண்டொழிய எனையவெல்லாம் இவனது ஆட்சியின் முற்பகுதியிலேயே நிகழ்ந்துள்ளன என்று முன்னரே கூறியுள்ளோம். அப்போர் நிகழ்ச்சிகளைத் தற்காலத்தே வெளிவந்துள்ள கல்வெட்டுக்களைக்கொண்டு ஒருவாறு ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம். அவை:—

1. மேலைச்சளுக்கியருடன் நடத்திய முதற்போர்.
2. பாண்டியருடன் நடத்திய முதற்போர்.
3. மேலைச்சளுக்கியருடன் நடத்திய இரண்டாம் போர்.
4. பாண்டியருடன் நடத்திய இரண்டாம் போர்.
5. சேரருடன் நடத்திய போர்.
6. தென்கலிங்கப் போர்.
7. வடகலிங்கப் போர்.

என்பன. இப்போர் நிகழ்ச்சிகளின் காரணத்தையும் இவற்றின் முடிவையும் கல்வெட்டுக்களும் முன்னூல்களும் உணர்த்தும் குறிப்புக்களைக்கொண்டு சிறிது விளக்குவாம்.

1. மேலைச்சளுக்கியருடன் நடத்திய முதற்போர்:—இது குலோத்துங்கன் மேலைச்சளுக்கிய மன்னனாகிய ஆறாம் விக்கிரமாதித்தனோடு கி. பி. 1076 ஆம் ஆண்டில் நடத்திய போர் ஆகும். தன் மைத்துனனாகிய அதிராசேந்திரசோழன் உண்ணாட்டுக் கலகத்திற் கொல்லப்பட்ட பின்னர், சோழவள நாட்டில் குலோத்துங்க சோழன் முடி சூடியதை யுணர்ந்த சளுக்கிய விக்கிரமாதித்தன் வேங்கி நாடும் சோணாடும் ஒருங்கே ஓர் அரசனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் தன் ஆளுகைக்குப் பெரியதோர் இடுக்கண் விளைத்தற்கு ஏதுவாகும் என்று கருதிக் குலோத்துங்கனது படைவலிமையையும் வீரத்தையும் குலைத்தற்குப் பெரிதும் முயன்றான்.

அவன், அம்முயற்சியில் வெற்றியுறும் வண்ணம் மூன்று ஆண்டுகளாகப் படை சேர்த்தும் வந்தான். இந்நிலைமையில் விக்கிரமாதித்தனுக்கும் அவனது தமையனாகிய இரண்டாம் சோமேச்சுரனுக்கும் ஒற்றுமைகுலைந்து மனவேறுபாடு உண்டாயிற்று. உண்டாகவே, விக்கிரமாதித்தன் தன் தம்பியாகிய சயசிங்கனை அழைத்துக்கொண்டு மேலைச்சளுக்கியரது தலைநகராகிய கல்யாணபுரத்தைவிட்டுச் சென்றான். பிறகு, மேலைச்சளுக்கியரது இரட்டமண்டலம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சோமேச்சுரனும் விக்கிரமாதித்தனும் தனித்தனியாக ஆளப்படும் நிலையை அடைந்தது. இதனை யுணர்ந்த குலோத்துங்கன் தமையனாகிய சோமேச்சுரனைத் தன்பாற் சேர்த்துக்கொண்டான். பின்னர், விக்கிரமாதித்தன் தான் சேர்த்து வைத்திருந்த படைகளைத் திரட்டிக்கொண்டு குலோத்துங்கனோடு போர் புரியப் புறப்பட்டான். திரிபுவனமல்ல பாண்டியன், கதம்பகுலத்துச் சயகேசி முதலானோர் விக்கிரமாதித்தனுக்குப் பேருதவிபுரிந்தனர். அவனது தம்பி சயசிங்கனும் அவன் பக்கல் நின்று வேண்டியாங்கு உதவினான். சோமேச்சுரன் குலோத்துங்கன் பக்கத்திருந்து போர் புரிந்து உதவுவதாக உறுதியளித்திருந்தான். இறுதியில் குலோத்துங்கனது படையும் விக்கிரமாதித்தனது படையும் துங்கபத்திரையாற்றங்கரையில் எதிர்த்துப் போர் செய்தன. விக்கிரமாதித்தன் தன் தமையனாகிய சோமேச்சுரன் குலோத்துங்கனோடு சேர்ந்து தன்னுடன் போர் செய்ய இயலாதவாறு ஓர் சூழ்ச்சிசெய்து இடை நின்று தடுத்தான். இப்போரிற் குலோத்துங்கன் வெற்றியாதல் தோல்வியாதல் எய்தினான் என்று கூறுதற்கிடமில்லை. ஆயினும் நம் குலோத்துங்கனுக்கு உதவி புரிதற்குத் துணைப்படை கொணர்ந்த சோமேச்சுரன் தோல்வியுற்றுத் தன் தம்பியாகிய விக்கிரமாதித்தனாற் சிறைபிடிக்கப்பட்டு நாட்டையும் இழந்தான். குலோத்துங்கனைச் சோழநாட்டினின்று துரத்துவதற்கு விக்கிரமாதித்தன் மூன்று ஆண்டுகளாகச் சேர்த்து வந்த பெரும் படையானது அவன் தன் தமையனைத் துங்கபத்திரைப் போரில் இங்ஙனம் தோல்வியுறச் செய்து இரட்டமண்டலத்துள் தன் தமையன்பாலிருந்த நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்குப்

பெரிதும் பயன்பட்டது. விக்கிரமாதித்தனும் மேலைச்சளுக்கிய நாடாகிய இரட்டப்பாடி ஏழரைலக்கம் முழுமைக்கும் முடிமன்னன் ஆயினன். முதலாம் மேலைச்சளுக்கியப் போர் இவ்வாறு முடிவெய்தியது. இதனை முதலாம் துங்கபத்திரைப் போர் என்றும் கூறலாம்.

2. பாண்டியருடன் நடத்திய முதற்போர்:—இது நம் குலோத்துங்கனது ஆட்சியின் ஐந்தாம் ஆண்டில் நிகழ்ந்த மற்றொரு போராகும். இப்போரைப்பற்றிய செய்திகள் இப்போது நன்கு புலப்படவில்லை. குலோத்துங்கனது மெய்க்கீர்த்தியும் இதனை விளக்கிற்றில்லை. ஆயினும், இது, விக்கிரமாதித்தனுக்குத் துணையாக நின்று போர்புரிந்த திரிபுவனமல்ல பாண்டியனுடன் குலோத்துங்கன் நடத்திய போராய் இருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கப்படுகிறது. இப்போர் நிகழ்ச்சியில் நம் குலோத்துங்கன் வெற்றிபெற்றான். இவனது பகைவனாகிய பாண்டியன் கொல்லப்பட்டான். இது குலோத்துங்கன் பாண்டியரோடு நடத்திய முதற் போராதலின், இதனை முதலாம் பாண்டியப்போர் என்று கூறுதல் பொருத்தமுடையது.

3. மேலைச்சளுக்கியருடன் நடத்திய இரண்டாம் போர்:—இது, குலோத்துங்கனது ஆட்சியின் 11-ஆம் ஆண்டாகிய கி. பி. 1081ல் நிகழ்ந்தது; விக்கிரமாதித்தன் அவன் தம்பி சயசிங்கன் ஆகிய இருவரோடும் நம் குலோத்துங்கன் நடத்தியதாகும். இச்சண்டைக்குரிய காரணம் தற்காலத்தில் நன்கு புலப்படவில்லை. குலோத்துங்கன் பெரும் படையைத்திரட்டிக்கொண்டு, வடக்கு நோக்கிச் சென்று விக்கிரமாதித்தனது தம்பியாகிய சயசிங்கன் என்பான் அரசப்பிரதிநிதியாகவிருந்து ஆண்டுகொண்டிருந்த வனவாசியைக் கைப்பற்றிக்கொண்டு, தன்னை வந்தெதிர்த்த விக்கிரமாதித்தனோடு கோலார் ஜில்லாவிலுள்ள நங்கிலி என்னுமிடத்தில் பெரும் போர் புரிந்தனன். இப்போரில், குலோத்துங்கன் வெற்றி எய்தியதோடு விக்கிரமாதித்தனைத் துங்கபத்திரை யாற்றிற்கப்பால் துரத்தியுஞ் சென்றான். அங்ஙனந் துரத்திச் சென்றவன் இடையிலுள்ள மணலூர், அளத்தி முதலான இடங்களில்

மீண்டும் அவனைப் போரிற் புறங்கண்டான். அளத்தியில் நிகழ்ந்த போரில், இவன் மேலைச்சளுக்கியர்களுடைய களிறுகளைக்கவர்ந்து கொண்டான். அன்றியும் இவன் மைசூர் நாட்டிலுள்ள நவிலையில் சளுக்கிய தண்டநாயகர்களால் காக்கப்பெற்ற ஆயிரம் யானைகளையும் கைப்பற்றிக் கொண்டனன் என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. (பரணி 373) இறுதியில் துங்கபத்திரைக் கரையில் இரண்டாம் முறை நடைபெற்ற போரில் விக்கிரமாதித்தனும் சயசிங்கனும் தோல்வியுற்று ஓடி ஒளிந்தனர். கங்கமண்டலமும் கொண்கானமும் நம் குலோத்துங்கன் வசமாயின. இங்ஙனம் போரில் வாகைசூடிய குலோத்துங்கன் எண்ணிறந்த யானைகளையும் பொருட்குவியலையும் பெண்டிர்களையும் கவர்ந்து கொண்டு சோணாட்டை யடைந்தான்; அவற்றுள், யானைகளையும் பொருட்குவியலையும் தான் போரில் வெற்றிபெறுதற்குக் காரணமாயிருந்த போர்வீரர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் பகுத்துக் கொடுத்து அவர்களுக்கு மகிழ்ச்சியை யுண்டு பண்ணினன்; சிறைபிடிக்கப் பட்ட மகளிரைத் தன் அரண்மனையிலுள்ள தேவிமார்களுக்கு வேலை செய்து வருமாறு வேளம்புகுவித்தான். நம் குலோத்துங்கன் மேலைச்சளுக்கியரோடு நடத்திய இரண்டாம் போரும் இவ்வாறு வெற்றியுடன் முடிவுற்றது.

4. பாண்டியருடன் நடத்திய இரண்டாம் போர்:--குலோத்துங்கன் நடத்தியதாக அறியப்படும் இரண்டாம் பாண்டியப் போரும் இவனது ஆட்சியின் பதினன்காம் ஆண்டாகிய கி. பி. 1084-ன் தொடக்கத்தில் நடைபெற்றது. வடக்கேயுள்ள துளம்பப் பாடிப் பாண்டியனோடு கி. பி. 1076-ல் இவ்வேந்தன் ஒரு போர் புரிந்துள்ளமையின், தெற்கேயுள்ள செந்தமிழ்ப்பாண்டி நாட்டின் அரசர்களுடன் கி. பி. 1084-ல் இவன் நிகழ்த்திய இப்போர் இரண்டாம் பாண்டியப் போர் எனப்பட்டது.

முதலாம் பராந்தக சோழன், முதலாம் இராசராச சோழன் ஆகிய இருவேந்தர்களது காலங்களில், பாண்டியர் தம் நிலைகுலைந்து சோழர்களுக்குத் திறை செலுத்தும் சிற்றரசர் ஆயினர். ஆனால், அவர்கள் சிறிது படை வலிமை எய்தியவுடன் அடிக்கடி சோழர்

களுடன் முரண்பட்டுத் தாம் முடிமன்னராதற்கு முயன்று வந்தனர். அவர்கள், அங்ஙனம் முரண்பட நேர்ந்தமையின் சோழமன்னர்களுள் ஒவ்வொருவரும் தம் தம் ஆட்சிக்காலங்களில் பாண்டி நாட்டின்மீது படையெடுத்துச்செல்லல் இன்றியமையாத தாயிற்று. இதனுல் நேரும் துன்பங்களையுணர்ந்த கங்கைகொண்ட சோழன் எனப்படும் முதலாம் இராசேந்திரசோழன் பாண்டியரை அரியணையினின்று இறக்கித் தன் மக்களுள் ஒருவனுக்குச் சோழ பாண்டியன் என்னும் பட்டம் அளித்துப் பாண்டிநாட்டின் தலை நகராகிய மதுரையில் அரசப்பிரதிநிதியாயிருந்து அந்நாட்டை யாண்டு வருமாறு ஏற்பாடு செய்தான். அங்ஙனமே அவனது மக்களுள் இருவரும் பேரன் ஒருவனும் சோழபாண்டியன் என்னும் பட்டத்துடன் அம்மதுரைமாநகரிலிருந்து ஆட்சிபுரிந் தனர். வீரராசேந்திரன் காலத்திற்குப்பின்னர் அதிராசேந்திரன் சளுக்கிய விக்கிரமாதித்தனது உதவியால் முடிசூட்டப்பெற்றுச் சோழவளநாட்டை ஆண்டுவந்தபோது பாண்டியர் தாம் முடி மன்னராதற்கு அதுவே தக்ககாலமெனக்கருதித் தம் நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு ஐந்து அரசர்களாகவிருந்து அவற்றை ஆளத்தொடங்கினர். அவர்களது ஆளுகையும் கி. பி. 1084 வரை நடைபெற்றுவந்தது. குலோத்துங்கன் வடக்கே நடத்திய போர்கள் எல்லாம் ஒருவாறு முடிவெய்தியபின்னர், தெற்கேயுள்ள பாண்டிநாட்டையும் தன்னடிப்படுத்த எண்ணி, இப்பாண்டியர் ஐவர்மீதும் தும்பைசூடிப் போர்க்கெழுந்தனன். இதனையுணர்ந்த பாண்டியர் ஐவரும் ஒருங்குசேர்ந்து பெரும் படையோடு வந்து இவனை எதிர்த்துப் போர்புரிந்தனர். இப் போரில் பெருவீரனுகிய நம் குலோத்துங்கனே வெற்றியடைந் தான். பாண்டியர் ஐவரும் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர். குலோத் துங்கன் பாண்டிநாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றியதோடு அவ்விடங்களிலெல்லாம் வெற்றித்தூண்களும் நிறுவினுன். இப் போரில் குலோத்துங்கன் கைப்பற்றிய நாடுகளுள் முத்துச் சலாபத்திற்குரிய மன்னார் குடாக்கடலைச் சார்ந்தநாடும் பொதியிற் கூற்றமும் கன்னியாகுமரிப் பகுதியும் சிறந்தவைகளாகும்.

5. சேரருடன் நடத்திய போர் :—இது நம் குலோத்துங்கன் குடமலை நாட்டில் சேரரோடு நடத்திய போராகும். இதுவும் குலோத்துங்கனது ஆட்சியின் 14-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இப்போரும் சேரரைத் தனக்குத்திறை செலுத்தும் சிற்றரசர்களாகச் செய்யும் வண்ணம் குலோத்துங்கனால் தொடங்கப் பெற்றது. திருவனந்தபுரத்திற்குத் தெற்கே பத்துமைல் தூரத்தில் மேலைக்கடற்கோடியிலுள்ள விழிஞத்திலும், திருவனந்தபுரத்தைச் சார்ந்த காந்தளூர்ச் சாலையிலும், குமரிமுனைக்கு வடக்கிற் பத்துமைலிலுள்ள கோட்டாறு என்ற ஊரிலும் சேரநாட்டு வேந்தனுக்கும் நம் குலோத்துங்கனுக்கும் பெரும் போர்கள்நடந்தன; சிறிதும் அஞ்சாது எதிர்த்துப் போர்புரிந்த மலைநாட்டாருள் பலர் போர்க்களத்தில் உயிர் துறந்தனர். குலோத்துங்கன் காந்தளூர்ச் சாலையிலுள்ள சேரமன்னனது கப்பற்படையினை இருமுறை யழித்துப் பெருமை எய்தினான். கோட்டாறும் எரிகொளுத்தப்பெற்று அழிக்கப்பட்டது. சேரமன்னனும் குலோத்துங்கனுக்குத்திறை செலுத்தும் சிற்றரசர்களுள் ஒருவனாயினான். சேரரும் பாண்டியரும் தம் நிலைமை சிறிது உயர்ந்தவுடன் தன்னுடன் முரண்பட்டுத் தீங்கிழைக்காதவாறு கோட்டாறு முதலான இடங்களில் சிறந்த தலைவர்களின்கீழ் நிலைப்படைகள் குலோத்துங்கனால் அமைக்கப் பெற்றன ; அவ்வாறு கோட்டாற்றில் நிறுவப்பட்ட படைக்குக் 'கோட்டாற்று நிலைப்படை' என்று பெயர் வழங்கிற்று.

6. தென்கலிங்கப்போர் :—இது குலோத்துங்கனது ஆட்சியின் 26-ஆம் ஆண்டாகிய கி. பி. 1096ல் நிகழ்ந்தது. இப்போர் வேங்கிநாட்டில் அரசப் பிரதிநிதியாயிருந்த அரசிளங்குமரன் விக்கிரமசோழன் என்பான் தன் இளமைப்பருவத்தில் தென் கலிங்கநாட்டின் மன்னனாகிய தெலுங்கவீமன்மேற் படை யெடுத்துச்சென்று அவனை வென்றதையே குறிக்கின்றது. இதனை விக்கிரமசோழனது மெய்க்கீர்த்தி,

'தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்

ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத்தருளி"

என்று தெளிவாக விளக்குதல் காண்க.

இப்போர் குலோத்துங்கனது மகனாகிய விக்கிரமனால் நிகழ்த்தப்பெற்றதாயினும் குலோத்துங்கனது ஆட்சிக்காலத்திலே நடைபெற்றதாதலின் மகனது வென்றிச்சிறப்புத் தந்தைக் கேற்றியுரைக்கப்பட்டதென்றுணர்க.

7. வடகலிங்கப்போர்:—இது குலோத்துங்கனது ஆட்சியின் 45-ஆம் ஆண்டாகிய கி. பி. 1115-ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்ற போராகும்; வடகலிங்க வேந்தனாகிய அனந்தவருமன் என்பானோடு குலோத்துங்கன் நடாத்தியது. வடகலிங்கத்திற்கு நேரிற்சென்று இப்போரை வெற்றியுற நடாத்தித் திரும்பியவன் குலோத்துங்கனது படைத்தலைவர்களுள் முதலவனாகிய கருணாகரத் தொண்டைமானே யாவன். இவனோடு பல்லவரையன், வாணகோவரையன், முடிகொண்டசோழன் என்ற மூன்று படைத்தலைவர்களும் அங்குச் சென்றிருந்தனர். குலோத்துங்கனது ஆட்சியில் நடந்த போர்களுள் இதுவே இறுதியில் நடந்தது. வடகலிங்கத்தில் நடந்த இப்போர் நிகழ்ச்சியை விரித்துக் கூறும் நூல் கலிங்கத்துப்பரணி என்பது. அந்நூல் இப்போரைப் பற்றியுணர்த்தும் செய்திகளை அடியிற் காண்க.

ஒருநாள் நம் குலோத்துங்கன் காஞ்சிமா நகரிலுள்ள அரண்மனையில் ஓவியமண்டபத்து வீற்றிருந்தபோது, வாயிற்காப்போரில் ஒருவன் ஓடிவந்து அரசனது அடிகளை முடிபடவணங்கி, 'எம்பெருமானே, வேந்தர் பல்லோர் திறைப்பொருள் கொணர்ந்து கடைவாயிலின்கண் காத்துக்கொண்டிருக்கின்றனர்' என்றனன். அதனைக்கேட்ட அரசன் 'அன்னாரை விடுக' என,

தென்னவர் வில்லவர் கூபகர் சாபகர் சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர் கைதவர் காடவர் காரிபர் கோசலரே.

கங்கர்க ராளர்க லிங்கர்து லிங்கர்க டம்பர்து ளும்பர்களே
வங்கரி லாடர் மராடர் விராடர் மயிந்தர் சயிந்தர்களே
சிங்களர் வங்களர் சேகுணர் சேவணர் செய்ய வரையணரே
கொங்கணர் கொங்கர் குளுங்கர்சௌந்தியர் குச்சரர் கச்சியரே
மத்தவர் மத்திரர் மாளுவர் மாகதர்மச்சர்மி லேச்சர்களே
குத்தர் குணத்தர் வடக்கர் துருக்கர் குருக்கர் வியத்தர்களே

என்ற மன்னர்கள் அம்மன்னனை யணுகிப் பணிந்தெழுந்து 'மன்னர் மன்ன! அடியேம் நினக்கு இறுக்கக்கடவதாய திறைப் பொருள் கொணர்ந்துளேம்' என்றுரைத்துத் தாம் கொண்டு வந்துள்ள பொற்கலம் மணித்திரள் முதலான பொருள்கள் அனைத்தையும் அரசன் திருமுன்னர்க் காட்டிக் கைகுவித்து ஒருபுடை நின்றனர்.

அப்போது அரசன், 'இவர்களொழியத் திறைகொடாதார் இன்னும் உளரோ? என்று வினவினன். அச்சமயத்துக் கடகர் முன்றோன்றி, 'பெருமானே, எங்கள் திறையும் கொண்டுவந்து விட்டோம்.' என்றுரைத்து அவன் கழல் வணங்கினர். அப்போது, 'வடகலிங்கத்தரசன் இருமுறை திறை கொணர்கிலன்' என்று அமைச்சன்கூற, அதனைக்கேட்ட அரசன் பெரிதும் வெகுண்டு 'அங்ஙனமாயின் அவனது வலியருன்றாணம் இடிய வென்று அவனையும் அவனதுகளிற்றினங்களையும் பற்றி யீண்டுக் கொணர்மின்' என்றனன். அரசன் அங்ஙனம் கூறலும், ஆண்டு அருகிருந்த பல்லவர் கோனாகிய கருணாகரத் தொண்டைமான் 'அடியேன் கலிங்கமெறிந்து வருவல்; அடியேற்கு விடை கொடுக்க' வென, அரசனும் 'அங்ஙனமே செய்க' வென்றனன்.

குலோத்துங்கனிடத்து விடைபெற்ற கருணாகரன் நால் வகைத் தானையோடும் வஞ்சிசூடிப் போர்க்கெழுந்தனன்; எங்கும் முரசங்கள் முழங்கின; வளைகள் கலித்தன; நாற்படையும் சூழ்ந்து நெருங்கி வெள்ளத்தைப்போல் திரண்டெழுந்தன. அவற்றைக்கண்டோர் பலரும் வியப்பெய்தி, 'இவை கடலைக்கலக்குங் கொலோ? மலையை இடிக்குங்கொலோ? ஒன்றும் அறிகிலம்; இவற்றின் எண்ணம் யாதோ?' என்றையுற்று நடுக்க முற்றனர்.

நாற்றிசைகளும் அதிர்ந்தன. தூளிப்படலம் பிறந்தது. பல்லவர் கோனாகிய கருணாகரன் வளவர் பெருமானது களிற்றின் மீது இவர்ந்து இரைவேட்ட பெரும்புலிபோற் பகைமேற்சென்றனன். பாலாறு, பொன்முகரி, பழவாறு, கொல்லியெனும் நாலாறுந் தாண்டிப் பெண்ணையாற்றையும் கடந்து தொண்டைமான் படைகள் சென்றன. அதன் பின்னர், வயலாறு, மண்ணாறு, குன்றியென்னும் ஆறுகளையுங் கடந்து கிருட்டிணை நதியும் பிற்படுமாறு போயின; பிறகு, கோதாவரி, பம்பா நதி, கோதமை நதி யென்னும் இவற்றையுங் கடந்து கலிங்கநாட்டை யடைந்து, சில நகரங்களில் எரி கொளுவிச் சில ஊர்களைச் சூறையாடின.

இத்திறம் நிகழ்வனவற்றைக் கண்ட குடிகளெல்லோரும், 'ஐயோ, மதில்கள் இடிகின்றனவே; வீடுகள் எரிகின்றனவே; புகைப்படலங்கள் சுருண்டு சுருண்டு எழுகின்றனவே; அரண் எங்குளது? நமக்குப் புகலிடம் யாண்டுளது? இங்குத் தலைவர் யாவர்? படைகள் வருகின்றன; அந்தோ! நாம் கெடுகின்றனம்! மடிகின்றனம்!!', என்று ஓலமிட்டுக்கொண்டு நாற்புறமும் ஓடி அலைந்தனர். அவ்வாறு ஏங்கித் துணுக்குற்ற குடிகளெல்லாம், 'ஐயோ! நம் மன்னன், குலோத்துங்க சோழற்கு இறுக்கக்கடவதாகிய திறை கொடாது உரைதப்பினான்; ஆகலின் எதிரே தோன்றியுள்ளது அம்மன்னனதுபடையே போலும்; அந்தோ! இனி என்செய்வது!' என்றலறிக்கொண்டு உரைகுழறவும் உடல் பதறவும் ஒருவர்க் கொருவர்முன்னாக அரையிற் கட்டியதுகில் அவிழ ஓடித் தம்மரசனது அடிமிசை வீழ்ந்தனர். அங்ஙனங் குடிகள் தன்னடியில் வீழ்ந்து அலறி ஓலமிடுதலைக்கண்ட கலிங்கர் கோமானாகிய அனந்தபன்மன் வெகுளியினால் வெய்துயிர்த்து, கைபுடைத்து வியர்த்து, அன்னாரை நோக்கி 'யான் அபயனுக்கேயன்றி அவன் தண்டினுக்கு மெளியனோ? என்றுரைத்துத்தடம் புயங்குலுங்குற நகைத்தனன். பின்னர், 'நமது நாடு கானரண், மலையரண், கடலரண்—இவற்றாற் சூழப்பெற்றுக் கிடத்தலை அறியாது, அவன் படை வருகின்றதுபோலும்; நல்லது, சென்று காண்பேம்' என்று கூறினன். அம்மன்னன் கூறியவற்றைக்

கேட்ட எங்கராயன் எனும் அமைச்சர்தலைவன், அரசர் சிறுவரே னும் அமைச்சனுகிய தான் உறுதியை யுரையாதொழியின், அது தன் கடமையினின்றும் தவறியதாகுமென்பதை நன்குணர்ந் தவனுய், அரசனை நோக்கி, 'மன்னர் பெருமானே, அடியேன் கூறுவனவற்றை யிகழாது சிறிது செவிசாய்த்துக் கேட்டருளல் வேண்டும். வேற்றரசர்களைப் புறங்கண்டு வெற்றிகோடற்குச் சயதரன் படை போதாதோ! அவனே நேரில் வருதல் வேண்டுமோ? அவனுடைய படையினுற் பஞ்சவரைவருங் கெட்ட கேட்டினை நீ கேட்டிலைபோலும்; முன்னொருநாள் அவனது படையுடன் பொருவானெழுந்த சேரர் செய்தி நின் செவிப்பட்டதில்லையோ? அவன் விழிஞமழித்ததும், காந்தளூர்ச் சாலை கொண்டதும் தன் படையினைக் கொண்டன்றே? தண்ட நாயகரால் காக்கப்பெற்ற நவிலையின்கண் ஆயிரம் யானைகளை அவன் கைப்பற்றிக் கொண்டதை நீ யறியாயோ? அபயன் படையினுல் ஆரஞருற்றுத் தம்மண்டலங்களை யிழந்தவேந்தர் இத் துணையரென் றுரைத்தல் சாலுமோ? ஆதலால் அத்தண்டின் முன்னர் நின் புயவலி எத்தன்மைத்தாகு மென்பதை எண்ணித் துணிவாயாக. இன்று என்னைச்சீறினும், நாளை அச்சேனை முன் நின்று போழ்தினில் யான் கூறியதுண்மை யென்பதை நன்குணர் வாய்' என்று நன்மதி நவின்றனன். அமைச்சர் தலைவன் கூறியவற்றைக்கேட்ட கலிங்கமன்னன் அவனைநோக்கி, 'யாம் கூறியவற்றை மறுத்துரைப்பதெனின் இமையோரும் எம்முன் னர் போதாற்குப் பெரிதும் அஞ்சுவர். பன்னுட்களாகச் செருத் தொழில் பெறுது எம்தோட்கள் தினவுற்றிருத்தலை நீ அறியாய் போலும். முழைக்கண் ணுளதாய அரியேற்றின் முன்னர் யானை யொன்று எளிதென்றெண்ணிப் பொருதற்குக் கிட்டிவருதல் உண்மையாயினன்றே அபயனதுபடை எம்முடன் பொருதற் கெழும். எமது தோள்வலியும், வாள்வலியும் பிறவலியும் இத் தன்மையனவென் றுணராது பிறரைப்போல் ஈண்டுக் கூறுதல் ஆற்றுய். இது நின் பேதமையன்றே? நன்று! நமது நாற் படையுமெழுந்து அபயன் ஆணையாற் போதரும் படையுடன் போர் தொடங்குக' என் றுரைத்தனன். அப்போழ்தே,

'பண்ணுக வயக்களிறு பண்ணுக வயப்புரவி
பண்ணுக கணிப்பில் பலதேர்
நண்ணுக படைச்செருநர் நண்ணுக செருக்களம்
நமக்கிகல் கிடைத்த தெனவே'

என்று எழுகலிங்கத்தினும் முரசறையப்பட்டது.

உடனே, கலிங்கர் கோமானது படைகள் போர்க்குப் புறப்பட்டன; எழுகலிங்கத்தினும் பேரொலி எழுந்தது; அடவிகள் பொடிபட்டன; வரைகள் தூகள்பட்டன; கடலொலிபோல் முரசங்கள் மொகுமொகென்றொலித்தன; இடைவெளியிதென ஒருவருடலினில் ஒருவர் தம் உடல்புக நெருங்கிச்சென்று, கலிங்கப்படைகள் கருணாகரன் படைகளின் முன்னுற்றன.

பின்னர் இருதிறத்தார்க்கும் போர் தொடங்கலாயிற்று; 'படை எடும் எடும்' என்ற ஓசையும், 'விடும் விடும்' என்ற ஓசையும் கடலொலிபோன்றிருந்தன; சிலை நாண்தெறிக்கும் ஓசை திசைமுகம் வெடிப்பதொக்கும். இருதிறப்படைகளும் எதிர் நிற்றல், இருபெருங்கடல்கள் எதிர் நின்றாற்போன்றிருந்தது. பரியொடு பரி மலைவது கடற்றிரைகள் தம்முள் இகலி மலைந்தாற்போன் றிருந்தது. யானையொடு யானைபொருவது வரையொடுவரை பொருதாற் போன்றிருந்தது; முகிலொடு முகில் எதிர்த்ததுபோல் இரதமும் இரதமும் எதிர்த்தன. புலியொடு புலியெதிர்த்தாற்போல் வீரரொடு வீரரும், அரியொடு அரியெதிர்த்தாற்போல் அரசரொடு அரசரும் எதிர்த்துப் பொருவாராயினர்; வீரர்களின் விழிகளிலே சினக்கனல் தோன்றிற்று. அக்கனல் மின்னொளி வீசின; அன்னார் கையிற் கொண்ட சிலைகள் உருமென இடித்தன; சிலைகள் கணைமழை பொழிந்தன; அதனாற் குருதியாறு பெருகலாயிற்று. அவ்யாற்றில் அரசர்களது நித்திலக் குடைகள் நுரையென மிதக்கலுற்றன; போரில்துணிபட்ட களிற்றினங்களின் உடல்கள் அவ்யாற்றின் இருகரையென இருமருங்குங்கிடந்தன.

குருதிவெள்ளத்திற் பிளிற்றிவீழுங் களிற்றினங்கள் வேலை நீருண்ணப்படிந்த மேகங்கள் போன்றிருந்தன; அவ்யானை

களின் கரங்களை வாளாற் றுணித்துத் தம்புயத்திட்ட வீரர்கள் தோற்பைகளைத் தோளின்கண்ணே கொண்டு நீர்விடுந் துருத்தி யாளரைப் போன்றிருந்தனர்; அம்புகள் தைக்கப்பெற்றுச் சுருண்டுவிழும் யானைகளின் கைகள் வளையங்கள் போன்றிருந் தன; இருதுடையும் துணிபட்டுக்கிடந்த மறவர் தம்முன்னர்ப் பொருவானெழுந்த வாரணத்தின் வலிகெட ஒரு தொடையைச் சுழற்றி அதன் மீதெறிவர்; மற்றொன்றை பினியெறியுமாறு எடுத்து வைப்பர்; சிலவீரர் தம் உரத்தின்மீது பாய்வான் எழுந்த இவுளியை ஈட்டியாற்குத்தி எடுத்துத் திரிவது வெற்றிமங்கைக்கு எடுக்கப்பெறும் வெற்றிக்கொடிபோன்றிருந்தது. அன்னார் யானை களின் மத்தகங்களைப் பிளக்குங்கால் வீழும் முத்துக்கள் அவ் வெற்றிமங்கைக்குச் சொரியப்பெறும் மங்கலப்பொரிகளை யொப் பனவாகும்; மாற்றார், சிலையில் அம்பைத்தொடுக்குமளவில் தம் மிடத்து அம்பில்லாத வீரர்கள் தங்கள் மார்பினிற் குளித்த பகழி யைப் பற்றியிழுத்துச் சிலையிற்றொடுத்து விடுவர். குறைபுடலங் கூத்தாட, அவற்றின் பின்னர்க் களிப்போடாடும் பேயினங்கள் ஆடல் ஆட்டுவிக்கும் ஆடலாசிரியன்மாரை யொக்கும். சடசட வெனும் பேரொலியாற் செருக்களம், தீவாய்மடுக்கும் கழைவனம் போன்றிருந்தது.

இவ்வாறு போர்நிகழுங்கால் களப்போரினை விரைவில் முடித்து வாகைசூடுமாறு வண்டையரசனும் கருணாகரத்தொண்டைமான் தன்வேழமூந்துறச் சென்றனன். அவனது படையும் முன் னர்ச் செல்லலுற்றன; அங்ஙனஞ் செல்லவே கலிங்கப்படையின் மதயானைகள் துணிபட்டன; துரக நிரையொடு தேர்கள் முறி பட்டன; குடர்கள் குருதியின்மேல் மிதந்தன; அவற்றைக் கழுகுகளும் காகங்களும் உண்டு களித்தன; ஆயிரம் யானை களைக்கொண்டு 'பொருவம்' எனவந்த கலிங்கவீரர்கள், தங்கள் அரசன் உரைசெய்த ஆண்மையுங்கெட அமரில் எதிர் நிற்க மாட்டாது ஒதுங்கினர்; இப்படை மாயையோ மறலியோ வென்றலறிக்கொண்டு நிலைகுலைந்து விழுந்து ஓடினர்; 'அபயம்,' 'அபயம்' என்றலறிக்கொண்டு ஒருவர் முன்னர் ஒருவர் ஓடினர்; அங்ஙனம் ஓடியகலிங்கவீரர் பதுங்கியது கன்முழையின்கண்ணே!

மறைந்தது அரிய பிலத்தினுள்ளோ! காந்தது செறிந்த அடவியி லேயோ! இவற்றை முழுதுந் தெரிந்துகோடல் அரிதாகும். அவ்வாறு கலிங்கரோடப் பலப்பல யானைகள், குதிரைகள், ஒட்ட கங்கள், தேர்கள், மணிக்குவியல்கள், மகளிர்கள் ஆகிய எல்லா வற்றையும் கருணாகரனது படைவீரர்கள் கைப்பற்றினர். கைக் கொண்ட அன்னோரே அவற்றின் அளவைக் கணித்துரைப்பது அருமையெனின், மற்றையோர் அவற்றைக் கணித்துரைத்தல் எங்ஙனங்கூடும்?

இவற்றைக் கவர்ந்தபின் 'இனி கலிங்கமன்னனையும் கைக் கொண்டு பெயர்குதும்; அவனிருக்கின்ற விடத்தை யறிக' என்ற னன் கருணாகரன். அவன் சொற்கள் பிறப்படுமாறு விரைந்து சென்று வரைகளிலும் வனங்களிலும் தேடிக்காணப்பெறாது, முடிவில் ஒரு மலைக்குவட்டிற் காந்திருந்த கலிங்கர்கோனைக் குறுகி 'நமது அடற்படையைக் கொணர்க' வென்றனர். எனினும் அவனைக்கொணருமாறு கருணாகரன் தன் படைஞரை ஏவினன். அவர்கள் சென்று வெய்யோன் அத்தகிரியை அடையுமளவில் கலிங்கமன்னன் காந்திருந்த வெற்பினையெய்தி வேலாலும் வில்லா லும் வேலிகோலி விடியளவுங் காத்துநின்றனர்; பின்னர், செங் கதிரோன் உதயகிரியை யடையுமுன்னர் அம்மன்னனைக் கைப் பற்றித் திரும்பினர்.

அன்னாது வழியில் எதிர்ப்பட்ட சில கலிங்கர்கள் தங்கள் உடல் முழுவதும் மாசேற்றித் தலைமயிரைப் பறித்தெடுத்து அரையிலுள்ள கலிங்கத்தைக் களைந்தெறிந்துவிட்டு, ஐயா! யாங் கள் சமணர்கள்; கலிங்கரல்லேம்,' எனக்கூறிப் பிழைத்துச் சென்றனர். சிலர் சிலையின் நாணை மடித்து முப்புரிநூலாகவணிந்து கொண்டு, 'ஐயா, யாங்கள் கங்கை நீராடப்போந்தேம். விதி வலியால் இங்ககப்பட்டுக்கொண்டேம்; காந்தவரல்லேம்' எனச் சொல்லி உயிர்பிழைத்தனர். குருதிதோய்ந்த கொடித்துணிகளைக் காவியுடையா வுடுத்துக்கொண்டு, தலையினை முண்டிதஞ் செய்து கொண்டு "ஐயா! எங்கள் உடையைக்கண்டவளவில் எங்களைச் சாக்கியரென்று அறிகிலிரோ?" என்றியம்பி யுய்ந்தனர் சிலர்.

10

சிலர் யானைகளின் மணிகளை அவிழ்த்துத் தாளமாகக் கையிற் பிடித்துக்கொண்டு கும்பிட்டு, 'ஐயா! யாங்கள் தெலுங்கப் பாணர்கள்; சேனைகள் மடிகின்ற செருக்களங்கண்டு திகைத்து நின்றோம்; இத்தேயத்தினரல்லேம்' என்றுரைத்துப்பிழைத்துப் போயினர். இவ்வாறு பிழைத்துச்சென்றவர்கள் தவிர, கலிங்க நாட்டில் உயிர்பிழைத்தவர்கள் வேறு ஒருவருமிலர்.

கலிங்கமெறிந்து வாகைமாலை சூடிய கருணாகரத்தொண்டைமான் களிற்றினங்களோடு நிதிக்குவியல்களையும் பிறவற்றையுங் கவர்ந்து கொண்டுவந்து குலோத்துங்கசோழன் திருமுன்னர் வைத்துவணங்கினன். நேரியர்கோன் பெரிதும் மகிழ்ச்சியுற்றுத் தொண்டைமானது போர்வீரத்தைப் பலபடப்பாராட்டி அவற்குத் தக்கவரிசைகள் செய்தனன். (தொடரும்)

உ

பரமோபதேசம்.

திருவாளர், L. உலகநாதப் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

இது சைவசித்தாந்த உண்மை உணர்த்தும் நூல்களுள் ஒன்று; நாற்பத்தொருகுறள்வெண்பாக்களை உடையது. இதனை இயற்றியவர் மறைஞான சம்பந்தர் என்பவர். அது, இந்நூல் ஈற்றுவெண்பாவில் வந்துள்ள, 'பரமோபதேசம்-மறைஞான சம்பந்தன் வாக்கு' என்னும் சொற்றொடரால் இனிது விளங்கும். இவர், சிதம்பரத்தில் குகைமடத்தில் துறவு பூண்டிருந்த பெரியார். தென்மொழியினும் வடமொழியினும் வல்ல புலவர். தொல்காப்பியம் முதற் பல்காப்பியமும் மூவர் தமிழ் மறையும் வடநூலாகமமும் கடையறத் தேர்ந்தவர். இவற்றை இவர் இயற்றிய

" காரூர் பொழிலுந் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமு
மாதவர் கூட்டமு மீறுறை தில்லையிற்
கனக சபையிற் பனக முனிவனும்
போத மிகுத்த புலிக்கான் முனிவனு
மாதவ விரணிய வருமனு மிறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரு
மருமா மறையா லடிபணிந் தேத்தப்
பானு கம்பர் பணிலமும் வாண
னுன குடமுழ வாதியு முழக்க
மாண்டகு மதுர வாய்மொழி யிடமாய்த்
தாண்டவம் புரிவோன் சரண கமலம்
புந்தியி னுளுஞ் சிந்தனை பண்ணி
யப்பதி தன்னி லருங்குகை மடத்தி
லெப்பதி யோரு மேத்தவு மிருந்தோன்;
இகமது தன்னிற் சுகனையொப் பானோன்;
வெண்ணெயம் பதியில் மெய்கண்ட தேவன்
மண்ணிடை மீண்டு வருதலொப் பானோன்;
அருந்தமி ழுணர்வா லகத்திய முனியெனத்
திருந்துதொல் காப்பியஞ் சிவமயஞ் செய்தோன்;
ஆசில் வடநூற் போச ராசன்;
ஆதி கமலா லயமுதற் புராணம்
ஓது மதியாற் சூதனை யொப்போன்;
மூவர் முதலா முதியவர் பாடல்
ஆவ லுடனே யடங்கலு முணர்ந்தோன்;
நவமிகு நூல்கள் நானு விதத்துடன்
சிவதரு மோத்தரந் தமிழாற் செய்தோன்;
ஆகம பண்டிதன்; அருந்தவர் புகலும்
மோகமில் சாத்திர முழுது முணர்ந்தோன்;
நண்ணிய தவமறை ஞான சம்பந்தன் "

என்னும் பதிபசுப்பாசப்பனுவற் பாயிரத்துட்காண்க. இன்னும் இப்பாயிரத்தால், இவர், கமலாலய புராணம் இயற்றியமை அறியக்கிடக்கின்றது. அதன்கண்,

" ஆண்டுகலி யுகத்துக்கு நாநூற்று முப்பத்தி ராயி ரத்து
னிண்டியநா லாயிரமு மறுநூறு மெண்ணைந்து மேழுஞ்செல்லப்
பூண்டபரா பவவாண்டில்." (25)

"பொருவரிய சிவஞானர் புற்றிடங்கொண் டருள்புரிந்த
புகழை யெல்லா
முறைசெய்யு மாரியத்தின் பொருடமிழா லுணர்த்துக வென்
றுரைக்கச் சொல்வாம்." (27)

எனப்பாயிரத்துக் கூறியிருத்தலின், இவர் கமலாலயபுராணம் இயற்றிய காலம் கலி. 4647-ஆம் யாண்டென்பது வெளிப்படை. இப்பொழுது நடைபெறுவது கலி. 5030-ஆம் யாண்டு ஆகும். ஆகவே இப்புராணம் இப்பொழுதைக்கு 383 யாண்டுகட்கு முன்னர்ச் செய்யப்பெற்றது எனலாம். எனவே, இந்நூல் இயற்றிய மறைஞான சம்பந்தர் கி. பி. 1545ல் இருந்தனராதல் விளங்கி நிற்றலின், இவரது காலம் பதினாறும் நூற்றாண்டு எனத் தெள்ளிதின் அறியக்கிடத்தல் காண்க.

இனி இவர் மேற்கண்ட பாயிரத்துக் கூறிய கமலாலயபுராணமும் சிவதருமோத்தரமு மல்லாது,

" நிரந்தவர் சங்கற்ப நிராகரிக்கு மிந்நூல்
பரிந்துலகோ ருய்யப் பகர்ந்தான்—திருந்திமறை
யோங்கி விளங்க வுதித்தமலை யோட்டினன்பேர்
தாங்கினனுய்த் தாகமமுந் தான்" எனவும்,

"பரமோப தேசம்—மறைஞான சம்பந்தன் வாக்கு" எனவும்,

" முத்தி நிலையணுக்கள் சேர மொழிந்திட்டான்
சத்தியமெஞ் ஞானசம்பந் தன்" எனவும்,

" சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்
மையலற வாய்க்க வரம்" எனவும்,

காணப்படுதலின், பதிபசுப்பாசப்பனுவல், சங்கற்பநிராகரணம், பரமோபதேசம், முத்திநிச்சயம், சைவசமயநெறி என்னும் நூல்

களையும் இயற்றினாராதல் அறிக. இவற்றுள், முன்னமே அச்சிடப் பெற்ற சிவதருமோத்தரம், சைவசமயநெறி என்ற இரண்டும் ஒழிய, ஏனையவை இப்பொழில் வாயிலாக வெளிவரும்.

பரமோபதேசம்.

ஆரணத்தி னுட்பொருளு மாராய்வா ரம்பவன
வாரணத்தின் றாள்கணினை வார். (௧)

முத்த னனாதிசுத்தன் றாள்வணங்கி யாதிமுத்தற்
குத்தமப்பே ரின்பமுறைப் போம். (௨)

அனாதி யமலன் சிவனவன் பாரி
யனாதி யமலைபிரி யாள். (௩)

அனாதி சமல ரணுக்களவர் பாரி
லனாதிமல சம்பந்தத் தார். (௪)

ஆக்கியுட லாவிக் கறிவிப்பன் கன்மபல
நீக்கமற நின்மலனு ணின்று. (௫)

பரிபாகத் தின்மலத்தைப் பாற்றியுயிர் சத்திக்
கருளா லிலக்குவதின் பாங்கு. (௬)

அந்தப்பே ரின்பந் திளைத்திருப்ப னாதிமுத்த
னந்தச் சிவனொடிரண் டற்று. (௭)

சிவசத்தி யைத்திளைப்ப ராதிமுத்த ரென்னு
மவசத்த மாபாத கம். (௮)

அனாதிசுத்த சத்தியிற்பே ரானந்தந் தன்னை
யனாதிசுத்த னேதிளைப்ப னார்ந்து. (௯)

சாத்துவீ யென்றுபரா சத்திதனைச் சாற்றுமிய
லார்த்த சிவாகமத்து ளாய். (௰)

சாத்திரவி யென்றபெயர் நான்கற் புடையளுக்கு
வாய்த்தபெய ரென்றே மதி. (௰௧)

கற்புடையா ளோத்திலோப்பன் காணவள்காந் தன்னவனை
மற்றையர்தின் டார்மன்னி னும். (௰௨)

கண்ணகைநந் தோளையவள் காந்தன் கலந்தணைவ
னண்ணவல்லார் மற்றூர் நவில். (௰௩)

அணைவன் வசிட்ட னருந்ததி தன்னை
அணையவல்லார் மற்றூர்சொல் லாய். (௰௪)

கனியினுங் கட்டிக் கரும்பினும் பத்தர்க்
கினியன் சிவனென்று ரெண். (௰௫)

சகளசிவனைத் திலோப்பர் சார்ந்தபர முத்த
ரகளனாரி யானவனு மாங்கு. (௰௬)

திலோப்பர் பரமுத்தர் தஞ்சித்தின் செல்வ
மொளித்திடுநா ளண்டமற் றுள் ளுன். (௰௭)

கருத்தின் களிப்பினைக்கண் காணாது காணு
தொருத்தன்பே ரின்பமுயி ரும். (௰௮)

ஆதிமுத்த வின்பமு மனுதிமுத்த வின்பமு
மோதும் விரித்துபனி டம். (௰௯)

கேளா யுபனிடப்பா கப்பிரம கீதையுனு
ளாளாயந் தாற்கவர்வாக் கால். (௨௰)

முத்தர்க் கனுபூதி முன்னான்கு போகத்தாட்
பத்தாஞ் சுலோகத்துப் பார். (௨௧)

'இருட்டறை மூலை' யெனுமியலாள் மூலன்
றெருட்டினமு வான்மாச்சீர் தேறு. (௨௨)

1. இருட்டறை மூலை யிருக்கு முயிர்சத்தி
இருட்டறையில் லைச்சிவசத் திக்கு. (௨௩)

---

1. திருமந்திரம் ஐந்தாந்தந்திரம் 17-வது சத்தி நிபாதம்.

'தாய்களா ளூர்பல் லுயிர்க்கு'மெனுஞ் சம்பந்தர்
வாயிலங்கு பாடன் மறி. (உச)

திருச்சிரபுரம் அன்னமென்னடை 7.

2. 'தாயவன் காணுலகுக்' கென்றார்நந் தற்பரனைப்
பாயபுகழ் நாவரையர் பார். (உரு)

3. 'தந்தைதாய் பல்லுயிர்க்குத் தாமே'யென் றார்கடலூர்
நந்திதனைச் சுந்தரரு நாடு. (உசு)

4. 'தாயேயென் றுன்றாள் சரணடைந்தே' னென்றனர்தம்
வாயான் மணிவா சகர். (உஎ)

5. 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதந் திற'மென்றார் பார். (உஅ)

திருவிசைப் பாவின் றிலைச்செய்பு ளாயி
னொருவுங்கா ணுன்கொள்கை யுன். (உகூ)

அக்காலத் தாயே யெனவழைத்தா னன்பினு
னக்கனைநக் கீரனது நாடு. (௩ம)

தாயவ னீயாவா னென்றான் சதாசிவனை
யாயன் புகழறிவித் தான். (௩க)

6. பேசற் கரியவுயிர் பெற்றாள் பராபரையென்
றூசிலரு ணந்தியுஞ்சொற் றான். (௩உ)

ஈசன் பிதாமாதா யாமெவ் வுயிர்க்குமெனப்
பேசினன்பே தைக்கெம்பி ரான். (௩௩)

அனுதிமல முத்தன் பிதாவமலை யன்னை
யனுதிமல பெத்தர்க்கெல் லாம். (௩ச)

மைந்த ரனுபவிப்பார் மாதாத் தனையென்னு
நிந்தனைநீ சொன்னவழு நீக்கு. (௩ரு)

---

2. திருவலிவலச் திருத்தாண்டகம் 3. 3. திருக்கடவூர் மயானம் 3.
4. திருவாசகம் ஆனந்தமாலை 5. 5. திருவெம்பாவை 15.
6. சிவஞானசித்தியார் பரபக்கம் மங்கலவாழ்த்து 2.

1. எழுநான்கு 2. நான்கறு 3. மூன்றினு மில்லை
வழுவான நின்கொள்கை வாக்கு. (௩௬)

பெருநாவி லில்லாப் பிழைபிதற்றும் பித்த
ரொருவார் நினையத்து ளூற்று. (௩௭)

ஆதலினின் கொள்கை யவலத் தினையகற்றிக்
கோதறுமென் கொள்கையினைக் கொள். (௩௮)

விருப்பாலிந் நாலாய்ந்தார் பொய்வெறுத்து மெய்கண்
டிருப்பார் நினைத்துப்பே ரின்பு. (௩௯)

விலங்கெனத்த மூனை வெறுத்தார்க்கிந் நாலை
யிலங்கவிரிப் பார்க்காம்பே ரின்பு. (௪௰)

செறிமா செறியும் பரமோப தேசம்
மறைஞான சம்பந்தன் வாக்கு. (௪௧)

பரமோபதேச முற்றும்.

---

1. இருபத்தெட்டு ஆகமம். 2. நான்கு வேதம்.
3. பதினெண் புராணம்.

உ

குமரகுருபரவடிகளும் அவர் நூல்களும்.

திருவாளர், இ. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 2-ம் துணர், 342.)

இங்ஙனமாகச் சின்னாள் அவண் தங்கிய அடிகள், அவ்விடம் விட்டகன்று விருதுகள் புடைசூழ்ந்துவர மாயூரஞ்சேர்ந்து வழிபாடு செய்து, அண்மையிலுள்ள தருமையம்பதியுளார் பெருமையொடும் எதிர்சென்றழைப்ப, ஆண்டுளார் வியப்புறுமாறு அம்மடத்தணைந்து, இருக்கையையெய்திய பின்றை அம்மடத்துத் தலைவராம் மாசிலாமணித் தேசிகர், செந்திற்பதியார் திருவருள் பெற்ற இப்பெரியார் தோற்றத்தைக் கண்டு, "ஐயன்மீர்! கல்வியு மறிவும் கடம்பணிமார்பன் றிடம்படுமருளா லடையப்பெற்றவர் அன்னவன் றந்தையார் திருவடி பற்றுக்கோடாயுள்ளவர்களை வணங்க மாட்டார்கொலோ" வெனவினவலாயினர்.

"வள்ளிய! வெண்ணீறு சண்ணித்த மேனியாரனைவரும் வணங்கற்குரியராயினும், தூய்மையுறு வாய்மையுடைய (ஆச்சிரம) நிலைவேறுபாட்டால் அவ்வவற்றிற்குரிய ஆணையையும் விழைவர்" என்றனர் குமரகுருபரர்.

"மனத்துக்கண் மாசில னாதல் லனைத்தறன், ஆகுல நீர பிற" எனக் கூறுதல் யாது கருதியோ வென மாசிலாமணியார் கூற, மனமாசறல் விளங்குந் தோற்றமுடைத்தாகாதென அம்முனிவருடன் மொழிந்தனர். காட்சி யொன்றை மாத்திரங் கருதுதல், அறுமுகப்புத்தேள் அருண்மாட்சியுற்ற நும்மனோர்க்கு முறைமையன்றே வெனத் தருமையம்மடபதி சாற்ற, செம்மை நெறியாளும் மெய்ம்மை நெறியைப் பிறரறிய வொண்ணாத் தன்மையுடைய உடலானது அருளொடு கூடாது. எனப் பெருநெறி

யாவர் பேச, மாசிலாமணியார், பிறாறிகுலின் வருநலன் என்னை யோவென, நன்னெறியுடையார் இவரேயெனத்தேறி உலகினர் மெய்ப்பொருள் பற்றிப் பொய்ப்பொருள் ஒழிப்பான் கருதி யென வும், நீறணி மேனியரே தேறற்கரிய வேடமுடை யெம்மானெனத் தன்னுட் கொண்டு, சோர் காவலரும் பிறரும், ஆலத்தடக்கிய மிடறுடைக் கோலத்தன் பதம் குறுகினர் எனவும், புகலக் கேட்ட மெய்க்குரவனர், மெய்யடியார்தம் பொய்யில் கதையி னொரு செய்யுளாம் "ஐந்து பேரறிவும்" எனுஞ் செய்யுட்குப் பொருளை முற்படப் பகர்மினெனக் குமாகுருபரரும் நான் கூறும் பொருளினலத்தை யுள்ளவா வுணர்மினென்றார். இதன் பக்க லுள்ள (எ) செய்யுட்கள் எப்பொருட்டாலோ (பொய்ப் பொருட் டால்) பதிப்பாசிரியர் பதிப்பித்திலர். தொடர்புங் காணப்பட் டிலது. இப்பெற்றியை ஆய்வு முற்றுகையி லெடுத்துரைப்பாம்.

இன்னணம் நிகழ்ந்த பின்றை, மாசிலாமணிப் பெருந்தகை யார் அம்முனிவரை நோக்கி எங்கள் ஆரியன்மேல் யாங்க ளெப்போதும் உங்கள் பேருளாற் றுதித்தற் பொருட்டு அருள் புரிந்து ஒருநூல் செயல் வேண்டுமென, விழைந்தாங்கு மும்மணிக் கோவை யொன்றியம்பி, ஒன்றுமாத் துதித்திருமின் என்றவர் காத்துதவிச் சென்று அயலிலுள்ள வடமடம் புக்குப் பூசனை செய்து அவண் சில்பகல் கழித்தனர் அடிகள்.

அம்முனிவரர் உடனிருந்து உண்ணும் பெருமையும், அம் மாசிலாமணிக்கு அன்பு மீக்கூர்ந்தமையா னெய்திய பின்றைப் பங்குனியுத்தரத்தன்று ஆரூர்ப் பெருமானைக் காண விழைவுற்று அவ்வூரணைந்தனர். அணைந்த ஞான்று மெய்புருவுடைய செய்ய வர் பல்லோர் எதிர்கொண்டேடுக்க, அருட்டிருவுடைய ஐயன் கிண்கிணிக்கால் அழகினைக் கண்ணாரக்கண்டு, அன்னவர்க்கே திருவாரூர் நான்மணிமாலை யெனப்பெயர் சூட்டி ஒரு சிறிய நூலுங் கண்டனர்.

பின்னொரு பகலில், நாலுரை நவலு நோன்மையாளர் ஆகிய அவ்வடியார்பால், சமயவாதர் பலர் குழீஇத் தருக்கித்துரைத்து

வாதாடா நிற்ப, அன்னார் அகவிருளொழிந்துத் தெருட்டிப் பின்னிடுமாச்செய்து, அப்பதி விட்டரிதினகன்று, நெறியிடைப் பட்ட அறவுருவன் ஆலயத்துட்புக்குக் கண்ணுறக் கண்டு, கடுவினை யோட்டுங் கடுக்கண்டனுரைப் பல்லாற்றானும் துதிபலபுரிந்து, புள்ளானூர்க் கரையனிடமாம் புள்ளிருக்கு வேளூரை, தெள்ளு தமிழ்மறைப் பொருளார் நள்ளிய கோயிலை யடைந்து, தைய னற்றலைவி யாரையும் மருத்துவத்தலைவரையும் (வைத்தியநாதரை யும்) முத்துக் குமரனையும் முறையுறு நெறிகொடு வணங்கி, முத்துக்குமாரசாமிக்குப் பிள்ளைக்கவியொன்று புனைந்தணிந்த சின் னுள் அவணிரீஇப் பின்றையோர்நாள், பெரும்பற்றப் புலியூரே பெரும்பற்றெனக் கொண்டு சென்று, அம் மன்றுளார்க்கு மும் மணிக்கோவை யொன்று செம்மையுறக் கோத்துத் தரித்து, நீறுடையையர் சிலர் கூறியாங்கே, எத்திறத்தினும் மெய்த்திறம் பயக்கும் செய்புட்கோவை யொன்று பாடிமுடித்து, ஆயிரக்கான் மண்டபத்திடை யமர்ந்திருக்கு நாளில் ஓர் நாள் மாயாவாதியர் பலர் ஒருங்குகுழீஇ வாதிட, தேனருவி தாழும் செந்தூர் வெற் புறை யாண்டவன் அடித்தொழும்பாம் அடிகள், சின்மென் மொழியால் பின்னிட எதிர்மறை வாதியரை யுடன்பாட்டு வாதிய ராக்கினர். முருகப் பெருமான் திருவருள் முற்றிய பெற்றி யார்க்கு ஈதுமோரரிய செயலாமா!

அப்பெரியார், காட்சியவான் மாட்சியவான காட்சியுந் தந் தருள் பெரும்பற்றப் புலியூரினின்றும் அரிதினிலொருவி, எழு பெருங்கடலும் இருபெருங்கடலாக வெண்ணெயும் பாலும் பெரு கும் பண்ணையங் காட்டுறு பெருவள நிரம்பும் பெண்ணைசூழ் வெண்ணெய்நல்லூர்ப் பெரும்பதி தொடங்கித் தம்மைச்சூழும் அடியார்குழாத்தொடும், இருபுறமொத்த பெருவன்புடன் நெறி யிடைப்பட்ட நின்மலன் ஆலயம் (வினையினீங்கி விளங்கியவறிவன் கோயில்) பலவும் புக்குக் கண்டு வணங்கி யேகுகையில் ஆற் றிடைப்பட்ட போற்றரும் எற்றாம் அரயர் சிலர் பலவரிசை யொடும் எதிர்கொண்டழைப்ப அன்னவையேற்று, அவருளம் அளவிலாக் களிப்பெருக்கிடைக் கிடப்பச் சின்னாளவட்டங்கிப்

பின்னர், பிறவிப் பெருமாசு அறவே போக்கும், காசிப் பெரும்பதி புகுவான், தெலுங்கம், கருநடம், விராடம் முதலிய பலநாடு கடந்து அவிமுத்த வாணருறையும் வாரணவாசி வந்தண்மினர். பனிமால் வரையினின் றிழிதரும் பன்னருஞ் சிறப்புறு தூய்மைய வாகிய புகழ்தங்கு கங்கைப் பெருநீர்பாயும் பொங்குவளமுற்றது இவ்விமுத்தமென்னில், அந்நகருறு காட்சியை யெங்ஙனே வியம்பவல்லாம்? அன்பியவடிகள், அந்நகர்க் காட்சியைக்கண்டு, அக்கங்கையின் இருகரைப்பாங்கரும் பொருவிலாத் தவநெறிச் செல்வரும், தவத்துயர் பெரியரும், தவத்துறை மாக்களும், ஒருங்கு குழீஇ எல்லாம்வல்ல இறைவனற்றுணை, பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய் முற்ற வாலுணர்வு முடுக, பிறவிப் பெருங்கடல் கடக்கும் பெரும்புணையென உள்ளவாத் தேறி ஒருப்படுமுளத்தினிலிருத்தி உறங்காதுறங்கி உறைபவராதலையு முற்றுநோக்கி, அப்பெருநதியிடை இருபுறமாசு மெளிதினிற் கழிப்பப் படிந்து, விண்ணவரும் மண்ணகத்தே எண்ணருஞ் சிறப்புற புண்ணியப்பதி யிப்பதியெனக் கருதிப்போந்து வழிபாடாற்றும் கழிபேருவகைக் கடிதினிற்றந்தருள் உலகுரு வானோன் (விச்சுவநாதன்) இலகுறுங் கோயிலிற்புக்கு, அன்பினை யடைக்குந் தாழுத்திறந்து இருகையையும் திருமுடிமேற்றாக்கி அன்னவன் றுணை யுள்ளவாறு உளத்தினிலிருத்திப் பணிந்தனர்.

அக்காலைத் துண்டிவிநாயகருக்குத் தண்டமிழ் மணங்கமழ் பதிகமும், உலகுருவானோற்குப் பதினெட்டுறுப்பும் பாங்குபட நிறுவும் கலம்பகமும் ஆயவிவ்விரு நூலும் நூற்று, அறுமுகவன் நாடு மண்ணலாம் தூயன், தாம்தங்கிய இத்தலத்திடை ஒரு மடங் கட்டுவித்தல் வேண்டுமெனத் தன்னுட்கொண்டு, நன்மடம் ஆற்றுதற்கு, அந்நகராளும் அரசனை யணைந்துகொளல் நன்றெனக்கருதி ஆண்டேவதிந்தனர்.

அப்பதியாளும் அரசர் துருக்கராயினமையால், அப்புரவல ருர்தம் மொழியே நன்குதெரிந்து உறுதியெய்துமாறுணர்த்தலா மன்றி அவ்வரசர்க்குப் பிறவாற்றான் ஆகாதெனத்தேறி, நற்பல கலைகட்கும் நாட்டமுறு நாமகளார்மீது வாடாமாலை யொன்று

பிடிறவனிந்து அவ்வையார்மொழி தமக்கு வருமா வேண்ட, அவ் வம்மையார் அருள் மருளறப் பொங்கியதால், அப்புலவர்பெரு மகனார்க்கு ஆயமொழி வந்தடுத்தது.

அம்மொழி கைவந்த மெய்ந்நெறியாளர், அக்காவலன் மருங் குற்று, தன்னுட்கோளை யன்னவன் றடையின்றி யொப்பச் சுருங் கச்சொல்லல், விளங்க வைத்தல் துலங்கிய வனப்புடை விரிவுரை சினமுறுநிலையுளார் சினமறவேயாற்றி யம்மன்னனைத் தன்னகப் படுத்தி அவ்வூரினிற் றன்னெண்ணப்படியே புண்ணியத்திருத்தளி கட்டுவித்து, அம்மடத்திற்காஞ்செலவிற்குரிய பொருளும் உதவ மன்னவனார், தாம் மடத்தினிலமர்ந்து அறம் ஆற்றுவாராயினர்.

செவித்துணைமூன்றி நில்லாதபொழுதத்து, அதுதானுமிருந்து கேட்டற்பொருட்டு, வாயுணவும் தந்து, அகவிருளைப் பகலவனைப் போலப் பறக்கடித்தும் வாழ்வாராயினர் வாரணக்கொடியுடை வள்ளனற்றாள்புனை கள்ளமில் சிந்தையார்.

பங்கமிலாத் திங்களணிந்த செஞ்சடை வானவனாகிய திருக் கேதாரநாதர் அத்தவமுயர் பெரியர் கனவினிடைத்தோன்றி, நாம் "அணுகற்கரிய காடுகளிடைப்பட்டு நெருங்க மறைந்தேம், நீர், அக்காடு போக்கி யாவரு நாடுமாக் கோயிலொன்று கட்டித் திருத்துவீ" யென உணர்த்த உணர்ந்த பெற்றியார், அடர்வனம் நாப்பண்மறைந்த ஐயன் பணித்த பணியே பணி யெனக்கொண்டு பலரொடு சென்று காடுகெடுத்துத் தேடற்கரிய செழுமணியை நாடிக்கண்டு, அப்பெருமாற்குச் சீரியஅணியொடுசெறிந்த கோயி லொன்று செப்பமுறச்செய்து, செப்பமுறச்செய்த கோயிற்குச் சிறப்பொடுபூசனை செல்லுமாவாற்றிப் பலபடியாக நாவாரப் புகழ்ந்து ஆண்டு வேட்கையொடு மேவினர்.

இங்ஙனம் அப்பெரியார் தங்க, உயர்வுற அவ்வூராளும் அரயன் பேரன்பு அன்னவர்பான் மீதூரக்கண்ட மன்னவனுகிரி யாயுள்ள தருக்காளைவரும், திருச்செற்றுத் தீயுழியுய்க்கும் அழுக்காறெனுமொரு பெரும் பாவியாற் பற்றப்பட்டு அரயன்

பக்கலை யன்றி, "பொனலாரியாரும் நாளவர் புரையும் நின்னடிகளைப் பேணிச்சூட அறச் செங்கோல் நிறம்பட வோச்சும் இறைவ! தென்னாட்டினின்றும் இந்நாட்டை யெய்தினர் நின்னாட்டவருள் பெற்றவராயினும், அன்னவர்கொண்ட கடவுள் பொய்க் கடவுளே" யெனப் பலவாறாகப் பிதற்றி யாயனைச் சிறந்த நெறியுடைச் செல்வனை நன்காராய்வான் வேண்டினர்.

வேண்டப்பட்ட வேந்தன் தன்முன்னர், இயல்பினெழுந்து போந்த எழில் நலங்கனிந்த முருகனார் மாணவருக்கு முகமனுரை மொழிந்து, இருக்கையுதவி யிருக்குமாச்செய்து, எம்மாசிரியர் இயம்புமொழிகளை யிசைந்து கேண்மினென, அப்பெரியார், அவ்வாசிரியனை நோக்கி, உங்கள் கூற்றினைக் கூறுமினென, அன்னவர், அடிகளைப் பார்த்து "நீவிர் கொண்டுள தெய்வம் பொய்யே, மெய்யேல், அங்கையின் அனலுறுவேயும் இரும்பைத் தாங்குமின்" என்றனர்.

அழுக்காறுற்ற அகத்தராய ஆசிரியர் அறைந்த கொடுமொழிகளைச் செந்நெறிநின்ற செம்மனத்தர் புன்னகைபூத்து நவ்வியங்கரத்து முக்கண்ணயனார் உண்மை ஈண்டுற்ற கோடிய மனத்தர் கோடுமாச் செய்து விளக்குவேன் எனத் தன்னுட்கொண்டு, அரயனை நோக்கி, 'நீ, கண்டாரஞ்ச இருப்புக்கட்டிதனை நெருப்பிடைப்புகுத்திக் காய்ச்சி வருவி' யென, அவன் ஆணையால் வந்த வெந்தழற் கட்டியினை அரயனையுள்ளிட்டாரியாவரும் அகங்கொதித்தஞ்ச விஞ்சிய விறலுடைச் சிங்கவேலனார் எழுந்து நின்று, அவையுளாரைப் பார்த்து, "குற்றமற்ற வேதம், ஆகமம், விளம்புமுறையே பொருளவை; சைவசமயமே மெய்ச்சமயம்; ஊர்தியுங் கொடியுமாவுடைய ஏற்றவனே நாடற்கரிய பிரமம். ஐந்தெழுத்து, நீறு, அக்கமணி யிவைகளே சாதனம். சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பனவே நால்வகை நெறி. இரண்டறக் கலத்தலே முத்தி; அளவிடற்கரிய உயிர்களுய்ய எடுத்தருள் வேடமே கைலைமலையிலுறை கண்ணுதலானடியவர் வேடம். நாடற்கரிய நடுநாட்ட நாயகனடிகளைப் பற்றி வழிபடும் கடமை பூண்டோரே பிறவிப் பெருங்கடல் கடப்பவராவர். இறையெனும் பெயர் தமக்

கேபுடைய எம்மானுக்கு, என்றும் பிரமனையுள்ளிட்ட பெருந்தேவரே வழிவழியடிமை. கல்லாடைதரித்து நெறி பிறழாது செந்தூர்ப் பெருமான் மாணவனுய், யான் ஆற்றிவரும் அறம் நாளுந் தழைத்தல், இறைவன்நற்கோயிற் பொருளில் இறையளவுங் கருதேன் என்றிவை யுண்மையாயின் இச்சுடர் மழுவென்னைச் சுடாதொழிக" வெனக் கோள்கூறி, நான்முகனும் அறியா நம்பனை மெய்யென்று அவையினுள்ளார் வியப்ப அகங்கையி லேந்தினர்.

இப்பெற்றிகண்ட வுடனே மன்னவன் முதலியோர் நடு நடுங்கி, உலகமுய்யவந்த அப்பெரியாரடிகளில் பலபடியாக உயர் வுறு மொழி யுரைத்து எல்லாம்வல்லஇறைவனுஞ் சிவபெருமானே தெய்வமன்றி வேறில்லையென்று மேதக யாருந் தேர்ந்தனர்.

அக்காலை, அழுக்காறெனும் பெரும்பாவியாற் பற்றப்பட் டோர், அரயனுர் நம்பாற் பற்றின பற்றற்றதே யெனப் பெரு நாணினராயினர். அரயனும் கையிற் பொறுத்த கனன்மழுவினை கிழக்கிடுமா அடிகள் பாலிரப்ப அதனை அன்னணஞ் செய்து மன்னவன் தந்த பன்னருஞ் சிறப்புறு வரிசையொடு தம்மடத்தைப் பருதியினும் விளக்கமுற்ற பண்பினர் நண்ணினர்; முன்னையினும் அரசன் செல்வ நனிதரப்பெற்று உவகையொடு நின்று எண்ணுன் கறமும் எண்ணமையினியல ஆற்றியமர்ந்த பெரியார் அரன்றனக் குரிய சாதனப்பொருளின் ஒன்றாய அக்கமணி விளையும் பூமியுங் கோடல் நன்றெனக்குறித்ததைக் கேட்ட வாகீசமுனிவரொன்பார் ஆண்டகன்று முகாங்கிமேனி மடமொன்று கட்டினர். இன்னணம் ஆற்றமா செய்த அறப்பெருந்தலைவர் தமக்குப்பின்னரிருந்து நல்லறம் ஆற்றிவரும் நலமுளார் யாவரென்றுன்னி, தமக்கு உள்ளும் புறமுமொத்தவன்புடன் வழிபாடாற்றும் பொலிவுளாரில் மாட்சியுற்ற சொக்கநாதமுனிவரென்பாரைச் சிறப்பித்து, அன்னவர் தமக்குத் தீக்கையாதிய பொருந்தச்செய்து, குமரப் புத்தே ளுண்மையுந் தெளிவித்து, யானீட்டிவந்த அறச்செயல்களறச் செய்வாயென நல்லுரை நவின்று, சொக்கலிங்கப் பெருமானையும் கயற்கண்ணுளையும் செவ்வேலுடை செவ்வேளாயும் அன்பு

பெருகப் பூசிக்குமா றெழுந்தருளுவித்து வைகாசித்திங்கள் தேய்பிறை மூன்றுநாளன்று செந்தூர்ப்பெருமான் சேவடிகளையே நினைந்து, தொன்று களிம்பிலாச் செம்பொன் வண்ணமாந் திருவடித்தாமரைகளி லொன்றி யொன்றுது மேவி யுலப்பிலா இன்ப முற்றனர் என்பர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

தொடரும்.

சிறுவர்க்குரிய பக்கங்கள்.

உ

முருகன் சிறுவிளையாடல்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

1. பொறியெனத் தோன்றிப் பொய்கையிலாடல்.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப்
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியன்"

என மறைபேசும் இறையவனாகிய சிவபெருமான், தமிழ் தழுவிய இன்சொல் இமவான் மடந்தையொடு, ஊழிதோ றோங்கி நுள்ளொளி விரிக்கும் வெள்ளியம் பொருப்பில், அரியணைமேவி இனிதுவீற் றிருக்கையில், விண்ணவரும் அன்னவர் வேந்தனும் வந்தடி வணங்கி, 'முதலு நடுவுமில்லா அண்ணலே! நீக்கமில் இன்பந்தரும் தூயவ! யாங்கள், அவுணர் விளைக்கும் துன்பநீங்கி, முன்னையிற் போல இன்புற அருளுக. தேவரீர், இமயம் சென்று உமையை மணந்தது, தீவினையிற்பட்டு வருந்தும் எம்மை அருள்கூர்ந்து ஒரு செம்மலை அளித்தற் கன்றோ? எந்தாய்! நினக்கு

விருப்பும் வெறுப்பும் இல்லையெனினும் அம்பொருட்டாக, நின்னை நிகர்த்த தன்னிகரில்லாத ஒரு மகனை நின்பால் நீ தரல்வேண்டும்' என்று வழுத்திட, 'உங்கள் புந்தியிற்கொண்ட புன்கணை ஒழிமின்! புதல்வனைத் தருதும்' என்றருளி, அந்திக்கு நிகராய திருமேனியுடைய அண்ணல் அறிஞர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான். அதனை விண்ணவர் கண்டு நெஞ்சு துண்ணென நிற்குமளவில், திருமுகந்தோறுமுள்ள நுதல் விழி ஒவ்வொரு தீப்பொறியை நல்கிற்று. அப்பொறிகள் ஆறினையும் அமர்ந்து நோக்கிய அம்மான், காற்றையும் கனலையும் நோக்கி, 'ஆற்றலை உமக்கு அருளினேம், நீவிர் இச்சுடர் ஆறையும் சுமந்து சென்று வீங்குநீர் விண்யாற்றில் விடுத்திர். அவள் அன்னவைகளைச் சரவணத்துய்ப்பள்' என்றருளினன்.

அவ்வொருவனது ஆணையை மேற்கொண்ட தீயின்பண்ணவனும் ஊதையங்கடவுளுமாகிய இருவரும், அம்மூவிரு பொறிகளையும் முறைமுறை முடியிற்சேர்த்து உடல் வேர்த்துப் புழுங்குற மெலிவிற்றூங்கி வல்லையிற்போய்க் கங்கையில் உய்த்திட, அன்னவள் அவைகளைச் சென்னியிற் சுமந்துபோய்ச் சரவணப்பொய்கையிற் சேர்த்தனள். உடனே,

"விண்ணிடை யிழிந்த காலின் மேவரு கனலிற் றோன்றும்
வண்ணவொண் கமலஞ் செய்ய முளரியை மாறதாகத்
தண்ணளி யோடு நல்கித் தரித்தெனச் சரவ ணப்போர்க்
கண்ணகன் பொய்கை யீசன் கட்டழன் மிசைக்கொண்
டன்றே"

தன்னை நல்குந் தீயை, இயல்புக்குமாறாகத் தான் நல்கித் தன்மேல் சுமந்தது போலச் சரவணப்பொய்கை தன்மிசைக் கொண்ட ஈசன் கட்டழல், அளவிலின்பம், இயற்கையறிவு, தன்வயமுடைமை, பேரருளுடைமை, முற்றுமுணர்தல், வரம்பிலாற்றல் என்னும் ஆறு குணங்களும் ஆறு திருமுகங்களாகப் பன்னிரண்டு திருக்கரங்களோடு ஒரு சிறுமதலையாகத் தோன்றிற்று.

இவ்வாறு சரவணப் பொய்கையில், ஆறுமுகமும் பன்னிரண்டு கையுங் கொண்ட இளஞ்சிறுமகவாகத், தாமரைப் பாயலில், எம்பெருமான் இனிது வீற்றிருப்பக்கண்ட திருமால் முதலிய வானவர்கள், கார்த்திகைத் தெரிவைமார் அறுவரையும் விளித்து, இங்குக் கைக்குழவிபோலத் தோற்றிய இம்முதல்வனுக்கு உங்கள் பாலமுதூட்டிப் போற்றுமின்' என, நன்று எனப்புகன்று பொய்கையை அடைந்த ஆரல்மாதர் அறுவரும், 'ஆறுமுகங்கொண்ட ஒரு சிறுகுழவிக்குப் பாலருத்துவது எங்ஙனம்? ஆறு குழவியாக இருப்பின் ஒவ்வொருவரும் எடுத்துப் பாலூட்டுதல் எளிது' எனத் தம்மனத் தெண்ணினர். மனத் திருந்த கருத்தறிந்து முடிப்போனாதலின், அவர் மனங்களிப்ப ஆறு சிறார் உருக்கொண்டனன் ஐயன்.

பொருள் நீர்மையால் ஆறுருக்கொண்ட அண்ணலை, மங்கையர் அறுவரும் மகிழ்ந்து வேறுவேறு தாமெடுத்துத் தத்தம் பாலமுதினை அருத்திட, அவனும் முறுவல்செய்து ஆற்ற வருந்தினன்போல அருந்திய பின்னர்த் தாமரைப்பள்ளியில் கண்வளர் நீர்மையனாய், ஆடல்புரிவா னாயினன்.

"துயிலவோ ருருவந் தூங்கித் துண்ணென வெழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்
தயிலவோ ருருவ நக்காங் கமரவோ ருருவ மாட
வியலவோ ருருவம் வாளா விருக்கவோ ருருவஞ் செய்தான்."

"ஒருருத் தவழ மெல்ல வோருருத் தளர்ந்து செல்ல
ஒருரு நிற்றல் செல்லா தொப்பென வெழுந்து வீழ
ஒருரு விருக்கப் பொய்கை யோருரு வழுக்கிச் சூழ
ஒருருத் தாய்கண் வைக வொருருவினை புரிய லுற்றான்."

"ஆடவோ ருருவஞ் செங்கை யறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோ ருருவ மாங்க
ணோடவோ ருருவ மோர்பா லொளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரிதலுற்றான்."

2. மகவின் விளைத்த மகிழ் செய்யாடல்.

இத்தன்மையாக, ஒரு கணப்பொழுதில் பத்தாறுப வகைப்படும் வித்தக விளையாட்டினைச் செய்துவரும் சேயினைத், தன் இருகரங்களால் அன்புடன் எடுத்துத்தழுவி, ஓராறு திருமுகமும் ஈராறு திருக்காமுமுடைய ஒருருவாக உமையம்மை செய்தபின்னர், அருள் நீர்மையால் ஆடலைமனங்கொண்ட அண்ணல், திருவடியிற் கழலும் தண்டையும் சதங்கையும் சிலம்ப, அரையின்கண் கிங்கிணி கறங்கக், காதிற் குண்டலமும் மார்பில் மதாணியும் நுதலில் வீரபட்டிகையும் மின்னக், கட்டழகு தோன்றுமொரு காணியோ, அன்றேல் கட்டழகு கொண்ட இளங்கோலமோ எனக் கண்டவர் கூற நடந்து, தென்றல் தவழும் சோலையினும், மன்றல் கமழும் பொய்கையினும், தண்டேன் நுகரும் வண்டு போலச், சென்று சென்று உலாவுவன். புறப்பூங் கடம்பமர் கானினும், ஆநிண்டு கந்துடைநிலையினும் களிற்றிளங் கன்றென இயங்குவான். கோளரிக் குருளைபோற் குன்றிடை இவருவான். குளத்தினும் யாற்றினும் குறுகுவான். செந்தமிழ் மணக்கும் சேந்தொறும் திரிகுவான். வடகலை பயில்வார் வாழிடம் படர்வான். நிலத்திற் செல்வான். விண்மிசை எழுவான். தண்மதி வாழும் இடத் தியல்வான். வெய்யோன் மேவிடம் விரைந்து போவான். நாண்மீன் கோண்மீன் நகுமிடம் புகுவான். தந்தையும் யாயுமமர்தலந்தொறு மேவுவான். வானவர் சித்தர் கருடர் கந்தருவர் எனையர் உலகங்களில் ஏகி மீளுவான். இளைஞனென்னவும் காளைபோலவும் மறையவர் மானவும் முனிவர் எனவும் வருவான். வில்லுங் கணையுந்தாங்கி வீரனென்னத் திரிதருவான். காலாற் கடப்பன். கொய்யுளைப் பரியினும் கொடிஞ்சியந் தேரினும் கடகரி எருத்தினும் ஏறுவான். திருத்த மருப்புத் தகரினும் பெயர்வான்.

குலகிரி அனைத்தையும் ஒருபாற் கூட்டுவன். பின்னர், அவற்றைத் தலைதடுமாறத் தரையிடை நிறுவுவான். ஒலிகடல் முழுமையும் ஒன்று படுத்துவன். வாளகிரியை ஆழுமாறு நிலவரை அழுத்துவன். அங்கு வாழும் பணிகளைப்பற்றி மேரு முதலாய மலைகளிற்

பிணித்துச் சிறுதேராகக் கொண்டு உருட்டுவன் 'ஒரு திசை யானையை மற்றொரு திக்குவேழத்தோடு போரிடுவான்' கங்கை நீரை அள்ளியூற்றிக் காய்சின வடவையை அவிப்பன். கலுழனைப் பற்றி வாசுகிபால் விடுத்து இகல்விளைவிப்பன். செங்கதிரவனை வெண்மதி உலகினும், தண்மதிதன்னை வெய்யவன் உலகினும் செல்லுமாறு படுத்து ஓச்சுவன். எண்டிசை புரப்போர் இருந்த இடங்களைப் பறித்துப் பண்டைய நிறத்தின் நீங்கிடப் பிறழ வைப்பன். கதிரவன் திங்கள் கோள் என்றின்னவரின் ஊர்தி தேர்களைப் பிணித்த துருவன் பற்றிய கயிறுகளில் வேண்டு மவற்றை இடைக்கண் ஈர்த்து வாளியாக விண்ணில் விடுவான். வானவில்லினைப்பற்றி வளைத்து, உடுத்திரளை உண்டையாகக் கொண்டு, வானவர் முடி, தலை, தோள், மார்பு, முகங்களைக் குறி யாக எய்து, வில்லிஞ்சை காட்டுவான். உருமுப்பற்றி மின்னிற் பிணித்து, வண்டுறுத்த செந்தண்மாலை செய்தணிகுவன்.

பாடின்படுமணி இரட்டுவன். குழலினை ஊதுவன். கோடு குறிப்பன். வீணை பயிலுவன். சிறுபல்லியம் எழுப்புவன். எவ ரும் நாணும்படி பாடி யாடுவன்.

3. விண்ணவரை அமரில் அட்டாடல்.

இத்திறம் ஆறிருதடந் தோளண்ணல் எண்ணிலா ஆடல்புரிந் திருப்ப, அன்னவனைக் காணாமையால் தம்மனத்துப் பலதிறப்பட எண்ணி இடருறும் இமையவரும் இந்திரன் முதலியோரும் மேரு மலையிற் கூடி, 'வானுலகமும் மண்ணுலகும் தொன்னிலை திரிபுறச் செய்தார் எவரோ தெரிந்திலம்; அவுணர் ஈது புரிகலர்; இது புகுந்தது எவ்விதம்?' எனத் தம்மில் உரைசெய் திருக்கையில், வானவர் வாட்டம் ஒழிதரத் தன்செயல் காட்டிய வந்தோனாகிய கந்தன், ஒருமுகங் கொண்ட ஓரிளங்குழவியாய், அன்னவர் கண் களில் தெரியத்தோன்றி, மால்வரை அசைத்து, மரையிதழ் கொய்து சிந்தாம் மாட்சியிற் குவட்டினைப் பறித்து வீசிக் குல வினான்.

அண்டரும் அண்டர்க் கரசன் முதலிய அனைவரும் கந்தனைக் கண்டனர். கானில் திரியும் அரியைநேர்ந்த விலங்கெனக் கலங்கினர். 'அன்னே! வானும் நிலனும் திரிபுறச் செய்தோன் இவனே யாவன். இளங்குழவியென இவனை எளிதாக எண்ணலாகாது. ஆயின் அவுணர் யாரினும் வெய்யன். அன்றியும் எவரும் எய்தாத மாயமுமுளன். ஆதலால், வெம்போர்ச் செய்து இவனை வெல்வோம்' எனத் தேர்ந்தபொழுது இமையவர்க் கிறைவன் போர்க்கோலமெய்தி ஐராவத மேற்கொண்டு, வானவரோடும் போந்து வளைந்துகொண்டு போர்தொடங்கவும், முன்னலம் கருதற்கெழுந்த தன்னை ஒன்னலனெனக் கருதிய அன்னவனது அறிவின்மை கண்டு நகைத்து, அவனை ஓர் பொருட்படுத்தாது முன்னையிற்போலத் தன்னதாடல் இழைத்திருந்தனன் முருகன்.

கண்டனன் வேள்விக்கிறையவன்; கனன்றான்; கடவுட் படைகடம்மைத் தொட்டான். தொட்டவை யாவும் போதுகள் பட்டென முருகன்மீது பட்டுவிழப் பதைத்தான்; வச்சிரத்தை விட்டே றெறிந்தான். அஃதும் எந்தைதன் மார்புநண்ணி அயிர் போல நுண்டுகளாக, நோக்கித் துயருற்று நின்றான்.

அப்பொழுது ஐராவதம் முருகேசனை முடுகிச்செல்ல, அவன் வில்லுங் கணையும் ஒல்லையின் மனத்தால் நல்கி, நாணொலி செய்து வில்லை வணக்கிக் கோலொன்று தொடுத்து அவன் நெற்றியிற் செல்ல வய்ப்பப் புலம்பி வீழ்ந்து உயிர்துறந்தது வேழம்.

வேழம் இறந்திடக்கண்ட விண்ணவர்கோன், வெகுண்டு தன்சிலையை வாங்குமுன், அண்ணல் எய்த கோலொன்று அவன் மொய்ம்பிற்பட்டுருவிட வருந்திப் பொருவன்மை சிந்திக் கைச்சிலையைப் போகட்டு, வேலை யெடுத்துக் குகன்மீது விரைந்து விட்டான்.

அது, நொய்ய சிறு புற்படுந் தன்மையிற்பட்டு வீழக், கந்தன் சிலையை வளைத்துப் பூட்டி ஒரு கணைவிடுத்து அவன்றன் அம் பொன்முடி தள்ளி, மற்றொரு கணையால் கொடியினைத் துணித்துப்

பின்னொரு கணையால் மெய்புறை (கவசங்)களைத் துகள் கண்டு, பாழியந் தடமார்பிடை எழ்கணை தூண்டிட அயர்ந்து வீழ்ந்தனன் மகவான்.

அயிராணி கேள்வன் மயக்கமுறலுமே, விளைவுதோராத விண்ணவர்கள் குகனை வளைந்து பொருமெல்லையில், கைச்சிலை குனித்து நாற்கணை தூண்டிக் கடற்கிறைவனை வீட்டி, ஐவாளி தொடுத்து எமனைற்ற லடக்கி, சாம்பு விடுத்துக் கதிர்தன்னையும், ஓரம்பதனால் மதியத்தையும், எழுமூன்றாற் கனலோனையும், இரண்டு கூரம்பதனால் மருத்தனையும் வீட்டிப் பொருது வீழ்ந்தார் ஒழிய, நில்லாதுடைந்தார் நீங்க நேரில் வில்லாளியாகிய விசாகன், யாவரையும் அட்டுலவும் ஈசனென்னப் பொருகளத்தில் தனியே உலாவி நின்றான்.

இந்நிகழ்ச்சியை நாரதன் கூறக் கேட்ட வானவர்குரவன் வியாழன் என்போன் 'இமையவர் வாழ்வு இற்றதேகொல்' எனத் துயருற்றெழுந்து, அண்டர்க்கிறைவனும் எண்டிசை புரப்போரும் இறந்துபட்ட களத்தினைக் குறுகி, எழுதற்கரிய எழில் தாங்கிக் குழவிதன் உருக்கொண்ட கோவினை நோக்கித் தொழுது நின்று துதித்து, 'கோடலும் குரவும் சூடிய குமர! நின் தொழும்பு செய்திட நின்னை வேடுறும் இந்திரன் நீ இத்தன்மையின் ஆடல் புரிவதை அறிந்திலன். மறை முதல்வனும் அம்மையும் அன்னவர் அருள்பெற்ற சிலருமல்லது உனது ஆடலை அறிந்திடவல்லார் யார்! வினைத்தொடக்குண்ட சிற்றுணர்வுடைய யாமெல்லாம் உனதாடலை முற்றுணர வல்லேமோ? ஆதலால், வானவர்க்கரசன் அறிவின்மையின் உனதாடலைத் தீதெனவுன்னிச் செருவிழைத்தனன். நீயும் தக்கதோர் தண்டமே புரிந்தனை. மற்றைய தேவரும் அறிவின்மையால் மலைந்து மாய்ந்தனர். பெற்றவர்தாமே குற்றஞ்செய்த தம்மக்களைக் கொல்வாரெனின், அவர்க்கருள் செய்வார் வேறு யார்? அருட்பெருங்கடலே! இவ்வானவர் நின்னால் அளிக்கத்தக்கவர். நின்னடிக்கண் மறத்தலில்லாத அன்பினர். அறிவில்லாத இவர் பிழையைப் பொறுத்தருள். பெரும!

நின்னடித் தொண்டாகிய இவர் ஆற்றிய பிழையினை மனம் கொள்ளேல். அழிந்துகிடக்கின்ற இன்னவர் அறிவு பெற்றெழும் வகை அருளுக' என்று இறைஞ்சிக் கூறினன்.

4. வீந்தெழும் அமரர்க்கு வியனுருக்காட்டல்.

பொன்னவன் புகலக்கேட்டு முன்னவன் முறுவல் செய்து, வானவர் எவரும் எழும்வகை அருள்செய, எழுந்தயாவரும் உள்ளமதனில் மெய்யுணர்வு தோன்றுதலும், முன்னர் அறியாமற் செய்த பிழைக்குப் பலவாறு வருந்தி முருகேசன் அருளோடு விளையாடுவது கண்டு அவன் அடிகளில் முடிபட வணங்கி,

"கந்தநம ; வைந்துமுகர் தந்த முருகேசநம ; கங்கையுமைதன்
மைந்தநம : பன்னிருபுயத்தநம ; நீபமலர் மாலைபுனையுந்
தந்தைநம ; வாறுமுகவாநம ; சோதிநம ; தற்பரமதா
மெந்தைநம ; வென்றுமிளையோய்நம ; குமாரநமவென்று
தொழுதார்."

தொழுதவர்கள் தலையன்புடன் எழுந்து புகழ்ந்து மனத்தி லச்சமுற்று மெய் நடுநடுங்கக் கண்ட குமரேசன், நீவிர் 'வருந்தலிர் நீவிர் வருந்தலிர்' எனக் கையமைத்து அருள் செய்திடலும், அவர்கள் பெருந்துயரும் அச்சமும் அகன்று, 'அமுதத்தினோடு நஞ்சினைக் கலந்துண்பவரை அந் நஞ்சு மல்லாமல் அமுதமோ உயிர் தொலைக்கும்? அதுபோல, இழந்த திருவினை நின்னருளால் எய்திட இருந்த யாங்கள் நின்னோடு அமர் இயற்றியதனால், அன்ன தவறே எம் உயிரை நீக்கியது. நீ எம்மை முடித்தியல்லை. நின்னைப் பகைமை கொண்டு பொருதேம்: அளப்பில் தீவினைகள் எம்மை வந்துற்றன. நீ எம்மிடை வைத்த தண்ணளியால் தண்டமியற்றி அவற்றைத் தொலைவு செய்தனை. ஆதலால், அடிகள் எமக்குச் செய்த அருளுக்கு எம்மால் ஆற்றுவதுதான் எதுளது? எம்மை அடியவராக ஈவதற் கெண்ணின், என்று நீ ஆன்று யாம் நினக்கடிமையாம். நினக்குப் புதிதாக அளிப்பது என்? அன்னதெனினும் அறிவில்லாத ஏழையேம் செய்த பிழையனைத்தும் உள்ளத்

நன்னலே, பொறுத்தி' என்றிரப்ப, முருகவேள் அவற்றை யுணர்ந்து 'நம்மை நீர் ஒரு சேயென முன்னம் நினைந்து பொருதீர். நமது வொய்ம்பும் உயர்வும் இன்றும் நீவிர் உணரும்படி தெரித்தும்' என்றருளி,

"எண்டிசையு முருகன் பிரமு திருக்குலகு மெண்கிரியு மேழு
கடலுந்
தெண்டிரையு மேனிவரை யும்பிறவும் வேறுதிரி பாகியுளசீ
ரண்டநிரை யானவு மனைத்துயிரு மெய்ப்பொருளு மாகி யயனும்
விண்டுமா லுஞ்செறிய வோருருவு கொண்டனன் விறற்கு
மரனே."

என்றவாறு பெருருக் கொண்டனன்.

குமரேசன் கொண்ட பெரும் பேருருவத்தை அமரர்க் கிறைவனும் ஏனையோரும், இது புதுமை! இது மிகப்புதுமை!! எனப் பெரிதும் வியந்து தொழுது, வான்மிசை நோக்கி, வடிவும் வனப்பும் முழுவதும் உணராராய், முழந்தா ளளவாக அரிதிற் கண்டு புகழ்ந்து, 'முதல்வ! எம்முன்னர் நீ கொண்ட பெருங் கோலந் தன்னை அடியேம் காணக் காட்டல் வேண்டும்' என விண்ணப்பஞ் செய்ய, அதனைக் கேட்ட எம் ஐயன், அவர்கட்கு ஒளிமிக்க கண்களை அருளி, அளவில் கோடி இளஞாயிறு போல ஒளிவிசி நின்ற தனது வடிவினை முற்றுங்காட்ட, இந்திரன் முதலாய இமையவரெல்லாம், அடிமுதல் முடியின்காறும் அறுமுகன் உருவ முழுவதையும் அவனருளால் நோக்கி, அளவிலா அண்டங்களும் முடிவறு முயிர்களும் மூவரும் தேவர் யாவரும் அதில் இருப்பக்கண்டு வணங்கிப் பராவி, எம்பெருமான்! அம் புவி முதலாம் அண்டமும், அங்கங்குள்ள உம்பரும், உயிரும் உயிரிலாப் பொருளும் மாலும் அயனும், சிவனொடு செறிதல் கண்டேம். ஆதலால், அம்மம்ம நின் திருமேனியே எல்லாம் இருத்தற்கிடம்!

எல்லாம் நீயேயாகி இருக்குந் தன்மையை இன்றளவும் கண்டிலேம் நீ உணர்த்த உணர்ந்தேம். நின் தோற்றத்தினை யாரோ தெரிந்திட வல்லேம்.

" அறிகில மிந்நாள் காறு மகிலமு நீயே யாந்
புறமுறு தன்மை நீவந் துணர்த்தலி னுணர்ந்தா மன்றே
பிறவொரு பொருளுங் காணேம் பெருமநின் வடிவ மன்றிச்
சிறியம்யா முனது தோற்றந் தெரிந்திட வல்ல மோதான்."

'எந்தாய்! நின் உருவம் எல்லையில்லாத ஒளிபெற்றுள்ளது. அதனைக் கண்ட எமது கண்கள் ஒளி யிழந்தன. அன்றியும் நின் பேருரு நோக்கி அஞ்சுகின்றேம். அடியேம் உய்ந்திட நினது தொல்லுருக் கொண்டருளல் வேண்டும்' என்று வேண்ட, எம்பிரானும், அண்டமூடுருவிய தன்னுரு நீத்து அறுமுகத் தொருவனாகித் தோன்ற, அமரர்கோன் தொழுதுவணங்கி, 'அண்ணலே! உலகும் உயிரும் பிறவும் நின்னால் முறைபிறழ்ந்தன; அவற்றை முன்போல நிறுவியருளாய்' என, அறுமுகன் நகைத் தருளி, 'இவ்வண்டத்தில் எம்மால் வேறுற்றன வெல்லாம் முன் னிருந்த வண்ணமாகுக' என்று மொழிந்த அளவில், அவைகள் யாவும் முன்னுறு பெற்றியின் மேவிட, எவரும் நோக்கி இறும்பூ தெய்தினர்.

அதன்பின்னர், கந்தவேள் மேருவரையை நீங்கிக் கயிலைக் கருகிலுள்ளதொரு குன்றினைச் சார்ந்திட, அதனை யறிந்த வான வர்கோன் ஏனையரோடும் போந்து, அமரர் கம்மியனைக் கொண்டு ஆலயம் ஒன்று அங்ஙன் அமைவித்து, அதன் நாப்பண் அரியணைக் கண் அறுமுகக்கடவுளை எழுந்தருளச்செய்து, 'ஞானநாயக! நாங்கள் உனக்குத் தானை; நீ எங்கட்குத் தலைவன்' என்றுரைத்து மஞ்சனமாட்டிக் குமாரதந்திர விதிப்படி பூசனைபுரிந்து போற்ற, அன்னவர் பூசனைக் குவந்த அருள்வள்ளல், சிறுவுருக்கரந்து கயிலையை யடைந்து, வீரரும் பாரிடத்தலைவரும் சூழ வீற்றிருந் தருளினன்.

௫. தகர்ப்பரி மாவைத் தான்மேற் கோடல்.

வெள்ளி வெற்பில் வேற்காத்தண்ணல் வீற்றிருக்கையில், மறையோரும் முனிவாரும் சூழ்தர நாரதன் நிலவுலகில் ஓர் வேள் வியை நடாத்தினன். அப்பொழுது, 'மகத்தன்னில் நம் இனத்

தினை நாளும் அடுகின்றார்: இன்று இவரை யான் அடுவன்' என்று மனமிசைந்த தீக்கடவுளின் ஊர்தியானது, ஊழிக்காற்றும் ஊழித் தீயும் இடியேறும் ஒருருவுகொண்டென்ன விரைவும் செந்திறமும் ஆர்ப்பும் உடையதாய், மணித்தொகை களத்திடை அசைய, கிங்கிணியும் சிலம்பும் அடிமிசை ஆர்க்க மேலெழுதல் போல வேள்வித் தீயினின்றும் ஒரு வெள்ளாடு மேலெழுந்தது. அதைக் கண்டு வேள்விச்சாலையில் இருந்தவர் யாரும் அச்சமோடு இரியலுற்றனர்.

அடியவரை, வானினும் மண்ணினும் பின்தொடர்ந்து தாக்கித் தரையும் வரையும் புழுதியிட ஓடித் திரிந்தது. எட்டுத்திசைக் கரியும் இரிந்தேங்கக் கிட்டித் தாக்கிடும். மதியின் ஊர்தியும் கதிரவன் தேரும் புரிந்திட முட்டும்.

இவ்வண்ணம் உயிர்க்கிறுதி செய்து சினத்துடன் அவ் யாடு உலவித்திரிகையில், முனிவரும் நாரதனும் வானவரும் முடுகி யோடிக் கயிலை புக்கனர். அப்பொழுது இலக்கத்தொன்பது வீரரொடு மேனி ஆறுமுக வண்ணல் ஆடல் செய்திருக்கக் கண்டு, 'இனி ஈசனிடம் நன்றாகிலம்; குமரேசன் நம் துயர் நீக்க அன்போடு எதிர்வந்தான். இவன் இளைஞனைக் காணப்படினும் சிறுவனல்லன். அண்டர் பலரோடு வாசவனை வென்று உயிரை மாற்றி எழுவித்தான். எம் குறையை முடித்திடல் இவற்கு எளிது. ஆதலால் உற்றதை இவனொடு புகன்றிடுவோம்' என்று மனந்துணிந்து, கந்தன் திருமுன்னரேகி வணக்கம் புரிந்திட, 'நீவிர் மிகவும் நொந்தனிர், புகுந்தது யாது நவலுமின்' என்றனன் வள்ளல்.

'என்றும் இளையோய்! கேட்பாய்: ஒரு வேள்வியை வேட்டேம். அத்தீயிடை ஒரு தகர் எழுந்து எங்கள் குழுவினை அட வெண்ணித் தாக்கது. அதன் கிளர்ச்சியை யாமெல்லாம் அறிந்து வேள்விச்சாலையை விட்டோடி இவ்விடத் துற்றோம். அது சினத்துடன் துரந்து சிற்சிலரைத் தாக்கலுற்றது. அதனால், விண்ணினும் மண்ணினும் எண்ணிலாத உயிர்கள் மாய்ந்தன.

எவரும் அஞ்சி ஓடுவதற் கேதுவாகிய இதனை நஞ்சமென்றே கூறலாம். அது நீலநிறமுடையதன்றே யெனின், இது நீலநஞ்ச மன்று; சிவந்த விடமே ஆடாக வடிவுகொண்டு, யாவரும் ஓல மிடுமாறு எங்கும் உலவுற்றது. இதனை இன்னும் ஒரு நொடிப் பொழுதில் அடக்காதொழியின் உயிரெல்லாம் முடிவெய்தும். சிற்றத்துடன் உயிர்கட்கு இறுதிசெய்து உலவுகின்ற இவ்யாட்டி னது ஆற்றலை அடக்கி எமது அச்ச மகற்றி யாங்கள் தொடங்கிய வேள்வியையும் முடித்தருளல் வேண்டும்' எனப்போற்றி நின்ற போது, குமரவேள் அவர்களைப் பரிவுடன் நோக்கி, 'அஞ்சுதல் ஒழிமின்' என அங்கையமைத்துத் தன் பரிசனத்துள் வீரவாகு தேவரை அழைத்து, 'வேள்வியில் வந்து உயிர்களை வருத்தித்திரி யும் ஆடதனை விரைவிற் பற்றிக் கொணர்தி' என் றருளினன்.

அருளிய அப்பொழுதே வீரவாகு தேவர், கந்தன் மலர்ப் பதத்தினைச் சிந்தனைசெய்து வணங்கிக், கயிலையினீங்கி நிலத்தினும் நிலவரையினும் நாடிக் கண்டிலனாகி வானுலகிற் போம்போது, நான்முகன் நகர்க்கருகில் தகர் செல்லும் தன்மை கண்டு, கோடு களைப்பற்றி ஈர்த்துக் கொடுபோய்க் கயிலையை அணுகி எந்தைமுன் உய்த்து நிற்ப, முருகன், 'மாதவத்திர்! யாடு எம்பால் மேவிற்று. நீவிர் இனி வருந்தா தேகித் தொடங்கிய வேள்வியை முடித்திர்' என மொழிந்தருளினன்.

குமாரப்புத்தேள் இவ்வாறு உரைப்பக் கேட்ட நாரதனை உள் ளிட்ட முனிவரர், 'இடுக்கணகற்றிய எந்தாய்! இவ் யாடு வேள் வியிற் றோன்றியதாகையால் மாசற்றதாகும். அடியேங்கள் உய்யுமாறு இதனை ஊர்தியாகக்கொண்டு ஊர்ந்திடல் வேண்டும்' எனக் குறையிரக்க, அறுமுகத்தொருவனும் நன்று என்றருளி அன்று தொட்டு அவ் யாட்டினை ஊர்தியாகக் கொண்டருளினன்.

திருத்தக்கதேவர்.

திருவாளர், K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், தஞ்சை.

காப்பியச்சுவை கனிந்தொழுகும் ஐம்பெருங் காப்பியங்களுட் சிறப்பால் முதன்மைவாய்ந்தது திருத்தக்கதேவரியற்றிய சீவக சிந்தாமணியாகும். இந்நூலுக்கு முதனூல் யாதெனை அறியக் கூடவில்லை யெனினும் இக்காதையினைக் கொண்ட வடமொழி நூற்கள் நான்குள: அவை சத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, சீவந்த நாடகம், சீவந்தசம்பு என்பன. இந்நூற்களுக்கும் தேவரியற்றிய சீவகசிந்தாமணிக்கும் பலவேறுபாடுகளுண்டென்பது பல்லோரும் அறிந்ததே.

திருத்தக்கதேவரது காலத்தினை அறியவேண்டுவான் முயன்றோர்பலர், சீவகசரிதம் வடமொழியில் மகாபுராணத்திலுள்ளது, அது ஜினசேனாசாரியர் இயற்றிய பூருவபாகமும் குணபத்திராசாரியார் இயற்றிய உத்தரபாகமும் என இருபகுதிகளையுடைத்து; உத்தரபாகம் கி. பி. 898-ல் இராட்டிரகூட அகாலவருடன் காலத்தியற்றப்பெற்றது; ஆகலால் திருத்தக்கதேவர் மகாபுராணக் கதையை அடியாகக்கொண்டு தமிழ்மொழியில் கி. பி. 899 இன் பின்னர்ச் சீவகசிந்தாமணியை இயற்றினரென்பர். இவர் இவ் வரலாற்றினை வடமொழி நூற்களினின்று கொண்டனரெனில் அவ்வடமொழி நூற்கு எம்மொழியின் வரலாறு முதலாமென அறியோம். வடமொழியிற் சீவகன் கதையினைக் குறித்து நான்கு நூற்களிருக்க, இவைகளின்றும் தேவர் தம் நூற்கு ஏற்ற குறிப்பினை எடுத்தாளாமல் மகாபுராணத்தினின்று குறிப்புக்கள் எடுத்துள்ளா ரெனற்கு உள்ள பற்றுக்கோடாவன யாவை? ஒரோவழி இவரது

காலத்தை ஆராய முன்வந்தார், மகாபுராணத்தின் ஓர் பாகம் எழுதிய குணபத்திராசாரியர் காலம் எளிதில் அறியப்பட்டதால், ஏனைய வடமொழி நூற்களை ஒர்புறம் ஒதுக்கித் திருத்தக்கதேவர் காலம் கி. பி. 899-இன் பின்னரிருத்தல் வேண்டுமென்றும், இவரது முதனூல் மகாபுராணம் என்றும் ஓர் ஒப்பற்ற முடிவிற்கு வந்தனரோ? இவ்வாறு யாம் கூறுவது தவறுடைத்தெனக் கூறின், ஏனைய வடமொழி நூற்களது காலந்தான் யாது? இவ்வரலாற்றிற்கு யாது முதனூலென்று ஐயந்திரிபற அறியக்கூடாதவரை, தேவரியற்றிய சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூற்களைப்போன்று முதனூலெனக் கருதப்படல் வேண்டும்.

சீவகசிந்தாமணி ஓர் சமண சமயநூலென்பதும், சமண சமயம் சைவ சமயத்துடன் இடையறாது போர்புரிந்து சைவ குரவர்கள் காலத்தே புறங்காட்டி ஓடிற்றென்பதும் யாவருமறிந்தனவே. சமண சமயம் தமிழகத்தே நின்றுலவிய காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டுமுதல் எழாம் நூற்றாண்டுவரையிலுமென்பது சரித்திர நூலாராய்ச்சிவல்லார் கூறிப்போந்தமுடிபு. சமண்மதந்தழுவிய வடுகக்கருநாடர் காலத்திற்குச் சிறிது முன்னர்ச் சமணமதம் மிகச்சிறிய நிலைமையினை அடைந்திருந்தது. அக்காலத்திற்குள் சீவகசிந்தாமணி நூல் முடிவுபெற்றியற்றப்பட்டதெனக் கூறின் ஒக்கும். சமண்மதந்தழுவிய வடுகக் கருநாடரது படைவலியினைத் தொலைத்துச் சைவ சமயத்தைத் தமிழகத்தே நிலைநாட்டினவர் மூர்த்திநாயனாரெனின், இந்நாயனார் காலத்திற்குப் [கி. பி. ஆறும் நூற்றாண்டு] பின்னர்ச் சீவகசிந்தாமணி நூல் இயற்றப்பெற்றதென்ற கொள்கை போதிய வலியினையுடையதன்று. இதனுடனே சீவக சரிதத்தைக் கூறும் பல வடமொழிநூல்களுட் காலமெளிதில் அறியக்கூடிய ஓர் நூலினை மட்டும் எடுத்துக்கொண்டு, சீவக சிந்தாமணி சரிதம் அவ்வடமொழி நூலினின்றும் தொகுத்து எழுதப்பட்டுளதென்றும், மற்றும் சீவகசிந்தாமணி ஆசிரியரது காலம் கி. பி. 900-க்குப் பின்னதெனவும் கூறும் கொள்கை வலியிலாத சிறுமையுடையதெனப் புலனாதல் காண்க.

திருத்தக்கதேவரியற்றிய சிவகசிந்தாமணி ஏனைய தமிழ்க் காப்பியங்களைப் போன்ற ஓர் முதனூல். உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், தேவருளிச்செய்த செய்யுட்கள் இரண்டாயிரத் தெழுநூறென்றே கொள்க என்றதனால், மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து செய்யுட்களையுடைய சிவகசிந்தாமணியில் நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்கள் பின்னர் யாவராலோ இயற்றப்பெற்றுளவென்பது ஈண்டுக் குறிக்கத்தக்கது. இதனைக் குறித்தன்றோ நச்சினார்க்கினியர் 'பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலியனவாம்' என்றனர். ஈங்கு 'செய்த' என்பதற்கு 'முற்றச்செய்த' என்று பொருள்கோடல் சாலவும் பொருந்தும். இந் நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்களைச் சிவகக் காதையுடன் சேர்த்துத் தொகுப்பித்தார் ஒருவாறு புறநானூறு தொகுக்கப்பட்ட காலத்திற்குப் பிந்தியவரெனத் துணிவு கொள்ளலாம். இவரது 2907-ஆம் செய்யுள்

வாய்ப்படுங் கேடுமின்றாம் வரிசையி னறிந்து நாளுங்
காய்த்த நெற்கவளந் தீற்றிற் களிறுதான் கழனிமேயின்
வாய்ப்படலின்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளி
னீத்தநீர் ஞாலமெல்லா நிதிநின்று சுரக்குமன்றே'

இதனைப் பின்வரும் அறிவுடை நம்பியுழைச்சென்ற பிசிராந்தையார் பாடிய புறப்பாட்டினோடு ஒத்துநோக்குக.

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானைபுக்க புலம் போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே. [புறம்.,184.]

மற்றும் இவரது 2908-ம் செய்யுள்

'நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற்
புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழ லிலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னு ளுமவே னம்பி யென்றான்.' என்பது

தனை மோசிகீரனார் பாடிய புறப்பாட்டுடன் ஒத்து நோக்குக. அது-

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்.
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. [புறம் 186]

இவர் தேவரைப்போன்று அரசியலைப்பற்றி யாவும் முற்றுமுணர்ந்திலராதலின், கடைச் சங்க நூற்கள் சிறப்பித்துக் கூறும் அரசியல் முறைமையினைக் கற்று நன்குணர்ந்து இப்பாக்களைப் பின்னர் எழுதியிருக்கின்றனரெனக் கூறின் தவறாகாது. 'நாடக அரங்கு புகுந்து பலகோலம் பூண்டு ஆடுவோன் அக்கோலங்களாற் றன்னியல்பு சிறிதும் மாறாது தான் அவற்றின் வேறாயினாற்போல, இறைவனும் அன்பின் மிக்க அடியார்க்கு அருள் செய்தற் பொருட்டு அவரவர் நினைத்த உருவுகள் பலவும் எடுப்பானாயினும் அவற்றாற் றன்னியல்பு சிறிதும் பிறழப் பெறுவான் அல்ல' னென்ற எம் மதமும் சம்மதமெனும் கொள்கையுடன் தமிழகத்தே தனிச் செங்கோல் செலுத்தி மன்பதையினை இன்புற ஆண்ட சரிதகாலத்திற்கு முன்னருள்ள மன்னர் மன்னர்கள் [கரிகாற் சோழன் முதலாயினோர்] காலத்தில் திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியினை அரைகுறையாக எழுதியிருத்தல் வேண்டும். இந்த சமண சமய நூலாயிருந்ததுபற்றி நூலியற்றப்பட்ட காலத்தில் இதனை யாவரும் போற்றவில்லை. ஏனெனில் அம்மன்னர்கள் காலத்தே சைவ சமயம் தழைத் தோங்கியது. புறநானூறு தொகுக்கப்பட்ட வெகு காலத்திற்குப் பின்னரும் தமிழகத்தே சமண் மதம் நிலவிய கி. பி. ஆறும் நூற்றாண்டிற்குச் சிறிது முன்னரும் சீவக சிந்தாமணி ஓர் முடிவு பெற்ற முதனூலாக்கருதப் பட்டுள்ளது.

திருத்தக்கதேவர் சமண சமயத்தில் இளமையிற் றுறந்தோரா ரென்று அதற்கிணக்கமாக ஓர் பொய்ம்மையுடைய கதையினையும், பின் தருக்கமும் செய்யத் துணிவார் பலர். என்னை? திருத்தக்க தேவர் தம் நூலைப் பாண்டிய மன்னனது அவைக்களத்திலே சங்கப் புலவர்களது முன்னிலையிற் படித்துக் காட்ட, சில புலவர்கள், தேவர் காமவின்பச் சுவையினை நன்கு நுகர்ந்தவராதல் வேண்டுமெனவும், இவர் இளமையிற் றுறந்தோரல்ல ரெனவும் கூறியபொழுது தேவர் யாவரும் காணத் தன் இளமையிற் றுறந்த தனை உறுதிப்படுத்தவும், தன் தூயவொழுக்கத்தையும் வலியுறுத்தவும் காய்ச்சின இரும்பினைத் தூக்கித் தழுவி, தான் இளமையிற் றுறந்த நிலைமையினை நிலைநிறுத்திக் கொண்டாரென்பதே. இக்கதைக்கு ஆதாரம் யாதோ அறிகிலோம்.

திருத்தக்கதேவர் முடியுடைப் பெருவேந்தர்களும் அழுக் காறுற விரும்புறு கொள்ளும் செல்வத்தினைப் பெற்ற தக்க நாடுடைய வள்ளல். இந்நாட்டினைத் தேவர் தம் கதையிற் சிறப் பித்துக் கூறியிருப்பதைப் பின்வரும் கவிகளுட் காண்க.

'படம்புனைந் தெழுதிய வடிவிற் பங்கயத்
தடம்பல தழீஇயது தக்க நாடது
வடங்கெழு வருமுலை மகளிர் மாமைபோன்
றிடம்பெரி தினிதத னெல்லை யெய்தினன். [1439.]

தேங்கயத் தணிமலர் தெகிழ்ந்த நாற்றமும்
பூங்குழன் மடந்தையர் புனைந்த சாந்தமு
மாங்கெலா மகிற்புகை யளாயவாசமுந்
தாங்கலாற் றக்கநா டாய தென்பவே. [1440.]

'தேவர்' என்ற அடைமொழி துறவிகளுக்கேயுரியது. அஃது அரசத்துரியதன்று என்பவரது சங்கையை 1448-ஆம் பாவே நீக்கும். அஃது,

கேமமா புரமெனுங் கேடி லல்லிசைப்
பூமிமேற் றிலகம்வைத் தனைய பொன்னகர்த்
தாம நீ ணெடுங்குடைத் தரணி காவல
னமைவே னரபதி தேவ னென்பவே.

பண்டைய காலத்துத் தமிழ் மன்னர்கள் சிறிதுகாலம் அரசாண்டு பின்னர்த் துறவியாக மாறுவதும், வடக்கிருப்பதும் பண்டைய வழக்கு. அவ்வாறே தேவர் மறுமையினைக் கருதிச் சிறிதுகாலம் வரை தக்க நாட்டில் செங்கோலோச்சிப் பின்னர்ச் சமணமதக் கொள்கையினை யுடையவராய்த் துறவு பூண்டனர்.

'தாங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
வோங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந் தலைசாய்க்கவரு தீச்சொ
னீங்கன்மட வார்கள் கடன்' [498.]

எனக்கூறிய தேவர் சிறுபிராயத்தே தங்குலத்தைத் தாங்காது களிக்கச் செய்த துறவியாவரோ!

இளமையிற்றுறந்தோர்க்கு அரசாட்சியின் மாட்சியும் அரசசூழ்ச்சி முதலானவையும் முற்றும் அறிய வழியு மில்லை. ஏதுக்களுமில்லை. தேவர் தக்கநாட்டையாண்ட அரசனாதலின் அரசியலின் தன்மையினை நன்கு தெரிந்து அரசியலைப்பற்றிப் பின் வருமாறு கூறுவாராயினர்.

நீதி யாலறுத் தந்திதி யிட்டுத
லாதியாய வரும் பகை நாட்டுதன்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே [1920.]

ஒற்றர் தங்களை யொற்றரி னாய்தலுங்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலுஞ்
சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலுஞ் சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே. [1921.]

தேவர் 'நோற்றிட்டடங்கலாண்மைக் கழகு' எனத் 'தாய மெல்லாம் பெறுதகு புதல்வர்க்கீந்து,' அருகதேவனை

'வேந்துள வுலகஞ்செய்ததில் லீரவையரு
மிருள்கி லங்கநின் றெரியு நின்கா—
ணருளுநரின்—'

எனவேண்டித் 'துறந்துபோய்க் கடவுளானார்.'

சச்சந்தன் காமவின்பத்தால் அரசர்க்குரிய எல்லாச் சிறப்புக்களையும் கட்டியங்காரனுக்குக் கொடுத்துவிட, அம்மன்னனுக்கு அறிவு கொளுத்தவந்த அமைச்சர்களாம் நிமித்திகன், உருத்திரதத்தன் யாவரென்போமாயின், அவர்கள் நம்தேவரே. அச்சணந்தி ஆசிரியர் சீவகனுக்குத் தம்முடைய பிறப்பினையும் வரலாற்றினையும் கூறுவதேபோன்று நமக்கும் தம்முடைய வரலாற்றினைத் தேவரே கூறுகின்றனர். அச்சணந்தியும் நம்தேவரே. ஒரோவழி இவரும் யானைத்தீயினால் பிடிக்கப்பெற்று ஓர் சமணத் துறவியின் உதவியால் அந்நோய் நீக்கப்பெற்றுப் பின்னர் அரசாளும் தகைமையினையும் விட்டுச் சமண மதத்தினைத் தழுவியிருக்கலாம்.

துறவறமடைந்தாரையும் இல்லறத்தே புகுத்திவிடும் சீரதாகவுடைய காமம், காமமாலை, காமநுகர்ச்சி, காமவின்பம், காமன் சேனை முதலியவைகளைப்பற்றித் தேவர் கூறுவதை நாம் அறிவோமாயின் தேவர் இளமையிற்றுறந்தவரல்லரெனத் துணிவுபெறக் கூறலாம். காமவின்பமென்பது யாதென அறியாத ஒருவருக்கு அவ்வின்பத்தின் பெருமையும், அதனால் வரும் தீதும் எடுத்துரைப்பது அவ்வின்ப நெறியில் ஈடுபடாதவர்களுக்கியலாது.

இதுகாறுங் கூறிய வாற்றால் தேவர் தக்க நாடுடையவள்ளலென்பதும், சீவக சிந்தாமணி முற்றுப்பெற்று முதனூலாகக் கருதியிருந்தகாலம் கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னரென்பதும் அறியப்பெற்றாம்.

உ

சிலப்பதிகார நாடகப்பகுதி.

(முற்றொடர்ச்சி 2-ம் துணர் 320)

களம். ரு.

இடம்.—மதுரைமாநகரின் புறஞ்சேரி. காலம்.—வைகறை.
உறுப்பினர்.—கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி.

[கோவலன் துயில, கண்ணகி பக்கல் நின்று அவனைத் தொழுதல்.]

கண்ணகி—

'தெய்வங்க டாமொரு கோடியென் பாவை செய்வசெய்க
உய்வதென் றொலொன் றுங் காணுத வென்னை யொருபொருளாச்
செய்வதென் றேயொரு' காப்பினைப் பூண்டு நிகழுமிந்தத்
தெய்வமொன் றேயன்றி யானறி யேன்பிற தெய்வங்களே!

கோவலன்—(துயிலுணர்வான்) கண்ணகி! வைகறைக் காலங் கழிகின்றது போலும். ஆம், இப்புறஞ்சேரியைச் சார்ந்த பொழில்கள், நீர் நிலைகள், கழனிகளெங்கும் பறவைகள் துயிலெழுந்து ஆரவாரிக்கின்றன. கண்மணி! அகநகரின் முரசொலிகள், சங்கொலிகள், கொம்பொலிகள் முதலிய முழக்கங்களைப்பார்! ஓ! இது இறைவன் கோயிலின் திருமுரசம் போலும்! ஓ! இது திருமால் கோயிலின் திருத்தகு சங்கொலி போலும்! ஓ! இது முருகன் கோயிலில் முழங்கும் கொம்பினிசைபோலும்! இது, அறவோரது பள்ளியில் அடிக்கும் முரசு! காவலன் அரமனைக் காலை முரசம் இது!

கண்—(அடி வணங்கி) காதல! அடியாள் இன்று செய்யவேண் டுநின் பணிகள் யாவையோ?

கோவ—கண்ணகி! உன்மீது, நாம், வந்தவிடத்தில் காலந்தாழ்க் காது, கருமமே கண்ணாகி நின்று, வேண்டுவன உடன் செய்ய வேண்டுமென்னும் உணர்ச்சியை எனக்குத் தருவது. காதலி! யான் கவுந்தியடிகளைக் கண்டு வணங்கி, விடை கொண்டு, அகநகர் சென்று வருவேன். நீ அடிகளுடன் இங்கிருப்பாயாக. இறைவன் திருவடி நினைந்திருக்கும் அடி கள், அந்நினைதலிலிருந்து எழுங்காலமாயிற்று.

கண்—ஆ! இதோ, அடிகளே அருள்கூர்ந்து இங்கு வந்துவிட் டார்கள். (இருவரும் கவுந்தியடிகளை வணங்கல், மூவரும் உட்கார்தல்.)

கவுந்தி—அப்பா! கோவல! என்ன மிக்க முகவாட்டமுற்றிருக் கின்றனை! வழிநடையா லெய்திய வருத்தம் போலும் ஐயகோ! மெல்லியலாய இக்கண்ணகியின் மெய்வருத்தம் எத்தகையதோ! நினையுந்தோறும் நெஞ்சம் நெகிழ்கின்றது. கோவல! ஆ! என்ன கண்கலக்கம்! கடந்தன நினைந்து வருந்தலிற் பயனென்னை? ஐயனே! வருந்தாதே! வருந் தாதே!!

கோவ—அடிகளே! முற்பிறப்பில் தவஞ்செய்யாத யான், ஒழுக்க நிலையினின்றும் வழுக்கி வீழ்ந்தேன். ஒழுக்கமுடைய விழுக்குடியிற் பிறந்தும், அக்குடிப்பிறப்பிற்கு ஒவ்வாதபடி, நாணுடைமகளாம் இக்கண்ணகியொடு நீள்வழி வந்தேன். மெல்லிய மேனியையுடைய இக்கண்ணகிக்கு அருவழி நடந் தடைந்த மெய்வருத்த மொன்றோ! வம்பப் பரத்தையர் பழிப்புரையால் மனநடுக்கமுமுற்றுத் துயருற்றனள். அடி களே! யாங்கள் கனவினும் நினைந்தறியாத இந்நாடுவந்து, இத்துன்பங்களெல்லாம் அடைய முன்னைப்பிறப்பில் என் னென்ன தீவினைகள் செய்தனேமோ!

கவு—கோவல! வருந்தாதே! என் செய்வோம்! முற்பிறப்பில் நீ மிக்க நல்வினை செய்தனாய் என்பதிற் றடையின்று. பெருந்திரு மிக்க ஒரு நற்குடியிற் பிறந்து, இப்பொற் கொடியை, கற்புக்கரசியை எய்தியதே அதற்குத் தக்க சான்றாகும். இங்ஙனம் நல்வினை செய்த நீ, பின்னர் அதனை யொழிந்து சிறிது தீவினையும் செய்தனாய்போலும். அதனாற்றான், நின் சுற்றத்தினையும் நின் தந்தையின் பெருஞ்செல்வத்தினையும் விட்டு, நின் அரிய காதலியொடும் தனித்து வந்து துயருழந்தனை! கோவல! உலகினர் செயல் இத்தகையதே யாகும். ஆ! அறங்களை யுணர்த்தும் பெரியார், எக்காலத்தும், யாவர்க்கும், எத்தகைய துன்பங்களையும் செய்யாதிர்கள்; செய்யின், அதனால் விளையும் துன்பத்தை, தீவினை தப்பாது முன்னின்று ஊட்டும் ஊட்டும் என நாப் பறை அறைந்து நின்றும், அதனை உறுதியாகக் கொள்ளாதமாந்தரோ, முற்பகல் தீவினையைச் செய்திட்டுப் பிற்பகலில் அதன் பயனை நுகருங்கால் தெய்வத்தை நொந்து வருந்தி யழிவார்!

கண்—அடிகளே! முற்பிறப்பில் அறியாது தீவினைகளைச் செய்தார் பிற்பிறப்பில் அதன் பயனை அடையாது தப்பியுய்யும் வழிகள் எவையுமிலவோ!

கவு—கண்ணே! வினைப்பயன் வினை செய்தவர், விண்ணகத் தேவராயினும் வையகம் ஆள்வோராயினும் எவரையும் எவ்வாற்றானும் விட்டொழி என்றுமில்லை! ஆனால், கற்பன கற்று நோற்பன நோற்ற பெரியோர்கள் தீவினைத் துன்பத்தை நுகருங்கால் அதற்கு வருந்தி யொழிதல் இல்லை. இது நாம் செய்ய வந்ததென்று மனந்தெளிந்து அமைதி கொள்ளுவார். அங்ஙனமேதான் நீங்களும் மனவமைதி கொள்ளல் வேண்டும்.

கோவ—அடிகளே! நீங்கள் கூறுவதுண்மையே. ஆயினும், இவ்வுலகில் எம்போலத் தீவினைப் பெருங்கடலுளாழ்ந்தார் என்றும் எவருமிலர் என்றே கூறலாம். என் செய்வேம்!

கவு—கோவல! நன்று கூறினை! பெண்ணையும் பொருளையும் வேண்டிநிற்பாருள், அவைபற்றிச் செய்யும் முயற்சிகளா லும் அவை பிரிந்து விடுதலாலும் வரும் துன்பங்களை அடை யாதார் இவ்வுலகில் யாவர்? அன்றித் தேவருலகிற்றான் யாவருளர்? பற்றற்ற பெரியோர்களிடத் தன்றி மற்றை யோரிடத்தெல்லாம் கரைகாணு இடும்பையை எய்தினோர் பண்டும் பலராவர்! தேவரிற் சிறந்த இராமன் வரலாற்றை நீவிர் அறியிரோ! உலகினைப் படைத்த நான்முகன் றந்தை யாய அவ்விராமனை தன் தந்தை யேவலால், தன்னருமை மனைவியொடும் வனத்திற்குப் போய், அக்காதலியைப் பிரிந்து, கடிய துன்பத்தை யுழந்தனனன்றோ?

கண்—ஆம், ஆம், அடிகளே! அறிவேம். கற்பின் கொழுந்தாகிய சீதையின் திருமணத்திலும், தாய் தந்தையர்கள் பிரிவிலும், இன்னுயிராய அச்சீதையின் பிரிவிலும் அத்தயரதன் மகன் எய்திய துன்பம் எல்லையற்றதே யாகும்.

கவு—என்மக்காள்! இன்னும் கேளுங்கள்! அரசரிற் சிறந்த நளன் வரலாறும் நீங்கள் அறிந்தது தானே! அவன் புட்கா ரனோடு சூதாடி, அரசிழந்து, தன் மனைவியொடு கொடிய கானகம் வந்து, பட்டதுயர் இப்பாலெல்லாம் அறிந்தது தானே! அவ்விருவர்களது காதற்சிறப்பை இவ்வுலகும் விண்ணுலகும் அறியுமன்றே! அங்ஙனமாகவும், அந்நளன், தன்னரிய காதலியை நடுக்காட்டில், அரை யாமத்தில், உறங் குங் காலத்தில், விட்டு நீங்கியது முன் செய்த தீவினைப் பயனே யன்றோ! கோவல! அவர்கள் நிலையினும் உனது நிலை பெரும் நன்மை யுடையதெனல் வேண்டும். அவ்விரு வரும் தங்கள் காதலிகளைப் பிரிந்து துன்பமுற்றனர். அற வோன் அருளால், அத்துன்பம் உனக்கில்லையன்றோ! இப் பொற்பின் செல்வி நின்பாலிருக்க, உனக்கில்லாத செல்வம் யாது?

கோவ—அடிகளே! உங்கள் அறவுரைகளை எமக்குப் பற்றுக் கோடாவன. யான் சென்று இப்பெரிய நகரின்கணுள்ள

வணிகர்க்கு என் வருகையை உணர்த்தி வருவேன். வருந் துணையும் இவட்குத் துன்பம் அகல அறிவுரைகள் கூறி இவளைப் பாதுகாத்தருளல் வேண்டும். என்னே என் அறியாமை! பண்டே இவள் நம் அடிக்காப்பினளாதலின், இன்று யான் புதிதாக வேண்டுவதென்னே! அடிகளி னருள் துணைநிற்குங்காறும் இவட்குத் துன்பமும் எய்துவ துண்டோ!

கவு—கோவல! நீ இங்ஙனமெல்லாங் கூறி வருந்தாது இக் கூடல்நகர்க்குச் சென்று உங்களை விருந்தெதிர் கொள்வா ரிடத்தையும், யான் சாவக நோன்பு நிகழ்த்தற் கேற்ற விடத்தையும் அறிந்து ஈண்டு வருவாயாக.

கோவ—அடிகளே! வணக்கம். கண்ணே! கண்ணகி! நான் போய் வருகின்றேன். (கண்ணகி வணங்கி நிற்றல். கோவ லன் ஏகல்.)

களம். கஅ.

இடம்.—மதுரைமா நகரம். காலம்.—காலை—நண்பகல். உறுப் பினர்.—கோவலன், மதுரைமா நகரத்தானொருவன், வாணிபர் சிலர்.

கோவலன்—நீங்கள் இவ்வூரினர் தாமே!

மதுரைமா நகரன்—ஆம், நீங்கள்?

கோவ—நான் வடநாடு. காவிரிப்பூம் பட்டினம். வணிகன். தொழில் முறையில் இங்கு வந்துளேன். இதற்குமுன் இங்கு யான் வந்திலேன்.

மது—நீங்கள் வேண்டும் உதவிகள் யாவும் செய்ய மனமுவந் துளேன்.

கோவ—ஐயன்மீர்! வணக்கம். எனக்கு இவ்வூரின் சிறப்புக்கள் பலவற்றையும் கேட்டறியும் அவா மிக்குளது. உங்கட்கு ஓய்விராதென்று எண்ணுகின்றேன். இருந்தால்—.

மது—இல்லை, இல்லை. உங்களைப் போன்ற வேற்று நாட்டு அன்பர் ஒருவரை என்றோ ஒருநாள் காணும்போது, அவர்களுடன் சின்னேரம் அளவளாவுதலினும் பெரும் வேலையாக யான் ஒன்றையும் கருதுவதில்லை. அன்பரே! வருக! இப்பெரிய நகரில், சிறப்பு மிக்க பல்லிடங்களையும் நாம் பார்த்து வருவோம்.

கோவ—ஐயரே! உங்கள் பெருந்தகைமை மிகப் பாராட்டத்தக்கது. இப்பேருதவியை யான் என்றும் மறவேன்.

மது—நண்பரே! மக்கள் ஒருவர் மற்றையோர்க்குச் செய்ய வேண்டுங் கடமையையே யான் செய்கின்றேன். இதுபற்றி நீங்கள் என்னை மிகுத்துரைத்தல் வேண்டாம். அன்பரே! இக்கோட்டை மதிலின் சிறப்பினைக் கேட்டறிந்திருப்பீரே!

கோவ—ஆம், ஒருவாறு கேட்டறிந்திருக்கின்றேன். பலவகையான பொறிகள் அமைக்கப் பெற்றுள்ளன என அறிவேன்.

மது—அம்மம்ம! எத்தனை வகையான பொறிகள்! தானே வளைந்து எய்யும் பொறி வில்! குரங்கு போலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் குரங்குப்பொறி! கல்லை வீசும் கவண் பொறி! நெய்யுருக்கு, செம்புருக்கு, எஃகுருக்குப் பொறிகள்! கல்லிடு கூடை! அகழ் நீந்தி மதில் பற்றுவாரைக் கோத்துவலிக்கும் தூண்டிற் பொறி! சங்கிலிப்பொறி! உச்சியைக் குத்தி மூளையைப் பறிக்கும் ஆண்டலைப்புள் எனும் பொறி! இருப்புக்கவை! கழுக்கோல்! அம்புக்கட்டு!—இன்னும் எத்தனையோ வகைகள்! அன்பரே! அகழின் ஆழமும், முதலை ஈட்டமும், பிறவும் எடுத்துரைக்க யாரால் இயலும்! ஐயன்மீர்! அதோ நிற்பார் மதில் வாயில் காக்கும் யவன வீரர்கள். அவர்கள் ஐயமுறுதவாறு என்னுடன் மிடுக்காக வந்திடுக. இதோ நாம் செல்லுந் தெருக்களில் உள்ள கீழ்நீர்ச் சுருங்கைகளைப் பாருங்கள்.

கோவ—ஓ! இவைகள் யானைகளும் போகத்தக்க அத்துணைப் பெரியவைகளாக விருக்கின்றனவே! இச்சுருங்கைகள் எங்கள் புகாரிலும் உள. ஆயினும் அவை இவ்வளவு பெரியனவல்ல. ஓ! இப்பெரிய தெருக்களின் அமைப்பை என்னென்பேன். இந்திரன் பணிப்பெட்டகத்தைத் திறந்து வைத்தா லொக்கும் மதில் வட்டம்! அப்பெட்டகத்துள்ள மணிக்கலங்களே இம்மாளிகைகள். ஓ! அதுதான் புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி, வையை யென்ற பொய்யாக் குலக்கொடி போலும்.

மது—ஆம், வையையின் துறைகளுள் 'திசை திசை தேனார்க்கும் திருமருத முன்றுறை' என்பது அதுதான். அங்கு, ஆற்றிடைக்குறையிலும், தோணி முதலியவற்றிலும் கூட்டங் கூட்டமாகச் சிறார்களும் இருவர் இருவராகக் காதலன் காதலிகளும் விளையாடி மகிழ்ந்திருத்தலைக் காண்க.

கோவ—அதன் பக்கலுள்ள சோலையொன்றில் ஆடவர் மகளிர்கள் விழாப் போலத் திரண்டு காணப் பெறுகிறார்களே! அச்சோலை யாதோ?

மது—அதுவே இந்நகர் இலவந்திகைச்சோலை. அங்குள்ளார், முல்லை, குவளை, நெய்தல் முதலிய மலர்மாலைகள், எங்கள் கொற்கைத்துறையிற்படும் பெருமுத்த வடங்கள் முதலியவற்றை யணிந்து, எங்கள் பொதியமலைச் சந்தனக்குழம்பைப் பூசி, உண்டாட்டு மகிழ்ச்சியைக் கொண்டாடியிருப்பர்.

கோவ—நண்பரே! அங்குள்ளார் அனைவரும் இங்ஙனம் நாள் முழுவதும் ஓய்வு பெற்று மகிழ்ந்திருத்தல் எங்ஙனம் இயலும்! அவரவரது இல்லறக் கடன்கள் பலவும் தடைப்படுமன்றோ!

மது—நண்பரே! இல்லை, இல்லை. அம்மகளிர் யாவரும் பொது மகளிர்கள். அதோ கூடகாற்றல் கொடி நுடங்கும் அப்

பெருந்தெரு முழுவதும் அவர்கள் வீடுகளே யுள. உங்கட்கு விருப்பமுளதேல் அப்பக்கம் போய்ப் பார்த்து வருவோம்.

கோவ—ஐயகோ! நண்பரே! வேண்டாம், வேண்டாம், நாம் இப்பக்கம் செல்வோம்.

மது—அன்பரே! என்னைப் பொறுத்தருள்க! உங்கட்கு இத் துறையில் ஏதேனும் பழக்கமோ, துன்பமோ எய்தியதுண்டோ!

கோவ—ஐயன்மீர்! இப்பேச்சினை இதனுடன் விட்டு வேறிடங் கட்குச் செல்வோம்.

மது—அன்பரே! இதோ காணப்பெறும் இந்தப்புறவீதி மாளிகைகளின் அமைப்பைப் பாருங்கள். அவ்விடம், இம்முது வேனிலின் அந்தியிற் காதலர் வீற்றிருந்து உரையாடி மகிழும் நிலா முன்றில். அது, தடாக்களில் அகிற் கட்டை யிட்டு எரியுண்டாக்கிக் காய்ந்திருக்கும் குளிர் காலத்திற்குரிய மாடம். அதன்கண் குறிய கண்களையுடைய சாளரங்களைக் காண்க. இது, இளவெயில் காய்ந்திருக்கும் முன்பனிக்கால மாடம். இது, காமவேள் விழா நிகழும் பெருஞ்சிறப்புடைய பின்பனிக்கால மாடம். இவ்வழகிய மாடமே, மாதவி கொடி. யெடுப்ப—என்ன! நண்பரே! மாதவிக்கொடிப் பெயர் கூறுங்கால், ஏதோ திடுக்கிட்டீரே!

கோவ—ஒன்றுமில்லை. இம்மாடம் எத்தகையது?

மது—ஆம். இம்மாடமே மாதவி கொடி. எடுப்ப, காவும் கானமும் மலரேந்த, பொதியிற்றென்றல் பொருந்தி வீச, இன்னிள வேனில் இன்புற்றிருக்கும் எழில் மாடம்.

கோவ—ஐயன்மீர்! இப்புற வீதிகளின் சிறப்பே இங்ஙனமாயின் அகவீதிகளின் சிறப்பினைக் காண இவ்விருகண்களும் போதாவே! இப்பெரிய வீதி யாதோ? எங்கள் அகன்ற

காவிரி கரைபுரண்டு வருவதேபோல இடையறாது மக்கள் இயங்குகின்றனரே!

மது—அன்பரே! இதுதான் அங்காடிவீதி. இதுவே, யானை, தேர், பரி, வீரர்கட்குரிய போர்க்கருவிகள் விற்குமிடம். இதோ நிற்கும் இவரே இந்தக் கடைக்கு உரியார்.

கோவ—அங்ஙனமா? தங்களிடம் எவ்வெப்பொருள்கள் உள்ளன?

போர்க்கலவணிகன்— கொல்லாப்பண்டி, தேர்வட்டை, தேர்மொட்டு, மெய்புகுகவசம், மணியங்குசம், தோற்கைத்தளம், அரைப்பட்டிகை, கட்டுக்குழியம், பன்றிமுகக்கடகு, தோற்கடகு, கானக்கடகு, குத்துக்கோல், அல்லிக்கயிறு, குசைக்கயிறு—. தங்கட்கு என்ன வேண்டும்?

கோவ—ஐயா! ஒன்றும் வேண்டாம். ஓ, இது ஒன்பான் மணிகள் விற்குமிடமோ!

மணிவணிகன்—செட்டியாரே, வாருங்கள். இதோ பாருங்கள், வயிரச்சாதி. இதோ அந்தணமணி. 'மறையோன் அணியின் மறையோனாகிப் பிறவியேழும் பிறந்துவாழ் குவரே'. மன்னவன் அணியின் மன்னவர் சூழ, இந்நில வேந்த ராவரெழு பிறப்பும்—. பன்னிரு குற்றங்களும் இல்லாதன. ஐந்து குணங்களும் அமைந்தன. மரகதம் வேண்டுமா? எட்டுக்குற்றமும் இல்லாதன: எட்டுக் குணங்களும் உள்ளன. இவை—பதுமம், நீலம், குருவிந்தம், புருடராகம், கோமேதகம், முத்தம், பவளம், எது வேண்டும்?

கோவ—ஐயா, எமக்கு ஒன்றும் வேண்டாம்.

பொன்வணிகன்—ஐயா! இங்கே வருக! சாதரூபப்பொன் பாருங்கள், ஆடகப்பொன் பாருங்கள், இதோ கிளிச்சிறைப்பொன், சாம்பூநதப்பொன் பாருங்கள். எவ்வளவு வேண்டினும் இப்போதே தருவேன்.

கோவ—ஐயா, நாளை வருவேன். அப்போது பார்ப்பேன்.

அறுவை வணிகன்—ஐயிர்! வருக, வருக! அமர்க, அமர்க! அடேட, தம்பி! மூட்டையைப் பிரித்துக் காட்டு. ஐயா! கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், வடகம், வண்ணம், பஞ்சு இரட்டு, பாடகம், கோங்கலர்—

மது—என்ன கலர்?

அறு—கலர் இல்லை ஐயா, கோங்கு அலர் போல்வது கோங்கலர், கோபம்—

மது—இதை யுடுத்துவார்க்குக் கோபம் வருமோ?

கோவ—இல்லை. கோபம் என்பது இந்திரகோபம்—பட்டுப்பூச்சி. அந்நிறத்தையுடையதைக் கோபம் என்பார்கள்.

அறு—சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம். இவையாவும் மணம் ஊட்டப் பெற்றிருக்கும் உடைகள். இப்பக்கம் பட்டு, பருத்தி யாடைகள். அப்பக்கம் மெல்லிய மயிர்ப் போர்வைகள்.

கோவ—ஐயா! போதும், போதும். எங்கட்கு இப்போது ஒன்றும் வேண்டாம்.

மாலைவிற்போன்—ஐயன்மீர்! வருக, வருக! பாருங்கள், மலையாரம், திமூரன்பச்சை, கிழான்பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேர்ச்சுக்கொடி-எது வேண்டும்?

வாசம் விற்போன்—வருக! வருக! அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, கிரியாசம், தைலங்கள்—எவை வேண்டும்.

கருப்பூரம் விற்போன்—வாருங்கள், மலைச்சரக்கு, அடைவுசரக்கு, குடமெறிவான், உருக்குருக்கு, வாரோசு, சூடன், ஊசிச் சூடன்.

கூலவாணிகன்—வாருங்கள். என்னவேண்டும்? எந்தப் பொருள் வேண்டும்? நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு—. பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை. ஐயீர்! இதுதான் தமிழ்ப்புலவர் சாத்தனார் கடை.

கோவ—ஓ! அவைதாம் உள்வீதிகளோ! அன்றிப் பல்வேறு கடல்களோ!

மது—அன்பரே வருக! நாம் உள்வீதிகளைக் காண்போம். இது, அந்தணர் வீதி. இது அரசர் தெரு. அதுவே அரசன் திருமனை. இது தான் உங்கள் வணிகர் தெரு. இதுவே உலகிற்கு அச்சாணியாய வேளாளர் தெரு. இது முச்சந்தி. இது நாற்சந்தி. இதுதான் இறைவன் கோயில். அது திரு மால் கோயில். அதுவே செந்நாப்புலவர்கள் மெய்ந்நூ லாயும் தமிழ்ச் சங்கம். (கோவலன் வணங்கல்) ஓடு செங்கல் களின்றிப் பொன்னால் வேயப்பெற்ற பெருமனைகளைப் பார்த்தீர்களா?

கோவ—நண்பரே! தங்கள் துணையின்றேல் யான் இப்பெரு நகரின் அரிய சிறப்புக்களை யெல்லாம் கண்டு மகிழும் பேறு அடைந்திரேன். இக்கோடையின் வெப்பமும் தோன்றாது மாளிகைதோறும் கொடிகளும் படாகையும் பந்தரிடுகின்றன. அன்பரே! இப்பந்தரும் உங்கள் இனிய உரைகளும் எனக்குக் கோடைவெப்பம் தெரியாது செய்தன! நண்பரே! வணக்கம் பல. நான் இன்று இரவு புறஞ்சேரியிற் றங்கி நாளை மீண்டும் வருவேன். தங்கள் இல்லம்?

மது—வேளாளர் தெருவின் தென்பகுதி. அடியேன் பெயர் சோமசுந்தரன். இன்று வருதற் கில்லையேனும் நாளையாதல் கட்டாயம் என் குடிலுக்கு வரல் வேண்டும். (ஒருவரை யொருவர் வணங்கிப் பிரிதல்.)

களம். ௭.

இடம்—புறஞ்சேரி. காலம்—காலை முதல்—. உறுப்பினர்—கவுந்தி, கோவலன், கண்ணகி, மாடலன், மாதரி, ஐயை.

கவுந்தி—கோவல! மதுரை மாநகர் மாண்பைப் பண்டு பலர் கூறக்கேட்டுளேன். என்றும் நீ கூறியது நேரிற் காட்டியது போல விருந்தது. இனி நாம் என்ன செய்தல் வேண்டுமென்று எண்ணி முடித்தல் வேண்டும். (மாடலன் வருதல்). ஓ! இவர் நமதூர் மாடலன் எனும் அந்தணனன்றோ! வருக! அமர்க!

கோவ—மாடல! வருக! உன்னைக்கண்டு நெடு நாட்களாயின. குமரி யாடிவர வேண்டுமென என்னிடம் கூறிச் சென்றனை! அப்பால் உன் செய்தி ஒன்றுந் தெரிந்திலேன். நல்லது, குமரி யாடித் திரும்புகின்றனையோ?

மாடலன்—ஆம். குமரி யாடியே வருகின்றேன். இப்புறஞ்சேரியில் ஒரு நாள் தங்கிப் போகவந்தேன். உங்களை யெல்லாம் இங்கு இந்நிலையில் காண்பது எனக்கு மிக்க வியப்பைத்தருகின்றது. செல்வரேறே! அகநகருள் உங்களை எதிர்கொண்டழைத்து மகிழ்வார் பலரிருக்கவும், ஏனோ இங்குத் தங்கியுள்ளீர்கள்? தங்கள் வருகையின் காரணத்தை யான் அறிந்து கொள்ளலாகுமா?

கோவ—மாடலனே! ஊழ்வினையிருந்தபடியிது. என் கைப்பொருள் யாவும் கழிந்தன. பொருள் ஈட்டிச் செல்ல ஈண்டு வந்தோம்.

மாட—ஆ தெய்வமே! என்னே நின்றிருவருட் செயலிருந்தவாறு! கோவல! இங்ஙனமாய துன்பம் உங்கட்கு எங்ஙனம் வந்ததோ? யானறிந்தவாறு, இப்பிறப்பில் நீ செய்தன யாவும் அறச் செயல்களே யாகும். முற்பிறப்பில் ஏதோ தீவினை செய்தனை போலும். ஆ! அடிகளே! கோவலன்

கொடையும் வீரமும் பிற உயர்குணமும் உலகமெல்லாம் அறியு மன்றோ! அடிகளே! மணிமேகலைச் செல்விக்குத் திருப்பெயர் சூட்டும் திருவிழாவிற்கு நானும் போயிருந்தேன். ஆ! ஆ! மங்கல மடந்தை மாதவி தன்னொடு செம்பொன்மாரி செங் கையிற் பொழிந்தனரே! கலை காணு எமது அவாக் கடலுக்குங் கரை கண்டது அந்நாளன்றோ! இந்த அம்மணி, தானிருக்குமிடத்திலிருந்து தன்பால் வந்தோர்க்குத் தந்த கொடைதான் என்னே! நான் போய் வாங்கும் பேறிலா தொழியினும் கேட்டுக் கேட்டு உருகினேன்! அடிகளே அன்று நடந்ததொன்று இன்றும் என் நினைவிலிருக் கின்றதே!

கோவ—மாடல! என்ன! சிறிய காரியங்களை யெல்லாம் பெரியன வாக்கிக் கூறுகின்றனை! அவைகளை விட்டு விட்டு வேறு பேசுவோம்.

கவு—மாடல! கோவலனிருக்கட்டும். அன்று நடந்ததொன் றென்ன?

மாட—அன்று கொடை வாங்க வந்தவர்களில், ஞான நன்னெறிக்கு நல்வரம்பாகிய முதியோன் ஒருவன், தளர்ந்த நடையினன், தண்டுன்று கையோன், வளைந்தயாக்கையன் வந்து கொண்டி ருந்தனன். ஐயோ! அன்று பாகர்களை ஒழிந்து, பறை கொட்டுவோர்களையும் கடந்து, வருகின்ற மதயானையின் முன்னர் அன்னோன் அகப்பட்டுக் கொண்டனன். அக்காட்சி யினை நினைக்க, அடிகளே! மனம் திடுக்கிடுகின்றதே! அப் போது நம் வீரன், கோவலன், யாவரும் அஞ்சிக் கண் புதைத்திருந்த அந்நிலையில், விரைந்து ஓடி, அவ்யானையை அதட்டி, அதன் கையால் வளைப்புண்டிருந்த அந்தணனை விடுவிக்க, யானை சினந்து நம் கோவலனைப் பற்றியது. ஆ! என்ன வீரம்! கோவலன் அதன் கையினின்று பாய்ந்து கோட்டினைப் பற்றி அதன் வழியாகப் பிடரியினேறி, அதன் மதத்தை அடக்கினன்.

கவு—மாடல! இங்ஙனம் தன்னுயிரை யொரு பொருட்டாக எண்ணாது, பிறர் உயிரைக் காப்பாற்றும் பொற்செய்கைக்கு இணையாகும் கொடையும் வீரமும் உண்டோ? கோவலனது இவ்வரிய செயலை யான் முன்பு கேட்டறியேன்!

மாட—அடிகாள்! கோவலன் செய்த செயற்கருஞ் செயல்கள் இன்னும் பல. இரண்டொன்று கூறுவேன். அடிகளே! நம்மூர்ப் பார்ப்பனி யொருத்தி தான் வளர்த்த கீரிப்பிள்ளை யின் உண்மையுணராது கொன்றசெய்தி இவ்வுலக மறிந்த தன்றே!

கவு—ஆம், ஆம். கீரி, தொட்டிலிற் கிடந்த பிள்ளையைக் காத்திருக்க, ஒரு பாம்பு அணுக, அதனைக் கடித்துத் துணித்து விட்டு இரத்தவாயுடன் தன்பால் ஓடிவர, பார்ப்பனி தன் பிள்ளையைக் கடித்துக் கொன்று விட்டு வருகின்றதெனப் பிழையாக உணர்ந்து அந்தோ......என் நெஞ்சம் நடுங்குறது. அந்நிகழ்ச்சியினை அறிவேன். அப்பால்?

மாட—அவள் கணவன் அச்செய்தி யுணர்ந்து, அவளொடும் வாழும் வாழ்க்கையை வெறுத்து, கங்கையாட வடதிசை நோக்கிப் போயினன். மனையாள், விடாது தொடர்ந்தாள். அந்தணன், நீ செய்த பாவம் கழியப் பெரியதொரு அறம் செய்ய வேண்டும், அதற்குரிய பெரும் பொருள் ஈட்டுதல் வேண்டும் என்று கூறி, பெரும் பொருளை வேண்டிநிற்கும் வேண்டுகோள் அடங்கிய ஒரு ஏட்டினை அவள் கையனாற் றந்து, இதனை அறப்பெருஞ் செல்வர்களிடம் காட்டிப் பொருள் சேர்த்து அறம் செய்து, உன் வினையினைப் போக்கிக் கொள்; போக்கிக் கொண்டால், பின்னர் யான் வருவேன் என்றுகூறி விடுத்தொழிந்தான்.

(தொடரும்)

உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் : ௩.	பிரபவ – ஆடி, ஆவணி.	மலர் : ௪, ௫.

இராசராசன் I.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 56-பக்கம்.)

இனி, இவன் அரியணை ஏறியது தொட்டுப் பதினேழாவது யாண்டு வரையினும், சாசனங்கள், பெரும்பான்மையும் இவனை 'இராசகேசரிவர்மன்' எனவும், சிறுபான்மை 'மும்மடி சோழன்' எனவும் கூறிச்சென்றன. இவற்றுள், மும்மடி என்றது மூன்று மண்டலத்திற்கும் தலைவன் என்பதற்கு அறிகுறியான மும்முடி எனக் கொள்வாராயினர் ஒரு சிலர். அது பொருந்தாது. என்னை? மும்மடி, மும்மடங்கு எனப் பொருள் படுமே யல்லது மும்முடி எனப் பொருள்படுமா றில்லை யாதலால். அன்றியும், மும்மண்டலங்களையும் பின்னரே கொண்டான் ஆகலால், அவற்றைக் கைக்கொள்வதன் முன் மும்முடிக் குரியனாதல்

யாங்ஙனம் பொருந்தும்? ஆகவே, மும்மடி என்பதற்கு ஏனையோரைவிட மும்மடங்கு வன்மையுற்றவன் எனக்கோடல் பொருத்த முடைத்தாதல் காண்க.

இனி, மதுரையைச் சார்ந்த தென்கரைக் கோயின்மண்டபத் தூணொன்றில் காணப்படும் இவனது பதினேழாம் யாண்டுச் சாசனத்தில் (Ep. collection No. 132 of 1910) இவனுக்கு 'இராசாச்ரயன்' என்ற பெயர் காணப்படுகின்றது.

இனி, இவன் சிற்றம்பலத்திற்குச் சகம் 926 அதாவது கி.பி. 1004-ஆம் யாண்டில் நன்கொடை யளித்தனன் எனக் 'கொங்கு தேசராசாக்கள்' என்னும் உரைநூல் கூறுகின்றது. அதனால், இவனுக்கு 'இராசராசன்,' 'சிவபாதசேகரன்' என்னும் பெயர்கள் ஆங்கு வழங்கப்பட்டன என்ப. அதற்கேற்ப இவனது பத்தொன்பதாம் யாண்டுச் சாசன மொன்றில் இவனுக்கு இராசராசன் என்னும் பெயர் முதன்முதலிற் காணப்படுகின்றது. இவனது கடைசி வருடமாகிய இருபத்தொன்பதாம் யாண்டில், இவனைச் 'சயங்கொண்டசோழன்' எனச் சாசனங்கள் வழங்கத் தொடங்கின. இவனது ஆட்சிக்காலம் கி.பி. 985 முதல் 1013 வரையிலும் என்ப.

இனி, இவைகளையன்றிச் சோழமண்டலத்துப் பெரும்பகுதியாகிய வளநாடுகட்கும் பிறவற்றிற்கும் முன்மொழியாகத் தொடர்புற்று வழங்கிய சத்திரிய சிகாமணி, இராசேந்திர சிங்கன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், இரட்டகுல காலன், சத்திரியாசிரயகுலகாலன் என்பன இவனது விருதுப் பெயர்களாகும்.

இன்னும், இவனுக்கு நித்தவிநோதன், இராசவித்தியாதரன், நிகரிலிசோழன், உய்யக்கொண்டான், சநநாதன், பெரியபெருமாள் என்ற பெயர்களும் வழங்கின.

இனி, இவ்விராசராசனது மெய்க்கீர்த்திகளிற் காணப்படும் வென்ற நாடுகளைக் கொண்டாராயின், தமிழ் நாடுகளும், இலங்கையும், இற்றை நாளையில் மைசூர், குடகு என வழங்கும் நாடுகளும்,

சென்னையின் வடக்கிலிருந்து வங்காள மாகாண எல்லைவரையில் ஒரிசா உட்பட்ட சென்னை இராசதானியும், மேலைக்கடற் தீவு களும், விந்தியமலைக்குத் தெற்கான பம்பாய் இராசதானியும், நிசாம் இராச்சியத்தின் மேற்குப் பகுதியும் இவனது ஆட்சியின் கீழ் அடங்கியிருந்தவை என்று தெளியலாம்.

இராசராசன் இராசராசேச்சரம் எடுப்பித்தது.

இனி, இராசராசன் தஞ்சையின்கண் பெரிய கோயில் எடுத் ததை ஆராய்வாம். திருமகளைப்போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமைபூண் டமைய, வென்றியும் புகழும் எங்கும் நில விட, நாடுமுழுவதும் அமைதியாக இருந்தமையின், இவன், தன் எண்ணத்தைக் கடவுட் டிருப்பணியில் செலுத்துதற்கு ஏற்ற காலம் இதுவெனக் கருதி, அற்றைநாளையிற் கலையினும் கைத் தொழிலினும் மேம்பட்டிருந்தாரது தொழில் நலம் காண்டற்கிட மாய்ப், பிற்காலத்திய சிற்பம்வல்லுநர் செய்தொழில் தேரும் படிச் சந்தமாய்த், தென்னாட்டில் முன்னிருந்தாரது அறிவாற்றல்களை நினைவுறுத்தும் அடையாளமாய், வென்றிகுறித்துத் தன்னகர்க் கண் என்றும் நிலவுற இன்னவன் நாட்டிவைத்த வெற்றித்தூண மாய் இலங்கும் இராசராசேச்சரத் திருப்பணியை மேற்கொள் வானாயினான்.

இனி, இராசராசேச்சரம் என்பது இராசராசன் எடுத்த கோயில் என்று பொருள்படும். இராசராசன் எனும்பெயர், சிவ நண்பனும் செல்வத்திற் சிறந்தோனுமாகிய குபேரனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்றாகும். இப்பெயரைக் கேட்டார்க்கு, அரனடிக் கண் ஆராத காதலன் அளவில் செல்வத்தினன் எனச் சுட்டுதற்கு எண்ணம் பிறத்தலின், ஏனைய பெயர்களால் கோயில் எடுத்திடாது இப்பெயரால் எடுத்தனன் போலும். இப்பெயர், சகம் 926 அதா வது கி. பி. 1004-ஆம் யாண்டில், இவன், தன் பாட்டன் பராந் தகனைப்போலத், தில்லைச்சிற்றம்பலத்திற்கு நிபந்தங்கள் பல வியற்றி வழிபட்டதன் பயனாகத், தில்லைவாழந்தணரால் வழங்கப்

பட்டதென்பர். இராசராசன் எனும் பெயர் இவனது பத்தொன்பதாம் யாண்டுச் சாசனத்திற்றான் முதன்முதலில் காணப்படுகின்றது. இத்தகைய பெயர் ஏற்பட்ட பின்னரே இப்பெயரால் கோயில் எடுக்கும் எண்ணம் உண்டாகுவதியற்கை யாதலால், இவன் இராசராசேச்சரம் எடுக்கத்தலைப்பட்டது இவனது பத்தொன்பதாவது யாண்டில் என்று கொள்வது சால்புடைத்தாகும்.

இனி, நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜேச்வரம் என இவன் கூறுமாற்றால், இவனுக்கு முன்னர் இக்கற்கோயில் இருந்ததில்லை என்பது போதரும். பின்னும் பெரிய இக்கற்றளியை நோக்குவார், இதனைத் தென்றிசைக்கண் எழுந்திட்ட மேருவோ, அன்றி விண்ணவர் இழிவதற் கமைத்துவைத்த படிகளின் வரிசையோ என்று ஐயுறுவர். கற்களை நெடுந்தொலையினின்று விரைவிற் கொணர்தற்கும், எத்துணைப் பருத்த பொருளையும் மிக்குயர்ந்த இடத்திற்கு ஏற்றுதற்கும் ஏற்ற கருவிகள் அருகியமைந்த அக்காலத்தில், இத்துணைப் பெரிய கற்கோயிலை எடுப்பதற்கு இவ்வரசர் பெருமான் கொண்ட பெருமுயற்சியினையும் பேரன்பினையும் என்னென்றுரைப்பது! இவன், மேலைச்சளுக்க மன்னன் சத்தியாசிரயனை வெற்றிகொண்டதற்காக, இவ்வாலயத்துப் பரமசுவாமிக்குப் பொற்பூக்கள் பல கொடுத்தமை சாசனத்தால் அறியக்கிடக்கின்றது. அவ்வெற்றி இவனது இருபத்திரண்டாம் யாண்டினிலாதலின், அப்பொழுது இக்கோயில் விமானம் ஒருவாறு கட்டப்பட்டிருத்தல் வேண்டும். இன்னும் இக்கோயிலுக்கு வேண்டு நிபந்தங்களும் பிறவும் 23-ஆம் யாண்டு தொட்டு 29-வரை கொடுத்திருப்பதாகச் சாசனங்கள் கூறுகின்றன. அதனால், இத்திருப்பணி பத்தொன்பதாம் யாண்டிற் றொடங்கி இருபத்துமூன்றில் பெரும்பான்மையும் முடிந்திருத்தலமையும் என்றூகிக்கலாம். "இருபத்தைஞ்சாவது நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினால் உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் ஸ்ரீ ராஜராஜேச்வரமுடையார் ஸ்ரீ விமானத்துச் செம்பின் ஸ்தூபித்தறியில் வைக்கக் குடுத்த செப்புக்குடம் ஒன்று. நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கின தகடுபல பொன் ஆடவல்லானென்னுங் கல்லால் நிறை இரண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபத்தறுகழஞ்சரை"

என்ற சாசனப்பகுதியால் இவன் 25-ஆம் யாண்டு 275-ஆம் நாளில் தூபித்தறியில் வைப்பதற்குப் பொற்றகடு சுருக்கின செப்புக்குடம் கொடுத்தமை அறியக்கிடத்தலால், அக்காலத்துப் போலும் திருப்பணி முடிவுற்றுக் கும்பாபிடேகம் நடந்தேறியது. இக்கோயில் விமானத்தில் 26-ம் யாண்டு 20-ம் நாளில் சாசனம் வெட்டுதற்கு இவன் கட்டளையிட்டிருப்பதும், இருபத்தைந்தாம் யாண்டில் இராசராசேச்சரத்திருப்பணி முடிவுற்றதை வலியுறுத்து நிற்றலறிக.

இனி, இராசராசேச்சரத் திருப்பணி முடிந்த பின்னர், அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தினைத் திருக்கோயிலுள் எழுந்தருளச் செய்து, ஆதி சைவரைக்கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்வித்த பொழுது, ஆவுடையார் வடிவம் பெரிதாயிருந்தமையின், மருந்திளகிப் பந்தனமாகாமற் போயிற்று. அது கண்டு இராசராசன் வருந்தி நிற்கையில், “கருவூர்த் தேவர் ஈண்டு வரின் நீ எண்ணிய எண்ணம் கைவரும்” என, விண்ணிடை நின்றும் ஒரு நன்மொழி எழுந்தது. அதைக்கேட்ட அரசன் கவலை நீங்கி, ‘அப்பெரியார் யார்? அவரது வருகை எனக்கு எவ்வாறு கிடைக்கும்? என அங்கிருந்தாரை உசாவிய போது, தம் உருமாறி அவ்விடத்திருந்த போகநாதரென்னும் யோகியார்,’ ‘அரச! கவலற்க; கருவூர்த் தேவர் என்பார், கருவூரில் அந்தணர் மரபிற் பிறந்து, சைவாகமங்களை நன்குணர்ந்து, சிவனே பரம்பொருள் எனத்தேர்ந்து, அவர்பால் அன்பு பூண்டொழுகிச், சிவயோகங் கைவந்த சித்தராய்ச் சிறந்திருப்பவர். அவரை இங்கு வரவழைப்பேம்’ என்றுரைத்திட்டு, ஓலை எழுதித், தம் தவ வன்மையால் அதனைக் காக்கையின் காலிற் கட்டிவிடுத்தனர். அவ் வோலையைக் கண்ணுற்ற கருவூர்த் தேவர், அக்கணமே பொதிகையினின்றும் புறப்பட்டுத் தஞ்சையை அடைந்து, போகநாதரது ஆணைபெற்றுக் கோயிலுட் புகுந்து, சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்துச் செவ்வே நிறுத்தித், தம் வாயிற் றம்பலத்தை மருந்தாக உமிழ்ந்து இறுகப்பிடித்திடப், பொன்னை உருக்கி வார்த்தது போலப் பந்தனமாயிற்று. அப்பொழுது

அங்கிருந்தார் எல்லோரும் இறும்பூதெய்தி மகிழ்ந்தனர். இவ்வரலாற்றைக், கருவூர்ப்புராணத்திற் கருவூர்த்தேவர் கதிபெறு சருக்கத்துள்ள அடியிற்கண்ட செய்யுட்களிற் காண்க.

தேவர்பிரான்புனைகங்கைசிவணியதீம்புனனாட்டின்
மேவருதொல்சீர்வாய்விளங்குதஞ்சைமூதூரிற்
பூவலயம்பொறுத்தபுயப்புலிக்கொடிமேருவிற்பொறித்த
காவலனேர்குறிநிறுவக்கருதியுளந்தனில்வலித்தான்.

நேமிநெடுவரைநிவந்தநிறைமணிமாமதில்கோலிப்
பூமியினெண்டிசைநிலைத்தபொருப்பெனக்கோபுரநிறுத்திக்
கோமிளிர்பொற்கிரியெனப்பொற்கோயில்வகுத்தேமகிரி
யாமிதெனவேர்குவிந்தாங்கமைத்தொருமாமணிச்சிகரம்.

ஆயசதுமாமறைதொல்லாகமநூலருளியவா
றேயவொளிர்சிவலிங்கமிழைத்துமற்றுருவுடையார்
மேயவிருநான்காகவிளம்புமருந்தவையொருங்கத்
தோயமதித்தாதிசைவர்க்கொடுதொகுமாறியற்றுவித்தான்.

பாகுவரவிளைத்தமருந்திளகியதுபற்றுமை
யேகுழிநேரியற்கிறைவன்யாதுகுறையெனக்கவலித்
தாகுதியாரழல்வேள்வியாற்றுவித்துமந்தணர்க்கும்
யோகுறுமாமுனிவருக்குமூட்டியரும்பொருளளித்தும்.

பந்தியாதிளகமனம்பருவரலுற்றுழையரைக்கூஉ
யுந்துமாரணியமுங்கன்முழையுமுறுவோர்க்குறுகி
முந்தியாமழைத்துமெனமொழிந்தவர்க்கொண்டணையுமெனச்
சந்தியாவருந்தவரைக்கொணர்ந்தார்கடணந்தோரே.

பொருந்தியசித்தரைநணியபோதகரைமாதவரைப்
பருந்திலைவேற்குரிசிலெதிர்பணிந்துகுறைதீருமென்றான்.
மருந்துமணிமந்திரங்கொண்டமைந்தனர்கைவாராமை
யருந்தவருஞ்சலித்திருந்தாரரசனுமஞ்சலித்துநின்றான்.

யாவருந்துணிவுற்றெவன்கொலியற்றுமாறெனுமெல்லையிற்
றேவரும்புகழ்மாதவன்கருவூர்த்திருஞ்சிவயோகிவந்
தோவறப்பரிவோடுஞற்றினலாதுறுதெனுமோசையான்
மேவருந்திருவாக்கெழுந்துவிசும்பின்மீளமறைந்ததே.

மாகநாதமெழுக்கபோதனரஞ்சினார்வளவன்சிவ
யோகநாதனிருக்கையாண்டுளதோதுமாதவிரென்றலும்
போகநாதனுருக்கரந்தொருபுடையடும்படைகொண்டுநின்
றேகநாதனியம்புமன்பனையிக்கணத்திவணுய்க்குதும்.

எனநகைத்திடுமுனைவருந்திறலிறைவனுங்கவலுறமனங்
கனைகுரற்கருமேனிவீறியகாரியின்சிறுகாலிடைத்
துனைவினீர்வருகென்றொரோலைதுவக்கியேகவிடுப்பவே
யனையதச்சிறுவரைதனிற்பொதியாசலத்தையணைந்தரோ.

முன்னரிற்படர்காரிகாலின்முடங்கலைக்கையடங்கவே
நன்னரிற்றொழுதார்பிணிப்பைநெகிழ்த்துநன்கொடுநாடினார்
புன்னெறித்தமியேனையோர்பொருளாய்நினைந்தனரோவெனாத்
தன்னிகர்த்தவரொல்லையக்கணம்வந்துசார்ந்தனர்தஞ்சையே.

புத்துருக்கொடணைந்ததுந்தனிப்போகநாதசுவாமிதன்
சித்துருக்கொடெழுந்ததுங்கருவூரார்வந்துசெறிந்தது
மத்திறத்தினிகழ்ந்ததுஞ்சிலராலறிந்தடலரசனும்
பத்திகூரவெதிர்ந்துவந்தனையாற்றினன்பகர்கின்றனன்.

அணுவுமேருவெனச்சிலம்புமொரணுவெனப்பரகாயமு
நணுகுநாயகநீயெனைப்பொருளாய்நடித்தனையென்னெனத்
தணிவிலாவருளுடையையாலிதுதானியற்றினமென்றுநற்
புண்ணியசித்தரினிலைபெறுஞ்சிவபோகநாதனுரைத்தனன்.

அனையகாலையிலபயன்மீளவுமடியில்வீழ்வுறுமளவிலந்
நினைவறிந்திருள்கருமமாயையுநீத்தவன்றனைநேர்ந்துநந்
தனையனாயினுமெமர்களிற்றலையாயவன்சிவயோகிநீ
யுனைவிளித்ததுமிதினிமித்தமுனாற்றுவாய்குறியொண்மையின்.

அந்தவாய்மைமனக்கொளாவபயன்குயிற்றுபொனாலயஞ்
சிந்தையாதரமுற்றணைந்தனர்சென்றபோதவணின்றுளார்
முந்தையோர்தவசித்தர்மொய்த்துமுடிக்கொணாதவைமுற்றுவா
ரிந்தவேதியராமிதற்புதமறிதுமென்றுடனெய்தினார்.

மாமலைத்தலையதகமூலிமணிக்குழாமலிநெய்க்குடந்
தூமநாறியகுண்டமங்கிசுருக்கினோடுசுரூவமுந்
தாமமுஞ்சிதருப்பைகுண்டிகைதண்டுமண்டலவேதிகை
யோமமார்திரவியமுமாயிடையுளதெரிந்திளநகைசெய்தே.

பெருமைகூர்கருவூராருடையார்பிறங்குமிலிங்கமென்
றிருமைகூரிடனெய்தியியைவித்துநாதமெனத்தெளிந்
தொருமைகூர்தருபாவகத்திறுவறைத்துவாயுமிழ்தம்பலை
யருமைகூர்விடருடுபெய்தனாதிசயித்தனருலகெலாம்

உம்பருந்துணர்மாரிபெய்தனரோடைவைத்தழலூடெழுஞ்
செம்பொருளுயிரமாற்றெனப்புரைசென்றுபற்றியதுமிழுவாய்த்
தம்பலின்னணமேயெனிற்றனிமாமுதற்பொருளாய்விளங்
கெம்பிரானருளன்பர்தஞ்செயல்யாவரேயறிவார்களே.

இனி, இங்குக் காட்டிய கருவூர்ப்புராணச் செய்யுட்களால், கருவூர்த்தேவர் தஞ்சைக்கு எழுந்தருளினாராதல் இனிது விளங்கும். அது நிற்க. இராசராசேச்சரத்து மேலைத் திருச்சுற்றுலையில் (பிராகாரத்தில்) வேம்பும் வில்வமும் நிற்கும் கிழக்கு நோக்கிய மேடை ஒன்றுளது. அதனைச் சுட்டி 'இஃது என்னென' எவரை வினவினும், 'கருவூரார் சமாதி' என்றே கழறுகின்றனர். ஆன்றோரும் அவ்வாறிசைத்து அதனை வலம் வந்து வழிபாடு செய்கின்றனர். அம்மேடையிற் கருவூரார் கோயிலெனச் சிறுகோயிலெடுத்து, யோகியர் உருவச்சிலை யொன்றமைத்துப் பலரும் வழிபட்டு வருவதையும் நாடோறும் பூசைநடப்பதையும் இன்றுங் காணலாம். வழக்கும் தொன்றுதொட்டு வரும் கேள்வியும் பற்றி மெய்யென்றுணரப்படும் ஐதிக அளவையைப் பொய்யெனல் அமையாது. ஆகவே, பிறர்க்குரிமையாக்காது கருவூரரோடு இயைபு படுத்துக் கூறும் அம் மேடை, இராசராசேச்சரத்துத் திருச்சுற்றுமாளிகையில் இடம்பெற்றிருத்தலின், கருவூர்த்தேவர்க்கும் இக் கோயிலுக்கும் இயைபுண்மை உய்த்துணரற்பாற்று. இஃது இவ்வாறாக.

இனி, கருவூர்த்தேவர் இராசராசேச்சரம் பாடியதை ஆராய்வாம். இவர், திருவிசைப்பா இயற்றிய ஒன்பதின்மருள் ஒருவராவார். இவர் பாடியருளிய பதிகங்கள் பத்தாகும். அவற்றை முறைப்படுத்த ஆன்றோர் தஞ்சை யிராசராசேச்சரத்து இசைப்பாவினை ஒன்பதாவதாக வைத்துள்ளார். இம் முறைவைப்பின் இயைபு காண்டற் கரியதெனினும், இராசராசேச்சரம், கங்கை

கொண்ட சோளேச்சரத்தை அடுத்து வைக்கப்பட்டுளது. கங்கை கொண்டான் என்பது இராசேந்திரனுக்குப் பெயராகும். இராசராசன் மகனாகிய இவன் கி. பி. 1012 முதல் 1043 வரையிலும் செங்கோல் செலுத்தினவன். ஆகவே, இராசராசன் இராசேந்திரன் என்ற இருவரும் எடுப்பித்த கோயில்களைப்பாடிய கருவூர்த் தேவரைப் பதினோராம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்திருந்தவர் எனக்கோடல் பொருத்தமுடைத்தாதல் காண்க. இவர், இராசராசேச்சர முடையார்க்கு மருந்து சாத்தி வழிபட்டபோது இசைப்பாப் பாடிலர்; என்னை? கங்கைகொண்ட சோளேச்சரம் பாடி. இதனைப்பாடுதலின். ஆகவே, தலங்கள் பலவும் சென்று வணங்கி மீண்ட பின்னரே இராசராசேச்சரம் பாடினர் போலும் என்பதே அமையுடைத்தாகும்.

இனி, தஞ்சை யிராசராசேச்சரத் திருவிசைப்பாக்கள், அன்பொழுகி இன்பம் பயக்கும் இயல்பினவன்றி, அக்கால நாளில் தஞ்சை நகர், மன்னர் முடியொடு முடிதேயத் தூங்க மணிகள் ஒளிவிடு மறுகும், கடலெனக் கம்பலை மிக்க தெருவும், நெடுநிலை மாடமும், அகில் கமழ் மாளிகையும், யாழ் பயிலிடமும், ஆடரங்கும், நாடகசாலையும், கழுநீர்ப் பொய்கையும், நந்தனவனமும், இஞ்சியும், கிடங்கும், பிறவும் பொலிதர இருந்த காட்சியைப் புலப்படுத்து மாட்சியும் உடையவாகலின், அவற்றினை ஈண்டு எடுத்தெழுதுவது இன்றியமையாததாயிற்று.

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதி
யொன்றுநூறாயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோ
வங்கனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்
பருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே.

நெற்றியிற்கண்ணென்கண்ணினின்றகலாநெஞ்சினிலஞ்சிலம்பலைக்கும்
பொற்றிருவடியென்குடிமுழுதாளப்புகுந்தனபோந்தனவில்லை
மற்றெனக்குறவென்மறிதிரைவடபாற்றிடுபுனன்மதகில்வாழ்முதலை
யெற்றுநீர்க்கிடங்கிலிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

சடைகெழுமகுடந்தண்ணிலாவிரியவெண்ணிலாவிரிதருதாளக் [ய
குடைநிழல்விடைமேல்கொண்டுலாப்போதுங்குறிப்பெனேகோங்கிணரனை
குடைகெழுநிருபர்முடியொடுமுடிதேய்ந்துக்கசெஞ்சுடர்ப்படுகுருவையோங்
கிடைகெழுமாடத்திஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

வாழியம்போதத்தருகுபாய்விடையம்வரிசையின்விளக்கலினடுத்த
சூழலம்பளிங்கின்பாசலராதிச்சுடர்விடுமண்டலம்பொலியக்
காழகில்கமழுமாளிகைமகளிர்சங்குல்வாயவ்குலிகெழும
யாழொலிசிலம்புமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

எவருமாமறைகளவையும்வானவர்களீட்டமுந்தாட்டிருக்கமலத்
தவருமாலவனுமறிவரும்பெருமைபடலழலுமிழ்தழற்பிழம்ப
ருவரிமாகடலினொலிசெய்மாமறுகினூறுகளிற்றரசினதீட்ட
மெவருமால்வரைசெயிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

அருளுமாறருளியாளுமாறுளவடிகடமழகியவிழியுங்
குருளும்வார்காதுங்காட்டியான்பெற்றகுயிலினைமயல்செய்வதழகோ
தாளவான்குன்றிற்றண்ணிலாவொளியுந்தருகுவால்பெருகுவான்றெருவி
லிருளெலாங்கிழியுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

தனிப்பெருந்தாமேமுழுதுறப்பிறப்பின்றளிரிறப்பிலையுதிர்வென்று
னரினைப்பருந்தம்பாற்சேறலின்றேனுநெஞ்சிடித்துருகுவதென்னே
சுனைப்பெருங்கலங்கற்பொய்கையங்கழுநீர்ச்சுழன்மாளிகைசுடர்வீசு
மெனைப்பெருமணஞ்செயிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

பன்னெடுங்காலம்பணிசெய்துபழையோர்தாம்பலரேம்பலித்திருக்க
வென்னெடுங்கோயினெஞ்சுவீற்றிருந்தவெளிமையையென்றுநான்மறக்கே
மின்னெடும்புருவத்திளமயிலனையார்விலங்கல்செய்நாடகசாலை [ன்
யின்னடம்பயிலுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்கே.

மங்குல்சூழ்போதிலெழிவறநிறைந்துவஞ்சகர்நெஞ்சகத்தொளிப்பா
ரங்கழற்சுடராமவர்க்கிளவேனலலர்கதிரனையவாழியரோ
பொங்கெழிற்றிருநீறழிபொசிவனப்பிற்புனறுளும்பவிர்சடைமொழுப்ப
ரெங்களுக்கினியரிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

தனியரெத்தனையோராயிரவருமாந்தன்மையரென்வயத்தினராங்
கனியரத்தருநீங்கரும்பர்வெண்புரிநூற்கட்டியரட்டவாரமிர்தர்
புனிதர்பொற்கழலர்புரிசடாமகுடர்புண்ணியர்பொய்யிலாமெய்யர்க்
கினியரெத்தனையுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

சரளமந்தாரசண்பகவகுளசந்தனநந்தனவனத்தி
னிருள்விரிமொழுப்பினிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திலுறை
யருமருந்தருந்தியல்லறீர்கருவூரறைந்தசொன்மாலையீரைந்தின் [ரே
பொருண்மருந்துடையோர்சிவபதமென்னும்பொன்னெடுங்குன்றுடையோ

இனி, "பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி இராஜராஜேச்வரம்" எனச் சாசனத்துக் காணப்படுதலின், கோயில் எடுக்கப்பட்டுள்ள இடம், நாட்டின் பெரும்பகுதியுள் ஒன்றாகிய பாண்டிய குலாசனி வளநாடு என்பது பெற்றாம். பாண்டிய குலாசனி என்றது இராசராசன் விருதுப்பெயர்களுள் ஒன்று. அதற்குப் பாண்டிய குலத்திற்கு இடியேற்றை ஒப்பவன் என்பது பொருள். இவ் வளநாட்டைச் சார்ந்த தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்க்கண் எடுக்கப்பட்டுள்ள திருக்கற்றளியாகிய இராசராசேச்சரத்துக்குத் திருவாயில்கள் மூன்று இருக்கின்றன. இவ்வாறு கோயில்கட்கு வாயில் மூன்றமைப்பது பண்டைக்காலத்து வழக்குப் போலும். பண்டை நாளைய வழக்குகளைப் பாராட்டிக் கூறும் பெரியபுராணம், முதற் கோபுர வாயிலைத் தோரண வாயில் எனவும், இரண்டாம் வாயிலைத் திருமாளிகை வாயில் எனவும், மூன்றாம் வாயிலைத் திருவணுக்கன் திருவாயில் எனவும் வழங்கும். இவனோ என்றால், அவற்றை, முறையே கேரளாந்தகன், இராசராசன், அணுக்கன் எனப் பெயரிடுவானாயினான். இவன், இம்முறையின் அமைத்தவிடத்தும், கேரளாந்தகனுக்கும் அணுக்கனுக்கும் இடையே இராசராசனை வைத்திருப்பதை நோக்குமிடத்து இராசராசன், பகைவர்க்குச் சேய்மையனெனினும், அரனடிக் கண்மையன் என்றாய்த்தோணக் கிடக்கும் அருமை பாராட்டற் பாலது.

இனி, இக்கோயில் விமானம் 200 அடி உயரமுடையதாகும். அதன் உச்சியில் போடப்பட்டுள்ள தளம் ஒரே கருங்கல், எறக்குறைய எண்பது டன் நிறையுள்ளது, எனத் தஞ்சை சில்லா கெசட்டியர் கூறுகின்றது. இவ் விமானத்தின் மேல் தூபித் தறியில் வைக்கப்பட்டுள்ள செப்புக்குடம் நிறை மூவாயிரத்து எண்

பத்து மூன்று பலம். அதன் மீது போர்த்த பொற்றகடு இரண் டாயிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறரைக் கழஞ்சு. இக் கோயிற்குக் கும்பாபிடேகம் நடைபெற்றது கி. பி. 1009-ஆம் யாண்டாகும்.

இனி, திருமுக் கோபுரவாயிலினும் சண்டேசர் ஆலயத்தினும் வெட்டப்பட்டுள்ள சாசனங்களில், முந்நீர்ப்பழந் தீவு பன்னீ ராயிரம் கொண்டமை கூறப்படாமையால், அவற்றைக் கொள் வதன்முன் இவை எடுக்கப்பட்டனவாகும் என்று கொள்க. இக் கோயிலின் திருச்சுற்று மாளிகையிற் பெரும்பான்மையும் இராச ராசன் ஆணையின் பேரில் சேனாபதி கிருஷ்ணன் ராமனான மும் முடிச் சோழ பிரமமாராயனால் எடுக்கப்பட்டதாகும். இச் செய்கை தென்புறத்தில் இரண்டிடத்தும் மேற்புறத்து ஓரிடத்தினும் திருச் சுற்றாலையில் எழுதப்பட்டிருக்கிற தென்னிந்திய சாசனத்தொகுதி II பகுதி II எண் 31, 33, 45 களிற் காண்க. இச் சுற்றாலையில் எட்டுப்புறத்தினும் திக்குப்பாலர் எண்மருக்கும் கோட்டங்கள் சமைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள், கல்லிற் செதுக்கிய அழ கிய திசைகாப்பாளர் திருமேனிகளைக் காணலாம். அவ்வாலயங் களின் மீது கற்கலசங்களே இக்காலத்துக் காணப்படினும், பொற் றகடு சூழ்ந்த செப்புக் குடங்கள் இராசராசனுடைய குருக்கள் ஈசானசிவ பண்டிதரால் கொடுக்கப்பட்டன என்று S I. Ins. Vol. II Part IV No. 90 ஆல் அறியக்கிடக்கின்றது. ஆலயத் துப் பிள்ளையார் மேலைச் சுற்றாலையத்து வீற்றிருப்பவாதலால், இற்றை நாளையிற் காணப்படும் பிள்ளையார் கோயில் தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர் சரபோசி II எடுத்ததென்ப. தக்கணாமூர்த்திக்கு அக்காலத்தில் கோயில் கட்டப்படவில்லை. சாசனத்தை இடையே மறைத்து இவ்விடத்தும் பிறதளிகளி னும் இவ்வாலயம் எடுக்கப்பட்டிருப்பதை ஆராயின், தனியே ஆலயமெடுத்துத் தக்கணாமூர்த்தியை வழிபடும் வழக்குப் பிற் காலத்திலேற்பட்டது போலும் என்றூகிக்கலாம். தனக்குப் பின் புறத்திருந்து அடைக்காய் தந்தவன் அரசனென் றறியாது வாங்கி யுண்ட சிற்பர்கள் தலைவன், தன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டிச் சுப்பிரமணியர் ஆலயம் எடுத்தனன் என முன்னோர்

கள் கூறுவர். அம்மன் கோயில், இவ்வாலயத்திற்கு வடபுறத்துள்ள சிவகெங்கைத் தோட்டத்திலிருக்கது. நாயக்க வாசர் காலத்தில் இடித்துவிட்டனர் என்ப. இப்போது இருப்பது பிற்காலத்தில் எடுக்கப்பட்டதென்பதைப் பார்ப்பவர் கண்கூடாகக் காண்பர்.

இனி, ஆராயுமிடத்து முன்னாளையில் சண்டேசரைத் தவிர ஏனையவர்க்குத் திருச்சுற்றாலயத்தில் ஆலயம் எடுப்பித்ததாகத் தெரியவில்லை. சண்டேசர், சிவபெருமானுக்குரிய பொருளை யெல்லாம் எவரும் கவர்ந்து செல்லாது கண்காணிக்கும் அதிகாரமுடையவர் என்பது முந்தையோர் கொள்கையாகும். அதைப் பின்பற்றியே கோயிலைப் பொறுத்தன யாவும் அக்காலத்தில் அவர் வாயிலாகவே நடைபெற்றுவந்தன. அதனை "ஸ்ரீ ராஜராஜீச்வரத்தி னினிதெழுந்தருளி இருந்த பரமச்வாமிக்கு மூலவிருத்தியராகிய சண்டேச்வர தேவர் பக்கல் பொலிசை யூட்டுக்குக்கொண்ட ஊர் கல்லில் வெட்டின." என்னும் சாசனப்பகுதியால் அறியலாம். சிவாலயத்திற்குச் செல்பவர், சிவதரிசனம் செய்து முடிந்த பின் ஆலயத்தினின்று புறப்படுமுன்னர்ச் சண்டேசர் ஆலயத்தையடைந்து, 'சிவசொத்துக்களில் ஒன்றும் கொண்டு சென்றிலேம், எம் காங்களைப் பார்த்தருளும்' என்பார் போலத் தம் கையொடு கையைத் தட்டிக்காட்டிச் செல்லும் வழக்கு இன்றும் காணப்படுதலால் இவ்வுண்மை விளங்கும்.

இனி, இவ்வாலயத்துள்ள நந்தி ஒரே கல்லிற் செய்யப்பட்டது. பன்னிரண்டடி உயரமும், பத்தொன்பதரை அடி நீளமும் எட்டேகால் அடி அகலமும் உடையது. இந் நந்தி மண்டபம் தஞ்சை நாயக்க அரசர் நாளையிற் கட்டியதாகும்.

இனி, இராசராசேச்சரத்து விமானம் (பெரிய கோபுரம்) தக்கணமேரு எனப்படும். அதனுள் வீற்றிருக்கும் தியாகேசர் தக்கணமேரு விடங்கர் எனப்படுவார். விடங்கர் என்னும் வடசொல் உளியாற் செய்யப்படாதவர் என்று பொருள்படும்.

இனி, இராசராசன் இத்தக்கணமேரு விடங்கரையன்றி, பிள்ளையார், சண்டேச்வர பிரசாததேவர், பஞ்சதேக மூர்த்திகள், சுப்பிரமணிய தேவர், தக்கணாமூர்த்திகள், சந்திரசேகரதேவர் மகாவிட்ணுக்கள் திருமேனிகளை எழுந்தருளுவித்தனன். அவன் மனைவியருள் ஒலோகமகாதேவியார் பிச்சதேவரையும், சோழ மகாதேவியார் ஆடவல்லான், இடபவாகன தேவரையும், அபிமான வல்லியார் இலிங்கபுராண தேவரையும், திரைலோக்கிய மாதேவியார் கலியாண சுந்தரரையும், பஞ்சவன்மாதேவியார் தஞ்சையழகர், பதஞ்சலி தேவரையும், பிருதிவிமாதேவியார் கெண்டமூர்த்திகளையும், இலாடமாதேவியார் பாசுபதமூர்த்திகளையும் எழுந்தருளுவித்தனர். இவர்களையன்றி, சேனாபதி கிருஷ்ணன் இராமனுன மும்மடிசோழ பிரமமாராயன் அர்த்தநாரீச்வரரையும், பெருந்தரம் நடார் கிழான் வேளானாதித்தனான பராந்தகப் பல்லவரையன், உமாசகிதரையும், கோவன் அணுமல்லயான கோளாந்தக விழுப்பரையன், பிரிங்கிசர் சூரியதேவரையும், பெருந்தரம் ஈராயிரவன் பல்லவனான மும்மடி சோழபோசன், சண்டேச்வர தேவரையும், அதிகாரி உதயதிவாகரன் தில்லையாளி, கிராதார்ச்சுனதேவரையும் எழுந்தருளுவித்தனர். சிகாரியம் பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான், அடியவரிடத்தும் அரசனிடத்தும் பேரன்புடையோராதலின், நம்பி ஆரூரனார், நங்கை பரவையார், திருநாவுக்கரைய தேவர், திருஞானசம்பந்தடிகள், தத்தாநமரேகாண் என்ற மிலாடுடையார், சிறுத்தொண்டநம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், பெரியபெருமாள் (இராசராசன்) இவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமங்களையும், கேத்திர பாலதேவர், சிவமூர்த்திகள் திருமேனிகளையும் எழுந்தருளுவித்தனர். இத்திருமேனிகளுட் பெரும்பாலன இப்போது காணப்படாமை வருந்தத் தக்கது.

இனித், திருமுறைகண்ட இவன் காலத்தில், எட்டாவது திருமுறையாகிய திருவாசகம் பாடியருளிய மாணிக்கவாசகர் பெயர் தெரிந்திருந்தும், ஏனைய மூவரோடு இவரையும் எழுந்தருளச் செய்யாமைக்குக் காரணம் புலப்படவில்லை. இவனும்,

இவன் மனைவியரும், பிறரும் பற்பல சிவமூர்த்தங்களை எழுந்தருளுவித்தமை அறியக்கிடப்பினும், வாகனங்கள் செய்து கொடுத்தமை காணப்படாமையின், இக்காலத்திற்போல அக்காலத்தில் யானை, குதிரை, பூதம் முதலியவற்றில் புறப்பாடு செய்விக்கும் வழக்கில்லை போலும். இன்னும் பலதிறப்பட்ட சிவமூர்த்தங்கள் கேட்கப்பெறினும் அவர்கட்குரிய அம்மையின் பெயர், இற்றைநாளையிற் போலப் பலதிறப்பட வழங்கப்பெறாமல், 'உமாபரமேச்வரி' எனவே வழங்கப்பட்டிருத்தல் ஆராயத்தக்கது.

இனி, இவன் சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்து கொடுபோந்த பொன்னாற் செய்து 'சிவபாதசேகரன்' என்றும் 'ராசராசன்' என்றும் திருநாமம் வாங்கிய காளங்கள், திருப்பள்ளித்தொங்கல் மகுடம், தவளச்சத்திரமகுடம், வண்ணிகைத் திருக்கொற்றக்குடைமகுடம், ஈச்சோப்பிகை, காளாஞ்சி முதலிய திருச்சின்னங்களும், பொன்னாலும் வெள்ளியாலும் செய்த திருப்பரிகலங்களும், பொன்னிற் செய்து நவமணி பதித்த திருவாபரணங்கள் பலவும் கொடுத்தனன். இவன் திருத்தமக்கையார் குந்தவையார் கொடுத்துள்ள அணிகலன்களுக்கும் பிறவற்றிற்கும் அளவில்லை. அணிகலங்களை எவரும் மாற்றிவிடாவண்ணம் அரக்கு, செப்பாணி, சரடுகளை நீக்கிப் பொன்னை நிறையெடுத்து, அவற்றில் நவமணிகள் பதிக்கப்பெற்றிருப்பின், அவை இத்துணை, இவ்வளவு நிறையுடையன, இன்னின்ன தன்மையன என்றுரைத்து விலையும் கண்டிருப்பது பாராட்டற்பாலது.

இனி, கோயில் காரியம் பார்ப்பவரை ஸ்ரீ காரியம் பார்ப்பவர் எனவும், அவரைக் கண்காணிப்பவரை ஸ்ரீ காரியக் கண்காணி நாயகம் எனவும் வழங்கி வந்தனர். அக்காலத்தில் இராசராசிச்வரத்தில் ஸ்ரீ காரியஞ் செய்தவர் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவர். ஸ்ரீ காரியக் கண்காணி நாயகம் செய்தவர் பாண்டிநாடான ராசராச மண்டலத்துத் திருக்கானப்பேர்க் கூற்றத்துப் பாளூர் கிழவன் அரவணையான் மாலரிகேசன் ஆவார். இராசராசேச்சரத்து அருச்சகர் சைவாச்சாரியன் பவனபிடாரர்.

இனி, திருமுன்னர் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வதற்காக இசைத்தமிழில் வல்லார் நாற்பத்தெண்மரை உடுக்கை வாசிப்பான் ஒருவன், கொட்டிமத்தளம் வாசிப்பான் ஒருவனுடன் ஏற்படுத்தினான். இவ் வைம்பதின்மரும் நிசதம் நெல்லு முக்குறுணியாக நிபந்தம் பெற்றனர். இவரைப் பிடாரர் எனச் சாசனம் கூறுகின்றது. பிடாரர் என்பது, இற்றை நாளையிற் பாம்பு பிடிப்பாரைக் குறிக்கும் பெயராக வழங்குதலின், அது பட்டாரகரின் மரூஉப் பெயர்போலும் என்னலாகும். இவ் வைம்பதின்மரையும் ராசராச பிச்சனான சதாசிவன், மாதேவன், திருநான சம்பந்தனான ஞானசிவன், கயிலாயன் ஆரூரான தர்மசிவன் என்றின்னோரன்ன சிவன் என வழங்கியிருத்தல் பாராட்டற்பாலது. இவர்களையன்றிக் கானபாடி, ஆரியம் பாடுவார், தமிழிசைபாடுநரும் இருந்தனர்.

இனி, ஆலயத்துக்குரிய பணிகளைச் செய்வதற்காகச் சோழநாட்டுப் பிறதளிகளினின்றும் குடியேற்றம் பெற்ற பதியிலார் நானூறு பேர்கள் இருந்தனர். இராசராசேச்சரத்தை அடுத்து வடபுறத்திலும் தென்புறத்திலும் அவர்கட்காகத் தனித்தனி மனைகள் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வேலி நிபந்தம் கொடுக்கப்பட்டது. அன்னவர் பெயர்க்கு முன்னர் நக்கன் எடுத்த பாதம், நக்கன் சோழகுல சுந்தரி, நக்கன் ராசகேசரி என்றாற்போல நக்கன் என்னும் பெயர் புணர்க்கப்பட்டிருக்கும். அவர்களுள் ஆடல் பாடல்களில் வல்லுநர் பலர் உண்டு.

இனி, பாடுவோர் காந்தர்விகள் எனப்பட்டனர். காந்தர்வரும் எழுபத்தைவர் இருந்தனர். கொட்டிமத்தளக்காரர், பக்கவாத்தியர், வீணை வாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கு முழக்குவோரும் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, காடிகை என்னும் பறைவிசேடங்களும் இருந்தன.

(தொடரும்.)

கல்வி.

(முற்றொடர்ச்சி. துணர்-2. பக்கம் 470.)

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், தமிழாசிரியர்,
ஈபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

கல்வியால் அறம் பொருளின்பமாகிய பயன்கள் இம்மையில் மிக விளையாதொழியினும்

'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து'

என்று செந்நாப்போதார் கூறியவாறு, அது வரும் பிறவிகளினும் தொடர்ந்து அப்பயன்களை விளைத்து உயிர்க்கு ஆணுதல் ஒருதலை.

இனி, கற்க வேண்டுவன யாவென நோக்குவோம். வடமொழிவாணர் கலைகள் அறுபத்து நான்கு என வகுத்துள்ளனர். அவற்றுள், ஆகருடணம் முதலிய அட்ட கன்மங்கள், பல்வகைச் சாலங்கள், நவமணிப் பரீட்சைகள், யானை, குதிரை முதலியவற்றின் பரீட்சைகள் என்றிவை முதலியவெல்லாம் தனித்தனி ஒவ்வொரு கலைகளாக எண்ணப்பட்டுள்ளன. அவற்றுட் சேராத வித்தைகளும், தொழிற்றிறங்களும் மற்றும் எத்தனையோ உள்ளன. மேல்நாட்டினரின் ஆராய்ச்சியால் உண்டாகிய புதிய கலைவகைகளும் பல. இவையாவும் எல்லாராலும் கற்றற்பாலன வல்ல; கற்க வேண்டியனவும் அல்ல. இவற்றிற் பெரும்பாலன தொழிற்பயிற்சி என்னும் பெயரால் வேறு பிரித்தெண்ணத் தகுவன. மாந்தரனைவரும் ஒருதலையாகக் கற்கவேண்டிய கல்வி யாவது அறிவை வளர்த்து மக்கட் பண்பை நெறிப்படுத்து உண்மையை உணர்த்தி இன்மை மறுமை வீட்டின்பங்களை நல்க வல்லனவாய்ப் புலத்துறை முற்றிய சான்றோர்களால் அவ்வம்

மொழிக்கண் இயற்றப்பட்டுள்ள இலக்கியங்களையும் விதிநூல்களையும் உண்மைநூல்களையும் கற்றுணர்தலாம். அவற்றின் பொருள்களை ஐயந்திரிபற உணர்தற்கு இலக்கண நூற்பயிற்சியும் அளவை நூற்பயிற்சியும் இன்றியமையாதனவாகலின், அவையும் ஒருதலையாகக் கற்க வேண்டுவனவாகும். அவற்றின் இன்றியமையாச் சிறப்பு நோக்கியே

'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு'

எனத் தெய்வப் புலவரும் அருளிச்செய்வாராயினர். தமிழைப் பொறுத்தவளவில், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் என்னும் இலக்கியங்களும், திருக்குறள், நாலடிநானூறு, பழமொழி நானூறு முதலிய விதிநூல்களும், சமயகுரவர் முதலாயினோர் அருளிச்செய்த சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் வைணவ சமயப்பெரியார்கள் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தமும் ஆகிய உண்மை நூல்களும், தொல்காப்பியம் என்னும் கருவிநூலும் கற்கவேண்டிய தலைசிறந்த நூல்களாகும். இவைபோலும் மற்றும் சிறப்புடைய நூல்கள் பலவுள்ளன. தொல்காப்பிய உரைகள், களவியல் உரை, திருக்குறட் பரிமேலழகர் உரை முதலிய உரைகளும் படித்தறியற்பாலன. இவையனைத்தும் நன்கு கற்றோரே தமிழிற் புலமையுடையோராவர். உண்மைநூல் ஆராய்ச்சி செய்வோர் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் என்னும் சைவசித்தாந்த நூல்களையும், அவற்றிற்குச் சிவஞான யோகிகள் இயற்றிய உரைகளையும் கற்றுணர்தல் வேண்டும். முற்குறித்த நூல்களுள்ளே திருக்குறளானது உறுதிப் பொருளெய்து தற்குரிய மக்கள் ஒழுகலாறுகளை வரையறுத்துணர்த்தும் சீரிய விதிநூலாக இருப்பதன்றி, ஒப்புயர்வற்ற திப்பிய இலக்கியமாகவும் உண்மை நூலாகவும் திகழ்கின்றது.

'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா'

என ஆன்றோர் கூறியது எட்டுணையும் புனைந்துரையன்று. தமக்கு எய்ப்பில் வைப்பாகக் கிடைத்திருக்கும் அம் மெய்ப் பொருட் களஞ்சியத்தில் நுழைந்து தம் அறிவால் முகந்த அரும் பொருள்களை நுகர்ந்து மிடி தீர்ந்தின்புற்றிருத்தல் தமிழ்மக்கள் எல்லாருக்குமுரிய கடனாகும். தமிழரேயன்று; பிறமொழி யாளரில் அம்மொழிகளைக் கற்றுத் துறை போயினாரும் தம் உணர்வு ஐயந்திரிபில்லதும், தம்புலமை குறைபாடில்லதும் ஆதலை விரும்பின், முடிவாகக் கற்றுணரற் பாலது திருக்குறள் என்னும் தெய்வச் செந்தமிழ்த் திருமறை யென்பது தேற்றம்.

இனி, கற்கத் தகுந்தனவாகிய இத்தகைய நூல்களை எங்ஙனம் கற்றல் வேண்டுமென்று பார்ப்போம். 'கற்க கசடறக் கற்பவை' என்றார் திருவள்ளுவர். கசடறக் கற்றலாவது ஐயம் திரிபு அறக் கற்றலாகும். ஐயமாவது குற்றியோ மகனோ, கயிறோ, அரவோ, இப்பியோ, வெள்ளியோ என்றாற்போல ஒன்றிலே துணிவு பிறவாது நிற்கும் பல தலையாய உணர்வு. திரிபாவது குற்றியை மகனென்றும், கயிற்றை அரவென்றும், இப்பியை வெள்ளி யென்றும் உணர்தல்போல் ஒன்றினைப் பிறிதொன்றாகத் துணியும் மயக்கவுணர்வு. ஒருவன் எத்தனை நூல்களைப் பரிந்து தேடிப் படித்து அவற்றைத் தன் நெஞ்சினிடமெல்லாம் நிறைத்துவைப்பி னும், அவற்றின் பொருளை உள்ளவாறுணரானாயின் அவன் எய்தும் பயன் என்னை? பல நூல்களையும் பயின்று அவற்றின் பொருளை நுண்ணிதின் ஆராய்ந்துணர்ந்த அறிவுடையோரே கற்றார் எனப் படுவர். நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களினுஞ் சென்ற அறிவில்லாதவன் யாவன் அவன் கல்லாதவன் என்பது தோன்ற வள்ளுவனாரும் கல்லாமை என்னும் அதிகாரத்தில்

'நுண்மா ணுழைபுல மில்லா னெழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று'

என்றமை காண்க. அத்தகைய நுண்ணறிவு இயல்பிலே வாய்க்கப் பெறாதாரும் நூல்களை இடையறாது பயின்று ஆராய் தலினால் அதனைப் பெறுதல் கூடும். நூலாராய்ச்சியும் நுண்ணறி வும் ஒன்றற்கொன்று துணையாக நிற்றல் கண்கூடு. எனவே

கல்வி என்பது தொல்லோர் இயற்றிய நூல்களை அப்படியே பாடஞ் செய்தலென்பதன்று; அவற்றை நன்கு ஆராய்ந்து பொருளுண்மை காண்டலே கல்வியாகும். இன்னும் பார்க்கின், அவற்றின் பொருள் அல்லது கருத்தை அறிதல் மட்டும் போதாது; அவை ஒன்றற்கொன்று மறுதலையாயவழி அவற்றுள் மெய்யிது பொய்யிதுவெனத் துணிதலும் வேண்டும்.

> " பத்தொடொன்பது படைநூல்களும்
> மாறு படுதல் வழக்கே யன்றியும்
> ஒவ்வொரு படையி னுள்ளே யோரின்
> பலநான் மாறு படுமே யன்றியும்
> ஒவ்வொரு நூற்கட் லுள்ளே யோரின்
> எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யைந்தனுள்
> ஒன்றனை யொன்றே யொழிக்கு மன்றியும்
> ஓரதி காரத் துள்ளே யோரின்
> ஓரியல் விதியினை யோரிய லொழிக்கும்
> ஓரிய லதனி னுள்ளே யோரின்
> ஒருசூத் திரவிதி யொருசூத் திரவிதி
> தன்னைத் தடுத்துத் தள்ளு மன்றியும்
> ஒருசூத் திரத்தி னுள்ளே யோரின்
> ஒருவிதி யதனை யொருவிதி யொழிக்கும்
> நூலா சிரியர் கருத்தினை நோக்காது
> ஒருசூத் திரத்திற் கொவ்வொரா சிரியர்
> ஒவ்வொரு மதமா யுரையுரைக் குவரே
> அவ்வுரை யதனு ளெடுத்தவா சகங்கட்கு
> அவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
> கொண்ட பொருள்படப் பொருள் கூறுவரே "

என இலக்கணக் கொத்துடையார் எடுத்துக் காட்டியவாறு தொல்லை நூல் உரைகளின் அமைப்பு முறையையும், அவை ஒன்றை யொன்று மறுத்தும் ஒன்றோடொன்று முரணியும் செல்லு மாற்றையும் ஓரின் உண்மைப் பொருள் காண்டற்கு ஆராய்ச்சி எத்துணை இன்றியமையாத தென்பது புலப்படும். இக் கருத்தானன்றே

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

எனப் பொய்யில் புலவரும் கூறிவைத்தனர். ஆராய்ச்சியின்றேல் மக்களின் அறிவு வளர்ச்சியடைதற்கு வழியில்லை. ஒரு மொழியானது துறைதோறும் எண்ணிறந்த நூல் உரைகளைக் கொண்டு மிளிர்வது அம்மொழியினையுடைய மக்களின் ஆராய்ச்சித் திறத்தினால் ஆயதேயாம். மேனாட்டினரிடத்திற்போல நம்மவரிடையே ஆராய்ச்சி காணப்படாமையாற்றான் இற்றை நாளிலே நம் நாட்டு மொழிகள் வளர்ச்சியற்றிருக்கின்றன. ஆனால் நம் முன்னையோர் ஆராய்ச்சி இன்னதென அறியாதாரல்லர். முப்பது நாற்பது நூற்றாண்டுகளின் முன்பே தமிழ்மக்கள் ஆராய்ச்சி செய்யு முறைமையையும் அதன் பெருமையையும் நன்கறிந்திருக்கின்றனர். மிக்க தொன்மையுடையதாகிய தொல்காப்பியம் என்னும் நூலே தமிழின் வழக்கிலும் செய்யுளிலும் உள்ள எழுத்துச் சொற் பொருள்களை முற்ற ஆராய்ந்து முறைப்படுத்தியற்றப் பெற்றதன்றோ ? தொல்காப்பியர் கூறியிருக்கும் நூலிலக்கணம் உரையிலக்கணமெல்லாம் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டனவேயாகும். அவர், உரையைக் காண்டிகை யென்றும், உரை (விருத்தி) யென்றும் இருவகைப்படுத்து வைத்து,

" சூத்திரத்துப் பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே "

என்றும்,

" மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென வொருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர் "

என்றும் உரையிலக்கணங் கூறியிருப்பதனை உய்த்துணர வல்லார்க்கு இவ்வுண்மை புலனாகாநிற்கும். அவர் 'என்மனார் புலவர்' என்று கூறியிருப்பது அவருக்கு முன்னும் அது தலை

சிறந்து நின்றமையைக் காட்டுகிறது. ஒரு நூல் கற்றற்கண் மனவெழுச்சி யுண்டாதற்கே அந்நூலின் முகத்தே ஆராய்ச்சி யுரையொன்று அமையப்பெற வேண்டுமென முன்னையோர் கருதி யிருந்தன ரென்பது ஆக்கியோன் பெயர் முதலிய எட்டனையும் காலம் முதலிய மூன்றனையும் வாய்ப்பக்காட்டும் சிறப்புப் பாயிரத் தினை ஒவ்வொரு நூலும் உடைத்தாயிருக்க வேண்டுமென அன் னோர் வலியுறுத்தமையாற் போதருகின்றது. இங்கே காட்டிய வற்றிலிருந்து, பழைய நூல் உரைகளின் பொருளை யுணர்தற்கும், அவை ஒன்றோடொன்று முரணியவழி அவற்றின் மெய்ம்மை பொய்ம்மை தெளிதற்குமே யன்றி, புதிய நூல் உரைகள் வகுத் தற்கும் ஆராய்ச்சி இன்றியமையாத தென்பது பெறப்படுதல் காண்க. இங்ஙனமாகவும் தமிழ் கற்றோருள்ளே சிலர் முன்னோர் கூறிய அனைத்தையும் முழு உண்மைகளாகக் கொள்ள வேண்டு மென்றும், அவற்றை ஆராய்ந்து அவற்றிலுள்ள வழுக்களை யெடுத்துக்காட்டிக் களையலுறின் அது பெரியோரை இகழ்த லாகிய குற்றமாம் என்றும் கூறித் தமிழ் வளர்ச்சிக்கு இடர் விளைப்பாராகின்றனர். அன்றியும் அவர் அங்ஙனம் கூறுதலால் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கட்கு உரை வகுத்த முன்னோர் பலர், தமக்கு முற்பட்ட உரைகளை மறுத்துப் பெரி யோரை யிகழ்ந்த குற்றத்திற் காளாயினரெனத் தாமே அப்பெரி யோரை இகழ்ந்து குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வாராகின் றனர். இவர்கள் தம்மீது வைத்திருக்கும் அறிவுடன்கூடாத பற்றினை அப்பெரியோர்கள் அறிவரேல் மிக அருவருப்பரென் பது ஒருதலை.

இனி, ஆராய்ச்சி இன்றியமையாத தென்றது கொண்டு யாவருமே அது செய்தற் குரியரெனக் கொள்ளுதல் கூடாது. முறையான கல்வி சிறிதேனும் உடையாரன்றி ஏனையோர் ஆராய்ச்சிக்குரியரல்லர். அடிப்பட்ட கல்வி சிறிது மின்மையால் பழைய நூல் உரைகளின் பொருளுணரும் அறிவில்லாது, வைத் துத் தம்மைப் பிறர் ஆராய்ச்சி வல்லுநரென மதித்தல் கருதி அவையிற்றை ஆக்கியோர்மீது குற்றங்கூறித் திரிவாரும், அவரது கூற்றினைப் போற்றுவாரும் ஒரு நாட்டில் இருப்பின், அஃது

அந்நாட்டின் இழிந்த நிலைமைக்கு அடையாளமாகும். கல்வியுடையாரும் தாம் கற்று வல்ல துறையிலே ஆராய்ச்சியை நடாத்துதலே கருதியாகும். அவர் அங்ஙனம் ஆராயுங்காலும், விருப்பு வெறுப்பின்றி உண்மைப் பொருள் காணவேண்டு மென்னும் நோக்கத்துடன் தொடங்கினாலன்றி அது பயனுடையதாகாது. இப்பண்புடன் ஆராய்ச்சியை மேற்கொண்டு பொருளுண்மை காண்போரே அறிவுடையோரென மதிக்கத்தக்காராவர்.

"காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றா கெடும்."

என்னும் ஆன்றோர் செய்யுள் ஆராய்ச்சி செய்வார்க்கு இருக்க வேண்டிய இன்றியமையாத பண்பினையும், அஃதில்வழிப் படும் இழுக்கினையும் நன்கு அறிவுறுத்துதல் காண்க. நூலாராய்ச்சி செய்வார் தாம் ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு அதற்கு முரணுயவழியெல்லாம் அந்நூற் பொருள்களைத் திரித்துக் கூறுதல் அடாத செயலாகும். கல்வி கேள்விகளாற் றிருந்திய மனமுடையா ரொருவர் தம் நுண்ணறிவாற் பலகாலும் ஆராய்ந்து நலம் பயப்பதெனக் கொண்ட கொள்கையுடன் ஏனைச் சான்றோர் இயற்றிய நூற்பொருள் முரண்படுமாயின் அவர் அந்நூற் பகுதியையோ அன்றி அந்நூல் முழுதையுமோ தமக்கு உடன்பாடாகக் கொள்ளாது விடுத்தல் குற்றமாகாது. ஆனால், அந் நூலாசிரியர் கருத்துக்கு மாறாகத் தமது கொள்கையுடன் பொருந்த அதற்குப் பொருள் செய்தலே ஏதமாம். வாழ்க்கையின் நோக்கமே மெய்யுணர்வு கைவரப்பெறுதலாயிருக்க, அதற்கு நெறியான நூலாராய்தற்கண் பொய்யினைப் பயின்று வருவது எத்துணை அறியாமையாகும்!

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்னும் பொய்யில் புலவரின் மெய்யுரையைக் கற்றறிந்தா ரொருவர் அவர் வாய்மொழிகட்கே பொய்ப்பொருள் கூறிவரின்

அவாது பேதைமையை என்னென்றுரைப்பது! முதற்கண் பொய்யென அறிந்து வைத்தே ஒன்றனைக் கூறுவார் பின்பு அதனை நிலைநிறுத்தலே கருத்தாகச் சான்றுகள் தேடி முயலும் பொழுது நாளடைவில் அவ்வெண்ணம் உறைத்தலால் அதுவே மெய்யாக மாறித் தோன்றுதலும் உண்டு. அவர் நல்லாழ் இருந்து நிருந்தினன்றி அவர்க்குப் பிறர் உண்மை யுணர்த்துவ தென்பது இயல்வதொன்றன்று. எத்தகைய அறிவுடையார்க்கும் ஒரோவழி உண்மை தோன்றுது ஒன்று மற்றொன்றாகத் திரிந்து தோன்றுதல் நிகழக் கூடியதே. அத்திரிபுணர்ச்சியின் பயனாக அவர் தவறான கொள்கையொன்றை வெளிப்படுத்தலுங் கூடியதே. எனினும் அவர் தாமாகவோ அன்றியும் பிறரால் உணர்த்தப் பட்டோ தம் கொள்கை தவறென அறிந்த வழி அதனை விடுத்து உண்மையைக் கடைப்பிடித்தலே நெறியாகும். அவ்வாறன்றித் தாம் முதலிற் கொண்ட கொள்கையை மாற்றுதல் இழிவென்னும் மாண்பிறந்த மான முடையராய் அதனையே நிறுத்துதற்கு முயல்வோர் தமக்கும் பிறர்க்கும் கேடு சூழும் தறுகணாளராவர். இத்தகைய திமைகட் கெல்லாம் காரணம்

> "வெண்மை யெனப்படுவ தியாதெனின் ஒண்மை
> யுடையம்யா மென்னுஞ் செருக்கு"

என வள்ளுவனார் கூறியாங்கு யாவரினும் தம்மையே அறிவுடையாரென மதித்துத் தருக்கும் புல்லறிவாண்மை யாகும்.

இனி, நூலாராய்ச்சி செய்வார்க்கு ஒவ்வொன்றினு முள்ள நலங்களைக் கண்டறிய வேண்டுமென்னும் ஆர்வமே மிகுந்திருக்க வேண்டும். கடலின் ஆழத்தேயுள்ள விலையுயர்ந்த மணிகள் போன்று நூலினுள்ளே அமைந்திருக்கும் அரிய கருத்துக்களும் உண்மைகளும் அவற்றை அறிய வேண்டு மென்னும் அவாவும் உழைப்பு முடையார்க்கே விளங்கித் தோன்றுவன; அல்லாதார்க்கு வெறுங் கூழாங்கல்லும் கிளிஞ்சிலும் போல்வனவே தோன்று நிற்கும். அவர் அவற்றையே பொருளெனக் கொண்டு அமைதலோ அன்றி அந்நூலினை எள்ளி நகையாடலோ செய்வர். ஆராய்ச்சி முறை குறித்து மற்றும் கூற வேண்டுவன பலவுள்ளன.

எனினும் இவ்வுரை விரிந்து செல்லாமை கருதி இன்னும் ஒன்று மட்டும் குறிப்பிட்டு நிறுத்துதும். முற்சொன்ன குற்றமொன்று மின்றி ஒருவர் நூலினை ஆராயும் வழியும் அந்நூல் தோன்றிய காலம் முதலியவற்றின் உணர்ச்சியில்வழி அவர் அந்நூற்பொருளை உள்ளவாறுணரும் வலியிலராகின்றனர். இக்காலத்தே நம்மவரிற் சிலர் ஒரு நூலின் பொருளை நோக்க வேண்டுமே யன்றி அது தோன்றிய காலத்தை நோக்க வேண்டுவதின் றென்கின்றனர். வேறு சிலர் நூல் தோன்றிய காலத்தை அதன் பெருமைக்கோ சிறுமைக்கோ காரணமாகக் கொண்டு விடுகின்றனர். இருவர் கொள்கையிலும் ஓரளவு உண்மையிருப்பினும், ஆழ்ந்து நோக்கின், பெருமை சிறுமைக்காக வன்றி நூலின் பொருளை உள்ளவாறுணர்தற் பொருட்டே அதன் காலத்தை வரையறுத்துணர்தல் வேண்டுமென்பதும், காலத்தை நோக்க வேண்டுவதின் றென்பது அறியாமையா மென்பதும் புலப்படும். திருக்குறள் முதற் பாவிறுள்ள ஆதி என்னும் சொல்லுக்கும், தொல்காப்பியத்தின் இரண்டாறு சூத்திரத்திலுள்ள 'ஆய்தம்' என்னுஞ் சொல்லுக்கும் சிலர் கூறிவரும் பொருள்கள் எவ்வளவு பொருத்தமானவை யென்பது காலவாராய்ச்சியாற் புடமிட்டறிவார்க்கே வெளிப்படும் என்பதனை இங்கே சான்றாகக் காட்டுதும்.

இனி, இங்ஙனம் பன்னூல்களையும் ஆராய்ந்தறிந்த புலமை யுடையார் தமக்கும் உலகிற்கும் பயனுண்டாக வாழு நெறியைப் பின்வருமாறு சுருக்கிக் கூறுதல் சாலும்.

க. தாம் அறிந்த பொருள்கள் தம் வாழ்விலே அல்லது அழுந்திய உணர்விலே ஒன்றுபட வொழுகுதல்.

உ. தாம் அரிதின் உணர்ந்த பொருள்களை ஏனையர் எளிதின் அறிந்து பயனெய்து மாறு உரைத்தலோ எழுதுதலோ செய்து போதரல்.

ஙு. உலகத்தோடு பொருந்த வொழுகுதலாகிய மக்கட் பண்பினை யுடையராதல்.

ச. வாலறிவுடைய இறைவன் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குதல். (தொடரும்)

முதலாம் குலோத்துங்க சோழன்.

(முற்றொடர்ச்சி துணர் 3, பக்கம் 57.)

திருவாளர், T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

எட்டாம் அதிகாரம்.

குலோத்துங்கனது சமயநிலை.

நம் குலோத்துங்கன் கொண்டொழுகியது பொதுவாக வைதிக சமயம் என்பது 'மூந்நூல் பெருமார்பிற் சிறந்தொளிரப் பிறப்பிரண்டா வதுபிறந்து சிறந்த பின்னர்' 'வேதங்கள் நான்கினையும் வேதியர்பாற் கேட்டருளி' னான் என்று ஆசிரியர் சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியிற் கூறியிருத்தலால் நன்கு விளங்குகின்றது. ஆனால் இவன் வைதிக சமயத்தின் உட்பிரிவுகளாகிய சைவவைணவ சமயங்களுள் சைவசமயத்தையே சிறப்பாகக் கொண்டொழுகியவன்; சிவபெருமானிடத்து அளவு கடந்த பத்தி செலுத்தியவன். இவன் காலத்திற்கு முற்பட்ட சோழ மன்னர்கள் எல்லோரும் சைவராகவே இருந்திருப்பதோடு தில்லையில் எழுந்தருளியுள்ள திருச்சிற்றம்பல நாதரைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டும் வந்துள்ளனர். ஆதித்தன் முதற் பராந்தகன் முதலானோர் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்து அதனைச் சிறப்பித்திருக்கின்றனர். நம் குலோத்துங்கனும் தன்முன்னோரைப் போலவே திருச்சிற்றம்பலத் தெம்பெருமானைக் குலதெய்வமாகக்கொண்டு வழிபாடு புரிந்து வந்தான்.

ஆயினும், தாம் மேற்கொண்ட சமயமொழிய மற்றைச் சமயங்களைக் கைக்கொண்டொழுகும் தம் நாட்டுமக்களை வெறுத்துப் பல்லாற்றானும் துன்புறுத்தும் அரசர் சிலர் போல இம்மன்னர் பெருமான் புறச்சமயங்களில் சிறிதும் வெறுப்புக் காட்டியவன் அல்லன். இதற்குச் சில சான்றுகள் எடுத்துக் காட்டிச் சிறிது விளக்குவாம். சோழ இராச்சியத்திலுள்ள பல வைணவ. சமண பௌத்தக் கோயில்கள் தோறும் இவனது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தஞ்சாவூர் சில்லாவைச் சார்ந்த மன்னார்குடியிலுள்ளதும் இப்போது இராசகோபாலசாமி கோயில் என்று வழங்கப் பெறுவதுமாகிய திருமால் கோட்டம் இவன் பெயரால் எடுப்பிக்கப்பெற்ற தொன்றும். 'குலோத்துங்கசோழ விண்ணகரம்' என்பது அதற்குரிய பழைய பெயர். அன்றியும் நாகப்பட்டினத்தின்கண் கடாரத்தரசனாகிய சூடாமணிவர்மனால் கட்டத் தொடங்கப் பெற்று அவனது மகனாகிய மாறவிசயோத்துங்கவர்மனால் முடிக்கப்பெற்ற இராசராசப்பெரும்பள்ளி என்னும் புத்த விகாரத்திற்கு நம் குலோத்துங்கன் விளைநிலங்களை நிபந்தமாக விட்டிருக்கின்றான். கி. பி. 1090-ல் இக்கோயிலுக்கு இவ்வேந்தன் விட்ட நிபந்தங்களை யுணர்த்தும் செப்பேடுகள் 'ஹாலண்டு' தேயத்திலுள்ள 'லெய்டன்' நகரத்துப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருத்தலை இன்றுங் காணலாம். இத்தகைய செய்திகளை யாராய்ந்து உண்மைகாணுமிடத்து, இவன் தன் காலத்து வழங்கிய எல்லாச்சமயங்களிடத்தும் பொது நோக்குடையவனாய் அவற்றை அன்புடன் ஆதரித்து வந்தவன் என்பது இனிது பெறப்படுகின்றது. ஆயினும், இவன் சிவபிரானிடத்து ஆழ்ந்த பத்தியுடையவனாய்ப் பெரிதும் ஈடுபட்டிருந்தான் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். இவன் எய்தியிருந்த திருநீற்றுச்சோழன் என்ற அருமைத் திருப்பெயரொன்றே இதனை நன்கு வலியுறுத்தும். அன்றியும், சேக்கிழார் பெருமானைக் கொண்டு திருத்தொண்டர் புராணம் பாடுவித்து உலகிற் குதவியவன் இவ்வரசர் பெருந்தகையே யாவன். ஒருவன் தன் சமயத்திற்குச் செய்யக் கூடிய திருத்தொண்டுகளுள் இதனினும் சிறந்தது வேறு யாதுளது? ஆகவே இவனைச் சிறந்த சைவர்தல்மணி என்று கூறுதல் எவ்வாற்றானும் பொருத்த முடையதே யாகும்.

ஒன்பதாம் அதிகாரம்.

குலோத்துங்கனது குணச் சிறப்பு.

நம் குலோத்துங்கன் ஒரு செங்கோல் வேந்தனுக்குரிய எல்லா நற்குணங்களையும் ஒருங்கே படைத்தவன். இவன்பாற் காணப் படும் உயர்குணம் பலவுள் முதலாவதாக வைத்துப் பாராட்டத் தக்கது இவனது கடவுள் பத்தியே யாகும். சிறப்பாகச் சிவ பெருமானிடத்து இவன் ஒப்பற்ற பத்தியுடையவனாய் ஒழுகிவந்த வன் என்பது முன்னர் விளக்கப்பட்டது. அன்றியும், தன் தலை நகராகிய கங்கை கொண்ட சோழபுரத்தினின்று புறப்பட்டுக் காஞ்சிமா நகரை நோக்கிச் செல்பவன் தில்லையம்பதிக்குப் போய்ப் பொன்னம் பலத்திலே நடம்புரியும் முக்கட்பெருமானை வணங்கி, அவரது இன்னருள் கொண்டு வடதிசை ஏகினான் என்று கலிங் கத்துப் பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் கூறியிருப்பது இவனது சிவபத்தியின் மாண்பை இனிது விளக்குகின்றது.

இனி, அடுத்துப் புகழ்தற்குரியதாய் இவனிடத்து அமைந் திருந்த சிறந்த குணம் இவனது வீரத்தன்மையேயாம். இவன் இத்தமிழகம் முழுமையும் இதற்கப்பாலுள்ள கங்கம், கலிங்கம், கொண்கானம், சிங்களம், கடாரம் முதலான பிற நாடுகளையும் தன்னடிப்படுத்திப் புகழுடன் ஆண்டுவந்த பெருவீரன் என்பதை முன்னரே கூறியுள்ளேம். ஆகவே, இவனை இப்பாரதகண்டத்தின் பெரும் பாகத்திலும் இதனைச் சூழ்ந்துள்ள பிறவிடங்களிலும் தன் வெற்றிப் புகழைப் பரப்பிய வீரர்தலைமணி என்றுரைத்தல் சிறிதும் மிகைபடக் கூறியதாகாது. இவனது படைத்தலைவர்களும் அமைச் சர்களும் இவனைப் போலவே வீரத்தன்மை வாய்ந்தவர்களாய் இவனுக்கு உசாத்துணையாய் அமர்ந்து இவனது வென்றிமேம் பாடு யாண்டும் பரவுதற்குக் காரணமாயிருந்தனர் என்பது ஈண்டு அறியத்தக்கது. அன்னோருள் சிலரது வரலாற்றை மற்றோர் அதிகாரத்திற் காணலாம்.

இவன் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்த வேந்தன் ஆவான். சங்கத்துச் சான்றோர் நூல்களையும் பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலாய நூற்களையும் நன்கு பயின்றிருந்தான். ஆசிரியர் சயங்கொண்டாரும் இவனைப் பண்டித சோழன் என்று கலிங்கத்துப்பரணியில் ஓரிடத்தில் குறித்துள்ளார். இவன் புலவர்களது கல்வித்திறத்தை அளந்து காண்டற்குரிய பேரறிவு படைத்தவனாயிருந்தமையின் அன்னாரிடத்துப் பெருமதிப்பும் அன்பும் வைத்திருந்தான். அன்றியும் அவர்கட்கு வேண்டியன அளித்துப் போற்றியும் வந்தான். எனவே இம்மன்னன் புலவர்களைப் புரந்து வந்த பெருங்கொடை வள்ளல் ஆவன். இவன், 'கலையினொடுங் கவிவாணர் கவியினொடும் இசையினொடும்' பொழுதுபோக்கி வந்தனன் என்பர் கவிச்சக்கிரவர்த்தியாகிய சயங்கொண்டார். இவன், செந்தமிழ்ப் புலமையுடையவனாயிருந்தமையோடு வடமொழிப் பயிற்சியும் பெற்றிருந்தான். அன்றியும், இவன் வேங்கி நாட்டில் ஆட்சிபுரிந்தபோது அந்நாட்டு மொழியாகிய தெலுங்கே அரசாங்க மொழியாக அமைந்திருந்தது. வேங்கி நாட்டிலுள்ள இவனது கல்வெட்டுக்களும் தெலுங்கு மொழியில் காணப்படுகின்றன. எனவே, இவன் தெலுங்கு மொழியைக் கற்றவனாதல் வேண்டும். ஆகவே, தமிழ், ஆரியம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் இவ்வேந்தன் நல்ல பயிற்சியுடையனாயிருந்தனன் என்பது நன்கு புலப்படுகின்றது.

நம் வளவர்பெருமான் நூலறிவு எய்தியிருந்ததோடு இயற்கையில் நுண்ணறிவும் அமையப்பெற்றிருந்தான்; நல்லறிஞர்களோடு அளவளாவி அறியவேண்டியவற்றை நன்கறிந்த பேரறிஞனாய் விளங்கினன். ஆசிரியர் சயங்கொண்டார் இவனை 'அறிஞர் தம்பிரான் அபயன்' என்று கலிங்கத்துப்பரணியில் கூறியிருத்தலும் இச்செய்தியை இனிது வலியுறுத்தும்.

இனி, இவ்வேந்தனது செங்கோற் பெருமையும் பெரிதும் மதிக்கத்தக்கதாகும். இவன் 'குடியுயரக் கோல்உயரும்' என்பதை நன்குணர்ந்தவனாதலின் தன் நாட்டிலுள்ள குடிகள் எல்லோரும் வளம் பெறுதற் கேற்ற செயல்களைச்செய்து அவர்களது

போன்பிற்குரியவன் ஆயினன். இவன், தன் குடிமக்கள் பண்டைக் காலமுதல் அரசர்க்குச் செலுத்திவந்த தலைவரியாகிய சுங்கத்தைத் தவிர்த்து, அவர்களது வாழ்க்கிற்கும் புகழுரைக்கும் உரிமைபூண்டு விளங்கிய செய்தி முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இவனது செங்கோற் சிறப்பை 'அபயன் இமயம் திரித்த கோலி லோர் வளையுண்டு—நீதிபுனை செய்ய கோலிலோர் வளைவில்லையே' என்று பாராட்டிக் கூறியுள்ளனர் புலவர் பெருமானாகிய சயங் கொண்டாரும்.

இவன் பெரியோர் கூறும் நன்மொழிகளைக் கேட்டு நல்வழி யில் ஒழுகும் இயல்பினன்; ஆசிரியர் சேக்கிழார் சமண நூற் பயிற்சி தீதுவிளைக்கும் என்று இவனுக்கு அறிவுறுத்தியபோது இவன் சிந்தாமணிப் பயிற்சியை யொழித்து, அப்பெரியாரைக் கொண்டு திருத்தொண்டர் புராணம் பாடுவித்து அந்நூலைப் போற் றிப் படித்தின்புற்று வந்தமையால் இதனை நன்குணரலாம்.

அன்றியும், இவன் அஞ்சாமை, ஈகை, ஊக்கம், சுற்றந்தழு வுதல், காலமறிந்து கருமமுடிக்கும் ஆற்றல் முதலான அருங் குணங்கள் படைத்த பெருந்திறல் வேந்தனாய் அந்நாளில் நில வினான். சுருங்கவுரைக்குமிடத்து, இம்மன்னர் பெருமான், தன்னடிவந்து பொருந்தினோர் எவரேயாயினும் தண்ணளி சுரந்து அவர்களை வாழ்விக்கும் வண்மையும் எதிர்த்தோர் கூற்று வெகுண் டன்ன ஆற்றலுடையவராயினும் அன்னோரைப் போரிற் புறங் காணும் வீரமும் உடையவனாய் விளங்கிய பெருந்தகையாவன் என்று கூறி இவ்வதிகாரத்தை ஒருவாற்றான் முடிக்கலாம்.

பத்தாம் அதிகாரம்.

குலோத்துங்கனது மனைவியரும் மக்களும்.

குலோத்துங்கனது பட்டத்தரசியாக விளங்கியவள் மதுராந் தகி என்பாள். இவளே இவ்வேந்தனது முதல்மனைவி. இவளுக்குத் தீனசிந்தாமணி என்ற பெயரும் உண்டு. இவ்வரசி இவனது

அம்மானாகிய விசயாலயேந்திர சோழனது மகள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவனுக்கு வேறு இருமனைவியரும் இருந்தனர். அவர்கள் ஏழிசைவல்லபி, தியாகவல்லி என்ற இருவருமேயாவர். பட்டத்தரசியாகிய மதுராந்தகி என்பாள் குலோத்துங்கனது ஆட்சியின் இருபதாம் ஆண்டின் முன்னர் இறந்து விட்டனள். பின்னர், இவனது மூன்றும் மனைவியாகிய தியாகவல்லி என்பவள் பட்டத்தரசியாயினள். இவளே இவ்வரசனது ஆட்சியின் பிற்பகுதிமுழுமையும் பட்டத்தரசியாகவிருந்து வாழும்பேற்றை எய்தியவள். இரண்டாம் மனைவியாகிய ஏழிசைவல்லபி அரசனுக்கு என்றும் இரண்டாம் மனைவியாகவே இருந்து வாழ்ந்து வந்தனள். இவளை 'ஏழிசை வளர்க்கவுரியாள்' என்று ஆசிரியர் சயங்கொண்டார் கூறுதலால் இவள் ஏழிசையிலும் புலமைபுற்றிருந்தனள் என்பது புலப்படுகின்றது.

இனி, பொன்னின்மாலை மலர்மாலை பணிமாறியுடனே புவனிகாவலர்கள் தேவியர்கள் சூழ்புடைவரச், சென்னி யாணையுடனாணையை நடத்து முரிமைத் தியாகவல்லி நிறை செல்வி மல்கிவரவே' என்னுங் கலிங்கத்துப்பரணிப் பாடலால் பட்டத்தரசியாகிய தியாகவல்லியின் பெருமையும் அரசன் அவள்பால் வைத்திருந்த மதிப்பும் நன்கு விளங்கும். இவள், 'சிவனிடத்துமையெனத் தியாகவல்லி—உலகமுழுதுடையாள்' என்று நம் குலோத்துங்கனது மெய்க்கீர்த்தியிலும் புகழப்பட்டுள்ளாள்.

இனி, நம் குலோத்துங்கனது மனைவியருள் பட்டத்தரசியாக விளங்கியவளைப் புவனமுழுதுடையாள் அல்லது அவனிமுழுதுடையாள் என்றும், மற்றையோரை ஏழுலகுமுடையாள், திரிபுவனமுடையாள், உலகுடையாள் என்றும் அக்காலத்தில் வழங்கி வந்தனர் என்பது கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. அவர்களது இயற் பெயர்களோடு இப்பெயர்களையும் சேர்த்துச் சிறப்பிப்பது அந்நாளில் பெருவழக்காயிருந்தது. இவ்வுண்மையை அக்காலத்துக் கல்வெட்டுக்களைக் கொண்டறியலாம்.

மதுராந்தகி என்பாள் பட்டத்தரசியாக நிலவிய நாட்களில் புவனிமுழுதுடையாள் என்றும் அவனிமுழுதுடையாள் என்றும்

வழங்கப்பெற்றனள். அப்போது இரண்டாம் மனைவியாகிய எழிசைவல்லபி ஏழுலகுமுடையாள் என்ற சிறப்புப் பெயர் எய்தியிருந்தாள். மூன்றும் மனைவியாகிய தியாகவல்லி உலகுடையாள் என்று வழங்கப்பட்டனள். மதுராந்தகி வானுலகடைந்தபின்னர், தியாகவல்லி பட்டத்தரசியாயினள் என்று முன்னரேகூறியுள்ளேம். அவள் அந்நிலையை எய்தியவுடன் அக்கால வழக்கம்போல் புவனிமுழுதுடையாள் என்ற சிறப்புப்பெயரைப் பெற்றனள். இரண்டாம் மனைவியாகிய எழிசைவல்லபி வேறுபாடின்றி அந்நிலையிலே யிருந்தமையின் என்றும் எழுலகு முடையாளாகவே விளங்கினள்.

நம் குலோத்துங்கனது முதல் மனைவியாகிய மதுராந்தகிக்கு மக்கள் எழுவர் இருந்தனர். அவர்களுள் முதல் மகன் விக்கிரம சோழன் எனப்படுவான். இரண்டாம் மகன் இராசராசன் என்னும் பெயரினன்; மூன்றும் மகன் வீரசோழன் என்பான்; மற்றைப் புதல்வர்களது பெயர்கள் இக்காலத்துப் புலப்படவில்லை. அன்றியும் அம்மங்கைதேவி என்ற ஒருமகளும் இருந்தனள். இவர்களுள் முதல்வனாகிய விக்கிரமசோழன் கி. பி. 1108-ஆம் ஆண்டில் சோழமண்டலத்திற்கு இளவரசுப்பட்டங் கட்டப் பெற்றுத் தன் தந்தையிடம் அரசியல் நுட்பங்களைக்கற்று வந்தான். இவன், தென்கலிங்க மன்னனாகிய தெலுங்கவீமன்மேல் ஒருமுறை படையெடுத்துச் சென்று அவனைப் போரிற் புறங்கண்டு வெற்றித் திருவுடன் திரும்பினான். கி. பி. 1120-ல் நம் குலோத்துங்கன் விண்ணுலகெய்தியபின்னர் அரியணை யேறிச் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்டு ஆட்சி புரிந்தவன் இவ்விக்கிரம சோழனே யாவான். இவனுக்குத் தியாக சமுத்திரம் அகளங்கன் முதலான வேறு பெயர்களும் உண்டு. புலவர் பெருமானாகிய ஒட்டக்கூத்தர் இவ்வேந்தன்மீது 'விக்கிரமசோழனுலா' என்ற ஓர் உலாப்பாடி யுள்ளனர். இம்மன்னன் இப்புலவர் பெருந்தகையைப் பெரிதும் பாராட்டி ஆதரித்து வந்தான்.

இரண்டாம் மகனாகிய இரண்டாம் இராசராசன் என்பான் கி. பி. 1077 முதல் 1078 வரை ஓராண்டு வேங்கி நாட்டில் அரசப் பிரதிநிதியாயமர்ந்து அதனை அரசாண்டனன்; பின்னர், தன்

தந்தையிடத்தமர்ந்து அனுக்கத் தொண்டுகள் புரிதல் வேண்டுமெனச் சோழமண்டலத்திற்குத் திரும்பிவந்து விட்டான். மூன்றும் மகனாகிய வீரசோழன் என்பவன் தன் தமையனாகிய இரண்டாம் இராசராசனுக்குப் பின்னர் வேங்கி நாட்டிற்கு அரசப் பிரதிநிதியாக அமர்ந்தான். அங்கு அவனது ஆட்சி பல ஆண்டுகள் நடைபெற்றிருத்தல் வேண்டும்.

குலோத்துங்கனது மற்றை மக்களைப்பற்றிய வரலாறு இப்போது புலப்படவில்லை.

குலோத்துங்கனது சுற்றத்தினர்.

1. தந்தையைப்பெற்ற பாட்டன் — விமலாதித்தன்.
2. தந்தையைப்பெற்ற பாட்டி — குந்தவ்வை II.
3. தந்தை — கீழைச்சளுக்கியனாகிய இராசராசநரேந்திரன்.
4. தாய் — அம்மங்கைதேவி I.
5. உடன் பிறந்தாள் — குந்தவ்வை III.
6. மனைவியர் — மதுராந்தகி, ஏழிசைவல்லபி, தியாகவல்லி.
7. மக்கள் — விக்கிரமசோழன், இராசராசன் II. வீரசோழன், அம்மங்கைதேவி II.
8. சிறிய தாதை — விசயாதித்தன் VII.
9. தாயைப்பெற்ற பாட்டன் — கங்கைகொண்டசோழன் அல்லது இராசேந்திர சோழன் I.
10. அம்மான்மார் — இராசாதிராசன் I, விசயராசேந்திரசோழன், மும்முடிச்சோழன், வீரராசேந்திரசோழன்.
11. அம்மான்சேய் — அதிராசேந்திரன்.
12. முதல் மனைவியின் தந்தை — விசய ராசேந்திரன்.

பதினொன்றாம் அதிகாரம்.

குலோத்துங்கனது அரசியல் தலைவர்கள்.

குலோத்துங்கனது ஆளுகையில் அமைச்சர்களாகவும் படைத் தலைவர்களாகவும் திருமந்திர ஓலைநாயகமாகவும் திருமந்திர ஓலையாகவும் திருவாய்க் கேள்வியாகவும் புரவுவரித் திணைக்களத்தினராகவும் அமர்ந்து அரசாங்கத்தை இனிது நடத்திய அரசியல் அதிகாரிகள் எத்துணையோ பலர் ஆவர். அவர்களுட் சிலரது பெயர்கள் மாத்திரம் கல்வெட்டுக்களால் தெரிகின்றன. அன்னோருள் மூவரது வரலாற்றைச் சிறிது விளக்குதற்குரிய கருவிகள் கிடைத்துள்ளமையின் அவர்களைப்பற்றிய செய்திகளும் ஈண்டுச் சுருக்கமாக எழுதப்படுகின்றன.

1. கருணாகரத் தொண்டைமான் :—இவனது வரலாற்றைக் கலிங்கத்துப்பரணி ஒன்றே சிறிது கூறுகின்றது. அந்நூல் ஒன்றிலதேல் தமிழகத்தில் அக்காலத்தே பெருவீரனாய்ப் பெரும்புகழ் படைத்து விளங்கிய இக்குறுநில மன்னனது பெயரே பின்னுள்ளோர் தெரிந்து கொள்ளாதவாறு மறைந்தொழிந்திருக்கும் என்பது திண்ணம். இவன் பல்லவர் குலத்தில் தோன்றிய ஒரு சிற்றரசன். இவன், நுண்ணறிவிலும் கல்வி கேள்விகளிலும் சிறந்தவனாயிருந்தமையின் நம் குலோத்துங்கனது அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாக முதலில் அமர்த்தப்பட்டான். பின்னர், தன் பெரிய ஆற்றலாற் படிப்படியாக உயர்நிலையை எய்தி இறுதியில் வேந்தனது அமைச்சர் தலைவனாகவும் படைத்தலைவர்களுள் முதல்வனாகவும் ஆயினான். இவனே, வடகலிங்கப்போர்க்குத் தலைமைப் படைத்தலைவனாகச் சென்று, போர் நடத்தித் தன் அரசனாகிய குலோத்துங்க சோழற்கு வாகைமாலை சூட்டியவன். குலோத்துங்கன் எய்திய பெரும்புகழுக்குச் சிறந்த காரணமாயிருந்தோருள் இவன் முதன்மையானவன் என்று சிறிதும் ஐயமின்றிக் கூறலாம். கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டாரும், இவனை 'வண்டையர் அரசன் அரசர்கள் நாதன் மந்திரி—உலகு

புகழ் கருணாகரன்' எனவும் 'கலிங்கப்பாணி நம் காவலனைச் சூட்டிய தோன்றல்' எனவும் புகழ்ந்துள்ளார். இவனது அரிய அரசியல் ஊழியத்தைப் பெரிதும் பாராட்டி அதற்குரிய அறிகுறியாக 'வேள்' 'தொண்டைமான்' ஆகிய பட்டங்கள் குலோத்துங்க சோழனால் இவனுக்கு வழங்கப்பட்டன. இவன், இத்தகைய சிறப்பினை எய்திக் குலோத்துங்கனது அரசியலைப் பெருமையுறச் செய்தது இவ்வேந்தனது ஆட்சியின் பிற்பகுதியிலேயாகும். இவன், குலோத்துங்கனது மகனாகிய விக்கிரம சோழனது ஆளுகையிலும் இருந்துள்ளான் என்பது விக்கிரம சோழனுலாவினால் அறியப்படுகின்றது. இவன் வாழ்ந்த ஊர் வண்டை என்பர் ஆசிரியர் சயங்கொண்டார். அவ்வூர், சோழமண்டலத்தில் குலோத்துங்க வளநாட்டைச் சார்ந்த திருநறையூர் நாட்டிலுள்ள வண்டாழஞ் சேரியாகும் என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. அஃது இப்போது வண்டுவாஞ்சேரி என்ற பெயரோடு தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணம் தாலூகாவிலுள்ள நாச்சியார் கோயிலிலிருந்து குடவாசலுக்குச் செல்லும் பெருவழியிலுள்ளது. வண்டாழஞ்சேரி என்பது வண்டுவாஞ்சேரி என்று பிற்காலத்தில் மருவி வழங்கி வருகின்றது.

இவன், சிவபெருமானிடத்தில் அளப்பரிய பேரன்புடையவனாய்த் திருவாரூரில் அரிய திருப்பணிகள் செய்துள்ளான். இவன் இறுதியில் திருவாரூரில் தியாகேசரது திருவடிகளிற் கலந்தனன் என்றும் தியாகேசரது திருப்பெயர்களுள் கருணாகரத் தொண்டைமான் என்பதும் ஒன்று என்றும் திருவாரூர் உலாக் கூறுகின்றது. இதனால், இவன் அப்பெருமானிடத்துக் கொண்டிருந்த அன்பின் முதிர்ச்சி ஒருவாறு விளங்கும்.

2. அரையன் மதுராந்தகனான குலோத்துங்கசோழ கோளராசன்:— இவன் சோழமண்டலத்தில் மண்ணி நாட்டிலுள்ள முழையூரின் தலைவன்; குலோத்துங்கசோழனது படைத்தலைவர்களுள் ஒருவன். அரசனால் கொடுக்கப்பெற்ற குலோத்துங்க சோழ கோளராசன் என்ற பட்டம் எய்தியவன்; குலோத்துங்கன் சேரர்களோடு நடத்திய போர்க்குப் படைத்தலைமை வகித்துச்

சென்று அதில் வெற்றிபெற்றவன்; இவ்வேந்தனால் சோழமண்டலத்தில் கோட்டாற்றில் நிறுவப்பெற்ற நிலைப்படைக்குத் தலைவனாயிருந்தவன். இவன் கோட்டாற்றில் தங்கிய நாட்களில் அங்கு 'இராசேந்திர சோழேச்சரம்' என்ற கோயில் எடுப்பித்துள்ளான். அதற்கு நிபந்தங்களுக்காகத் தேவதான இறையிலியும் குலோத்துங்க சோழனால் விடப்பட்டுள்ளது. இதனால், இவன் சிவபெருமானிடத்தில் பெரிதும் ஈடுபாடுடையவனாய் இருந்தனன் என்பது நன்கு விளங்குகின்றது.

3. மணவிற் கூத்தனான காலிங்கராயன்:—இவன் தொண்டைமண்டலத்திலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய மணவிற்கோட்டத்து மணவில் என்ற ஊரின் தலைவன்; குலோத்துங்கனது ஆட்சியின் முற்பகுதியில் படைத்தலைவனாயமர்ந்து பெரும்புகழ் எய்தியவன்; குலோத்துங்கன் வேணாடு, மலைநாடு, பாண்டிநாடு, வடநாடு முதலியவற்றோடு நிகழ்த்திய போர்களில் படைத் தலைமைவகித்து வெற்றியுற்று, அதனால் தன் அரசனுக்கு என்றும் நிலைபெறத்தக்க புகழை யுண்டுபண்ணியவன். இவனது போர் வன்மையையும் பெருமையையும் நன்குணர்ந்த குலோத்துங்கன் இவனுக்குக் 'காலிங்கராயன்' என்ற பட்டம் அளித்தான்.

இவன், தில்லையம்பலத்தில் நடம்புரியும் இறைவனிடத்துப் பேரன்பு பூண்டொழுகி, ஆண்டு இயற்றிய திருப்பணிகள் பல; அவற்றுள் தில்லையம்பலம் பொன்வேய்ந்தமையும், அங்கு நூற்றுக்கால் மண்டபம், பெரிய திருச்சுற்றுமாளிகை, தேவாரம் ஓதுதற்குரிய மண்டபம், சிவகாமகோட்டம் முதலியவற்றைக் கட்டுவித்தமையும் சிறந்தனவாம். அன்றியும் இவன் தியாகவல்லி முதலான ஊர்களைப் பொன்னம்பலவாணருக்குத் தேவதான இறையிலியாக விட்டிருக்கின்றனன். சமயகுரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசு அடிகளை ஆட்கொண்டருளிய திருவதிகை வீரட்டானேச்சுரர் திருக்கோயிலில் இவன் செய்துள்ள அருந்தொண்டுகள் அளவிறந்தன. அங்குக் காமகோட்டம் எடுப்பித்தும், பொன் வேய்ந்தும், அடாங்கம் வேள்விச்சாலையும் அமைப்பித்தும், தேவதான இறையிலிவிடுத்தும் செய்த அருந்தொண்டுகள் அளவிறந்தன என்பர்.

இவற்றால் இவனது சிவபத்தியின் மாட்சி இத்தகையதென்று நன்கு புலப்படுகின்றதன்றோ? இனி, இவன் சைவசமயத்திற்குப் புரிந்துள்ள அரும்பணிகளுட் சிறந்தது மூவர் அருளிய தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத் தில்லையம்பதியிற் சேமித்து வைத்தமையே யாகும். இவன் இவ்வாறு ஆற்றிய அரும் பெருந் தொண்டுகளை விளக்கக்கூடிய பல வெண்பாக்கள் தில்லையம்பதியிலும் திருவதிகை வீரட்டத்திலும் உள்ள கோயில் களில் வெட்டப் பட்டுள்ளன.

இவன், விக்கிரமசோழன் ஆட்சியிலும் இத்தகைய உயர்நிலையிலே இருந்தனன் என்பது விக்கிரமசோழன் உலாவடிகளாலும் புலனாகின்றது.

பன்னிரண்டாவது அதிகாரம்.

குலோத்துங்கன் காலத்துப்புலவர்.

குலோத்துங்கன் காலத்துச் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்கள், திருத்தொண்டர் புராணமியற்றிய சேக்கிழார் குரிசிலும் கலிங்கத்துப் பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டாருமே யாவர். இவர்களது வரலாற்றை அடியிற் சுருக்கி வரைவாம்.

சேக்கிழார்.

சேக்கிழார், தொண்டை மண்டலத்திலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்தில், குன்றைவளநாட்டின்கணுள்ள குன்றத்தூரில், சேக்கிழார் குடியில் தோன்றியவராவார். இவருடைய பெற்றோர்கள் இவர்க்கிட்டு அழைத்த பெயர் 'அருண்மொழித் தேவர்' என்பது. இவர் சிவபத்தியும் நுண்ணறிவும் சொல்வன்மையும் இயல்பாகவே வாய்க்கப்பெற்றவர். பின்னர், பன்னூல்களையும் ஓதியுணர்ந்து தமக்கு ஒப்பாருமிக்காருமின்றித் திகழ்ந்தனர். சேக்கிழார்குடி,

இவரது பரந்தகல்வியறிவு சிறந்த ஒழுக்கம் முதலியவற்றால் சால விளக்கமுற்றமையின், இவரை அறிஞர்களெல்லாம் 'சேக்கிழார்' என்றே அழைப்பாராயினர். இவரது பெருமையை நன்கு கேள்வியுற்ற முதற்குலோத்துங்க சோழன் இவரையழைப்பித்துத் தன் முதன்மந்திரியாக்கி, இவர்க்கு 'உத்தமசோழப்பல்லவன்' என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தனன். இவர் குலோத்துங்கன்பால் அமைச்சுரிமை எய்தியமைபற்றி ஒரு கதை கூறுவர். அஃது அடியில் வருவது.

ஆனித்திருவிழா ஒன்றில் பொன்னம்பலவாணரைத் தரிசிக்குமாறு தமிழ்வேந்தராய சேர சோழ பாண்டியர் மூவரும் சிதம்பரத்திற்குச் சென்றனர். தொண்டை நாட்டரசரும் அவண் எய்தினர். இந்நான்கு மன்னரும் கூடியிருக்கும் அவைக்களத்தே புலவர் ஒருவர் போந்து, ஒளவையார் பாடியுள்ள,

'வேழ முடைத்து மலைநாடு மேதக்கச்
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து'

என்ற செய்யுளை யாவரும் கேட்க இனிது எடுத்துரைத்தார். இதனைச் செவியுற்ற சேரசோழ பாண்டியர் மூவரும் எங்கள் நாட்டிற் சான்றோரிலரோ? தொண்டைநாடு சான்றோருடைத்தென்று கூறியவாறென்னை? என்று அவரைக்கேட்டு, தொண்டை நாட்டு மன்னனை நோக்கி 'நுமது நாட்டிற் சான்றோருளரென்பதை எங்கட்குக் கண்கூடாகக் காட்டல் கூடுமோ?' என்று வினவினர். அதற்கு அவ்வேந்தன் 'நீவிர் சான்றோரிருத்தலைத் தக்க வழி கொண்டு அறிதலே தகுதியுடைத்து' என்றனன்.

பின்னர், 'ஒருவரது கல்வியறிவையும் மதிநுட்பத்தையும் தக்கவாறு அளந்து காண்டலே அவரைச் சான்றோரென மதித்தற்கு ஏற்ற வழியாகு' மென்பதை யாவரும் உளங்கொண்டு ஒருப்பட்டு 'பூமியிற் பெரிது யாது? கடலிற் பெரிது யாது? மலையிற் பெரிது யாது'? என்ற மூன்று வினாக்களையும் எழுதி

'இவற்றிற்கு விடை இறுப்போரே சான்றோராவர்' என்றுறுதி கொண்டு அவற்றை யாண்டும் அனுப்புவாராயினர். பலர் பெற்றும் விடை எழுதவில்லை. அவற்றைப் பெற்ற சேக்கிழார் அடியிற் குறித்துள்ள மூன்று திருக்குறட் பாக்களையும் அவ்வினாக்கள் மூன்றிற்கும் விடையாக எழுதியனுப்பினர். அவை—

1. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.
2. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.
3. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினும் மாணப் பெரிது. என்பனவாம்.

இவ்விடையினைப் பெற்ற மன்னர்கள் வியப்படைந்து சேக்கிழாரது மதிநுட்பத்தையும் விரிந்த கல்வியறிவையும் பெரிதும் பாராட்டித் 'தொண்டைநாடு சான்றோருடைத்தெனக் கூறப் பெற்றிருத்தல் முற்றிலும் உண்மையே யாகு' மென்றுரைத்து மகிழ்ந்தனர். அம்மன்னர்களுள் ஒருவனாய முதற் குலோத்துங்கன் இவரை அழைப்பித்து அமைச்சுரிமையளித்துச் சிறப்பித்தனன் என்பர்.

இனி மேற்கூறிய கதையில் பல ஐயங்களும் வினாக்களும் எழுகின்றனவாதலின் அதனை மெய்ம்மையானது எனக் கொள்வதற்குத்தக்க வலிமையில்லை. ஆதலின், அஃது எவ்வாறாயினும் ஆகுக. ஆயினும் முதற் குலோத்துங்க சோழன் இவர்க்கு மந்திரத்தலைமை அளித்தது, இவர் நூலறிவாலும் நுண்ணறிவாலும் அடைந்திருந்த பெருமை நோக்கியே யாகுமெனக் கொள்வதிற் றடையாதுளது? இது நிற்க. சேக்கிழார் தம் தொழிலில் மிகச்சிறப்புற்று விளங்கினர். அரசனும் இவர்பால் அன்பு பூண்டொழுகுவானாயினன். அமைச்சர் பெருமானார் சோணாட்டகத்துள்ள திருநாகேச்சுரத்தின்பாற் பேரன்புடையாராய் இருந்தமையின், தம் குன்றத்தூரின்கண் ஒரு கோயில் எடுப்பித்து, அதற்கும் திருநாகேச்சுரமெனப் பெயரிட்டு முறைப்படி வழிபாடு செய்துவந்தனர்.

இஃதிங்ஙனமாக, வளவர்கோமான் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சீவகசிந்தாமணியின்பால், அதன் சொற்சுவை பொருட்சுவை முதலியவற்றாற் பெரிதும் ஈடுபட்டு, படித்து இன்புறுவானாயினன். இதனைக்கண்ட சேக்கிழார், அந்நூல் தமிழ்நலம் நன்கு வாய்க்கப்பெற்றதேனும், மறுமைக்குப் பயன் படாததோர் சைன காவியமாக இருத்தலின் அந்நூற்பயிற்சியை அறவொழிக்குமாறு அரசற்கு அறிவுறுத்தக் காலங் கருதியிருந்தனர். ஒருநாள், அரசனை நோக்கி, 'வேந்தர் வேந்தே! சிந்தாமணி என்பது சமணரது பொய்ந்நூல்; சொற்பொருள் நலங்களாற் சிறப்புற்றிருப்பினும் இம்மைக்கும் அது பயன் படாததாகும்; இம்மை மறுமை நலங்களைப் பயப்பது சிவகதையேயாம்' என்றனர். இதனைச் செவியேற்ற அரசன், 'அமைச்சரேறே! இது பயனற்ற கதையாயின் இருமையும் பயக்கத்தக்க சிவகதையாது? அதன் வரலாற்றை எனக்கு நன்கு நவில்க' என்றனன். உடனே சேக்கிழார், 'அரசே! ஆரூரிறைவன் அடியெடுத்தருள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'திருத்தொண்டத்தொகை' என்னும் பதினொரு பாடல்களடங்கிய பதிகமொன்று பாடியுள்ளார். அதன் பொருளை நம்பியாண்டார் நம்பி என்பவர் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார்பால் நன்கு உணர்ந்து, 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்னும் நூல் இயற்றியுள்ளனர்; அதனை, முதல் இராசராச சோழதேவர் முதலாய அறிஞரெல்லாம் படித்தின்புற்றனர்; அஃதே இருமையும் பயக்கும் சிவகதையாம்.' என, குலோத்துங்கன் அதனைத் தனக்குணர்த்துமாறு ஆர்வமுடன் வேண்டினன். அங்ஙனமே, சேக்கிழார் திருத்தொண்டர் வரலாற்றைச் சுருக்கி யுரைத்தனர். அரசன் அதனைக் கேட்டு அகமகிழ்ந்து, அமைச்சர்க்குப் பெரும் பொருளளித்து, அதனைப் பெருங்காப்பியமாகப்பாடி உலகிற்கு உபகரிக்குமாறு வேண்டினன். சேக்கிழார் அதற்கிசைந்து, தில்லையம்பதியடைந்து இறைவன் திருவருள்பெற்று அப்பெருமான் அருளிய 'உலகெலாம்' என்ற சொற்றொடரையே முதலாக் கொண்டு, 'திருத்தொண்டர் புராணம்' என்ற நூலைச் சிலநாட்களிற் பாடி முடித்தனர். பின்னர், அதனை அப்பெருமான் திருமுன்னர் கவியரசர் புவியரசர் முதலானோர் வீற்றிருந்த பேரவை

யில் அரங்கேற்றினர். அரசன் அதனை இருசெவிக்குமுதெனக் கேட்டு இன்புற்று, அந்நூலை உலகிற்குதவியாக இயற்றியருளிய சேக்கிழார் பெருமானுக்குப் பல வரிசைகள் அளித்தனன்.

சேக்கிழார், தில்லையம்பதியில் தங்கியிருந்து சில ஆண்டு கட்குப் பின்னர்ச் சிவபெருமான் திருவடி நீழலெய்தின ரென்பர். இவரைத் 'தொண்டர் சீர்பரவுவார்' எனவும் இவர் இயற்றிய நூலைப் 'பெரிய புராணம்' எனவும் கூறி, அறிஞர் பலரும் பாராட்டுவாராயினர். மற்றும் இவரது பெருமை யெல்லாம் ஈண்டுரைப்பின், இது வரம்பின்றி விரியுமாதலின் அதனைத் திருத் தொண்டர் புராணமெனப்படும் பெரிய புராணத்தைப் பன்முறை ஓதியுணர்ந்து கொள்க.

சயங்கொண்டார்.

சயங் கொண்டார் என்பவர் சோழமண்டலத்திலே திருவா ரூரைச் சார்ந்த தீபங்குடி என்னும் ஊரின்கண் பிறந்த நல்லிசைப் புலவராவர். இவர், பெரும் புலமை படைத்தவராய் நம் குலோத் துங்க சோழனைக் காண்பது கருதி, அவன் அவைக்களத்தை அடைந்தபோது, அவ்வரசன் 'நுமது ஊர்யாது'? என்று வினவ,

எண்சீர் ஆசிரியச் சந்தவிருத்தம்.

செய்யும் வினையும் இருளுண் பதுவுந் தேனும் நறவும் ஊனுங் களவும்
பொய்யுங் கொலையும் மறமுந் தவிரப் பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் இதழும் விழியும் காலும் நிறமும் போதுங் கமலங்
கொய்யும் மடவார் கனிவா யதரங் கோபங் கமழுந் தீபங் குடியே.

என்ற பாடலால் தம் புலமைக்கேற்ப விடை கூறினர். அரசன் அவரது புலமைக்கு வியந்து, தன் அவைப் புலவர்களுள் ஒருவராக அவரை இருக்கச் செய்தனன்.

இவர் அரசற்கு விடை கூறிய பாடலில், பொய் கொலை முதலியன நீக்குதலையும், சமணர்க்குச் சிறந்த இரவுண்டல் தவிர் தலையும், தமதூர் சைனக்கடவுளின் தலமாயிருக்குஞ் சிறப்பையும் எடுத்துரைத்துப் புகழ்ந்திருத்தலாலும், இவரது ஊர் இன்றும்

சைனர் மிருந்துறையும் இடமாயிருத்தலாலும், இவர் சைனமதத்தினராதல் தெள்ளிது. அம்மதத்தினராய இப்புலவரை, சிந்தாமணி முதலிய நூற்களைப்பயின்று சைனமதப்பற்று மிக்குடையனுயிருந்த முதற் குலோத்துங்க சோழன் நன்கு ஆதரித்துத் தன் அவைக்களப் புலவர்தலைவராக அமர்த்திக்கொண்டன னென்பது மிகப்பொருத்த முடையதேயாம்.

இனி, இப்புலவர் தம்முடன் வாதம்புரிவான் போந்த தென்னாட்டுப்புலவர் சிலரை வென்ற காரணம்பற்றி, 'சயங்கொண்டார்' என்றழைக்கப் பெற்றனர் என்பர். ஆயின், இவரது இயற்பெயர் யாதென்பது இப்போது தெளியக்கூடவில்லை.

கலிங்கரைத் தொலைத்து வாகை மிலைந்த குலோத்துங்கன், இப்புலவரை நோக்கி, 'புலவீர்! யானும் சயங்கொண்டானுயினேன்' என்றனன். உடனே புலவர், 'அங்ஙனமாயின், சயங்கொண்டானைச் சயங்கொண்டான் பாடுதல் மிகப்பொருத்தமுடைத்தன்றே' என உரைத்துப்போய், சின்னாட்களில் 'கலிங்கத்துப் பரணி' என்ற ஓர் அரியநூலை இயற்றிவந்து அரசனது அவைக்களத்தே அரங்கேற்றினர். அப்போது அப்பரணிநூற் பாடல்களைப் பரிவுடன் கேட்டுக்கொண்டு வீற்றிருந்த வேந்தர் பெருமான் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், பரிசிலாகப் பொற்றேங்காய்களை ஒவ்வொன்றாக உருட்டிவித்து இவரையும் இவரியற்றிய நூலையும் பெரிதும் சிறப்பித்தனன்.

இக்கதை எவ்வாறாயினும், இப்புலவர், தாம் அரசன்பாற் கொண்ட பேரன்பின் பெருக்கத்தால், அவனது கலிங்க வெற்றியைச் சிறப்பிக்கக் கருதி, 'கலிங்கத்துப்பரணி' என்ற நூல் யாத்தனரெனக் கோடலில் இழுக்கொன்று மில்லை. பரணிநூற் கேட்ட வளவர் பெருமானும் புலவர்க்குத் தக்கவாறு பரிசில் அளித்துப் பாராட்டியிருத்தலுங் கூடும்.

இனி, இவரியற்றிய பரணி சொற்பொருள் நயங்கள் நன்கமையப்பெற்று நிலவுதலால், இவரைப் "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று முற்காலத்திய அறிஞர் புகழ்ந்துரைப்பா

ராயினர். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரும் இப்பரணியிலுள்ள சிலபாடல்களைத் தம் உரையில் மேற்கோளாக எடுத்தாண்டிருத்தலோடு, இதன் ஆசிரியராகிய சயங்கொண்டாரைக் 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் புகழ்ந்துள்ளார். இவற்றாலும் இந்நூலின் பெருமை நன்கு விளங்கும். இப்பரணியிற் பண்டைச் சோழவேந்தர்களது வரலாறுகள் கூறப்பட்டிருத்தலால், சோழரைப்பற்றி ஆராய்வார்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும். அன்றியும் பண்டைக்கால வழக்க வொழுக்கங்களுட் பலவற்றை இந்நூலிற் காணலாம்.

இனி, இப்புலவர், தம் பரணியில் சிவபெருமான், திருமால், நான்முகன், விநாயகர், முருகவேள், உமாதேவி முதலாயினோர்க்கு வணக்கங்கூறியிருத்தலால், பரணி பாடிய காலத்திற் சைவ மதத்தினராக மாறியிருத்தல் வேண்டும் என்பது நன்கு விளங்குகின்றது. சைன மதப்பற்றுடையனாயிருந்த குலோத்துங்கன் சேக்கிழாரது சேர்க்கையால், அப்பற்றொழிந்து சைவப்பற்றுடையனான காலத்தே சயங்கொண்டாரும் தம் அரசனைப்போல் தாமும் சைவராக மாறியிருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கப்படுகிறது. அவ்வாறாயின், அதன்பின்னரே இவர் பரணி பாடியிருத்தல் வேண்டும். (தொடரும்.)

உ

முருகன் திருவிளையாடல்

(முற்றொடர்ச்சி 99-வது பக்கம்.)

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

முட்டையெனப் பெயர் கட்டுரைத்த வாடல்.

பொறியி லகத்தியனைப் பொய்யா மொழியாய்ச்
சிலைதவில் புலவர் சிறப்பாய்த்—துதிசெய்யச்
செங்காட்டங் கோட்டத் துறையூ ரெனுந்தலத்துத்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்.

என ஆன்றோர் எடுத்துரைக்கும் தொண்டை நன்னாட்டுச் செங்காட்டங் கோட்டத்துத் துறையூரிற் பிறந்து, கல்வி பயிலும் இளம்பருவத்தில் காளியின் திருவருளாற் கவிபாடுந் திறம்பெற்றுச் சிறந்திருந்த புலவர் பொய்யாமொழி என்பவர். இவரது பிள்ளைத் திருநாமம் தெரிந்திலது. இவர், அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயக்கும் நிறைமொழியினராதலின், பொய்யாமொழி எனப் பெயர்பெற்றனர்போலும். இப்புலவர் பெருமான் கல்வியின் மேம்பாடுகற்குக் காளியின் அருளன்றோ காரணமாக இருந்தது! அதனால் அவளையன்றி மற்றைக் கடவுளரைப் பாடுவதில்லை என மனம்வலித்திருந்தனர். இவரது கொள்கை இதுவாக.

திருப்புகழ் கேட்கும் விருப்பனுடைய முருகப்பெருமான், ஒருநாள் பொய்யாமொழியார்க்கெதிர்தோன்றிப் 'புலவீர்! நம்மீது ஒரு கவி பாடுக' என்று கேட்டருளப் 'பெட்டையையும் பாடி முட்டையையும் பாடுவேனோ' என மறுத்தனர் புலவர். அதாவது தாயைப்பாடும் நான் பிள்ளையைப் பாடேனென்றதென்பது.

அதைக்கேட்ட பெருமான் இவரது மனக்கோட்டத்தினை யொழிக்கத் திருவுளங்கொண்டருளினர். அதன்பின்னர் சின்னாட் சென்றன.

அக்காலத்தில் தென்னாட்டில் தஞ்சாக்கூரில் பாண்டியர்க்கு அமைச்சனும் தானைத்தலைவனுமாயிருந்த சந்திரவாணன் என்பவன் பாவுக்கிசைந்த புகழுடையனாய்ச் சிறந்திருப்பக்கேட்ட நம்புலவர், நாவுக்கிசைந்த கோவையொன்று அவன்மீது பாடிச் சென்று அரங்கேற்றிப் பரிசுபெற்று மீண்டு காட்டின் வழியே தனித்து வருவாராயினர்.

அப்பொழுது எந்தையாகிய கந்தவேள், தலையிற் பீலிசெருகி மார்பில் அக்குவட மின்ன, இடையிற் கச்சணிந்து, கையில் விற்பிடித்து, காலில் கழல்பூண்டு, காளைப்பருவத்து வேட்டிளங் குமரனாகப் புலவரை எதிர்ப்பட்டு, 'அடே! எங்குப் போகின்றாய்? நில்நில்; உன்னிடத்துள்ளவற்றை இங்குவைத்து அப்பாற்செல்' என்றுரைத்து உரப்பினர்.

என் செயவல்லார் புலவர்! ஒன்றும் தோன்றாது திகைத்தனர்; 'இன்று கள்ளன் கையிற் சிக்கினேம்; இனி யாது செய்வேம்' எனச் சிந்தித்தனர்; அஞ்சித் திகைத்து நெஞ்சு துண்ணென நாவெழாது நின்றனர்; பின்னர் வாய்குழற, 'அப்பா! நான் பணக்காரன் அல்லன், ஒரு எளிய புலவன்' என்றனர்.

'ஓகோ நீ புலவனோ! அப்படியாயின் உனக்குக் கவிபாடத் தெரியுமா?' என வினவினன் வேடன்.

'இவன் கல்விமண முடையவன் போலும்; ஆகவே நமக்குத் தீமைபுரியான்' எனத்துணிந்த புலவர், தெரியும் என விடைதந்தனர்.

உடனே வேட்டுவக்குமரன், சுரம்போக்காக என்மீது ஒரு பாட்டுப்பாடு என்றனன்:

'பாடுகிறேன் உன் பெயர் யாது?' என்றனர் புலவர். அவனும், முன்னர் 'என்மீது பாடுக' என்றபொழுது, 'முட்டையையும் பாடுவனோ' என இவர் கட்டுரைத்தமைக் கேற்ப, தன் பெயர் 'முட்டை' என்று மொழிந்தனன்.

அதைக்கேட்ட புலவர்,

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு."

எனப்பாடி முடித்தனர்.

அவ்வளவில், 'இச்செய்யுள் சொற்குற்ற மில்லதெனினும் பொருட்குற்ற முடைத்து. அஃது என்னென்பையேற் கூறுவேன், கேள்: வெட்டி உலரவிடினும், நாட்பட்டுக்காயும் இயல்பினையுடைய கள்ளி, வெந்து பொறியாகப் பறக்கும் பாலை நிலத்தில் பச்சையினும் தீப்பட்டு வேகும் தன்மையுள்ள வேலாமுள், வேகாதிருந்து காலிற் றைக்கும் என்றது எங்ஙனம் பொருந்தும்? இத்தகைய வழுவமைந்த பாட்டினைப் புலவர் பாடுவரோ? இனி நான் பாடுவேன் கேட்பாய்' என்றிசைத்து,

"விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்த சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்"

என்று பாடுவாராயினர்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னுங் கடப்பாடுடையார், காய்தலும் உவத்தலுமின்றி எப்பொருளையும் ஆராயும் இயல்பினராதலின், இச்செய்யுளைக்கேட்ட பொழுதே செருக்கழிந்து, 'எந்தப்புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ யாரிவர்? உருவுகண் டெள்ளுதல் இழுக்கென்பது விளங்கிற்று.

இவனை வேட்டுவனென்று எளிதாக நினைந்தேன். இவனது கல்வியறிவு இருந்ததனை என்னென்பேன்? அறிவென்பது யாரிடை அடங்கிற்று?' எனப் புலவர் பலபட நினைந்து வியந்து நிற்கையில், முன்னர் முருகன் போந்து தன்னைப்பாடிடக் கேட்ட போது முட்டையைப் பாடேனெனத் தாம் மறுத்துரையாடினதும், பின்னர் வந்த வேட்டுக்குமரன் தன்பெயரை முட்டையெனச் சுட்டியதும் தம் கருத்திற்றோன்றவே, சிந்திப்பார் நான் கூறிய முட்டை யென்றதனையே தன்பெயராக உரைத்த இவன் வேட்டுவனல்லன், முருகனே யாதல் வேண்டும். உலகின்கண், தாய்தந்தையர் தம் சொற்கடங்காத மக்களைத் தண்டம் புரிந்து தம் வழிப்படுத்துவது இயற்கை. அவ்வாறு அவர் செய்வது அம்மக்கண்மேல் வைத்த காதலேயன்றி வேறோ? அதுபோலவே, முருகவேளும் தன் அறக்கருணையைப் பொருட்படுத்தாத என்பால் எளிதாக எழுந்தருளி இம்மறக்கருணையைக் காட்டியதும் அடியனேனை உய்வித்தற் பொருட்டன்றே! இதனை முன்னமே ஆராயாமற் கெட்டேன். என்னே! என்பேதைமை இருந்தவாறு!' என முருகப்பிரானது அருட்டிறத்தினையும் தமது அறிவின்மையையும் நினைந்து நினைந்து உள்ளமுருகி வருந்திய அளவில், முருகன் வேட்டுவக்கோலம் நீங்கித் தொல்லுருக்காட்டியருள, அடியற்றமரம்போலப் படிமிசை விழுந்து பன்முறையும் வணங்கி எழுந்துநின்று, எந்தையே! என் குற்றம் பொறுத்தருள்க' என வேண்டிட, ஆறிருதடந்தோளண்ணல், 'புலவ! அஞ்சற்க. நாம் இவ்வாறு நின்னைச் செய்ததெல்லாம் நின்பாடலைக் கேட்பதற்கேயாம்' எனப்புன்னகைபுரிந்து தன்னுருக்கரந்தனன்.

அவ்வையை நாவறச்செய்த வாடல்.

"இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ"

எனத் தம்மைப் பெற்றுவைத்துப் பிரிதற்காற்றாது வருந்திய அன்னைக்கு மனத்துணிவு தோன்றுமாறு மழவிளங்குழவிப் பரு

வந்தே ஞானவுணர்வொடு கூறினவர் அவ்வை என்பர். இவரை நாமகளின் தோற்றமென்பர். இவர் கூழைப்பலாத் தழைக்கவும், பனந்துண்டம் பங்குக் கிரண்டு பழந்தரவும், பெண்ணையாறு நெய்யும் பாலும் கலப்பெய்து வரவும், வருணன் பொன்மாரி பெய்யவும், பருத்தி ஆடையாகக் காய்க்கவும் பாடி, யாவரையும் வியந்திடச் செய்த பின்னர், மாடம் மலிந்த கூடலம்பதியை அடைந்து, தம்மினும் மிக்கார் இல்லையெனச் செருக்குற்றிருந்த புலவரை வாயடக்கிப் பலரும் போற்றிட இருக்கின்ற நாட்களில், ஒருநாள், சோணாடு மீளக்கருதி வானெறி யடைக்கும் கான்வழி யாக வருவாராயினர்.

அப்பொழுது, எவரையும் வென்றதாக எண்ணிச் செல்லும் இவரை நாம் ஏமாற்ற வேண்டுமெனத் திருவுளம்பற்றிய குமார வேள், கையினில் தாம்பும் சிறுகோலும் கொண்டு எருமைமேய்த் திடும் இடைக்குலச் சிறுவனாக உருக்கொண்டு, ஒரு நாவல் மரத் தின் மீதேறிப் பழம்பறித்துத் தின்பவர் போல நடித்திருந்தனர்.

அவ்வையார், நடுப்பகலில் நடந்து வந்தவராதலால், அம்மரத் தடியை அணுகிய உடனே களைப்புடன் உட்கார்ந்து, மேலே அண்ணாந்து பார்த்து, மாடுமேய்க்கும் சிறுவன் பழம்பறித் துண்ணக்கண்டு, 'அப்பா தம்பி! நான் வெயிலில் நடந்து சோர் வடைந்துள்ளேன்; நீர்வேட்கையால் நாவுலர்கின்றது. எனக் குக் கொஞ்சம் பழம்பறித்துப் போடு' என்றனர்.

அதனைக்கேட்ட சிறுவன், 'கிழவி! இம்மரத்தில் சுடுகிற பழங்களும் சுடாத பழங்களும் இருக்கின்றன. அவற்றுள் உனக்கு எவை வேண்டும் சொல் போடுகிறேன்' என்றனன்.

'இஃதென்னை வியப்பு! நாவற்பழத்திற் சுடுகிறபழம் எவ்வா றிருக்கும்' எனச் சிறிது நேரம் நினைத்திருந்தும் ஒன்றுந் தோன் றாமையால், சுடுகிறபழம் எனக்கு வேண்டாம்; சுடாதபழமே போடு' என்றனர் அவ்வையார்.

உடனே சிறுவன் மரக்கிளையைக் கையாற்பற்றி அசைத்தன னாக, கனிந்த பழமும் கனியாத பழமும் உதிர்ந்தன.

அவ்வையார், அவற்றுட் கனிந்த பழங்களிற் சிலவற்றைப் பொறுக்கி, அவைகளில் மணல் ஒட்டியிருப்பக்கண்டு, அன்னவை நீங்க வாயினால் ஊதுவதுகண்ட சிறுவன், 'கிழவி! என்ன சுடாதபழங் கேட்ட நீ இப்பொழுது சுடுகிற பழங்களைத் தின்னப் போகின்றனை; வாய் வெந்துவிடும், நன்றாக ஊதி ஆறியபின்னர்த் தின்பாய்' என்று அசதியாடினன்.

அப்பொழுது, சுட்டபழம் காய் என் அறிந்த அவ்வையார் இப்பொருள் நமக்கு விளங்கிற்றில்லையே என வெட்கி, புலவர் பலரையும் வென்ற நான் மீடுமேமிக்கும் சிறுபையனுக்குத் தோற்றேற்றனை என்று மனங்கவன்று,

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நானன்றேற்ற
தீரிரவுந் துஞ்சாதென் கண்"

என்றுரைத்தனர்.

உடனே முருகக்கடவுள், அவ்வைமீது அருள்சுரந்து, தமது மெய்யுருக்காட்டியருளி, 'உம்மோடொத்த புலவரும் உலகினில் உளரோ? உம்மை இகழ்வது எம் கருத்தன்று; உம்மொடு விளையாட வந்தேம்; கவலுதல் ஒழிவீர்' எனத்தேற்றி, காங்களைப்பற்றிக்கொண்டு புன்னகைபுரிந்து 'புலமைமுற்றிய பெரியீர்! உலகில், அரியது, இனியது, கொடியது, பெரியது எது?' என்று வினவிட,

"அரியது கேட்கிற் றனிநெடு வேலோய்!
மக்கள் யாக்கையிற் பிறத்த லரிதே;
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூங்கையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்த லரிது;
பேடு நீக்கிப் பிறந்த காலையும்,
ஞானமுங் கல்வியு நயத்த லரிது;
ஞானமுங் கல்வியு நயந்த காலையுந்,

தானமுந் தவமுந் தரித்த லரிது ;
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே"

"இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்த மினிது ;
அதனினு மினிது ஆதியைத் தொழுதல் ;
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல் ;
அதனினு மினிது அறிவுள் ளாரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே"

"கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது ;
அதனினுங் கொடிது இளமையில் வறுமை ;
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய் ;
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர் ;
அதனினுங் கொடிது
இன்புற வவர்கையி லுண்பது தானே"

"பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய் ;
பெரிது பெரிது புவனம் பெரிது ;
புவனமோ நான்முகன் படைப்பு ;
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன் ;
கரிய மாலோ வலைகடற் றுயின்றோன் ;
அலைகடல் குறுமுனி கையி லடக்கம் ;
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன் ;
கலசமோ புவியிற் சிறுமண் ;
புவியோ வரவினுக் கொருதலைப் பாரம் ;
அரவோ வுமையவள் சிறுவிரன் மோதிரம் ;
உமையோ விறையவர் பாகத் தொடுக்கம் ;
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம் ;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே."

என உரைப்பக் கேட்டுக் குன்றமெறிந்த குமரவேள் தன்னுள மகிழ்ந்து இன்னருள் புரிந்தனன்.

பிரமனைக்குட்டிச் சிறைசெய் யாடல்.

விண்ணினும் மண்ணினும் ஆட்டினை ஊர்ந்து ஆடல் புரிந்து இலக்கத்தொன்பதின்மரும் பாரிட வீரரும் போற்ற அம்பொன் னாலயத்துள் இன்பொடு வைகிய அறுமுகத்தண்ணல், வானவ ரோடு போந்து ஈசனை வணங்கி ஏகும் நான்முகனை 'நம் முன் வருதி என விளிப்ப வந்தவன் பணியாது தொழுதனன். அவ னது உள்ளக்கருத்தினையறிந்த முருகவேள், 'போதனே! இருக்க' எனப்பணித்து, 'நாடோறும் நீ செய்யும் தொழில் யாது?' என, 'நம்பன் அருளால் நான் அனைத்தையும் படைப் பன்' என்றனன் நான்முகன்.

அதுகேட்ட கந்தன் நகைபுரிந்து, 'உலகையும் உயிரையும் படைப்பாயென்னின், மறைகளை அறிவையோ? மொழிக' எனப் பிரமன் பேசுவான். 'ஐய! கேட்டருள். தொன்னாளில் எண் ணரு மறைகளையும் ஆகமங்களையும் அருளிய இறைவன், அவற் றுள் எனக் குணர்த்திய சிலவற்றை அறிந்துளேன்' என்றவளவில், 'இருக்கொன்றினை நீ இயம்புதி' என்று முருகவே ளுரைப்ப, நன்றென இசைத்து ஓமெனு மொழியை முன்னர்க் கூறி மறையினைச் சொல்லத் தொடங்கினன் நான்முகன்.

உடனே குமரவேள் 'வேதனே! நிற்றி. நீ முன்னர் இசைத் திட்ட ஓமெனப்படும் மொழிப்பொருள் உரை' யென நவில, அவ னும் அதன் பொருட்டிறம் தேறமாட்டாமையின், விழித்தனன் வெள்கினன் திகைத்தனன்.

ஈசன் வீற்றிருக்கும் பீடமாய், எல்லா எழுத்திற்கும் மறைக் கும் முதலாய், காசியில் இறப்பவர்க்கு எம்பிரான் கழறுவதாகிய பிரணவத்தினைச் செப்புவதன்றிப் பொருளறிந்திலன். என் செய் வான்? கண்ணுதற்புனிதன் அருளால் முன்னரே பெற்றிலன்; அதனால் மருளலுற்றனன். அதன் பொருளினை யாரே வகுக்க வல்லார்? மறைகட் கெல்லாம் முதலினும் முடிவினும் சொல்லப் படும் ஓரெழுத்துண்மையை உணராது நான்முகத்தவனும் மயங் கினனென்றால் நாம் அறிந்தனம் எனச் சிலர் நவில்வது நகை யன்றோ?

இங்ஙனம் அயன் குடிலையின் பொருள் இனைத்தென அறியாது மயங்கலும், 'இதன் பொருள் உணராத நீ சிருட்டி செய்வது இத்தன்மையதோ' என, அவன்றன் நான்கு முடிகளும் குலுங்கக் குட்டினன்; பதத்தினால் வீழ்தர உதைத்துப் பரிசனரை நோக்கி வல்லிபூட்டிச் சிறைபுரிந்திடுதிர் எனப் பணித்திட்டு, ஒருகரத்திற் குண்டிகையும் ஒரு கரத்தில் மணிவடமும் தாங்கி, மற்றிரு கரங்கள் வரதமும் அபயமும் தர, ஒரு திருமுகத்தொடிருந்து நான்முகன் போலப் படைத்தல் செய்திருந்தனன் குமரன்.

உயிர்க்குயிராய்ப் பேரொளியாய் மறைகளின் முடிந்த பொருளாய் முத்தொழிற்கும் முதலாய் நின்ற செவ்வேள் அயனெனப் படைக்கின்றதும் வியப்பாமோ!

அயனைச் சிறைவிடுத்தருளிய வரலாறு.

அறுமுகன் இவ்வாறு அளப்பில் காலமெல்லாம் ஆக்குந் தொழிலினை மேற்கொண்டிருக்க, நான்முகனைப் பழைய நிலையில் நிறுத்தக் கருதிய திருமால், வானவர் முனிவர் ஏனையோர் பின்வரச் சென்று கயிலையை அடைந்து, நந்தி உய்ப்பத் திருமுன் சார்ந்து திருவடி வணங்கி இறைஞ்சி நிற்குமளவில், கண்ணுதற் பெருமான் கடைக்கணித்தருளி, 'நீவிர் யாவரும் மிகவும் தளர்ந்துள்ளீர்; யாது உமக்கு எய்தியது?' எனக் கேட்கச் சீதரன் கூறும்: 'இறைவ! இங்குற்ற பிரமனை நின்மகன் குடிலைக்குப் பொருள் வினவினன். அவன் உரைத்திடாமையின், அவனைச் சிறைபுரிந்து சிருட்டியுஞ் செய்கின்றான். கஞ்சனும் கந்தனைப்போல நின்மைந்தன். அளவில் காலமாக அருஞ்சிறைப்பட்டு நொந்து வாடினான், அவனைச் சிறைநீக்கியருள்' என வேண்டியவுடனே, நம்பன் நந்தியை நோக்கி, நீ கடிதிற் சென்று நம் கட்டுரை கூறி அயனைச் சிறை விடுவித்து இவண் மீள்கெனச் சாற்றினான்.

நந்தியும் நாதனைத் தாழ்ந்து விடைகொண்டு கணங்கள் சூழ்தரப்போய்க் கந்தவெற்பினை யெய்தி அறுமுகத்தண்ணலை அடிபணிந்தேத்தி, 'மலரயனைச் சிறைவிடுமாறு நின்பாற் கூற என்னை விடுத்தனன் எந்தை. குடிலையின் பொருள் அவன் கூறற்கு எளியதோ? தடைபடாது அவனைச் சிறைநீக்குதி' என்னுமுன், இளையவன் சினந்து, 'அன்னவூர்தியைச் சிறை நீக்கலன். நிற்பையாயின் நின்னையும் சிறைவீட்டுவன்; நில்லாது விரைந்தேகுதி' என்றிசைப்ப, ஒன்றும் பேசா தொடுங்கிக் கந்தன் மலர்ப்பதத்தை வந்தனைபுரிந்து கயிலையை யணுகிக் கண்ணுதற் பரமனைக் கைதொழுது பாவி நிகழ்ந்தன யாவும் மொழிந்தனன் நந்தி.

நந்தி மொழிந்தன கேட்ட நம்பனும் சிறுநகை யெய்தி அரியணைவிட்டெழுந்து, முகில்வண்ணன் முதலாயவர் புடைசூழ மால்விடை இவர்ந்து கந்தவெற்பினை வந்தணுக, எந்தை யெய்தினனெனச் சிந்தை மகிழ்ந்த கந்தவேள், எதிர்கொண்டு வணங்கித் தன்ன தாலயத்துக் கொடு சென்று அணைமீதமர்த்தி, 'அத்த! இங்கு நீ வந்த காரியம் யாது?' என இயம்பினன்.

'மைந்த! அயனைச் சிறையிட்டனை. அதனை நீக்கக் கருதி வந்தேம். அவனைச் சிறைவீட்டுதி' என்றனன் இறைவன்.

'ஐய! நன்று மொழிந்தனை' எனத் தலைதனை அசைத்து, 'ஓரெழுத்தின் பொருளை உணராதவன் மறைகளில் வல்லதும் மாநிலம் படைப்பதும் பேதைமையன்றோ? நின்னை அர்ச்சிக்க, ஆக்குந்தொழிலை நீ அவன்பாற் சுமத்தினை; எவற்றையும் படைத்தலால் எவரையும் பொருளாக எண்ணலன். நின்னை வந்தனை செய்யினும் தன்ன தகந்தை தவிர்கிலன். ஆதலால் அவனைச் சிறை நீக்கலன்' என்றனன் குமரன்.

'அயனைச் சிறைவிடென்று நம் பணியாலேகி நந்தி நவின்றதும் கொள்ளாய். நாம் வந்துரைக்கவும் கேட்டிலை; மறுத்து எதிர்மொழிந்தனை. மைந்த! நின் செய்கை என்னே!' எனச் சினந்தவன் போலச் செப்பினன் நாதன்.

'அத்தனே! நின் சித்தம் இதுவாயின் அயனைச் சிறை நீக்கி ஒல்லையிற் கொணர்வேன்' என்றியம்பித் தன் பக்கலில் நின்ற பரிசனரை நோக்கி, 'நீவிர் போய் மலரவனைச் சிறைநீக்கி நம் முன் இன்னே தந்திடுதிர்' என்ற அளவில், சாரதருட் சிலர் சடுதியிற் சென்று வேதனைத் தளையினீக்கிக் கொணர்ந்து உய்ப்பவே, குமாரவேள், அயனைக் கரம்பற்றி அண்ணல் முன் விடுத்தனன்.

அவன், பரமனை அன்பாற் றொழுந்து வெள்கி நிற்ப, 'இருஞ் சிறையிற் பன்னாளிருந்து எய்த்தனை போலும்' என்று நாதன் இயம்பி அருள்புரிதலும், 'ஐய! நின் புதல்வன் ஆற்றிய இத் தண்டம் ஏதமன்று; உணர்வு நல்கி யான் என்னும் அகந்தை நீக்கித் தீவினைகளை மாற்றி என்னைப் புனிதனாக்கிற்று' என் றுரைத்த பிரமனை, 'நீ இப்பகல் தொட்டுத் தொன்மையிற் போல முப்புவனமும் படைத்திரு' என்று விடுத்த பின்னர், முருகவேள் முகத்தை நோக்கி முறுவல் செய்து, 'ஐய! வருதி' என மலர்க்கையாற் பற்றிக் குறங்கின்மீது வீற்றிருப்பச் செய்து உச்சி மோந்து மார்போடணைத்துப் 'பிரமனுந் தேறுத பிரணவத்தின் பொருள் உனக்குப் போமோ? போமெனின் அதனை இன்னே புகல்' என இறைவன் கூறினன்.

'ஆதி முதல்வ! உலகமெல்லாம் பெற்றெடுத்த அன்னைக்குப் பிறர் அறியாவண்ணம் முன்னர் நின்னால் உணர்த்தப்பெற்ற இப் பொருளை மறையினில் இசைக்கலாமே யல்லது யாவருங் கேட்ப இத்தன்மைத்தென இயம்பலாமோ' எனக் குமரன் கூற நகைத்து, 'மைந்த! அதுவாயின் மறையின் எமக்கருள்' என்று தன் திருச் செவி சாய்ப்ப, சண்முகன் குடிலையின் பொருளையுரைத்திடக் கேட்டு, ஐயம்நீங்கி அகமகிழ்வெய்திக் கண்ணுதற் பரமன் கயிலையை அடையக் கந்தவெற்பில் புடைதனில் வயவர் போற்றக் குமாரமூர்த்தி இனிது வீற்றிருந்தனன்.

வள்ளியைக் களவின் மணந்த வாடல்.

அவ்வரையின் ஒருசார், தவம்புரிந்திருந்த சிவமுனி, இளமைச் செவ்விவாய்ந்த நவ்வியொன்று அங்குப் போதர, அதனை ஆர்வமொடு நோக்கினன்.

அப்பொழுது, கந்தவேள் ஆணைதாங்கி அவ்வரைப்பில் வந்து அருந்தவம் ஆற்றிநின்ற அமுதவல்லி, செவ்விநேர்ந்து அம்முனிவரன் நோக்கின்வழியே மானின் கருவயிற்புக, அம்மானும் சூல்முதிர்ந்து புனத்தில் வள்ளியம்பயம்பிற் பிள்ளையை யீன்றுவைத்து 'இது நம்மினத்ததன்று' என்று மருண்டு, அஞ்சியகன்றது.

தன்னையீன்ற மான் அகன்றதற் பின்னர்த் தன்னந்தனியே கிடந்த மழவிளங்குழவி அழுதலுற்றது.

நல்வினைப்பயன் கைவருகாலமாதலால், கொடிச்சியும் பரிசனமும் பாங்குவரப் புனத்திற்புக்க கானவர்கோமான் செவியில் இம்மழவமும் ஓசை சென்று தைத்தது. கொடும்புலி வாழும் இக்கானகத்திற் கேட்கும் இது எவ்வொலியோ என ஐயுற்று மிகவும் உற்று நாடினன்; குழலிசையும் யாழிசையும் குழைவுறும் குழவியின் அழுமிசையா யிருப்பதறிந்து வியப்புற்று, அவ்வொலியெழும் திசைநோக்கி நடந்து, வள்ளிக்குழியிற் கிடந்த பிள்ளைப்பிணவைக் கண்ணுற்று, 'இந்தா இஃதோர் இளங்குழவி' என்றெடுத்துத் தேவிகையிற் கொடுத்தான். நெடுநாளாகத் தவங்கிடந்த பயனாகக் கிடைத்த பெண்மகவைக் கண்டவுடனே உவகை மீதூரக் கையிற் றூங்கியிருந்த வில்லை நிலத்திட்டான்; எழுந்தோங்கிப் பாய்ந்தான்; முறுவலித்தான் தோள்புடைத்தான்: முற்பிறப்பில் நான் செய்தவமே நற்றவம் போலும் என்றான். பின்னர் நிலத்துவீழ்ந்த சிலையைக் கைக்கொண்டு, தம்மனைக்கிழத்தியொடு புனமகன்று சென்று, சிற்றூரிலுள்ளசிறு குடியிற்புக்கு, கிளைஞரொடு விருந்தினிதருந்தி, தொண்டகமார்ப்பக் குரவை தூக்குவித்துக் காலையிற் கடவுட்பலி செலுத்தி, சிறுதினையும் செம்மலருந்தூவி, மறியறுத்துக் குமரன்விழாக் கொண்டாடி, வேலனைக்கொண்டு வெறியாட்டு நேர்வித்தான்.

அன்னாளையில், கொடிச்சி, சேமநிதிபோற் கிடைத்த குழவியை மார்போடணைத்து உச்சிமோந்து முத்தமிட்ட அளவில் தனம் சுரந்திட மகிழ்ந்து, மகவுக்கமுதருத்திக் காப்பணிந்து பொன்னஞ்சிறை படுக்க பூந்தொட்டிலேற்றினள்.

மூத்து நரைத்த முதாளர் வந்தீண்டி, வள்ளிபடுகுழியில் வந்திடலால், 'இவள் நாமம் வள்ளி என்று வழங்குக' என வாழ்த்தினர்.

பின்னர், குன்றக்கோமானும் கொடிச்சியும், தம்மகளாக அன்புபாராட்டி வளர்த்திடத் தவழ்ந்து தளர்நடையுற்றுக் கனி பரப்பு மணிநிழலில் உலாவி, முறத்தின்மணி கொழித்துச் சிற்றில் கோலிச் சிறுசோறட்டு, இன்னன பிற வண்டலயர்ந்து கற்பகக் கொம்பெனப் பொற்பொடு வளரும் செவ்வியில், பைந்தொடி வள்ளிக்குப் பன்னிரண்டு யாண்டு சென்றன.

பருவங்கண்ட தாயும் தந்தையும் காட்டில், எளிதாகக் கிடைத்த கடவுண்மணியைக் குரீஇயினம் கூட்டில் இருளோட்ட வைப்பதுபோல, தம்மரபின் முறைமைக்கேற்ப, ஏனற்புனத் தினை இனிதளிக்க வைத்திட, இதண்மீதமர்ந்து, தட்டை, குளிர், தழல் என்னும் கருவிகளைத் தாங்கி, கிளிமுதலாய புள்ளினம் புனத்தை அணுகுறாத வண்ணம் ஓட்டி, எய்யும் இரலையும் மானும் மரையும் ஏனற் குரல்களைக் கவர்ந்திடாது கல்லைக் கவணிலிட்டுக் கையாலெடுத்துக் கடிதோச்சி,

"பூவைகாள்! செங்கட் புறவங்காள்! ஆலோலம்
தூவிமா மஞ்ஞைகாள்! சொற்கிளிகாள்! ஆலோலம்
கூவல்சேர் வற்ற குயிலினங்காள்! ஆலோலம்
சேவல்காள்! ஆலோலம்"

என்று ஒலிபோக்கிப் புனங்காத்திருந்தனள் திருந்திழை வள்ளி. இவள் செய்கை இவ்வாறுக.

கதிர்வேலண்ணல், முன்னர் அமுதவல்லிக்கு வழங்கியவாறு அருள்புரியக் கருதிக் கந்தவரைப்பினீங்கித் தணிகைமாமலைக்கண் வந்துற்றனன்.

அங்குசென்ற நாரதன், கந்தனை வணங்கி வந்தனைபுரிந்து நிற்க, 'முனிவ! யாதேனும் புதுவது உண்டுகொல்?' என 'எந்தாய்! மாயோன் மகள் நின் மொய்ம்பினைத் தோய்தல் காரணமாக நோற்று, மான் வயிற்றிற் பிறந்து, கானவர்குலக் கன்னியாய் ஏனற்புனங் காத்திருக்கின்றாள். அன்னவள் பேரெழில் இருந்ததனை என் சொல்வேன்! பாரின் மகளிரேயன்றிப் பங்கயத்திருவும் அவட்கு நிகராகாள், இது பொய்ம்மை உரையன்று நேரிற் சென்று நீயே கண்டருள்' என்றனன்.

கந்தவேளும், 'முனிவ! நன்று நன்று நீ சென்று வருக' என்றுரைத்து, தொன்மறை வரம்பின் நன்னெறியாகிய யாழோர் கூட்டத்தினை, உலகில் நடந்துகாட்ட நயந்தருளி, காலிற் கழல் பூண்டு, அரையிற் கச்சணிந்து, தோளில் மாலைபுரளக், கையில் வரிவில்லும் வாளியும் தாங்கி, வேட்டுவக் கோலத் திளங்களிறென வள்ளிமால்வரைச் சாலை வந்தெய்திப் பண்டு வைத்திட்ட பழம்பொருள் கண்டார்போல் ஏனற்புனத்தில் இளமயில் போல் வாலைக் கண்ணுற்று, அன்புமீதூரப் பாணுக் கணித்தாகச் சென்று, 'நாந்தகம் அனையகண் நங்காய்! எந்திழையார்கட் கிறைவியாகிய நின்னைப் பூந்தினைக் காவல் வைத்த புளினர்க்கு, ஆற்றலும் பிறவும் அமைத்திட்ட நான்முகன், அறிவொன்றினையும் படைத்திலனோ? நலங்கனிந்த நல்லாய்! நின் பேரெழிலிற் பிணிப்புண்டு பேதுறுவேனுக்கு உன்றன் பெயரினை உரைத்தி; அதனை உரைத்திடாயென்னின், நின் ஊரினை உரைத்தி; அன்னதும் உரைத்திட முடியாதென்னின், நின்றன் சிற்றூர் செல்லும் வழியினையேனும் இற்றென உரைப்பாய்; பூவைபோலும் பாவாய்! மொழியும் புகன்றிலை முறுவலும் செய்திலை; வருந்தும் யான் உய்ந்து செல்லும் வழியும் காட்டிலை; இனிக் கடைக்கணித்திடாது மனமும் சற்றிரங்காயெனின், நின்பாற் பழிவந்தடையும்; ஆதலாற் பராமுகம் தவிர்த்தி' என்றுரைத்து, ஆசையால் வருந்துவான் போல, வள்ளிமுன் நின்று சின்மொழி பகரும் எல்லையில், இலையூத எயினர் சூழ்தர இறவுளர் கோமான் வந்தனன்.

அப்பொழுது, தழைத்துச் செழித்துப் பனைத்துக் கவடு போகி அரும்பி வண்டின முரலத் தண்டேன் துளித்திட மலர்ந்த கனியின் உருவாகி நின்றனன் கந்தன்.

தன்மகட்கு வள்ளியங்கிழங்கும் தினைமாவும் தேனும் கடமான் பாலும் தந்த வெற்பரையன், பாங்கரில் தழைத்த பூஞ்சினை வேங்கையினைக் கண்டனன். பரிசனர் பலரும் உரைத்தன பலவும் மனங்கொள்ளாது மகளை நோக்கி, 'அம்மா! இந் நறுமலர் வேங்கை இங்குத் தங்கியது எவ்வாறு? உள்ளவாறு உரைப்பாய்' என, 'எந்தாய்! இது வந்தவாறு உணர்கிலேன். மாயமாக வல்லையிற் றோன்றிற்று. நெருநலில் இல்லாததொன்று புதுவதாக முளைத்துளதே யாது விளையுமோ என மனம் வருந்தியிருந்தேன். யான் அறிந்தது இத்துணையே' என்று சொல்ல, 'வந்திழை! இந்நாண்மலர்வேங்கை நினக்கொரு துணையாக இவண் எய்தியது, நீ அஞ்சாது இங்கமர்தி' என்றுரைத் தேகினன்.

குன்றவர் கோமான் சென்றதற் பின்னர், முன்னையிற் போல மானுடவடிவு கொண்டு, கானவர் மகள் காணநின்று, 'குறவர்தம் பாவாய்! ஈங்கு நின்னையே தஞ்சமாக நினைந்தடைந்தேன். நின் பூங்கழலல்லது புகலிடம் பிறிதில்லை. கருங்கண் மாதராய்! நின்றனையகன்று நீங்கவும் வல்லனோ? உயிரை விட்டகன்று உடல் செல்வது எங்கேனும் கண்டதுண்டாயிற் கூறுவாய். நின் கண்வலைப்பட்டுக் கலங்குவேனைக் கடைக்கணித்திடாது புறக்கணிப்பையேல், யான் உய்திறம் எங்குளது? என் உயிர் நின் கையகத்தது, காத்துக்கொள். மாதராய்! முன்னரே தவம் கிடந்து நீ ஆடிடு சுனையதாய் அணிந்திடு சாந்தமாய்ச் சூடிடு மலர்களாய் நின்னைத் தோயப் பெற்றிலேன். செய்வதறியாமல் வாடினேன். மெல்லியலே! நீ இப்புனங் காப்பது புல்லிது. வருவையேல், வானவர் மகளிரும் வணங்கி வாழ்த்திடப் பல்வளன் துய்ப்ப வழங்குவேன்' எனப் பலப்பல பன்னிப் பகர்ந்து நிற்கும் பண்ணவனது உள்ளக் கருத்தினை உற்று நோக்கி, 'இவரது செய்கை நன்று' என நாணுற்றுக் கூறுவாள்.

'நான் இழிந்த எயினர் குலத்துப் பிறந்தபாவை, நீரோ வென்றால் முழுதுலகு களித்திடும் முதல்வர். இவ்வாறாகவும், என்னைத் தழுவுதல் காரணமாக நீர் தாழ்ச்சி சொல்வது பழியே யல்லது பான்மையதாகுமோ? பெரியீராகிய நீர், நெறிதவறிப் பேதையாகிய என்னை விரும்புதல் முறையன்று. புலி பசியுற்றாலும் புல்லைத் தின்குமோ?' என்று எந்திழை இடித்துரைக்கு மளவில், தொண்டகம் துவைப்பத் துடியியம்பக் குன்றக்கோமான் வரும் ஆரவாரம் கேட்டது. மடக்கொடி மனம் வெருவி, எந்தை யறியின் யாதாகுமோ என நடுநடுங்கி, முருகனை முகநோக்கி, 'வேடுவர் வெய்யவர்; இவண் நில்லாது இனிக் கடிதோடுமின்' என்றனள். (தொடரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

வெஞ்சமாக் கூடலூர்.

(முற்றொடர்ச்சி 35-வது பக்கம்.)

திருவாளர், பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,

தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

சென்ற இதழில் இத்தலத்தினைப்பற்றி யெழுதிவந்த வற்றில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இங்குவந்து பாடிக் கடவுளை வணங்கிச் சென்றமைக்குப் பெரிய புராணத்திலிருந்து ஆதாரம் காட்டினேன். அவை யொழியப் பின் வருஞ் செய்யுளை யங்ஙனப் படித்துக்கொள்ளும்படி யன்பர்களை வேண்டிக் கொள்கிறேன்.

பருவமாறாப் பொன்னிப் பாண்டிக் கொடுமுடியார் தம்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரிசுடர்மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர் தம்
பொருவி றனம்பல போற்றிக் குணதிசைப் போதுகின்றார்.

என்பதாம். (திருஞான—கூக.அ.)

ஒருகல்வெட்டு.

முற்குறித்த வெஞ்சமாக் கூடலூர்த் திருக்கோயிலிற் பல கல் வெட்டுக்களிருப்பதாகச் சென்ற இதழிற்குறித்தேன். அவற்றுள் ஒன்று பின் வருவது. அது இருபத்தைந்து வரியாய் வெட்டப் பட்டிருக்கிறது.

கற்றவரில் உள்ளபடி.

1. ஜெயகெஸரி
2. ஸவஸ்திஸ்ரீ கொநெரினமய
3. கொணடானஆளுடையாா
4. திருவெஞசமாககூடலஆளுடை
5. யாாதெவாகனமிகளுககுநமலைகுடுதத
6. பரிசாவதுவாரைதிருவெஞசமாககூ
7. டலஆளுடையாா.........டுதகதொமஇவவூா
8. கருஎலயாவதுவடபாலசுளளிமடையும
9. மெலபாலசூரியபபாழியுமகீழபாலநாடுகாண
10. மெடுமதெனபாலபொதகைபாழியுமஇனனுன
11. கெலலைகருடபடடபுறறுகதெறறியுமபொடி
12. ஆனமதவழிமெனுககியமாமுமகீழநோககியகிண
13. றுமஆளுடையாாதிருவெஞசமாககூடலஆளுடை
14. யாாககுககொடுததொமஇவவூரிலுளளஇறைபுரவு [சிதத
15. ாயமஎலலவையுகவைமறறுமஎபபொபயிரபபடட
16. இதுவுமமனறுபாடுதெணடகுறறமுமகறறுபபுல
17. பாகமுறறுாடடுமஆளுடையாாதிருவெஞசமாககூட

18. ல ஆளுடையாாககுககொடுததோமநநதமாாளுரும
19. பாறபடுததுககொடுககஇபபடிககுஇவவொ
20. லையிலநமஎழுததுஇடடுககொடுததோமஇப
21. படிககுசசநதிராதிதத........ரசசெலவதாகசசெமபி
22. லுமசிலையிலுமவெடடிககொளக
23. இபபடிககுஇவைவிலாடததரையனஎழு
24. ததுஇபபடிககுஇவைகாடுவெடடிஎழு
25. ததுஇதுபனமாறெறவ்ராமைக்ஷஉ

இதன் திருத்தம்.

ஜெயகேசரிஸ்வஸ்தி ஸ்ரீ கோனேரின்மைய கொண்டான், (1) ஆளுடையார் திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையார் தேவகன்மி களுக்கு, (2) நம் ஓலை கொடுத்த பரிசாவது :—

வாரை (3) திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையாருக்குக் கொடுத்தோம்.

இவ்வூர்க்கு எல்லையாவது—வடபால் சுள்ளி மடை (4)யும், மேல்பால் சூரியப் பாழியும், (5) கீழ்பால் நாடுகாண்மேடு (6)ம், தென்பால் பொந்தைப் பாழியும் (7) இந்நான் கெல்லைக்குட்பட்ட புற்றுத் தெற்றி (8) உடும்போடி (9) ஆமை தவழி (10) மேனோக் கிய மாமும், கீழ்நோக்கிய கிணறும் (11) ஆளுடையார் திரு வெஞ்சமாக் கூடல் ஆளுடையார்க்குக் கொடுத்தோம்.

இவ்வூரிலுள்ள இறைபுரவு, சித்தரையம், எல்வை, யுகவை, (12) மற்றும் எப்பேர்ப் பயிர்ப்பாட்டம் (13) இதுவும், (14)மன்று பாடு, தெண்டகுற்றமும், சுற்றுப்புல் போக முற்றூட்டும் ஆளு டையார் திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையார்க்குக்கொடுத்தோம். நந்தமானாரும் (15) பாற்படுத்துக் (16) கொடுக்க.

இப்படிக்கு இவ்வோலையில் நம் எழுத்து இட்டுக் கொடுத் தோம். இப்படிக்குச் சந்திராதித்த வரை செல்வதாகச் செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க.

இப்படிக்கு இவை விலாடத்தரையன் எழுத்து. (7)

இப்படிக்கு இவை காடுவெட்டி எழுத்து. (17)

இதுபன்மாஹேச்வர ரக்ஷை. (9)

என்பதாம்.

விளக்கக் குறிப்பு.

(1) கோனேரின்மையகொண்டான் என்ற பெயர் கோனேரி கொண்டான். கோனேரி மேல் கொண்டான் என வழங்கப்படுகிறது. இந்த மூன்று பெயரும் ஒருவனையே குறித்ததாதல் வேண்டும். இவ்வாறு ஒரு பெயர் சிறிது மாறுபாட்டோடு ஒருவரைக் குறித்து வருதலைப் புறநானூற்றில் பாடப்பட்டோர், பாடினோர் பெயர் வரிசையிற்காணலாம். இதில் முதலிரண்டு பெயரும், நிகரற்ற ஆளுகையுடையவன் என்றும் பின்னது மேல் கொண்டான் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற கோனேரி என்பான் என்றும் பொருள்படும். மேல் கொண்டார் என்னும் சிறப்புப் பெயர், தஞ்சை சில்லாவின் வேளாண்மாந்தராகிய கள்ளர்களுக்கு வழங்கி வருவதனை யின்றும் அறியலாம்.

கோனேரி மேல் கொண்டானது சாசனங்கள் பேரூரிலும், கருவூரிலும், கோயமுத்தூர் சில்லாவில் இன்னும் சில விடங்களிலும் இருக்கின்றன. இவன் கொங்கு நாட்டை யாண்ட அரசர்களில் ஒருவனாதல் வேண்டும். இவன் சிலவிடங்களில் திரிபுவன சக்ரவர்த்திகள் என்ற அடையோடும், ஜெயகேசரி என்ற அடையோடும், ஒரு அடையும் இல்லாமலும் அழைக்கப்படுகிறான். இதனால் முதலில் கோனேரி மேல் கொண்டான் என்ற பெயர் கொண்ட இவ்வரசன், பகைவர்களை வென்று ஒரு காலத்தில் ஜெயகேசரி என்ற பட்டமும், மற்றைச்சோழ, பாண்டிய மன்னர்களையும் வென்று திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்ற பட்டமும் பெற்றனாதல் வேண்டும். (திரிபுவனம் என்றது சேரசோழ பாண்டி மண்டலங்களாகிய மூம் மண்டலங்களையும் குறிக்கும்.)

(2) தேவகன்மிகளென்றது, ஆலயங்களில் கடவுளுக்குப் பணிவிடை செய்பவர்களைக் குறிக்கும்.

(3) 'வாரை' என்றது (வரியிலியாகிய) உரிமை யென்று பொருள் படுகின்றது. இக்கல்வெட்டு 17, 18 வரிகளில் முற்றாட்டும் கொடுத்தோம் என வருதலையும் நோக்குக.

(4, 5, 6, 7) இவ்விடங்கள் இன்னும் இருக்கின்றன. (6) நாடு காண்மேடு என்றது, கொங்கு நாட்டின் உள் நாடாகிய வெங்கால நாட்டை யொருங்கே காணுதற்குதவான ஒருமேட்டை.

(8) 'தெற்றி', என்றது திட்டைகளை.

(9) 'உடும்போடி', என்றது, புன்செய்களில் விளைநிலங்களை யடுத்துள்ள தரிசுகளை.

(10) ஆமைதவழி, என்றது நன்செய் நிலத்தை யடுத்துள்ள தரிசுகளை.

(11) 'மேனோக்கிய மரமும், கீழ்நோக்கிய கிணறும்', இத் தொடர்கள் நன்னூல் மயிலை நாதருரையில் "பொருள் முதலாறும்" என்ற சூத்திரத்துக்கு உதாரணம் காட்டப்பட்டிருக்கின்றன.

அடிக்குறிப்பில், இவை சிலாசாசன வாக்கியங்களென்று குறிக்கப்பட்டிருக்கின்றன.

(12) இறை, புரவு, சித்தரையம், எல்லை, யுகவை—என்பன ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரியைக் குறிப்பனவாகும். இது, இன்ன வரியெனக் கல்வெட்டு ஆராய்ச்சி வல்லார் விளங்க வெழுதிற் பெரிதும் பயனுடையதாகும். சித்தாயம் எனவும் கொள்ளப் படும்.

(13) எப்பேர் பயிர்ப் பாட்டம் என்றது—எவ்விதப் பயிர் களுக்கும் இறுக்கவேண்டிய வரியென்பதாம். பாட்டம், இப் பொருளாதலை ஒழுக்கு நீர்ப்பாட்டம் (ஓடும் தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டதற்குவரி) நிலை நீர்ப்பாட்டம் (தேங்கியுள்ள தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டதற்குவரி) எனச் சோழவமிசச் சரித்திரத்து வருதலால் அறிக.

(14) மன்றுபாடு, தெண்ட குற்றம், சுற்றுப்புல் என்பனவும் விளங்கவில்லை.

(15) நந்தம் மாரனார்—என்றது அரசாங்கத் தொழில் பார்ப்பவர்களைக் குறிப்பதாகல் வேண்டும். அன்றி, நம் தமாரனாரும் என்று கொள்ளினும் அமையும்.

(16) பாற்படுத்துக் கொடுக்க—சுவாதீனம் செய்து கொடுக்கக் கடவர். இங்குச் சுவாதீனம் என்ற வடசொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் பாற்படுத்தல் என்பது. "அலகிழற் பட்டனுக் கென்னைத் தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்ற திருப்பல்லாண்டிலும் இச்சொல் ஆளப்பட்டிருத்தல் காண்க.

(17—18) இவை சிறப்புப் பெயர்கள், முன்னது சாட்சிக்காரன் பெயரும், பின்னது எழுதினோன் பெயருமாகும்.

(19) இது பன்மாகேசுவர ரக்ஷை—என்றது மேற்காட்டிய நில உரிமையை மாற்ற அல்லது கைப்பற்றிக் கொள்ள யாரேனும் எண்ணினால் அதைத் தடுத்துக் கடவுளுக்கு உரிமை நாட்ட அடியார் அனைவருக்கும் சொந்தம் உண்டு என்பதைத் தெரிவிக்கின்றது. மாகேசுவரர் என்றது அடியார்களை, ரக்ஷை என்றது அவர்களின் பாதுகாவலில் இருக்கத்தக்கது என்பதாம்.

உ

அறிவு.

(ஓர் ஆங்கில நூலிற்கண்டபடி)

திருவாளர், ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள், ஆசிரியர்,
க. த. சங்கம், தஞ்சை.

அறிவாவது சொல்வாரது இயல்பு நோக்காது சொல்லப் பெறும் பொருளின் பயனை நோக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வதாம். சொல்வார் தாம் உயர்ந்தோர், தாழ்ந்தோர், நட்டோர், பகைவர் எனப் பல்வகையினராதலோடு, முக்குணவயத்தராதலானும், இவருள் ஒவ்வொருவரிடத்து ஒவ்வொன்று ஒரோ வழிக் கேட்கப்படுதலானும், அவரது இயல்பு நோக்காமை வேண்டும் என்பது புலப்படும். அன்றியும், வேண்டப்படுவது பொருளேயன்றிப் பிறிதன்று. ஆகவே, "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்—மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்னும் தமிழ்மறை துணியப்பட்டது. படவே, சொல்வாரது இயல்பு நோக்கிப் பொருளின் பயன்காணாது ஒழிதல் அறியாமை என்பதும், அதனாலெய்தும் பயன் துன்பமே யென்பதும் பெறப் படுகின்றன. இவ்வுண்மை கீழ்க்காணும் பொருட்கதையில் விளங்குதல் காண்க.

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப் பகல்கான்று எழுதரும் பருதியஞ் செல்வன் கீழ்க்கடல் முகட்டில் எழுமுன், வெள்ளி முளைப்ப விடியல் வந்தது ; ஓதல் அந்தணர் பாடினர் ; கூவின பூங்குயில் ; கூவின கோழி ; குருகுகள் இயம்பின ; இயம்பின சங்கம் ; இருஞ்சேற்றகன்வயல் முட்டாட்டாமரைத்துஞ்சி, வைகறைக் கட் கமழும் நெய்தலூதி, எற்படக் கண்போல் மலர்ந்த

காமர்சுனை மலரை அந்நிறைவண்டின் அரிக்கண மொலித்தன. இவற்றினிடையே, முகையவிழ்ந்த முருக்கலரொன்றை வண்டினஞ் சூழ்வந்து முரலாநிற்ப, "ஐயகோ! ஐயகோ!!" எனும் அழுகுரலொன்று, அவ்வலர்க்கீழ் விளங்கிய அழகிய தளிரிடையெழுந்து, கேட்போர் செவிப்புலம்புக்கு, அவர் தம் மனத்திடை அருளூற்றெழச் செய்தது. இங்ஙனம், எவ்வுயிர்க்கும் இன்பக் காட்சி நல்கும் இளஞாயிறு தோன்றுங்காலைத் தோன்றிய துன்பக் காட்சி ஆண்டுற்ற உயிர்ப் பொருளனைத்தும் மருளச் செய்தது. யாண்டும் அமைதி நிலவிற்று. சிறு சுரும்புந் தேனுடிற்றன்று. புனையாவோவியம் கடுப்ப யாவும் போந்தனவாக, மீட்டும் அப் புலம்பிசை கல்லும் புல்லும் கனிந்துருக எழுந்தது. ஓசையியலுணர்ந்தாருளராயின், அது, இறந்துபடுநிலைக்கண் பல்பொறிப் பூச்சியொன்றிடும் மெல்லிசை யாமெனவுணர்வர். மற்று, யான் அவ்வறிவிலேன் ஆதலின், நெடுங்காலந் தாழ்த்துப் பின்னரேயுணர்ந்தேன். உணர்ந்தேன், அவ்வோசையை நனித்தாக்கேட்டுமவா மீக்கொண்டேனாக, ஆண்டெழுந்த பொருண்மொழி பின்வருமாறு கேட்டேன். அது,

"இருநிலம்புரக்கும் இறைவ! எவ்வுயிர்க்கும் நலம்பயக்கும் இயவுள்!! இச்சினைகளை யான் ஈண்டு இட்டிறத்தல் ஒல்லுமா! ஆ! இவை தோன்றிய நாழிகைகூட இன்னும் கழிந்தின்றே! அந்தோ! இதற்குள் யான் இறக்கின்றேனே! இன்னாதம்ம வுலகம், இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே என்றெல்லாம் பெரியோர் கூறுதல் உண்மையே! இறைவ! இறத்தற்குப் பணித்த நீ எனக்கு இப்பச்சிளஞ்சினைகளை யளித்தல் ஏற்றுக்கோ? இது முறைகொல்! யான் இறந்துபடின், இவ்வருமந்த சினைகளைப் புரக்கவல்லுநர் யாவர் கொல்லோ? உயிர்க்குணவளித்தற்கு நீ உளையெனினும், ஒரு பற்றுக்கோடுமின்றி உயிர் நீத்தற்கன்றே என் உளம் உளைகின்றது! அந்தோ! ஏ! உலகே! என்னை நின் இயற்கை!! உளைத்துறக்கும் நிலைக்கணுற்ற என் உள்ளத்தை இங்ஙனம் தளைசெய்தலே நின் பண்புபோலும்!! நன்று! நன்று! அம்மவோ! புலன்கலங்க பொறிகலங்க நெறிமயங்குகின்றதே! அறிவு அழிகின்றதே! ஆவியும் அலமருகின்றதே!! ஐயகோ!

யாரொடு நோகேன், யார்க்கெடுத்துரைப்பேன்! ஆசா கருளினர் யார்கொலோ. ஆ!........" என்பது.

இங்ஙனம் கூறிப் புலம்பிக்கொண்டிருக்கும் பல்பொறிப் பூச்சி (வண்ணாத்திப்பூச்சி) ஒன்றினருகே பச்சிலைப் புழுவொன்று போந்து, இவ்வுரைகேட்டு எரியிடையிழுதெனக் இளைந்து நின்றது. கண்ட அப்பூச்சி "உடைகலப்பட்டோர்க்கு உறுபுணை தோன்றி யாங்கு, இடர்ப்படும் என் முன்றோன்றிய அன்னாய்! வாழி! ஆருயிர் அலமர அழுது சாம்புவேனுக்கு நீ ஓர் உதவியருளல் கூடுங்கொல்லோ! உற்றுழி உதவுதல் உரவோர் கடனாதலின், உன்னைக் காண்டலும், உதவி நாடிற்று என் உள்ளம்" என்றலும், புழுவும் "பிறருறு விழுமம் துடைத்தல் சால்பெனப் பெரியோர் கூறுவர். அவர் வழி நிற்றல் கற்பவை கற்பதின் அழகு. ஆதலின், நின்மாட்டு எய்திய துன்பம் யாது?

"கடல்பாடவிந்து தோணி நீங்கி
நெடுநீ ரிருங்கழி கடுமீன் கலிப்பினும்"

இயன்றன செய்தற் கிடையேன். கூறுக" என்றது.

இக்கூற்று பூச்சியின் செவிப்புலம்புக்கதும், அது ஒருவாறு மனந்தேறி, "பைந்தழை வாழ்க்கை பரித்தோய்! ஆவியோ நிலையிற் கலங்கியது. அது என் யாக்கையின் அகத்ததோ புறத்ததோ அறியேன். இந்நிலையில் இறைவன் எனக்கு இப்பச்சிளஞ்சினைகளை யருளியுள்ளான். அவற்றையும் அறிவிலியாய யான் இம்முருக்கிலையிலிட்டுளேன். அவற்றை எனக்குப் பின் களைகணாய் நின்று புரப்பார் ஒருவரையும் காணாது மறுகுகின்றேன். இவற்றையருளிய இறைவர்க்கு அளித்தல் கூடும் என்பது உறுதியே எனினும், என் உள்ளங் கடுமாறுகின்றது. ஆகலின், உற்றாரின்றி யுயங்கும் என் முன் ஒருதனித்தோன்றிய நீயே களைகணாய் நிற்பாய்கொல்! அங்ஙனம் நிற்றல் உனக்கு அரிதன்றன்றே. அன்றியும், ஆவி துறக்கும் நிலையிலிருக்கும் என்னுடைய இப்புல்லிய வேண்டுகோளை மறாது எற்றருள்க. இது நினக்குப் பேறறமாகும்," என்றது.

புழு:—ஆம். பெரியீர். ஆயினும் இவற்றை யான் புரத்தல் யாங்ஙனம்? இவையும் என் இனத்தைச் சார்ந்தன வல்லவே!

பூச்சி:—சாராமையால் வரும் குற்றமொன்று மில்லை. யான் கூறும் உணவைமட்டில் நீ அருத்தியொடு அளித்துவரின், ஒருவகை இடையூறும் நேராது. இது முற்றும் உண்மை.

புழு:—ஆற்றேல், உரைத்தருள். நின் உடல் நிலையும் குன்றி வருகின்றது. காலந் தாழ்த்தற்க.

பூச்சி:—கூறுவல். செடிகளின் இளந்தளிரும் பனிநீரும் தாம் அவற்றிற்குத் தக்க உணவாம். வேறு எவையேனும் அளிக்கப்பெறின், அவை உண்ணாது இறந்துபடும். ஆகலின் இக்கூறிய உணவை...யே... அ .....

என்று கூறிக்கொண்டே உயிரை விடுகின்றது.

கண்டுகலங்கிய புழுவிற்கு அச்சினைகளையும், அவற்றிற் கெனப் பணிக்கப்பெற்ற உணவையும் நினைத்தொறும் உள்ளம் நெக்குருக, நினைவு தடுமாறலுற்றது. இது இயற்கையே. செத் தாரைக்கண்டு சாவாரும் வருந்துதல் இயல்பன்றே! தாந்தாமும் தம் ஆற்றலறிந்தன்றோ ஒவ்வோர் பணியை ஆற்ற முன் வரல் வேண்டும். எண்ணித்துணிக கருமம். துணிந்தபின் எண்ணு வம் என்பது இழுக்கன்றோ! நிற்க, செயக்கடம்பூண்ட பணியை யெவ்வாற்றானும் செய்து முடித்தலும் வேண்டுமன்றோ. இறந்த தனை எண்ணுதலால் இனிப் பயன் யாதேனும் எய்துமோ? மெய்வருத்தம் பார்த்தல், பசிநோக்கல், கண்டுஞ்சல், செவ்வி யருமை பார்த்தல், அவமதிப்புக் கொள்ளல் ஆகிய இவற்றைக் கருமமே கண்ணாயினார் கண்ணாரன்றே. சிறுசினை புரக்கும் பெரும்பணி மேற்கொண்ட புழு ஒருவாறு தேறி, "ஐயகோ! இவற்றை யான் எங்ஙனம் புரத்தல் கூடும்? இளந்தளிரும் பனி நீரும் எவண் கிடைக்கும்? கிடைப்பினும் யான் எவ்வாறு கொணர்வேன்? இச்சினைக்குட் பிறங்கும் பூச்சிகள் பறக்குந் தன்மைய; யான் அவ்வினத்தைச் சாரேன். இயற்கையான் மாறுபட்டயான் புரத்தற்கு உடன்பட்டேனே! என்னே என்

அறிவிருந்தவாறு!! இவற்றினின்றெழும் பூச்சிகள் சின்னாட் களிற் பறந்தெழுமே, அஞ்ஞான்று யான் அவற்றை எவ்வாறு அடக்குதல் கூடும்! ஆ! என்ன காரியம் செய்தேன்! 'ஆய்ந் திடும் உணர்வொன்றில்லார் அலமால் இயற்கை அம்மா!' எனப் பெரியோர் கூறுதல் எத்துணை யுண்மையுடைத்து," என வீழ்ந்து சோர்ந்து, பின்னர்ச் சிறிது தெளிந்து, "இனியான் இங்ஙனம் வருந்துதல் கூடாது. இதனை முன்னரே நன்கு ஆராய்ந்திருத்தல் வேண்டும். 'விழையாவுள்ளம் விழையுமாயினும்........தற்றக வுடைமை நோக்கி, மற்றதன், பின்னாகும்மே முன்னியது முடித் தல்' என்பர் நல்லிசைச் சான்றோர். கழிந்தன பற்றிக் கலங்கு துயருழத்தல் என் நலத்திற்கே கேடுதரு மொன்றாகலின், செய்தல் மேற்கொண்ட இப்பணியை, அறிவின் மிக்கார் பொருளுரை கேட்டுத் தக்கன தேர்ந்து செய்வல். இதுவே யான் இனிச் செயற்பாற் றன்றிப் பிறிதொன்று மன்று" எனத் தேர்ந்து நின்றது. அக்காலை, தேனூண்சுவையினும் ஊனூண் சுவையே உயிரினும் விரும்பிவாழும் பூனை யொன்று ஆயிடைப் போதந்தது. கண்டபுழு அதனை யளவளாவித் தான் மேற்செயற்கேற்ற விதிகளை யறிய அவாக்கொண்டது. கொள்ளினும், அதன் உளத்துச் சிறிது நாழிகைக்குள் அப்பூனை தன் வேண்டுகோட்குச் செவி சாய்க் காது, தனக்கும், தன்னுழைக் கையடையாக் காப்பெற்ற சினை கட்கும் ஊறிழைக்கினு மிழைக்கும் என்னும் ஓர் எண்ணம் எய்த அது அம்முயற்சியைக் கைவிட்டது.

கைவிடலும், போன வெஞ்சுரம் புளியிட வந்தாங்கு, மறந்திருந்த வருத்தம் மீட்டும் அதன் மனத்தே தோன்ற, அது சிறிதுதேறி, தன் மனக்கிசைந்த அறவுரை கூறும் ஆற்ற லுடையார் இனியாவருளர் என்னுமோர் ஆராய்ச்சியைப் பின்ன ரும் செய்தல் தொடங்கிற்று. ஆவ்வுழிக் கும்பிடப்போன தெய் வம் குறுக்கே வந்தென, வானிற் பறந்துழலும் வன்சிறைப்பருந் தொன்று அதனருகே சென்றது. இதனை யப் புழுக்கண்டலும், தன் மனத்திற் பலதிறப்பட்ட எண்ணங்களைக் கொண்டது. அவற் றுள், "இப்பருந்தினும் அஃகி யகன்றவறிவுடையார் யாவருளர்? மனத்தானும் எண்ணற்கியலாத சேணிற் பறத்தலும், ஆண்

டிருந்தே, மண்மீதியெங்கும் நிற்பிகளை (ஈண்டுச் சின்னஞ்சிறிய சிற்றுயிர்களை யெனக் கொள்க)க் கண்டு, அவற்றின்மேற் குறிபிழையாது நெடுநேரெலனப் பாய்ந்து பிடித்துண்டலுமாய உயரிய செயல்களைச் செயல்வல்லார் வேறொருவருமில ரன்றே! ஆகலின், இதனிடை, யான் எனக்காவனவற்றை யுசாவி யறிகின்றேன்" என்பதொன்றென்க.

இங்ஙனம் எண்ணானி முடிபுசெய்து கொள்ளும் அப் புழுவிருந்த புலத்தில் அயலிருந்த வயலொன்றில் வேறு பருந்தொன்று வாழ்ந்து வந்தது. அதற்கும் அப்புழுவிற்கும் நெருங்கிய நட்புமுண்டு. அந்நட்புரிமை யேதுவாக, புழு, அப்பருந்தினை வரவழைத்துத் தான் அச்சினைகளை வளர்க்கு மாற்றைத் தெரிந்து கோடலை நாடி நிற்ப, செல்வக்காலை நிற்பினும் அல்லற்காலை நில்லா மாட்சிமைத்த கேண்மைசால் பருந்தும் காகதாலியமாகப் புழுவைப் பார்த்துச் செல்வான் வந்தது. வரக்கண்ட புழுவும் கழிபேருவகைகொண்டு, " அன்பு கெழுமிய நண்பே! வருக. இன்பங் கனியும் நின்முகங்கண்டும் யான் இன்பமின்றியிருத்தலை யறிதியோ? இங்ஙனமிருக்கு மெனக்கு ஒரு மாற்றுக்கூறல் வல்லை கொல்லோ?" என்றது.

பருந்து :—அறிவல். மற்று நின்னையுற்ற துன்பம் ஒன்றுண்டென அறிந்தனனேயன்றி அது இத்தன்மைத்து, இவ்வேதுவுடைத்து என்பனவற்றை யறியேனாகலின், மாற்றுக்கூறல் யாங்ஙனம் இயலும்?

புழு :—நன்று. கேட்டிசின், எனக்கு நின்னொப்ப உயிர்த்தோழமை பூண்ட சேடப்பூச்சி (வண்ணாத்திப்பூச்சி) யொன்று ஈண்டுச் சின்னாட்களுக்கு முன் வாழ்ந்து வந்தது. அதன் வழியெச்சமே ஈண்டு நீ காண்குறும் பச்சிளஞ் சினைகள். இவற்றை அதுதான் இறக்குங்காலத்து ஈன்று, என்னையும் புறந்தருமாறு பணித்ததுமன்றி, இவை குடம்பை தனித்தொழியப் பறந்தேகு நாள்காறும் தக்குணவளித் தோம்புதல் செய்யுமாறும் கூறியகன்றது. அவ்வோம்படையேற்ற யான் அங்ஙனம் செய்யுமா றறியாது அலமருகின்றேன்.

பருந்து :—என்னை ?

புழு :—அவ் வாற்றினை யான் அறியேனாகலின்.

பருந்து :—என் அறியாய் ?

புழு :—அப்பூச்சியோ பறக்குமியல்பிற்று: மற்று, யானோ ஊர்வன வற்றைச் சார்ந்த புல்லிய புழுவானேன். பறப்பனவற்றை ஊர்வன புரத்தல்,

"பாய்திரைப் புணரி பாடலின் றொழியினும்,
காய்கதி ரிரண்டுங் கதிநிரி போடினும்,"

கூடாது என்பது உண்மையன்றோ. அது பற்றியே இம்மயக்கம் எய்தியது.

பருந்து :—மயங்கல் வேண்டா. நுனித்து நோக்கின், இவற்றைப் புரத்தலும், ஏற்ற வுணவு கொடுத்தலும் நின்னாலெளிதிற் செயற்பாலன வென்பதே தோன்றுகின்றது. அன்றியும், செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல, நினைத்தொறும் நினைத்தொறும் இம்முடிபே எய்துகின்றது.

புழு :—உய்ந்தேன் ! உய்ந்தேன் !! கூறுக.

பருந்து :—கூறுவல். தடையுமின்று. மற்று, யான் கூறுவனவற்றை நீ உள்ளவாறே யுட்கொள்ளுவாயோ வென்றையுறுகின்றேன். எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அன்றி யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருளின்கண் மெய்ப்பொருள் காண்டல் கூடும் என்னும் உறுதி நோக்கு (Faith) நின்னுழை யுளதானாலன்றி, என் மொழியின் உண்மைப் பொருள் புலனாகாது. இந் நோக்கின்றிக் கேட்டல் ஆங்கேறி யாடல் புரிவாரது நோக்கினையொக்கும்.

புழு :—ஆம். சார்ந்ததன் வண்ணமாதலே மனவியல்பு. எந் நோக்கங் கொண்டு எப்பொருளை நோக்கப்படுகின்றதோ, அந் நோக்கிற் கமைந்தே அப்பொருளுந் தோன்றும். ஒருவனைக்

குற்றமுடையனே யெனக்கருதி நோக்குவார்க்கு அவன் குற்றமுடையனாகவும், அல்லனெனக்கருதி நோக்குவார்க்கு அல்லனாகவும் தோன்றல் கண்கூடன்றோ! நிற்க, யான், அவ்வாறுநோக்கு உடையேன்; வெளிப்படையாகக் கூறின், நீ கூறுமனைத்தையும் கூறியாங்கே நம்புவல். இது உறுதி.

பருந்து:—உறுதியாயின், கூறுவல்: முதற்கண் நீ இவற்றிற் கேய்ந்த வுணவு யாதென நினைக்கின்றனை? நின் உளத்திற் றோன்றுமவற்றை மட்டிற் கூறுக.

புழு:—(நினைத்து) யாதாமோ? பனித்திவலையும் பைந்தேனுமாம்! அ!

பருந்து:—அல்லவே. அவற்றிற்கேற்ற வுணவை நீ மிக்க எளிதிற் கொணர்தல் கூடுமே. அன்றியும், அது இவ்வனைத்திலும் மிக்க அண்மையிற் கிடைத்தற்பாற்றன்றோ!

புழு:—(நகைத்து) என்னருகில், எளிதில், பெறக்கூடியது இம் முசுக்கொட்டையிலை யன்றிப் பிறிதொன்றுமில்லையே.

பருந்து:—ஆம்! ஆம்!! நன்று சொன்னாய்! நீயே அவ்வுணவை நன்கு உணர்ந்து கொண்டனை. இம் முசுக்கொட்டையிலைகடாம் அவற்றிற்குத் தக்கவுணவாவன.

புழு:—(சினந்து) ஏ! என்னே நின் மடமை!! இவற்றையன்றோ அது கருதல் கூடாதென வன்புறை செய்தது. முதலாக வொன்று மொழிதலும், பின்னர் மற்றொன்று செய்தலும் அறனல்ல. அதனால் விலக்கப்பட்ட வுணவையே யளிக்குமாறு கூறல் நின் அறிவுடைமைக் கழகன்று; அமைதியுமன்று.

பருந்து:—அன்பே! பொறுத்தருள். இனிய உளவாக, இன்னாத கூறல் கனி இருப்பக் காய்கவர்ந்தற்று என்பதை நினைத்தருள்க. நிற்க, இவற்றின் தாய்ப்பூச்சி இவ்வுண்மையினை யறியாது. அது பெரும்பேதை. அன்றியும், யான்

கூறுவனவற்றை யுற்று நோக்குடன் கேட்பலெனக் கூறி, கூறக்கேட்டலும், உண்மை நோக்காதொழிதல் நின் உயர்வுக்குக் குறையன்றே! அறிவும், அமைந்த நம்பிக்கையும் அமைவுறினன்றோ வுண்மை தெள்ளிதாம்.

புழு:—ஓ! அற்றன்று. என் செவிப்புலனும் பொருள் பலவற்றினும் அமைவுறும் உண்மைப்பொருள் காண்டலே என்னியல்பு. உற்றுநோக்கும், உண்மை நம்பிக்கையும் உடையாரின் மிக்கார்த்தேரின், யானலதில்லை இவ்வுலகத்தானே என்பதை மீட்டும் நினக்கு வற்புறுத்துகின்றேன். அறிக!

பருந்து:—அறிவதென்! நின்சொல்லின் வலியின்மையை நின் சொற்களே நன்கு காட்டுகின்றன. யான் கூறும் உணவுப் பொருளையே நீ முதற்கண் ஏலாதொழியின், பின்னர்க் கூறப் போவனவற்றை நீ எங்ஙனம் ஏற்றல் அமையும்? நிற்க, இப்பச்சிளஞ் சினைகள் பொரித்தலும் என்னுமென நினைக்கின்றனை? இதனையேனும் உண்மையாகக் கூறுதி.

புழு:—என்னும்! விதையொன்று போடப் பதமொன்று விளையுங்கொல்! "பண்டு செய்வினையலாற் பரவுதெய்வமொன்றுண்டெனில், தான் பயன் உதவ வல்லதோ" என்னும் செம்பொருளையும் தெளிக. ஆகலின், சேடத்தின் சினை சேடமாமேயன்றிக் கிடமாகா.

பருந்து:—அன்றன்று. சேடத்தின் சினை சேடமாகாது முதற்கட் கீடமே யாம். உண்மையைக் கூறின், அவை பொரித்தலும், நின்னொப்பப் புழுக்களாமே யன்றி நீ நினைத்துக் கூறும் வண்ணாத்திப் பூச்சிகளாகா. நீ இவ்வுண்மையை ஏலாதொழியினும் ஒழிக. உண்மை பின்னர்ப் புலனும். யான் சென்று வருவல்.

இங்ஙனம் கூறிக்கொண்டே பருந்து சேணோக்கிச் சிவ்வென்றெழுந்து பறந்து சென்றது. அன்றியும், ஆண்டேயிருந்து, புழுவிற்கு உண்மையுணர்த்தும் வகையாற் கலாய்த்தற்கு அப்

பருந்து விரும்பிற்றன்று. 'இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும் அருள் நன்கு உடையராயினும், சான்றோர், பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்' என்பர் பெரியார். ஆகவே, பருந்தும் கலாய்த்துப் பழியெய்தற்கு அஞ்சி யகன்றதென்க.

இங்ஙனம் விழுமிய நட்புக்கடம்பூண்ட பருந்து பிரிதலும், புழு மிக்கதோர் மருட்சிகொண்டு, செய்தொழிலறியாது திகைத்து அருகுநிற்கும் சினைகளைக் காண்டலும், கண்ணீருகுத்தலும், பன்முறை யவற்றைச் சூழ்வரலும் செய்து கொண்டு வரும். இடையிடையே பருந்துகூறிய மொழிகளை எழுத்தளவாய் ஆயும்; பொருட்பயனைப் பன்முறையும் சூழ்ந்து நோக்கும்; தன் யாக்கைப் பண்பையும், பூச்சியின் பொலிவையும் மனத்தா னொப்பு நோக்கும். அதுகாலைப்பின் வருமாறும் நினைக்கும். அது:

“மாந்தர் இனத்தியல்பதாகும் அறிவு” என்பது தமிழ்மறை. இதுபற்றியன்றே, உயர்ந்தோர் கூட்டமே யுறவாய்க் கொண்டுழலும் இப்பருந்தும் மிக்க அறிவமைதியுடையதா மென்றெண்ணிக் கெட்டேன்! ஒருகால், அது இம்முறை நெடிது சேணிற் பறந்திருக்கும். அதனாற்றான் இக்கலக்கம்! ஆ! என்ன அலகைத் தன்மை! உலகத்தோர் உண்டென்ப தில்லென்பான் வையத்து அலகை யென்று எண்ணப்படுமன்றோ! ஆ! உயிர்க் கூட்டத்துள், உயர்ந்தாரோடு கூடி வாழ்வனவும், கூடி வாழ்வதாகத் தம்மை யுயர்த்திக்கூறிக் கொள்வனவுமாய பல வுயிர்கள் முடிவில் எத்துணைப்பேதைமையும் கொடுமையும் உடையவாய்த் தோன்றுகின்றன. என்ன உலகம்! பெறுதற்கரிய யாக்கை தமக்கு எய்திற்றென்றால், அதுகொண்டு அறிவும் ஒழுக்கமும் அமையப்பெற்று, தக்கவின்ன, தகாதனவின்னவென ஒக்க வுன்னி, ஒப்பன வற்றைக் கோடலன்றோ யாவர்க்கும் ஒருபடித்தாய் வேண்டப் படுவது.

“கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு”

ஆகுமன்றோ, இஃது ஓர் உயிர்க்கு எய்தாவிடின் அதன் பொலிவு கூர் யாக்கை. நிற்க, இப்பறவை அவ்விசும்பைப் படர்ந்து

சென்று செய்யும் தொழில் யாது கொல்! நெடுங்காலமளவும் இஃது ஆண்டுப் பறந்து கொட்புறுதலின் உட்கிடையென்னோ? இதனொடு அங்கு உரையாடி நல்லறிவு கொளுத்தவல்லார் யாவரோ? இவ்வனைத்தும், எண்ணுந்தோறும் மயக்கத்தை யன்றோ தருகின்றன. என்ன இறும்பூது பயக்கும் வாழ்வுகாண் இதன் வாழ்வு!" என்பது.

இங்ஙனம், அது, நினைத்தவண்ணம் பண்டேபோற் றன் சினைகளைச் சூழ்வந்து காவல் புரிந்து வந்தது. அதுபோது, பருந் தின் மெல்லிசைமட்டிற் புழுவின் செவிப்புலனாகலும், அது, முன்னைக் களிப்பின்றெனினும், சிறிது தேறி, நோக்கக்குழையும் என்பதற்கஞ்சி, இனிமை தோன்ற ஒருவண்ணம் எதிர்நோக்கி நின்றது. பருந்தும் வந்தது. இரண்டன் நட்பும் நருகற் பொருட் டன்றாகலானும்,

"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பக லமையமும் இரவும் போல
வேறுவே றியல வாகி மாறெதிர்ந் துள"

என்னும் பொருளை இவை நன்குணர்ந்தவை யாகலானும், முன்னர் நிகழ்ச்சியிற் புழுவின் சினத்தை யறவே மறைய ஒன்றோ டொன்று சிறிது அளவளாவிப் பின் வருமாறு மீட்டும் அவை சொல்லாடல் தொடங்கின.

பருந்து:—யான் கூறுவனவற்றை, முன்னரே கூறியுள்ளவாறு, உறுதிநோக்கும், ஒப்பன கொள்ளும் உளமும் கொண்டு கேட்பையேற் கூறுவல்.

புழு:—ஆயின், அவை என்னிடத் தில்லெனவெண்ணுதிபோலும்! நன்று நன்று!! ஆ! கேள்விவா யெய்தும் எவ்வகைப் பொருளையும் உறுதிநோக்குக் கொண்டு, உளத்திற்கோடலே என்னியல்பென யான் கூறியிருக்குமது நின் நினைவின்க ணில்லை கொல்லோ!

பருந்து:—"உணர்ந்தன மறக்கும், மறந்தனவுணரும்" என்பர் பெரியோர். இனி மறவேன்; பொறுத்தருள்க. நிற்கு யான் முன்பு கூறியன நின்னையும், நின் சினைகளையும் பற்றிப் பொதுவாக வுணர்ந்தன; இற்றைஞான்று கூறப் போவது நின்பொருட் டுணர்ந்த சிறப்புப் பொருளாகும். அது, சுருங்கக் கூறின், நீயும் ஒருபகல் அப்பூச்சியே யாதல் வேண்டும் என்பது.

புழு:—என்னை கூறினை? ஏ, மடப்பருந்தே! நிறுத்துக நின் சொற்பொழிவினை! நின்னொடு நிமிர்ந்தநேயம் இப்பயனைப் பயக்கும் நீர்மைத்தாயின், என் கூறுவது. பாலாகித் தோன்றிப் பருகினார் ஆவிகொள்ளும் ஆலால நீர்மைத்தே நின்னன்பு என்பதே சாலப்பொருந்துவது. பொலிவு, திட்பம் முதலியவில்லா யாக்கையேன் என எண்ணி இன்னணம் என்னை இழித்துக் கூறுவான் செய்த கூற்றேயிது. அறிந்தேன். நின் தன்மையை யான் இன்றே உணர்ந்தேன். நீ பெருங்கொடியை! அறிவிலி! திருந்த வியலாத் தீயை! பேதை!! நாணின்றி என் முன்னிற்றல் நின் மாண்பிற்கே குறைவாம். இனி எனக்கு நின் பொங்குசோறும் வேண்டா; பூசாரித்தனமும் வேண்டா. போதும்! போதும்!!

இவ்வண்ணம் கூறிய புழுவின் நெஞ்சுசுடு நெடுமொழி வன்சிறைப்பருந்தின் மனத்துத் தினைத்துணையும் சினத் தீ கொளுத்திற்றின்று. என்னை, வன்மையுள் வன்மை மடவார்ப் பொறையாகலின். மற்று, அது, அதன்மனத்துத் "திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து—அறனல்ல செய்யாமை நன்று" என்னும் தெய்வத் திருவள்ளுவப் பயனை யெழச் செய்து, உறுவது தோராப் புழுவின்மாட்டு இரக்கமும், அதன் அறியாமைக்குக் கவற்சியுமே தோன்றச் செய்தது. வேறு என் செயும்!! அது அப்புழுவினை, "அன்ப, நீ வெகுண்டு கூறுவனயாவும் வெளிற்றுரைகளே. ஒருபுடை, அவை, நீ இச்சினை மாட்டுப் பூண்டொழுகும் போதாவின் உறுதியைப் புலப்படுத்துகின்றன வெனினும், ஆன்ற கேள்வியாற்றோட்ட செவியை யல்லை யென்

பதைக் காட்டாது கழியவில்லை. என் சொற்களை நீ ஏற்றுக் கொள்ளாயெனப் பண்டே யான் கூறினேனன்றோ," என்று கூறிற்று.

புழு:—ஆம். யான் கேட்பனவற்றில் உறுதிப் பொருளைக் காண்டல் கூடும் என்னும் நோக்கத்துடன் ஏற்றுக்கொள்வலென்பதைப் பண்டு கூறியதே யன்றி, இன்றும் கூறுகின்றேன், இனி என்றும் கூறுவேன். உரைப்பார் உரைப்பனவற்றை யுரைத்த வாற்றா னுட்கொள்ளு மியல்பினை யுடையார்க்கு, அவர் உண்மைகலந்தவற்றைத் தாமே யுரைத்தல் வேண்டும். ஒருவாற்றானு மியைபில்லாத வொன்றை யியைத்துக்கூறின் யாவர் தாம் ஏற்பர். நிலையாத வற்றை நிலையின வென்றுணரும் புல்லறிவாண்மை கடையாதல் போல, இயைபில்லன வற்றை யியைபுடையவாக்கிக் கூறலும், கூறக்கேட்டலும் புல்லறிவாண்மை யாதலோடு கடையாதலும் தோன்றிற் றன்றே. நண்ப! சேடப்பூச்சிகளின் சினை பொரிக்கின் கீடங்களாக மாறுமென்பதும், கீடங்களுந் தம் இயங்குதற் றன்மை நீங்கிப் பறத்தற்றன்மையினை யெய்து மென்பதும் முற்றிலும் பொருந்தாக் கூற்றுக்களே. இவற்றோரன்ன புன்மொழிகளை நீ யாண்டு, யாங்ஙனம், கேட்டற்குத் துணிந்தனை? இவை யொல்லுமோ வென்பதை நீயே ஆய்ந்து நோக்குக. அங்ஙனமாதல் ஒருகாலும் முடியாதன்றோ!

பருந்து:—இனி வேறு கூறல் எனக்கு இயலாது. வேண்டுமேல் யான் அறிந்தவற்றைக் கூறுவல்; கேள்: யான் வயல் வழியும், வானூடும் படர்ந்து கொட்புறும் பான்மையேன். அங்ஙனம், படருங்கால், இடையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் காணாது செல்வது கிடையாது. அவற்றுள் ஒவ்வொன்றும் நினைவுவல்லார் நெஞ்சம் கடந்து நிற்குந்தன்மைத்து. அவற்றைக் கண்ணுற்றுத் தெளிந்தயான் இவ்வாறு நிகழ்தலுங் கூடுமெனத் துணிந்தேன். ஓர் குறுகிய எல்லைக்கணியக்கமும், தான்வாழும் இலையன்றிப் பிற கண்டறியாமையு

முடைய நினக்குப் பிறவனைத்தும் அரியவும், இயைபில்லவும், முடியாதவுமாகவே தோன்றும். கிணற்றுத்தவளை புணரி யியல்லையை யறியுங்கொல் !

புழு :—அந்தோ! தூய்த்திடு முணர்வுதன்னை நினக்கு அவ் வயன் படைத்திலன்கொல்! அவனைக் காண்பனேல், அற்றதலை போக, அறுதலை நான்கினையும் பற்றித்திருகிப் பறிப்பேன்! அறிதியோ!! இக்கூற்று இத்துணையுறுதியுடைத்து; உண்மை யுடைத்து என்பனவற்றையுமோ யான் அறியேன்! ஆ!! இத்துணைக்காலம் இவ்வுலகிடைப்பிறந்துழன்ற யான் அறியாதொழிவனோ? என்னே நின்மடமை! என் பசிய நெடிய வுடலையும், எண்ணிறந்த கால்களையும் நோக்குக. இவற்றை நேரிற் கண்டும், எனக்கு இவ்வுடலீங்குமென் பதும், பல்வகை வண்ணமமைந்த புத்துடலொன்று எய்து மென்பதும் எத்துணை இழித்தக்க மொழிகளாகின்றன. இஃதறியாமையே பேதமை யென்பது. கூறுவோர்க்கு உணர்வு குன்றினும், கேட்போர்க்கும் அது குன்றுங் கொலோ?

பருந்து :—(சினந்து) என்னை கூறினை? "யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு', என்னும் பொய்யில் மொழியினை மறந்தியோ? என்னை நீ மதியிலி யென்பது உண்மையே. கல்லா அறிவில் கயவர்பாற் கற்றுணர்ந்த நல்லார் தமது கனம் நண்ணுதலுண்டுகொல்! இதனைச் சிறிதேயு மறிந்திருந்தும், யான் இவ்வுண்மையைக் கூறிய வந்தனனன்றே! நின் அறிவுக்கெட்டாதவற்றை வற்புறுத்திக் கூறநினைத்தலும், அதுபற்றி நின்னுழை யெய் தலும் என்னிலைக்கு ஏற்பனவல்லவன்றோ! வானோக்கி யெழுங்கால் என்வாய்வழி வரும் இன்னொலி கேட்டோர்க்கு இன்பம் பயந்து, எனக்கு மதுவழியேயோர் சிறப்பினையும் நல்குதல் ஒருதலை. இது கிடக்க, நீ இனியேனும் வருவன வற்றையும், பிறர் கூறுவனவற்றையும் ஒன்றிய வுள்ளமொடு ஏற்றுக்கொள்க.

இவ்வாறு, புழுவின் புன்மொழிகள் பலவும் பருந்தின் செவியிற் புக்கும் அது வெகுளாது, நாணாது, அன்புடை நன்மொழி கூறலும், புழு தன் அறியாமைக்கும், அதனாற் சினந்து பிதற்றிய மொழிகட்கும் உளம் வெள்கி, "அதற்கு நீ கூறும் அந்நம்பிக்கையும் உறுதி நோக்கும் என்மாட்டில வென்பாயோ? என்றது.

பருந்து :—உளவேல், இத்துணை நெடுமொழிகள் பிறக்குங் கொல்லோ!

புழு :—அற்றேல், அவ்வுறுதி நோக்கு என்னுழை யுண்டாதற்கு யான் செய்யக்கடவதென்? அன்பு கூர்ந்து கூறுக.

இங்ஙனம் அமைதிசான்ற வுரையாடல் இடைநிகழுங் காலத்துப் பருந்து சேட்புலம் படர்ந்தது. புழுவும் தன்னைப் பன்முறையும் நோக்கி, அச்சினையிருந்த முருக்கிலையைச் சூழ்வந்து கொண்டிருப்ப, அவ்விலையைத் துளைத்துக்கொண்டு எழெட்டுப் பச்சிலைப் புழுக்கள் அங்குமிங்கு மியங்கத்தொடங்கின. அவை யாண்டிருந்து போந்தன? அவை அச்சினைக்கணின்று போந்தனவே! போதரக்கண்ட புழுவின் புந்தியிற் கலக்கமும் மானமுங்கலந்து தோன்றின; கண்ணகன் ஞாலம் கொட்புறல் செய்தது; உடல் சுமந்து நிற்கும் தன்னையே மாயமோ வென்றெண்ணிற்று. பருந்து கூறியமொழி யொவ்வொன்றும் அதன் உளத்துத் தோன்றிற்று. இன்னணம் பருந்தின் முதலுரை யுண்மையாதல் காண்டலின், மற்றதும் அவ்வாறாதல் கூடுமெனும் துணிபும் உடனெய்திய எய்தலும், அது பட்டபாடு யாராற் கூறப்படுந் தகைத்தாம்!!

பின்னர் நாட்கள் சில சென்றன; பரந்தவிவ் வுலகிற் றோன்றும் பொருளினூடும் காட்சியறிவைப் பருந்து உடனுடன் புழுவிற் குரைத்தலும், உண்மையாய்தலும் இரண்டிற்கும் மரபாயிற்று. புழுவும் தன்னினங்கட்குத் தனக்கு நேரவிருக்கும் நிகழ்ச்சியையும், அதுவே யவற்றிற்குமா மென்பதையும் அறிவுறுத்தும்; உறுத்தினும், அதனையவை எலாதே யொழிந்தன. புழுமட்டிற் றன்றன் மெய்ந்நட்புக்குரிய பருந்துழைக் கண்ட

மெய்ப்பொருள் நிகழ்தற் கேற்ற காலம் எய்திற்றாக, பகல்செய் மண்டிலம் பனிக்கடல் முகட்டெழ, பறவை யின்னிசைபாட, சுரும்புந்தேனும் சூழ்ந்தார்ப்ப, கடிக்கமலம் வாய்விள்ள, பூச்சியினம் பொலிவெய்த, புழுவினங்கள் குழீஇ மறுக, இப்புழுவும் பூச்சியாயிற்று; யாக்கையும் காலொடுமிதக்கும் கவினெய்திற்று; இயங்கியவுடல் பறத்தல் செய்தது; இருமருங்கும் சிறகுகளெழுந்தன; அவற்றின்கட் பல்வகைய வொளிதெறிக்கும் வண்ணங்கள் தோன்றி யழகு செய்தன.

இவ்வண்ணம், அழகுதிகழ புத்துடல் பெற்றுப் பூந்தேனுண்டு பொலிவுதரு சுற்றமொடு புரிந்து வாழ்ந்த சேடப் பூச்சி, பின்னர்ச் சின்னாட்களுட் டன் னின்னுயிர் நீங்குங் காலமெய்தலும், எண்ணரு மின்பங்கனிய, "இம் மறுவின்று விளங்கும் மாயிருஞாலத்து, அறிவு வளர்க்குமாற்று ணமைந்த பொருள்கள் மிகப்பலவுள; அவற்றையாய்ந்து கோடலறிவின் கடன்; அதற்கு இன்றியமையாத வுறுப்பாவது உறுநோக்கே (Faith). அதனை அதனருளாலே யடையப்பெற்றேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!! இனி எவை வரினும் வருக. யான் விண்ணகம் படர்குவல்" என்றெழுந்து சென்று விண்ணில் மறைந்தது.

(இது சங்கக் கல்லூரியினின்று வெளிவரும் பஞ்சாபகேசன் என்னும் கையெழுத்துத் திங்கள் வெளியீட்டின்கண் முன்னர் வெளிவந்ததோர் மொழி பெயர்ப்பு.)

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் : ௩.	பிரபவ – புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை.	மலர் : ௬, ௭, ௮.

சுந்தரமூர்த்திகளது காலம்.

திருவாளர், T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

சைவ சமயகுரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திகள் அறுபான்மும்மை நாயன்மார்களுள் இறுதியில் வாழ்ந்தவரென்பது அவர் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகையால் நன்கு விளங்குகின்றது. அப்பெரியார் இந்நிலவுலகில் வாழ்ந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதி என்று தஞ்சை ராவ்பகதூர் K. S. சீநிவாசபிள்ளை அவர்கள் தமது 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் கூறியுள்ளார். திருவாங்கூரில் கல்வெட்டிலாகாவிற்குத் தலைவராயிருந்து காலஞ்சென்ற T. A. கோபிநாதராயர் அவர்கள் அவ்வடிகளது காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகுமென்று 'செந்தமிழ்' மூன்றாந்தொகுதியில் வரைந்துள்ளார். ஆகவே, இவ்விரு ஆராய்ச்சியாளரும் சற்றேறக்குறைய ஒத்த கொள்கையினர் ஆவர் என்பது வெளிப்படை.

இனி, அடிகள் காலத்தை ஆராய்ந்து காண்டற்கு இன்னோர் எடுத்துக்கொண்ட கருவிகளை நிலை ஆராய்ந்து அவற்றின் வன்மை மென்மைகளைக் காண்பாம். சேரமான் பெருமாள் நாயனார் என்று வழங்கும் கழறிற்றறிவார் காலத்தில் பாண்டிநாட்டில் அரசுபுரிந்தவன் வரகுணபாண்டியன் என்பதும், கழறிற்றறிவார்க்குப் பெருநட்பினராகிய சுந்தரமூர்த்திகளும் அப்பாண்டியன் காலத்தவரேயாதல் வேண்டும் என்பதும் அவர்கள் கூறும் கருவிகளுள் முதன்மையானவைகளாம். கழறிற்றறிவார் சுந்தரமூர்த்திகளுக்கு நட்பினராகவிருந்து அவருடன் திருக்கைலை சென்றவர் என்பது பெரியபுராணத்தால் அறியக்கிடக்கும் உண்மையாதலின், அதிற்சிறிதும் ஐயமில்லை. ஆனால், கழறிற்றறிவார் காலத்தில் மதுரைமாநகரில் வாழ்ந்த பாண்டிமன்னன் வரகுணன் ஆவன் என்று அன்னோர் கூறுவது தக்க வலியுடைத்தன்று. பெரியபுராணத்தின் ஆசிரியராகிய சேக்கிழார், சுந்தரமூர்த்திகளும் கழறிற்றறிவாரும் பாண்டிநாட்டில் உள்ள திருக்கோயில்களை வணங்குதற்கு மதுரைக்குச் சென்றிருந்தபோது பாண்டிய அரசனும், அவனது மகளை மணந்து அங்குத்தங்கியிருந்த சோழமன்னன் ஒருவனும் அவ்விரு பெரியாரையும் வரவேற்றுத் திருக்கோயிலுக்கு அழைத்துப்போயினர் என்று கூறியுள்ளார். ஆனால், அந்நாளில் ஆட்சிபுரிந்துவந்த பாண்டிமன்னன் இன்னவன் என்றாதல், அங்கிருந்த சோழன் இன்னவன் என்றாதல் அவ்வடிகள் வெளிப்படையாகக் கூறிச்சென்றதில்லை*. எனவே, புலவர் பெருமானாகிய சேக்கிழாருக்கு அன்னோர் யாவர் என்றுரைத்தற்குரிய கருவிகள் அப்போழ்தே கிடைக்கவில்லை என்பது நன்கு புலப்படுகின்றது.

---

* தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனார்
அன்னவர்க ளுடன்கூட வணையவவ ருங்கூடி
மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தடைந்தார்.

பெரியபுராணம், கழறிற்றறிவார், 92.

இனி, அந்நாளில் பாண்டியநாட்டில் அரசுசெலுத்தியவன் வரகுணபாண்டியன் என்று தெரிவித்தவர், திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியராகிய பரஞ்சோதிமுனிவர் ஆவர். அவர் கூறுவது—

மன்றலந் தெரியன் மார்பன் வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவலானிற் பொலியுநா ளேம நாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன் வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதினோடும் விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான்.

என்பது. திருவிளை, விறகுவிற்ற, 2.

பரஞ்சோதிமுனிவர் சேக்கிழாரடிகட்குப் பலநூற்றாண்டு கட்குப் பின்னவர் இருந்தவர். கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த நம் சேக்கிழார் பெருமான் அறிந்துகொள்ள முடியாமலிருந்த செய்திகளை மிக அண்மைக் காலத்தில் நிலவிய பரஞ்சோதிமுனிவர் எங்ஙனம் கூறவல்லராயினரோ அறியேம். இங்ஙனம் இம்முனிவர் கூறும் செய்திகள் பலவும், வரலாற்றுண்மைக்கு முரண்பட்டிருத்தலை ஆராய்ச்சியாளர் பலரும் நன்குணர்வர்.

இனி, திருஞானசம்பந்தரால் வெப்புநோயினின்று காப்பாற்றப்பட்டவன், கூன்பாண்டியன் என வழங்கும் சுந்தரபாண்டியன் ஆவன் என்று பரஞ்சோதிமுனிவர் கூறியுள்ளார். இம்முனிவரே, அரிமர்த்தனபாண்டியனிடத்தில் திருவாதவூரர் அமைச்சராயிருந்தனர் என்றுணர்த்தியுள்ளார். சுந்தர பாண்டியற்குப் பத்துத் தலைமுறைகட்கு முந்தியவன் அரிமர்த்தனபாண்டியன் என்பது அத்திருவிளையாடற் புராணத்தால் அறியக்கிடக்கின்றது. இவ்வரிமர்த்தனபாண்டியற்கு நாற்பத்துமூன்று தலைமுறைகட்கு முன்னர் வாழ்ந்தவன் வரகுண பாண்டியன் என்றும், கழறிற்றறிவாரும் அவரது நண்பராய சுந்தரமூர்த்திகளும் இவ்வரகுணன் காலத்தினராவர் என்றும் அப்புராணம் கூறுகின்றது. ஆகவே, திருஞானசம்பந்தர் காலத்தினனாகிய சுந்தரபாண்டியற்கு ஐம்பத்து மூன்று தலைமுறைகட்கு முன்னர் வாழ்ந்தவன் சுந்தரமூர்த்திகள் காலத்தினனாகச் சொல்லப்படும் வரகுண பாண்டியன் என்பது, திருவிளையாடற் புராணமுடையாரது முடிபாகும். தலைமுறை

ஒன்றிற்கு முப்பது ஆண்டுகளாகக்கொண்டு காலத்தைக்கணக்கிடு வதுதான் பொருத்தமுடைத்து என்று வரலாற்றுநூல் வல்லார் கூறுகின்றனர். எனவே, சுந்தரமூர்த்திகள் திருஞானசம்பந்தருக்கு 1590 ஆண்டுகட்கு முன்னர் இந்நிலவுலகில் வாழ்ந்தவர் என்பது திருவிளையாடற் புராணத்தால் அறியக்கிடக்கும் செய்தியாகும்

திருஞான சம்பந்தர் திருக்கோலக்காவிற் பொற்றாளம் பெற்றதையும்*, திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றதையும்† சுந்தரமூர்த்திகள் தாம் பாடியுள்ள தேவாரப் பதிகங்களில் குறித் திருத்தலோடு திருத்தொண்டத் தொகையில் அவ்வடிகட்கு வணக் கமுங் கூறியுள்ளனர். எனவே சுந்தரமூர்த்திகள், திருஞான சம்பந்தருக்குப் பல ஆண்டுகட்குப் பின்னர் வாழ்ந்தவராதல் வேண்டுமென்பது, அகச்சான்று கொண்டு நன்கு துணியப்படும். இத்துணைச் சிறந்த ஆதாரங்கட்கு முரணாகத் திருவிளையாடற் புராணமுடையார் கூறுவது சிறிதும் உண்மை யுடைத்தன்று. ஆகவே, சுந்தரமூர்த்திகள் வரகுணபாண்டியன் காலத்தினர் அல்லர் என்பது வெளியாதல் காண்க. அன்றியும் திருவிளையாடற் புரா ணம் செந்தமிழ் வளஞ்செறிந்த சிறந்த நூலாதலின் தமிழ்மொழிப் பயிற்சிக்குப் பயன்படுமேயன்றி, வரலாற்று ஆராய்ச்சிக்குச் சிறிதும் பயன்படாதென்றுணர்க. இவ்வுண்மையைத் 'தமிழ் வரலாற்'றின் ஆசிரியரும் நன்குணர்ந்துரைத்திருப்பது பெரிதும் பாராட்டற்பாலதாகும்.

---

* நாளுமின்னிசை யாற்றமிழ்பரப்பு ஞானசம்பந்தனுக்குலகவர்முன்
தாளமீந்தவன் பாடலுக்கிரங்குந் தன்மையாளனை யென்மனக்கருத்தை
யாளும் பூதங்கள் பாடநின்றாடும் அங்கணன்றனை யெண்கணமிறைஞ்சும்
கோளிலிப்பெருங் கோயிலுள்ளானைக் கோலக்காவினிற் கண்டு
கொண்டேனே.
திருக்கோலக்கா, 8.

† பரந்தபாரிட மூரிடைப்பலிபற்றிப் பார்த்துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்தநான்மறையோர்க் கிடமாய திருமிழலை
இருந்துநீர் தமிழோடிசை கேட்குமிச்சையாற் காசுநித்தனல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீ ரடியேற்கு மருளுதிரே.
திருவீழிமிழலை, 8.

இனி, சுந்தரமூர்த்திகள் பாடியுள்ள—

கருமையார் தருமனார் தமர்நம்மை கட்டியசட் டறுப்பிப் பானை
யருமையாந் தன்னுலகந் தருவானை மண்ணுலகங் காவல் பூண்ட
உரிமையார் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே.

என்னும் திருப்பாட்டால் அடிகள் காலத்தில் பல்லவரது ஆட்சி தளர்ச்சியுறத் தொடங்கிற்றென்றும், அதனால் அன்னோர்க்குக் குறுநில மன்னர்கள் திறைசெலுத்த மறுத்தனர் என்றும், பல்லவர்களுள் நந்திவர்மன் (780—830) ஆட்சிக்காலத்தில்தான் இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் ஆகவே அடிகள் நந்திவர்மனது ஆட்சியின் இறுதிக்காலமாகிய கி. பி. 825-ல் வாழ்ந்தவராதல் வேண்டுமென்றும் அன்னோர் கூறுகின்றனர்.

அடிகள் தம்காலத்துப்பல்லவ மன்னன் போர்வலிமை யற்றவன் என்றுதல் அவனுக்குக் குறுநில மன்னர்கள் திறை கொடுக்க மறுத்தனர் என்றுதல் அப்பாடலில் கூறினாரில்லை; ஆனால் தம் காலத்துப் பல்லவ அரசனைச் சார்ந்தோர்க்குத் திருச்சிற்றம்பலத்தெம்பெருமான் அருள்புரிபவராகவும் அவனோடு முரணிப்பகைஞராயினார்க்கு அருள்புரியாது தண்டனைவிதிப்பவராகவும் இருந்துள்ளமையை நன்கு விளக்கி அம்மன்னனது ஒப்புயர் வற்ற சிவபத்தியின் மாட்சியைத் தெரிவித்துள்ளார். ஆகவே அடிகளது திருப்பாடலுக்கு அன்னோர் கொண்டபொருள் சிறிதும் பொருந்தாமையின் அப்பெரியார் நந்திவர்மப் பல்லவன் காலத்தினர் அல்லர் என்பது தெளிவாதல் காண்க.

இனி, சுந்தரமூர்த்திகள் வாழ்ந்தகாலம் யாதென ஆராய்வாம். அடிகள் தாம் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையில், 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்குமடியேன்' என்று கூறியிருக்கின்றனர்; இவ்வடியில் வந்துள்ள 'காக்கின்ற' என்னும் நிகழ்காலப் பெயரெச்சம், காடவர்கோனாகிய கழற்சிங்கன் அடிகள் காலத்து மன்னன் என்பதை இனிது உணர்த்துகின்றது.

காடவர் என்பது பல்லவர்களுக்குரிய பெயர்களுள் ஒன்றாகும். ஆகவே, இக்கழற்சிங்கன் பல்லவ அரசனாயிருத்தல் வேண்டும். அன்றியும் இவ்வேந்தன் அறுபத்துமூன்று அடியார்களுள் வைத்துச் சுந்தரமூர்த்திகளால் போற்றப்பட்டிருத்தலின் சிறந்த சிவபக்தனாகவும் இருத்தல் வேண்டும். இனி, நம் தமிழகத்தில் அரசாண்ட பல்லவ மன்னர்களுள் கழற்சிங்கன் என்ற பெயருடையவன் ஒருவனுமில்லை. ஆனால் நரசிங்கவர்மன் இராசசிங்கவர்மன் என்ற பல்லவ வேந்தர்கள் இருந்துள்ளனர். அவர்களுள் முதல் நரசிங்கவர்மன் திருஞானசம்பந்தர் காலத்தினனாதலின் சுந்தரமூர்த்திகள் அவ்வரசன் காலத்தினரல்லர் என்பது திண்ணம். ஆகவே, அடிகள் இராசசிங்கன் காலத்தினராதல் வேண்டும். இவ்வேந்தனை இரண்டாம் நரசிங்கவர்மன் என்றும் முதல் இராசசிங்கவர்மன் என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இவனே காஞ்சியிலுள்ள கைலாய நாதர் கோயிலை எடுப்பித்தவன். இஃது அக்காலத்தில் இராசசிம்ம பல்லவேச்சரம் என்னும் பெயருடையதாயிருந்தது. இக்கோயிலில் இவனது கல்வெட்டொன்று வடமொழியில் வரையப்பட்டுளது. அஃது இவ்வேந்தனைச் 'சிவ சூடாமணி' என்று புகழ்கின்றது. [South Indian Inscriptions Volume I No. 24]. இங்ஙனமே மகாபலிபுரம் என வழங்கும் மாமல்லபுரத்தில் இவனெடுப்பித்த இராசசிம்ம பல்லவேச்சரம் என்ற திருக்கோயிலிலுள்ள கல்வெட்டும் பனமலைக் கோயிலிலுள்ள கல்வெட்டும் இவனைச் 'சிவசூடாமணி' என்று புகழ்தல் கண்டு அறியத்தக்கது. காசாக்குடிச் செப்பேடுகள் பரமேச்சுரனை இராசசிங்கப்பல்லவனாக அவதரித்துள்ளானென்று சிறப்பித்துக் கூறுகின்றன. [S. I. I. Volume II No. 73]. உதயேந்திரஞ் செப்பேடுகள் இவனைப் 'பரமமாகேச்சுர' னென்று புகழ்ந்துரைக்கின்றன. [S. I. I. Volume II No. 74]. வேலூர்ப் பாளையம் செப்பேடுகள் இவன் சிவபெருமானுக்குக் காஞ்சி மாநகரில் கைலாயத்தை யொத்த திருக்கோயிலொன்றை எடுப்பித்த பெருமையுடையவன் என்றுணர்த்துகின்றன. [S. I. I. Volume II No. 98]. இக்கைலாயநாதர் திருக்கோயிலில் நரசிங்கவர்மனுக்கு அந்நாளில் வழங்கிய இருநூற்றைம்பது பட்டங்கள்

பொறிக்கப்பட்டிருத்தலை இன்றும் காணலாம். அவற்றுள், 'சங்கரபக்தன்', 'ஈசுவரபக்தன்', ஆகிய பட்டங்கள் இவ்வேந்தன் சிறந்த சிவபக்தியுடையவனாய்த் திகழ்ந்தனன் என்பதை நன்கு விளக்குகின்றன. [S. I. I. Volume I No. 25 Verse 55].

பல்லவர் சரித்திரம் எழுதிய அறிஞராகிய துப்ரோ துரை மகனார் இவ்வரசனைப்பற்றிக் கூறுவது—"நெடுங்காலம் குடிகளை எவ்வகை இன்னல்களுமின்றிக் காத்துவந்த பல்லவ அரசன் இவன் ஒருவனேயாவன். இவன் தன் ஆட்சிக்காலத்தில் காஞ்சியில் கைலாயநாதர் கோயிலையும் மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலையும் விழுப்புரந் தாலூகாவிலுள்ள பனைமலையில் ஒரு கோயிலையும் எடுப்பித்துச் சிவனடியார்களைப் போற்றி அன்னோர்க்குப் பலநலங்கள் புரிந்தனனேயன்றி வேறு ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை" என்பது. இதனாலும் இவன் சிறந்த சிவபக்தன் என்பது இனிது புலப்படுதல் காண்க.

இவ்வேந்தன் தன்மனைவியோடு திருவாரூருக்குச் சென்று புற்றிடங்கொண்ட முக்கட்பெருமானை வணங்கித் திருக்கோயிலில் வலம் வருங்கால் இவனது மனையாள் பூக்கள் தொடுக்கப்படும் இடத்திற்குச் சென்று ஒரு மலரை எடுத்து மோந்து பார்க்க, அங்கிருந்த சிவனடியாராகிய செருத்துணையா ரென்பார் அதனைப் பொறாது அவளது மூக்கை வாள்கொண்டு அறுத்தலும், பின்னர் அந்து வந்த அரசன் தன் மனைவி செய்த குற்றம் மிகப்பெரிது என்று அவ்வடியாரிடம் கூறியதோடு அவள் அம்மலரை எடுத்தமைக்குக் காரணமாயிருந்த கையினையும் வெட்டி வீழ்த்தினன் என்று பெரிய புராணம் கூறுகின்றது. இவ்வரலாற்றால் இவனது சிவபக்தி எத்தகைய சிறப்புடையதென்பது ஒருவாறு நன்கு புலப்படும். இவன் காஞ்சியில் கைலாயநாதர் கோயில் எடுப்பித்த நாளில்தான் திருநின்றவூரில் வாழ்ந்த பூசலார் நாயனார் சிவபெருமானுக்கு மனக்கோயில் கட்டினாரென்பது ஆராய்ச்சியாளரது கொள்கையாகும். சிவபெருமான், தாம் பூசலாரது மனக்கோயிலுக்கு முதலில் எழுந்தருள வேண்டியிருந்தமையின், அரசன்

எடுப்பித்த கற்கோயிலுக்குக் கடவுண்மங்கலஞ் செய்யக்குறிப்பிட்டிருந்த நாளைமாற்றி அதனை வேறொருநாளில் செய்யுமாறு அவன் கனவில் கூறியருளினானென்பதும் பிறவும் பெரியபுராணத்தில் காணப்படுஞ் செய்திகளாம். ஆகவே, இவ்வேந்தன் எடுப்பும் இணையற்ற சீரிய சிவபத்தனாய் அந்நாளில் நிலவினானென்பது நிச்சயம். இத்தகைய சிறந்த சிவபத்தியுடைய பல்லவ வேந்தன் வேறு ஒருவனும் இலனாதலின், சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையிற் கூறியுள்ள 'காடவர்கோன் கழற்சிங்கன்' இவனேயாதல் வேண்டும். இனி, அடிகள் இவனை இராசசிங்கன் என்றாதல் நரசிங்கன் என்றாதல் வழங்காமல் கழற்சிங்கன் என வழங்கியுள்ளாரேயெனின், சிங்கன் என்பது அவ்விரு பெயர்கட்கும் பொதுவாயிருத்தலின் அரசர்க்குரிய பெருமையையும் வீரத்தையும் உணர்த்தும் கழல் என்னும் மொழியை அதற்கு முன் பெய்து கழற்சிங்கன் என்று சிறப்பித்துக் கூறிப் பாராட்டியுள்ளாரென்று உணர்க.

இனி, அடிகள் காலத்துப் பேரரசன் நரசிங்கவர்மனே என்பது வேறொரு சிறந்த சான்று கொண்டும் உறுதியெய்துகின்றது. அடிகளை இளமையில் வளர்த்தவன் திருநாவலூரில் வாழ்ந்த நரசிங்க முனையரையன் என்ற சிற்றரசன் என்பது பெரிய புராணத்தால் அறியப்படுகின்றது. முற்காலத்தில் பேரரசர்கள் தமக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் பட்டங்கள் வழங்குங்கால் தம் பெயர்களோடு இணைக்கப்பெற்ற பட்டங்களையே கொடுப்பது பெரு வழக்காயுள்ளது. இவ்வுண்மை கல்வெட்டுக்களை ஆராய்ந்து பார்த்தால் இனிது புலப்படும். உதாரணமாக, இராசராச மூவேந்தவேளான், உத்தமசோழப் பல்லவரையன், முடிகொண்ட சோழமூவேந்தவேளான், சயங்கொண்ட சோழ விழுப்பரையன் என்னும் பட்டங்கள் நெடுமுடிவேந்தர்களுடைய பெயர்களோடு இணைக்கப்பட்டிருத்தல் காண்க. முனையரையன் என்ற பட்டத்திற்கு முன் பேரரசனது நரசிங்கன் என்னும் பெயர் இணைக்கப்பட்டு நரசிங்க முனையரையன் என்று சுந்தரமூர்த்திகளது வளர்ப்புத் தந்தை

யாகிய குறுநில மன்னன், வழங்கப்பட்டுள்ளான். ஆகவே, சுந்தரமூர்த்திகளை வளர்த்த நரசிங்க முனையரையன் என்பான் பல்லவ அரசனாகிய இரண்டாம் நரசிங்கவர்மனுக்குத் திறை செலுத்திய ஒரு சிற்றரசனாதலின், இவ்வடிகள் இப்பல்லவ அரசன் காலத்தினரென்பது உறுதியாதல் உணர்க.

இனி, இவ்வேந்தன் பேரரசனென்பது, 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்—கழற்சிங்கனடியார்க்கு மடியேன்' என்னும் அடிகளது திருவாக்கினால் நன்கு துணியப்படும். இதற்கேற்பச் சேக்கிழாரும் இவனைக் 'கோக்கழற்சிங்கர்' என்று கூறுகின்றார். 'கோ' என்னும் ஒரெழுத்தொரு மொழி பேரரசனையே உணர்த்துமென்பது 'கோக்கண்டு மன்னர் குறைகடற் புக்கிலர்' என்ற அடியாலும், 'கோஇராசகேசரிவர்மன்', 'கோப்பரகேசரிவர்மன்' 'கோச்சடையவர்மன்', 'கோமாறவர்மன்' என்னும் கல்வெட்டுத் தொடர்மொழிகளாலும் பெறப்படுகின்றது. ஆகவே, நம் இரண்டாம் நரசிங்கவர்மன் பேரரசனாதல் காண்க. உமாபதி சிவாசாரியார் இதனைநோக்காது இவ்வேந்தனைக்குறுநில மன்னர்களுட் சேர்த்திருப்பது பொருந்தாதென்க.

இனி, இரண்டாம் நரசிங்கவர்மனது ஆட்சிக்காலம் கி. பி. 690-க்கும் 710-க்கும் இடைப்பட்டதாதலின் சுந்தரமூர்த்திகளும் அக்காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். எனவே, நம் சுந்தரமூர்த்திகள் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும், எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம் தமிழகத்தில் வாழ்ந்தருளிய பெரியாரென்பது வெளியாதல் காண்க. இவ்வடிகள் காலத்தினர்களான சோமாசிமாறர், விறன்மிண்டர், மானக்கஞ்சாறர், எயர்கோன் கலிக்காமர், பெருமிழலைக்குறும்பர், கோட்புலியார், பூசலார், செருத்துணையார் என்னுஞ் சிவனடியார்கள் வாழ்ந்த காலமும் இதுவேயாகும்.

உ

திருச்சிற்றம்பலம்.

புத்த நிர்வாண காலம்.*

திருவாளர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், போர்டு உயர்தரப் பள்ளிக்கூடம், கோவிற்பட்டி.

வரலாற்று ஆராய்ச்சிக்காரர்களால் புத்த நிர்வாண காலத்தைப்பற்றிப் பல ஆண்டுகள் குறிக்கப்பட்டுள்ளன. அவைகளில் சிறந்த ஆராய்ச்சியாளர் குறித்தன கி. மு. 483, 486 முதலியன. மேலும் இவ்வாராய்ச்சிக்காரர்களெல்லாம் தாங்கள் குறிப்பிடும் காலம் முடிவானதுதான் என்கிறார்களில்லை. ஏனென்றால் புத்தர் நிர்வாணமடைந்த காலத்தை ஆய்ந்து முடிவு கட்டுவதற்குத் தகுந்த கருவிகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மேல் நாட்டு ஆராய்ச்சியாளரில் ஒருவராகிய வில்லியம் கெய்கர் (Wileim Geijer) என்பார் இத்துறையில் முயன்று புத்த நிர்வாண காலம் கி. மு. 483 என்று முடிக்கின்றனர். அவர் கூறுவதாவது, "இந்தக் கணக்கும் உத்தேசமானது தான் என்று நாம் நன் தெரிந்து இயம்புவோம். நமக்குச் சுமாராகவே சொல்ல இயலுமே ஒழிய மிகவும் உறுதியான முடிவெனச் சொல்ல இயலாது". (1912-ல் பதிப்பித்த மகாவம்சத்திற்குக் கெய்கர் என்பவர் எழுதிய முகவுரையின் 24-ம் பக்கம் பார்க்க.) கௌதம புத்தருடைய வரலாற்றைக் கூறும் பழைய சரித்திரங்களில் சில கணிதக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவை புத்த நிர்வாண

---

* இது 1924-ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகமன்றத்தில் அலகபாத்துப் பல்கலைக் கழக உதவித்தலைவர் (வைஸ் சான்சலர்) ஆகிய மகாமகோபாத்யாய டாக்டர் கங்காநாத்ஜா அவர்கள் தலைமையில் நடந்த மூன்றாவது அகில இந்திய கீழ்த்திசை மகாநாட்டில் 24—12—24ல் ஆங்கிலத்திற் படித்த கட்டுரையின் மொழி பெயர்ப்பு.

காலத்தைத் ஆராய்ந்து முடிவு கட்டுவதற்குத் தகுந்த கருவிகளாக இருக்கின்றன. அக்கணிதக் குறிப்புகள் பின் வருவன :—ஈசான சகம் 68 வைகாசித் திங்கள் வெள்ளிவாரத்து வந்த நிறைமதியில் கௌதமபுத்தர் பிறந்தார். அவருடைய 29-வது வயதில் அதாவது ஈசான சகம் 96 வைகாசி வெள்ளியன்று நிறைமதியில் அவர் வீடு துறந்து காடு சென்றார். ஈசான சகம் 103 வைகாசி புதனன்று நிறைமதியில் அவர் ஞானமடைந்தார். ஈசான சகம் 107 ஆடித்திங்கள் சனிக்கிழமை நிறைமதி அதிகாலையில் அவர் தந்தை இறந்தார். ஈசான சகம் 148 வைகாசி செவ்வாய்க்கிழமை நிறைமதியில் அவர் நிர்வாணமடைந்தார். இக்குறிப்புக்களில் பல, மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதய்யர் அவர்களால் புத்த சரித்திரம் 1908-ம் ஆண்டிலதாம் 3-ம் பதிப்பில் 4, 12, 21, 50-ம் பக்கங்களிலுள்ள அடிக்குறிப்புக்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஈசான சகம் என்பது அக்காலத்து வழங்கி வந்தது போலும். இதற்கு நேரான கிருஸ்து ஆண்டு இன்னதென்பது எளிதில் ஆராய்ந்தறியப்படும்.

எந்தஆண்டைப் புத்த நிர்வாணகாலமாகக் கொண்டால் மேலேகண்ட காலக்குறிப்புக்களெல்லாம் பொருந்துமோ அந்த ஆண்டே நேரானதாகக் கொள்ளப்படும். கி. மு. 483ல் வைகாசி 27-ம் நாள் செவ்வாயன்று நிறைமதி 40-நாழிகைக்கு மேல் வந்தது. கி. மு. 486 வைகாசி 31-ம் நாள் செவ்வாயன்று நிறைமதி 45-நாழிகைக்கு மேல் வந்தது. இவைகள் ஒருவாறு புத்த நிர்வாணத்திற்குப் பொருந்தினாலும் மற்றைய குறிப்புக்களோடு பொருந்தவில்லை. ஏனைய ஆண்டுகளோ ஒன்றாக்கும் பொருந்தவில்லை. கி. மு. 600 முதல் கி. மு. 100 வரை, கருத்துடன் கணித்துப்பார்க்குமிடத்து கி. மு. 493 மட்டுமே எல்லாக்கணிதக் குறிப்புக்களுக்கும் பொருந்தியதாகக் காணப்படுகிறது.

கி. மு. 573 ஈசானசகம் 68 வைகாசித்திங்கள் 3-ம் நாள் வெள்ளியன்று நிறைமதியாம். அன்றே பெரியார் கௌதமபுத்தர் பிறந்தார். கி. மு. 545 ஈசானசகம் 96 வைகாசி 24-ம் நாள் வெள்ளியன்று நிறைமதியாம். அன்றிரவே அவர் அரண்மனையை

விட்டுக் காடு சென்றவராவர். கி. மு. 538 ஈசானசகம் 103 வைகாசி 6-ம் நாள் புதனன்று நிறைமதியாம். அன்றிரவே புத்தர் ஞானமடைந்தார். கி. மு. 534 ஈசான சகம் 107 ஆடித் திங்கள் 18-ம் நாள் சனியன்று நிறைமதியாம். அன்று வைகறையில் அவர் தந்தையார் இறந்தனர். கி. மு. 493 கலி 2609 ஈசான சகம் 148 வைகாசி 19-ம் நாள் செவ்வாயன்று நிறைமதி 2 நாழிகை 11 விநாடிகைக்குத் தொடங்கிற்று. அன்றே புத்தர் நிர்வாண மடைந்தார். இவ்வுண்மைகளால் ஈசான சகம் கி. மு. 641-ல் தொடங்கி நிகழ்ந்ததென நிலை நாட்டலாம்.

இனி, மேலே குறித்த முடிபிற்கு வரலாற்று நூல் எவ்வாறு இணங்கி நிற்கின்றதெனலைக் காட்டுவாம். தீபவம்சம், மகாவம்சம், புராணங்கள் ஆகிய இலங்கைச் சரித்திரங்கள் நமக்குத் தகுந்த கருவிகளாக இருக்கின்றன. ஆசிரியர் வின்ஸெண்ட் ஸ்மித் (Vincent Smith) போன்ற ஆராய்ச்சிக்காரர்களால் புராணங்கள் சிறந்த ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. (வின்சன்ட் ஸ்மித் எழுதிய அக்ஸ்போர்டு இந்து தேச சரித்திரம் இரண்டாம் பதிப்பு 1923, பக்கம் 57 பார்க்க.) இவைகளிலுள்ள சில குறிப்புகளை எடுத்துக்கொண்டு நாம் மேலே கணிதக் குறிப்புக்கொண்டு முடிந்துள்ள ஆண்டோடு இவை இயைகின்றனவா என ஆராய்வோம். அசோகர் அபிடேகம் புத்த நிர்வாணத்தின் பின் 218 ஆண்டுகள் கழிந்தபின்றாம். (ஓல்டன்பர்க்துரை 1889-ல் பதித்த தீபவம்சம், 5-ம் அத்தியாயம் 45-ம் பிரிவு; பக்கம் 141; 55-ம் பிரிவு பக்கம் 142, அத்தியாயம் 6, 1-ம் பிரிவு, பக்கம் 146: இவைகளைப் பார்க்க.) அதாவது கி. மு. 275 (493–218) ஆகும். மகாவம்சமும் இவ்வாறே கூறுகின்றது. (கெய்கர் மகாவம்சம் அத்தியாயம் 5, பிரிவு 21, பக்கம் 27.) அசோகர் கி. மு. 278-லேயே பட்டத்திற்கு வந்து விட்டார். இதிலிருந்து நான்காவது ஆண்டிலேயே கி. மு. 275 அவருடைய அபிடேகம் நிகழ்ந்தது. (தீபவம்சம் அத்தியாயம் 6, பிரிவுகள் 21, 22, பக்கம் 148, மகாவம்சம் அத்தியாயம் 5, பிரிவு 22, பக்கம் 28.) அவருக்கு முன்னால் பிந்துசாரன் கி. மு. 302 முதல் 278 வரை இருபத்துநான்கு ஆண்டுகள் ஆண்டனன். மகாவம்சத்திற்கு

முன்னாலெழுதப்பட்ட தீபவம்சத்தில் பிந்துசாரனாண்ட காலம் இவ்வளவெனக் குறிக்கப்படாததனால் நாம் புராணங்களின் குறிப்பைத் இங்குத் துணையாகக் கொண்டுள்ளோம். அவனுடைய ஆட்சிக் காலத்தை புராணங்கள் 25 ஆண்டுகள் என்றும், பர்மியர் வரலாறுகள் இருபத்தேழு ஆண்டுகள் என்றும், மகாவம்சம் 28 ஆண்டுகள் என்றும் குறிக்கின்றன.

பிந்துசாரனுக்கு முன்னால் சந்திரகுப்தன் கி. மு. 325 முதல் 302 வரை இருபத்து நான்கு ஆண்டுகள் ஆண்டனன். (தீபவம்சம் 5-ம் அத்தியாயம், 73-ம் பிரிவு, பக்கம் 144; 100-ம் பிரிவு, பக்கம் 146 மகாவம்சம் 5-ம் அத்தியாயம் 18-ம் பிரிவு, பக்கம் 27.) இதிலிருந்து சந்திரகுப்தன் புத்த நிர்வாணத்தின் பின் 168 ஆண்டுகள் கழிந்தவுடன் [218—50 (325—275)=168] பட்டத்திற்கு வந்தானென்பதை அறியலாம். ஆசிரியர் கெய்கர், மகாவம்சம் முகவுரை 24-ம் பக்கத்தில் சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்தது கி. மு. 321-ல் ஆவது, தவறினால் இதற்கு முன் பின் இரண்டு ஆண்டுகளிலாவது இருக்க வேண்டுமென்று எழுதுகிறார். அவர் 25-ம் பக்கத்தில் பின் வருமாறும் குறிக்கின்றார் :—'நாம் மூலாதாரமாகக் கொண்டு குறிக்கின்ற சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்த ஆண்டாகிய கி. மு. 321 உத்தேசமாகவே சரியானது என்பதை நாம் மறத்தல் கூடாது. ஆதலினாலே சில ஆண்டுகள் முன்னாகவோ பின்னாகவோ இருத்தலும் கூடும்' ஆசிரியர் வின்செண்ட் சிமித்தும் இதே எண்ணத்தை உடையவராக இருக்கின்றார். (J. R. A. S., 1901, பக்கங்கள் 831—834; Early History of India, pp. 38—39). ஆக்ஸ்போர்டு இந்து தேச சரித்திரம் 1923 இரண்டாம் பதிப்பு 73-ம் பக்கத்தில் இவர் கூறும் பின்வரும் சொற்றொடர்களும் நாம் ஈண்டு நன்கு நோக்க வேண்டியவை. அவை பின் வருமாறு :—"சந்திரன் அல்லது சந்திரகுப்தன் என்பவன் தன் இளமைப் பருவத்தில் அலெக்ஸாண்டரை கி. மு. 326 அல்லது 325-ல் எதிர்ந்தான் என்பதும், அவனே நந்தர்களுக்கு ஓர் கூற்றுவன் என்பதும் உறுதியான செய்திகளாகக் காணப்படுகின்றன...........அலெக்ஸாண்டர் கி. மு. 323 ஜூன்

மாதம் பாபிலோனில் இறந்தான். அதிலிருந்து இரண்டொரு திங்களில் அச்செய்தி பஞ்சாபுக்கு எட்டியிருக்க வேண்டும். பிறநாட்டார்போல் தொடர்ந்த போர் கி. மு. 323 குளிர்காலமுதல் கி. மு. 322 வரை நடந்ததென்று எளிதில் உணரலாம். சந்திர குப்தன் கி. மு. 322-ல் பட்டத்திற்கு வந்தான் என்பதும் மிகப் பிழையாக இராது. மகதப்போர்க்கிளர்ச்சி தொடக்க முதல் முடிவுவரை மூரண்டு இருக்கலாமெனத் தெரிகிறது. அஃது அலெக்ஸாண்டர் இறப்பிற்கு முன் முடிந்திருந்ததும் கூடுமாதலால் நந்தர்குலம் அழிந்ததும் மௌரியனாகிய சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்ததும் கி. மு. 325-ல் என ஆன்டைப்பின் தள்ளிய கொள்ளவேண்டும். ஆதலின் 325 முதல் 320 வரை இரண்டாண்டு முட்பட ஏதாவது ஓராண்டுதான் உண்மையான காலமென்பது உறுதியாகின்றது." இதனால் சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்தது கி. மு. 325-ல் என நாம் கொண்டது தவறாகாது. இதிலிருந்தும் புத்த நிர்வாணகாலம் கி. மு. 493. தான் (325 + 168) என்பது நிலைபெறுவது காண்க.

இலங்கைச் சரித்திரங்களிலே கயவாகு என்ற அரசனைப் பற்றி அறிகின்றோம். அவன் புத்த நிர்வாணத்திலிருந்து 642-வது ஆண்டு முதல் 664-ம் ஆண்டு வரை ஆண்டவன் என்று தீபவம்சம் கூறுகின்றது. மகாவம்சமோ 653-வது ஆண்டு முதல் 675 வரை அவன் ஆண்டவன் என்கிறது. (ஓல்டன் பர்க் துரை தீபவம்சத்தையும், கெய்கர் துரை மகாவம்ச முகவுரையில் குறித்துள்ள பழைய இலங்கை மன்னரின் அட்டவணையையும் பார்க்க.) இக்கூற்றுக்கள் தம்முள் மாறுபடுகின்றமையால் அவன் காலத்தை வேறு சான்றுகள் கொண்டே முடிக்கவேண்டியதாகின்றது. தமிழ் நூல்களில் மிகப் பழமையானவைகளில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் 30-வது வரந்தருகாதை 157–163 அடிகளில் கயவாகு சேரர் தலைநகராம் வஞ்சியில் கண்ணகி கோயில் கொண்டதைக் கண்டு வணங்கினனென்ற செய்தி காணப்படுகிறது. கயவாகு மன்னரின் பாட்டன் வசபன் கைத்தொழிலைப் பரப்பி வளர்த்துப் பல கால்வாய்களை வெட்டி நிலத்தை வளம்பெறச் செய்தான். (தீபவம்சம் அத்தியாயம் 22, மகா வம்சம் அத்தியாயம் 35.)

அவன் காலத்திய மன்னனாகிய கரிகாற் சோழன் தன் நாட்டையும் இவ்விதமாகவே வளம் பெறச் செய்தான். கால்வாய்களில் வேலை செய்வதற்குக் கூலிக்காரர்கள் வேண்டியிருந்ததால் அவன் இலங்கைமேற் படை யெடுத்து அங்கிருந்து பலரைச் சிறை கொண்டு வந்தானெனத் தெரிகிறது. கயவாகுவினுடைய தந்தை வங்கநாசிகதிசன் என்பான் மூன்றாண்டுகளே ஆண்டான் (தீபவம்சம் அத்தியாயம் 22, பிரிவுகள் 12, 27; மகா வம்சம் அத்தியாயம் 35, பிரிவு 112.) கயவாகு தான் பட்டத்திற்கு வந்தவுடனே கரிகாற் சோழன் கொடுமையை மறவாதிருந்தவன் ஆதலால் சோழ நாட்டின்மேல் படைகொண்டு சென்றான். அக்காலத்தில் தான் அவன் வஞ்சிக்கு வந்து கண்ணகியை வழிபட்டதும். இச் செய்திகள் சென்னை ராஜதானி அரசாட்சி வரலாற்றில் (Manual of the Administration of the Madras Presidency) 117-ம் பக்கக் கீழ்க்குறிப்பால் வலியுறுகின்றன. அதில் நாம் காணும் செய்திகள் பின்வருவன:—("கி. பி. 110-ல் சோழர்கள் மீட்டும் இலங்கை மேல் படை சென்று 22000 சிங்களவர்களைச் சிறை கொண்டு வந்தார்கள். கி. மு. 113-ல் இலங்கை மன்னன் கயவாகு சோழ நாட்டின் மேல் படை யெடுத்துப் போய்ச் சிங்களவர்களை மீட்டதோடு மேலும் பலரைச் சிறைகொண்டு தன் மனத்திலிருந்த சினத்தை ஆற்றிக் கொண்டான்."

ஆடித்திங்கள் வெள்ளிக்கிழமை இருட்பக்கம் 8-ம் திதி இரவு ஐந்து நாழிகைக்கு, பரணிக்குமேல் வந்த கார்த்திகையில் மதுரா மாநகரில் கண்ணகியாள் எரியூட்டினாள் எனச் சிலப்பதிகாரம் கூறும். (ஊர்சூழ்வரி, வழக்குரைகாதை, வஞ்சின மாலை, கட்டுரைக் காதையில் 133—135 அடிகள் பார்க்க.) ஆதிலிருந்தும் நான்காண்டுகள் கழிந்தபின் எட்டாவது மாதத்தில் கண்ணகி பிரதிட்டை நடந்தது.*

கி. மு. 100 முதல் கி. பி. 400 வரைகணித்துப் பார்த்தநின் கி. பி. 144 மட்டுமே, நூலில் மதுரை எரியுண்டதுபற்றிக் கூறும்

---

* இதன் விவரமெல்லாம் இக்கட்டுரையை அடுத்துள்ள 'சிலப்பதிகார காலம்' என்ற ஆராய்ச்சியுரையில் பரக்கக்காண்க.

குறிப்புகளுக்குப் பொருந்தியதாக இருக்கின்றது. கி. பி. 144-ல் ஆடித்திங்கள் 15-ஆம் நாள் வெள்ளிக்கிழமை இருட்பக்கம் 8-ஆம் திதி அன்றிரவு ஐந்து நாழிகைக்குப் பரணிக்கு மேல் கார்த்திகை வருகின்றது. இதனால் 144-இல் மதுரை மாநகர் எரிவாய்ப் பட்டதென்பதும் கி. பி. 149-ல் கண்ணகி பிரதிட்டை நடந்ததென்பதும், அந்த காலைக் கயவாகு வந்திருந்தானென்பதும் நிலைபெறும். இலங்கை மன்னன் இதற்கு ஓராண்டுக்கு முன்னரே அதாவது கி. பி. 148-ல் பட்டத்திற்கு வந்தவனாதல் வேண்டும். தீபவம்சத்தின்படி அவன் புத்த நிர்வாணத்தின் பின் 642-ம் ஆண்டில் பட்டத்திற்கு வந்தவனாவான். இதனாலும் புத்தநிர்வாண காலம் கி. மு. 493 (641—148) தான் என்பது நிலைபெறுவது காண்க.

உ

திருச்சிற்றம்பலம்.

சிலப்பதிகார காலம்.

திருவாளர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், போர்டு உயர்தரப் பள்ளிக்கூடம், கோவிற்பட்டி. *

சேரன் செங்குட்டுவனுக்கு உடன்பிறந்தவராகிய இளங்கோவடிகளாலே இயற்றப்பெற்ற பழந்தமிழிலக்கியம் சிலப்பதிகாரம். ஆசிரியர் இந்நூலை மூன்று காண்டங்களாகப் பிரித்திருக்-

---

* இதுவும் 1924-ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகமன்றத்தில் அலகபாத்துப் பல்கலைக் கழக உதவித்தலைவர் (வைஸ் சான்சலர்) ஆகிய மகாமகோபாத்யாய டாக்டர் கங்காநாத்ஜா அவர்கள் தலைமையில் நடந்த மூன்றாவது அகில இந்திய கீழ்த்திசை மகாநாட்டில் 23—12—24ல் ஆங்கிலத்தில் படித்த கட்டுரையின் மொழி பெயர்ப்பு.

கிறுர். அவை சோழர் தலைநகராம் புகாரை யொட்டி நடந்த செய்திகளைக்கூறும் புகார்க் காண்டமும், பாண்டியர் தலைநகராம் மதுரையை யொட்டி நடந்த செய்திகளைக் கூறும் மதுரைக் காண்டமும், சேரர் தலைநகராம் வஞ்சியை யொட்டி நடந்த செய்திகளைக் கூறும் வஞ்சிக்காண்டமுமாம். இந்நூலிலுள்ள வாலாறு முழுவதும் இயற்கைக்குக் கொஞ்சமும் மாறுமல் உள்ளது உள்ள வாறு அமைந்துள்ளது. ஏனென்றுல் இதன் ஆசிரியர் ஓர் உண்மைத் துறவி. வஞ்சிக்காண்ட நிகழ்ச்சி முழுதும் அவர் நேரில் நின்கதே. ஏனைய காண்டங்களிலுள்ள நிகழ்ச்சிகளையும் நேரில்நின்றோராகிய மாபெரும்புலவர் சாத்தனுர், மாடல மறை யோன் முதலிய பெரியோர்வாய்க் கேட்டறிந்தே அவர் எழுதி யிருக்கிறுர். நூலிற் கூறப்பட்டுள்ள செய்திகள் முழுவதும் மிகவும் தெளிவாகவிருக்கின்றன. ஆதலின் அவைகள் நடந்த காலத்தை நிலை நாட்டுவது எளிதாகின்றது.

காவிரிப்பூம் பட்டினத்திலே சித்திரைத்திங்கள் சித்திரை நாளிலே இந்திர விழாவிற்குக் கொடியேறிற்று. "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" சிலப் V-64] அவ்விழா இருபத் தெட்டு நாள் நடந்தது. (" நாலேழ் நாளினும் " மணிமேகலை—1, 3 சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையும் பார்க்க.) இருபத் தொன்பதாவது நாள் கொடியிறங்க, முப்பதாவது நாள் கடல் விளையாட்டு நிகழ்ந்தது. இவ்வரலாற்றுத் தலைவனும் கோவலன் நாடகக்கணிகை மாதவி யோடும் கடற்கரை சென்றனன். அன்று மாலை அவன் மாதவியோடு மாறுபட்டு அவளை விட்டுப் பிரிந்து அன்றிரவிலே தன் வீடு புகுந்தான். அங்கே அவன் மனைவியாம் இவ்வாலாற்றுத்தலைவி கண்ணகி அவனை மனமகிழ்வோடும் நல்வா வேற்றுள். கோவலன் தன் கூடாவொழுக்கத்தையும், மாதவி பால் தன் பெரும் பொருள் முழுதும் இழந்தமையால் தன்னை வந்தடைந்த வறுமையையும் நினைந்து நினைந்து வருந்தினுன். அவன் அன்றிரவே தன்னுடைய மனைவியையும் உடனழைத்துக் கொண்டு அன்று நிறைமதிப்பக்கம் பதினுன்காம் நாளாதலால் விடியச்சற்றுமுன் திங்கள் மறைந்ததாக உலகைச் சூழ்ந்த இரு ளிலே தம்மை ஒருவருமறியாமல் அந்நகரின் நீங்கினுன். ("வான்

கண்விழியா வைகறையாமத்து, மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக், காரிரு ணின்ற கடைநாட் கங்குல்" சிலப்—X. 1—3.) கோவலன் மதுரையடைந்து இடையர் சேரியிலே மாதரி என்பாள் வீட்டிலே தன் மனைவியை விட்டு அவளுடைய காற்சிலம் பொன்றை விற்பதற்காகக் காலையில் நகரினுட் சென்றான். அந் நாட்டிறைவன் பாண்டியன் நெடுஞ்செழியன். அவனுடைய மனை யாள் சிலம்பொன்றை ஓர் பொற்கொல்லன் திருடிக்கொண்டு அக் குற்றம் வெளிப்படாமுன்னம் என் செய்வதென வருந்தியிருந்த வன் கோவலனைக்கண்டு ஓர் தந்திரமுன்னி மகிழ்ந்து அரசனை யடைந்து அக்கோவலனே சிலம்பு திருடிய கள்வனெனப் பொய் புகன்றனன். அரசனும் ஊழ்வினை வலியால் மயங்கிக் குற்றமற்ற கோவலனைக் கொல்வித்தனன்.

கணவன் மடிந்த வெவ்வுரை கேட்ட கண்ணகியாள் மற்றச் சிலம்பைக் கையிலேந்தி விரைந்து சென்று மாலையிலே அவனைக் கண்டனள்.

"வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்"

சிலப். XIX. 35—38.

அப்போது ஞாயிறு மேற்கடலிற் பாய்ந்தது. இருள் சூழத் தொடங்கிற்று. [‘மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற், செவ்வென் கதிர்சுருக்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப’ சிலப். XIX. 31—32.] (‘யாருமின் மருண்மாலை யிடருழந்து தமியேன்முன்’ சிலப். XIX. 43.)

உடனே அவள் மிக விரைவாக அரண்மனையடைந்து அரசனைக்கண்டு அவனுக்கு அவன் செய்த பெருங்குற்றத்தை விளக்கிக் காட்டினாள். தான் கோவலனைக் கொன்றது பெருந் தவறென உணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன் "நானே

கள்வன், கெடுக என் வாழ் நாள்" என்று கீழ் வீழ்ந்து அப்பொழுதே உயிர் துறந்தான். பின் கண்ணகியாள் அந்நகரை மும்முறை வலம் வந்து அதனை எரியூட்டினாள். அப்போது இரவு ஐந்து நாழிகையிருக்கும். அன்று ஆடித்திங்கள் வெள்ளிக் கிழமை, இருட்பக்கத்து அட்டமி பரணிக்கு மேல் வந்த கார்த்திகை. ["ஆடித்திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளிவாரத் தொள்ளெரி யுண்ண, வுரைசான் மதுரையோ டரசுகேடுறும்" சிலப். XXIII. 133—136.]

மதுரை எரியுண்ட காலத்தை ஆய்ந்துமுடிப்பதற்கு இது மிகவும் உதவியாம். இதில் கார்த்திகை யென்பது அழல் சேர் குட்டம் என்பதால் விளங்கும். இவ்விடத்துப் பழைய உரையாசிரியர் கார்த்திகை பரணி யென்று பொருள் குறித்திருக்கிறார். இதுவும் அன்று கார்த்திகை பரணிக்குமேல் வந்ததாமெனவும் அதனால் மதுரையிற்றீப்பற்றியது அப்பொழுதேயாயிருக்கலா மெனவும் உணரலாகும். கி. மு. 100 முதல் கி. பி. 400 வரை கணக்கிட்டுப் பார்த்ததில் கி. பி. 144-ல் மட்டுமே இவ்விதமான கணிதக்குறிப்புக் காணப்படுகின்றது. வேறு ஆண்டுகளொன்றும் பொருந்தவில்லை. இதிலிருந்து மற்றைச் செய்திகள் நடந்த நாட்களும் இவையெனக் காணலாகும்.

கி. பி. 144 சித்திரைத் திங்கள் இருபத்தோராம் நாள் வெள்ளிக்கிழமை சித்திரை நாள் ஒளிப்பக்கப் பதினான்காம் திதியன்று இந்திரவிழாவிற்குக் கொடியேறிற்று. வைகாசிப் பதினேழாம் நாள் வியாழனன்று வரை விழா நடந்தது. பதினெட்டாம் நாள் வெள்ளியன்று கொடி யிறங்கிற்று. பத்தொன்பதாம் நாள் சனியன்று கடலாட்டு. அன்றுமாலையிலேயே கோவலன் மாதவியைப்பிரிந்து தன் வீடடைந்தான். அன்றிரவிலேயே அவன் தன் மனைவியுடன் மதுரைக்குப் புறப்பட்டான். அன்று ஒளிப்பக்கம் பதினான்காம் நாள். அவ்வாண்டில் ஆடித்திங்கள் இருபத்தைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை இருட்பக்க அட்டமி; அன்று பரணியும் கார்த்திகையும் இரவு ஐந்து நாழிகைக்குச் சேர்ந்தன. அப்பொழுதே கண்ணகி மதுரையில் எரியூட்டினாள்.

மதுரை யெரிந்த பதினான்காம் நாள் அதாவது ஆவணித்திங்கள் நான்காம் நாள் வியாழனன்று ("எழுநாளிரட்டியெல்லை சென்றபின்" சிலப். XXIII. 193) கண்ணகி நெடுவேள் குன்றத்தடிவைத் தேறித் தன் கணவனுடன் பூத்தேரூர்ந்து இந்திரனுலகமெய்தினாள். இவ்விந்தையனைத்தும் நேரிற் கண்டிருந்த வேட்டுவர் சொல்லக் கேட்ட சேரன் செங்குட்டுவன் தன் தலைநகராம் வஞ்சியிலே கோயிலெடுத்து அதில் இமயமலையிலிருந்து கொண்டுவந்த கல்லிலே கண்ணகியாருருவத்தை யமைத்து நிலைபெறுத்தி வணங்கினான். சேரன் செங்குட்டுவன் இமயமலை சென்று திரும்பிய செய்திகள் மிகவும் சிறப்புடையனவையாதலால் இங்கே அவைகளை நன்கு ஆராய்வோம்.

கண்ணகியாரைத் தெய்வமாக எண்ணிய சேரன் செங்குட்டுவன் ஓர் பெருஞ் சேனையோடு புறப்பட்டுக் கங்கையின் வடகரையை யடைந்து ஆரிய மன்னர் கனகவிசயரை வென்று தன் சேனைத்தலைவனைக் கல் கொண்டுவர இமயமலைக்கனுப்பிக் கங்கையைக் கடந்து அதன் தென்கரையிலே யிருந்தான். கல் வந்தவுடன் அதற்கு நீர்ப்படை செய்யப் பெற்றது. அன்று மாலை மன்னவன் மூன்றாம்பிறைச் சந்திரனைப் பார்த்தனனாக, கணி அரசனை வாழ்த்தி, இன்று நாம் வஞ்சி நீங்கி முப்பத்திரண்டு திங்கள் கழிந்தன என்றான். ("எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியதும்." சிலப் XXVII. 149.) இதனால் அவன் வளர்பிறை மூன்றும் நாளிலேயே வஞ்சியை விட்டுப் புறப்பட்டவனாதல் வேண்டும். இங்கே இந்த முப்பத்திரண்டு திங்களும் எவ்வாறு கழிந்தன என்பதை நன்கு ஆராய வேண்டுவது இன்றியமையாததாகின்றது.

சேரன் சிறிதும் தாழ்க்காது வஞ்சியை விட்டுப் புறப்பட்டானெனத் தெரிவதால் அவன் கண்ணகி விமான மூர்ந்து சென்றதின் பின்பு தொடர்ந்து இருபத்தாறும் நாள் திங்களன்று வளர்பிறைத்திருதியையில் புறப்பட்டவனாவன். அதாவது கி. பி. 144 ஆவணித்திங்கள் இருபத்தொன்பதாம் நாள் அவன் நீலகிரியடைந்து அங்கே அரசர்கள் அனுப்பிய திறைவாங்கியிருந்தான்.

கொங்கணரும் கருநாடரும் வேனிற்காலத்தே வந்தனர். குடகர் மாரியில் வந்தனர். (சிலப். கால்கோட்காதை. 85—175.) மாரிக்காலத் தொடக்கத்தில் அதாவது ஆவணியில் மன்னவன் நீலகிரியின் நீங்கினான். அப்போது அவன் வஞ்சி நீங்கி ஓராண்டு கழிந்தது.

செங்குட்டுவன் நட்பரசாராய நூற்றுவர் கன்னருதவியால் கங்கையைக் கடந்து கனகவிசயரைப் பதினெட்டு நாழிகையில் வென்றான். ஆனால் அவன் பகைவர்களுடைய வரவை எதிர் பார்த்துப் பாசறையிலிருந்தான் எனத் தெரியவருகிறது. "பகைப்புலம்புக்குப் பாசறையிருந்த" (சிலப். XXVI. 180.) இதனால் இவன் பகைப்புலம்புக்கிருந்தது ஓர் மாத மிருக்கலாம். பின் அவனுடைய சேனைத்தலைவன் இமையஞ் சென்று கற் கொண்டு கங்கைவர இரண்டு திங்களாயிருக்கும். இதிலிருந்து அவன் நீலகிரியிலிருந்து கங்கைக் கரைவரச் சென்றது பதினேழு திங்களாம். (32 — 12 + 1 + 2) வஞ்சியிலிருந்து நீலகிரிவரை யுள்ளவழி நீலகிரியிலிருந்து கங்கைக்கரைவரையுள்ள வழியில் ஐந்தி லொன்று. ஆகையால் வஞ்சியிலிருந்து கங்கைக்கரை சேரச் சென்றன இருபதரை மாதங்கள் ($17 + 3\frac{1}{2}$) என அறியலாம். ஆதலால் கங்கையிலிருந்து வஞ்சி மீளவும் இருபதரை மாதங்களே யாயிருக்கும். சேரன் நீலகிரியில் எட்டரை மாதங்கள் ($12 - 3\frac{1}{2}$) தங்கியவனாவன்.

சேரன் செங்குட்டுவன் ஐம்பத்து மூன்றாவது திங்களில் வஞ்சி மீண்டனன். ($32 + 20\frac{1}{2}$) விரைவில் கண்ணகி கோவிலில் நிலைபெறுத்தப்பட்டாள்; அதற்கு இரண்டொரு மாதங்களே சென்றனவாம். அதாவது மதுரை யெரிந்து நான்காண்டுகள் கழிந்த எட்டாவது மாதத்திலே கண்ணகி பிரதிட்டை நிகழ்ந்தது. அது கி. பி. 149 பங்குனியிலாம்.

அப்போது இலங்கைவேந்தன் கயவாகு என்பான் வஞ்சியிற் கண்ணகியை வணங்கினன். ("கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்" சிலப். XXX. 160.)

இலங்கைச் சரிதங்களிற் பழமையானதாகிய தீபவம்சத்தில் கயவாகு மன்னன் புத்த நிர்வாணத்திலிருந்து 642-வது ஆண்டு முதல் 664-வது ஆண்டு வரை ஆண்டனனெனத் தெரிகிறது. புத்த நிர்வாணம் கி. மு. 493-லாம்*. இதனால் கயவாகு கி. பி. 148 முதல் கி. பி. 170 வரை [(641—663)—493] இருபத்திரண்டு ஆண்டுகள் ஆண்டவனென அறியலாம். அவன் கி. பி. 148-ல் பட்டத்திற்கு வந்து கி. பி. 149-ல் வஞ்சி வந்தவனாவன்.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் மதுரை யெரியுண்டது கி. பி. 144-ல் என்பதும், கண்ணகிக்குக் கோவிலெடுத்தது கி. பி. 149-ல் என்பதும் நிலைபெறுகின்றன.

ஓம் சிவம்.

திருவருள் இயல்பு கூறி நெஞ்சறிவுறுத்தல்.

திருவாளர் மு. வே. மா. உலக ஊழியர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், பூளைமேடு.

(மறைமலையடிகள் திருப்பாட்டுக்கிணங்க எழுதியது.)

விண்ணின்கண் எளிதாகச் சுழல்கின்ற உருண்ட விளாம் பழத்தை நிகர்த்த காற்றுளரும் பல்வளம் கெழுமிய இப்பெரிய நிலவுலகத்து, மடிந்திராது சுறுசுறுப்புடன் அரிதில் முயன்று ஊக்கித் தொழிலைப்புரிகின்ற வேறு வேறு பிரிவினவாய், ஒவ்வொரு பிரிவிலும் பலப்பல குழுமிய வேறு வேறு தொகுதியின வாய் உள்ள எறும்புகள் போலப் பலவேறுபட்ட நாட்டினரும் பலவேறுபட்ட மொழியினரும் பலவேறுபட்ட கோட்பாட்டின ரும், பலவேறுபட்ட வடிவினரும் ஆவர் மக்கள். அம்மக்கட் பகுதியில் சிலர், தெய்வத்தன்மை மிக்க இந்திய நாட்டில் சித்திக் கொருவித்தையாகிய தமிழ் நிலவிய தென்னாட்டில், பலரும் இறும் பூதுறுமாறு பலகழங்கினையும் ஒருகையாலோ அல்லது இருகையா

---

* 'புத்த நிர்வாண காலம்' என்ற ஆராய்ச்சியுரையில் இதன் விவரம் கூறப்பெற்றது.

லோ விண்ணின்கட் சென்று பின்னர்க் கையின் கட்டங்கிப் பின்னும் விண்ணின்கட் சென்று வருமாறு விழியிமைக்கும் அளவில் பலமுறை உருட்டும் பயிற்சிமிக்க விச்சைவல்ல கைவல் லொருவனைப் போல எல்லா உலகங்களும் அவற்றின்கண் உள்ள உயிர்களும் இயங்குமாறு இயக்குவித்துத் தான் மாத்திரம் இயல் பிற் புடை பெயராது தன்வாம்பில் ஆற்றலுடன் எழுந்தருளி இருக்கும் செம்பொருளின் திருவருள் ஒன்றையே நாடித் தருக்கு நீங்கி இவ்வுலகத்துறைபவராவர். பலர் எம்முடைய அறிவினாலே நேர்மை பெரிதுறுகின்றேம், எம்முடைய வறிவினாலே நலம்பல உறுகின்றேம். எம்முடைய அறிவினும் சிறப்புற்ற அறிவு இவ் வுலகத்து உண்டு கொல்லோ? எம் அறிவுக்கு அறிவாக இருக் கும் பொருளும் உளதோ? யாம் எல்லார்க்கும் எல்லாவுயிர்க்கும் உறுதுணையாக உள்ளேம். எமக்கும் யாமே துணை: எமக்குத் துணையாகப் பிறிதொரு பொருளும் உண்டோ? என்று இறு மாந்து பொருளில் புன்மொழிகளும் எண்ணங்களும் கூறியும் நினைத்தும் வறிதே பயமின்றி இறந்து கழியும் மாக்களாவர்.

இத்தகைய மாக்களுள் ஒருவனாகாது அறிவு நிரம்பப்பெற்ற இளைஞன், கோழிமுட்டை உருவினை ஒத்த உருண்ட அழகிய முகத்தினன்; கரிய மாட்சிமிக்க குஞ்சியன்; அருளும், கண் டார் விரும்பும் அழகும் உடைய கண்களுடையான்; அருமை மிக்க நற்குணம் பலவுஞ்சேர உடையான்; புகழெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டதோர் ஒழுக்கமிக்க குடியிற் றேன்றியவன்; அன்னான் பெயர் சிவங்கண்டான் என்பதாம். திருவருளின் துணைவழிநின்று இயங்குவிக்க இயங்கும் பெற்றியனாய்ப் பிறி தோர் துணையும் பெறுனாய் இடம்பரந்த பெரிய நில உலகத்து யாரும் வழங்காத ஓரிடத்து நினைந்தாங்குத் திரிந்திருந்தான். அவ்வாறு திரியும் வேலை, வனப்புமிக்க சிறப்பினையும், அறிவான் நிறைந்து அமைந்த கேள்வியினையும், பலபுகழினையும் நிலைநிறுத்திய கெடாத நோன்பினையும், என்பெழுந்தியங்கும் யாக்கையினையும், இகலும் செற்றமும் நீங்கிய உளத்தினையும் உடைய தவத்தினன் ஒருவன் வெளித்தோன்றி, திருவருள் நெறிச்செலவினை மயக்க

மறத் தெரிய விரும்பும் வருந்தாத உள்ளமுடைய மிக்க இளமையுடையாய்! நீ இந்நெறியிற் சோலைப் பிழையாது பேணின், இந்நூல் முதலிய இறைபவர் பகரும் பொருளன்றாக அந்தமில் இன்பம் மன்னிய செல்வத்தை வதிதலைப் பெறுவாய் என்று நன்மொழிகள் பல கூறி அருள்செய்து சென்றனராக, இளைஞன் அவ்வயின் நீங்கி வேறொன்றும் நினையானாய் ஒருங்கிய அறிவுடையானாய், கலைடார் பசுமணிக் கற்களால் இழைத்த திருநீலமோ என விழைவுறுமாறு பசும்புற்கலித்த கொழுநில வழியே செல்கின்றான். செல்லும் காலம் வேனிற்காலத்து நண்பகலாகலானும், வறியவன் இளமைபோல் வாடிய சிலையவாய்ச் சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழலளிக்காதவாய் வலைவலந்தன்ன புள்ளி நிழலுடைய மாங்களையுடைய மணற்பரந்த பக்கங்கள் தான் செல்லும் கொழுநில வழி மருங்கிருப்புடையு மிருத்தலானும் உடல் கொதிப்புற மூச்சுப்பை உயிர்ப்பெழ மயிர்க்கால் வேர்வை அரும்ப இடுகுகண்ணினனாய்க் கடுகுறு பசியனாய் விரைவுறு செலவினனாய்ச் சென்றனனாக; அந்நிலையை உற்று நோக்கின் மறவழிகள் புறத்துச் சூழ்ந்திருக்கச் சிறிது வருத்தமும் பெரிது மகிழ்ச்சியும் ஒருபொழுது நிகழ அறவழியிற் பிழையாதொழுகும் அறிவுடை ஒருவனை அவ்விளைஞன் ஒத்திருந்தான். கடுங்கதிர் ஞாயிறு காய்சினம் நீங்கினன். இளைஞன் ஆண்டுத் தோன்றிய பொழிலைக்கண்டு களிதுளும்புள்ளமொடு தெளிவு பெரிதுடையனாய்ச் சிதைவில் விருப்பிற் சென்றினிதிருந்தான். அதுபொழுது கூடற்றமிழும், கொழுஞ்சந்தன விரையும் மணக்கத் தென்றல் உலாவிற்று. மாலைப்பிறைமதி அரும்பவிழைந்தது. ஒருசார் ஓடும் கரைபொரு தெளிநீர்க்கால்வாய் நறுமணமலருடன் இழுமென ஒழுகியது. ஆண்டுள்ள கிளிகள் அறிவர் ஒப்ப அழகொழுகத் திருவாசகமும் தேவாரமும் ஆர்வத்துடன் பாடின. அதனுள் ஒருகிளி அப்பர் அடிகளின்

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்னும் திருக்குறுந்தொகையைச் சீர்பிழையாது பாடிற்று. அதுகேட்டு இளைஞன் இறும்பூதும் இன்பமும் எய்தி மகிழ்ச்சிக் கடலுட் குளித்துக் கட்டுக்கடுமாறிக் கரையேறினான். புது மணம் விரிக்கும் கொழுவிய பூமுகை தோறும் வரிச்சிறைத் தும்பிகள் பண்பாடின. நிறம் விளங்கிய கொடிக்கட் கருங்குயில்கள் கூவிக்களித்தன. இவையெலாம் கேட்டுத் தான் என்றும் காணாத மகிழ்ச்சியில் நிறைந்திருந்தான். பின், நெடிய இலைகளையுடைய வாழையின் புலியடியன்ன குலையில் உள்ள தாமே கனிந்த பழங்களும் பொரிந்த அடியினையுடைய மாவின்கனிந்த பழங்களும், மணங்கெழுமிய தீஞ்சுவையுடை வேர்க்கோட் பலவின் வெடித்த பழச்சுளைகளும் தன் பசிநீங்கத் தொகுதியாகவுண்டான். கொல்லுலையிடத்து உருகியோடுகின்ற பொன்போலத் தெளிவமர்ந்து ஓடும் பனிநீர்க்காலின் கரைமருங்கிருந்து அகங்கையால் அள்ளி வேட்கை நீங்க விழைவுறுமளவு நீர் பருகினான். ஆறு செல்வருத்தம்பாறிட ஆண்டிருந்தான். அவ்வமயம் பொன்னிகர்த்த பூந்தாதும், மணங்கலந்த தீந்தேனும், விரைசெறிந்த நறுமுகையும் நிரை நிரையாக வீசிப் பூப்பொதிந்த மரங்கள் நிழலளித்தன. இளைஞன் மென்றூவி மயிர்நிறைந்த தளிமத்து மேவினால் ஒப்பப் புற்படர்ந்த செழும் பசுநிலத்திருந்தான். உடனே நாற்றிசையும் நோக்கி மேற்பகுதியும் நோக்கினான். மந்தியும் அறியா மரம் பலவடங்கிய குயில் நுழைந்துறையும் பொழிலாயிருந்தது. வானம் கருமுகிலின்றி மறுவற விளங்கியது. நிறைகலையில்லாப் பிறைமதிப்பிள்ளை விலைவரம்பில்லா விண்மீன் நித்திலம் வெண்கதிர்க்கையால் விதிர்த்துச் சிரித்தது. ஈங்கிவை எல்லாம் இன்புறக்கண்டு மெய்யறிவு தலைக்கொள உண்மையை நினைதன்மேயினான். மக்கள் எனப்படுவார் பரந்த பல்லுயிரினும் தலைமையுடையார். அவர் அவ்வாறு தலைமையுடையராய் இருத்தற்கு ஏதுவாவது அறிவுடையராய் இருத்தல் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். அவ்வுரையை நோக்கின் ஒப்புக் கொள்ளுதற்குரிய சீர்மையுடைத்து. எனினும் அவ்வறிவுடைமையால் துன்புறுதற்கேதுவாகிய கவலை பல உளவாகின்றன. விலங்கினம் என்று சொல்லப்படுவன 'நன்மை விளங்கு

தற்கு ஏதுவாம் அறிவு அவற்றின்கட் காணப்படுதலின்மையால்' இழிதிணையாம் என்று அத்தொல்லாசிரியர் கூறுகின்றார். உற்று நோக்கின், அவை கிழங்ககழ்ந்துண்டும், முகிழ்நறு மாந்தியும், பைந்தழை மென்றும், பால் நீர் குடித்தும், மலைகளிலும், பொதும்பரினும், அழியுந்தன்மையவாய உறுதியிலவாய கூடுகளினும் வருத்தமின்றி இனிது இருந்து ஒருதுயரும் இலவாய் இன்பமும், நன்மையும் எய்துகின்றன. இவ்வாற்றான் பகுத்துணரும் சிறப்பறிவுடைய மக்கள் அடைந்த இன்பம் என்னை? ஒன்றும் இலதே! பகுத்துணரும் சிறப்பறிவிலவாகிய விலங்கினங்களும், பிறவும் தமக்குரிய வினைகளை முடித்து இன்புற்றிருத்தலும் இல்லையோ? அவ்வறிவின்மையால் அவற்றிற்குப் போந்த இழுக்கென்னை? ஒன்றும் இல்லையே! ஆதலின் அறிவுடைமையானும், அறிவின்மையானும் பெறுதற்குரிய தென்னென்று எண்ணுங்கால் ஒன்றும் இன்றே! மக்களுள் செல்வமுடையார் கவலையின்றிச் சிலர் உளராலோ எனின்? நன்று சொன்னாய்! பெரிதிலரேனும் சிறிதளவேனும் இலாரைத் தேடுதல் எளிதன்றே. அவ்வாறு கவலையிலராயும் உலகத்திருந்தார் யாரே? அகன்கண்ஞாலம் பொதுவின்றிப்புரந்து குடையும் முரசும் கொடியும் தாமே கொண்டு ஏமமுரசம் இழுமென முழங்க நேமியுய்த்து இகலறு வேந்தரும் இறந்தொழிந்தனரே! பொய்யுரை கூறியும், தம்முடலோம்பப் பிறிதின்னுயிர் நீக்கி அவ்வுடலுண்டும், உயர்வுடையோர் பலரைக் கொன்றும், நல்லோர் தொகுத்த பல்பொருள் வெளவியும், வஞ்சம் பகர்ந்தும், நெஞ்சறி பிழைபுரிந்தும் தூராவயிற்றைத் தூர்க்க முயன்றும், என்றும் அதற்குரிய இயல்பமர் உடம்பைப் பேணமுயன்றும் வாழ்கின்ற கையறியா மாக்களும் இறந்தொழிந்தனரே! ஆ! ஆ! என்னே உலகத்தியற்கை! என்னே உலகத்தியற்கை! உடம்பினைப் பேணற்குரிய உணக்கள் பலவும் மலையினும், காட்டினும், மரத்தினும் இருப்பனவற்றைத் தேறாது என்றும் இடும்பைகூர் இழிவயிற்றைப் பேணற்கே நாளும் காலத்தைப் போக்குகின்றனரே! யான் செய்தேன் இதனை; என்னுடையது இது; என்னும் அறியாமை கருவியாகப் பெரிய இடர்கள் வருமே! அறிவுடைப்

பொருளையும் அறிவில் பொருளையும் ஒப்பநாடி அவற்றிற்கேற்ப வியப்புறுதற் கேதுவாகிய திருவருட் பேற்றினை ஆயுந்தொறும் பெருக்கெடுத்தோடு மின்பந் தலைக்கூடுமன்றே. பகலும் இரவும் பொருள்களைப் பல்வகை அழகும் பெறவிளக்கி ஒருபற்றுமின்றி உருவாய் விண்ணில் விளங்கும் கெடாத அறவிளக்காகிய ஞாயிறும், திங்களும் அஞ்ஞாயிற்றால் உளவாகிய பருவகாலங்களில் அதனால் உளதாகிய வளந்தரு மழையும், அம்மழையால் நீர் இடையறாமையின் இடையறாது காணப்பட்டுவரும் உயிர்ப் பன்மையும் நிறையறிவுடைய முழுமுதற் கடவுளின் கைம்மாறு கருதா இயற்கைப் பேரிரக்க வருளான் நிலவுவனவலவோ! அருட்பெருவள்ளலாகிய அன்னானை மயக்க வுணர்வுடைய யான் கூடுநாள் என்றோ? நாத்தழும்பேற வேத்துரை மொழிந்தொடு மணற் கேணியிற் சுரந்துநீர் பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்புற்று அன்பன் ஆகும் நாள் என்றோ? அந்தோ! அந்தோ! நான் இவ்விடம் வந்து மறதியுற்றிருந்து வாளாப் பொழுது கழித்தேன். இளமதி சாயுமுன் இவணிங்கி முத்து, மாமணி, மாணிக்க, வயிரத்த வெய்ப்பினில் வைப்பைத் தேடியுறு வேன் என மனத்தெண்ணிக் கூறி நெடியகாட்டிடையே செல் வழி, சான்றோர் கவி ஒத்த தெளிவும், பளிங்கன்ன நிறமும் உடைய அசையும் நீரோடையில்

"பால்புரை பிறைக்கதிர் மேன்மிளிர்ந் தாடலும்
எழுந்திரை இழியக் கொடுங்கயன் மறிதலும்
வானிடு வில்லின் வாளைமேல் உகளலும்
பாசடை நிவந்த நெறியவிழ் ஆம்பல்
இரவெனு மணங்கு திரைமடி இருவிப்
பாற்கதி ரூட்டும் பாலன் போறலும்
அன்பிடை நெகிழா அன்றிலும் அகன்றிலும்
தாதுகல் லுண்ணும் கதன்மிகு குரீஇயும்
அன்னமு மயிலும் பொன்னுரை கிள்ளையும்
ஆடுவாற் சிரலும் புறவும் பிறவும்
கூடுதொறுங் குழீஇத் துணையொடு துயிறலும்
அருப்பமாய் அயல்நின்ற பொருப்பகந் தோறும்

> கழல்கட் கூகை குழறலோடு உளியம்
> முரற்றலும் பிறவும் கருத்துற நோக்கி
> அல்லாந் தெழுந்த உணர்வின னாகி
> மல்லலங் காவிற் செல்லுங் காலை
> வைகறை யாமம் சிறிதகழ்ந் தன்று"

செம்பொருளின் திருவருள் விரிய விரிய வலிய ஆணவ இருள் நீங்குமாறு போல அங்கதிர் ஞாயிறு முனைவயிற் றோன்றலும் நிறைந்த இருட்கூட்டம் சிறிது சிறிதாய் நீங்கியது. பறவைகள் ஒலித்தெழுந்தன. தாமரை முகைகள் முறுக்குடைந்து மலர்ந்தன. இமையாத எண்ணிறந்த கண்களையும் சுமை மயிர்த் தொகையையும் உடைய மயில்கள் பீலிவிரித்து ஒருபுறத்து ஆலி ஆடின. இத்தகை நிகழ்ச்சிகளைக் கண்டு கேட்டு மகிழ்ந்த உள்ளத்துடன் மகிழ்ந்து சென்றான். தன்னுயிரைத் தான் கண்டாற் போலக் கொங்கிற் பொன்வேய்ந்த முகடமைந்த அம்பலத்தைக் கண்டான். இன்பக்கடலிற் குடைந்தான். அடங்கா மதர்ப்புடன் ஓடுவழி ஓடினான். விலைவரம்பில்லா வச்சிரப் பலகையை ஈர்ந்து தகைபெறும் மணிகள் பல வகைவகை ஆராய்ந்து குயிற்றவேண்டிய இடங்களில் குயிற்றிப் பூத்தொழில் கவியத் தெய்வத் தன்மையுடைய நூலுணர்வுடைய தமிழத் தச்சனாற் செய்யப்பட்ட நிலையுயர்ந்த வாயிற் புழைவழியே நுழைந்தான். அருள் நிறைந்த பார்வையும் விரிந்த பரந்த நெற்றியில் நீறும் விளங்க, ஒளிமிகுந்த கழுத்தில் விழிமணிக் கோவை அழகுடன் அசைய, பால்நுரை முகந்தன்ன மாசில் நூலுடை அரைமருங்கசைய ஒரு திருக்கையில் ஆன்மா இறைவனுடன் கலக்கும் இரண்டற்ற கலவைக் குறியைக் காட்டி மெய்கண்டாரியற்றிய செந்தமிழ் நூலின் செம்பொருள் விளக்கிப் பதமுற்ற மாணவரை பார்வையால் ஆண்டுகொண்டு அருட்டிரு மேனியுடன் எழுந்தருளி உள்ள தமிழ்ப் பேராசிரியனைக் கண்டான். கண்டதும் கழுமிய நோக்குடன் அழுது குறை இரந்தான். பெரியோன் "அன்புடைக்குழந்தாய்! மன்னு உலகத்து மன்னுதல் இன்றி மின்னலின் மறையும் புழுக்கறைபோலும் அழுக்குடை யாக்கையிற் பொருந்து பல்லுயிரும் மெய்யை மெய்

யெனப் பொய்படுகுநவே. பொய்ப்பொருள் தம்மின் நீங்கி மெய்ப் பொருள்தேறி என்றும் முதிரா இளநலன் எய்த உறுதிகொண்டு ஈண்டு உற்றமைக்குப் பெரிது உவந்தனம். நின்பொருட்டாகக் கட்புலனுற்கறுவல் கூடாத திப்பிய நிறைந்த உண்மை அறி வானந்தங்களேயே உருவாகக் கொண்டுவந்தாம். பேரறிஞர், அறிஞர், சிற்றறிஞர் எனும் உயிர்களின் வேறுபாட்டிற்கும், அம்முத்திற உட்பகுதி வேறுபாட்டிற்கும் ஏற்ப யாம் தாங்கி வரும் உருவம் இதுமாத்திரம் அன்று. நிலன், நீர், தீ, வளி, வெளி எனும் ஐம்பெரும் பூதமும் திங்களும், ஞாயிறும், எங்கும் ஆம் உயிரும் ஆகிய எண் வடிவமும் யாமே. இவ்வாறயி னும் இவற்றின் வேறாய் யாம் கொள்ளும் வடிவங்களும் உள. நமது இயல்பைத் தெரிந்து நமது அருள்வழி நிற்போர் இம்மை யில் இன்பெய்துவர்: அம்மையில் நம் அடிநிழலடைவர். எம் அன்புடைத் தோன்றல்! நம்மருளொடு நம்மை நீங்கிப்பிரிதல் இன்றிக்கலந்து விரும்பி இருத்தற்குரிய நிலையை நோக்கி அழி யாததும் எல்லையில்லாததும் உவமையில்லாததும் ஆகிய பேரின் பத்து உறைவாயாக" என்று கூறிப் பின்னர்த்தனது அந்தண உருவத்தைமாற்றிப் பொருப்பரையன் மடப்பிடியோடு ஒளிப் பிழம்பாம் ஏறேறி வெளிப்பட்டு "இளையோய்! இது நமது வடிவமாகும். மெய்புணர்வுடையாய்! இவ்வுலகத்தில் நீ உள்ள அளவும் திரிபுணர்ச்சியும், மயக்கவுணர்ச்சியும், ஐயவுணர்ச்சியும் நீங்கப்பெற்று முறைமையாக வுயர்ந்து மறுமையில் எமது திரு வடி நிழல் அடைக." என்று அருள்கூறிப் பெருஞ்செல்வம் பலவும் தந்து காந்தனன் என்று பெரியோர் கூறுப. ஆதலின் நெஞ்சே! நீ வாழிய! நெஞ்சே!! வேண்டிய வேண்டியாங்கு அன்பர்கட்கு அருளி அன்னாரை ஆண்டுகொண்டு புலி அதள் உடுத்துப் பிறைமதி தரித்து உரையின் வரையும் பொருளின் அளவும் கடந்த பெருவெளியில் ஒருகால் தூக்கித் திருநடம் குயிற்றும் தேவர்தம்தேவை வந்தவாறு வாழ்த்தி வல்லாங்குப் பாடி வணங்குவேமாக. அவ்வினைஞனல் இரக்கப்பட்ட அம் முதல்வன் திருவருளை முனியாது வெஃகி விருப்பி அதன்மாட்டுப்

பொருந்தி யொழுகுவோமாயின்

'வருவன யாவும் திருவருள் குறிப்பே
வாரா தனவும் போா அருளே'
"ஊழ்ப்பின் வாரா உறுதிகள் உளவோ"

அன்புடை நெஞ்சே என்னுடன் எழுக! எழுக! எழுக!

உ

திருச்சிற்றம்பலம்.

செங்கீரைப் பருவம்.

திருவாளர், பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

தமிழில் வகுக்கப்படும் நூல்வகைகளுள் ஒன்று பிள்ளைத் தமிழ் என்பது. இது கடவுளரையும், பெரியாரையும் பற்றி அவர்களது இளமைப் பருவத்தை யணிந்துரைப்பது. ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய விருந்து என்னும் வனப்பில் இது அடங்கும். பிற்காலத்தார் இதனை வித்தார கவியுள் முதலாவ தெனக் கூறுவர். ஆண்பாலரைப்பற்றியது ஆண்பாற் பிள்ளைத் தமிழெனவும், பெண்பாலரைப் பற்றியது பெண்பாற் பிள்ளைத் தமிழெனவும் படும்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ்:— காப்புப்பருவம், செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வருகைப்பருவம், அம்புலிப்பருவம், சிறுபறைகொட்டற்பருவம், சிற்றிலழித்தற்பருவம், சிறுதேருருட்டற்பருவம் எனப்பத்தாகப் பிரித்துக் கூறப்படும்.

பெண்பாற் பிள்ளைத்தமிழ் :—முற்கூறியவற்றில் இறுதியினின்ற மூன்றற்கும் மாற்றாகக் கழங்காடற்பருவம், அம்மானையாடற்பருவம், ஊசலாடற்பருவம் என மூன்று கூட்டிக் கூறப்படும்.

இதனை— " கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே "

" பின்னைய மூன்றும் பேதையர்க் காகா
வாடுங் கழங்கம் மானை யூசல்"—உரியர் என்னும் இலக்கண விளக்கப்பாட்டியல் (46, 47)-ஆம் சூத்திரங்களால் அறியலாம்.

இப்பருவ வைப்புமுறை சில மாறிக் கூறப்படுவதும்* பெண்பாற் பிள்ளைத்தமிழினுள் கழங்காடலுக்கு மாற்றாக நீராடற் பருவங் கூறப்படுவதும்† உண்டு.

இப்பருவம் பத்தினுள்ளும் இரண்டாவதாகிய செங்கீரைப் பருவம் இன்னதெனத் துணிவதே இக்கட்டுரையின் பொருளாம். ஏனையவற்றில்,

க. காப்புப்பருவம் :—தாய்மாரும் செவிலியரும் 'குழந்தைக்குப் பிணியொன்றும் அணுகுறாவண்ணம் கடவுளர்காக்க' வென்த் திருநீற்றுக் காப்பணிவதைக் கூறுவது. வாயிற்படியில் 'நீர் விட்டுக் குழைத்தெடுத்துப் பொட்டிடுதலும், வேறு காப்புக் கொள்ளலும் உண்டு. இது குழந்தை பிறந்த மூன்று மாதத்தில் நிகழ்வது.

---

* பெரிய புராணம், திருஞான சம்பந்த மூர்த்திகள் புராணம்.
† மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

ரு. தாலப்பருவம்:—தாயரும் செவிலியரும் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுவதைக் கூறுவது. இது எழு மாதத்தில் நிகழ்வது.

சு. சப்பாணி கொட்டற்பருவம்:—'இருகையையும் குவித்துக் கொட்டுக' வெனக் குழந்தையைக் கைகொட்டிப் பழக்குவதைக் கூறுவது. இது ஒன்பது மாதத்தில் நிகழ்வது. (சு-பாணி = சேர்த்திய கை.)

எ. முத்தப்பருவம்:—'முத்தந்தருக' வெனக் குழந்தையை முத்தமிடுவிப்பதைக் கூறுவது. இது பதினொருமாதத்தில் நிகழ்வது.

அ. வருகைப்பருவம்:— 'வருக வருக' வெனக் குழந்தையை நடை பழக்குவதைக் கூறுவது. இது பதின்மூன்று மாதத்தில் நிகழ்வது.

௯. அம்புலிப்பருவம்:—திங்களைக் காட்டி, அதைக்கண்ட குழந்தை தன்னுடன் விளையாட அதனை அழைப்பதைக் கூறுவது. இது பதினைந்து மாதத்தில் நிகழ்வது.

அ. சிறுபறை கொட்டற்பருவம்:—குழந்தை சிறியதொரு பறையை யடித்து விளையாடுவதைக் கூறுவது இது பதினேழு மாதத்தில் நிகழ்வது.

௯. சிற்றிலழித்தற் பருவம்:—சின்னஞ் சிறுமியர் தெருவில் சிறு வீடுகட்டி விளையாடுவதை யழித்து விளையாடுவதைக் கூறுவது. இது பத்தொன்பது மாதத்தில் நிகழ்வது.

௧௦. சிறுதேருருட்டற் பருவம்:—தனக்கென்று செய்த சிறுதேரில் ஏறிச் செலுத்துவதைக் கூறுவது. இது இருபத்தொரு மாதத்தில் நிகழ்வது.

பெண்பாற் பிள்ளைத்தமிழில் இறுதியிற் கூறும் பருவங்கள் கழற்சிக்காய் எழு பிடித்தாடி விளையாடுவதையும், அம்மானைக் காய்கொண்டு ஆடிவிளையாடுவதையும், ஊசலாடி விளையாடுவதையும், நீராடி விளையாடுவதையும் கூறுவனவாம்.

இனி யிரண்டாவதாகிய செங்கீரைப் பருவம் :—குழந்தை பிறந்த ஐந்து மாதத்தில் நிகழ்வது. இதற்குச் செவ்விய சொற்களைப் பேசும் பருவம் என ஒருவர் உரையெழுதிப் போயினர். திருவாவடுதுறை யாதீன வித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகருமாகிய சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களும் இதனைப் பிறர் கூற்றாக உடம்பட்டனர். அவர் கூறுவது :—" கீர்-சொல் ;........உண்மை நோக்குமிடத்து...... அப்பொழுது தாதியர் செவ்விய சொற்களைச் சொல்ல வேண்டுமென வேண்டிக் கொள்வதாகக் கூறவேண்டுமென்பது கருத்தாகக் கொள்க" என்பதாம். (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்) பின்வருங் காரணங்களால் அவ்வுரை பொருந்தாமையைக் காணலாம்.

(1) ஐந்து மாதக் குழந்தை பேசுவது இயல்பன்மையாகலானும், மழலைச் சொற்றானும் பேசவாரா இளம்பருவத்தே செவ்விய சொற்களைப் பேசவேண்டிக் கோடல் அறிவின்பாற் படாதாகலானும் அது பொருந்தாது.

(2) வடமொழியில் ஸ்ரீஃ என்ற சொல் தமிழில் கீர் என வழங்குமென்ப. அவ்வாறே சேந்தன் திவாகரம்

'குயில்வினை வெதிர்ப்பு கீர் நுவல்பாணி
இபம் வாக்கென்பவும் சொல்லின் பால'

எனவும், சூடாமணி நிகண்டு

'மாற்றமே மொழியே கீரே வாணியே கதை யெதிர்ப்பு'

எனவும் கூறியாங்குக் கூறாமல், வாளா ஐகாரம் சேர்த்துக் கீரையெனக்கூறல் வேண்டா வாகலானும் அது பொருந்தாது.

(3) ஆடல் என்பது சொல்லுதல் என்னும் பொருளில் தனித்து வழங்காமையானும், சொல்லையடுத்துக் கூறுமிடத்தே, உரையாடல் என வழக்கிலும் "சொல்லாடச் சோர்வுபடும்" எனச் செய்யுளிலும் வழங்குமாகலானும், அவ்வாறு கூறின் செங்கீராடியருளே என வேண்டுதலான் செங்கீரையாடியருளே எனல் வேண்டாமையானும் அது பொருந்தாது.

(4) செங்கீர் (செம்மை-கீர்) என்ற சொற்களில் செம்மை யென்பது பண்புச் சொல்லாகவும், கீர் என்பது அப்பண்பைக் கொண்ட பண்பிச் சொல்லாகவும் நிற்கின்றன. இவ்வாறு பண்பும் பண்பியுமாயிணைந்து வருவன கருங்குதிரை, வெண்டிங்கள் பைந்தோகை என்பன போல இரண்டும் தமிழ்ச் சொற்களாக இருத்தலேயன்றிச் செம்மையென்னும் பண்புத்தமிழ்ச் சொல், கீர் என்னும் பண்பி வடசொல்லோடு இயைந்து வருமாறில்லை யாகலானும், சந்தவிருத்தம் முதலியன யாக்கத் தொடங்கி வேறு வழி காணாது வலிந்தின் றிணைத்துக் செருகுவார்போ லியைத்தல் ஈண்டைக்கு வேண்டாமையானும் அது பொருந்தாது.

(5) பிள்ளைத்தமிழ் கூறவந்த ஆசிரியர் எவரும் தம் நூற் களில் இப்பருவத்தில் இவ்வாறு (செவ்விய சொற்களைச் சொல் லுக எனல்) கூறாமையானும், இலக்கண நூல்களிலும் இவ்வாறு கூறப்படாமையானும் அது பொருந்தா தென்க.

இனிச் செங்கீரைப் பருவமென்பது குழந்தைதன் னிரு கையையும் நிலத்திலூன்றி, ஒருகாலைமடக்கி, யொருகாலை நிமிர்த்து, இருந்து, தலை நிமிர்த்து முகமசைந்தாடுவதைக் கூறுவதாம் என்க.

ஐந்து மாதக் குழந்தைகள் இவ்வாறு அசைந்தாடுவது இயல்பாகலானும், இவ்வாறே யிலக்கியஞ் செய்தாரனைவருங் கூறுதலானும், இலக்கண விளக்கவுரையில், செங்கீரை—தலை யெடுத்து முகமசைதல் எனக் கூறப்படலானும், முற்குறித்த சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள் தம் கூற்றாக இவ் வாறே கூறுதலானும் செங்கீரைத்தண்டுபோலசைந்தாடலாற் செங்கீரையாடலென வாயிற்று என ஒருவர் எழுதியிருப்பது பொருத்தமாகக் காணலானும் இதுவே பொருந்துமாறறிக.

இதைக் குறிக்கும் இலக்கியங்களிற் சில காட்டுதும் :—

(க) இங்கு ஆடல் என்பது ஆடுவதையே குறிக்கும் (சொல்லுவதைக் குறிக்காது) என்றற்கு, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில்

(1) முகமதி யூடெழு நகைநில வாட முழுச்சு ழியமாட
முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி முரிப்பொ டசைந்தாட
விகல்விழி மகரமு மம்மக ரம்பொரு மிருமக ரமுமாட
விடுநூ புரவடி பெயரக் கிண்கி ணெனுங்கிண் கிணியாட
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்குல் துவண்டு துவண்டாடத்
தொந்திச ரிந்திட வுந்திக ரந்தொளிர் சூலுடை யாலிடைமற்
றகிலச ராசர நிகிலமொ டாடிட வாடுக செங்கீரை
அவனித ழைந்திட மவுலிபு னைந்தவ ளாடுக செங்கீரை. (6)

(2) தசைந்திடு கொங்கையி ரண்டல வெனவுரை தருதிரு முகமாடத்
தாய்வரு கென்பவர் பேதைமை கண்டுத தும்பு புனைகையாடப்
பசைந்திடுஞால மலர்ந்தமை வெளிறியொர் பச்சுடல்சொல்லவுமோர்
பைங்கொடியொல்கவு மொல்கி நுடங்கிய பண்டி சரிந்தாட
விசைந்திடுதேவை நினைந்தன வென்ன விரங்கிடுமேகலையோ
டிடுகிடையாட வியற்கைமணம் பொதியிதழ் வழிதேறலினோ
டசைந்தொசிகின்ற பசுங்கொடியென வினிதாடுக செங்கீரை
அவனிதழைந்திட மவுலிபுனைந்தவளாடுக செங்கீரை. (7)

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

(3) செம்பொன டிச்சிறு கிண்கிணி யோடுசி லம்புக லந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரைவடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தியொ டுஞ்சிறு பண்டிய சைந்தாடப்
பட்டநு தற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பிவி தம்பொதி குண்டல முங்குழை காதும சைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவனத்திரு மேனியு மாடிட வாடுக செங்கீரை
ஆதிவ யித்திய நாதபு ரிக்குக னாடுக செங்கீரை. (6)

என்பனவும்,

(௨) முகமசைத் தாடுதலென்பதற்கு

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

(1) பரிமளமுறிய வுச்சியின் முச்சிபதிந்தாட......
கருவிளைநாறு குரம்பை ததும்பிய காதுத ழைந்தாடக்
கதிர்வெண் முறுவலரும்ப மலர்ந்திடு கமலத்திருமுகநின்
னருள்விழியொடும் வளர்கருணை பொழிந்திட வாடுகசெங்கீரை.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

(2) ...முத்தமரும்பி யெனக் குறுவேர்வு முகத்திலரும்பியிடப்
புழுதி யளைந்தப சுந்திருமேனிப் பொங்கொளி பொங்கியெழப்
புண்டரி கக்கண்ம லர்ந்தவி ழிக்கடை பொழியருள் கரைபுரள
அழகுக னிந்தமு திர்ந்தவி ளங்கனி யாடுகசெங்கீரை— (7)

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

(3) கார்பூத்த மறுவுண்ட வெண்கதிர்க் கலைமதி கவின்றநின் கமல [வதனம்
காண்டொறுமறுவற்ற மதியீதெனவுட்கவன்றுமுன் னிற்கவஞ்சிப்
பார்பூத்த தென்குளத்தூர்ப் பொங்கர்காவணம் பரியமதிலூழையூடு
பையென நுழைந்தொளித்தோட நிற்பணிய வருபங்கயச்செல்வி முதலோர்
ஏர்பூத்தவங்கை யரவிந்தமலர்கூம்பவ ரிணைவிழிக்குவளை யெல்லாம்
இரும்புனற்றேத்துளி பொடித்துமிழ்ந்தலர வருளெனுமமிழ்த தாரைகான்று
சீர்பூத்த முகமதியமாட வமுதாம்பிகை செங்கீரையாடியருளே
சிற்சபையினெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரையாடி யருளே. (3)

(4) ...திருச்சோமநாதனார் தூமேனி குழைவித்தவை
இக்கரமுமிக்கரமு மித்தனமுமித்தனமு மென்றுயிர்தோழியர்க ளாய்
வத்துமடமாதரார் தம்மைத்தெளித்திடுவ தேய்ப்பமுகமதிய மசையத்
திக்கெட்டுமேத்துங் குளந்தையமுதாம்பிகை செங்கீரையாடி யருளே. (5)

(5) ...வதனத்திங்கண் மிசையாடக் குளந்தையமுதாம்பிகை
செங்கீரையாடியருளே. (2)

என்பனவும்,

(ங) தலைநிமிர்த்து முகமசைந்தாடல் என்பதற்கு

பெரியபுராணம் (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்.)

வருமுறைமைப் பருவத்தின் வளர்புகலிப் பிள்ளையார்
அருமறைகள் தலையெடுப்ப ஆண்டதிரு முடியெடுத்துப்
பெருமழுவர் தொண்டல்லாற் பிறிதிசையோ மென்பார்போற்
றிருமுக மண்டலமசையச் செங்கீரையாடினார். (45)

என்னும் சேக்கிழார் பெருமான் அருளிச்செயலும்,

(ச) இருகைகளையும் நிலத்திலூன்றி, ஒருகாலை மடக்கி, ஒருகால் நிமிர்த்து, இருந்து தலை நிமிர்த்து, முகமசைந்தாடல் எனற்கு

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

(1) உருவமணிச் சிறுதொட்டிலுதைந்து நின் ஒண்பதம் நோவாமே
யொருதாளூன்றி யிருந்திருகையு மொருங்குபதித்து நிமிர்ந்
தருள்புரி திருமுகமசைய வசைந்தினிதாடுக செங்கீரை
ஆதிவயித்திய நாதபுரிக்குக னாடுக செங்கீரை. (8)

2. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

பொருவரிய வண்டப்பரப்பை முழுதாளும் புராதனர்முகத்துவிழியாப்
போந்துலவு நங்கொழுநர் தம்மைத் தடுத்திடர்புரிந்தகைக்கமலநமையும்
பருவாலூறுத்து மென்றஞ்சி மென்குமுதமும் பங்கயமுமொன்றையொன்று
பாதுகாப்பத் துயிலுமென்றர மடந்தையர் பரிந்து கொண்டாடுசீர்த்தி
இருகைமலரும் புவிபதித்தொரு முழந்தாளிருத்தியொரு தாண்மேனிமிர்த்
திந்த்ரதிருவிற்கிடைதொடுத்த வெண்டாரை நிரையேய்ப்பநுதல்வேர்
பொடிப்பத்
திருமுகநிமிர்த்தொரு குளந்தையமுதாம்பிகை செங்கீரையாடியருளே
சிற்சபையில்நெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரையாடியருளே.

3. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

ஒண்கொண்ட பொருவகைத்துலகெலாமுய்ய காறுலகெலாமென் றதிஞ்சொல்
உவந்தேடெடுத்தாணி கொண்டெழு திரண்டுகையும்புவியுறப்பதித்து
வண்கொண்ட வொருதாண்மடித்தூன்றி யொருதாள் வயங்குறவெடுத் தூன்றியொண்
வாய்சுவிச்சுவையொழுக்கறிவிப்பதெனமுதமாட்சிமை யொழுக்கெடுப்ப
வெண்கொண்டநெற்றி நீறிளநிலவு மொண்கா திருங்குழை யிளங்கதிரும்விட்
டெறிப்பவிளமுறுவலுந் தோன்றமலர் திருமுகமெடுத்து வானளவு நோக்கித்
திண்கொண்ட குன்றையம்பதி யருண்மொழித்தேவ செங்கீரையாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டுவேளாளர் குலதிலக செங்கீரையாடியருளே

என்பனவும், சான்றுகளாம்.

இனிச் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் "பொருவரிய" என்று தொடங்கும் செங்கீரைப்பருவச் செய்யுளின் "வாய்புகல்குதலை மழலையென்ன மருவுமொழி யாசையுற்றீர் பயனுறுமென வள்ளான் மறுத்தால் வார்த்தைப்பயன் கொளவலோம்" என்ற தொடரை நோக்கின், இதுகாறும் மறுக்கப்பட்ட பொருளைக் கொள்ளல் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் கருத்தாகுமே யென்னின் :—

(1) கிர் என்பது செவ்விய சொல்லின் பரியாயமாகுமே யன்றி நிரம்பாமென் சொல்லின் பரியாயமாகாமையானும், சேக்கிழார் சுவாமிகளின் பலதிறங்களையும் பாராட்டிக் கூறும் நிலைமையில் மழலைச் சொல்லின் கண்ணும் தமக்குள்ள பெருவிருப்பைக் கூறினாரேயன்றிப் பிறிதன்றாகலானும்,

(2) அங்ஙனமாகுமென்பது— "பொன்னணி பாவையொடாடியணைத்துப் பொழுதுகழித்தருளும், அல்லிமலர்க்குழல்வல்லி பராபரையாடுக செங்கீரை" என்ற அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் (7) கொண்டு ஆசிரியர் மாதவச் சிவஞானசுவாமிகள் பாவை

யோடாடலையும் செங்கிரைப் பருவத்தினிலக்கணமாகக் கொண்டருளினர் என்பதுபோல் நகையாடற் பால்தொன்றுமாகலானும், ஆகாதென்க.

இதுகாறுங் கூறியவற்றால் செங்கீரைப் பருவமெனற்கு உண்மைப் பொருளிது வெனத்துணிதல் பெற்றாம்.

உ

கடவுள் துணை.

பண்டைத் தமிழரின் சமயம்.

திரு. ஊ. சா வேங்கடராம ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
கும்பகோணம்.

இத்தலைத் தொடரிலே பயின்றுவரும் 'பண்டு' என்பது மதுரையம்பதியிலே நிலைபெற்றுத் தொடர்ச்சியாகத் தமிழ் ஆராய்ந்து வந்ததாகத் தண்டமிழ் நூல்களின் வாயிலாகச் செவ்வி நின் அறியப்படும் செந்தமிழ்ச் சங்கத்தின் இறுதிக்காலத்துக்கு முற்பட்ட காலத்தை. அஃது இற்றைக்கு ஆயிரத்து எண்ணூற்றுச் சில்லரை யாண்டுகளுக்கு முற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களது இடம்பெற்ற துணிபு.

நமது கருத்துக்குப் பொருந்த அந்தப் 'பண்டு' இன்னும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும். எனெனில், தலையங்கப் பொருள் அத்துணைப் பழங்காலத்தைச் சார்ந்ததாகவே குறிக்கப் படுதலின் என்க.

தமிழர்களது நாகரிக மேம்பாட்டிற்கு வயது கூற முற்பட்டவர் பலராவர். கி. மு. பத்தாயிரத்துக்கு முற்பட்டகாலம் முதல் கி. மு. மூவாயிரம் வரையில் சாதகம் கணிப்பவராக அவர் பல்வேறு வகையினராவர்.

தமிழ் நூல்களாக எண்ணிறந்தன இருந்தன என்பது நூலுரைகளால் அறியப்படுகின்றது. அவற்றுள் ஐம்பெரும் பூதங்களாலும், அறியாமைச் சுற்றத்தாலும் இறந்தன போக எஞ்சியனவும் பல. அவற்றுள்ளும் காலத்தால் முற்பட்டதாகி இன்றளவும் நின்று நிலவிப் பயன்றந்து வருவது தொல்காப்பியம் என்னும் சிறப்புவாய்ந்த ஒல்காப் பெருமையினையுடைய இலக்கண நூலாகும். இதன் காலத்தை இற்றைக்கு மூவாயிரம் யாண்டுகளுக்கு முன்னே வைத்துக்கூறுவது எல்லோருடைய ஒத்த கருத்தாகவும் இருக்கின்றது. தமிழ் நாட்டாருடைய சிறந்த கொள்கைகள் பலவும் தொல்காப்பியத்தால் அறியப்படுகின்றன. அந்த முதன்மைவாய்ந்த 'ஒல்காப் பெருமைத் தொல்காப்பிய'த்திலேயே ஆரியக்கலப்புத் தோன்றிவிட்டது. ஆரியர்களின் கொள்கைகளும் அச்சிறிய நூலிலே இலைமறைகாய் போலச் சேர்ந்து விட்டன என்பது தவறாகாது.

தமிழர்களின் பண்டைச் சிறப்பை நோக்க ஆரியக் கலப்புக்கு முன்னரும் தமிழர்களுக்கெனத் தனித்த சிறப்பான சமயக் கொள்கை இருந்தே இருக்க வேண்டும். ஆதலின் இங்கே நாம் குறிக்கும் 'பண்டு' அந்த ஆரியக் கலப்புத்தோன்றுதற்கு முந்திய காலத்தையே. இம்முறையில் நமது 'பண்டு' தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்ட காலத்தை என்பது. அஃது இற்றைக்கு மூவாயிரத்துச் சில்லறை யாண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர்களாற் கூறப்படும்.

'தமிழர்' என்பது தொல்காப்பியப் பாயிரத்திலே பயின்று வரும் "வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து" என்று ஆசிரியர் பனம்பாரனார் கூறிவைத்த நான்கெல்லைக்கு உட்பட்ட தமிழ் நிலத்திலே நிலைத்திருந்த பண்டைக் குடிமக்களை. இந்த எல்லை வேறு வகையாகவும் கூறப்படும். குமரி என்றது யாறாகவும், மலையாகவும் சிற்சில கருத்து வேறுபாடுகளுடன் ஆராய்ச்சியாளர்களால் உரைக்கப்படும். 'யாறு' எனக் கொள்வதிலும் 'மலை' எனக் கொள்வது சிலநூல் வல்லார் கருத்

தோடு பெரிதும் ஒத்து நிற்கின்றது. வடக்கே இமயம், தெற்கே குமரி, இடையிலே வேங்கடம் என்ற மூன்று மலைகள் இருந்தன என்பதற்கும் பல ஆதாரங்கள் உண்டு. இம்முறையிலே தென்மலை மாத்திரம் இப்பொழுது காணப்படாமையின் 'இருந்ததே இல்லை' என்று சொல்லப்படுவது பொருந்தாததாகும் எனப்படுகிறது. அந்தக் குமரிமலை எக்காரணத்தாலோ அழிந்து போனமையைப் பற்றிப் போலும் 'கடல் மலையாகவும், மலைகடலாகவும் கண்ட சிறப்பினை உடையது தமிழ் நாடு' என்ற புகழ் உண்டாகியதும்! இவையும் தமிழரது பழமையை உணர்த்தும்.

சமயம், மதம், கொள்கை என்பன ஒரு பொருட் சொற்கள். அது மக்களாய்ப் பிறந்தார் தமது உயிர்க்கு உறுதிபயப்பதாக அறிந்து கொண்ட கொள்கை எனப்பகுத்து ஓதப்படும். அதனை அந்தமிலின்பத்து அழிவில் வீட்டினை எய்துதற்கு உரிய வழியாகவும் கூறலாம். மறுமையைப் பற்றிய ஆராய்ச்சி என்றுங் கூறலாம். இதனை மனம், மொழிகளுக்கு எட்டாத நிலைமையைப் பற்றிய ஆராய்ச்சி என்றும் தமிழர் சிறப்பித்துக் கூறுவர்.

இனி, நமது தலையங்கத்திற்குச் சிறப்புக் கொடுக்கத் தொல்காப்பியம் முதலிய தண்டமிழ் நூல்களிலே எங்ஙனம் ஆரியக் கலப்பு அறியப்படுகின்றது என்பதும் நோக்கத்தக்கதே. அவற்றை விதந்து கூறி அவையல்ல தமிழர் சமயம்; தமிழர்களின் சமயம் வேறு என்று கூறுவது சாலச்சிறந்ததாகும். இங்கே சமயத்தோடு தொடர்புடைய கடவுள் வழிபாடு முதலியவற்றைக் கூறுவதும் பொருத்தமானது.

நம்மாலே மேலே குறிப்பிட்ட காலத்திலே இருந்த தமிழ் நூல்களிலே தோன்றிய ஆரியக் கலப்புக்கு அறிகுறியாகப் பல புராணக் கதைகள் காணப்படுகின்றன. பல தெய்வங்களின் பெயர்களும், வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன.

சிவன், மாயோன், வருணன், இந்திரன், துர்க்கை முதலிய தமிழர்க்கல்லாத புதுக் கடவுளர் பெயர்களும் வழங்கி வாராயின-

தெய்வங்களின் பெயரால் பரிபாடல்களும் தோன்றலாயின. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற சாதிப்பாகுபாடுகளும்; பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், துறவு என்ற நிலைகளும் நிலைபெறலாயின. வேள்வி முதலிய வற்றைச்செய்தல், தெய்வங்களுக்குத் திருவுருவங்களை வைத்து வழிபாடியற்றுதல் முதலியனவும் கைகொள்ளப்பட்டன. தீ, நீர் என்ற இவற்றின் இடையே நின்று தவம் இயற்றுதல் முதலியனவும் கைக் கொள்ள பட்டன. வானுலகங்கள், நிரயங்கள் ஒத்துக் கொள்ளப்பட்டன. அவற்றிற்கு இக்காலம் நூல்களிலே அறியப்படும் மதிப்பும் அச்சமும் அக்காலத்தும் பொது மக்களால் அளிக்கப்பட்டு வந்தன. ஒன்றி நோக்க, எக்காரணங் கொண்டோ அல்லது காரணமில்லாமலோ செய்கை பற்றியோ அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பாகுபாடுகளும், இல்லறம், துறவறம் என்ற நிலைகளும் தமிழ் நாட்டிலே தமிழரிடத்திலே மிகப்பழைய காலந் தொட்டே நிலைத்திருக்க வேண்டும் என்பது மாத்திரம் திண்ணமாகக் கருத இடமிருக்கின்றது. இதற்கு அப்பெயர்களெல்லாம் எளிய இனிய செந்தமிழ்ச் சொற்களாக அமைந்திருப்பதும் சான்று பகரும்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"
(தொல்—பொருள்—ரு.)

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோ டாங்கெழு வகை"
(தொல்—பொருள்—எரு.)

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."
(தொல்—பொருள்—௧௯௨.)

"அறுநான் கிரட்டி இளமை நல்யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர்." (திருமுருகு—௧௭௫—௧௮௧.)

"வேற்றுமை தெரிந்த நாற்பால்." (புறம்—௧௮௨.)

"பருதி சூழ்ந்தஇப் பயன்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கில் தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றா தாகலிற்
கைவிட் டனரே காதலர் அதனால்.
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே."
(புறம்—௩௫௮.)

"சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விளங்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெழு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர்." (திருமுருகு—௧௨௬—௧௩௭.)

இவை கூறியவற்றை விளக்கிச் சான்றாகக் கூடியன. இத்தகைய இன்னும் பல உள. இக் கூறியன தமிழர்க்குப் புதியனவே.

நம்மால் குறிக்கப்படும் பண்டைத்தமிழர் இவற்றினும் சிறந்த முறையிலேயே தங்களது சமயக்கொள்கையை ஆராய்ந்து கண்டிருந்தனர். மிகப்பழைய காலத்திலேயே தமிழர்கள் ஐம்பெரும் பூதங்களை வகுத்துக்கொண்டார்கள்.

"நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்." (தொல். பொருள்—கூசரு.)

"மண்டிணிந்த நிலனும்
நில னேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்
கைம்பெரும் பூதம்." (புறம். 2.)

இவை முறையே தொல்காப்பியனாராலும், முரஞ்சியூர் முடிநாகராயராலும் கூறப்பட்டவையாம். இங்ஙனமே வேறு பல இடங்களிலும் தமிழர்கள் ஐம்பெரும் பூதங்களின் உண்மையை ஆராய்ந்திருந்த வரலாறு அறியப்படும். இது வேதமதத்தை ஒத்தது என்பதும் ஈண்டு அறியத்தக்கது.

பலதுறைகளிலும் சிறந்து விளங்கி நனி நாகரிகர்கள் என்று புகழ்பெற்ற காலங்கடந்த தமிழர்களின் பழக்க வழக்கங்களையும், கொள்கைகளையும், அகம், புறம் என்ற இரண்டு சொற்களுள் அடக்கிவிடலாம். ஆனால், அவற்றின் பொருளோ எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பினை உடையதாகிப் பலவாக விரித்துக் கூறப்படுவதாகும். அவற்றுள் இக்காலத்துச் சிறப்பாகக் கூறப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பெரும் பேறுகளும் அடங்கும். அம்முறையில் அகம் இன்பத்தினையும்; புறம் அறம், பொருள்களையும் அடக்கிக் கொண்டன என்பது தொல்லாசிரியர்

களது கருத்தாகும். வீடு 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின் துறவறமாகிய காரண வகையாலே கூறுவதன்றி இலக்கண வகையால் கூற இயலாதது' என்பது தமிழர்களின் தேர்ந்த கருத்து. புறம் என்பதிலே 'வீடு' என்பதும் அடங்கும் என்று கொள்ளலாம். "இம்மையிற் செய்தது மறுமைக்காம்" (புறம்) எனக் கொள்ளும் வேறு கூட்டத்தினரினும் சிறந்தவர்களான பயன் கருதாது தொழிலியற்று பவராகவும் தமிழர்கள் சிறந்து விளங்கி வந்தார்கள்.

பல தெய்வ வணக்கங்களுக்கும், அவ்வாறே பல திறப்பட்ட உருவ வழிபாடுகளுக்கும் கருவியாய வட ஆரியர்களின் வருகைக்கு முன்னர்த் தமிழர்கள் கடவுள் உண்மையிலே பெரிதும் மனம் பற்றியவராயிருந்தார்கள். சூரியன், சந்திரன், தீ, மழை ஆகிய இயற்கைத் தோற்றங்களையே நன்றியறிதற்கு அறிகுறியாக உருவ வழிபாட்டிற்குக் கருவிகளாக அமைத்துக் கொண்டார்கள். இவற்றினும் மேலாகத் தமிழர்கள் "ஒருபற்றுக்கோடுமின்றி அருவாகித்தானே நிற்கும் தத்துவங் கடந்த தனிப்பொருள்" எனப்படும் அக்கடவுளை அருவ வணக்கமாகவே வணங்கி வந்தார்கள். உருவ வழிபாட்டினும் அருவ வழிபாடே தனி சிறந்தது என்பது பல சமயத்தினர்களும் ஒத்துக்கொண்ட உண்மையாகும். பின்னர்த் தகுதிக்குப் பொருந்தத் தம்மால் மிக உயர்வாகக் கருதப்பட்ட அந்தத் தனிப்பொருளைத் தமிழ்ப் பெருங் கடவுளாகிய 'முருகன்' என்றே சிறப்பாகப் போற்றி வந்தனர்.

இவை

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

(தொல். பொருள்-அ.)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் அறியப்படும்.

இச்சூத்திரத்திலே பயின்றுவரும் 'கொடிநிலை' என்பது வெள்ளைமண்டிலமாகிய சூரியனைக் குறிப்பது. 'வள்ளி' என்பது தண் கதிர்மண்டிலமாகிய சந்திரனைக்குறிப்பது. 'கந்தழி' என்பது ஒருபற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருளைக் குறிப்பது. சிலர் கந்தழியை மேகம் என்றும், சிலர் கந்தழியைத் தீ என்றும் கூறுவர். அவர்களது கருத்தை ஒருப்படத்தழுவியே முன்னர்க்கூறப்பட்டது. என்றாலும் நமது பண்டைத் தமிழர்களின் சிறப்பினை நோக்க அச்சிலரது கொள்கையினும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் என்ற அந்தப் பெருந்தவியாளராய பெரியாரது தேர்ந்த கருத்தே பெரிதும் பொருத்தமானது. அவர்களது கருத்து, பற்றற்ற ஒரு பொருளைக் குறிப்பதே கந்தழி என்பது. இங்கே.

"சார்பினுற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைந்நீர் சுடர்."

என்று கந்தழி வாழ்த்திற்கு அச்சிரிய பெருரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோட்பாவும் சேர ஆராயத்தக்கதாகும்.

இத்துணையுங் கூறியவாற்றல் மிகப்பழமையான காலத்திலே சிறந்த மதக்கொள்கையினை உடையவர்களாகத் தமிழ் மக்கள் விளங்கினார்கள் என்பதும், நன்றியறிவால் மிக்க இயற்கைவழி ஒழுகும் பகுத்தறிவிற் சிறந்த சீரியர்கள் என்பதும், 'பற்றற்ற தனிப் பொருளாக ஒன்று உண்டு' என்பதை ஆராய்ந்து அறிந்து கொண்டார்கள் என்பதும், அதனையே முழுமுதற் கடவுளாகப் போற்றி வழிபட்டு வீட்டு நெறியைக் கடைப் பிடித்து வந்தார்கள் என்பதும், பிறவும் ஒரு சிறிது விளக்கப்பட்டனவாம்.

உ
கடவுள் துணை,

ஐயவினாத் தொடர்.

திருவாளர் ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

வற்றல் மரம்.

"அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று." (திருக்குறள்—எஅ)

இக்குறட்பாவிலே பயின்றுவரும் 'வற்றன்மரம்' என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகரால் 'வற்றலாகிய மரம்' என்று பொருள் கூறப்பட்டிருப்பதுடன் விசேட உரையில் 'பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்' என்றுங் கூறப்பட்டுள்ளது. இந்த 'வற்றல்' என்பது இக்காலத்துப் பலராலும் 'உலர்ந்த' என்ற பொருளில் வழங்கப்பட்டு வருவது சரியாகப் பொருந்தவில்லையோ என்பது அடியேனது ஐயப்பாடு. 'வற்றல்' என்பதே 'ஒரு மரத்தின் பெயராக இருக்கலாம்' என்பது அடியேனது கருத்து. 'வற்றல்' ஒரு மரமாகாதா?

பரசிராமர்.

சங்கத் தொகை நூல்களிலே பரசிராமர் வேள்வித்தூண் நட்ட செய்தி அறியப்படுகிறது. பரசிராமர் வேள்விக் கொடையாகக் காசிபரிடம் பூமியைத் தானம் பண்ணி மேற்குக் கடலோரம் சென்று கடற் கிறையிடம் நிலம் வேண்டிப் பெற்ற பின்னர் வேள்விகளைச் செய்தாரா? பிற எச்செயல்களையும் விட்டுத் தவமியற்றிவீடு பெற்றாரா? கடற் கிறையிடம் நிலம் பெற்ற பின்னர்ப் பரசிராமர் தமிழ் நாட்டிற்கு வந்தாரா? பரசிராமர் காலத்திய தமிழ் நாட்டின் மேற் கெல்லைக்கும் இக்காலத் தமிழ் நாட்டின் மேற் கெல்லைக்கும் மாறுபாடு உண்டா? பரசிராமர் செய்த சோழ நாட்டுச் செய்திகள் உபசார வழக்காகக் கேரள நாட்டிற்கும் ஏற்றப்பட்டிருத்தலாகாதா?

௨.

தமிழர் வீரம்.

சாமி. சிதம்பரனார் எழுதியது.

(முன் தொடர்ச்சி.)

இனி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நாற்றிணை நிலங்களின் வீரர்களைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். தமிழ் முதனூல் ஆசிரியராகிய தொல்காப்பியர்,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

(தொல். அகத்திணை. ௫)

என்று கூறுவதனால், மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய நால்வரும் அந்நிலத்திற் பண்டைநாளிற் பெரும்புகழுடனும், வீரத்துடனும் வாழ்ந்து கடவுட்டன்மைபெற்ற வீரர்களென்று ஒருவாறு துணிதற்கிடக்கின்றது. "மாயோன்" என்னுஞ் சொல் மயக்கமென்னுஞ் சொல்லிலிருந்துண்டான தூய தமிழ் மொழியாகும். 'சேயோன்' என்னுஞ் சொல்லும், இளமைத் தன்மையுடையவன் என்ற பொருளுடைய தமிழ் மொழியாகும். "வேந்தன்" என்னுஞ் சொல் தூய தமிழ்மொழி என்பதில் ஐயமுறுவார் ஒருவருமிலர். "வருணன்" என்னுஞ் சொல்லை மட்டிலும் தமிழ்ச்சொல்லெனத் துணிந்து கூறுதற்கில்லை. ஆயினும் மிகப்பழந் தொல்காப்பியத்தின்கட் காணப்படுதலானும், தொன்னிலமாகிய நெய்தல் நிலத்தமிழ் மக்களால் வழங்கப்படுதலானும், இம்மொழியிற் றமிழோசையே விளங்கி

றிற்றலானும் தமிழ்ச்சொல்லென்று துணிதலுங்கூடும். மேற் கூறிய நால்வர்க்கும் ஆண்பாலே உணர்த்தும் அன்விகுதி கொடுத்துக் கூறப்படுதலானும், கடவுள் என்று கூறப்படாமையானும், அவர்கள் நால்வரும் சிறந்த கடவுட்டன்மைபெற்ற வீரர்களாகிய ஆண்மக்களாதல் வேண்டும் என்றெண்ண இடமுண்டு.

உலகத்துமக்களில் உண்மைக் கடவுளை முதலிற் கண்டறிந்தவர்கள் தமிழ் மக்களே யாவர்கள். அதனைக் 'கடவுள்' என்னுந் தனித் தமிழ்ச் சொல்லே விளக்கி நிற்கும். கடவுள் என்பவர், நாம் கூறும் புனைந்துரை வரலாறுகளுக்கும், உருவ வேறுபாடுகளுக்கும், பண்புகளுக்கும் அடங்காது கடந்து நிற்பவர். தமிழ் மக்கள் உண்மைக் கடவுளை யுணர்ந்து வணங்கியதோடன்றி, உலகிற்கு நன்மை பயந்து நிற்கும் இயற்கைப் பொருள்களையும், கடவுள் வடிவாகக் கண்டு தொழுதனர். இதனை ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

> கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.
>
> (தொல். புறத்திணை 33.)

என்ற நூற்பாவால் உணரலாம்.

(இதன் பொருள்) கதிர், தீ, மதி என்று சொல்லப்பட்ட, குற்றம் நீங்கிய சிறப்பினையுடைய, முதன்மையான மூன்றும் கடவுள் வாழ்த்தொடு சேர்த்து எண்ணப்பட்டு வரும்.

கொடிநிலை—உச்சியில் நிற்பது. உச்சியில் நிற்பது வெங்கதிராதலின், கொடி நிலை யென்பது அதனைக் குறித்தது. கந்துஅழி—பற்றுக்கோட்டை அழிப்பது. தான் பிடித்த பொருளை அழிக்குந் தன்மையுடையது தீ யாதலின் கந்தழி யென்பது தீயைக் குறித்து நின்றது. வள்ளி—செழுமையைத் தருவது. வள்—செழுமை. குளிர்ச்சியாகிய செழுமையை யளித்து உலகினரை மகிழச் செய்வதால், வள்ளி, மதியைக்குறித்து நின்றது.

இயற்கை யொளியை யுடைய, கதிர், தீ, இரண்டையும், "கொடிநிலை, கந்தழி" என ஒருசேர முன்னும், கதிரின் உதவியால் ஒளிதரும் மதியை "வள்ளி" என இவற்றின் பின்னும் முறைப்படுத்தி வைத்துக் கூறியுள்ள அருமை மிகவும் பாராட்டத் தக்க தொன்றாகும்.

மேற் கூறியவற்றால் தமிழர்கள், நாற்றிணை நிலத் தெய்வங்களை யன்றியும், கதிர், தீ, மதி இவைகளை யன்றியும் கடவுள் என்னும் பெயருடைய வேறொன்றை வழிபாடு செய்து வந்தனர் என்று தெரிகின்றது. அக்கடவுள் முருகு என்னும் பெயரானும் சுட்டப்படும். 'முருகு' என்பது என்றும் அழியா இளமைத் தன்மை வாய்ந்தது எனப் பொருள்படும் ஓர் தூய தனித் தமிழ்ச் சொல்லாகும். சிவம் என்பதும் அழியா மங்கள முடையது என்று பொருள் தரும் சொல்லாகும். இவ்விரு மொழிகளில் முருகு என்னுஞ் செந்தமிழ் மொழியே கடவுளைக் குறித்து வழங்கிய மிகப்பழஞ் சொல்லாகும். சிவம் என்னுஞ் சொல் பின்னாளிற் றோன்றிய மொழியாகவே யிருத்தல் வேண்டும். முழுமுதற் கடவுளைக் குறிக்கும் முருகு என்னுஞ் சொல்லையும், சிவம் என்னுஞ் சொல்லையும் பிற்காலத்தினர், முருகன், சிவன் என ஆண்பாலாக்கி, அவர்களுக்கு மனைவி மக்களையும் பிணைத்து வைத்து, இல்லற வாழ்க்கையில் ஈடுபடுத்தி, மக்களினும் மிக்க அல்லற்படச் செய்தனர்.

இனி நானிலத்தினராய மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலியவர்கள் அந்நிலங்களிற் பண்டை நாளிலுறைந்த வீரர்கள் என்பதற்குரிய காரணங்களை முறையே கூறிச்செல்வோம்.

முல்லை நிலமக்கள் இஞ்ஞான்றும் கறுப்பண்ணன் என்ற தேவை வழிபாடு செய்கின்றனர். இக்கறுப்பண்ணனே, பண்டைத் தமிழ் முல்லை நிலமக்களால் வழிபட்டுவந்த மாயோனவான். கறுப்பண்ணனைப்பற்றி வழங்கும் வரலாறு, அவன் ஒரு தமிழ்வீரனென்பதை விளக்கி நிற்கும். கறுப்பு நிறமுடைய இவ்வீரனையே பிற்காலத்தினர் திருமாலாக்கியிருத்தல் வேண்டுமென ஊகிக்க

இடமிருக்கின்றது. திருமாலின் நிறமும் கறுப்பு. கறுப்பண்ண சாமியின் நிறமும் கறுப்பு. திருமாலுக்கும் தண்டு வாள் ஆகிய படைகளிருக்கின்றன. கறுப்பண்ணனுக்கும் தண்டு அரிவாள் முதலிய படைகளிருக்கின்றன. காட்டில் வாழ்பவருக்குத் தண்டும் அரிவாளும் இன்றியமையாத படைகளன்றோ? கறுப்பண்ண னுக்கு வழி பாடாற்றுவதும், பண்டைத் தமிழர் வழக்கத்தை யொட்டியே செய்யப்படுகின்றது. பண்டைத் தமிழர்கள் வெங் கள்ளும் ஊனும் விரும்பியுண்டவர்கள். அவர்கள், அவற்றையே தங்கள் முன்னோர்களாகிய வீரர்களுக்கும் வைத்துப் படைப்பார் கள். உயிர்களைப் பலியிட்டும், கள், ஊன் முதலியன கொண்டும் முல்லை நில மக்கள் தங்கள் நிலத்தெய்வத்திற்கு விழாச் செய்தனர். மேற் கூறிய காரணங்களால் கறுப்பண்ணனே முல்லை நிலத் திற்குரிய மாயோன் என்று ஒருவாறு துணியலாம். இக்கறுப் பண்ணன், மிகப் பழங் காலத்தில், முல்லை நிலத்தினர்க்குத் தலை வனாகவிருந்து, பெருநலம் புரிந்து, கடவுள் வழி பாட்டினால் கட வுட்டன்மை பெற்ற வீரனாதல் வேண்டும். "சித்தமலம் அறுவித் துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்று மணிவாசகர் பலமுறை கூறுவதால் மக்கள் கடவுட்டன்மை யெய்துதலை யறி யலாம். கடவுட்டன்மை யடைந்த பெரியார்களை உலக மக்கள் கடவுளாகக்கொண்டு வணங்குவதை, உலகில் எப்பாகத்திலுங் காணலாம்.

இனி, குறிஞ்சி நிலத் தேவாகிய சேயோனைப்பற்றி யாராய் வோம். சேய் என்பது இளமையைக் குறிக்கும் சொல்லாகும். மலைநிலத்து மக்களிற் பண்டைக் காலத்திற் சேயோன் என்னும் பெயருடைய கட்டிளமை வாய்ந்த வீரன் ஒருவனிருந்திருக்க வேண்டும். அவன் குறிஞ்சி நிலமக்களின் தலைவனாகவும் இருந் திருக்கலாம். அவனுடைய பெயர்தான் முருகன் என்பது. முருகு என்னும் கடவுளை வணங்கி அருள் பெற்ற வீரனாதலின் அவன் பெயர் முருகன் என வழங்குவதாயிற்று. பிற்காலத்துப் புனைந்துரையாகிய கந்தபுராணக் கதையை ஊன்றி நோக்குவாரும் முருகனை ஒரு தமிழ் வீரனென்று ஒப்புக்கொள்ள ஒருப்படலாம். குறப்பெண்ணாகிய வள்ளியம்மையை மணந்ததும், சூரன் என்ப

வனுடன் எதிர்த்துப் போர் புரிந்ததும், தனக்குப் பல வீரர்களைத் துணையாகக் கொண்டிருந்ததுமாகிய செயல்கள் முருகன் ஒரு வீரன் என்பதை யுணர்த்தும். கோழியையும், மயிலையும், முறையே கொடியாகவும், ஊர்தியாகவும் கொண்டிருப்பதும், எதிர்த்துவரும் விலங்குகளையும், பகைவர்களையும் கொல்லுதற்காக, வேற்படை, விற்படைகளை வைத்திருப்பதும் முருகன் ஒரு வீரன் என்பதை யுணர்த்தும். இங்ஙனமிருப்பதன்றிக் குறிஞ்சி நில மக்கள் முருகனைத் தங்கள் குலக்கடவுளாகக் கொண்டு வழி பாடாற்றுவதையும், முருகன் தங்கள் குலத்துப் பெண்ணை மணம் புரிந்தானென்று கூறுவதையும், நோக்கும்போது அவன் ஒரு வீரனென்று கொள்ள இடமுண்டு. அன்றியும் திருமுருகாற்றுப்படையிற் கூறப்படும் சிலபகுதிகளை ஆராய்ந்தால், முருகன் குறிஞ்சி நில மன்னனாகிய ஒரு வீரனென்றெண்ண இடந்தருகின்றது. அதனைக் கீழே தருகின்றோம்.

"மாலையை அணிந்த மார்பையுடையவனே! எல்லா நூல் களையுமறிந்த புலவனே! போர்புரிவதில் ஒப்பற்றவனே! போரில் வெற்றி பெறுகின்ற இளமைப்பருவத்தை யுடையவனே! எவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்க்குச் செல்வ மாயிருப்பவனே! அறிவுடையவர்கள் புகழ்ந்து சொல்லும் சொற்களின் கூட்டமாயுள்ளவனே! அழகிய இளம்பெண்கள் பலரை மணந்திருப்பவனே! வீரர்களுக்குள் ஏறுபோன்றவனே! வேல் பொருந்திய நீண்ட கையையுடைய பெருஞ்செல்வனே!* மலையையழித்த குறையாத வெற்றியை யுடையவனே! விண்ணை யளாவிய பெரியமலைகளையுடைய குறிஞ்சிநிலத்தின் தலைவனே! பலரும் புகழ்ந்து சொல்லும் நல்ல சொற்களையுடைய புலவர்

* முருகன் என்னும் வீரன், காடு நிறைந்த மலையொன்றைச் சீர் செய்து வாழ்வதற்குத் தகுதியாக அமைத்துக் கொண்டிருத்தல் வேண்டும். வீரர்களின் செய்கைகளையும், அவர்கள் பெயர்களுடன் சேர்த்து வழங்கு வது பண்டைக்கால வழக்கம். இதனை, சேரமான் கடலோட்டிய வேல் கெழு குட்டுவன், சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, சோழன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னி, தலையானங்கானத் துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலிய பெயர்களாற் காண்க.

களுக்குள் ஏறுபோன்றவனே! பெறுதற்கரிதான முறைமையை யுடைய, பெருமை பொருந்திய பெயராகிய† முருகன் என்னும் பெயருடையவனே! வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுக்கும் பெரும்புகழையுடையவனே! துன்புற்றவர்கள்பால் இரக்கங்காட்டும் சேயே! பெரும்போர்களில் வெற்றிபெற்ற நினது வீரம் விளங்கும் மார்பில் பொன்னணிகளைப் பூண்டவனே! பரிசில் கருதி வந்தவர்களைக் காப்பவனாகவும், பகைவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கின்றவனாகவுமுள்ள பெருமையையுடைய வேளே! பெரியோர்களாற் போற்றப்படும் பெருஞ் சிறப்புப்பெற்ற, கடவுட்டன்மையை யுடையவனே! சூரன் குலத்தைக் கெடுத்த, போரில் மிகுந்த வலிமையினையுடைய மதவலியே! உவமிக்கத் தகுந்த உயர்ந்தவனே!'' என்று திருமுருகாற்றுப்படையிற் கூறப்படுகின்றது. இதனை,

மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக!
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்!
மண்டமர் கடந்த வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்!......

என்னும் அடிகளாற் காணலாம்.

---

† முருகு என்னுங் கடவுட்பெயரை இவ்வீரன் அடைந்திருப்பதைப் பாராட்டிக் கூறுவதை இதனால் அறியலாம்.

மேற்கூறிய திருமுருகாற்றுப்படையின் அடிகளையும், பொருளையும் நோக்கும் போது, முருகன் குறிஞ்சி நிலத்திற் பெரும்புகழுடன் அரசாண்ட ஒரு வீரனென்று எண்ணக்கிடக் கின்றதன்றோ? வீரர்களுக்குச் செய்யும் விழாவைப் போலவே பண்டைநாளில் முருகனுக்கும் விழாவயர்தல் வழக்கமாகும். "வேலன் வெறியாட்டயர்தல்" என்னும் விழா குறிஞ்சி நில மாக்களால் முருகனுக்கு நடத்தப்படுவதாகும். கள்ளுண்டு, வெறித்து, விளையாடுதலுக்கு வெறியாட்டயர்தலென்று பெயர். இதனைக் குறிஞ்சி நிலத்தினர் முருகனுக்குச் செய்யும் சிறப்பான கடமையாகக் கொண்டிருந்தனர்.

அன்றியும் பண்டைத் தமிழ்க்குடிகளில் வேளிர்குடியும் ஒன்றென்பது ஆராய்ச்சி வல்லுநர் கண்டறிந்த உண்மை. முருக னுக்குரிய பெயர்களில் வேள் என்பதும் ஒன்று. இதைக் கொண்டு வேளிர் என்னுந்தமிழ்க்குடியின் முதல்வனாக முருகனைக் கொள்ளலாம். *வேள் என்னும் பெயருடைய முருகன் குடியிற் பிறந்தார்க்கே வேளிர் எனப் பெயர் வழங்கியிருத்தல் கூடும். வேளிர் என்பது குறுநில மன்னரைக் குறிப்பதும் உற்றுநோக்கத் தக்கதாகும்.

ஆகவே மேற்கூறிய காரணங்களால், முருகன் குறிஞ்சி நிலத்திற் பண்டைக் காலத்தில், பெருங்கொடையாளியாகவும், ஒப்பற்ற வீரனாகவும், கட்டுட்டன்மை பெற்றவனாகவும், வாழ்ந்த ஒரு தமிழ் வீரனென்று கொள்ளலாம்.

இனி மருத நிலத்திற்குரிய வேந்தன் என்பவனைப் பற்றி யாராய்வோம். வேந்தன் என்பவனும் மருத நிலமக்களாகிய பண்டைத் தமிழ்க்குடியிற் றோன்றிய தமிழ் வீரனாகவிருத்தல்

---

* குருவென்னும் அரசன் பிறந்த குலத்தைக் குருகுலம் என்பது போலவும், யதுமன்னன் பிறந்த குலத்தை யதுகுலமென்பது போலவும், இரகுவென்னும் மன்னன் பிறந்ததனாலும், இட்சுவாகுவென்னும் மன்னன் பிறந்ததனாலும் முறையே இரகுவமிசம், இட்சுவாகு வமிசம் என்பன போலவும் வேள் பிறந்த குடியை வேளிர்குடியெனக் கூறியிருத்தல் கூடும்.

வேண்டும். பிற்காலத்தினர் வேந்தன் என்ற தமிழ்ப்பெயரை நழுவவிட்டு இந்திரன் என்ற வடமொழிப் பெயரைக்கொண்டனர். அதனால் தமிழ் நாட்டு மருதநிலத்து வீரனாகிய வேந்தனும், வடநாட்டு வீரனாகிய* இந்திரனும் ஒன்றாயினர். ஆதலால் யாமும் வேந்தனை இந்திரனென்ற பெயராலும் குறிப்பிடுகின்றோம். இந்திரனுக்குரிய படை வயிரவாள். மருதநிலம் மிகவும் செழிப்புடைய நிலமாதலின், பிறநிலத்தினர் அனைவரும், அதனைக் கைப்பற்றக் காமுறுதலியற்கை. அதனாற் பிறநிலத்தினர்க்கும் மருத நிலத்தினர்க்கும் அடிக்கடி போர் நிகழும். பண்டை நாளில், போரில் மிகவும் உதவிசெய்யக் கூடியது வாட்படையாதலின், அதனையே மருத நில மன்னன் படைக்கலமாகக் கொண்டிருத்தல் கூடும். மற்றும் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களில் இந்திரனுக்கு விழாவாற்றுஞ் சிறப்பைப் பற்றிக் கூறப்படுகின்றது. இந்திர விழாவும் தமிழர் நாகரீகத்தை யொட்டியே நடைபெற்றதாகக் காண்கின்றோம். அன்றியும், இந்திரனை முழுமுதற் கடவுளாகத் தமிழ் நூல்களில் யாண்டும் கூறப்படவில்லை.

அன்றியும், வடமொழி நூல்களில், நூறு குதிரை வேள்வி செய்தவர் இந்திரபதவியைப் பெற்று இந்திரனாக விளங்கலாமென்று கூறப்படுகின்றது. தமிழ் நூல்களிலோ, மக்களில் அறம்புரிந்த மிக்கோர் இந்திரர் ஆகலாமெனக் கூறப்படுகின்றது. இதனை மணிமேகலையிற் போதரும் ஆ மகன் வரலாற்றாலும்,

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி"

---

* ஆரியர்கள் தென்னாட்டிற் குடிபுகுந்த காலத்தில் அவர்களுக்கும் தமிழர்களுக்கும், நடந்த போர்களில், ஆரியர் பக்கம் நின்று அவர்களுக்கு மிகவும் உதவிபுரிந்தவன் இந்திரன். இவன் செயலை விளக்கும் வணக்கப் பாட்டுக்கள் பல இருக்குவேதத்திற் காணக்கிடக்கின்றன. தமிழர்களை இருக்குவேதத்தில் தாசர்கள் (தஸ்யுக்கள்) என்று கூறப்படுகின்றது. தாசர்கள் என்பதற்கு அடிமைகள் என்பது பொருள்.

என்ற திருக்குறளாலும், இக்குறளுக்கு பரிமேலழகர் எழுதிய "இந்திரன் சான்றென்றது, இவ்வுலகின்கண் மிகத்தவஞ்செய்வாருளனானால், அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான்" என்ற உரையாலும் மக்களே கடவுட்டன்மைபெற்று இந்திரனவர் என்பது தெளியக்கிடக்கின்றது.

அன்றியும் இந்திரகுலத்தினர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் பண்டைத் தமிழ்க்குடியினர் நம் நாட்டிற் பலரிருக்கின்றனர். இவர் கூறுவது உண்மையாயின், இவர்களின் குலமுதல்வன் இந்திரனாகவே யிருத்தல் வேண்டும். அவ்விந்திரன் தமிழ் மருத நில வேந்தனேயாவன். ஆகவே மருத நிலத்தினரால் போற்றப்படும் வேந்தனும், அந்நிலத்திற் பண்டைநாளிற் போற்றிவாரடைந்து, அரசியற்றி, அறமியற்றி இறைவன் அருள்பெற்றுக் கடவுட்டன்மையெய்திய தமிழ் வீரனுவான் என்பதை யறியலாம்.

இனி, பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலத்து வருணனைப் பற்றியாராய்வோம். இந்நாளிலும் கடற்கரைப் பட்டினங்களில் உள்ளவர்கள் வருணனுக்கு வழிபாடு செய்கின்றனர். அவர்கள் வழிபடும் முறை, பண்டைத் தமிழ் மக்கள் வீரக்கடவுளர்க்கு வழிபடும் முறையைப் போலவே காணப்படுகின்றது.

பத்துப்பாட்டில் ஒன்றாகிய பட்டினப்பாலையில்

வலையுணங்கு மணல் முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூதாளத்துத் தண்பூங்கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர்மலைந்தும்

எனவரும் அடிகளால், குறிஞ்சி நில மக்கள் * "மீன்வலையுலரும் வெள்ளிய மணல் பரந்த முற்றத்தின்கண் விழுதையுடைய தாழஞ்

* உயர்திரு. சுவாமி, வேதாசலம் என்னும் மறைமலையடிகளாலியற்றிய பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை.

செடியின் கீழ் வளர்ந்த வெண்கூதாள மலரால் செய்த மாலையை யணிந்தவராய்ச் சினைகொண்ட சுறுமீன் கொம்பைநட்டு அதனையே இருக்குமிடமாக ஏற்றிய, வலிய கடற் றெய்வத்தின் பொருட்டாக, மடலையுடைய தாழைமலரைச் சூடியும்," வருணனுக்கு வழிபாடு செய்யும் வழக்கம் அறியப்படுகின்றது.

சுறுமீன் கொம்பு இப்பொழுதும் நாட்டுப்புறங்களிலுள்ளவர்கள் போர் செய்யப் பயன்படும் வலிய படையாக விளங்குகின்றது. வாள்போன்ற கூரிய பற்களையுடைய அதனையே நெய்தனிலத்தினர் போர்ப்படையாகக் கொண்டிருந்தனர் என்பதில் வியப்பொன்றுமில்லை. அந்நிலத் தலைவனாகிய வருணனுக்கும் அதுவே படையாகும். அந்நிலத்தினர் கடலிற்சென்று மீன்பிடித்து, அதனைக்கொண்டு வாழ்க்கையை நடத்துவோராவர். அந்நிலத்தின் றலைவனாயிருந்த வருணன், நீர்மேற் செல்வதிலும், மீன் பிடிப்பதிலும் மிகத்திறமையுடையனாகவும், அந்நிலத்தினர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்த வீரனாகவும் இருந்திருத்தல் வேண்டும். மற்றும் இறைவனருளெய்திக் கடவுட்டன்மையும் பெற்றவனுவான். அதனால் நெய்தனிலமக்கள் அவனைத் தெய்வமாகக்கொண்டு வழிபாடு செய்வாராயினர். வருணனை யாரும் முழுமுதற் கடவுளாகக் கொண்டதில்லை யென்பதும் ஈண்டு நினைவுகூரத்தக்கதாகும்.

அன்றியும் வருண குலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள், தமிழ் நாட்டிலிருக்கின்றமையானும், அக்குலத்தினர் வருணன் வழியில் வந்தவர்களென்று கொள்ளப்படுதலானும், இதனால் வருணன் ஒரு தமிழ் மகன் என்று கருதவேண்டியிருத்தலானும், வருணன் நெய்தல் நிலத்திலுறைந்த ஒரு தமிழ் வீரனென்றுணரலாம்.

மேலே கூறிப்போந்த காரணங்களால், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச் சொல்லப்படும் நான்கு நிலத் தெய்வதங்களாகிய மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய நால்வரும் தமிழ் வீரர்களென்று ஒருவாறு துணியலாம். 'பிற்காலப்பெரியார்கள் இந்நால்வரில் மாயோனையும், சேயோனையும்

முழுமுதற் கடவுளென்று கருதுவதற்கான நூல்கள் பலவற்றை ஆக்கியிருக்கின்றனர். அவற்றால் அவர்கள், வேந்தன், வருணன் ஆகிய இவ்விருவர்களைக் காட்டிலும் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றனர். * பண்டைக்காலத்தில், தமிழ் மக்கள், இந் நாற்றிசைக் கடவுளரையும், ஏற்றத் தாழ்வில்லாத் தெய்வங்களாகவே வைத்து வணங்கிவந்தனர். இதனை அக்கடவுளர்க் கேற்றும் விழாக்களின் ஒற்றுமையால் அறியலாம். தமிழர்கள் தம்நாட்டு வீரர்களுக்கும், சான்றோர்களுக்கும் கற்புடைப் பெண்டிர்களுக்கும், கல் நாட்டும் வழக்கமுடையவர்களென்பதை முன்னரே கூறினோம். அவ்வழக்கப்படியே, மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய இந்நான்கு வீரத்தமிழ் மக்களும் கடவுளராயினார் என்று கொள்ளலாம். தமிழர்கள் இவர்களை முழுமுதற் கடவுளாகக் கொண்டிலர் என்பதை, முன்னர்க் கூறிய கடவுள் என்னுந் தூய தனித் தமிழ்ச் சொல்லின் பொருளாலும், கோடிநிலை கந்தழி யென்னும் தொல்காப்பிய நூற்பாவாலும் உணரலாம்.

இவ்வாறு, நாலிலத் தெய்வங்களையும் தமிழ் வீரர்களென்று கூறுவது பற்றிய எமது கொள்கையில், பலர் மாறுகொள்ளக் கூடுமென்பதையறிவேம். ஆயினும், "யாருக்கும் தமது எண்ணத்தை வெளியிடும் உரிமை உண்டு" என்ற துணிவைத் துணைக் கொண்டே எமது உளக் கிடக்கையை வெளியிட்டேம். யாமும் எமது கொள்கையை முடிந்த முடிபாகக் கொள்ளவில்லை. ஐயமுடிபாகவே கொண்டிருக்கின்றேம். ஆதலால், அறிஞர்கள்,

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு".

என்ற தமிழ் மறையை நினைவு கூர்ந்து, எமது கொள்கையின் உண்மையை யாராய்ந்து, கொள்ளத்தக்கதாயிற் கொள்ளுமாறும், தள்ளத்தக்கதாயிற் றள்ளுமாறும் வேண்டுகின்றேம்.

---

* நாம் குறிப்பிடும் பண்டைக்காலம், தொல்காப்பியருக்கும் முற்பட்ட காலத்தையே. அதாவது ஏறக்குறைய நாலாயிரத்தைஞ்ஞூறாண்டுகளுக்கு முற்பட்டகாலம்.

இனி, தமிழர்கள் தங்கள் வீட்டுத் தெய்வங்களென்று கொள்ளும் குலதெய்வங்களைப்பற்றிச் சிறிது கூறுகின்றோம். தமிழ்க்குடியினர் ஒவ்வொருவரும் தங்கள் குலக்கடவுளாக ஒவ்வொரு தெய்வங்களை வணங்கி வருகின்றனர். அத்தெய்வங்கள் பெண் தெய்வங்களாகவு மிருக்கின்றன. ஆண் தெய்வங்களாகவு மிருக்கின்றன. தமது இல்லில் மணம் முதலிய சிறப்புக்கள் நடைபெறுதற்கு முன்னர்க் குலதெய்வத்திற்குப் பூசனையாற்றும் வழக்கம், இன்றும் தமிழ்க்குடிகள் ஒவ்வொன்றிலும் நிகழ்ந்து வருகின்றது. இவ்வாறு வணங்கப்படும் கடவுளர்கள் தமிழ்க் குடிகளிற் பண்டைநாளில் வாழ்ந்த, கடவுட்டன்மைபெற்ற, சான்றோராகிய வீரர்களாகவோ, போர்புரிந்த வீரர்களாகவோ நாட்டிற்கு ஊழியம் புரிந்த வீரர்களாகவோ, மக்களுக்கு ஊழியஞ் செய்த வீரர்களாகவோ, பத்தினிப் பெண்டிராகிய வீரர்களாகவோ இருக்கக்கூடுமென்றெண்ணலாம்.

அத்தகைய வீரர்களின் வழித்தோன்றல்கள் ஒவ்வொருவரும், அவர்களைத் தலைமுறை தலைமுறையாக வழிபாடு செய்தனர். அதனால் அவர்களைக் குலதெய்வங்களாகக் கொள்ளப்பட்டது. மேற்கூறிய காரணங்களால் தமிழரின் குலதெய்வங்கள் தமிழ் வீரர்களே யென்பதை யறியலாம். இவையெல்லாம் சிலர்க்குப் புதுமையாகத் தோன்றக்கூடும். ஆனால் ஊன்றி நோக்குவார்க்கு உண்மையென்று விளங்காமற்போகாது.

கோத்திரங் கூறிக்கொள்ளும் வழக்கம் தமிழர்களுக்குள் இல்லையென்பதையும், அவ்வழக்கம் ஆரியர்களுக்குரிய தென்பதையும், அவர்களைப் பார்த்தே தமிழர்களும் கோத்திரம் கூறிக்கொள்ளத் தொடங்கின ரென்பதையும், ஈண்டு நினைவுகூரவேண்டும். ஆரியர்கள் தங்கள் முன்னோர்களாகிய முனிவர் பெயரைக் கோத்திரமாகக் கூறிக்கொள்வது போலவே தமிழர்களும், தங்கள் குலமுன்னோரின் பெயரையே கோத்திரமாகக் கூறிக்கொண்டனர் என்பதைச் சில தமிழ்க்குடியினரின் கோத்திரமும் குலதெய்வமும் ஒன்றாயிருப்பதைக் கொண்டறியலாம். இதனாலும் தமிழர்களின் குலதெய்வங்கள் தமிழ் வீரர்களென்பது அறியப்படும்.

இனி ஒவ்வொரு ஊரிலும் உள்ளவர்களால் ஊர்த்தெய்வங்களென்று விழாச்செய்து வணங்கும் சிறு தெய்வங்களைப்பற்றிச் சிறிது கூறுகின்றோம். வீரன் என்னும் ஒரு தமிழ்த் தெய்வத்தை எல்லாக் கோயில்களிலுங் காணலாம். இவ்வீரன் யார் என்பதை யாராய்வோமாயின் இவன் பண்டைக்காலத்தில் நம் நாட்டிலிருந்த ஒரு தமிழ் வீரனாகவே இருக்கவேண்டும். இன்னும் நொண்டி வீரன், சங்கிலிக்கறுப்பன் முதலிய சிறு தெய்வங்களும், பண்டைத் தமிழ் வீரர்களென்பதை யறியலாம். மதுரை வீரன், காத்தவராயன் முதலிய வீரர்களின் கதையைப் பலரும் அறிவார்கள். இவர்கள் தமிழ் வீரர்களென்பதை மறுப்பார்யாருளர்? இவர்கள் இந்நாளில் தமிழ் மக்களால் கொண்டாடப்பெறும் கடவுளர்களாக விளங்குகின்றனர். இன்னும், சிற்றூர்களிற் காணப்படும் சிறு தெய்வங்களைப்பற்றி அவ்வூரினர் கூறும் வரலாறுகளைக் கேட்டறிவோமாயின், சிறு தெய்வங்கள் யாவும் தமிழ் நாட்டு வீரர்களே யென்பதில் ஐயமுறமாட்டோம். இங்ஙனமே, மாரியம்மன், பிடாரியம்மன், அங்காளம்மன், பேச்சியாயி முதலியவர்களும், தமிழ்நாட்டுப் பத்தினிப்பெண்டிரவர். இத்தெய்வங்களெல்லாம் தமிழ் மக்களின் குலதெய்வங்களாகவிருத்தலும், இவர்கள் தமிழ் வீரர்களென்பதைக் காட்டும். இப்பொழுதும் ஒருவர் இறக்கும்போது அவர்க்கு விருப்பமான பொருளைக் கொடுக்கும் வழக்கமிருக்கின்றது. *இறந்தபின்னும், ஆண்டுதோறும், இறந்தவர்களுக்கு விருப்பமான பொருள்களை வைத்துப்படைப்பதும், அதனை மற்றவர்களுக்கு வழங்குவதும் பண்டைத்தமிழர் வழக்கம். அவ்வழக்கத்தை யொட்டியே சிறு தேவர்கட்கு விழாவெடுக்குங் காலத்தில் ஆடு, கோழிகள், முதலிய பொருள்களைப் படைக்கின்றனர். இவ்வழக்கம் பண்டு

---

* இதனால் இறந்தவர்களுக்காகத் திதிகொடுக்கும் இக்காலத்திய வழக்கம் பண்டைக்காலத்தில் இல்லையென்பதையும், இறந்தவர்களுக்கு விருப்பமான உணவுகளை வினைச் சுற்றத்தோடும், ஏழையரோடும் கலந்துண்ணுதலே பண்டைத் தமிழர் இறந்தவர்கள் பொருட்டுச்செய்யும் வழக்கம் என்பதையு மறியலாம்.

முதல் இன்றுவரை நடந்து வருகிறது. பண்டைத் தமிழ் வீரர்கள் விரும்பியுண்டவை கள்ளும் ஊனும் ஆதலின் பின்னோர் அவற்றையே அவர்களுக்குப் படைப்பாராயினர்.

மற்றும் நாட்டின் மீதும், அரசன் மீதும் அன்புடைய தமிழ் வீரர்கள், தங்கள் அரசனுக்குப் போர் நேர்ந்துழி, அரசன் வெற்றிபெற வேண்டுமென நோன்பிருந்து, காளி கோயிலுக்குச் சென்று, கோயிலுக்கு எதிரிலுள்ள மரத்தில் தமது தலைமயிரை முடிந்து தொங்கிக்கொண்டு, தமது கழுத்தைத் தாமே அறுத்துக் கொள்ளும் வழக்கம் பண்டைத் தமிழர் வழக்கமாகும். இதுவும் தமிழர் வீரத்தைக் காட்டுவதாகும். தமிழ் வீரர்கள் தெய்வங்களாக விளங்கும் பெருமையைப் பெறுவாராயின் தமிழர் வீரத்தின் சிறப்பை எவ்வாறு கூறுவது? பண்டைத் தமிழ்நாட்டின் பெருமையை என்னென்று கூறுவது? வீரர்களுக்கு உருவச்சிலை செய்து கோயில்கட்டும் வழக்கம் ஒன்றே தமிழ் வீரர்களின் பெருமையையும், தமிழ் மக்களின் செய்ந்நன்றி மறவாச் சீரிய தன்மையையும் விளக்கிநிற்கின்றதன்றோ? இன்னும் தமிழர் வீரத்தைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் கூறலாம். தமிழ் மக்களின் வீரச்சிறப்பை யறிவதற்கு இவ்வளவே யமையுமென விரிவஞ்சி நிறுத்துகின்றோம். இனியேனும் தமிழ்மக்கள், தமிழ் நூல்களாகிய காடுகளிற் புகுந்து, அங்கே மறைந்திருக்கின்ற நமது பண்டைத் தமிழ் வீரர்களைக் கண்டு, அவர்கள் வீரத்திற் பங்கு பெறுமாறு வேண்டுகின்றோம்.

முடிபு.

இக்கட்டுரையில், கொண்ட கொள்கையைக் குறையின்றி முடிக்கும் வல்லன்மையுடைய, தமிழரசர்களாகிய வீரர்களைப் பற்றியும், இரத்தலையே மேற்கொண்டிருப்பினும், தன் மதிப்பிற்கு இழுக்கின்றி வாழ்ந்த புலவர்களாகிய வீரர்களைப்பற்றியும், தம் கொள்கையினின்று எட்டுணையும் மாறுபடாத மனவுறுதி கொண்ட நாயன்மார், ஆழ்வார் முதலிய அடியார்களின் வீரத்தைப் பற்றியும், தன்னைத்தான் காத்துக்கொள்ளும் ஆற்றலமைந்த

மறக்குடிப் பெண்டிர்களாகிய வீரமகளிரைப்பற்றியும், வீரர்களுக்கும், சான்றோர்களுக்கும், பத்தினிப்பெண்டிர்க்கும் உருவச்சிலை செய்து நட்டுக் கடவுளாக வழிபடும் வழக்கம் பண்டை நாளிலிருந்த தென்பதைப் பற்றியும், நாட்டினைத் தெய்வதங்களாகிய வீரர்களைப்பற்றியும், தமிழ்க்குடிகளின் குலதெய்வங்களாகிய வீரர்களைப்பற்றியும், ஊர்ச் சிறு தெய்வங்களாகிய வீரர்களைப் பற்றியும் சிற்சில கூறினோம். இவற்றால் தமிழர் வீரத்தின் உயர்வும், தமிழர்கள் முழுமுதற்கடவுளைத் தனியாக வணங்கி வந்த உயரிய கொள்கையும் ஒருவாறு விளங்கக் கூடுமென்று நம்புகின்றோம்.

வீரத்தமிழ்மக்களே! நாம் இனியேனும் நமது பண்டைப் பெருமையை நினைவுகூர்ந்து முன்னேற்றமடைய முயல்வோமாக. நம் தமிழ் மக்களனைவரும், நமது முன்னோரின் வீரத்தன்மையை யுணருமாறு, ஒவ்வொரு வீரர்களைப்பற்றியும் சிறு சிறு சுவடிக ளெழுதி வெளியிடவேண்டும். காலம் வாய்க்கும்போது தமிழ் மக்கள் கூட்டங்களில் நம் முன்னோரின் பெருமையைக் கூறியும் தமிழ் மக்களைத் தன் மதிப்புடையவர்களாகச் செய்தல் வேண்டும். நமது முன்னோர்கள், தமக்கும், நாட்டிற்கும் நலம்புரிந்த வீரர்களுக்கு உருவச்சிலைகள் செய்துவைத்து வழிபாடாற்றியது போல, நாமும் நமது பண்டைத் தமிழ்ப் பெரியார்களுக்கும், நாட்டுத்தொண்டு, மக்கள் ஊழியம் புரிகின்ற தமிழ் வீரர்களுக்கும் நினைவுக் குறிகள் நாட்டி நமது நன்றியறிவைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். நாமும் நமது முன்னோர்களாகிய வீரர்களைப் போலவே, உள்ளதை உள்ளபடி கூறும் வீரர்களாகவும், கொண்ட கொள்கையை விடாது முடிக்கும் வீரர்களாகவும், தன்மதிப்புடைய வீரர்களாகவும் ஆக முற்படுமாறு வேண்டிக் கொண்டு இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

தமிழர் வீரம் தழைத்தோங்குக.

உ

பண்டைத் தமிழர் அரசியல் நிலை.

திருவாளர். K, சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், B.A.,

கும்பகோணம்.

திருநலங்கனிந்து தமிழ்மணங்கமழும் நம் தமிழகத்தே இறைமை யென்னும் முறைமையினை வழாது ஆவினிற்காகத் தம் திருமகனாரைக் கொன்றும், புறவினுக்காகத் தலைப்புகுந்த மன்னரே போன்று மன்னுயிரைத் தன்னுயிரெனக்காத்துங் கடற் படைக்கும் தரைப்படைக்கும் அதிபராய் அடையாரின் வலி தொலைத்தும் நலிந்தோர்க்கு அருள் சுரந்தும், மறை வளரவும், ஒழுக்கம் பெருகவும், தவம் மிகவும், கடவுளன்பு சிறக்கவும், அலர் மகளும் கலைமகளும் ஒருங்கே கூடி விளையாடவும், தமிழகத்தினை ஆறலைகள்வராலும், பகைவர்களாலும், விலங்குகளினாலும் தீங்குருவண்ணம் உயர் மாயாப்புகழ் நிறைந்தும், சிறந்த பண்பும், அன்பும் அறிவும் செறிவும் நிரம்பியும்,

"ஞாயிற்றன்ன வெந்திறலாண்மையுந்-திங்களன்ன தண்பெருஞ்சாயலும்-வானத்தன்ன வண்மையுமூன்றும்" உடையராகி வீயாத் திருவின் விறல்கெழு தானையுடைய மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள், 'பசியும் பிணியும் பகையு நீங்கி-வசியும் வளனும் சுரக்க', 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும் — இயற்கையல்லன செயற்கையிற் றோன்றினுங்— காவலர்ப்பழிக்கு மிக்கண்ணகன்ஞால' மெனவோர்ந்து

'ஊற்றம் பிறழியாது
பிறர்கூறிய மொழிதெரியா
ஞாயிற்றெல்லை யாள்வினைக்குதவி
பிறவி யெல்லை வருவது நாடி.' யும்
'பொதுமையாளர் பொருமொழி கொள்ளாது
பகடுபுறந்தரு நர்பாரமோம்பி' [புறம் 35.]

குடிகளுக்குப் பல்லுதவி புரிந்து வந்தனர்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழகத்தேயுள்ள சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்ற மூன்று பிரிவுகளை ஆண்டவரென்றாலும், இம்மூவகைப் பெரும் பிரிவுகளினுள்ளே நெடுமுடி வேந்தர்களது தலைமை பூண்டு அறம் வழுவாது சிற்றரசர்கள் அரசெய்திய பல் உள்நாடுகளு மிருந்தன. இக்குறுநில மன்னர்கள் வீரமும் தனக்கென வாழாப் பெரும் அருளும் பகைவர்களால் அழிக்கவொண்ணாத படைவன்மையும் வாய்ந்தமையால் நெடுமுடி மன்னர்கள் இவர்களைப் போர்த்துணையாகக் கொள்வர். முள்ளூர் மலைக்குத் தலைவனாகிய காரி, பொதிய மலைக்குத் தலைவனாகிய ஆய், குதிரை மலைக்குத் தலைவனாகிய பிட்டன், எருமைநாட்டு மாவிலங்கைத் தலைவனாகிய நல்லியக் கோடன், கோடைமலைக்குத் தலைவனாகிய கடியநெடு வேட்டுவன், கொல்லிமலைக்குத் தலைவனாகிய ஓரி, பறம்புநாட்டிற்குத் தலைவனாகிய பாரி, முதிரமலைக்குத் தலைவனாகிய குமணன், பல்குன்றக்கோட்டத் தலைவனாகிய பெண் கொலைபுரிந்த நன்னன், வேங்கட மலைக்குத் தலைவனாகிய ஆதனுங்கன், நாஞ்சில் மலைக்குத் தலைவனாகிய நாஞ்சில் வள்ளுவன், ஆகிய இவர்கள்தாம் சங்கத்துப் புலமைபெற்ற சான்றோர் பாடல்களால் புலப்படும் குறுநில மன்னர்கள். இவர்கள் நெடுமுடி வேந்தரின் கீழ், அவர்தம் ஆணையினை மீறி நடவாது நெடுமுடி மன்னரே போன்று

'வல்லார்வல்ல கலைஞருக்கும்
மறைநாவலர்க்கும் கடவுளர்க்கும்
இல்லாதவர்க்கும் உள்ளவர்க்கும்
இரந்தோர்தமக்கும் துறந்தவர்க்கும்

சொல்லாதவர்க்கும் சொல்பவர்க்கும்
சூழும்சமயா திபர்களுக்கும்
அல்லாதவர்க்கும்............'

வேண்டியன வரையாது தந்து அவர்கள் பேரின்பமுறத் தம் குறு நாட்டினை இனிதாண்டனர்.

நெடுமுடியுடை மூந்நாட்டுத் தமிழ் மன்னர்கள்,

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு' முடையார்: மேலும்

'வென்றியும் விறலும் விழுத்தகு விஞ்சையும்
ஒன்றிய நண்பு மூக்கமு முயற்சியும்
ஒழுக்க நானித்த உயர்வும் இழுக்கா
அமைச்சி னமைதியு மன்பும் அறனும்
சிறப்புழிச் சிறத்தலும் சிறந்த வாற்றலும்
வெங்கோல் வெறுப்பும் செங்கோற் செல்வமும்
செருக்கிச் செல்லும்' செலவினர்:

மாற்றும் அவர்களது 'அறிவுமீமும் பெருங்கண்ணோட்டம்' முதலிய பிறவும்,

'இருமுந்நீர்க் குட்டமும்
வியன் ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றாங்
கவையளந் தறியினும்'

அளத்தற்கரியன. இன்சொல் அஞ்சாமை, ஈகையறிவூக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை பிறவும் பெற்ற இம் மன்னர்கள் ஓதல், ஈதல், காத்தல், வேட்டல், தண்டஞ்செய்தல் முதலிய ஐவகைத் தொழில்களை நடாத்தும் உரிமையினை உடையராயினர்.

'வெற்றியெல்லாம் வென்றகத்தடக்கிய' தமிழ் மன்னர்கள், 'வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டுங் கருவிகளும், அதற்கேற்ற காலமும், அது செய்யு மாறும் அவ்வாற்றிற் செய்யப் படும் அவ்வரிய வினைதானும் வாய்ப்ப எண்ணவல்ல' தொழிலை யுடைய அமைச்சும்; குன்றாத விளையுளைச்செய்வோரும், அற வோரும், கேடில்லாச் செல்வமுடையோரும், ஒருங்கு வாழ் கின்ற நாடும், 'எந்நாளும் வற்றாத நீரரண், பரந்த நிலவரண், உயர்ந்த மலையரண், அடர்ந்த காட்டரண்' ஆகிய நால் வகை அரண்களும், 'நாட்டானும் ஆறானும் ஆக்கவும் காக்கவும்' பட்டகப்பெரும் பொருளும், 'உறுப்பமைந்த வெல்படையாய யானை முன்னும் நாற்படையும்' 'இயற்கை, செயற்கை யிருவகை யானும் நட்பும்' ஆகிய அரசியலுக் கேற்ற அங்கங்களையும் ஓங்குமாறக் கொண்டு மன்னாட்சி புரிவாராயினர்.

'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையா னரசரு ளேறு' என்பது திருக்குறள்.

'படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய'

என்பது தொல்காப்பியம். [மரபியல் 71.]

பண்டைத் தமிழரசர் செங்கோன்மையின் பரிசினைப் பாண்டி யன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினப் பாவால் நன்கு காணலாகும்.

'........................ பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக' [புறம்]

மணிமேகலை தெய்வம் கொடுங்கோன் மன்னன் அரசு செலுத்தும் நாடு எத்தகையதாய்ப் பாழ்படு மென்பதை உதய குமாரனுக்குக் கூறுவதையும் ஈண்டறிக.

'மன்னவன் மகனே
கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்'. [மணிமேகலை.]

'அலல்வுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழல்'
[கலித்தொகை.]

குடிமக்கள் தங்களைக் காத்தோம்புதல் நிமித்தம் வேற்றரசன் நாடடைந்து அவனது குடிகளாக விரும்பர்: மற்றும் தம் தம் கொடுங்கோன் மன்னனை நீக்க வேற்றரசாது துணையினை விரும்பி, அவனுக்குப் படையும் சேர்ப்பர். ஆகவே செங்கோன் மன்னர், தம் குடிமக்களைக் கண்படு கன்னியின் மான் படுமாறு கலங்கத் துன்புறுத்தி வளங்கெடக் கொடுங்கோன் மன்னன் ஆளும் நாட்டைக் கவரக் கருதுவாரெனில், தமிழ்ச் செங்கோன் மன்னர்கள் போர் புரிவதெல்லாம் கொடுங்கோலரசருடனன்றிப் பிறரோ டன்று. அறப்போரன்றி மறப்போரன்று. ஏனைய நாடு இன்புற வாழவேண்டுமெனவன்றி அதனை அழிக்கவேண்டும் எனக் கருதியன்று. 'மாண்ட-அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பது புறம். மற்றும்

‘எல்லையு மிரவு மெண்ணாய் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலி னல்ல
வில்லவா குப..............................
........................பிறரகன் றலை நாடே [புறம்—7].

‘தாயி றூவாக் குழவி போல
வோவாது கூஉநின் னுடற்றியோர் நாடே’. [புறம்—4].

‘........................பைதன் மாக்களொடு
பெருங் கலக் குற்றன்றாற் றோனே காற்றோ
டெரி நிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவநிற்! சினைஇயோர் நாடே’ [புறம்—41.]

என்பனவற்றை அறிக.

‘மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்...........’

என்பதூஉம், [சிலப்பதிகாரம்.]

கால்பார் கோத்து ஞாலத் தியக்குங்
காவற் சாகா டுகைப்போன் மாணி
னூறின் றாகி யாறினிது படுமே
யுய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே. [புறம்.]

என்பதூஉம்,

‘ஆர்வலஞ் சூழ்ந்த வாழி யலைமலிந் தேனை வல்லா
னோர் நிலத்துரு மாயி வீடுபல் காலஞ் செல்லு
மூர்நில மறிகதேற்றா தாருமேன் முறிந்து வீழுந்
..................வேந்தர் தன்மையு மன்ன தாமே;

ஆகிய அரசாது பழக்கம் பற்றிய மொழிகளை நன்குணர்க.

இது பற்றியன்றே,

> நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
> மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
> அதனால், யானுயி ரென்ப தறிகை
> வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே'

என்றார் மோசி கீரனாரும்.

> 'நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற்
> புல்லுயிர் புகைந்து பொங்கு முழுங்கழ லிலங்கு வாட்கை
> மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
> நல்லுயிர் ஞாலந் தன்னு ளுமவே னம்பி யென்றான்.'

என்று சிவக சிந்தாமணி யுடையாரும் கூறியிருத்தலை நோக்குக.

நெடுமுடி மூவேந்தர்கள் தம்பரந்த நாடுகள் முழுதும் செங்கோன்மையும் நீதி தவறா நெறிமுறைமையும் பரவச் செய்யத் தம் நாடுகளைக் கூற்றங்களாகப் பாகுபடுத்தியும், (மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம்) பின்னர் அக் கூற்றங்களைச் சிற்றூர்களாகவும் (ஈரந்தூர், ஆலந்தூர், எக்கூர், தகடூர், பாமுளூர், மூஞ்சியூர், நீடூர், குன்றூர், குறும்பூர், உறந்தூர், அழுந்தூர், இருப்பையூர்) பிரித்தனர். சேர மன்னர்கள் சேர நாட்டினிற்குத் தலைநகராகிய வஞ்சியினும், சோழ மன்னர்கள் சோழ நாட்டினிற்குத் தலைநகராகிய உறந்தையிலும், ['மறங்கெழு சோழ ருறந்தை யவையத், தறங்கெட வறியா தாங்கு'—நற்றிணை 400] காவிரிப்பூம் பட்டினத்திலும் (சோழன் கரிகாலன் காலம்) காஞ்சிபுரத்திலும், பாண்டிய மன்னர்கள் பாண்டிய நாட்டிற்குத் தலை நகரமாகிய மதுரையிலும் ஐம்பெருங் குழுவினராலாய மந்திரச் சங்கவுதவியினால் அறம் தவறாது அரசு நடத்தினார்கள். ஒவ்வோர் கூற்றங்களில் முடியுடை மன்னர்கள் தம் ஆணையின்படி அரசாட்சி முறைமை வளம் பெருக நடக்குமாறு அறங் கிடந்த நெஞ்சும் மறங் கிடந்த வலியும், தள்ளாவுள்ளமும், உவகையுடன் கலந்த ஊக்கமு முள்ள குறுநில மன்னர்களை ஏற்படுத்தினர். இக் குறுநில மன்னர்கள் சிற்றூர்களிலே நீதிநெறி பிறழாது நடைபெறு

வண்மையும், அரசோச்சும் மேனிலைப் மேற்பார்வை யாளராகவும் விளங்கினர். சிற்றூர்களில் ஊவர்குழுவெனக் கூறப்படும் வழக் குரைக்கும் பெரிய அவைகள் மலிந்திருந்தன. இவ்வறங்கூற வையங்கள் சிற்றூர்களிலேற்படும் வழக்குகளைத் தீர்த்து, செல்வரெனவும் வறியரெனவும் வேற்றுமை சிறிதும் கருதாது செங்கோல் வளையாதொழுகு நீதியினை ஓர்த்துச் செவ்வனே நடத்தி வந்தன.

‘இரத்தி நீடிய வகன்றலை மன்றம்’ [புறம். 34.]
‘பேரிசை மூதூர் மன்றங் கண்டே’ [புறம். 220.]
‘பொதுவிற் றூங்கும் விசையுறு தண்ணுமை’ [புறம். 89.]
‘அரசு கோடினு மறங்கூ றவையத்து’ [சிலம்பு.]
‘மன்றமும் பொதியிலும்’ [திருமுருகாற்றுப்படை.]

இவ்வறங் கூறும் மன்றங்கள் அக்காலத்தே எத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்து குடியரசினைப் பாதுகாத்து வருவந்த தன்மை யினைப் பெற்றதென்பதைக் கீழ்வரும் வரிகள் செவ்வனே காட்டும்.

‘சான்றோ ரிருந்த வவையத் துற்றோ
னாசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி’ [புறம்.—266.]

இவ்வாறாகக் கூற்றங்களிலும், சிற்றூர்களிலும் அரசியல் வேலைக ளெல்லாம் ஒருமை பெற்று விளங்கவே எங்கும் அமைதியும் அற னும் சிறப்புற்றன. செங்கோற் செல்வமும் தண்ணளி செய்யும் வெண் கொற்றக் குடையும் பெருமை பெற்றன. தமிழ் மன்னர் களும் குடிமக்கள் கருத்தினிற்கிசைந்து அவர்களது செல்வாக்கின் நிலைமையையே உயர்வு செய்யப் பேரன்பு பூண்டவர்களாய் நடுநிலை பிறழாது தமிழர் நீதியை வழாதாய் வயங்குமாறு பாதுகாத்துப் பிறநாட்டு மன்னர்களைவிடத் தமிழ் மன்னர்களே பெருங் கண் ணோட்டமுள்ள மன்னர்களென என்றும் புகழப்படுதற்குரிய பெருந்தன்மை வாய்ந்தவரா யிருந்தனர்.

‘யானோ வரசன்? யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுக வென்னாயுள்’

என்றுரைத்து அரியணையிலே வீழ்ந்து புரண்டலறி உயிர்நீத்த ஆரியப் படைகடந்த நெடுஞ்செழிய நீதி மன்னனைப்போன்ற பிறி தொரு மன்னனைப் பிறநாட்டில் நாம் காண்கிலம்.

தமிழ் நெடுமுடி மன்னர்கள் நீதிநூல் முறைமைகளை, நாடு வளம்பெற, மாற்றவும் புதுப்பிக்கவும் முழுப் பொறுப்பு வாய்க்கப் பெற்றவர்களாயிருந்தாலும், அந்நீதிமன்னர்கள் நாட்டின் பொது நன்மைக்குரிய அரசியற் செயல்களைப் பீடுறநடத்திவர ஐம்பெருங் குழுவென்ற அவையாருடன் கலந்து அவர்களது எண்ணத்தினைப் பெறுவார்கள். இவ்வைம்பெருங் குழுவினர்,

'படைவேண்டுழி வாளுதவியும்
வினைவேண்டுழி யறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன்றேஎத்
தசைநகம்படாஅ வாண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை'ச் செல்வர்கள்.

'குடிப்பிறப் புக்கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி யாக்கங்—கெடுக்கு
மழுக்கா றவாவின்மை யிவ்விரண்டோ டெட்டு
மிழுக்கா வகையின்க ணெட்டு'

என்றதினால் இக்குழுவினுள்ளார் நற்குணம் பல ஒருங்கே மல்கி யிருந்த ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் எனக்கோடல் பொருத்தமுடைத்தாம்.

அந்தணர், அமைச்சர், சேனாபதியர், தூதர், ஒற்றர் முதலோராற் கூடப்பெற்றுள்ள ஐம்பெருங்குழுவினரது சால்புடை மையையும், சீரிய குணங்களையும், சான்றோர் தன்மையையும் ஈண்டு உய்த்துணர்வோம். மந்திரச் சங்கத்திலே உறுப்பினராக வாய்ந்த அந்தணர்கள் மறைநவன்று, முத்தீ எற்றி வேள்விகளியற்றி மன்னர்க்கு ஆசிகூறிப் பீடு செய்யும் 'ஆன்ற கேள்வியடங்கிய கொள்கை'யினை யுடைய அறமோம்பும் செல்வர்.

'சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையுங்
குன்றுகுயின் றன்ன வந்தணர் [மதுரைக்காஞ்சி.]

நெறிநுட்பம் அறிவும் வாய்ந்து தம் கருத்தை நிரம்பினிது கூறி அரசர்க்கறிவுறுத்தலும், ஓர் தொழிலியற்றுங்கால் அஃது இடையூறு உறுதபடி தக்கவமயமும் நாடி அதனை முடிக்கும் மனத்திண்மையும், போர் நேர்ந்துழித் தம் பகைமன்னரைச் சார்ந்துள்ள துணைவரிலேயாரை விரும்பவல்ல சூழ்ச்சியினாற் பிரித்து விடுதலும், தம்மைவிட்டுப் பிரிந்தாரைப் பின்னும் தம்முடன் பொருந்தும்படிக்கேற்ற உபாயமும், என்றும் தனக்கு இடுக்கண் நேரினும், சான்றோர் பழிக்கும் வினைகளை நீக்கி அரசர்க்குப் புகழையும் அறத்தையும் பெருகச் செய்யும் தூய எண்ணமுமுடையாரும் மனந்தெளிந்து செய்வதாக எண்ணித் துணிந்த செயல்களைத் தாமதமின்றித் தள்ளா முயற்சியின் பயனறிந்து நிறைவேற்றும் ஆண்மையும் முதலிய அரும் பெருங் குணங்களும், மனத்தினிழுக்கில்லாது பரந்த அறிவும் விழுக்குடிப் பிறந்த ஒழுக்கமும் வாய்ந்தவர் அமைச்சராவர்.

'அச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையமு
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுறு மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்கள்' [மதுரைக் காஞ்சி.]

இவர்கள் மனவலிமையும் கல்வியும் உபாயமும் மருளாறும் உணர்வும்,

'பாஅல்புளிப்பினும் பகலிருளினும்
நாஅல்வேத நெறி திரியினும்'

தம் நிலையினிற்றிரியாப் பேராமையும் பிறவும் பெற்றோர்களானதால் அரசன் 'காவிதிப்'ப் பட்டம் இவர்களுக்குச் சூட்டலுமுண்டு.

'கடுஞ்சினத்த கொல்களிறுங்
கதழ்பரிய கலிமாவு
நெடுங்கொடிய நிமிர்தேரு
நெஞ்சுடைய புகன்மறவருமென' [புறம் 55.]

நான்கு படைகளுக்கும் தனித்தனியே சேனாதிபதித் தலைவர்களுண்டு. 'வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத், தொன்னாரோட்டிய செருப்புகல்' சேனாபதியர், மற்போர், விற்போரில் வல்லாராய் அரசனிடம் 'ஏனாதி' யென்ற பட்டம் பெறுவார்.

இருமன்னர்கள் சந்து செய்யுங்காலத்தோ, பிறநாட்டு மன்னரிடத்தேகி அவருக்கு உற்ற பண்புரைப்போர் தூதர்களாவார்.

'அன்பும் குடிமைப் பிறப்பும் அரசவாம்
பண்பும் அறிவும் பரவுறா வுணர்வும்
தூய்மையும் மன்னவை யஞ்சாத் திண்மையும்
வாய்மையுஞ் சொல்லில் வழுவா வன்மையும்
துணிவும் காலமும் களமுந் துணியுங்
குணமும் மந்திரத் தலைவர் துணைமையும்
உடையனே வினையாள் தூதன்'.

ஒற்றர் அரசர்க்குக் கருவிழிபோல்வர். இவர்கள் வேண்டும் வேற்றுருவமெடுத்து வேறு தேயமடைந்து ஆங்குள்ள மறை பொருள்களைத் தெரிந்துணர்வர். தமிழ் மன்னர்கள் ஒரொற்றாது மாற்றத்தை உறுதியுடைத்தென நம்பாது தனித்தனியே மூவரை

ஒருவனை யொருவ ரறியாதபடி அனுப்பிப் பிறநாட்டகத்தே நடக்கும் மறைகளை உடனுக்குடனே அறிந்து கொள்வார்க ளென்பதைப் பின்வரும் அடிகள் வலியுறுத்துதல் காண்க.

'ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்' [திருக்குறள்.]

'ஒற்றர் தங்களை யொற்றரி னுய்த்தும்' [சீவகசிந்தாமணி.]

'ஒற்றரைத் தூண்டி யன்னோ ருருவலி யுணர்வ ரேனு
மற்று மோரொற்றி னல்லா லன்னது...........
சுற்றுறு மனிக மன்றி யொருபுடை துவன்றிச் சூழும்
பெற்றியு முளதோ வென்றேவேயொரீஇத் தேவர்பின்னும்'
[கந்தபுராணம்.]

இவ்வைம்பெருங் குழுவல்லாது தமிழ் மன்னர்கள், தம் ஆணையை நிறைவேற்றும் கருத்தமைந்த 'ஆணைக்காவற் செங்கோலோர்' என்ற கரணத்தியலவர்; அரசவையில் நடக்கும் சிற்சில சிறந்த நிகழ்ச்சிகளைக் குறித்தும் மற்றும் அரசரது படையெழுச்சிக்காக நல்லோரையும், தண்டயாத்திரை செய்யும் காலத்தையும் நன்குணர்ந்து எடுத்துரைக்கும் கருமவிதிகள்; அரசரது வருவாயினையும், செலவாகும் துறையினையும் உணர்த்துதல் வல்ல கனகச்சுற்றம்; 'கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாளராய' கடைகாப்பாளர்; நடுநிலை திறம்பாது அறம் விளக்கும் நன்மையைக் கடைப்பிடித்து, அரசன் பிறிதொரு நாட்டில் படையெழுச்சிக்குப் போந்தபொழுது கலகமுண்டாகாது தம் நாட்டைக் காக்கும் திறமைவாய்ந்த நகரமாந்தர்; அரசருடன் அறப்போர் புரியும் நிலந்திரைக்குங் கடற்றானைத் தலைவராகிய நளிபடைத்தலைவர்; வரிவயம் பொருத வயக்களிறுடை யானை வீரர்; 'கருத்தும் விரைவு கற்குங்குரத்தாற்' பொடியெழப் புடைக்கும் புரவிகளுடைய 'இவுளிமறவர்' ஆகிய இவர்கள் கூடிய 'எண்பேராயம்' என்ற மற்றோர் அவையும் ஏற்படுத்தினர். தமிழ் மன்னர்கள் அரசியல் வேலைகள் ஆகிய யாவும் இவ்விரு அவை அங்கத்தினருக்கிசைந்தபடியே நடாத்தி அச்சவைகளின்

தலைவர்கள் கூறியாங்கே தாம் அரசியலியற்ற வேண்டுமென்ற கட்டளைக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். இதனால் மக்கட்டொகுதி வேண்டுவனவற்றை நேரேகண்டுணர்ந்து, அரசியலார்க்கு உணர்தற்கேற்ற அறிவும் ஆற்றலுமடைந்தாரை அத்தொகுதியினின்று தேர்ந்து குழுவும் ஆயமுமாக்கப்போந்த குடியாசுரிமையினைக் கருவியாகக்கொண்டு பண்டுதொட்டே தமிழ் மன்னர் அரசியல்புரிந்து வந்தனரென்பது தெள்ளிதிற் பெறும்.

சேரன் செங்குட்டுவ மன்னன் வடக்கே பத்தினிக் கடவுளைப் பிரதிட்டை செய்வான் கல் கொண்டுவரச் சென்ற பொழுதத்து இச் சபையினது பேருதவியை நாடி,* அச்சபையினது அனுமதியின் பேரில் வாழ்த்துப்†பெற்று வடக்கு நோக்கிச் சென்றனென் பதுதுமறிக. மற்றும் ஆண்டு தோறும் நடக்கும் இந்திரவிழாவினைக் குறித்தும் ஐம்பெருங்குழுவினராகிய 'தடுக்கு மந்திரி புரோகிதன்றொழிற்றூதனொற்றன், எடுத்து வந்திருந்த சேனைக்கிறைவன்' முதலோராகுமிவர் கீழ் அலையிறங்கும் பொன்னியிலிருந்து நறும் புனலை உயர்ந்த பொன்னாலாகிய குடத்தில் ஏற்று வாசிதிக்கப்பட்டிருந்தது.

'அரசொடு பட்டவைம் பெருங்குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகை கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்து முன்வைத்தாங்கு'

என்றதனாலும் முன்னர்க் கூறியுள்ள அவ்வாலோசனைச் சங்கத்தினியல்பாலும் நாமறிய வேண்டுவது யாதெனின் இவ் வைம் பெருங்குழு மன்னுயிர் மாட்டுப் போன்பு பூண்டு அறம் சிறிதும்

---

* 'பத்தினிக் கடவுளைப் பாவல் வேண்டுமென
மாலைவெண் குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்கி' [சிலப்பதிகாரம்].

† 'ஐம்பெருங் குழுவு மெண் பேராயமும்
வெம்பரி யானை வேந்தற் கோங்கிய
கரும வினைஞருங் கணக்கியல் வினைஞரு
மண்டினி ஞால மாள்வோன் வாழ்கென' [சிலப்பதிகாரம்].

வழுவாத மன்ற மென்றும், அச்சபையினராகிய பேரறிவு சான்ற பெருந்தகைமையார் அரசியல் நடாத்தும் திறமை பெற்றிருந்த அரசனுக்குப் பொன்னேபோற் போற்றப்படும் அரசியலுக்குரிய நல்லறிவு புகட்டினா ரென்பதும், நாடுவளம் பெறக் கல்வி நலம், செல்வ நலம் ஆகிய இவ்விரு நலங்களையுங் கருத்தனமாகக் கருதிப் பெரிதும் பாராட்டினா ரென்பதும் பிறவுமாகும்.

சரித காலத்தில் மேம்பட்டிருந்த தமிழ் மன்னர்கள் காலத்தில், மன்னர் குடும்ப வாழ்க்கை நலனை நலிவுறாதபடி நல்வினை யிலே செலுத்துதலும், மற்றும் அதனை நல்லோராகிய அசான் (Priest), பெருங்கணி (The Senior Accountant) அறக்களத் தந்தணர் (The Sane Trdges) காவிதி (Tax-Colector) மந்திரக் கணக்கர் (The Secretary of State) ஆகிய இவர்கள் ஓர் குழுக் கூடியிருந்தனர். இந் நன்மொழிச் செல்வர்கள் பின்னர்க் கரும வினைஞர், கணக்கியல் வினைஞர், தரும வினைஞர், தந்திர வினைஞர் எனப் பிறிதொரு நாமம் பெற்றனர்.

'அசான் பெருங்கணி யறக்களத் தந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு' [சிலம்பு.]

'அசான் பெருங்கணி யருந்திற லமைச்சர்
தானைத் தலைவர் தம் மொடு குழீஇ' [சிலம்பு.]

இச் சிறுகுழு பெருங்குழுவி னங்கத்தினருடன் ஒருங்கிருந்து அரசியல் முறைமையைச் சீர்படுத்தி நாடுவளம் பெருகுதற்குரிய இன்றியமையாத வாயகருவிகளைக் கையாண்டு வரும் உரிமையினைப் பெரிது முடைத்து. மற்றும் மன்னர் குலமுறையில் ஒருற்பவம் நேரிடில் இச் சிறுகுழு நிறை மொழியாளர் மாண்ட மன்னரது வழித் தோன்றலையாவது அல்லது மன்னர் குடும்பத்தேயுள்ள பாராளும் தகைமையாளரையாவது தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுத் தலில் காலக்கழிவு ஏற்படின் ஐம்பெருங்குழு பிறிதொரு மன்னர் அரியணையில் ஏறிவீற்றிருக்கும் வரை, அரசியல் வேலைகளைத் தாமே பெறும்.

நடுநிலை பிழையாது நீதி நடாத்துதலின்நிமித்தம், அறங்கூறும் மன்றங்கள் பல தமிழகத்திற் சிறந்து விளங்கி யிருந்தனவென

முன்னர் கூறினோம். இம்மன்றங்களில் நீதி நடாத்தும் பொழுது முழுக்கும் முரசங்களில் ஒன்றாகிய நீதிமுரசம் அரங்கும். முரசுகள் பகைவரது காவற் கருமரத்தால் இருட்சி பொருந்தியதாய்ச் செய்யப்பட்டுள்ளன; மற்றும் 'புலிமருப் பழுக்கக் குருதிப் புலியொடு பொருதுவென்ற, களிறுரா வுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை' யால் போர்க்கப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் மற்றோர் விளைநலம் பொருட்குவையாவையும் கவர்ந்து கொண்ட தாயத்தார், எளைய பிறர் வல் வழக்குகளைப் போன்ற எளிதே உண்மை நியாயத்தை ஆராயப்படும் இருதிறத்தாருடைய சிறு வழக்கையும் உளையா அன்புடன் நன்கு கேட்டும், ஆராய்ந்தும் வழக்கறுத்து நீதி முறைமையினைக் கையாடி வந்தன. சொல் வன்மையினால் மாறுகொள் வழக்குகள் பல மெய்யாதலும், மெய் வழக்குகள் சொல்வன்மையும் எஞ்சாநியம்பும் தன்மையு மில்லாது பொய் படுதலாகிய உண்மை நியாயம் வெளிப்படாத வழக்குகளைத் தமிழ் மன்னர்கள் அமைச்சரோடாராய்ந்து வழக்குகளின் தகைமைக் கேற்றவாறு முறைசெய்து நியாயம் பல முயற்சியின் பயனால் கண்டு பிடித்துப் பொய்வழக்கிரிய, தமிழ்த்தனி நீதியினை நெறி பிறழா வண்ணம் செலுத்தினர்.

'இளமை நாணி முதுமை யெய்தி
யுரைமுடிவு காட்டிய' கரிகாற் சோழ மன்னர்

நீதியினைச் செம்மையாய் நடாத்தின வாலாற்றினைப் பழமொழி வெண்பாவாலறிக.

'உரைமுடிவு காணு னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்'.

இது பற்றியே

'முநியோ-ரவை புகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்'
என்று பொருநாற்றுப் படையிற் கூறியிருத்தலு முணர்க.

தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவிகொக்கொல்வார், கள்வர், அறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவார் முதலோர் கொலைத் தண்டனைக் குரியராவர்.

'ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்' [புறம்].

தக்கதண்டனைகளும் விதிக்கப்பட்டன. பிறருக்கின்னல் விளையாது மறைந்து அவரது பொற்குவைகளைக் கவர்ந்து கொள்ளும் பதகர்களியற்றும் குற்றங்களுக்கு அபராதங்களும் விதிக்கப்பட்டன. தமிழ் மன்னர்கள் குற்றங்களுக்கேற்ற தண்டனைகள் விதித்த தகைமையினையும் அவரது அன்புடன் கலந்த அருளினையும் சுவண்டுவரும் புறப்பாட்டாலறிக.

'நீமெய் கண்ட தீமை காணி
னொப்ப நாடி யத்தக வொறுத்தி
வந்தடி பொருந்தி முந்நை நிற்பிற்
றண்டமுந் தணிதி........................' [புறம் 10]

'................................ஆங்க
முனிவில் முற்றத் தினிதுமுர சியம்பக்
கொடியோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலு
மொடியா முறையின் மடிவிலை யாகி
நல்லதை னலனுந் தீய தன்மையு
மில்லை யென்போர்க் கினனா கிலியர்' [புறம் 29]

'மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசு கெழுதாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்றலு டையோ ராற்றல் போற்றாதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சு புலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே' [புறம் 73]—

மாநகண்டமில் பதிகர்களைத் துன்புறுத்திப் பறித்துண்ணும், கருவுடையுடுத்து, மென்னூலேணியும், சிறுவாளும் கொண்டு கனை இருட் கங்குற் போதில் நிலவும் கருமேனி யுடைய ஆறலை கள்வர்களை கடிதிற் பிடித்துக் கொணரும் ஆற்றலுடை 'யாமங் கொள்பவர்' [புறம் 37] களவுத் தொழில் தமிழகத்தே பெருகா வண்ணம் கள்வர்களை அரசவைக்குக் கொணர்ந்து பெருந் தண்டனை களுக்குட் படுத்துவர். இத்தகை ஊர் காப்பாளரது சிறந்த காவற் றொழிலின் பரிசினை ஈண்டு அறிதற்பாலது.

'இரும் பிடிமே எந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மாறுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கற
னிறங் கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு நுண்டேர்ச்சி
யூர் காப்பாளர்.

என வருவது காண்க.

(தொடரும்)

புகழ்.

திருவாளர் V. சண்முகம் செட்டியார் அவர்கள், தஞ்சை.

இம்மலர்தலையுலகத்து எம்மக்களும் நடத்தற்குரிய சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அவ்வறந்தான் இல்லறம் துறவறம் என இருவகை நிலைகளாகப் பிரித்துக் கூறப்படும். அவற்றுள் முதலாவதாகிய இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்கு, மெய்யறிவு பெற்ற நம் தமிழ் மறையினைச் செய்தருளிய திருவள்ளுவர் முதலானோரால் கூறப்பட்ட நெறிக்கண்நின்று, அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடும் செய்யப்படுவது.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

என்று பெரியார்கள் கூறியிருத்தலின், வாழ்க்கைத் துணைக்குத் தக்கதோர் அணிகலம் எனப்பெறும் நன்மக்களைப் பெறுதலும் இவ்வில்லறத்திற்குச் சிறந்த ஓர் இலக்கணமேயாம். இவ்வணம் இல்லறத்தினை நடாத்துவோர்க்கு இலக்கணமாக நம் பெரியார்கள் பலர் கூறிப்போந்த குணங்களைப் பெற்று இதனை நடத்துபவன் அவற்கு இம்மைப் பயனாகி இவ்வுலகில் நிலைத்து இறவாது நிற்பதாகிய நற்பெயரே புகழ் எனப்படுவது.

இப்புகழினைப் பெற வேட்கையில்லாதார் எவ்வுலகத்தும் ஒருவரும் இலரெனவே துணிந்து கூறலாகும். அறிவிற் சிறந்த நிய பெரியோர் பிறரால் புகழப் படுதலை விரும்பாது, தாங்கள் நல்ல குணங்களை யுடையவராகி நல்ல செயல்களைச் செய்தல் தங்கள்

கடன் எனக்கூறி இயற்றிடினும், அவர்களுக்கு அத்தகைச் செய்கைகளுக்குரிய பயனாகிய புகழ் வந்திடும் என்பதும் பெரியார் கொண்ட கொள்கையே.

'ஒன்றா வுலகத்து உயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்ப தொன்றில்'

என்பதன் பொருளை யுணர்ந்த மக்களும் இப்பொன்றாப் புகழினை வெறுத்திடுவரோ? இப்புகழினை யுடையார் புகழ்வடிவால் இவ்வுலகத்தும், தேவவடிவால் அவ்வுலகத்தும் ஒருசேர நிற்பர் என்பதும், தெய்வ உலகத்துள்ளார் இவர்கள்மீது அன்பு நிறைந்து இவர்களைப் போற்றுவரேயன்றி ஞானிகளைப் பேணார் என்பதும் தேவர்தம் கூற்றன்றோ!

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்று நம் தமிழ்மறை கூறுதலின், யாம் மனிதராய்த் தோன்றியும், இப்புகழினைப் பெறேமாயின் விலங்கினத்தில் வைத் தெண்ணப்படுவோம். அது விருப்பத்தக்கதோ? புகழினையே என்றும் விரும்புவோம். ஆதலின் அப்புகழினை யாம் எவ்வெவ் வகையாற் பெறலாகும் என்பதும் அவ்வகைகளில் எந்நெறியாற் பெறப்படுவது உண்மையாகவே புகழாகும் என்பதும் யாம் தெரிந்து கொள்ளவேண்டும். ஆதலின் சிறிது ஆராய்ந்திடுவம்.

மக்கள் புகழ்பெறும் வழிகளாவன.—

1. அறிவிற் சிறந்த பெரும் மக்களால் உடன்பாடாக ஏற்றுக் கொண்ட குணங்களைக் கைக்கொண்டு, அவர்கள் மறுத்துத் தள்ளிய தீயகுணங்களைக் கைவிடுதல்.

(2) உலகத்துள்ளாரிடத்து ஒவ்வொருவரிடத்தும் நடந்து கொள்ளவேண்டிய முறையிதுவெனப் பெரியார் கூறியவழியில் நடந்து கொள்ளல்.

(3) தாங்கள் கண்ட உண்மையினை மற்றுளோரிடமும் கூறி அவர்களையும் நல்வழிக்குக் கொண்டு வருதல் முதலியனவாம்.

இவைகளில் சான்றோரால் உடன்பாடாகக் கொண்ட குணங்கள் அன்புடைமை, இனியவை கூறல், விருந்தோம்பல், அடக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை, வாய்மை முதலியனவாம்.

அன்பு:—இல்லறத்தினை இனிது நடாத்த வேட்கை கொண்டார்க்கு அன்பு ஒன்று அவர்தம் அகத்து இல்லையேல் அவ்வன்பின்பயனாய்த் தோன்றும் அருளும், இல்லறத்தை இனிது நடத்தலும் இல்லாதாகி விடும். இவ்வன்பும் உயிரானது உடலோடு கூடியிருந்த காலத்தே தான் செய்யப்பெறும். எனவே அவ்வன்பு ஒன்றினையுடைமையா யிருக்கவே இவ்வுயிர் இப்பாரிட உடலினைப் பெற்றிருக்கின்றது எனக் கூறிவிடலாம். இதனையே தான் நம் திருவள்ளுவரும்

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

எனக் கூறிச்சென்றார்.

எலும்பில்லாத சிறிய தசையுடல்களை மட்டும் உடைய சிறு புழுக்கள் மிகக்குளிர்ந்த நிழலிலிருந்து நீங்கி வெயிலிற் கிடக்கின், அவைகள் பகலவனின் கொடுமை தாங்காது கரிந்து போய்விடுமன்றே? அதுபோல் அன்பினைப் பெற்றிடா உயிர்களும் அறத்தின் முன் தம்மியல்பினாலேயே சென்று கெடும் எனக் கூறவும் வேண்டுமோ?

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

என்று நம் திருவள்ளுவர் பெருமான் கூறியிருத்தலையும் நோக்கின் உடலோடு வாழும் உயிர்க்கு உறுதியாவது அன்பே என்பது தெற்றெனப் புலனாகும்.

அன்புடைமை எனப் பொருட்படக் கூறியதனுனே தன்மாட்டு அன்புடைமையும், தன்னைச்சார்ந்த மற்றவர்களிடத்து அன்புடைமையும், தன்னைப்படைத்த கடவுளிடத்து அன்புடைமையும் பெறும். தன்மாட்டு அன்புடைமையாவது, தான் பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றது இவ்வுலகத்து அழியாப் புகழ் பெறுதற்கும் விண்ணுலகத்து நற்பயனைப் பெறுதற்கும் ஆகலின் அவை பெறுதற்குத் துணையாயுள்ள தன்னுடலினை அழியாது பாதுகாத்தற்கு விரும்புதலேயாம். இதனுலன்றே,

> தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
> கைம்புலத்தா றோம்பல் தலை

எனக் கூறியுள்ளார் சான்றோர்.

இரண்டாவதாகத் தன்னைச் சார்ந்துள்ள மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியோரிடத்தும், இல்வாழ்வானுற் பாதுகாக்கப் படவேண்டியவர்களாகிய துறவறத்தன்மையினையுடைய மூவர்களிடத்தும், இவர்களல்லா மற்ற மக்களிடத்தும் காட்டும் அன்பாகும். இவர்களைப் பாதுகாத்தலும் இல்லறத்திற்கு ஓர் இலக்கணமாய் அமைந்திருத்தலின் இவர்களிடத்துக் காட்டும் அன்பும் முதற்றலையாய் வேண்டற்பாலதே. மூன்றுவதாகத் தான் செய்யும் எவ்வகைச் சிறுசெயல்களுக்கும் துணையாய் உருவமற்று நின்று துணைபுரிபவன் கடவுளாதலின் அவனிடத்தும் அன்பு காட்டக் கடமைப்பட்டுளோம்.

புகழைப்பெற விரும்புவோனுக்கு முதலிலே இவ்வன்புடைமையைக் கூறுதல் எற்றுக்கோவெனின், ஐம்பொறிகளாலும் இயற்றும் செயல்கள் யாவற்றிற்கும் இவ்வன்பே தலைமையாயிருத்தலினுலும், அப்பொறிகளிற் றலைமைதாங்கி நிற்பது அன்பு பிறத்தற்கிடமாகிய மனமே யாதலாலும், அன்பு ஒவ்வொரு உயிர்க்கும் உரிய இயற்கைக் குணமே யாதலினுலும் அதனையே ஒருதலையாக வேண்டற்பாற்றெனக் கூறினேம்.

இனியவை கூறல் :—

மெய்யினை யுணர்ந்தவர்களுடைய மெய்ம்மை யுள்ளனவா யிருக்கின்றனவும் மேற்கூறிப்போந்த அன்புடைமையை வெளிப்படுத்துகின்றனவும் ஆன சொற்களே இனிய சொற்களாம். எனவே, உண்மைப் பொருள்களினுடைய இயற்கைத் தன்மைகளை உணராதோர் எதோ பிறிது அன்பின் காரணமாகக் கூறும் இனிமையான சொற்களும் இறுதியிற் பயனை நோக்குங்கால் வன்சொற்களாக முடிந்தாலும் முடியலாம் எனவும், மெய்ம்மை யில்லனவா யுள்ள சொற்களை எவ்வளவு இனிமையாகக் கூறினும் அவைகள் இன்சொற்கள் ஆகா எனவும், தன் மனதிடத்து அகத்துறுப்பாகிய அன்பில்லாது, வெளியிடத்து அன்புடையார்போற் காட்டி, இயற்கையாயில்லாத தன்முயற்சியினாலே இனிமையாகப் பேசிடும் சொற்கள் வன்சொற்களே எனவும் தேர்கின்றோம்.

உண்மையாகவே அன்புடையார் இயல்பாகத் தம்மிடம் தோன்றும் இனிய உண்மைகளை இனிய சொற்களாற் கூறுவரேயன்றி, இயற்கையல்லாத வன்சொற்களாற் கூறிடார். ஒரு சிறுவன் மிக இனிய பழந்தரும் சோலையிடத்துச் சென்றிடின் அவன் மனமானது அங்குள்ள இனியபழங்களைப் பறித்துத் தின்றிட அவாவைப் பெறுமேயன்றி, இனிமையற்ற காய்களைத் தின்றிட அவாவைக் கொள்ளுமோ? அஃதே போல் பின் இனிமையைக் கொடுக்கவல்ல இனியசொற்கள் தம்மகத்திருக்க, பின் தமக்கே துன்பத்தினை விளைக்கக்கூடிய கடுஞ்சொற்களை யாவர்தாம் கூறுவார்? அவ்விதம் அவர்கள் கடுஞ்சொற்களை வழங்குவாராயின் அச்சிறுவன் இனிய பழங்களை விரும்பாது இனிமையற்ற காய்களை அருந்துதலோடு ஒக்கும் அன்றோ?

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்'

என்று மொழி பொய்யாது. ஆதலின், தன்னகத்துள்ள அன்பினைத் தன் முகத்தினிடத்தே தோற்றுவித்து அவ்வன்புடன்

கலந்த இனிய சொற்களை வழங்குதல் ஒருவருக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தலினும் சாலச்சிறந்தது என்பர் பெரியோர். அறமானது கொடுத்தலினால் மட்டும் தோன்றிவிடுவ தன்று. முகமலர்ந்து, இனிது நோக்கி, இனிய சொற்களை வழங்கு மிடத்ததே அறம் எனவும், இன்சொல்லை யுடையார்க்கு யாவரும் நட்பினராய் விடுவாராதலின் எல்லாச் செல்வமும் பெற்றிடுவர் எனவும் பெரியோர் கூறிச் சென்றார்கள். ஆகவே இனிய சொற்களைக் கூறுதலும் அவர்க்கு இன்பமும் புகழும் கொடுத்திடவல்லது என்பது பெற்றாம்.

விருந்தோம்பல் :—தன்னை யாதொருவகையானும் சார்ந்திடாத மக்களை ஓம்புதலாம். தன்னைச் சார்ந்திடாத மக்களை ஓம்புதல் வேண்டும் எனக்கூறவே தன்னைச் சார்ந்தோர்களை ஓம்புதல் வேண்டும் என்பதும் தானே அமையுமன்றோ? ஒருவன் தான் அன்புடையவனா யிருத்தலும், அவ்வன்புடன் கலந்த இனிய சொற்களை யுடையவனா யிருத்தலும் சாலச்சிறந்ததே யெனினும், தன் செய்கைகளிலும் காட்டுதல் வேண்டுமன்றோ? தனியனாய்க் காட்டிடைச் சென்றிடாமல் தன் மனைவி மக்களுடன் இல்லறத்தில் நின்றிருப்பது எற்றுக்கோவெனின், தன்னை நாடிவந்த விருந்தினரை ஓம்புதற்கேயாம். ஏனெனின் ஒருவன் விருந்தோம்புதலைக் கைக்கொள்ளானாயிடின், இல்லிலிருத்தலாலும், பொருள்களைக் காப்பாற்றலாலும் நேர்ந்திடும் துன்பங்களைத் துறந்து காட்டிற்குச் சென்றுவிடுதலே நலமாம்.

‘விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று’

என்ற குறளை நோக்குங்கால் அமுதமே தன்னிடம் இருந்து தான் உண்ணப்போகும் அமயத்து மிக்கப்பசியுடன் ஓர் விருந்தினன் வெளியில் தங்கியிருந்திடின் அவனுடனன்றித் தான் மட்டும் உண்ணலாகாது என்ற ஓர் பொருள் தோன்றிடினும், மற்றும் ஓர் பொருள் கொள்ளலாம் எனவே தோன்றுகின்றது. அஃதாவது, ஒருவன் பல நாட்கள் உணவின்றித் துன்புற்றிருந்து

இறந்து போகும் நிலைமையிலிருக்குங் காலத்தில் தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளற்குப் போதுமான சிறு அளவான உணவு கிடைத்து அதனை உண்ணப்போகுங் காலத்தும் விருந்து வந்ததாகத் தானுண்ணல் வேண்டற்பாலதன்று என்பதேயாம். ஆகவே இல்லறத்தார்க்குக் கூறிய இலக்கணம் வழுவாது நின்றிட விரும்புவார்க்கு விருந்தோம்பல் ஓர் பெருங்குணமாகும்.

விருந்தோம்புவார்க்கு அச்செய்கையினால் இம்மைப் புகழ் உண்டாதலேயன்றிப், பொருள் குறையாமல் மேன்மேலும் வளருவதோடு அவ்விருந்தோம்புவாரின் விளைநிலமும் வித்தின்றித் தானே விளைந்திடும். எனெனின்

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்"

என்று பொய்யா மொழியார் புகன்றதும் பொய்யாமோ?

அடக்கமுடைமை :—

அஃதாவது மனம், வாக்கு, காயம் ஆகிய இம்மூன்றும் தீயவழியிற் செல்லாமல் அடங்குதலுடையனாயிருத்தலாம். இம்மூன்றினையும் அடக்கிவிட வேண்டுமெனவே, அம்மூன்றனையும் யாதொரு தொழிலும் செய்யாது நிறுத்தி விடுதல் என்பது பொருளன்று. மிக்க விரைவாகச் செல்கின்ற ஓர் குதிரையினை யடக்கிவிட வேண்டுமென்றிடின், அதனை ஓடாது நிறுத்திவிட்டால் அக்குதிரையால் உண்டாகும் பயனை யாம் பெறாது போய் விடுவோம். பின்யாது செய்யவேண்டுமெனின், அக்குதிரையைத் தான் எண்ணியபடி ஓடவிடாது இழுத்துப்பிடித்து நம் விருப்பப் படி நடச்செய்தல் வேண்டும். அவ்விதம் செய்வோமாயின் அக்குதிரையால் நமக்கு யாதொரு துன்பமும் நேராதிருப்பதோடு அக்குதிரையாலாய பயனும் நமக்கு உண்டாகும். அஃதேபோல் ஓர் கண்ணிமைப் பொழுதில் ஆயிரக்கணக்கான எண்ணங்களைத் தோற்றி யழிக்கவல்ல நம் மனதை அடக்கிக் கொள்ளவேண்டுமென்றால், அம்மனது யாதொரு எண்ணத்தையும் உண்டாக்காது

அடக்கிவிட வேண்டும் என்பது பொருளன்று. பின் யாதெனின், தன்னை எக்காலும் சாருந்தன்மையற்ற பொருள்கள் மீது மிக்க ஆசை கொள்ளுதலும் அவ்விதம் தான் கொண்ட ஆசை முடிவு பெருதாயின் சினங்கொள்ளுதலும், முதலாக ஒன்றன்பின் ஒன்ருக வருகின்ற தீய எண்ணங்களைக் கொள்ளாது நல்ல எண்ணங்களைக் கொள்ளும் வழியிலேயே அதனைச் செலுத்தல் வேண்டும் என்பதேயாம். அவ்விதம் அதனைச் செய்யாமல் 'அம்மனமானது யாதொருவித எண்ணத்தையும் கொள்ளாமல் அதனை அடக்கி விடுதும்' என்றிடின் அது முடிவுபெருச் செயலேயாம். அன்றியும் அதனை அடக்கிவிடவேண்டும் என்பது நம்மைப் படைத்துள்ள கடவுளுடைய எண்ணமானுல், இம் மனத்தையும் அம்மனத்திடத்து எண்ணங்களை யுண்டாக்கும் தன்மையினையும் அவர் யாது காரணங்கொண்டு படைத்தல் வேண்டும்? நல்ல குதிரைகளை வாங்கி விட்டிறுட் கட்டியிருத்தலைவிட அக்குதிரையினை வாங்காதிருப்பதே சாலச் சிறந்ததன்ரு? ஆதலின் கடவுளானவர் இவ்வுலகத்துப் பயன்படாதனவாக யாதொன்றினையும் படைத்திலர் என்பது உறுதி. நமது மனமும் யாதொரு செயலும் இயற்ருது அடங்கிக் கிடத்தற்காகவே உண்டாக்கப்பட்டதன்று என்பது திண்ணம். ஆகவே மனத்தை யடக்குதல் என்பதற்கு மனதில் கெட்ட எண்ணங்கள் புகுந்திடாமல் நல்லெண்ணங்களைக் கொள்ளும்படி செய்தல் என்பதே தக்கபொருளாம்.

அவ்வண்ணமாயின், இம்மனத்தைக் காத்திடாவிடில் யாது நேரிடும் எனின், மனதில் தோன்றிடும் நல்ல எண்ணங்களோ கெட்ட எண்ணங்களோ நம் மனத்தைவிட்டகன்றதாயினும், அவைகள் வெளிக்காற்றிலே பரவியிருந்து, பின் நம்மையே தாக்கிடும் எனத் தற்காலத்து உலக இயற்கையின் தன்மைகளையுணர்ந்த மேல் நாட்டுப் பெரியார் சிலர் கண்டுபிடித்திருக்கின்றனர். நாம் ஏதோ சில கெட்ட எண்ணங்களைப் படைத்துப் பின் அவைகளை மறந்து விடினும் அவைகள் நமக்குத் துன்பத்தினை உண்டாக்கியே செல்லும் என்பது உறுதியே. ஆதலின் மனத்தினை ஒரு கணமும் மறவாமல் நல்லெண்ணங்களை உண்டாக்குதலிலே செலுத்த முயலுதல் வேண்டும்.

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து."

என்று நம் தேவர் கூறியவண்ணம், நமது மனத்திடத்துக் குடிகொண்டுள்ள சினத்தைத் தோன்றிடாது செய்து மெய் யறிவினை யுடையவனாகி அடக்கத்தினைக் கொண்டிருப்பானாயின் அறக்கடவுள் தானே சென்று அவனை அடைவனன்றோ?

நாக்கு அடக்கம் :—மனத்தினிடத்துத் தோன்றுகின்ற எண்ணங்கள் யாவும் உருவமடைந்து வெளிவருவது நாக்கின் துணையால், ஆதலின்,

"யாகாவா ராயினு நாகாக்கக் காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

என்று நம் செந்நாப்புலவர் கூறியாங்கு எவ்விடத்தும், தன் மனதிற் றோன்றிய ஓர் பொருளைப் பிறர்க்கு எடுத்துக் கூறத் தொடங்குமுன், ஆராய்ச்சி செய்திடல் வேண்டும். அவ்விதம் செய்து தான் கூறப்போவது யாவர்க்கும் துன்பத்தினை விளைக்கக் கூடியதோ என்றும், அஃது உண்மையாக இருக்குமா என்றும் தெரிந்து கொண்டு இனிமையுடன் சுருக்கமாகக் கூறவேண்டும். அவ்விதமின்றி மிகையாகக் கூறிடின் குற்றம் விளைத்தலும் நேர்ந் திடும். ஆகவே சுருங்கச்சொல்லி விளங்க வைத்தலே அழகெனப் பெரியோர்கள் கூறிப்போயினர்.

'நாகாக்க' என்பதனால் எப்பொழுதும் நாம் யாதொன்றும் வாய்திறந்து பேசுதலே கூடாது என்றிடின் அஃது குற்றமாம். பின்யாது கொண்டு இவ்வாறு கூறினாரோவெனில், பிறர்க்குத் துன்பத்தைத் தரக் கூடியதும், உண்மையல்லாததுமான சொற் களைக் கூறாது அடக்கவேயாம். எனவே உண்மையான சொற் களைக் கூறுவதில் யாம் அஞ்சவேண்டுவதில்லை.

மெய்யடக்கம் :—மனதில் நினைக்கும் எண்ணங்களும் நாவாற் கூறிவிடும் சொற்களும் குற்ற மற்றதாயிருப்பதோடு, நம் மெய்யி னுடைய மற்றைய உறுப்புக்களும் குற்றமற்ற தொழில்களையே இயற்றிடுதல் வேண்டும்.

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து."

என்ற திருக்குறளே உடலினடக்கம் கூறுகின்றது. ஆமை தன்னகத்து அடக்கிக் கொள்ளும் ஐந்துறுப்புக்களைப் போல, மானிடவடிவந் தாங்கிய ஒவ்வொருவரும் அடக்கிக்கொள்ள வேண்டியன, மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பொறிகள் ஐந்துமேயாம். அவைகளை அடக்கலாவது, இப்பொறிகள் ஐந்தின் வழிகளாகவும் நுகர்ந்திடும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற இவ்வைந்தின் வகைதெரிந்து, இவைகளிலே அதிகப் பற்றினைச் செலுத்தாது, அடக்கிக் கொள்ளுதலாம். உலகத்தில் தோன்றிய பொருள்கள் யாவற்றினும் இவ்வைந்து உறுப்புக்களும் இச்சை கொள்ளக் கூடியன. அவைகள் இச்சித்த வழியே யாமும் அவைகளை விட்டிடின் இறுதியிற் றீராத் துன்பமே நேர்ந்திடும். பின்னும், தாய் தந்தையர்க்குத் தம் சிறுவயதிற் கட்டுப்படாத இளஞ்சிறுவர்கள், தம் வயதுக் காலத்திலும் ஒருவருக்குங் கட்டுப்படாராய்த் தீயவழியிலேயே சென்றிடுவர் என்பது உண்மையன்றோ? அஃதே போல் இப்பொறிகளையும், சிறுபொருள்களிலெல்லாம் இச்சை கொள்ளும் காலத்திலேயே யடக்கி நம் வயப்படுத்தாவிடின், காலஞ் செல்லச் செல்லத் தீயபொருள்கள் யாவற்றினும் தம்மிச்சையைச் செலுத்தித் தீராத் துன்பத்தினை விளைவிக்கும். அப்பொழுது அவைகளை நம்மால் அடக்கச் சிறிதும் முடியாது. இவ்வைந்து பொறிகளையும் தம் வயப்படுத்தி அடக்க முடியாமல் அரிய நரகத்தினையும் இகழ்ச்சியினையும் பெற்றோர் பலராவர். ஆதலின் புகழினையும் இன்பத்தினையும் பெற விரும்புவோன் இவ்வடக்கத்தினைக் கைக்கொள்ள வேண்டும் எனக் கூறவும் வேண்டுமோ?

பொறையுடைமை— பொறையுடைமை யாவது காரணம் பற்றியாதல் மடமையானாதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவிடத்தாயும் அதனை அவர்கட் செய்யாது பொறுத்தலையுடையராதலாம். அஃதாவது ஒருவன் நன்னெறியினின்றும் தவறித் தீயவழியிற் செல்லுதலை நோக்கித் தன் நோயுடைக் குழவிக்குத்

தாய் மருந்தூட்டுதல் போல் அறிவுற்ற பெரியார் எவையேனும் சிறிது கடிந்த சொற்களைக் கூறி அவனை நன்னெறிக்குத் திருப்ப முயன்ற காரணமாகவாவது, அன்றி யாதாமொரு காரணமும் இன்றியாவது அக்கீழ் மகன் அதன் பயனையுணராது அவர்மீது சீற்றங்கொண்டு அவர்க்கு இடுக்கண் இயற்றிட முயன்றானாயினும் அப்பெரியார்,

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை."

என்பதனையுணர்ந்து தாமும் அவர்க்கு இடையூறு செய்ய முயலாதிருத்தல் வேண்டும் என்பதாம். ஏனெனின், தன்னை யகழ்வாரை வீழாமற் றாங்கும் நிலம் போற் றம்மைக் கொலை செய்வதை யொத்த குற்றஞ் செய்தாரையும், பொறுப்பதோடன்றி அவர்களைக் காப்பதுந் தலையாய அறமன்றோ?

அவ்விதமன்றித் தனக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்திடுபவர்க்கு அவ்வொரு பகல் மட்டும் 'நமக்கு இடையூறு இயற்றியவனுக்குத் தக்க தண்டனை கொடுத்து விட்டோம்' என்ற இன்பம் உண்டாகலாம். ஏனெனின் அக்கீழ் மகன் மறுநாள் முன்னிருந்ததினும் மிக்க சீற்றங்கொண்டு அவர்க்கு இடையூறு இயற்ற முற்படுவான் என்பதிலும் ஐயம் உளதோ? மற்று அதனைப் பொறுத்துக் கொண்டவர்க்கோ இவ்வுலகம் அழியுமளவும் புகழ் உண்டாகும். இதனையே தான்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."

எனத் தமிழ் மறை கூறுகின்றது.

ஒருவன் தனக்கு இடையூறு இயற்றுதலோ அன்றிப் பழித்திடுதலோ செய்திடின் அதனையடைந்தவன் மற்றவனுக்கும் இடையூறு இயற்றவோ, தண்டம் கொடுத்திடவோ முயன்றிடுதல் ஏற்றதோ வென உற்றுநோக்கின், அவன் அப்பகைவனை

வெல்லுதல் வேண்டியும், பின்னும் அவன் தனக்கு இடையூறு இயற்றுதிருக்க வேண்டியுமேயாம் என்பது தெற்றெனப்புலப் படும். ஆனால் அஃது அவர்கள் எண்ணியாங்கு முடிதலில்லாது, அப்பகைவன் தான் வலியற்றவனா யிருப்பின் மறைந்து நின்றா யினும் மிக்க இடையூறுகளைச் செய்திடமுயல்வன். இவர் களுடைய கருத்தோ அவனிடமுள்ள பகைமைத் தன்மையினை ஒழிக்க வேண்டும் என்பதே யன்றி வேறன்று. அவ்வாறாயின் அவர்களின் பகைத்தலுக்குக் காரணமாக உள்ள குணத்தினையே யாற்றியிடுதல் வேண்டும். அவன் நம்மீது சினங் கொண்டிருப் பின் நாம் அவனிடம் அன்பினைக்காட்டியும், அவன் நம்மைப் பழித்தலுக்கு மாறாக அவனிடம் உள்ள எவையேனும் நற்குணங் களை எடுத்துப் புகழ்ந்தும், அவன் இயற்றுமிடையூற்றிற்கு நாம் நன்மை புரிந்தும் வந்திடின், அவன் எவ்வளவு அறிவிலியாயினும் சின்னாட்களிற் றன் குற்றத்தை யுணர்ந்து, நம்முடன் நட்புக் கொள்ளவும் முயன்றிடுவன். ஆகவே பகைவன் ஒழிந்தனன்; ஓர் நண்பனும் சார்ந்தனன் அன்றோ? இதுவே பகைவரை அழிக்கத்தக்க நெறியாம்.

உலகத்துள்ளார் யாவரும் எவரிடமும் அடிமைப் படுதலை விரும்பார். ஆனால் சினம் என்ற ஓர் குணத்திற்குமட்டும் தாங்கள் அடிமையாக இருக்க விரும்புகின்றனர் போலும்! மிக்க அறி வுள்ளவர்களே யாயினும், ஒருவன் தம்மை அறியாது மிகை யாகக் கூறிவிடின், அவர்களும் உடனே சீற்றத்திற்கு அடிமை யாகி, அஃது விரும்பிய வண்ணம் அவனைத் தாமும் பழிக்கவோ, அன்றித் தண்டம் இயற்றியிடவோ முயல்கின்றனர். அவ்வித மாயின் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறுபாடு யாதோ அறி கிலம். மற்று யாது செய்தல் வேண்டுமோ வெனின், சினம் என்ற குணத்திற்குத் தாம் அடிமையாகாது, சினத்தைத் தமக்கு அடிமையாக்குதல் வேண்டும். அவ்விதம் அதனைச் செய்தலோடு அதனை எப்பொழுதும் தம்மிடத்திற் றேன்றாது செய்திடல் வேண்டும். அவ்விதம் முடிந்திடின் அவர் யார்க்கும் அடிமை யாதல் இல்லை.

மெற்கூறிப் போக்குதிலுள் வறுமையுள் வறுமையாவது விருந்தினரை ஓம்பாதிருத்தலேயாவது போன்று வல்லமையில் வல்லமையாவது அறிவிலார் செய்திடும் குற்றங்களைப் பொறுத்தலே யாம் என்பது தெற்றெனப் புலனாகும்.

அருளுடைமை—அருளுடைமையாவது, மனைவி, மக்கள், சுற்றத்தினர், நண்பர் ஆகிய இவர்களைப் பற்றிவரும் தொடர்பு பற்றுது இயல்பாகவே எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணையாம். அருளுடைமையின் பயனையும் அதனை எவ்வாறு பெறுதல் வேண்டும் என்பதனையும் அன்புடைமையினைப்பற்றிக் கூறுங்கால் கூறியுள்ளோம்.

வாய்மை—வாய்மையாவது ஒருவருக்கும் யாதொரு தீங்கினையும் தாராத நடந்ததோர் செயலினை நடந்தவாறே கூறுதலும், பல மக்களுக்கும் நன்மையைத் தருகின்ற நடவாத ஒன்றினையும் நடந்ததாகக் கூறுதலுமாம். எனவே பொய்ம்மையாவது யாதொருவரின் நன்மையினைத் தாராத நடவாதனவற்றைச் சொல்லுதலும் தீங்கைத்தரும் நடந்ததனைச் சொல்லுதலுமாம். ஆகவே ஒருவன் எப்பொழுதும் உண்மையினையே பேச முன் வந்திடின் அவன் தனது நாவினை முதலில் அடக்கிக்கொண்டு தான் யாதாம் ஒன்றைக் கூற தொடங்குமுன் ஆராய்ந்து ‘நாம் கூறப்போவது யாவர்க்காயினும் துன்பத்தைத் தரக்கூடியதோ’ என்பதை எண்ணியே பேச முற்படல் வேண்டும்.

‘யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற’

என ஆன்றோர் கூறியுள்ளபடி மெய்யினை உணர்த்தும் நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப் பட்ட பிற அறங்கள் இல்லை யென்பதே துணிபாம்.

அன்றியும் ஒருவனுக்கு,

‘பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.’

என்பதிலேயே இம்மையிற் புகழினை விரும்பிய ஒருவன் வாய்மையினையே கடைப்பிடித்தல் வேண்டும் என்பது போதரும். அவன் பொய்யாது ஒழுகின் அவனுக்குப் புகழ் எங்ஙனம் உண்டாம் எனின், கூறுதும்.

'உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.'

என்பது நம் திருவள்ளுவர்தம் பொய்யா மொழியன்றோ? மனமறியப் பொய் பேசா தொழுகுகின்றவனை யறிவுடையோர் யாவரும் போற்றிப்புகழ்வர். உள்ளதை உள்ளபடியே கூறுதலாகிய உண்மை பேசுதலே மிக்க புகழினையுண்டாக்கும் என்பதற்குத்தக்க ஆதாரங்கள் நம் தமிழ் நூல்களில் மிகமலிந்து கிடக்கின்றன.

நாம் இதுகாறும் இவ்வுலகத்தின்கண் புகழினைப் பெற வேட்கையுற்றோர் எத்தகைப்பட்ட குணங்களை உடையவர்களாயிருத்தல் வேண்டும் எனக்கூறிப்போந்தோம். இனி எவ்வகைப் பட்ட தீயகுணங்களை அறவே நீக்க வேண்டும் என்பதனையும் சற்று ஆய்ந்திடுவம்.

சான்றோர்களால் உலகமக்கள் நீக்கவேண்டியன எனக்கூறிய குணங்களாவன அழுக்காறு, வெஃகுதல், புறங்கூறல் முதலியனவாம்.

அழுக்காறு:—பிறர்தம் உடைமைப் பொருள்களாகிய மண், பெண், பொன் முதலியன ஒருவனிடம் நிறைந்திருத்தலைக் காணப் பொறாது அவைகளைப் பெற்றவனிடத்துப் பொறாமை கொள்ளுதலே அழுக்காறு எனப்பெறும். ஒருவன் யாதொரு பகைவனும் இல்லாதிருந்தும், இவ்வழுக்காற்றினைமட்டும் தன்னகத்துடையவனாக இருப்பின், அதுவே அவனுக்கு மிக்க கேட்டைத் தருதற்குப் போதுமானது.

'விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்'

என்கூறியாங்கு ஒருவன் அழுக்காறுடையனாதலினின்றும் நீங்கப் பெறுவானாயின் அதனினும் சிறந்த பேறு யாதொன்றும் இல்லை. அழுக்காறு எனும் இப்பாவி, தன்னை உடையானையே, இம்மையில் அவனுடைய செல்வத்தினையும் கெடுத்து, மறுமையில் நரகத்திலிடத்தும் செலுத்தி விடுவன். மற்றும்,

'அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.'

ஆகவே இத்தீங்குகளினின்றும் நீங்க விரும்பியோரும் புகழினைப் பெற வேட்கையுற்றோரும்

'ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.'

வெஃகுதல் :—அஃதாவது பிறருடைய நிறைந்த செல்வத்தைக் கண்டு அழுக்காறு கொள்ளுதலேயன்றி, அவர்தம் பொருளை வௌவுதற்கு நினைத்தலாம். ஆகவே இதுவும் தலையாய குற்றம் என்பதனை நோக்கி இதனையும் அறவே நீக்க முயலுதல் வேண்டும். பிறர்க்குரிய பொருளைக் கொள்ளுதல் நமக்கு அறமல்ல வென்னும் நடுவு நிலைமையில்லாமல், அவர்தம் பொருளை வௌவுதற்கு விரும்பின், அவ்விருப்பு நமது குடியையும் கெடுத்துப் பல குற்றங்களையும் கொடுத்திடும். அஃதன்றி, ஒருவருடைய பொருளை வௌவுதற்கு விருப்பமுடையாரிருப்பின்,

'அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு'

என்றவண்ணம், திருவானவள் தான் சேர்தற்காந் திறத்தை யறிந்து, அவ்விருப்பமில்லாரைச் சேர்ந்திடுவள். அதனாற் புகழும் உண்டாம்.

புறங்கூறல்:—அஃதாவது காணாதவிடத்தே பிறரை இகழ்ந்து பேசுதலாம்.

'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்'

என நம் மறை நூலார் கூறியிருத்தலின், ஒருவனின் எதிரே நின்று கண்ணோட்டமறச் சொல்லினும், அவன் இல்லாதவிடத்துப் பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லை மொழிந்திடலாகாது.

அன்றியும் காணாதவிடத்தே தன்னைக் குறித்துப் பிறனாலே சொல்லப்பட்ட பழியைக் கேட்டவன், அவன் மிகவும் வருந்தும்படி அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து எதிரிலேயே சொல்லுவானாதலால், பிறனது பழியைக் கூறுவோன் தனது பழிகளினுள்ளுந் தான் வருந்தத் தக்கவைகளையும் ஆராய்ந்து கூறுதல் வேண்டும். ஏதிலார்தம் குற்றத்தைபோலவே, புறங்கூறுதலாகிய தமது குற்றத்தினையும் காணமாட்டுவாராயின் அவர்களுக்குத் துன்பம் என்பதும் ஒன்று நேரிடுமோ?

'அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது'

என்ற திருக்குறளை நோக்கிடின், புறங்கூறாதிருத்தலினால் உண்டாம் புகழினையும் கூறுதல் வேண்டற்பாலதோ?

இதுகாறும் உலகத்திற் புகழினையடைய விரும்பியுள்ளார்கள் உறுதியாகக் கைக்கொள்ள வேண்டற்பாலனவும், வேண்டாதனவும் ஆன குணங்களிற் சிலவற்றைச் சுருக்கமாகக் கூறினோம். இல்லறத்தில் வழுவாது நின்றும் இத்தகைக் குணங்களையெல்லாம் உடையவனாக இருத்தல் முடியாத செயலே என்பதில் யாதோர் ஐயமும் இலது. ஆயினும்,

'இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை'

என்பதை நோக்கியேனும் இவ்வரிய குணங்கள் யாவையும் உடையவனாயிருக்கமுயலுதல் வேண்டும். இவ்வண்ணம்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.'

ஆதலின் இவ்வாற்றிற் பெறும் புகழினைவிட மிகச் சிறந்ததென எதனைக் கூறலாகும்?

புகழினைப் பெறும் வழிகளில் இரண்டாவது, உலகமக்களோடு நடந்து கொள்ளும் முறையாகும் எனக்கூறினேம்.

'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்'

என்றாங்கு, ஒருவன் எவ்வளவு அறிவினை யுடையவனாக இருப்பினும் அவன் உலகத்தாருடன் முறைதெரிந்து ஒழுகானாயின், அறிவிலனாகவே கருதப்படுவன்.

முதலாவதாகத் தன் மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியவர்கள் நீங்க, *ஆடை குலைந்தவனுக்குக் கை எப்படியோ, அப்படியே தூர் இடையூற்றினை யடைந்தவனுக்கு நட்பாளன் மனத்தினும் முற்பட்டு உதவிசெய்து அவ்விடையூற்றினை யழிப்பானாதலின்

'செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.'

என்று நம் திருவள்ளுவரும் கூறிப்போந்தார்.

பின்னும், அறிவை வேறுபடுத்தி இருமையும் கெடுக்கும் இயல்பினராகிய, நல்லதில் நன்மையும் தீயதிற்றீமையும் இல்லை யென்போரும், விடரும் முதலாயினாருடைய நட்பினை அறவே நீக்குதலொடு, தீயவழியினின்றும் விலக்கி நல்வழியிலே செலுத்தும் பேரறிவுடையாரையே துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

"நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு."

ஆதலின் நற்செயல்களைப் புரிந்து புகழினையடைய விரும்பியவருள் சிற்றினஞ் சேராது பெரியாரையே துணைக்கொள்ளுதல் வேண்டும். ஏனெனின்,

'நல்வினைத்தி னூங்குந் துணையில்லை தீயினைத்தி
னல்லற் படுப்பது உ மில்.'

அப்பெரியாரைத் துணைக்கோடலே யன்றி, 'எவ்வகைய பெரிய அறங்களைக் கெடுத்தவர்க்கும் அப் பாவத்தினின்றும் நீங்கும் வழி உண்டாகும். ஆனால் ஒருவன் இயற்றிய நன்றியினைக் கெடுத்தார்க்கு அப் பாவத்தினின்று நீங்கும் வழி இல்லையாம்" என்று பெரியார் கூறியுள்ளாராதலின்,

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று'

என்பதைக் கருத்திற்கொண்டு, ஒருவன் செய்த தீயசெயல்களைச் செய்த அப்பொழுதே மறந்து நல்ல செயல்களை யெல்லாம் என்றும் மறவாது இருத்தல் வேண்டும். ஒருவன் செய்த ஒரு சிறு நன்றியினை மறவாது நம் மனத்துட் கொண்டால் அவன் நமக்கு இயற்றிய இடையூறுகள் யாவும் நம் மனத்தினை விட்டகன்றிடும். ஆகவே யாவாரும் புகழப்படுதலை விரும்பியவன் தனக்குத் துன்பம் வந்த காலத்திலே உதவியவரது நட்பினை எப்பொழுதும் விடாதிருத்தல் வேண்டும்.

இவைகளோடு கூட, உலக மக்களோடு கூடி ஒழுகுங்காலத்துத், தங்கள் தங்கள் நிலைக்குச் சொல்லப்பட்ட முறையினைக் கைவிடாது அவைகளின் முறையே ஒழுகுதல் வேண்டும். எனெனின் 'ஒழுக்கமிலான்கண் உயர்வு' இலதாகும். அன்றியும் ஒழுக்கம் மிக்கச் சிறப்பினைக் கொடுத்தலால், அதனை உயிரினும் பன்மடங்கு காப்பாற்றுதல் வேண்டும்.

நாம் இதுவரையும் கூறிவந்த குணங்களை யெல்லாம் பெற்று, ஒருவன் இவ்வுலகத்தே இல்லறத்தினை நடாத்துவானாயின் அவன் அடையும் புகழினை இவ்வளவினது என்று கூற இயலாது.

மூன்றாவதாகத் தாம் அறிந்த உண்மையினை உலகத்தார்க்கு எடுத்துக்கூறிப் புகழினைப் பெறுதல் என்ற பொருளைக் கொண்டோம்.

இவ்வுலகத்தே, அறிவுடையார் பலர் தாம் கண்டறிந்த உண்மைகளை, உலகத்துள்ளார்க்கு எடுத்துக்கூறின், உண்மையினை யறிந்துகொள்ள இயலாத சிற்றுமக்கள் சிலர், அவர்கள் சொல்லியன வற்றை உண்மையெனக் கொள்ளாது அவர்களைப் பழித்திடுவர். இதன் காரணமாக அப்பெரியார்கள் பின்னும் தாங்கள் கண்ட உண்மையினைக் கூற அஞ்சுகின்றனர். ஆனாற் பண்டைக் காலத் திலோ நம் நாட்டுப் புலவர்களும், பெரியார்களும், தாம் கூறு கின்ற உண்மைகளை அக்காலத்தார் நம்பாவிடினும் தாங்கள் அதற்கு அஞ்சாது நின்று உண்மைகளை எடுத்துக் கூறிக் கொண்டே வந்தனர். இதன் காரணமாகவே 'அவையஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வி—பூத்தலிற் பூவாமை நன்று' எனக் கூறிப் போந்தனர் போலும். அவர்கள் இவ்வாறு கூறிப்போந்த பல் லாண்டுகட்குப் பின் தோன்றிய பலரும் அவர்கள் கண்ட உண்மை யினைக் கைக்கொண்டனர். ஆகவே அவ்வுண்மை பெருகலாயிற்று.

அன்றியும், இவ்வுலகத்திற் றோன்றியிருக்கும் சமயங்களை யெடுத்துக்கொண்டு அச்சமயங்களின் தலைவர்களைப்பற்றி ஆராய்ந் திடின், அவர்கள் முதலிலே தாம் கண்ட உண்மைகளை உலகத் தார்க்கு எடுத்துக் கூறுங்காலத்தில், அவர்கள் அடைந்த துன்பத் தினை எல்லாம் வல்ல இறைவனே அறிவான். அவ்வண்ணம் அவர்கள் துன்பத்தினை யடைந்தும், உலகத்தார்க்கு உண்மை யினை எடுத்துக் கூறுவதினின்றும் நீங்கலர். பின் சில ஆண்டு களில் அவர்கள் கூறிய உண்மையினைத் தெரிந்துகொண்ட மக்கள், அவர்கள்தம் கொள்கைகளைப் பின்பற்றி அவர்களையும் உச்சிமேற் கொண்டனர். அவர்களுடைய புகழும் என்றும் அழியாது நிற் கின்றது. அவர்கள் யாவரும் தாங்கள் கண்டறிந்து கூறிய உண்மைகளை உலகமக்கள் எதிர்த்து நின்றதினால், அவர்களுக்கு அஞ்சிக் கூறாது இருந்திருப்பார்களேயானால் இப்பொழுதும் அவர் களுடைய புகழ் நிற்குமோ? ஆதலின் யாம் உண்மையெனக் கண்ட பொருள்களை உலகத்தினரிடம் கூறின், சிலர் அதனை ஏற்றுக்கொள்ளுவர்; சிலர் கொள்ளாது மறுப்பர். அதற்கு அஞ்சி யாம் உண்மையினைக் கூறப் பின்வாங்கலாகாது.

இவ்வண்ணம் ஒவ்வொருவரும், பெரியார்கள் உடன்பாடாகக் கொண்ட குணங்களை உடையராகி, நீக்கப்பட்ட குணங்களைக் கைவிட்டு, உலகத்தோடு ஒட்ட ஒழுகுவாராயின், அவர்கள் இம்மையில் அழியாப் புகழினையும், மறுமையில் இன்பத்தினையும் பெறுவர் என்பது சரதம்.

இச்சிறு கட்டுரையிற் சிறியேனாகிய யான் எடுத்துக்கொண்ட கருத்துக்கள் யாவும் நமது திருவள்ளுவர் எழுதியருளிய திருக்குறளினிடத்திருந்தேயன்றி வேறு நூல்களினின்றும் அன்று. இக்கட்டுரையிற் குற்றங்களிருப்பின் பெரியார்கள் மன்னித்திடல் வேண்டுமெனக் கூறி இதனை முடித்துக் கொள்கின்றேன்.

மாணவர் பக்கங்கள்.

உ

இறை யருள் வாழ்க.

உடல் இயலும் உடல் நல வழியும்.*

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T., ஆசிரியர்,
போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், உரத்தநாடு.

முன்னுரை.

செந்தமிழ் நாட்டிற்குச் சீரிய தொண்டு புரிய விரும்புவோர் யாவர்க்கும் முன்னிற்ப தொன்றுண்டு. அதுவே ஒவ்வொரு நாட்டுப் பெரியார்களும் ஒவ்வொரு நாளும் வளர்த்து வருகிற அறிபொருள்களைத் (Knowledge) தமிழர் யாவரும் நன்குணர்ந்து

---

* இவ்வரிய நூலின் உரிமையை, இதன் ஆசிரியர், மனமுவந்து நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்துள்ளார்கள். இதனை எவரும் சங்கத்தின் ஆணையின்றி அச்சிடவொண்ணாது. வே.

முன்னேற்றமடையத் தமிழில் வெளிப்படுத்துவதாம். இவ்வழி பொருள்களுள் முதன்மையுடையது உடலியல் (Physiology) என்பதை யாவரும் ஒப்புவர். இவ்வியலே, முறையாக நுண்ணிய பொருள் ஒன்றையும் விடாது, பெரிய நூலாக எழுத முன்வந்திலேன். ஆனால் அவற்றுள் நம் வாழ்க்கையை நலமுறச் செய்ய இன்றியமையாதனவைகளை மட்டும் பொறுக்கித் தொகுத்துக் கற்றோரும் மற்றோரும் எளிதில் உணருமாறு விளங்கவைத்தலே கடமையாகக் கடைப்பிடித்துள்ளேன்.

இவ்வாறு விளங்க வைப்பதற்கு மிக்க தடையாவது தக்க சொற்கள் இன்மையேயாம். இத்தடையை நீக்குவதற்காக ஆங்கிலத்துள்ள சொற்களைத் தமிழ்ப் படுத்துவதில் மூன்று வழிகளுள. அவைதாம்:—(க) அப்படியே அச்சொற்களைத் தமிழெழுத்துக்களால் எழுதிவிடுவது. (உ) ஆரியம் முதலிய நம் நாட்டு மொழிகளிலுள்ள சொற்களைக் கையாளுவது. (ங) தக்க தமிழ்ச் சொற்களையே தேர்வது. இவற்றுள் முதல்வழி தமிழ் நூலியற்றுவோர்க்குச் சொற்றேடும் வருத்தத்தைச் சிறிது குறைக்கிறது; உலகியல் முறையில் பொதுமக்கள் பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டு கையாளும் பழக்கத்தை ஒட்டியது. எனினும் நூற்கள் யாருக்கென ஏற்பட்டனவோ அவர்க்கு எளியதன்று. அதிலும் ஆங்கில மறியாத தமிழர் இந்நூற்களைப் படிக்கும் பொழுது அவைகளிலுள்ள பொருள் புரியாத வெற்றுரைகளை விழுங்கிக்கொண்டேயிருக்கவேண்டும். இதனால் இச்சொற்களும் அப்பொருள்களும் பொதுமக்களிடத்து எளிதிற் பரவா. இனி உலகியல் முறைப்படி ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்தலாகாதோ வெனின் இம்முறைக்கு ஒத்தது நூலியற்றும் முறைக்கும் ஒத்ததாகக்கொள்ளல் பொருந்தாது; அன்றி உலகியல் முறை யாவும் ஒழுங்குடைத்தென்று கொள்ளவுங் கூடாது. உலகியலில் பிறமொழிச்சொற்கள் குறிக்கும் பொருள்களுடன் அல்லது எண்ணங்களுடன் பலர் நேரிற் பழகுவதால் நேர்முறைப்படி (Direct Method) அச் சொற்களின் பொருளை எளிதில் உணருகின்றனர். உணர்ந்ததும் அவைகளைத் தம்

மொழிச் சொற்களாற் புனைந்து கூறும் ஆற்றலும் அமைதியும் இல்லாததாலும், பிறமொழிகளையும் பயிலும் வன்மையுடையே மென்னுஞ் செருக்கு யாவருமுடையராதலாலும் அச்சொற்களையே அவர்கள் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு நேரிற் பழகும் பொருள்கள், எண்ணங்களன்றி ஓரறிவியலுக்குரிய எல்லாப் பொருள்களையும் எண்ணங்களையும் பிறமொழிச் சொற்களாற் குறித்தல் ஒன்றையும் எளிதிற் புலப்படுத்தாது.

இனி இரண்டாம் வழியாகிய ஆரியம் முதலிய திசைச்சொற்களைப் பயன்படுத்தலும் முதல் வழியை ஒத்ததே. சில நூற்றாண்டுகளாக இவ்வாறு பிற சொற்கள் கலந்து வந்ததாற் பல அருந்தமிழ்ச் சொற்கள் வழக்கழிந் தொழிந்தனவே யென்று பேரறிஞர் பலரும் புலம்புவரேல் இன்னுங்கலந்து கொண்டே செல்வதின் பயன் சிறிது, கேடு பெரிதாம். என்னை? பல்லூழி காலமாகத் தன் சீரிளமைத் திறங்குன்றாத நந்தமிழ்மொழி, பன்மொழிக் கலப்பாற் ஆரியம் போல் சடுதியில் வழக்கொழிந்து சிதைந்தும் விடலாம்! இதுவன்றித் தமிழ்ச் சொற்கள் இனிய மெல்லோசையுடையனவாய், ஆழ்ந்த உட்பொருளுடையனவாய், முறைப்படி புனையப் பெற்றனவாய், தமிழரால் எளிதில் உணரக் கூடியனவாய், உணர்ந்தார்க்கு உணருந்தொறும் பெருமகிழ் வூட்டுவனவாயிருத்தலின் இவற்றிற்கிடையே தாறுமாறுன, காடுமுரடான* பிறமொழிச் சொற்களைக் கலத்தல் பெரும் பேதமையன்றோ? இப்பேதமையினின்றும் நீங்கவே, உண்மைத் தமிழ்த் தொண்டு புரியவே இந்நூல் மூன்றும் வழியைக் கைப்பற்றித் தனித்தமிழ்ச் சொற்களாற் புனையப்பெற்றுளது. இச்சொற்களுட் பொருந்தாதன வுளவேல் எடுத்துரைப்பார்க்கு என்ஞான்றுங் கடமைப் பட்டவனாவேன். இவைகளைப் பயிலுதல் முதற்கண் புதிதாய்த் தோன்றினும் சிறிது பழக்கத்தாற் பெரிதும்

---

* சிறு எடுத்துக்காட்டாக இரத்தம், மாமிசம், மச்சை, தேகம், அஸ்திபஞ்சரம், ஆகாரம் முதலிய ஆரியச் சொற்களையும் அவற்றின் நேர் தமிழ்ச் சொற்களாய குருதி, தசை, மூளை, உடல், எலும்புக்கூடு, உணவு முதலியவைகளையும் ஒப்பிட்டுப்பார்க்க. இவற்றின் ஒலி வேற்றுமையையும் உற்று நோக்குக.

எளிதாமெய்பதைப் பழக்கத்தால் அறிவேன்; முயல்வோரும் அறிவர். இன்னும் எளிதாக உணர்வதற்கு உதவியாக ஆங்காங்கு கவிப்புகளுக்குள் (Brackets) ஆங்கிலச் சொற்களுங் குறிக்கப் பட்டிருக்கின்றன.

இந்நூல், ஐந்தாந்தர (V Form) மாணவர்க்குப் பயன்படுமாறு அவர்களுக்கென ஏற்படுத்தப்பெற்ற பொருட் குறிப்புக் (Syllabus) கிணங்க எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மிகையான சில செய்திகளும் பொது மக்களுக்குப் பயன்படுமெனக் கருதிச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இந்நூலைச் செவ்வனே வெளியிடற்கும் தகுந்த பேருதவி புரிந்த எந்தையே யாசிரியர்களாய வி. பஞ்சநதம் பிள்ளை வித்வான் பொன்னுச்சாமி பிள்ளையவர்களிடத்து என்றும் மறவா நன்றி யுடையவனாவேன்.

தோற்றுவாய்.

"உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ் ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர் வளர்த்தேனே."

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயிற் கொண்டா னென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே."

என்பர் மூவாயிரம் ஆண்டிற்குமேல் வாழ்ந்த தமிழ் முனிவராகிய திருமூலர். அவர் வழிவந்த தமிழ் மக்களாய நாம் உடம்பினை இன்னும் இழுக்கென்றிருக்கிறோம்! என்னே நம் அறிவு!!

உடலும் தமியங்கி வண்டியும்:—மாணவர்களே! உங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தமியங்கி வண்டி (Motor Car) வைத்தாளும் வருமான முடையவர்களென்று வைத்துக்கொள்வோம்.

அவ்வண்டியை ஓட்டுதற்கு ஒரு பாகனை (Driver)த் தேடுவீர்களன்றோ? அப்பாகனும் அவ்வண்டியின் உறுப்புக்களனைத்தையும் அறிந்து வண்டி பழுதடையாமற் பாதுகாப்பதுடன், பழுதுறினும் நலப்படுத்தும் தன்மையுடையவனாயிருத்தல் நன்றோ? அன்றிச் சிற்சில உறுப்புக்களை மாத்திரம் கையாலுங் காலாலும் முடுக்கி வண்டியை ஓட்டுதற்கு மட்டும் தெரிந்தவனாயிருத்தல் நன்றோ? வண்டியின் வாழ்வையும் உங்கள் பணச் செலவையுங் கருதி அனைத்தும் உணர்ந்த பாகனே வேண்டுமென்று ஒத்த மனத்துடன் உரைப்பீர்களன்றோ? இவ்வாறாய பாகனைத் தேர்ந்தெடுத்த பின்னும் அவனைக் கொண்டு அவ்வண்டியை அடிக்கடி துடைத்தும் எண்ணெயிட்டும் எவ்வளவு அக்கறையாய்ப் பாதுகாப்பீர்கள்?

உடலை ஓம்புவதேன்:—இவ்வாறு 4000, 5000 வெள்ளிக்காசு (Rupees) பெறக்கூடிய ஒரு வண்டியின் பொருட்டு இவ்வளவு கவலை யெடுத்துக்கொள்வீர்களாயின் விலைமதிக்க வியலாத மிக்க வியப்பு வாய்ந்த உங்கள் சொந்த வண்டியாகிய உடலைக் குறித்து எவ்வளவு கவலை கொள்ளல்வேண்டும்? அவ்வண்டிக் காரனும் உங்கள் உள்ளத்திற்கு அவ்வண்டியைப் பற்றி எவ்வளவு அறிவுறுத்திக் காப்பாற்ற வேண்டும்? எவ்வளவு கருத்துடன் அதற்கு நன்மை செய்ய வேண்டும். இவ்வாறு அறிவுறுதலினாலுங் காப்பாற்றுதலினாலும் எத்துணைபேர் குறைந்த ஆண்டுடையவர்களாயும், பிணியாளர்களாயும், வலிமையற்றவர்களாயும் இருக்கின்றனர்கள்? எத்துணைபேர் உடலைச் சிறிதும் பொருட்படுத்தாததினால் உயிரையும் எளிதில் இழந்து தங்களுக்கன்றித் தங்களுற்றோர்களுக்கும் எவ்வளவு துயரை விளைக்கின்றனர்? ஐயோ! இக்கொடுமையை உணர்ந்தாவது நீங்கள் விழித்துக் கொள்ளுவீர்களா? உங்கள் உடலைப்பற்றி உணர முன் வருவீர்களா? வருவீர்களாயின் இந்நூலைக் கசடறக்கற்றுப் பின் அதற்குத்தக நில்லுங்கள்.

உடலைப்பற்றிய செய்திகள்:—மிக அருமையான இவ்வுடலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் நான்காம்.

அவையாவன (க) உடலின் பலப்பல உறுப்புக்களை விரித்துக்கூறும் உடற்கூறு (Anatomy), (உ) அவ்வுறுப்புக்களின் வேலைகளைக் குறிக்கும் உடலியல் (Physiology), (ங) இவ்வுறுப்புக்களாலாய உடலை நோயுறாமற் காப்பாற்றும் வழிகளைக் கூறும் உடல் நலவழி (Hygiene), (ச) உடற்குத் திடீரென ஓர் ஊறு நேரினும் அல்லது உயிர் உடலைவிட்டு நீங்கும்படிக்கான கேடு நேரினும் மருத்துவரில்லாத பொழுது செய்துகொள்ளும் முதல் உதவி (First Aid) எனபனவாம். இவற்றுள் உடல் நலவழியே நமக்கு எப்பொழுதும் நேரே பயன்படுவதாகுலும் அதை நன்குணர முதலிரண்டு செய்திகளும் இன்றியமையாதனவாம். நான்காவது செய்தியாகிய முதலுதவியும் நமக்கும் பிறருக்கும் பலபொழுது பயன்படுமாதலின், இவையாவற்றையும் வேண்டிய அளவு விரித்துக் கூறுவாம்.

முதற் படலம்.

உடலின் கூறுகளும் அவற்றின் வேலைகளும்.

உடலின் பெரும் பகுதிகள்:—நமது உடல் மூன்று பெரும் பகுதிகளாலாக்கப் பெற்றிருக்கிறது. அவை தலை, முண்டம் (Trunk), புறவுறுப்புகள் (Limbs) ஆகும். இவற்றுள் தலையே உடலிற் சிறந்த உறுப்பாய் உச்சியிலிருக்கிறது. இதில் கண், காது, மூக்கு, நாக்காகிய அறிவு வாயில்களும் மூளையுமிருக்கின்றன. முண்டமென்பது நெஞ்சு (Chest), வயிறு (Abdomen) என்னும் இருபெரும் பிரிவினது. நெஞ்சையும் வயிற்றையும் பிரிப்பது ஈரல் தாங்கி (Diaphragm) † என்னும் ஓர் தட்டைத் தசை. நெஞ்சினுள் நுரையீரலும் (Lungs), குருதியேற்றமும் (Heart) இருக்கின்றன. வயிற்றில் தீனிப்பை (Stomach), குடர்கள் (Intestines), கல்லீரல் (Liver) முதலிய உறுப்புக்களுள. புறவுறுப்புக்களை கைகளுங் கால்களுமாம்.

---

† இது நுரையீரலைத் தாங்கிக் கொண்டே யிருப்பதால் இப்பெயர் பெற்றது.

உடலின் நுண் பகுதிகள் :— நமது உடலில் எங்கேனும் ஒரு சிறு துண்டை யெடுத்து அதனைப் பெருக்கிக் காட்டுங் கண்ணாடி (Microscope) யால் பார்ப்போமாயின் நூற்றுக் கணக்கான அணுக்கூடுகளைக் (Cells) * காணலாம். இவையாவுந் தனித் தனி உயிருடையனவே. இவை இருக்குமிடத்திற்குத்தக பல்லுருவும் பல தொழிலுமுடையன. இவற்றின் உருவை ஒருவாறுணர முதலாம் படத்தைப்‡ பாருங்கள். இதனுள் பல விடங்களிலுள்ள கூடுகளைக் காணலாம். இவற்றுட்சில உருண்டையாயிருக்கின்றன; சில தட்டையாயும் வட்டமாயுமிருக்கின்றன; சில பல கை கால்களையுடையன; சில தாறுமாறாய் மாறிக்கொண்டிருக்கும் உருவமுடையன. இவைகளின் பருமனைப்பற்றிக் கருதுவோமாயின், பொதுப் (Average) பருமனுள்ள ஒரு கூட்டின் குறுக்கு (Diameter) $\frac{1}{20.000}$ அங்குலம் ஆகும். குச்சிபோன்ற கூடுகளில் (Bacillus) 5,000,000த்தை நீளமாக வைத்து அடுக்கினால் ஒரு முழமாகும். இவைகளையே ஒரு பரும அங்குல (Cubic Inch) இடத்தில் நிறையும்படி அடுக்க 640,000,000,000,000 வேண்டுமெனின் இவற்றின் நுண்மை நன்கு விளங்கும். இவைகளின் தொழிலை நோக்குமிடத்து, மூளையிலுள்ள அணுக்கூடுகள் வேந்தர்களைப்போல் யாவற்றையும் அடக்கியாளும் ஆண்மையுடையன; சில அமைச்சர்களைப்போல் அமைந்து அறிவுறுத்துகின்றன. கை கால் முதலிய உறுப்புக்களிலுள்ள கூடுகள் அடிமைகள் போல் உழைக்கின்றன. குருதியிலுள்ள சில கூடுகள் கூலியாட்களைப் போல் உயிர்க்காற்றைச் (Oxygen) சுமந்து செல்கின்றன; சில வீரர்களைப்போல் எதிரியுடன் சண்டையிடுகின்றன. தீனிக்குழாயிலுள்ள சில கூடுகள் உணவிலிருந்து ஊன்பொருளை விளைவிக்கின்றன; சில மருத்துவர் போல் தக்க மருந்துகளைத் தயாரிக்

---

* கூடாயிருப்பது கூடெனினும் ஈண்டு இச்சொல் கூடாயிருக்கும் பொருளைக் குறிக்கவில்லை. நமது உடலுங் கூடு என்று அழைக்கப்படல் போல் ஈண்டும் இச்சொல் உயிரிருப்பதற்கிடந்தரும் பொருளாகிறது. இவை யாவுங் கெட்டி (Solid) யானவையே.

‡ இக்கட்டுரை முடிபில் இப்படங்கள் அமைக்கப்பெறும். தனி நூலாக அச்சிடுங்கால் அவை ஆங்காங்கு இணைக்கப்பெறும்.

கின்றன. நரம்புகளிலுள்ள கூடுகள் அஞ்சற்காரர்களைப் (Post Men) போற் கட்டளைகளையுந் செய்திகளையும் அனுப்புகின்றன. சில கூடுகள் கொத்தன், தச்சனைப்போற் கெடுமிடங்களைச் செப்பனிடுகின்றன. சில தோட்டிகளைப் போற் றூய்மை செய்கின்றன. இவ்வாறு பல வகைப்பட்ட கூடுகள் யாவும் ஒன்று சேர்ந்து உடற்கு உறுதிபயப்பதே கண்ணுங் கருத்துமாக ஒத்துழைக்கின்றன வாதலின் இவைகளை ஓர் நன்னாட்டு மாந்தர்க்கு ஒப்பிடலாம்.

இந்நுண்பகுதிகளாலாய பெருங்கூட்டங்கள் :—இக்கூடுகள் பலசேர்ந்தே ஒரு சிற்றுறுப்பு ஆகிறது. இவ்வுறுப்புக்கள் பல சேர்ந்து ஒரு தொழிலைச் செய்யும் ஓர் கூட்டமாகிறது. நம் முடலில் இவ்வாறாய பெருங்கூட்டங்கள் ஏழிருக்கின்றன. நமது உடலிற்கு உரந்தருகின்ற எலும்புக் கூட்டத்தை (Bony System) முதலாவதாகக் கொள்வோம். இவற்றைத் தனித்தெடுத்தடுக்கிய எற்புக்கூட்டை (Skeleton) நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது நம்முடலாகிய இல்லத்திற்கு அடிப்படையாகும். இக்கூட்டை மூடி அழகுபடுத்தும் தசைக் கூட்டத்தை (Muscular System) இரண்டாவதாகக் கொள்வோம். இதனையே 'சோற்றுலடித்த சுவர்' என்கின்றனர். இதனாற்றான் நாம் வேலை செய்கிறோம். இத்தசைகளுக்கும், எலும்புகளுக்கும், ஏனைய உறுப்புகளுக்கும் உணவை ஊட்டுங்குருதியும், அது செல்லுங் குழாய்களும், அதைச் செலுத்துங் குருதியேற்றமுஞ் சேர்ந்ததே மூன்றாவது கூட்டம். இவற்றிற்குக் குருதியோட்ட உறுப்புக்கள் (Circulatory System) என்று பெயர். இக்குருதி உடலெங்குஞ் சுற்றிச் சென்று ஆங்காங்குள்ள கழிபொருள்களைக் கவர்வதால் அழுக்கடைகிறது. இவ்வழுக்கை நீக்குவன நான்காம் கூட்டமாய மூச்சுறுப்புகள் (Respiratory System). இவையே மூக்குமுதல் நுரையீரல் வரையிலுமுள்ள ஒரு பெரும் பிரிவாம். இவ்வாறு குருதியானது உணவை ஊட்டுவதாலும் அழுக்கை நீக்குவதாலுங் குறைந்து கொண்டே வருகிறது. இக்குறைவை நிறைவிக்கவே நாம் உண்கிறோம். நம் உண்டியைக் குருதியாக்கற்கே சமிக்கும் உறுப்புக்கள் (Digestive System) இருக்கின்றன. இவ்வுறுப்புக்

களை வாய்முதல் எருவாய் (Anus) ஈறுயுள்ள ஒரு பெருங்குழாயும் அதன் பக்கங்களிலிருந்துகொண்டிருக்குஞ் சிற்றுறுப்புக்களுஞ் சேர்ந்த ஐந்தாங்கூட்டம். நம்முணவிலுள்ள வீண் பொருள்களையும், உறுப்புகள் வேலை செய்வதாலுண்டாகும் கழிபொருள்களையுங் கழிக்குங் கழிவாய்களே (Excretory System) ஆறுங்கூட்டமாம். இவை பவ்வீயைக் கழிக்கும் பெருங்குடலும், சிறுநீரைக்கழிக்கும் உறுப்புக்களும், வேர்வையைக் கழிக்கும் சிறுவபைகளுமாம். ஏழாங் கூட்டமே இவ்வுலகிலுள்ள பொருள்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கென்றும் தெரிந்து கொண்டதற்கேற்ப நடப்பதற்கென்றும் ஏற்பட்டிருக்கிறது. இக்கூட்ட உறுப்புக்களே மெய், வாய், கண், மூக்குச்செவி யென்னும் ஐம்பொறிகளும், இவற்றிற் படுபவைகளைப் புலப்படுத்துவதற்காக மூளைக்கு அறிவிக்கும் கருவிகளாய நாம்புகளும், இந்நரம்புகள் சுமந்து செல்லுஞ் செய்திகளை யறியும் மூளையும், அறிந்ததற்கிணங்க மூளையிடுங்கட்டளைகளைச் செலுத்தும் நரம்புகளும் ஆகும். இவை யாவற்றிற்கும் அடிப்படை நரம்புகளேயாதலின் இவ்வுறுப்புக்களை நரம்புக்கூட்டம் (Nervous System) என்றழைக்கின்றனர். இக்கூட்டத்தில் நமது பாகனாகிய உள்ளங் குடிகொண்டுளன். அவனை அறிவுறுத்தி அடக்கியாளுவதே நமது கடமை.

இரண்டாம் படலம்.

எற்புக் கூட்டம்.

எலும்பு எதனாலாயது?—எலும்புகளை உயிரற்ற பொருள்களாக நீங்கள் கருதுவீர்கள். ஆனால் அவை உயிருள்ள பல கூடுகளாலாக்கப் பெற்றன. இக்கூடுகள் மண் பொருள் (metal) ஆகிய சுண்ணும்பினிடையே இருக்கின்றன. ஓர் எலும்பை உப்புப்புளிப்பு (Hydro-chloric acid) போன்ற ஓர் புளிப்பிலிட்டு வைத்திருந்தால் சுண்ணும்பு கரைந்து போவதால் அதை எளிதில் வளைத்து விடலாம். ஆகலின் சுண்ணும்பே எலும்பைக் கடின

மாக்குகிறது என்பது தெளிவாம். எலும்பின் கூடுகளுக்கு உண வளிக்கக் குருதிக்குழாய்கள் எலும்பினுட் செல்லுகின்றன. எலும்பினுள் நல்லி (Yellow marrow) இருக்கிறது. இளைஞரின் எலும்புகள் வளரக்கூடிய சக்திநிறைந்தனவா யிருக்கின்றன. முதி யோரின் எலும்புகளில் இச்சக்தியின்றி மூளையுங் குறைந்திருப்ப தால் நிறை குறைந்திருக்கிறது. எலும்பு முறிந்தால் முறிந்த துண்டுகளினிடையே அவைகளை ஒட்டவைக்கக்கூடிய எற்புப் பசையை (Callus) அத்துண்டுகளே தயாரித்துக் கொள்வது எவ்வளவு வியக்கத்தக்கது பாருங்கள்!

எலும்பின் வேலைகள்:—நமது உடலில் எலும்புகளில்லா விட்டால் நாம் புழுப்போல நெளிய வேண்டும். நேராக நிற்க வும், நடக்கவும், பலப்பல வேலைகளைச் செய்யவும் முடியாது. ஆனால் இவ்வெற்புக்கூடுமட்டும் தானாகவே நின்று, நடந்து, வேலை செய்யும் என்று நினைக்கக்கூடாது. இவ்வெற்புக்கூட்டை இயக்கு வன இதன் மேற்கட்டப்பட்டுள்ள தசைகள். இத்தசைகள் கட்டப்பட இது அடிப்படை (Foundation) ஆகிறதால் எலும்புக ளின்றி நாம் மிகச் சில வேலைகளையே செய்யமுடியும். இன்னும் இவை மூளை, கண், குருதியேற்றம், நுரையீரல், முள்ளந்தண்டு (Spinal chord) முதலிய மென்மையான உறுப்புக்களை எளிதில் ஊறுடையாவண்ணம் மூடிக் காப்பாற்றுகின்றன. இவ்வாறு காக் கப்பெறாவிடின் இவ்வுறுப்புக்கள் சிறிது காலமும் நிலைத்து நிற்கும் வன்மை யுடையனவல்ல. இவ்வேலைகள் போதாதென்று போலும் இன்னொரு அரிய செயலையும் செய்து கொண்டேயிருக்கின்றன. அதுதான் குருதியிலுள்ள கோடிக்கணக்கான செங்கூடுகளை (Red corpuscles)ப் பிறப்பித்தல். இச்செங்கூடுகளின் பெரு மையைப் பின்னர் விளக்குவாம். ஈண்டு இக்கூடுகள் ஒருகண மேனும் வேலை செய்யாதிருந்தால் உயிர் உடனே போய்விடும் என்பதை உணருவீர்களாயின் இக்கூடுகளைப் பிறப்பிக்கும் எலும்பு களின் இன்றியமையாமை தெளியப்படும்.

எலும்புகளின் தொகை வகை:—இரண்டாம் படத்தைப் பாருங்கள். இதுதான் எற்புக்கூடு. இதில் 206 துண்டு எலும்புகள்

விதம் விதமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தலை, முண்டம், புறவுறுப்பு என்ற எலும்புகளாகப்பிரித்து நோக்குவாம். தலையிலுள்ள பெரு எலும்புகளாவன மண்டையோடு (Cranium), மூக்கு எலும்புகள், கன்ன எலும்புகள், மேல் தாடை எலும்புகள், கீழ்த் தாடை எலும்பு (Lower jaw bone) முதலியனவாம். முண்ட எலும்புகளின் பகுதிகளாவன :—முள்ளந்தண்டுக்கூடு (Spinal Column), பழுவெலும்புகள் (Ribs) 12 இரட்டை (Pairs), நெஞ்செலும்பு (Sternum) 1, கழுத்துப்பட்டை எலும்புகள் (Collar bones) 2, தோள்பட்டை எலும்புகள் (Shoulder blades) 2, இடுப்புவளையம் (Pelvic Girdle), முதலியனவாம். இவற்றுள் முள்ளந்தண்டுக் கூட்டில் 24 வளையங்களும் (Vertebrae), ஓர் மும்முடக்கி எலும்பும் (Sacrum), வால் எலும்புகளும் (Coccyx) இருக்கின்றன. இத்தண்டுக்கூடு ஒரே எலும்பினாலாக்கப்பட்டிருப்பின் நம்மாற் குனியவும், வளையவும், நெளியவும் முடியாது. பழுவெலும்புகள் 12 இரட்டைகளில் மேல் 7 இரட்டைகள் நெஞ்செலும்பினுடனும், முள்ளந்தண்டுக் கூட்டுடனும் முன்னும் பின்னும் இணைக்கப்பட்டிருப்பதால் வலிவுடையன (Real). அதன் கீழுள்ள 3 இரட்டைகள் இருமுனையிலும் மேற்கண்ட 7-வது இரட்டையுடன் மட்டும் இணைக்கப்பட்டிருப்பதால் வலிவற்றன (Unreal); அதன்கீழுள்ள இரண்டு இரட்டைகள் முள்ளந்தண்டில் மட்டும் இணைக்கப்பெற்று மற்றொரு முனையில் இணைக்கப் படாமையின் தொங்குவன (Floating). கடைப்பிரிவாகிய புறவுறுப்பு எலும்புகள் கையெலும்புகள், காலெலும்புகள் என இரு வகை. கை ஒன்றிற்குப் பின்கை (Upper Arm) எலும்பு 1, முன்கை (Fore Arm) எலும்புகள் 2, மணிக்கட்டு (Wrist) எலும்புகள் 8, உள்ளங்கை (Palm) எலும்புகள் 5, கைவிரல் எலும்புகள் 14 ஆக முப்பது எலும்புகளுள. கால் ஒன்றிற்குத் தொடை எலும்பு 1, கீழ்க்கால் (Leg) எலும்புகள் 2, முழங்காற்சில் 1, குதி (Ankle) எலும்புகள் 7, மிதி (Instep) எலும்புகள் 5, கால்விரல் (Toe) எலும்புகள் 14 ஆக ஈண்டும் முப்பது எலும்புகளே இருக்கின்றன.

கை எலும்புகளுக்கும் கால் எலும்புகளுக்குமுள்ள வேற்றுமைகள் :-முழங்காற்சில்லைப் போல் முழங்கையில் ஒன்றுமில்லை.

மணிக்கட்டிலுள்ள 8 எலும்புகளுக்குப் பதிலாகக் குதியில் 7 எலும்புகள் தாமிருக்கின்றன. ஆதலின் கை கால்களின் எலும்புத் தொகை ஒன்றே. உடற் பளுவைத் தாங்குகிறதால் காலெலும்புகள் கையெலும்புகளினும் பெரியன; உறுதியுடையன. காலிலுள்ள தொடையெலும்பே உடலின் எல்லா எலும்புகளினும் பெரிது, நீண்டது, வலியுடையது. தொடை மூட்டைவிட (மூட்டுகளைப் பற்றி பின்னால் பார்க்க) கைப்பட்டை மூட்டு நாலாப்பக்கமுந் திரும்பும். கைவிரல்கள் கால்விரல்களினும் நீளமுடையனவன்றி இயக்கமுடையனவுமாகும்; இதற்கேற்பவே காற்பெருவிரலினுங் கைப் பெருவிரல் நன்றாயியங்கும். இவ்வாறியங்குவதோடு கைக் கட்டைவிரல் மற்றைய விரல்களுக்கு எதிரில் வரவுங்கூடுமாதலின் நாம் விரல்களால் பல நுண்டொழிலாகிய எழுதல், தைத்தல், இசைக்கருவிகளைப் பயிலுதல் முதலியவற்றைச் செய்து மேம்பாடடைந்திருக்கிறோம். மனிதனன்றிப் பிறவுயிர்கள் இவ்வாறு கட்டைவிரலை இயக்க முடியாதது அவைகளின் தாழ்ந்த நிலைக்கொரு முதலா(காரணமா)கும். உள்ளங்கையெலும்புகள் தட்டையாயிருக்க உள்ளங்காலெலும்புகள் வில் (Arch) வளைவுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. உடலின் அமைப்பில் ஒவ்வொரு வேற்றுமையையும் உற்றுநோக்கில் ஒவ்வொரு உண்மை பற்றியேயிருத்தலைக் காணலாம். அதற்கேற்ப உள்ளங்காலில் உடற்பளுவு உறைக்கும்போது அது சிறிது அகன்று தட்டையாயும் பளு விலகியவுடன் முன்போல் வளைந்தும் விடுவதால் அப்பளுவினால் உள்ளங்காலுக்கு உண்டாகும் நோக்காடு குறைகிறது. உடலின் வியப்புடை அமைப்புள் இஃதுமொன்றே!

மூட்டுகள் (Joints):—நமது உடலிலுள்ள எலும்புகள் யாவற்றையும் சேர்த்து ஒரே எலும்பாக இவ்வுருவுடன் அமைத்திருந்தால் எளிதில் முறிந்துவிடும்; வேண்டியபடி இயங்காது கட்டைபோல் விறைத்திருக்கும். இவ்வாறிலாதபடியே, நமது நன்மைக்காகவே பல துண்டுகளாலாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஒரே கூடாக இணைப்பனவும், பலவழியிற் றிருப்ப இடங் கொடுப்பனவும், பலவித மூட்டுக்களே. இம்மூட்டுகளின் வேலையை நோக்கிப் பெரும்பகுதியாக இருவகையாகப் பிரிக்க-

லாம். ஒன்று அசையாமூட்டு (Immovable Joints); மற்றை யது அசையும் மூட்டு. அசையா மூட்டால் இணைக்கப்பெற்ற எலும்புகள் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு ஒரே எலும்புபோ லிருக்கும். மண்டையோடு எட்டுத் துண்டுகளை இணைத்ததா லாகும் ஓரோடாகும். இவ்வாறு இணைந்திருக்குமிடத்தில் கோணல் மிகவுமுள்ள கோடுகள் தெரியும். இவற்றைத் தான் தலையெழுத்து என்கிறார்கள்.

அசையும் மூட்டை அமைந்திருக்கும் விதத்தைக் குறித்து நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று கீல் மூட்டு (Hinge Joint). இவ்வாறிணைக்கப்பட்ட எலும்புகள் கதவுபோல் ஒரு புறமே இயங்கும். முழங்கை, முழங்கால், கைகால்களின் விரல் கள் இவ்வாறே இணைக்கப் பெற்றிருக்கின்றன. இரண்டாவது குடைகல் குழவி (Ball-Socket Joint) மூட்டு ஆகும். இவ்வாறு இணைக்கப்பட்ட எலும்புகள் குடைகல்லில் குழவி நகருவது போல் நாற்றிசையும் நகரும். கைகளுங் கால்களும் இவ்வாறே முண் டத்துடன் இணைக்கப் பெற்றிருக்கின்றன. சருக்குமூட்டே (Gliding Joints) மூன்றாவதாகும். எலும்புகள் ஒன்றின்மே லொன்று சருக்கும்படி இணைக்கப் பெற்றதனால் இப்பெயர் பெற்றது இம்மூட்டு. உள்ளங்கை, உள்ளங்கால் எலும்புகளின் மூட்டுகள் இத்தகையன. நான்காவதே முளைமூட்டு(Pivot Joint) ஆகும். இவ்வித மூட்டு உடலில் பிடரியினுள் ஓரிடத்தே யிருக் கிறது. ஆங்கு தண்டுக்கூட்டின் உச்சிக்கூர் (Axis) தலையெலும்பு களின் அடிவளைவுள் (Atlas) செலுத்தப்பெற்று இணைந்திருப்ப தால் தலையை நான்குறிக்கிலுஞ் சுழற்ற வியலுகிறது.

அசையும் மூட்டு, அசையா மூட்டு ஆகிய இருவித மூட்டு களின் தன்மையைக் கலந்த கலப்பு மூட்டு (mixed joints)ம் ஒரு வகை மூட்டே. இம்மூட்டால் இணைக்கப்பெற்ற எலும்புகள் சிறிதே இயங்கும். நமது முள்ளந்தண்டுக் கூட்டின் வளையங்கள் 24-ம் இவ்வாறே இணைக்கப்பெற்றிருக்கின்றன. இவைகளை வளைத்துவிட்டு விட்டால் தாமாகவே மீளுந்தன்மை யுடையன வாகலின் இவைகளுக்கு மீளும் மூட்டு (Elastic Joints) என்றும் பெயர்.

அசையும் மூட்டுகளுக்குவேண்டியவை:—அசையும் மூட்டுகள் எளிதாக வேலைசெய்யும் பொருட்டு நான்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருக்கின்றன. எலும்புகள் மூட்டுகளைவிட்டு நகராதபடி எலும்புக்கயிறு (Ligaments) களால் கட்டப்பட்டிருக்கின்றன. எலும்புகள் நகரும் பொழுது ஒன்றோடொன்று உராய்ந்து வலிக்காதபடி எலும்புகள் இணைக்கப் பெறும் நுனியில் மீளுந்தன்மை (Elastic) யுடைய மெத்தென்ற எலும்புக் குருத்துகள் (cartilage) இருக்கின்றன. இக்குருத்துக்களை வழுவழுப்பாக்க நீர் நெய்ப்பொருள் (Lubricant) உண்டாகிறது. இந் நெய்ப்பொருள் சுற்றியுள்ள தசைகளிற் பரவாதபடி தங்குவதற்காக மூட்டைச் சுற்றி உறைகள் (capsule) இருக்கின்றன.

எற்பு நல வழி:—(1) தூய குருதியே எலும்பை வலிமையும் நலமும் உறச்செய்கிறது. கள், சாராயம், புகையிலை, கஞ்சா, அபின் முதலிய மயக்கப் பொருள்கள் குருதியைக் கெடுத்து எலும்புகளை வலியிழக்கச் செய்கின்றன. இன்னும் இளைஞர்கள் இப்பொருள்களை உட்கொள்ளுநவர்களாயின் அவர்களின் எலும்புகள் வளருந்தன்மை குன்றி, குள்ளையாய்ப் விடுவார்கள். அன்றியும் மிளாவலுவிழத்தலையும் அடைகிறார்கள். குடியர்களின் எலும்பு முறிந்தால் எளிதில் ஒட்டிக்கொள்ளாது. (2) இளமை மணத்தாலும் தேற்றமுடியா இளைப்புக்கும், வலியிழத்தலுக்கும் பலர் ஆளாகின்றனர். (3) நமது உடலில் எதேனும் ஒருறுப்பு நிலை மாறியிருந்தால் (Deformed) அவ்வுறுப்பினுடையதன்றி முழு உடலின் நலமும் வேலையும் பழுதுபடும். மேல்நாட்டு முறையைக் கைப்பற்றும் போவாவினால் பலர் கால் கட்டைவிரல்களை மற்றை விரல்களின் பக்கம் வளைக்கக்கூடிய இறுகிய செருப்பணிந்து கொண்டு கட்டை விரல்களையன்றி உடல்நலனையும் பழுதடையச் செய்கின்றனர். இதனால் வளைச்சதைநோய் (Gout) உடையவர்கள் மற்றையோரினும் படும்பாடு பெரிதே. (4) இதனினுங் கேடான உறுப்பு நிலைமாறல் கூனலே யாகும். வண்ணார் போன்ற பெருங்கூனுடையோரன்றி உலகில் மூக்காலே மூன்று விசம் பேர் சிறு கூனுடையோரேயாவர். இன்னோர் குரங்கைப் போற் கூனிக்கொண்டு உட்கார்ந்திருப்பதை எங்குப் பார்த்தாலுங்

காணலாம். இதனுல் உடலினழகு குறைகிறது. அன்றி மார்பு கட்டையாய் ஆழ்ந்த மூச்சுவிட முடியாதாகலின் உடல் நலனும் நாளா வட்டத்திற் குறைகிறது. இன்னும் வேலையின்திறனும் சுறு சுறுப்புங் குன்றுகிறது. இஃதுண்டாவதற்கான கெட்ட பழக்கங்கள் பல. அவையாவன :—(அ) படித்தல், எழுதல், தைத்தல், நடத்தல் முதலிய வேலைகளைச் செய்யும்போது தலையைக் குனிந்துகொண்டு முதுகை வளைத்துக்கொண்டு செய்தல் (ஆ) சாய்மான நாற்காலி (Easy Chair)யில் எப்பொழுதும் அல்லது மிக்கநேரம் சாய்ந்திருத்தல் (இ) வேண்டிய அளவிற்குக் குறைந்த உயாமுடைய எழுதுபலகை (Table) யின்மேல் தாளை வைத்துக் கொண்டு எழுதல், அல்லது படித்தல், அல்லது வேலை செய்தல்(ஈ) ஆடை தோய்த்தல், மண்வெட்டல் முதலிய குனிந்து கொண்டு செய்யவேண்டிய வேலைகளைக் கூனிக்கொண்டு செய்தல். இவ் வேலைகளைச் செய்கையில் முள்ளந்தண்டுக் கூட்டை நிமிர்த்திக் கையினுல் மட்டுமன்றி விலா முதுகு நெஞ்சுத் தசைகளின் உதவியினுலும் செய்வதே வலிவைக் கொடுப்பதன்றி எளிதிற் களைப்படையவுஞ் செய்யாது. (உ) உயர்ந்த குதியுடைய செருப் பணிதல். இக்கொடிய பழக்கம் மேனுட்டு மகளிரிடத்து மிகுதி. (ஊ) இடுப்பை நெருக்கும்படி ஆடையணிதல். இப்பழக்கமும் அன்னுரிடத்தே குடிகொண்டுளது. (எ) முதுகுத்தசைகள் தக்க பயிற்சியின்றி வலிவற்றிருத்தல். இத்தசைகள் தண்டுக்கூட்டை யும் நெஞ்சையும் நிமிர்த்தி வைத்திருக்கும் வேலையுங்கூட அடை யாதபடி நாம் கூனிக்கொள்ளுகிறேம். (ஏ) இம்முன் கூனலன்றி முள்ளந்தண்டுக்கூட்டில் பக்கவளைவும் சில கொடிய பழக்கங்களால் சிலருக்கு உண்டாகிறது. இஃதுண்டாம் விதம் :—(அ) வேண்டிய அளவிற்குமேல் உயர்ந்த எழுதுபலகையின் மேல் தாளைவைத்துக் கொண்டு எழுதல் (ஆ) வழக்கமாக ஒரு கையாலேயே பளுவான பொருள்களைத் தூக்கிச் செல்லல். (இ) தலையை ஒரு பக்கமாகவே சாய்த்துக்கொண்டிருத்தல் முதலியனவாம்.

ஒழுங்காக உட்கார, நிற்க, வேலை செய்யத் தெரியாதோர்:— நமது கோயில்களிலுள்ள சிலைகள் ஒழுங்காய் நின்று கொண்டும்

உட்கார்ந்து கொண்டிருத்தலைப் பார்த்திருப்பீர்கள். எவ்வளவு முதியோராயினும் இதைக் கற்போர் ஒவ்வொருவரும் (சொல்லுவது புதுமையாயிருப்பினும்) அச்சிலைகளைப்போல் முறைப்படி உட்கார, நிற்க, வேலை செய்யப் பழகுதல் வேண்டும். மேற்கண்ட தீய பழக்கங்களில் எது தமக்கிருக்கிறதென ஆராய்ந்து அதை மாற்று எதிர்ப்பழக்கத்தால் நீக்கவேண்டும். இவ்வெதிர்ப் பழக்கம் மறதியால் விடப்படுமாகையால் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு இருக்கவேண்டும். எப்பொழுதும் தலையை நிமிர்த்தி, மார்பை முன்னுக்கி, தோள்களை உயர்த்தி விரியச்செய்து, வயிற்றை உள்ளடக்கி, குண்டுக்கட்டை கோணாது இருக்கப் பழகவேண்டும். வலிவற்ற முதுகுத்தசைகள் வலிவடையும்படி தக்க பயிற்சிகள் (Exercises) செய்ய வேண்டும். முன் கூனலுடையோர் தலைக் கணையின்றி மல்லாந்து தூங்கப் பழகுவரேல் கூனல் நிமிரும். இளமையிலேயே தீய பழக்கங்களை நீக்கி நற்பழக்கங்களைக் கையாளுவதே எளிது.

எலும்பு முறிவிற்கு முதலுதவி:—எலும்பு முறிவின் வகையிரண்டு. ஒன்று வெற்றெலும்பு முறிவு (Simple Fracture); மற்றையது எக்கச்சக்கமான எலும்பு முறிவு (Compound Fracture). முதல் வகையில் எலும்பு முறிந்து தசைக்குள்ளேயேயிருக்கும். இரண்டாவது வகையில் முறிந்த எலும்பு தசையைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்துவிடும். இப்பிந்தியதால் குருதி ஒழுக்கு ஏற்படுவதுடன் காயத்தில் காற்றுப் படுவதால் சீழ்கோத்துக் கொள்ளுங் கெடுதியுண்டாகக் கூடியது. எலும்பு முறிவின் அடையாளங்களாவன:—அவ்விடத்து வலி, வீக்கம் உண்டாதல்; முறிந்து தொங்கும் பகுதி செயலற்றுப்போதல், அவ்விடம் ஒழுங்கினமாயும், குறுகியுமிருத்தல்; ஆடக்கூடாத விடத்தில் ஆட்டமுண்டாதல்; அசைவுண்டாம்பொழுது கொர கொரப்புண்டாதல் முதலியனவாம். எலும்பு முறிந்தவனை இருந்த விடத்திலிருந்து அப்புறப் படுத்தவே கூடாது. ஏனெனில் முறிந்து தொங்கும் பகுதி ஆடுவதால் கெடுதிமிகும். இருந்த விடத்திலேயே இருக்கும் பொழுதும், தொங்கும் பகுதி அசையாதபடி தாங்கவேண்டும்.

எக்கச் சக்கமான எலும்பு முறிவாயின் உடனே குருதி ஒழுக்கை நிறுத்தவேண்டும். (நிறுத்தும் விதத்தைப் பின்னுற் பார்க்க) பின்னர் எலும்புத் துண்டுகள் ஒன்றின்மேலொன்று ஏறி ஒழுங் கின்றியிருந்தால் சிறிது இழுத்து நோக்க வேண்டும். பின்னர் சப்பைவைத்துக் கட்டவேண்டும். சப்பைக்காகும் பொருள்களோ எண்ணில. கைப்பிரம்பு, குடை, செருப்பு, காற்றடிக்கும் எற்றம் (Cycle Pump), மொத்த அட்டை, மொத்தமாய் மடித்த புதினத் தாள் (News paper) முதலிய கைக்கு அகப்படும் பொருள் எவற்றையேனும் பயன் படுத்தலாம். இவ்வாறே கட்டுவதற்குக் கயிறு சடுதியில் அகப்படாவிடின் கைக்குட்டை, சிறு துண்டு, கச்சை, கழுத்துப்பட்டி முதலியவைகளும் பயன் படும். கட்டும் பொழுது சப்பைகள் மெதுவாயிருக்கும்படி அவைகளுக்குத் துணி சுற்றல் வேண்டும். நிலையுள்ள பங்கைக்கட்டிவிட்டுத் தான் தொங் கும் பங்கைக் கட்டவேண்டும். குருதியோட்டம் நின்று போகும் படி அவ்வளவு இறுக்கிக் கட்டலாகாது. இடத்திற்குத் தக்கவாறு ஒன்று அல்லது இரண்டு சப்பைபயிட்டுக் கட்ட வேண்டும். இவ்வாறு கட்டப்பட்டது கையாயின், கழுத்தில் தொட்டில் கட்டி அதிற்கையை மடித்துத் தொங்கவிட வேண்டும். அப்பொழுது தான் கைப்பாரம் முறிவில் உறைக்காது.

மூட்டு நழுவு (Dislocation) தாடை, தோள், முழங்கை இவ் விடத்து ஏற்படும். இதன் அடையாளங்கள் வெற்றெலும்பு முறிவை ஒத்தேயிருக்கும். ஆனால் ஆடக்கூடா விடத்தில் ஆட்ட மும், ஆடும் பொழுது கொர கொரப்பும் உண்டாகாது. இதை மருத்துவரால்தான் சரிப்படுத்த முடியும். நாம் ஒருக்காலும் சரிப் படுத்த முயலலாகாது. எனினும் மிகக் குளிர்ந்த நீரில் நனைந்த துணியால் ஒத்தலாம்.

குருதிக்கட்டு (Sprains) யாதேனும் ஒரு மூட்டின் எலும்புக் கயிறுகள் அறுவதால் உண்டாகிறது. இதனால் அவ்விடத்து வலி, வீக்கம், நிறம் மாறல் (கறுப்பாதல் அல்லது சிவத்தல்) உண்டா கின்றன. இதற்கு அவ்விடத்தை அசைக்காதிருத்தலும் குளிர்நீர் ஒத்துக்கொடுத்தலுமே நலம். குருதி கட்டிய விடத்தை உயர்த்தி வைத்திருக்க வேண்டும்.

தொடரும்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சாவூர்.

முகவுரை.

திருச்சுழியல் வெண்பா அந்தாதி என்னும் இவ்வரிய நூலை இயற்றியருளிய பெரியார், பெயர், காலம், குடி முதலியவற்றில் ஒன்றேனும் நன்கு புலப்படவில்லை. என்றாலும் இந்நூலிற் கூறியுள்ள பொருளையும், செய்யுள் நடை, பொருளமைதி, அலங்காரம் முதலியவற்றையும் நோக்குழி, இவர் சைவத்தில் மிகப்பற்றுடையார் என்பதும், தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளையும், சைவபுராணங்களையும் நன்கு கற்றறிந்தவர் என்பதும், தமிழில் மிகுந்த பாண்டித்தியம் உடையவர் என்பதும் போதரும்.

திருவிருத்தம், சடகோபரந்தாதி, அழகர் கலம்பகம் முதலிய வைணவ நூல்களிற் சில அருமையான கருத்துக்களையும் செய்யுள் அடிகளையும் இந்நூலில் ஆங்காங்கு அமைத்திருப்பதால், இவர் வைணவ நூல்களிலும் நன்கு பழக்கமுடையவர் என்பதும் வெளியாகின்றது.

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளுஞ் செறிந்து திட்பநுட்பம் வாய்ந்த செய்யுட்கள் பல இந்நூலில் திகழ்வது அறிஞரால் பாராட்டற்பாலதாம்.

சில்லாண்டுகட்கு முன்பு, எனது தந்தை பண்டிதர் "பால சரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார்"ல் ஒரு விரிவுரையுடன் வெளியான இந்நூலை, மறுமுறை "தமிழ்ப் பொழில்" வாயிலாக ஒரு குறிப்புரையுடன் வெளியிடலானேன்.

இவ்வரிய முயற்சியில், எனக்குக் கடைபோகு மட்டும் தோன்றாத் துணையாய் இன்னருள் சுரந்து நின்ற, பன்னருஞ் சீர்த் திருமேனி நாதனது அடித்தாமரைகளை, மனமொழி மெய்களாற் பணிகின்றேன்.

இங்ஙனம்,
கி. அரங்கராசன்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

காப்பு.

நிறமுற்ற மாச்சுழியல் நின்மலற்கோர் மாலை
நிரமுற்ற வெண்பாவாற் செய்ய—அறமுற்ற
ஆலமர்ந்தான் போலிங் காசமர்ந்த அத்தியுமென்
காலமர்ந்தான் செஞ்சொற் றரும்.

நிறமுற்ற மாச்சுழியல்—ஒளிபொருந்திய திருச்சுழியல். திருமாலினது மார்பிலே உறைகின்ற ஸ்ரீதேவி வாசம் செய்யும் திருச்சுழியல் எனினுமாம். நிறம்—மார்பு. அறமுற்ற—சனகாதி நால்வர்க்குத் தருமங்களை உபதேசிப்பதற்காக. தாலமர்ந்தான்—முற்றெச்சம்.

நூல்.

க. பொன்னார் சுழியற் புனிதா! சரணென்று
மின்னார் சடையுடைய மெய்ப்பொருளைச்—சொன்னார்
புலையரே யானாலும் புண்டரிகக் கண்ணன்
தலையரே யாவரவர் தாம்.

பொன்னார் சுழியற் புனிதா—ஸ்ரீதேவி உறைகின்ற திருச்சுழியலில் எழுந்தருளியிரா நின்ற பரிசுத்தனே. இனி, பொன்னார் புனிதா என இயைத்து, பொன் போன்று என்றும் பரிசுத்தனாயிருப்பவனே, எனப் பொருள் கொள்ளலுமாம். மின்னார் சடை—மின்னற் கொடிபோன்ற சடை; மின்னற் கொடிபோன்ற கங்கா தேவியார் உறைகின்ற சடை எனலுமாம். புண்டரிகக்கண்ணன் என்பதற்கு இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் புண்டரிகம் போன்ற கண்களையுடைய திருமால் என்றும், புண்டரிகத்தின்கண்

வீற்றிருக்கும் பிரமன் என்றும் இருபொருள் கொள்க. இச் செய்யுளை "சங்கநிதி பதுமநிதி" என்னும் அப்பர் தேவாரத் தொடு ஒப்புக் காண்க.

௨. தாம்பினாற் கட்டுண்ட தாமோ தரன்வாழ்வும்
போம்பினால் நெஞ்சே! புகழ்ந்திறைஞ்சி—தும்பினால்
கற்கின்ற நீர்க்கழியற் காளையார் தந்தருள்வர்
நிற்கின்ற செல்வம் நினக்கு.

தாமோதரன்—வயிற்றில் கயிறுடையான், எனவே கண்ணன்.

"தாம்பினாற் கட்டுண்ட தாமோதரன்" என்பது "அழாழி" "அடியளந்தான் தாஅயதெல்லாம்" என்பனபோல வந்தது. "மதகரிதாமும்" என்ற கம்பராமாயணமும் காண்க.

திருமாலைத் தாம்பினாற் கட்டுண்டான் என்றதனால், சிவபெருமான் பக்தி வலையானன்றி மற்றொன்றால் கட்டுப்படான் என்பது பெறப்படும். தும்பினால்—துதிக்கால். நிற்கின்ற செல்வம்—முத்தி. பின்னால் என்பது பினால் எனத் தொக்கது.

௩. நின்னை நினைக்க நினைந்தாய் நிரந்தரமும்
உன்னை யடியேன் உளம்வைத்தாய்—என்னில்
எனக்கினியான் ஆரோய்; எழிற்கழியல் நாதா!
உனக்கினியான் செய்வ துரை.

என்னில்—என்னைக்காட்டிலும். அவனருளாலே யவன்றாள் வணங்கல் வேண்டுமேயன்றிச் சிவகோடிகள் தம்மறிவின் செறிவினால் அவனைக்கண்டு வணங்குதல் கூடாமையை விளக்குவார் நின்னை நினைக்க நினைந்தாய் நிரந்தரமும் என்றார் என்க. முதலடி முற்றுமோனை.

௪. உரையார் தெரிந்திரார்? ஒண்கழியல் நாதா!
நிரையார் சடைவனத்தைச் செந்தாள்—மரையை
அயன்கோலங் கொண்டானேல் ஆழிமால் அன்ன
வியன்கோலங் கொண்டானேல் வேறு.

ஒன்சுழியல் நாதா! வேறு அயன்கோலங் கொண்டானேல் ஆழிமால் அன்னம் வியன் கோலங் கொண்டானேல் நினையார் சடைவனத்தைச் செந்தாள் மரையை யார் தெரிந்திரார்? உரை- என இச்செய்யுட்கு உரைநடை காண்க.

வனத்தை வராகமும், தாமரையை அன்னமும் அறியும்; இது அறியாமல், பிரமனாகிய அன்னம் சடை வனத்தையும் மாலாகிய பன்றி தாட்டாமரையையும் தேடப்புக்கதனாலன்றோ காணமாட்டாமல் மயங்கின; பிரமதேவன் பன்றியாகமேலே சென்றிருந்தால், திருமால் அன்னமாகக் கீழே சென்றிருந்தால் நினைந்த சடை வனத்தையும், திருவடித்தாமரையையும் முறையே கண்டிருப்பார் என்பது இச்செய்யுளிற் கூறிய பொருள்.

ரு. வேறு படுமுடலை வேண்டீர் வெறுப்பீரேற்
சேறு படுகொன்றைச் செஞ்சடையான்—பேறு
தருஞ்சுழிய னாதன் சரணடைமி னில்லைப்
பெருஞ்சுழிய லாழிப் பிறப்பு.

வேறுபடும் உடலை—பல்வேறு வகைப்படுகின்ற சரீரத்தை. இனி வேறுபடும் முடலை என எடுத்து—சீவாத்மாவைப் பரமாத்மாவுக்கு அடிமை செய்ய வொட்டாது வேறு தீய வழியிலே படுத்தும் சரீரத்தை எனினுமாம். முடலை-முறுக்கு; இங்கே முறுக்குண்ட சரீரத்துக்கு ஆகுபெயர். சேறு-தேன். இது இப்பொருளாதலை "சேறு நாற்றமும் பலவின் சுளையும்" என்ற மதுரைக்காஞ்சியானும் "சேறுபடுமலர்" என்ற சிந்தாமணியானும் அறிக.

சு. பிறனில்லைக் காதலிக்கும் பேதையேன் செய்த
தறனில்லைச் செய்யாத தந்தோ!—மறனில்லை
என்னையுங் கொண்டான் திருமேனி யெம்பெருமான்
அன்னையும் தானா யணைத்து.

செய்தது அறனில்லை—செய்ததாகிய சிவதருமம் (ஒன்றேனும்) இல்லை. என்னையும்-நல்லன நீத்தும் (அல்லன கொண்டும் பாவியான) அடியேனையும். சிவபிரான் அர்த்தநாரீச்சுரராதலான் "அன்னையும் தானாய்" என்றார் என்க.

அன்னமோடுரைத்தல்.

௮. துணைமாலை பாகனுக்கென் சோர்வெல்லாஞ் சொல்லீர்
நிலைமாலைப் பேடைதழீஇச் செல்வீர்—கலைமாலை
போழ்வதோ பாரீர் பொலஞ்சிறைய அன்னங்காள்!
தாழ்வதோ பெண்டுறந்தான்.

நிலைமாலை—நற்குடிப்பிறப்பால் வந்த இயல்பினையுடைய. கலை-மன்மத பாணங்கள். மாலை-மாலைக்காலத்தில்.

துணைமாலை பாகன் என்றது, ஒரு பாகத்தில் தேவியிருக்கின்றமையாதலின் அவன் அறியாமற் கூறவேண்டும் என்று குறிப்பதற்காக வென்க. ஆற்றலின்மை கூறி மறுத்தற்கிடனில்லை யென்பாள் "பொலஞ்சிறைய அன்னங்காள்" என்று விளித்தாள். தங்காரியமாகச் செல்லும் போது என் காரியத்தையும் சிறிது செய்யலாமே, என்று குறிப்பாள் "பேடைதழீஇச் செல்வீர்" என்றாள். தூதற்கு உயர் குடிப்பிறப்பும் இலக்கணமாதல் பற்றி நிலைமாலைப் பேடை தழீஇ என்றாள்.

இச்செய்யுளை

"இன்னென்ன தூதெம்மை யாளற்றப் பட்டிரந் தாளிவளென்
றன்னன்ன சொல்லாப் பெடையொடும் போய்வரு நீலமுண்ட
மின்னன்ன மேனிப் பெருமா னுலகிற்பெண் டூதுசெல்லா
வன்னன்ன நீர்மைகொ லோகுடிச் சீர்மையி லன்னங்களே"

என்ற நம்மாழ்வார் பாசுரத்தோடு ஒப்புக்காண்க. பொன் + சிறை = பொலஞ்சிறை. இப்புணர்ச்சி "பொன்னென் கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ், செய்யுண் மருங்கிற் றொடரிய லான" என்னுந் தொல்காப்பியச் சூத்திர விதியால் முடிந்தது. நன்னூல் விதியின்படி பொலம் + சிறை எனப்பிரித்துப் புணர்க்க.

தொடரும்.

உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் :	பிரபவ—மார்கழி, தை, மாசி,	மலர் :
௩.	பங்குனி.	௯—௧௨.

உ

இராசராசன்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 136 பக்கம்.)

இனி, திருவாரூர், திருநாகை, திருக்காறாயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் என்னும் ஏழுதலங்களினும் தியாகராசர் எழுந்தருளப்பெற்றிருத்தலின் இவை சத்தவிடங்கத் தலமெனப்பட்டன; விடங்கர் தியாகராசராதலின். இதனை,

"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில்—பேரான
ஒத்ததிரு வாய்மூ ருவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்" என்னும் வெண்பாவானுணர்க.

இஃது இவ்வாருக. தஞ்சை இராசராசேச்சரத்து எழுந்தருளிய தியாகப்பெருமானுக்குத் தட்சிணமேரு விடங்கர் என்னும் பெயர் காணப்படுகின்றது. இத்தஞ்சை மேற்கண்ட எழு தலங்களுள் ஒன்றல்லவாகவும் இதன்கணுள்ள தியாகர்க்கு இப்பெயர் வருதற்கு இயைபென்னை என்றுராய்வது இன்றியமையாததாகலின் அதனை ஆராய்வாம்

இனி, தியாகர் எழுவரையும் விண்ணவர்க்கரசன்பாற்பெற்று மண்ணுலகில் எழு தலத்தும் ஒரு பகலில் அமர்வித்து வழிபட்டனன் முசுகுந்தன் என்பர். இவ்வாலாற்றை,

"நன்றெனவே விடைகொண்டு நானிலத்தி னிடையிழிந்து
தென்றிசையா ரூர்தன்னிற் சிவனுறைபூங் கோயில்புக்கு
மன்றல்கமழ் தண்டுளவோன் வழிபடவீற் றிருந்தோரை
வென்றியரி யணைமீதில் விதிமுறையாற் றாபித்தான்.

கடனாகை நள்ளாறு காறாயல் கோளிலியூர்
மடனாக முத்தினும் வாய்மியூர் மறைக்கானம்
உடனாருந் தலமாறி லோராறு வடிவுகொண்ட
படநாக மணிவேணிப் பரஞ்சுடரை யமர்வித்தான்.

இப்படியே யொருபகலி லெழுவரையுந் தாபித்து
மெய்ப்பரிசில் வழிபாடு விதிமுறையாற் புரிவித்துச்
செப்பரிய புகழாரூர்த் தேவனுக்கு விழாச்செய்வான்
முப்புவனங்களும் போற்று முசுகுந்தன் முன்னினனால்."

என்னும் கந்தபுராணம் கந்தவிரதப்படலச் செய்யுட்களால் அறியலாம்.

அம்முசுகுந்தனை இராசராசனது முன்னோர்களில் ஒருவனென ஆனைமங்கலத்துச் செப்பேடு கூறுகின்றது. தன் முன்னோரிற் சிறந்தோனாகிய அவன் வழிபட்ட தலம் என்னும் இயைபு பற்றிப்போலும், இராசராசன், ஏனைய தலங்கட்குச் செல்லாமலும் விடங்கர் தலத்துட் சிறந்து விளங்கும் திருவாரூர்க்குச் சென்று தியாகேசரை வழிபட்டுவருவானாயினன். இதனை, "ஆரூர்த்

தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சி யுலகில் புகழ்பெறு ராசராச மன்னவ்" என்னும் திருமுறைகண்ட புராணச் செய்யுளால் அறிக.

இவ்வாறு வழிபட்டு வந்தவன் தனக்கு இராசராசன் என்னும் பெயர் ஏற்பட்டு, அப்பெயரால் தன் தலைநகர்க்கண் இராசராசேச்சரம் எடுப்பித்த பின்னர், திருவாரூர் ஆலய முறிகைப்படி, இவ்வாலயத்தும் தியாகரை எழுந்தருளுவித்துச் சிறப்பொடு பூசனை விருப்பொடு நடாத்தியதோடு விடங்கர் என்னும் பெயரையும் இவர்க்கு இட்டு வழங்கினன் என்ற இயைபு கோடல் பொருத்தமுடைத்தாதல் காண்க.

இனி, இவ்வாலயத்து எழுந்தருளுவித்த திருமேனிகளில், பழைய வரலாற்றினை நினைவுறுத்தும் சிலவற்றினை ஈண்டு எடுத்துக் காட்டுவது இன்றியமையாததாகலின் அவற்றைக் கூறுவேன். ஒரு இலிங்கமும் அதினின்று நான்கு திருக்கரத்துடன் தோற்றிய சிவவடிவமும் அதனையடுத்துப் பிரமனும் பன்றி முகனுடைய திருமாலும் நிற்கும் இலிங்க புராணதேவர் திருமேனி, திருமாலும் பிரமனும் அடிமுடி காணமாட்டாது எய்த்து நிற்க, இலிங்கத்து நின்றும் வெளிப்பட்டு அவர்க்கு இறைவன் அருளிய வண்ணத்தையும்; பிரமன் இருந்து சடங்கியற்ற, திருமால் நின்று காத்து நீர்வார்க்கப் பிராட்டியோடு நான்கு திருக்கரத்துடன் எழுந்தருளி நின்ற கலியாண சுந்தரர் திருமேனி, புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன் தொழில்காட்டப் புவனவாழ்க்கைச் செயல்வண்ணம் நிலைநிறுத்த இறைவன் மலைமகளை மணந்த செய்தியையும்; கின்னரர் கின்னரிகள் கர்ணபிராவிர்தர்கள் இருடிகள் நால்வர் மருங்கிருப்பப் புலியும் பாம்பும் கிடக்கும் இரண்டு சிகரத்தினையுடைய ஒரு மலையின் உச்சியில் ஒன்பது பணையும் நாற்பத்திரண்டு கிளைகளும் போக்கிப் பொக்கணம் ஒன்று தூங்க நின்ற ஆலமரத்தடியில் முயலகனைத் திருவடியிற் கிடத்தி நான்கு திருக்கரத்துடன் சுகாசனமாக வீற்றிருக்கும் தக்கணாமூர்த்தி திருமேனி, கல்லாலின் புடையமர்ந்து இருடிகள் நால்வர்க்கும் அன்னல் அறவுரை பகர்ந்த மாண்பினையும்; சிவ

வழிபாட்டிற்கு இடையூறு விளைத்த தந்தையைத் தாளற வீழ்த்தி இறைவனை வழிபட்டுப் பிரசாதம் பெறுதற்கு இரண்டு காத்தையும் நீட்டிநிற்கும் சண்டேசர்க்கு, முயலகன் திருவடியிற் கிடப்ப, பிராட்டியோடும் எழுந்தருளித் தமது திருக்கரத்தால் மலர் மாலையை நல்கும் சண்டேசப் பிரசாத தேவர் திருமேனி, சண்டேச நாயனார் வரலாற்றினையும்; நாற்புறத்தினும் நந்நான்கு திருக்காங்களோடு நான்கு திருமேனிகள் தன்னிற் கிளைத்து நிற்க, அவற்று நாப்பண் பத்துத்திருக்காங்களோடு அவற்றினும் உயரமாக எழுந்தருளி நின்ற பஞ்சதேக மூர்த்திகள், பிரமன், விண்டு, உருத்திரன், மயேசன் என்பார் சதாசிவத்தினின்றும் தோற்றிய உண்மையினையும் விளக்கி நிற்றல் காண்க.

இனி, இவ்வாலயத்து எழுந்தருளப்பெற்றுள்ள சிவனடியார் வடிவங்களுள் மிலாடுடையார் படிமம் ஒன்றாகும். இம் மிலாடுடையாரே, சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவராகிய மெய்ப்பொருள் நாயனாராவார். இவர் பெயரால் திருநாகேச்சரத்தைச் சார்ந்த குமாரமாத்தாண்டபுரத்தில் எடுக்கப்பெற்ற மிலாடுடையார்பள்ளி எனப்பெயரிய கோவிலுக்குக் குமாரமாத்தாண்டன் என்னும் திருச்சுற்றுலையை அந்நகரத்தார் எடுப்பித்தனர் என்பது 222 of appendix B of 1911-ஆல் அறியக்கிடக்கின்றது. திருவிடைமருதூர் மகாலிங்கேச்வரர் ஆலயத்து நடுவிமானத்தின் வடசுவரில் வெட்டப்பட்டுள்ள சாசனம், காடுபட்டிகள் நந்திபோத்தரையன் என்னும் பல்லவமன்னன், குமாரமாத்தாண்டன் என்னும் விளக்கொன்றினைக் கொடுத்தனன் எனக் கூறுகிற்கும். இதனால் குமாரமாத்தாண்டன் என்பது நந்திபோத்தரையனது மறுபெயர் எனக் கொள்ளக்கிடத்தல் காண்க. இம்மிலாடுடையாரைப்பற்றி முன்னர்ச் சுட்டுவது இராசகேசரிவன்மன் முதலாம் ஆதித்தனது இரண்டாம் ஆண்டுச் சாசனமேயாம். ஆதித்தனென்றால் கி. பி. 880 முதல் 907 வரை ஆட்சிபுரிந்தவன். ஆகவே மெய்ப்பொருள் நாயனாராகிய மிலாடுடையார், அவனுக்குச் சில காலத்திற்கு முற்பட்டிருந்தாரெனக் கோடல் அமையும் என்பதை Annual Report on Epigraphy for 1912, Part II, para 12 இல் காண்க.

இனி, இவ்வாலயத்தில், சிறுகாலை உச்சம்போது இராவை என்ற மூன்று காலத்தும் பூசை நடைபெற்றது. "ஸ்ரீராஜராஜீச்வர முடையார் ஆடியருளுந் திருமஞ்சன நீரிலுந் தண்ணீர் மீதிலுமிட பெருஞ்சண்பக மொட்டுக்கும் ஏலவரிசிக்கும் இலாமச்சத்துக்கும்" என்னும் சாசனப்பகுதியால், பெருஞ்சண்பக மொட்டு ஏலரிசி இலாமச்சம் ஆகிய இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் ஆட்டினமை அறியலாம். நெய்கொண்டு திருவிளக்குகள் ஏற்றப்பட்டன. நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு நெய் அளப்பதற்கு, ஆடு பசு எருமை என்ற மூவினமும் இடையர்கள் பெறுவாராயினர். அங்ஙனம் பெறுமிடத்து, ஆடெனில் தொண்ணூற்றாறும், பசுவாயின் நாற்பத்தெட்டும், எருமை என்றால் பதினாறும் பெறுவர். அவற்றுள், பசுவொடு சார்த்திக் கொடுத்த எருதும் கன்றும் பசுவாகவும், எருமையொடு சார்த்திக்கொடுத்த கிடாவும் கன்றும் எருமையாகவும், ஆட்டொடு சார்த்திக்கொடுத்த கிடாயுங் குட்டியும் ஆடாகவும் கொள்ளப்பட்டன. இதனை, "திருவிளக்குக்கு நெய் அளக்கக் கடவர்களாக இடையர்வழி திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடு தொண்ணூற்றாறாகவும் பசுநாற்பத்தெட்டாகவும் எருமை பதினாறாகவும் இவையிற்றுக்கு பசுவின் கன்றும் எருதும் பசுவொடு சார்த்திக்குடுத்தன பசுவாகவும் ஆட்டுக்குட்டியுங் கிடாயும் ஆடு சார்த்திக் குடுத்தன ஆடாகவும் எருமைக் கன்றுங் கிடாவும் எருமை சார்த்திக் குடுத்தன எருமையாகவும்............கொண்ட இடையர்கள்............திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடவல்லானால் நிசதம் நெய் உழக்காக அளக்கக்கடவர்" என்றதனால் அறியலாம். மேற்கூறிய மூவினத்துள், ஒரு எருமைக்கு மூன்று பசுவும், ஒரு பசுவுக்கு இரண்டு ஆடும் ஒப்பாதல் காண்க. யாடும் பசுவும் மூத்து இறந்து படுமுன், இடையர்கள் அவற்றை மாற்றி வேறு கொள்ளக் கடமைப்பட்டவராதலின், அவைகளைச், "சாவா மூவாப் பேராடு சாவா மூவாப் பசு" எனச் சாசனங் கூறும்.

இனி, பழவரிசியாற் சமைத்த போனகம், கறியமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது, வெள்ளிலை

யமுது இவை நாடோறும் மூன்று போதினும் திருவமுது செய்விக்கப்பட்டன.

இனி, திங்கடோறும் திருவிழா எழுந்தருளுந் திருமேனி கட்குப் பழவரிசியால் அட்டபோனகமும், பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் இவை கொடு செய்த அப்பக்காய்க் கறியமுதும், மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி, தயிர், நெய், கடுகு இவைகொண்டு அட்ட புளிங்கறியமுதும், புளியிட்டடுங்கறியமுதும், காய்க்கறியமுதும், பொரிக்கறியமுதும் பிறவும் அமுது செய்வித்தனர்.

இனி, திங்கட்டிருவிழா என்பன, இராசராசன் பிறந்த நாளாகிய திருச்சதயத் திருவிழாப் பன்னிரண்டும், கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாள் ஒன்றும் ஆகப் பதின்மூன்றுமாம்.

இனி, "வெந்த குங்கிலியப் புகைவிம்மவே—கந்த நாறுங் கழிப்பாலையார்" எனத் தேவாரத்தும், "கங்கைநீர் கலிக்குஞ் செல்வக் கண்ணுதலெம்பிராற்குப்—பொங்குருங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல" எனப் பெரிய புராணத்தும், "ஆலய மெங்கெங்கும்—காநிய குங்குலியப் புகை" எனச் சேக்கிழார் நாயனார் புராணத்தும் ஆலயங்களிற் குங்குலியப்புகை யிட்டமை கேட்கப்படுவதானும், திருவையாற்றில் ஆட்கொண்டார் திருமுன்னர் குங்குலியக்குழி இன்றும் காண்டக இருத்தலானும், பண்டைக்காலத்தில் குங்குலியமே திருப்புகைக்குக் கைக்கொண்டனவென்பதும் இற்றை நாளையில் வழக்கிலுள்ள சாம்பிராணி இருந்ததில்லை என்பதும் ஒருதலை.

இனி, இவ்வாலயத்தில் திருவமுது செய்விக்கும்போது திருப் புகையோடு கற்பூரம் காட்டப்பட்டமை சாசனங்களால் அறியக் கிடக்கின்றது. அப்பொழுது புகைக்குக்கொண்டது எதுவெனிற் குங்குலியம் அன்று; சிதாரியாம். அதனைச் சிதாரி எனக் கொண்டு நிப்பற்றவைப்பதற்கு இன்றியமையாத மெல்லிய மரப்பட்டை என்று எழுதினோருமுண்டு. ஆனல் அது சிதாரியன்று, சீதாரியேயாம். சீதத்திற்கு-குளிர்ச்சிக்கு, அரி-பகையாதலால்,

இப்பெயர் பெற்றது. மக்கள் நீராடிய பின்னர் இப்புகை காட்டும் வழக்குண்டு; அது, "பாதாதிகேசம் பழிப்பில்லாள் பாங்கமைந்த சீதாரி கொண்டுதன் மெய்ப்புகைத்தாள்" என ஞானவுலாக் கூறு மாற்றலறிக. அஃது யாதோவெனிற் சந்தனத்தூளேயாம். என்னை? இராசராசதேவர் முதற்பெருந்தேவியார் எடுப்பித்த ஒலோகமாதேவீச்சரத்து, "திருமெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்குமாக நிசதம் சந்தனம் முப்பலம்" என்னும் சாசனப்பகுதியால் அறியக்கிடத்தலால்.

இனி, திங்கள் விழாவேயன்றி ஆண்டு விழாவும் நடைபெற்றது. அது ஒன்பது நாள் நடைபெறும். ஆட்டைப் பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்று நாளையும் ஆடவல்லார் எழுந்தருளு நாளையும் பறையறைந்து தெரிவிப்பர். ஒவ்வொரு திங்கட்டிரு விழாவினும் ஆட்டைத் திருவிழாவினும் வழிபட்டு உடன்வரும் சிவயோகியர் பதின்மர்க்கு உடையார் சாலையில் உணவளிப்பதுண்டு. ஆட்டை விழாவாகிய வைகாசிப் பெரிய திருவிழாவில் இராசராசேச்சரத்தில் இராசராசேச்வர நாடகம் நடைபெறும். நாடகம் ஆடுவோனுக்கு ஆண்டாண்டு தோறும் நூற்றிருபதின் கலநெல் நிபந்தம் ஏற்பட்டிருந்தது.

இனி, இவ்வாலயத்திற்கு வேண்டு நிபந்தங்களைக் கூறிப் போதரும் சாசனங்களில் தேங்காயும் மிளகாயும் கூறப்படவில்லை. தேவர்க்காம் உணவாதலின் மிளகாய் ஒழித்தனர் எனினும் ஒழிக. சோழநாட்டில் தென்னை இருந்திலது என்றல் அமையாது. என்னை? ஆனைமங்கலச் செப்புப்பட்டயத்தில் "இவ்வூரானிட்ட தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாததாகவும்" என்றும், "காவு தெங்கிடப் பெறுவதாகவும்" என்றும் காணப்படுதலின். அன்றியும் இவ்வாலயத்து வடசுவரில் பொறிக்கப் பெற்றுள்ள சாசனத்திலும், "தெங்குமாம் நின்ற நந்தவானமும்" எனக் கூறப்படுதலின், தென்னை இருந்தமை அறியக்கிடப்பினும், சாசனங்களிற் கூறப்படாமையின், இற்றை நாளிற்போலத் தேங்கா யுடைத்து வழிபடும் வழக்கு அற்றை நாளில் இருந்தில்லை போலும் என்று ஊகிக்கலாம்.

இனி, இவ்வாலயத்து எழுந்தருளுவித்தவற்றுள் கடவுள் வடிவமையில் திருமேனி எனவும், மக்கள் வடிவமாயின் பிரதிமம் எனவும், வழங்கியிருத்தல் பாராட்டற்பாலது. அவற்றை, "எழுந்தருளுவித்த பிச்சதேவர் திருமேனி ஒன்று' 'நம்பி ஆரூரர் பிரதிமம் ஒன்று' "நம்பிராட்டியார் லோகமாதேவியார் பிரதிமம் ஒன்று" என்பவற்றுட் காண்க.

இனி, இவ்வாலயத்து அக்காலத்து வழங்கிய சம்பிரதாயச் சொற்களைக் கேட்பதும் இன்பம் பயக்குமாகலின் அவற்றுட் சில ஈண்டுத் தருகின்றேன். அவை திருவமுது, திருமஞ்சனம், திருப்பரிகலம், திருப்பரிசட்டம், திருவொற்றாடை, திருப் பாவாடை, திருப்பள்ளித்தாமம் முதலியனவாம். அவற்றுள் முதல் மூன்றும் எவர்க்கும் எளிதின் விளங்குமாதலின், அவற்றை விடுத்திட்டு ஏனையவற்றை விளக்குமிடத்துத் திருப்பரிசட்டம் என்பது கடவுட்கணியும் ஆடை. இதனை இந்நாளையில் திருப்பரி வட்டம் என வழங்குப. திருவொற்றாடை என்பது, திருமஞ்சனம் செய்வித்த பின்னர் கடவுட்டிருமேனிக்கண் உள்ள நீரை ஒற்றி யெடுக்கும் ஆடை. திருப்பாவாடை என்பது திருமுன் அமுது செய்விக்கச் சோற்றினைப் பரப்புதற்கு இடும் ஆடை. திருப் பள்ளித்தாமம் என்பது மாலையெனப் பொருள்படுமேனும் ஈண்டு அருச்சனைக்குரிய மலரெனப்படும். அதனை, 'திருப்பள்ளித்தாமம் பறித்துக் கொடுப்பார் இருவர்' என்னும் திருவேதிகுடி சாசனப் பகுதியானும், 'சாத்தலாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங் கொய்து' எனவும், 'வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமம்கொண்டு வான்முறையே—பண்டைப் பயில்வா லருச்சித்து' எனவும், 'கொய்த தூதறும் பள்ளித்தாமம் குஞ்சிமேற் றுதையக் கொண் டார்' எனவும், 'சடைமே லணியத் திருப்பள்ளித்தாமம் பறித்துச் சாத்துவார் எனவும், 'தெய்வ நாயகற்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம் கொய்து' எனவும், 'சிவகாமியாண்டார் கொய்து— பன்னகாபரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித்தாமம்' எனவும், பெரியபுராணத்துப் பலவிடத்தும் பரந்து கிடத்தலானும் அறிய லாம்.

இனி இவ்வாலயத்திற்குரிய பொருட்சாலைகள் இரண்டு இருந்தன அவற்றுள் ஒன்று உள்ளூரிலும் மற்றொன்று வெளியூரிலும் இருந்தது. உள்ளூரிலிருந்தது உடையார் உள்ளூர்ப் பண்டாரமெனவும், வெளியூரிலிருந்தது உடையார் நாட்டுப்பண்டாரம் எனவும் பெயர்வாய்ந்திருந்தது. இன்னும் உள்ளூர்ப்பண்டாரம், பெரும்பண்டாரம், பண்டாரம் என்று இருவகைத்து. பெரும்பண்டாரம் தஞ்சைவிடங்கன் என்று அழைக்கபெற்றது. கோயிலிற் பரிசாரகம் செய்வோர் தமக்கு ஏற்பட்ட நெல்லும் காசும் உள்ளூர்ப்பண்டாரத்தே பெற்றனர். கரணத்தார்களும் பண்டாரி (பொருளாளர்) களும் நாட்டுப்பண்டாரத்தே நெல்லுப் பெறுவர். சோழமண்டலத்துள்ள ஊர்ச்சபையார் அரசன் ஆணைக்கிணங்கித் திருமெய்க்காப்பார்களை அனுப்பிவந்தனர். இம்மெய்க்காப்பார்கள் தம் கடமைச் செலவும் படிச்செலவுமாகிய இரண்டினையும் தத்தம் ஊர்ச்சபையின்கண்ணே பெறுவாராயினர். இவர்கள் இவ்விராசராசேச்சரத்து, கோளாந்தகன், இராசராசன், அணுக்கன் என்ற திருவாயில்கள் மூன்றினையும் காவல் செய்தனர்.

இனி இவ்வாலயத்துப் பண்டாரத்தினின்று ஊர்ச்சபையாரும் பிறரும் கடனாகப் பொருள்பெற்று அதன் பொலிசை (வட்டி)யை ஆலயத்திற்கு வேண்டும் பொருளாகக் கொடுத்து வந்தனர்.

இனி இவ்வாலயத்தின் திருவாசல்களைக் கோளாந்தகன், இராசராசன், அணுக்கன் எனவும், பெரும்பண்டாரத்தைத் தஞ்சை விடங்கன் எனவும் மாக்காலை ஆடவல்லான் எனவும் நிறைகல்லை தக்ஷிணமேரு விடங்கன் எனவும், உயர்திணைப் பெயரால் வழங்கியிருப்பது ஆராயத்தக்கது. இவ்வழக்குப்பற்றிப் போலும் திருவாரூர்க் கண்ணுள்ள ஆயிரக்கால் மண்டபத்தை தேவாசிரியன் என வழங்குவாராயினர். "தேவாசிரியன் எனுந் திருக்காவணம்." என்று பெரியபுராணங் கூறுவதறிக.

இனி, இராசராசன் தன் பண்டாரத்தினும், சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்துகொண்ட பண்டாரத்தினும் கொடுத்த பொன்னாலும் வெள்ளியாலும் செய்து, 'சிவபாத

சேகரன்' 'இராசராசன்' என்னும் திருப்பெயர் பொறித்த திருப்பரிகலங்களும், பொன்னாற் செய்தனவும் மணிகள் பதித்தனவுமாகிய அணிகலங்களும் ஒன்றிரண்டல்ல, பல கொடுத்தமை காணக்கிடத்தலின், அவற்றுட் சிலவற்றையேனும் எடுத்துரைப்பது இன்றியமையாததாயிற்று.

இனி, கூறுமிடத்து, குடம், கலசப்பானை, படிக்கம், தட்டம், தளிகை, முக்குவட்டகை, கைவட்டகை, கரண்டிகைச் செப்பு, வட்டில், கச்சோலம், இலைத்தட்டு, மண்டை, நெடுமடல், குறுமடல், பிங்காலம் முதலாய திருப்பரிகலங்களும்; கண்டநாண், புல்லிகைக்கண்ட நாண், பாசமாலை, மாணிக்கத்தின்தாலி, வாகுவலயம், பதக்கம், ஆதனவளையல், ஆதனக்கடகம், பவழக்கடகம், திருக்கைக்காறை, திருப்பட்டிகை, ஆதனமோதிரம், நவரத்தினமோதிரம், மாணிக்கத்தின் உழுத்து, வயிர உழுத்து, சோனகச்சிடுக்கின் கூடு, பிருஷ்டகண்டிகை, ஸ்ரீ சந்தம் என்ற மணிக்கலங்களும்; திருமுடி, வீரபட்டம், உதரபந்தனம், இராசாவர்த்தம், வயிரசாயலம், மூன்றுக அடுக்குவிளக்கின கண்டத்துடர், புறத்துடர், எகாவல்லி, திரிசரம், பஞ்சசரி, சப்தசரி, திரள்மணிவடம், தாலிமணிவடம், பொன்னுணிற் கோத்த மாணிக்கத்தின் திரு, கண்டநாண், பொன்னின்பட்டைக்காறை, திருக்கனாவம், திருமகரம், திருக்குதம்பை, தொடு, வடுகவாளி, கொட்பு, பட்டைமேற் றுண்டுவைத்து விளக்கின வளையல், கைக்கடகம், திருக்கால்வடம், திருவடிக்காறை, திருக்கால்மோதிரம் என்றின்னோன்ன பொன்னணிகலங்களும்; முத்தின் சூடகம், முத்தின் சிடுக்கு, முத்துமாத்திரை என்னும் முத்தணிகலங்களும் பலப்பல கொடுத்திருத்தலை இராசராசேச்சரத்துள்ள சாசனங்களிற் பாக்கக் காண்க.

இனி, மேற்கூறிய ஆதனக்கலங்களில் 'சோனகச்சிடுக்கின் கூடு' என்பது ஒன்றாகும். அதன் முற்பகுதியாகிய 'சோனகர்' என்பது கிரேக்கர் அல்லது அரபியரைக் குறிக்கும் பெயராதலால், தென்னிந்தியாவில் பதினோராம் நூற்றாண்டில், சோனகர் செல்வாக்குற்றிருந்தமை அறியலாம்.

இராசராசன்எடுப்பித்த வேறு ஆலயம்.

இனி, இராசராசன் தன் இருபத்தொன்பதாம் யாண்டில் தொண்டை மண்டலமாகிய சயங்கொண்ட சோழமண்டலத்தில் பெரும்பாணப்பாடித் தூநாட்டில் மேற்பாடியாகிய இராசாச்ரய புரத்தில் தேவதான இறையிலியாக அந்நகரத்தாரிடத்தில் நிலம் பெற்று திருவரிஞ்சியீச்வரம் எடுப்பித்தனன் என மேற்பாடி சாசனங்களால் அறியக்கிடக்கின்றது. மேற்பாடி என்பது வட வாற்காட்டில் உள்ள திருவல்லத்துக்கு வடக்கே ஆறு கல் சேய்மைக்கண் உள்ளதொரு நகராகும். இராசாச்ரயன் என இராசராசனுக்கு ஒரு பெயருண்மையான், மேற்பாடி இராசாச்ரயபுரம் என்று வழங்குவதாயிற்று. அரிஞ்சயன் என்பது இராசராசனது பாட்டன் பெயராதலால், தன் பாட்டன் பள்ளிப்படையாக அதாவது இளைப்பாறு மிடமாக இவ்வாலயம் எடுப்பித்தனன். இதனை, "ஸ்ரீ கோவிராஜ ராஜகேசரி பன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு உயகூ-ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் பெரும்பாணப்பாடித் தானாட்டு மேற்பாடியாகிய ராஜாச்ரயபுரத்து நகரத்தோம் ஆற்றூர்த்துஞ்சின தேவர்க்குப் பள்ளிப்படையாக உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் எங்கள் நகரத்தி லெடுப்பித்தருளின திரு அறிஞ்சிகை ஈச்வரத்து மகாதேவர் ஸ்ரீ கோயிலுக்குந் திருச்சுற்றாலைக்குந் திருமுற்றத்துக்குந் திருநந்தனவனத்துக்கும் மடவிளாகத்துக்குமாக நாங்களித் தேவற்குக் குடுத்த நிலத்துக்கெல்லை" (S. I. I. Vol. III Part I page 23) என்னும் சாசனத்தாற் காண்க.

(தொடரும்.)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திருவாளர், சி. வேதாசலம் பிள்ளையவர்கள், B.A., B.L. கரந்தை.

உயர் திருவாளர் திவான் பகதூர் சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களால் சிதம்பரத்தில் ஆங்கிலம், தமிழ், வடமொழிகளில் உயர்தரக்கல்விப் பயிற்சிக்கெனச் சிலவாண்டுகளாக நடத்திவரப்படும் கல்லூரிகளை அடிப்படையாக்கொண்டு தமிழ்நாட்டில் உயர்தரக்கல்வியையும் ஆராய்ச்சியையும் வளர்ப்பதற்காக ஓர் புதிய பல்கலைக்கழகம் "அண்ணாமலைப் பல்கலைக் கழகம்" என்ற அரிய பெயருடன் அமைக்கப்பெறுமென்றும், அப்பல்கலைக்கழகக் கட்டிடங்களும் அவற்றுடன் சேர்ந்த மாணவர், ஆசிரியர் விடுதிகளும் நிற்குமிடம் அண்ணாமலை நகரென அழைக்கப்பெறுமென்றும் சென்னைச் சட்டசபை முன்னர் ஓர் மசோதா கொண்டு வருவதாக அரசாட்சியார் விளம்பரஞ் செய்துளார்கள். 1923-ம் ஆண்டின் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம் சென்னைச் சட்டசபையாரால் கலந்து பேசப்படுங் காலையிலேயே ஓர் தனிப் பல்கலைக் கழகம் நிறுவச் சிதம்பரம் மிக்க தகுதியுடையவிடமாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. உயர்திரு. செட்டியாரவர்கள் பெரும்பொருள் செலவிட்டு நிறுவியுள்ள பல அழகிய கட்டிடங்களையும் சுவடிகள், அறிவுநூற் கருவிகள் முதலிய பொருள்களையும் உதவுவதுடன் நடைமுதற் செலவுக்கென்று இருபது இலக்கம் ரூபா கொடுப்பதாகவும் முன்வரவே, அரசாட்சியார் இப்பெருங்கொடையை மிக்க நன்றியுடன் ஏற்றுத் தாமும் சிறிது பொருளுதவி செய்வதாக ஒப்பி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவ ஏற்பாடுசெய்ய முன்வந்துளார்கள். இனிச் சட்டசபையார் அரசாட்சியாரின் மசோதாவை ஆராய்ந்து விதிகளைத் திட்டஞ்செய்வதே எஞ்சிநிற்கின்றது. *

* இப்பால் இம்மசோதா சட்டசபையின் ஒப்பம் பெற்றிருக்கிறது. இதனைப்பற்றிய ஆராய்ச்சிகள் அடுத்த மலரில் வெளிவரும்.

அண்ணாமலைநகரில் இப்பொழுது தொடங்குவதாகவிருக்கும் பல்கலைக் கழகத்துக்கும் சென்னை, ஆந்திரப் பல்கலைக் கழகங்களுக்கும் சிறப்பான வேறுபாடொன்றுண்டு. முற்கூறிய கழகங்கள் பல நாட்டுப்பகுதிகளிலும் நகரங்களிலுமுள்ள பலப்பல கல்லூரிகளைத் தம்முடைய ஆட்சிக்குட்படுத்திச் சிறப்பாகத் தேர்தல்கள் மூலமாகவே கல்வியை வளர்க்க முன் வந்தனவாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகமோ அவ்வாறன்றி, பத்துமைல் சதுர அளவுள்ள ஓர் சிறு நிலப்பகுதிகொண்ட ஊரில் அமைக்கப்பெற்று மாணாக்கர் யாவரையும் கல்லூரிகளைச்சார்ந்துள்ள மாணவர் விடுதிகளில் அமர்த்தி மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தித் தமிழ், வடமொழி, இந்திய வரலாறு முதலியவற்றின் வளர்ச்சிக்கு முதன்மையான இடங்கொடுத்துக் கீழ்த்திசைக் கலைகளை மேனிலைக்குக் கொண்டுவரும் கருத்துடனே நிறுவப் பெறுவதாகும். எனவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஏனைய கழகங்களைவிட மிக்க பயனும் சிறப்பும் வாய்க்கப் பெறுமென்பதை எவரும் ஒப்ப வேண்டும்.

இவற்றுடன், தனதாதத்தேதோன்றி ஒன்று பலவாய "கன்னடமுங் களிதெலுங்குங் கவின் மலையாளமுந்துளுவும்" கிறிது கற்பிக்கப் பெறுவதுடன் மேற்கூறிய தாய்மொழி, வழி மொழிகளுக்குட் காணப்படும் ஒற்றுமை வேறுபாடுகளை யாராய்ந்து தெளியவும், சித்தாந்தம் முதலிய தென்னாட்டுத் தத்துவ முறைகளை ஆராய்ந்து முறைப்படுத்தி யோதவும் தமிழ் இசை, நாடகம், ஆட்டம், மருத்துவம் முதலியவற்றைப் பழமையான நூல்களைக் கொண்டும் வழக்கிலுள்ள முறைகளைக் கொண்டும் ஆராய்ச்சி புரியவும் தனித்தனித் தவிசுகளும் குழுக்களும் ஏற்படுத்துவது மிகவும் வேண்டப்படுவதாகும். 'பி. ஏ.,' 'எம். ஏ.,' முதலிய மேனாட்டு முறைப்பட்டங்களை யொழித்துத் தேர்ச்சிபெறும் பல்கலைக் கழக மாணவர்க்குத் தமிழ் மணங் கமழும் இனிமையான பட்டங்களைத்தந்து சிறப்பித்தலும் இப் புதுக்கழகத்தின் கடமையாகும். உயர்திரு. செட்டியாரவர்களும் அவர்கள் வழித்தோன்றல்களும் அரசாட்சியாரும் அவர்களின் பணியாளரும் தமிழ்ப்பெரியாரும் இவ்வுயரிய எண்ணங்களைச்

பிறிதும் மறவாது என்றுங் கீழ்த்திசைக் கலைகளின் ஆராய்ச்சி, வளர்ச்சி, உயர்ச்சிக்கே அரும்பாடு படுவார்களென்று தமிழ்மக்கள் எதிர்பார்த்து மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருக்கின்றனர்.

இவ்வண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப்பெறுவதால் தமிழ்ப் பல்கலைக் கழகமென்னொன்று தோற்றுவிக்கத் தமிழ்ப் பெரியோர் பலர் எடுத்துக்கொண்ட முயற்சி வீண் போய் விட்டதோவென அஞ்சுதற்கிடம் ஏற்பட்டிருக்கிறது. அரசாட்சி யாரின் எண்ணங்களை வெளிவருமுன்னரே தெரிந்துகோடற்கு ஆற்றல் பெற்ற பெரியார் சிலரும், நாட்டாள்கள் சிலவும் அண்ணா மலைப் பல்கலைக் கழகந் தோன்றுங் காரணத்தால் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருக்கொண்டு உயிர்பெற்று நிலவுவது இன்னும் சில வாண்டுகளுக்கேனும் இயலாதென்று தெரிவிப்பது தமிழ்க் குடி மக்கட்குப் பெரியதொரு கவற்சியையுண்டாக்குகிறது. அண்ணா மலைப் பல்கலைக் கழகத்துடன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தையுந் தோற்றுவித்துத் தமிழறிவை வளர்த்துத் தமிழ் மக்களின் புலமையை உலகுக்குப் பயன்படுத்திப் புகழ் பெற்றோங்கி நிலவு தற்குத்தக்க ஏற்பாடுகள் செய்வது அரசாட்சியாரின் கடமை யாகும். தமிழ் மக்கள் ஊக்கங்குன்றாது அதற்கென உழைத்துத் தாம் கோரியதைப் பெறவேண்டுவது மிக்க இன்றியமையாத தாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சியிலமைந்துள்ள நிலப்பரப்பு மிக்க விரிவானதாகையால் பொருளும் முயற்சியு மிருக்குமேல் ஐந்தாறு பல்கலைக் கழகங்கள் அமைத்துக் கொள்ளி னும், தமிழ்நாட்டார் தேவைக்குப் போதியதாகக் கருதுவதற் கிடமில்லை. வேண்டுமாயின், சென்னை நகரிலுள்ள பலகல்லூரி களையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றதொரு பல்கலைக் கழகமாகப் பிரித்துச், சென்னையும், அண்ணாமலை நகரும், ஆந்திர நாடும்போகச் சென்னை மாகாணத்தில் எஞ்சிநிற்கும் நிலப்பரப்பைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆட்சியெல்லையில் வைப்பது எவரும் விரும்பத்தக்க எண்ணமாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வாழ்க!
தமிழ்ப் பல்கலைக் கழகம் விரைவிற் றோன்றி யோங்குக!

துயரங்கள்.

க.

நமது தமிழ்த்தாயின் அருள் மகனாரும், சேதுநாட்டின் இறைவருமாகிய நமது தமிழ் மன்னர், மாட்சிமிக்க இராசராசேசுவர முத்துராமலிங்க சேதுபதியவர்கள் விபவ ஆண்டு ஆடித் திங்கள் கக ஆம் நாள் விண்ணவர் விருந்தாகிய செய்தி, இத்தமிழுலக மெல்லாம் திடுக்குற்று நடுங்கச்செய்தது. அந்தோ! தமிழ்த்தாயின் உறுதுணையாய புலவர்கள், மன்னர்கள், செல்வர்கள் முதலாய பெருந்தகையாளர்கள் நீடிய ஆயுள் பெறுதலின்றி, அத்தாயினை விட்டகல்வது தமிழ்த்தாயின் தவக்குறையே போலும்! நமது மன்னர், சேது நாட்டின் அரசாய் அதனைத் திறம்பெறக் காவல் பூண்டிருந்ததோடு, ஆங்கில அரசியலில் சட்டக்கழகம், மாநாட்டாண்மைக் கழகம் முதலாய அரிய நிலையங்களில் உயர் இடங்கள் பெற்று, உலகறிந்த பெரும் புகழினராக விளங்கினர். நமது மன்னர், கவியரங்கேறிப் புலவர்களைப் புரந்த பண்டை மன்னர்களோடொப்ப, தமிழ், ஆங்கிலம் முதலியவற்றில், நிரம்பிய புலமையும், இன்னிசைச் செல்வமும், கடவுட்பற்றும், புலவர்மாட்டுச் சிறந்த அன்பும் பெற்றவர். நமது மன்னர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகிப் பல்லாயிரக் கணக்கான பெரும் பொருள் உதவியவர். நமது மன்னர், தமிழ்ப் பெரும்புலவர் திரு. ரா. இராகவையங்காரவர்கள் முதலியோரை உரிமைப் புலவராக்கி என்றும் போற்றிவந்ததோடு, தமிழ் நூல் வெளியீடுகள் பலவற்றிற்குப் பெரும் பொருள் உதவிவந்தவர். நமது மன்னர், தமிழ்ப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழுவிற்குத் தலைவராகி, அத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தினவர். நமது மன்னர், இக்கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின்பால் மிக்க அன்புடையராய், இதன் ஐந்தாம் ஆண்டு விழாவிற் றலைமைதாங்கிச் சிறப்பித்தவர். (இவர்கள் விண்ணுலக வாழ்வுற்ற செய்தியறிந்தவுடன், நமது சங்க நிறைவேற்று கழகம் கூடித் துயரங் காட்டியுளது.) நமது மன்னர்தம் பிரிவால் பெருந்துயருற்ற அவர்தம் அருமை அன்னையர்க்கும், மனைவியர், மக்களுக்கும், புலவர்கட்கும், சங்கங்கட்கும் தமிழ்த்தாய் ஆறுதல் அளிப்பளாக.

மகா வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் பாடியது.

மதியினுக்குக் கட்டளைக்கல் வாதத்துக் குரையாணி
துதியினுக்குப் பெருநிலயஞ் சூழ்ந்தார்க்கு வாழ்ந்ததுணை
நிதியினுக்குத் தனதனெனு நீள்ராச ராச! வெந்தப்
பதியினுக்கு ளொளித்தனையோ படரினுக்கு ளமைவிடுத்தே.

உ.

தஞ்சை மாநகரில் தமிழ்ப் பெரியார் எனச் சிறப்புற்றிருந்த திருவாளர், ஜாகீர்தார் சீநிவாசபிள்ளையவர்கள் நிகழும் விபவ ஆண்டு, ஆவணித் திங்கள், ௩௰-ஆம் நாள் தமிழ்த் தெய்வத்தின் திருவடி நீழல் எய்திய செய்தி, தமிழ் நாட்டினரைத் துயர்க்கடலில் ஆழ்த்திய மற்றொரு துயரமாகும். நமது பெரியார், ஆங்கிலக் கல்லூரியிற் படிக்கும் போதே 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற் கேற்ப, நுணுகிய அறிவும், சிறந்த தமிழ் அன்பும், வற்றா தமிழ்த் தொண்டும் உடையாராயினர். பின்னர், சட்டப்புலமை எய்தி வழக்கறிஞர் தொழிலிற் சிறந்த திறமை காட்டி விளங்கிய காலத்தும், தமிழ் மடங்களின் காப்பிற்குரிய வழக்குக்களை பெரிதும் உடையராயிருந்தமையின், தமிழ்த் தொண்டே புரிந்தவராவர். அதன் பின்னர், ஓய்வுற்றிருக்குங் காலத்தோ, ஓய்வின்றித் தமிழ் நூற்களை ஆய்ந்து, தம்பால் வரும் புலவர்களோடு அவ்வாய்வுரைகளைக் கூறிக் கேட்டு மகிழ்ந்தும், இதுகாறும் எய்தாத சிறப்பைத் தமிழ் மான் எய்துமாறு "தமிழ் மொழி வரலாறு" எனும் ஆராய்ச்சி நூல் எழுதி வெளியிட்டும் நமது தமிழ்த் தாயின் கடமைகளைச் செலுத்தியவர். அந்தோ! இப்பெரியார் இன்னும் பலகாலம் உடல் நலமுற்றிருப்பின், எத்துணையோ அரிய ஆராய்ச்சி நூல்கள் எழுதியிருப்பர். என் செய்வேம்! எமது தவமிலை அத்துணையே போலும்! நமது பெரியாரின் தனயன் மாருள், திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை யவர்கட்கும் மற்றைய குடும்பத்தினர்க்கும் நமது இரக்கத்தைத் தெரிவித்து, ஆறுதல் அடைய வேண்டுகிறோம்.

செந்தமிழ்த்தா யின்மகனாஞ் சீநிவா சப்பெரியவர்
அந்தோயாங் குற்றனமே! ஐயகோ!—இந்தவொரு
மாநிலமே யன்றம்ம மற்றெங்குத் தேடினும்
காணுவமோ இன்னுமொரு கால்!

உ

இன்பப்பேறு.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்,
தமிழ்ப்புலவர், சலகண்டபுரம்.

(தொடர்ச்சி துணர் ங, மலர் க, பக்கம் கஅ.)

["இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையும் சிறப்பு"]

இக்குறளில் ஆசிரியர், துன்பத்தையே இன்பமெனக்கோடல் அமையுமெனக் கூறிய நுட்பத்தை விளக்கி உரையாசிரியர்,

(க) துன்பமும் உயிர்க்கியல்பன்று. (உ) அஃது கணத்தே தோன்றி யழியுந்தகையது. (ங) மனத்தின் நினைப்பால் மாற்றத் தகுவது எனப்பொருட்டோ டெடுத்துக்காட்டித் துன்ப நுகர்ச்சியையே இன்பநுகர்ச்சியெனக் கொள்ளல்கூடும் என நிறுவியுள்ளார்.

இவ்வுண்மையை ஓர் சிறுகதை வழித்தாய் உணர்த்தலாம். பற்பல நாடுகட்குச் சென்று ஆண்டாண்டுள்ள காட்சிகளைக் காணவிரும்பிப் போந்தானொருவன், வழியில் எதிர்ப்பட்ட அழகிய பட்டினமொன்றைக் கண்ணுற்று, அகன்று நீண்டதோர் ஆறு கிடந்தன்ன பெருந்தெருக்களின் இருமருங்கும் வெள்ளிக் குன்றங்கள் பல வீற்றிருந்தனைய வெண்சுதைதீற்றிய மேனிலைமாடங்கள் நிரை நிரையமைந்து நீள்வான் தொட்டுயர்ந்த வனப்பையும், அவற்றின் சுவர்ப்புறங்களில் எண்வகைச் செய்தியும் உவமங் காட்டிக் கண்ணுளர் தீட்டிய ஓவியங்களின் உருவமைப்பையும், நறுமணங்கமழும் புதுமலர் செறிந்த பல உய்யானங்களையும், இடையே அகன்ற புளினத்தடங்களின் பொலிவையும், மகளிரின்

பல்வகை ஆடல் பாடல்களையும் கண்டு கண்டுவந்து களிக்கும் மனத்தனும் அவ்வூர் வேந்தன் அரண்மனைத் தெருவின் வழிச் செல்லா நிற்புழி, ஆண்டுக் கந்துமீத் தாழிதருங் கடாஅக் களிறொன்று, மேலோர்க்கொன்று காழோர் கைபறாக் கப்பணஞ்சிதறித் தடுத்தும் தடையுறாது, வளியாற் கொட்புறாஉம் வங்கம்போலத் தெருமரலெய்திச் செல்வழி யுணராது தன்மேற் கடுவிரைவிற் கடுத்துவரக்கண்டஞ்சி, நடுநடுங்கி, ஆருயிர்காத்தற்கு ஆதரவதனுள் அருகிலமைந்துள்ள பெரியதோர் அரண்மனையுட் புக்கானாக, அம்மாடம், அவ்வூர் மன்னவன் காதன் மடமகள் வாழும் காவற் புரமாதலின், வாயில்காவலர், கடும்புலிபோற் சீறிச்சினந்து யாவனடா நீ! ஈண்டுப்புக்கது பெருந்தவறு, வருதி யெனக்கை கொட்டார்த்துப் போய்க் காவலனாணையாற் கடுஞ்சிறைப்படுத்தினர். இங்ஙனம், சிறைக்கோட்டத்துத் தனியனாயிருக்கும் அவன், முதலில், தான் கண்ணுற்ற அரும்பெறற் காட்சிகள் பலவற்றையும் எண்ணித் தான் தன்னூரிலேயே இருப்பின் இத்தகை வளங்களை கண்டுமகிழ முடியாதன்றோ என இறும்பூதெய்தி முதலாய், கண்கள் மதர்ப்பொடுதாவித் திசைதொறுஞ்சாய மகிழ்வுற்றும்; பின்னர், தன்முன் கொல்வான் எதிரிய கூற்றமே போன்று, கடாஅ மொடுத்தூற்றுங் கருங்களிறு தோன்றியதை நினைக்க அங்கம் நடுங்கி அச்சமெய்தித் தலைசுழன்று மருண்ட நோக்கொடு இன்னும் அம்மாக்களிறு ஈண்டு வருங்கொலோ என்னைப் பதைப்புற்றுட்கியும்; மற்றும், தவறி யீண்டேகார்க் கரிவாறும் எதிர்க்காலோப்ப ஆய்வாரைக்கஞ்சி அரசன் புதல்வியின் கன்னிமாடவாயிலிற் கால்வைத்ததற்கே, தொடுதோலடியினர், இடைநீள்கச்சினர், வயப்புலிப்போத்தாற்றல் வன்கட் பிற்றத்தர், வன்னக் கோளர், கைகொட்டார்த்த கடுமையைக் கருதியபொழுது கண் சிவப்பூர உதட்டைமென்று அந்தோ! அப்பதகர் என் அச்சக்காலை அஞ்சேலென்றாசையுந் தவறுபாடு எட்டுணையுமியற்றா என்னை இக்கொடுஞ் சிறையிலிடுவித்தனரே எனத் தன்னுட்பொங்கும் சினத்தைக்கொண்டு சீறிச் செயிர்த்து நோக்கியும்; மறுகணத்தே தன் ஊரிலுள்ளாராய மனைவி, மக்கள், உற்றோர், நட்டோர் முதலானோரைப்பிரிந்து அவரதியாதவிடத்தே

தரியனைச் சிறைப்புக்க செய்தி ஆண்டுச் சென்றறிவிக்குநர் யாவர்? அவர்களறியின் என்படுவர்? என எண்ணியகாலை, பனி வார் கண்ணொடு பதைத்துச் சோர்ந்து விம்மிவிம்மிப் புலம்பலுற் றும்; பின்னர், ஊழ்வலிகடக்குநர் யாவரோ? ஆயினும் என்? இன்னும் சின்னாட்களில், அறங்கூறவையத்தினர் என்குற்றத்தை நேரில் வினவி முறைசெய்ய வருங்கால், புதியேனாகிய யான் களிறுகண்டஞ்சி நடுங்கி உயிர்காக்க ஓடி அறியாது அக்கடிமனை வாயிலிற் கால்வைத்தது தவறன்றே என உண்மைகூறி மன்முடி வழக்குரைத்து உய்தி பெற்று மீள்வேன் என நினைத்தபோது திக்குகடோறும் பெருமிதத்தோடு சுழன்று நோக்கும் கண்களால் மலர்ச்சியுறும் முகப்பொலிவுடையனாக மிகமகிழ்ந்தும் இன்னணம் சிற்கணத்தே பலமாறுதல்களை யடைந்தனன்.

இச்சிறுகதையால், நெஞ்சின் நினைவுகட்கேற்ப இன்ப துன்பப் புலப்பாடுறுமென மேல் தேவர் கூறிய திருக்குறளுண்மை தெற்றெனனு மன்றோ?

இஃதுண்மையேயாக, கண்முன் நமக்கே நேரும் துன்பங் களை இன்பங்களே யாமெனக் கருதும் உள்ளத்திட்பம் எளிதில் அமைவதொன்றாகாதே என்பிரேல், மற்றும் இன்பம் வழங்கும் வேறு கருவிகளுளவோ என அத்தெய்வத் தமிழ்மறையைத்தான் வினவ வேண்டும்.

"இன்பம் இடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்" அதாவது:—

'ஆசையறின் இன்பத்தே வாழலாம்' என மற்றோருத்தரம் அவ்வுத்தரமறை தருகின்றது. இதுகாறும் இன்பத்தை விளைக் கும் கருவிகளை ஆய்ந்த நமக்கு, அவ்வின்பத்தைத்தோன்றாது மறைக்கும் தடையீது, அஃது தொலைந்தாலன்றி இன்பம் பெறு தற்கியலாது எனப் பொய்யாமொழி புகன்றுள்ளது. ஏனை அறி ஞர் நூற்களும் இதனையே மடித்து மடித்துப் பலவிடங்களிலும் பகாநிற்கின்றன. "ஆசையறு மின்கள், ஆசையறு மின்கள்— ஈசனோ டாயினும் ஆசையறு மின்கள்" "அற்றது பற்றெனி—

ஒற்றுவிடு" "ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவு மனமலையுங்காலம், மோசம்வரும்—நிராசையின்றேற் றெய்வ முண்டோ." இன்னும் இவ்வாறு பல்லாயிரமேற்கோள் நிரட்டலாம். இன்பத்தையடைய வேண்டின் ஆசையை அறத்தொலைக்க வேண்டியதே. நன்று! நன்று!! ஆசையை நீக்கல் பகற்கனவே, வெறும்பேச்சளவே, செய்கையில் சிறிதேனும் காட்டலாகுமா? என்னே பேதைமை! ஆசையின்றேல், இவ் வுடம்பேன்? மனைவி மைந்தர்கள் பற்றேது? இம்மை மறுமையின் வாழ்க்கைதான் எதற்கு? "நாய்க்குத் தோன்றும் உருவம் தெரியவழிகேட்டால் கண்களை மூடிக்கொண்டு நோக்குக" என்பதுபோல், இன்பமடைய வழிவினவினால் ஆசையை விடுக்க என்பதோ? முற்கூறிய சில வழிகளினும் இஃது நம்மாற் சிறிதும் இயலாத தொன்றேயாயிற்று என எம்மோடு வெறுப்பீரேல், யாம் செயக்கிடந்ததென்? எது மிக அரிய பெரிய பொருளோ, அதனைப் பெறுவது எளிதாயிராது என்பதனை நினைவு கூர்மின்! உண்மை இதுவே. மிகவும் முயன்றும் பெரியதோர் வருத்தங் கொண்டும்தான் இன்பத்தை அணுகவேண்டும். "உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ" என்னும் பெரியோர் சொற்படி விடாத பழக்கத்தாலும் மனவெழுச்சியாலும் பன்னாட்கள் உழைத்துத் தான் ஆகவேண்டும். அற்றேல், இன்பநுகர்ச்சிக்கு வழி கூறிய வாறே இவ்வாசை நீக்கத்திற்கும் பல வழிகளிருக்கலாமன்றே? அவை யாவை? என மீட்டும் எம்மைக் கேட்பீர்போலும்! "இன்பம் வேண்டுவோன் துன்பங்கண்டான்" என்பவாகலின் அவாவை நீக்கற்கும் பல வருத்த வழிகளிருக்கின்றன. அவற்றுட்டலையாயது மெய்யுணர்தலே. நாம் காதலிக்கும் பொருட்களின் உண்மைத் தன்மையை ஆராய்ச்சியோடு ஊன்றி நோக்கல் வேண்டும்.

"இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு." என்பதால் அவாவனைத்தும் மயக்க உணர்ச்சியானே தோன்றிப் பெருகுமென்கை துணியப் படும். முதற்கண் 'நான்' எனத்தலைப்படும் இவ்வுடம்பை நாடு வோம். அது—

"நாடியோ என்போ நரம்புசிக் கோவையோ
தேடியெனையறியேன்—" என்றவாறே தசை, தோல், என்பு, நரம்பு, செந்நீர் முதலாய எழ்பொருட் கூட்டமவாம் யாக்கைப் பெற்று,

"பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் காவிற் செற்றச் சேக்கை"

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது" என அன்றோரால் இழிக்கப்படுவதாய், உயிர் நீத்தவழிப் பிணப்பெயரோடு விழ்ந்தழிவதாயுள்ளது. ஆகலின் இதனை ஓர் இருப்பிடமாக் கொண்டுள்ள உயிராம் எனக்கிதனோடு தொடர்ப்பா டென்னுளது? இங்ஙனமே உறக்ககாலத்துளவாகியும் கோளிலவாம் பொறி புலன்களும், மூர்ச்சை மயக்கங்களில் கொல்லுநிலைக் குறுகினை யுயிர்த்தும் அறிவுறுத மூச்சுக்காற்றும், (பிராணவாயு) ஒன்றை நினைப்புழிப் பிறிதொன்றை மறந்து நிற்கும் மனமும், கனவில்லாத வுறக்கத்தி (சுழுத்தியி)ல் தலைப்படா தொடுங்கும் ஏனை உட்கருவி (அந்தக்கரணங்)களும் உயிராம் என்னின் வேறுமென்ப தொருதலை. அச்சோ! 'நானே' என்றிதுகாறும் என்னை மயக்கித உடல் முதலியவைகளே வேறுயொழியுமேல் இவ்வுடலின் தொடர்பால் எனக்குரியாரென எண்ணிய உற்றார் பெற்றோர் மனைவி மக்கள் முதலானோரோ டுறவு எங்ஙனம் கூடுவதாம்? மற்றும் என்னனையராய் உலகப்பற்றுட்பட்டு நிலைகலங்கித் தம்மைத்தாம் காக்க வல்லாரல்லராய் அலமராலுறும் அன்னோர்களாற்றும் யானெதிர்பார்க்கும் உதவி யாதாம்?

இஃது "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" யாவது போலும்.

"குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிபுக்கவாறு" போலும்

நகுதக்க செய்தியாமளவே யன்றிப் பிறிதில்லை. இனி உயிரெனப் படும் என் இயல்புதான் யாது?

"இந்தவுடல் கருவிகரணமுநீ யல்லையாதொன்று பற்றினத னியல்பாய் நின்று—பந்தமுறும் பளிங்கனைய சித்து நீ—" என முற்றுணர்ந்த முதறிஞர் பொருள்சுரந்து பிழைக்கும்வழி புணர்த்தியவாறு சார்ந்ததன் வண்ணமாம் தன்மை என் தன்மை. ஆயின், எனக்கிப்பிறவி எங்ஙன் எய்திற்று? யானே இவ்வுடலைத் தாவிப்பிடித்தேனோ? இவ்வுடலே என்னை ஓடிவந்து பற்றிற்றோ? இல்லை இல்லை; முன்னை வினையால் மூண்டதிப்பிறவி. அற்றேல், அவ்வினையை இயற்றிய யானும் அதன் இருக்கையை உணர்ந் தெய்தலாற்றேன். அறிவில் (சடப்) பொருளாம் அஃதும் இயற்றிய என்னை யறிந்தெய்தாதே. பின் எங்ஙனம் கூடிற்று? ஆம்! ஆம்! அறிகின்றேன். வினையையும் எனையும் வேறிருந் துணர்ந்த முற்றறிவுடைய முழுமுதலொருவன் கூட்டக் கூடினே னாதல் வேண்டும். ஆ! ஆ! அப்பொருட் பெருமான் என்னை யறிவிக்காமலே எனக்கு வேண்டுவ வனைத்தும் விழைந்து நல்கு கின்றான் அல்லனோ! என் பிறவியை நீக்கற்கு அவன் பிறவி யற்றவனாயும், என்பற்றைப் போக்கற்கு அவன் பற்றற்றவனாக யும், என்னை மீட்டும் இறவாது காத்தற்கு அவன் இறப்பில்லாத வனாகவும், எனக்கின்பம் அளித்தற்கு அவன் இன்பவடிவினனாக வும், இலங்குகின்றானாதல் வேண்டும். அவன் பொன்னடியைத் தலைப்பட்டாலொழிய என் இன்னல் ஒழியாது. தவாப்பெருந் தலைவனைச் சார்ந்துழியல்லதென்—அவாப்பெருங் கடலினைப் பொழிந் துய்கிலேன்; பொய்ப்பொருள் மீது புணர்த்தஎன் பற்றை யும்—மெய்ப்பொரு ளடிக்கே வேண்டிச் சேர்ப்பேன்; என்றிங்ஙன மாம் தன்னையும் தனக்குக் களைகணும் தலைவனையுங் குறித்துக் காண்டலே மெய்யுணர்தலாம்.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில."

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது."

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேரா தார்."

என மெய்யுணர்வுடையார் விரும்பும் இறைவனையன்றி இன்பம் பெறுதற்கில்லை எவ்வகையினும் எனத் தமிழ்மறை முழங்குகின்றது. ஈண்டு மற்றொருண்மையும் கருதற்பாலது. மனத்தே அவா எழுதற்கு, பொறிவாயிலாக உலகப்பொருட்களுணரப் படுந்தோறும் அப்புறப்பொருட்களுக்கும் உட்கருவிகளுக்கும் ஒரு சேர்க்கை (பற்று) உண்டாக, அப்பொருட்களின் நல்லன எனக்கு வேண்டும் எனக்கருத்துறுதலே காரணமாதலின், ஐவாய வேட்கையவாவினை அந்நிலையில்லாப் பொருட்கண் மேற் செலுத்தி அவற்றிற்குக் கேடுறுங்கால் துன்புற வருதலால், என்றும் அழியாப் பொருளாயுள்ள இறைவன் பொன்னடிக்குய்க்கின், மிக்க இன்பம் துய்க்கத்தடையில்லை. உயிருள்ளதனையும் உடனிற்கும் மனம் யாதானு மொன்றைக் கருதிக் கொண்டன்றி நில்லாவியல் பிற்றாதலின், அஃது பிறிதொன்றைக்கருதிப் பிறழாக்கொள்ளாது எல்லாம் வல்ல ஆண்டவன் அடியைப்பூண்டு கிடக்கப்பயிற்றல், அறிவுடை மக்களாய் இன்பம் விழையும் எவர்க்கும் தவிராக்கடனேயாம். இதுகாறும் யாம் விரித்துரைத்த இவ்வெல்லாம் அடக்கி நம் தமிழ்த்தாய் அணிமேகலையாம் மணிமேகலை, ஒரு சில அடிகளில் விளக்கிக் காட்டுகின்றது.

> " பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெருகிய வின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்னது
> அற்றோ ருறுவ தறிக"

காண்மின்! காண்மின்!! எத்துணைப் பெரிய பொருட்களையும் மிகச்சுருங்கக்கூறும் சொல்வளம் நம் தமிழ் அன்னைக்கு வாய்த்தாங்கு வேறெம்மொழிக்கும் வாய்த்தின்று. நன்றே அவள் நலம்! வாழ்க அவள் வென்றி !!

அன்பர்காள்! இறுதியாக நீவிர் என்னை வினவுதல் அறிவேன். அஃது, இறைவன்பால் அன்பு செலுத்துமாறு யாங்ஙனம்? என்பதன்றே. யான் இறுக்கும் விடையை நினைவு கூர்மின்! நம் பெரு நாவலர் பொதுமறையில்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

எனை அருள் சுரந்தளித்த இவ்வாரா வின்னமுது, துறவதிகாரத் திறுதியிற் சுடர்விரி நின்று, அடுத்த மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தோடு சென்றிணைந்து, இறைவனருள் பெற்றவழி மெய்யுணர்வு பயன்றருமெனக் குறிப்பதாகலின், "அவனரு ளாலே யவன்றாள் வணங்கி" எனவும் "அவனருளாலே பத்தி நன்குண்டாம் பத்தியா லவனரு ளுண்டாம்" எனவும் புகன்ற முற்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் கருத்தைத் துலக்கி யுள்ளது. மேலும், ஓர் குடத்து நிரம்பிய நீரை வேறோர் குடத் தும் வெயப்பையப் பெய்யுங்கால் ஊற்றுங்குடத்துக் குறைபு மளவு ஊற்றப்படுங்குடம் நீரானிரம்புதல் போல, இறைவன் திருவடிக்கட் சிறிது சிறிதாகச் செலுத்துந்தோறும் உலகப் பற்றுக் குறையுமவன் இறுதியில் "மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன்" "நெஞ்சம் உனக்கே யிடமாக வைத்தேன் நினையாதொருபோது மிருந்தறியேன்" "நினைக்கின்னப்பொழுதும் மறந்துய்வனோ" "உன்னை மறந்திடு வேனோ மறந்தறியேன் மறந்தாலுயிர்விடுவேன் கணந்தரியேன்" என்றெல்லாம் அவனருள் பெற்றுய்ந்த ஆன்றோர் உரைத்தாங்கு, ஆராத இன்பம் அடைதற்குப் பொருட்டாய பேரன்பு பெருகி நிரம்புதல் திண்ணமேயாம்.

அப்பா! இதுகாறும் பலபடவாராய்ந்துழன்ற நமக்கு, இன்பம் தன் மெய்ந்நிலையைக் கைந்நிலையாகக் காட்டிற்று. இப்போது நாம் பெற்ற முடிபுகளை நிரலே நிறுத்திக் காண்போமாக.

(௧) அறிவுபெறாப் பொருட்களால் எவ்வாற்றானும் இன்பம் பெறேம்.

(௨) இன்பம் வரும் போதின்புறாமை இன்பப்பேற்றுக் கோர்வழி.

(௩) துன்பத்தையே இன்பமென நினைக்கினும் இன்பம் பெறலாம்.

(ச) இன்பத்தைத் தோன்றாது மறைத்துக் கெடுக்கும் ஆசையை நீக்கினன்றி அது கிட்டாது.

(ரு) ஆசையை அறுத்தற்கு மெய்யுணர்வு தேவை.

(சு) மெய்யுணர்வும் இறைவன்பாலன்பு செய்யினன்றிப் பயன்படாது.

(எ) இறைவனருளைப் பெறுதற்கவன்பா லன்புவேண்டும். அவனருட்டுணையாலே மனம் ஒருங்கி யன்புற அதன் வழித்தாய் இன்பமெய்தலாம்.

(அ) மெய்யுணர்வுடன் கூடிய இறைவனருள், முதற்கண் இன்பம் நல்கிப் பின்னர் வீடுபேறருளிப் பிறவியை நீக்கும்.

(கூ) உலகப்பற்றுட்பட்ட மனத்தைப் பையப்பைய இறைவனடியை நினைவுகூரப் பயிற்றிவரின், நாளடைவில் நிரம்பிய அன்பு பேரின்பந்தரத்தவறாது.

தமிழ்த்தாய் மக்களாம் தவப்பெருஞ் செல்வர்காள்! மேற்கூறிய உண்மைகளை முற்றறிந்து இன்பந்தாங்க நம் வாதவூரடிகள், மலர்வாய்ப் பெருகிய வாசகத்தேனைப்பருகி இக்கட்டுரையை முற்றுவிப்பாம், அஃது ஈண்டைக் கேற்புடைத்தாகலின்.

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேனுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

இத்திருமறைப்பொருளை அறிந்தவாறு எடுத்தபொருண்மொழிக் கேற்றபெற்றி ஒரு சிறிது கூறுதும்.

அவா, சினம், கடும்பற்றுள்ளம், மருள், செருக்கு, உட்பகை என்னும் ஆறு தீப்பண்புகளையும் ஆறுகாலாகக்கொண்டு, இருவினையாம் சிறகொடு பறந்து ஆனந்தச்சுவைத்தேன்பருக விரும்பி (இன்பம் துய்க்க) கண்ணுக்கெதிர்ந்த பன்னிறப்பூக்கடோறும் (பல்வகை அழகு வாய்ந்த பற்பல உலகப்பொருட்களில்) தஃது

நிரம்பியுள்ளதெனப் பிறழவுணர்ந்த பேதைமை துரப்ப விசைத்தெழுந்து (இன்பமிருக்கின்றதெனா மருண்டு) பேராசைப் பிணிப்பொடு பல்காற் சுழன்றும், ஒலித்தும், தும்பியாற்றுதைந்தும், வாடியும், முரன்றும் ஓசையற்றடங்கியும், (பலவகை வருந்தி) நின் றிறுவதிறு நிரம்பா நிரப்பொடு* சிறிதேகடைப்ப வறிதே பெயர்ந்து (கருதித்துய்த்தவற்றால் அவா அடங்காது) பொழில் பலபுக்குக் கழிபேரயர்வொடு-முன்சுவைத்ததும் பின்பதி தூதன்டற்-கேற்றதாகி †யாற்றிடைக் கழிய-முண்மேற் படலும் கல்மேல் மோதலும்-மற்றொரு வண்டு பெற்றதை வெளவலும்-கடுவெயில் காயக் கால்விசைத்தலைப்பப்--பனியோ மழையோ படர்செறியீக்க-வுழன்று பேறன்றிவே றொருபயன் பெறுமே-அளித்தக் காவென ‡அம்முதற் பெயர்பெறி இ-வருந்துறு பேதை வண்டே வம்மோ! (மேலும் பல துன்பங்களைப் பொறுத்துத் துய்க்கலா மின்பமெனா வுழலும் மனமே! வருக.) நீ இப்பூக்களால் வயிறாரத் தேன் பருகுமா றெப்போதுமில்லை. ஆயின், நின் பசிதீர வுண்டற்கேற்ற தேனிருக்குமிடம் நினக்காகப் பரிந்து பலநாள் விறுவிப் பசுமிரவாகப் பாடுபட்டும் யான் அறிந்தவைத் தகை உரைக்கின்றேன். ஆண்டுச் செல்லவியல், நின்னொடு புணருநரில்லை யிந்நிலத்து. அத்தேனினியல்பைக் கூறக் கேட்பாயாயின், மிகவும் இறும்பூதெய்தி விம்மிதமுறுவை. இத்தேனைப்போல், வாய்வைத்துச் சுவைக்க நாவுள் இருக்குந்தனையும் சுவைந்து ஒழிவதன்றப் புதுத்தேன். அதனை நினைத்தாலே நினைத்த நெஞ்சம் மிக விளித்துச் சுவைதரும். அம்மட்டோ இருவிழிக்கெதிர் பெறக்கண்டால், ஆங்கே நனிபெரும் இனிப்பு நண்ணும் நின்னமே. அந்நறவினைப் பேர் கூறும் அளவே நாக்குமுழுவதும் தித்திப்பாலியன்றாங்கே மாறுவின் சுவை வழங்கலானாது. இப்பூக்கள் போன்று, ஒருகால் மலர்ந்தும், ஓர்கால் புலர்ந்தும் நின்னை ஏமாற்றும் தன்மையறியாத அப்பூவின் தேன், என்ஞான்றும் ஒருநாட் போல ஓயாது பெருகும். இவ்வுலகப் பூத்தேன் முன்தரும் சுவைக்குப்பின் புளிப்புச்சுவையும் தரும். அன்றி உண்டபோதே ஓர் சிற்றின்பந்தரும். அதுவோ உனது

*நிரப்பு—வறுமை. †ஆறு—வழி. ‡அளி—வண்டின் ஓர் பெயர்.

வல்லென்ற என்பும் வெள்ளிய வெண்ணெய்க் கட்டியினியற்றிற் போல நெகிழ்ந்து நெகிழ்ந்தின்பத்தேறல் உடல் முழுதும் பொங்கிப் பொங்கித் துளும்பப் பெருவகை பெருமிதத்தோடு மனம் பொறுக்கலாற்றுவண்ணம் மேலிட்டெழ, நின்னைக்களியாட்டயரச் செய்விக்கும். இவ்வளவுமிருந்தும் அத்தேன் எட்டற்கரிய நெடுவரையிலோ, மிக ஓங்கிய மரக்கிளையிலோ, யாரும் புகாத கொடும்புதற்குள்ளோ இருப்பதேற் பயன் என்? எனத் திகைக்கின்றாயோ? இல்லை. யாவருக்கும் பொதுவாய வெளியிலே, தானே விளைந்து ஆடி ஓயாது பொழிந்துகொண்டேயிருக்கின்றது.

'கறப்பதுழக்குப்பால் உதைப்பது பல்போக்கும்' என்றாற் போல உன் உழைப்பையும் வயிற்றெரிச்சலையுங் கொட்டிக்கொண்டு ஓர் துளித்தேன் தரும் இப்பூக்கள் போன்றுளதன்றன்று. நின் சிறிய தும்பியைச் சற்றுயர்த்தி ஓர் முறை 'ரிம்' என முன்னமே தானே நின்பால் எதிர்கொண்டு வந்தனழைத்து அத்தகுதேனை அருந்த அருத்தும். உய்யவேண்டின் என் உறுதிமொழி கேள். அப்பெருந் தெய்வத்தேனை நாடிச்சென்று ஆண்டே நின் செவ்வழி, விளரி முதலிய செவ்விய பண்களைப் பாடுவாயாக. நீ (கோ—தும்பி) தும்பிகட்கு வேந்தனுங் குலத்தோன்றலாதலின் நின் பெருமைக்குப் பொருந்தும் பெற்றியறிந்துகொள். (ஈண்டு உயரிய மக்கட் பிறவி பெற்றார் தில்லைமன்றத்தொரு சேவடி காட்டிக் குனிப்புறும் கூத்தனை நினைந்து வாழ்த்தி நிலைபெறும் இன்பம் அடைகவென்று குறித்தறைந்தது காண்க.)

"ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே
என்னுடை யன்பே." (திருவாசகம்.)

"அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே." (தாயுமானர்.)

தென்னாடுடைய சிவமே போற்றி
எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி.

திருச்சிற்றம்பலம்.

(முற்றும்.)

உ

தமிழர் நல்லிசைப் புலமை.

திருவாளர் V. சண்முகம் செட்டியாரவர்கள், தஞ்சை.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்

என வரந்தருவார் கூறிப்போந்தவாறு, கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும் தன்னுதரத்துதித்தெழுந்த ஒவ்வொன்றும் பல மொழிகளுக்குத் தாய் மொழியாக ஆயிடினும், பிறமொழி போல வழக்கொழிந்து அழியாது சிறப்புற்ற இளமையினை எக்காலத்தும் உடைய பொருட்டினால், கன்னித் தமிழெனப் பெயர் பெற்றனள் நம் தமிழ்த்தாய்.

வடநாட்டினராகிய ஆரியமக்களின் மொழியாகிய ஆரிய மொழிக்கு எதிராக உண்டாகிய தமிழ் மொழியானது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனும் மூன்று பெரும் பிரிவுகளையுடைமையின் முத்தமிழ் எனவும் பெயர் பெற்றுளது.

இத்தமிழ்மொழி பண்டைக்காலத்தில் முத்தமிழிலும் வல்ல புலவர்களாலும், தமிழ்நாட்டு மன்னர்களாலும் மிகச் சிறப்புற்றிருந்தது. பின்னர் இது எவ்வளவோ இடையூறுகளை அயல் நாட்டினராலும், கடலாலும் அடைந்தும் அழியாமலே இப்பொழுதும் இருந்து வருகின்றது.

ஆனால் இந்நாளிலே அயல் நாட்டினராலும், அயல் நாட்டு மொழியாலும் சிறிதளவு இடையூறு நம் தமிழ் மொழிக்கு

எப்பட்டு வருவது உண்மையே யெனினும், அது தற்காலத் தமிழ்ப் போலிப்புலவர் பலரால் உண்டாகும் இடையூற்றைப்போல் அவ்வளவு மிக்கதன்று. ஏனெனில் இவர்கள் நிகண்டில் சில செய்யுட்களையும் இராமாயண பாரதமாகிய பழம் புராணங்களில் உள்ள சில செய்யுட்களையும் மனப்பாடம் செய்த அளவிலேயே தாம் பெரும்புலவர்கள் எனக்கூறிக்கொண்டு, 'இராமாயண ஆசிரியராகிய கம்பர் எழுந்தநாயிறு விழுவதன் முன் கவிபாடியது எழுநூறே: ஆனால் யாமோ எழாயிரம் பாடிடுவம்'' எனக் கண்டவாறு செய்யுட்களை யியற்றத்தொடங்கி விடுகின்றனர். இவர்கள் அறியாமைதான் என்னே!

"முட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனீங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்ததலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே"

எனக் கூறிய சான்றோர் உளக்கருத்தின்படி அப்புலவர் பெருமக்கள் இந்நாள் இருப்பரேல் இன்னோர்கள் தாம் தாம் புலவர்களெனக் கூறிக்கொண்டு முன்வர இயலுமோ?

இப்புலவர்களால் இயற்றமிழோ தன் சீர்குலைந்து நிற்கின்றது. நாடகத்தமிழோ தமிழ் எழுத்துக்களின் நெடுக்கணக்கையேயானும் அறியாத நடிகர்களாலே எவ்வளவு சீர்கேடான நிலைமையினை யடைந்திருக்கின்றது என்பதை யாவரும் அறிவர். இசைத் தமிழின் நிலை என்றாலோ 'தமிழ் மொழியாளர்க்கு இசையென்பதே தெரிந்திலது. இவ்வாறு கூறுவதற்கு இசைகளின் பெயர்களெல்லாம் வடமொழியில் இருப்பதே சான்றாம்' என அறிவிலா மாக்கள் சிலர் கூறும் அளவில் வந்துளது. என்னே இவர்கள் மடமை!

இவர் தம் அறியாக் கூற்றுகளைப் பின்னர் ஆராய்ந்திடுவாம். இந்நாள் நம் நாட்டுப்புலவர்களின் அறிவினை யாம் அளக்கப்புகின் பண்டைநாட் புலவர்களின் அறிவின் பெருமையினை அறிந்து கொள்ள வேண்டுவது முதற்கடமையாம். ஆகலின் பண்டைத் தமிழர்தம் நல்லிசைப் புலமையினைச் சற்று ஆய்ந்திடுவம்.

புலமையாவது அறிவுடையனுந்தன்மை. இப்புலமை யுள்ள வர்க்கே புலவர் என்பது பெயர். இது எல்லாவுயிர்க்கும் இயற்கையில் அமைந்து கிடக்கும் குணங்களுள் ஒன்றேயாயினும், எல்லோரும் பொருளுடையாராயிருப்பினும் நிறைந்த பொருளுடையவரையே உடையாரென்பவாகலின், சிறந்த புலமை யுள்ளவர்க்கே புலவரென்பது பெயராம். அச்செல்வத்தினை யுடையான் அதனை வெளியிடுமாற்றால், அவனது செல்வத்தினளவு தோன்றுதலே போல், ஒருவனுடைய புலமையும் அவனது செய்புள் வழியே தோன்றும் என்பதும் பெறுதும். அன்றியும் உடையான் ஒருவன் அறிவினையாற் பொருளிட்டிப் பல்லுயிர்க்கும் பகுத்தளிந் தவப்பானாயின் அவனும் அவனது உடைமையும் சீரும் சிறப்பும் அடைவது போல், புலவனொருவனும் தன் புலக்கண்ணிற் றோன்றிய பொருளைச் சீரிய கூரிய தீஞ்சொற்களால் மன்னுயிர்க்கு வெளியிட்டுக் களிப்பானாயின், அவனும் அவன் செய்புட்களும் அழியாச் சிறப்படையும் என்பதும் தோன்றும். இம்மட்டோ டன்றி உடையான் தன் பொருளைத் தீயவழியிற் செலவிடின் பிராப்பழிக்காளாவதுபோல், புலவனும் செவ்விய சொல், பொருள், ஓசை முதலியனவின்றிச் செய்புட்கள் இயற்றிடப்புகின் அவன் புலமையை அறிவுடையார் மதித்துக்கொள்ளார்.

இனிப்புலமை யென்பதற்கு அறியுந்தன்மையெனப் பொருள் கொள்ளினும் ஆம். அதுவும் அதனை அவன் அறிவிக்குந்தன்மை யான் வெளியாதலின் புலமை யென்பதனுள் அறியுந்தொழிலும் அறிவிக்குந் தொழிலும் ஆகிய இருதொழிலும் அடங்கியிருத்தல் காண்க.

அறிதற்குக் கருவியாவது மனம். ஆம்மனமும் தானே யறிதல் இயலாமையின், அது ஐம்புலன்களின் துணையைக் கொண்டே யறிதல் வேண்டும். அங்ஙனம் அறிந்த பொருள் களைத் திரட்டி வைக்குமிடமே புலம் என்க. என்னை? புலம் என்றதற்கு இடம் என்பதும் பொருளாதலின். புலத்தின்கண் ணுள்ள பொருள்கள்தாம் பின்னரும் பிறபொருள்களை யாய்ந்து தெளிதற்குத் துணையாகின்றன.

உலகத்திற் பிறந்தார் யாவர்மாட்டும் இயற்கையாக அமைந்து கிடக்கும் இப்புலமையினை, கற்றல், கேட்டல், காண்டல் என்று இம்மூவகை வழிகளாலும் சீரும் சிறப்பும் உடையதாகச் செய்து கொள்ளலாகும். உலகப்பொருள்களை நேரே தம் கண்ணாற் கண் டும் கண்ட அவற்றைத் தம் இயற்கை யறிவினாலே யாராய்ந்து அவ்வவற்றின் தன்மை உணர்ந்தும், சான்றோர்கள் வெளியிட்ட நூல்களைக் கற்றும், கற்றவைகளைத் தம்முணர்வாலாராய்ந்தும் அவ்வாராய்ச்சிகளாற் போதரும் உண்மையினைக் கொள்ளல் வேண்டும். ஒருவன் இவ்வாறு தன்னறிவால் முற்றக்கற்றிடினும் கசடறக்கற்றவனாகான். அவனுக்கு ஐயம் திரிபு முதலியன தோன்றுதல் இயற்கையன்றோ? ஆகவே கற்றதனோடு நில்லாது அவ்வறிவினையுடையார்பாற் சென்று கேட்டலும் வேண்டும். இங்ஙனம் கேட்டறிந்து கொண்டானாயினும், அஃது 'எட்டுப் படிப்பாக முடிந்திடும் ஆதலின், உலகத்துள்ள பொருள்களைத்தான் தன் கண்களால் நேரே காண்டலும் வேண்டும். அவ்வாறு கண்ணிற்கண்டும் அவன் தெரிந்து கொள்ளானாயின் அவன் அறிவினை யுடையானாகான்.

இவ்வாறு கண்டு கேட்டுக் கற்றுக்கொண்ட உண்மைப் பொருள்களைப் பன்முறையும் எண்ணித் தெளிந்து கொள்வனேல், கல்லில் எழுதிய எழுத்துக்களே போல், அவைகள் அவனுடைய மனதில் நன்றாகப் பதிந்துவிடும். எத்துணை ஆண்டுகள் சென் றிடினும் அப்பொருள்கள் அவன் வேண்டுங்காலத்தில் அவனது அகக்கண்ணிற் றோன்றிடும்.

இங்ஙனம் இவன் கொண்ட அறிவுப் பொருள்கள், நீர் பெரிய காலின் அலைகள் எழுந்தெழுந்து அடங்குதலே போல் அகக்கண்ணின் முன்பாக வந்து வந்து தோன்றிக்கொண்டிருக்கும். அவ்வலைகளையே பன்முறையும் அவன் ஆராய்ந்து எண்ணிப் பார்த்திடுவனால் நுண்ணிய அறிவு தோன்றிவிடும்.

இவ்வித அறிவினையுடையான்முன் மற்றொருவர் தோன்றி ஏதாவது ஒரு பொருளினைப் பற்றிய கருத்துக்களைக் கூறுவாராயின் முன்னமே கற்றுணர்ந்த கருத்துக்கள் அவனுடைய அகக்கண்முன் தோன்றிநிற்கும். எடுத்துக்காட்டாக ஒருவர் 'நண்ப, பண்டைக்காலத்தில் அசுரர்கள் இயற்றிய துன்பத்தினை நீக்க வேண்டித் தேவர்களுக்காகத் திருமால் இராமனாகத் தோன்றினான்" என்று கூறியதைக் கேட்ட அவ்வமயமே, நம் கண் முன்பாக, அசுரர்கள் இயற்றிய இடையூறுகளும், தேவர்கள் திருமாலிடம் சென்று வேண்டியதும், திருமாலின் பிறப்பும் ஆகிய இவைகளும், இவைகளைப்பற்றிய கதைகளைக் கூறிய புலவர்களும், அவர்களுடைய செய்யுட்களும் தோன்றுகின்றனவன்றோ? ஏன்? இவைகளெல்லாம் நம்மால் கற்கப்பட்டு நம்முடைய மனத்திற் பதிந்து கிடக்கின்றவையன்றோ? எனவே ஒரு பொருளைப் பற்றிக்கேட்ட அளவில் அப்பொருட்கிசைந்த கருத்துக்கள் யாவும் அவன் அகக்கண்ணின் முன்பு வந்து நிற்கும் என்பதே உண்மை.

அன்றியும் மருத்துவநூல்வல்லான் ஒருவன் தன்னிடம் வரும் நோயாளி யொருவனைக் கண்ணுற்றுப்பார்த்த அளவில் அவன் இன்னநோயினையுடையவன் என்பதை யறிந்து கொள்கின்றான். இஃது எவ்வாறு இயலுமெனின் இதற்கு முன்பாகவே இவ்வண்ணமான உடல் நிலையுடையானைக் கண்டறிந்து இன்ன நோயுடையான் இந்நிலைமையிலிருப்பன் என்பதை யறிந்துள்ளானாகலின், இவனது உடல்நிலையைப்பார்த்த அளவில் அதற்குக் காரணமான நோயும் அவன் உள்ளத்திற் றோன்றிவிடும். இம்மட்டோடன்றி அந்நோய்க்குத் தக்க மருந்தும் தோன்றிவிடும் என்பதும் உண்மையன்றோ?

இதுகாறும் பொதுப்படக் கூறிப்போந்த பொருள் இருபிரிவினையுடைய. அவை புலத்தின்கண் எழும் பொருள், அதற்கு வேறாய்ப் புறத்தே தோன்றும் பொருள் என்பனவாம். இவற்றுள் புறத்தே தோன்றும் பொருள்களை இயற்கைப் பொருளை அறிந்த புலவன் தன் புலப்பொருளோடு கூட்டிப்பெருக்கி யுரைப்பதனையே செய்யுளென்ப. இது மெய் வாய்களின் தொழிலாகும். ஆகவே ஒன்றினையறிவித்தற்குக் கருவி மெய், வாய் என்பனவாம். கண் முதலாயின உளவெனினும் அவை பயன்படுதல் சிறுபான்மையாதலின் மெய்வாய்களைப் போல் அத்துணைச் சிறப்பிலவாம். மெய் கருவியாக அறிவித்தல் ஓவியம் முதலியவற்றின்கண்ணும் பிறவற்றின் கண்ணுமாம். வாய் கருவியாக அறிவித்தல் சொல்லானும் ஓசையானுமாம்.

இனி இவ்விரண்டின் தொழிலுக்கும் என்னையோ வேறுபாடெனின், ஓவியம் பொருளின் புறநிலையை விளங்க அறிவிக்குமேயன்றிச் செய்புள்போலப் புறநிலையோடு அகநிலையையும் உணர்த்தாதென்க. அருவியொன்று மலையினின்றும் வீழுமாபோல் எழுதிவரும் ஓர் ஓவியமானது, அம்மலையினது கரிய நிறத்தையும், புல், செடி, கொடி முதலியவற்றின் பசிய நிறத்தையும், அருவிநீரின் வெள்ளிய நிறத்தையும் பெற்று, நீர்வீழும் அழகையும், மரம் முதலியவற்றின் தோற்றத்தையும் இருந்தபடியே காட்டிக் கண்ணைக்கவர்ந்து இன்பமூட்டுந்தன்மையுடன் விளங்குதல் ஒருதலை. ஆயினும், மலையினின்றும் நீர்விழுந்தொழிலைக் காட்டும் அது, நாழிகைதோறும் நீர் பெருகுதலையும் அதனிடத்து எழும் ஓசையினையும், அவ்வோசை கேட்டு அஞ்சும் உயிர்களின் அச்சத்தையும், மரங்கள் வேர்தகர்ந்து வீழும் அரவத்தையும் காட்டும் இயல்புடைத்தன்று. அவ்வருவியையே ஒரு புலவன் உரைக்கப் புகின் மேற்கூறிய ஓவியத்தோடு அதன்கிழ்க் குறையையும் நீக்கி அதனாற்பெறப்படும் பொருளையும் கூட்டியுரைப்பன். எனவே தோன்றும் பொருளின் புறநிலையோடு அகநிலையையும் கூட்டியுரைப்பதே செய்யுள் என்பது பெற்றும். இது செய்புட்கு வேண்டிய இலக்கணங்களுள் ஒன்றும்.

ஓவியத்துறைபோய ஒருவன் பல்வேறு நிறங்களாற் காண்பதற்கினியதாய்த் தான் கருத்துட்கொண்ட ஓர் பொருளினை ஓவியத்தில் வரைந்து காட்டலே போல் கல்வித்துறைபோய நல்லிசைப்புலவோர் தாம் கருத்துட்கொண்ட பொருள்களை, சில்வகை யெழுத்துக்களுடைய சொல்லாற் பல்வகைப் பொருள்களைச் செறித்து இன்னிசையுடனே விளங்கிடச் செய்யும் ஓர் யாப்பே செய்யுள் எனப் பெயர் பெறும்.

இச்செய்யுள்தான் பாச்செய்யுள் எனவும் உரைநடைச் செய்யுள் எனவும் இருவகைத்து. இப்பாச் செய்யுளும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைத்தாம். மருட்பா என்பதனையும் கூட்டி ஐந்து எனவும் ஆம். இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலக்கண வேறுபாட்டை யுடையன வாம். இவைகளின் ஓசைகளும் தூங்கல், செப்பல், துள்ளல் முதலாக வேறுபடும். இவ்விலக்கணங்களை யெல்லாம் இலக்கண நூல்களிற் கண்டுகொள்க. உரைநடைச் செய்யுட்களோ யாம் உலக நிலையிற் பேசுதல் போல் உரைத்தலாம்.

அகநிலை, புறநிலை ஆகிய இவ்விரண்டும் பொருந்த உரைநடையில் உரைப்பினும் ஆம். ஆயின் அவைமாட்டுக் குறைகள் சிலவுள. அவற்றுள் ஒன்று எளிதில் மனப்பாடம் பண்ணவியலாமை. இரண்டாவது விழுமிய வோசையின்மை. மூன்றாவது யாப்பின் அருமை முதலியன.

உரைநடை யாப்புகள் எளிதில் மனப்பாடம் பண்ணற்கு இயலாது நிற்றலை யாவரும் இனிதறிவர். சீரிய அறவுரைகள் பல இளமைக்காலத்தே பொருள் விளங்காவாய் முதுமைக் காலத்தே அவைகளின் பொருள் விளங்கல் ஒருதலை. இதற்குச் சான்று ஆத்திசூடி ஒன்றுமே சாலும். இங்ஙனமே நம்தமிழ் மறையாகிய திருக்குறளும் பிறசான்றோர் செய்யுட்களுமாம்.

விழுமிய ஓசைபடக் கூறுதல் உரைநடையாப்பிற்கு அரிது. அன்றியும் பாட்டோசை பயில உரைப்பதிலும் அவ்வோசையைப்

பயில்வதிலும் இளையோர் முதல் முதியோர் வரையிலும் யாவர்க்கும் விருப்பு மிகல் இயல்பு. இது சிறுவர்கள் தெருவில் விளையாடுங் காலத்துக் கூர்ந்து நோக்குவார்க்கும், முதியோர் பலரும் தனித்திருக்கும் காலத்து இசை இசைத்தலைக் காண்பார்க்கும் நன்கு புலனும். இவ்வோசை பொருந்த உரைநடையிலும் உரைக்கப்புகின், அவன், ஓர் இசையாசிரியனின் மாணவனை யொப்பப் பல்லோராலும் நகைக்கப்படுவான். அன்றியும் சிற்சில சொற்களைச் சொல்லுங்காலத்து அவற்றிற்கெனத் தனித்த வோசை, செய்கை முதலியவை வேண்டுதல் போல, சிற்சில பொருள்களையுரைக்கப் புகுங்கால் அவற்றிற்கெனத் தனித்த யாப்பு வேண்டுமென அறிக. அதுவன்றிப் புதிய எண்ணங்கள் பலதோன்றித் தடையின்றி வருதற்குச் செய்யுள் யாப்பே சிறந்த துணையாகின்றது என்பர் ஆங்கில ஆசிரியர் மில்டனும் என்பதும் அறிக. விரைந்து செல்லும் குதிரை யொன்றிற்கு ஆற்றின்கண் உள்ள உயர்வு தாழ்வுகள் அதன் செலவிற்குத் தடையாக நிற்றல் போல் தண்ணென்றொழுகிச் செல்லும் சொற்பொருள், உரைநடை யாப்பின் இடையில் நிகழுங் குறிகளும், பிறவுமாய தடைகளால் தம் விரைவு குன்றி ஒழுக்காறு அற்றுப்போகும்.

இனிப் பாச்செய்புட்கள், கூறப்படும் பொருளுக்கேற்ப விழுமிய ஓசையுடையனவாய், எதுகை, மோனை முதலியன உடைமையினாலே, மனப்பாடம் பண்ணுதற்கு மிக்க எளிதாகவும், அம்மட்டோடன்றி மனப்பாடம் பண்ணியவை மறக்கப்படினும் மிக்க விரைவில் எளிதாக மறுபடியும் நினைவிற்குக் கொண்டுவரத் தக்கதாகவுமிருக்கின்றன. விழுமிய ஓசையை உடைமையாக இருத்தலின் யாவரும் விரும்பிக்கற்றிடுவர்.

இவ்வாறுகக் கருத்துக்களைப் பாச்செய்புட்களில் அறிவித்தலிலும் ஓர் தடை யேற்படுகின்றது. ஓர் புலவன் தன் கருத்துக்களை வெளியிடச் செய்புட்களை யாக்கப் புகுவானுயின், அச்செய்புளின் விழுமிய ஓசையினையும், இலக்கணங்களையும் எதுகை மோனை முதலியவற்றினையுங் கொண்டு கூட்டித் தன் கருத்தினை

நிறுத்தல் வேண்டும். அக்காலத்துத் தன் செய்யுளின் எதுகை, மோனை முதலியவற்றிற்காகத் தான் கருதிய பொருளை மாற்றி யமைக்க வேண்டிய நிலைமையில் வருகின்றான். ஆகவே தான் இயற்றப்புகும் யாப்பிற் கேற்பத் தன் கருத்துக்களைத் திருத்தி யமைத்தல் வேண்டும். ஆயினும் இத்தடையினை மீறிக் கொள்வ தற்கே, செந்தொடை, கூன் முதலிய எதுகை மோனையில்லாச் செய்யுட்களையும் அமைத்துப் போயினர் சான்றோர்.

இதுகாறும் யாம் பொதுப்படப் புலமை யென்பது யாதென ஆராய்ந்து வந்தோம். இனிமேல் நம் பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் எவ்வாறான புலமையினை உடையரா யிருந்தனர் என்பதனை யுஞ் சற்று ஆராய்வாம்.

தொடரும்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சாவூர்.

(தொடர்ச்சி துணர் ௩, பக்கம் ௩௧௪.)

அன்னம் விடுதூது.

௮. தார மருங்கா மனப்புள்ளே! தைக்குமால்
வார மருங்கா மனப்புள்ளே—சீரமரும்
என்னைவிட மென்றூர்க் கிசைப்பீர் தனுநாதா
என்னைவிட மென்றுரைன் றேற்று.

காரம் மருங்காம்-பெடையன்னத்தின் அருகிலே பொருந்திய. அனம் புள்ளே-அன்னப்பறவையே. வாரம் அரும்-அன்பு இல்லாத. காமன் அம்பு உள்ளே தைக்கும்-மன்மதபாணம் இருதயத்திலே சென்று வருத்துகின்றது. எற்று (நான் கூறுவதை செவியிலே) ஏற்று. விடமென்றார்க்கு- (முன்னம் என்னை ஒரு போதும்) கைவிடுவதில்லை யென்று சொல்லிப்பிரிந்த திருச்சுழியல் நாதருக்கு. என்னை-அன்னமாகிய என்னை. விடமென்றார் என்று இசைப்பீர்- (நம் தலைவியார்) விடமென்று சொல்லி வெறுத்து விட்டார் என்று கூறுவீராக.

"காரமருங்கா மனப்புள்ளே" என்றது நீ உன் துணையை விட்டுப் பிரியாது எங்ஙனம் வாழ்கின்றாயோ யானும் அங்ஙனம் வாழவேண்டாவோ என்பதை அறிவித்தற்காக வென்க. வார் அமரும் அம்பு என எடுத்து-கீட்சி பொருந்திய அம்பு என்றலும் ஒன்று. என் கைநவு இடம் என்றார்க்கு எனப் பிரித்து என் மனக் கனிவுக்கு விடயமான தானம் என்றவர்க்கு என்று பொருளுரைப்பினுமாம். மூன்றமடியிலுள்ள என்னைவிட மென்றார்க்கு என்பதற்கு, எனது தலைவரும் நஞ்சுண்டவருமான திருச்சுழியற் பிரானுக்கு, என உரை கூறினுமாம். ஐ-தலைவர். இச்செய்புள் மடக்கு என்னும் சொல்லலங்காரம் பெற்றது. இச்செய்யுளை "காரமருங்கா மனப்புள்ளே" என்ற தொடக்கத்து அழகர் கலம்பகச் செய்யுளோடு ஒப்புநோக்குக.

கூ. எற்றுக் கொளினும் இனிதே பிறவிபுந்தான்
கூற்றுக் கடிந்தோனைக் குங்குமத்தின்—சேற்றுச்
சுணங்குவார் கொங்கைத் துணைமாலை கோனை
வணங்குவா ராயின் மகிழ்ந்து.

துணைமாலை நாயகனை வணங்குவார் பிறவி மார்க்கண்டே யாது பிறவிபோன்று துன்பந்தாராது இன்பமே பயக்கும் என்பது இக்கவியின் கருத்து. அருமைதோன்ற "வணங்குவாராயின்" என்றார். இச்செய்புளை

"இனிதே பிறவி யினமரங்க ளேறக்
கனிதேர் கடுவன்க டம்பின்—முனிவாய்ப்
பிணங்கிவருந் தன்சாதற் காளத்தி பேணி
வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து"

என்ற திருமுறைச் செய்யுளோடு ஒப்பு நோக்குக.

௰. மகிழும் பிறையோடு வாளரவுஞ் சூடித்
திகழுந் திருமேனிச் செல்வா!—இகழும்
வினையா ரெனையும் விழுமியர்பால் வைத்தால்
உனையார் வினவுவா ரோது.

வினை-தீவினை. மகிழ்ச்சியைத்தரும் குளிர்ந்த சந்திரனையும், துன்பத்தைத் தரும் வெவ்விய அரவத்தையும் சமமாகத் தரித்த திருமேனிப்பிரானே! பெரியோர்களாகிய நின் அடியார் பாற்றுத் தீவினையையுடைய அடியேனைச் சமமாக வைத்தால் உன்னை வினவுவார் யார் என்பதாம். ஒன்றை யொன்று பகைத்துநிற் றொழில் நீங்கி உறவுகொண்டு மகிழும் பிறையையும் அரவத்தை யுஞ் சூடி என்று முதலடிக்குப் பொருள் கூறினுமாம். இதனால் தீவினையையுடைய அடியேனை நல்வினையையுடைய பெரியோர் களின் குழுவில் தேவரீர் வைத்தால், உமது நல்லருள் மகிமை யினால், அப்பெரியோர்களால் வெறுத்துத் தள்ளத்தக்கவனாகாமல் புகழ்ந்து கொண்டாடப் பெறுவேன் என்பது போதருமாறு காண்க.

௧௧. இருதாம் வினைகா ளொழிக்கோ ரிடந்தேடிப்
போதும் பொழுதுபெறப் போமின்கள்—காது
நிறைகின்ற கூந்தற் றுணையாள் நேயன்
உறைகின்ற வுள்ளத் துணர்ந்து.

இருதாம் வினைகாள்-புண்ணிய பாவங்களென்று சொல்லப் படுகின்ற கருமங்களே! நேயன் உள்ளத்து உறைகின்றது உணர்ந்து பொழுது பெறப் போமின்கள் என்றியைக்க. பொழுது பெற-விடியவிடியவென்றபடி. இச்செய்யுளை, "பெற்றங்கள் மேய்க்கும்

பிரானூர் பேறாந் திருக்கோயில்கண்டீர், அற்ற முறைக்கின்றே வின்னம் ஆழ்வினைகா ளுக்கிங்கோர், பற்றில்லைகண்டீர் நடமின்" என்ற ஆழ்வா ரருளிச் செயலோடும்,

"விழுப்பா ரினியெமை யார்பிற வித்துயர் மெய்புறவந்
தழுப்பா தொழிமி னருவினை காளெம்மை யப்புறத்தே
யிழுப்பா னொருவன்வந் தின்றுநின் றானிள நாகுசங்கங்
கொழுப்பாய் மருதஞ் சுலாங்குரு கூரெங் குலக்கொழுந்தே"

என்ற சடகோபரந்தாதிச் செய்யுளோடும் ஒப்புநோக்குக.

௧௨. உணர்ந்தும் நெடுநா ளுணராதுஞ் செய்து
புணர்ந்த வருவினைகள் போமே—கொணர்ந்து
கொழியலிறை முத்தக் குளிர்நதிதோய்ந் தெம்மான்
சுழியலிறை பாதந் தொழின்.

கொழியல்-கொழியலாக. விடாது பிறவிகள் தோறும் தொடர்ந்து வருதலான், "புணர்ந்த வருவினைகாள்" என்றார். வினையாகிய வெப்பத்தை நீக்குதலுடைமையின் "குளிர்நதி" என்றார். இச்செய்யுள்,

"அறியாம லேனு மறிந்தேனுஞ் செய்த
செறிகின்ற தீவினைக ளெல்லாம்—நெறிநின்ற
நன்முகில்சேர் காளத்தி நாத னடிபணிந்து
பொன்முகரி யாடுதலும் போம்"

என்ற மேலோர் செய்யுளை அடியொற்றியது காண்க.

௧௩. தொழுவனோ நின்னைத் துணையாலே நேயா!
விழுவனோ நின்றிருமுன் வீழ்ந்தங்—கழுவனோ
பாடிக் கனிந்துருகி யாடிப் பாதாம்புயத்தைச்
சூடிக் களிப்பனோ சொல்.

தொழுதல் முதலியன ஈச்வரன்பக்கல் அன்பும், அறிவு முடையாரது மெய்ப்பாடு. "ஆடினான் அழுதான்பாடி அரற்றி னான் சிரத்திற் செங்கை—சூடினான் தொழுதான் ஓடி உலகெலாம் துகைத்தான் துள்ளி" என்றார் கவிச்சக்ரவர்த்தியும்.

௧௪. சொல்லாய் மறையோ சுழியலோ அம்பலமோ
நல்லாய் துழாய்மாலை நாயகனே—வில்லாய்
மலைகுழையும் வல்லவா! வல்வினையேன் நெஞ்சோ
நிலைகுழையுங் கானம் நினக்கு.

சொல்லாய் மறை-(உனது பொருள் சேரும்) புகழையே ஆராயும் வேதம்; சொல்-புகழ். இனி, சொல்லாய் என்பதற்கு, சொல்லியருளாய் எனவுமாம். நல்லாய் என்பதை விளியாகக் கொள்ளாது துழாய்மாலைக்கு விசேடணமாக்கி நல்லதாயாகிய என்று கொள்ளலும் ஏற்கும். "வில்லாய் மலைகுழையும் வல்லவா" என்பது நீ முன்னம் கல்லை வில்லாகக்காட்டி நினது திறமையை வெளியிட்டாய்; இப்போதும் என் வன்னெஞ்சக்கல்லை மென்மலராக்கி அதில் எழுந்தருளி நினது வல்லமையைக் காட்டுவாய் என்பதைக் கொண்டு நிற்றல் அறிக. இச்செய்யுள்

"இருக்குந் திருக்கோயி லேழையே னெஞ்சோ
மருக்கொள் கயிலை வரையோ—திருக்களவோ
சோதிமணி மன்றோ சுடர்விசும்போ பால்வன்றோ
வோது மறையோ வுனக்கு"

என்ற செய்யுளின் கருத்தை முற்றிலும் கொண்டிருப்பது பாராட்டற்பாலது.

௧௫. கான நினைக்கேன் றவநினைக்கேன் பல்கலைநூல்
ஞான நலநினைக்கேன் நன்னெஞ்சே—ஈனம்
அடர்த்தாளும் பரிச னைந்தெழுத்தாஞ் செய்ய
சுடர்த்தாளு முண்டே துணை.

பரிசன் என்பது, திருச்சுழியல் நாதனது திருநாமங்களுள் ஒன்று. மலவிருளை நீக்கல் பற்றி "சுடர்த்தாள்" என்றார் என்க. சூரியனது சிவந்த இளங்கதிரை போக்க வல்லகலையுடைய அடியெனவுமாம். விரல்கட்டு சூரியனது இளங்கதிரை ஒப்புக் கூறலை

"களங்கெழு கற்பக முமிழுந் தண்டுளவு
இளங்கொடிப் பவளமுங் கிடக்க வென்னவை
துளங்கொளி விரற்கெறி ருதிக்குஞ் சூரியன்
இளங்கதி ரொக்கினு மொக்கு மேந்திழாய்"

என்ற கம்பராமாயண செய்யுளினது ஈற்றிரண்டடிகளால் அறிக.

கஎ. உண்டு துணையெனச்சூழ்ந் தூற்று ருயிர்போதல்
கண்டு விலகுங்காற் கால்கொடுப்பாய்—விண்டு
தொழுங்கால காலா! சுழியலினாய்! பண்டு
விழுங்கால காலா! விரைந்து.

உண்டு-நமது சோற்றைத்தின்று. துணையெனச்சூழ்ந்து-நாம் உமக்குத் துணையாயிருக்கின்றோம் என்று சொல்லி, நம்மோடு கூடவேயிருந்து. விரைந்து கால்கொடுப்பாய் என இயையும் சூழ்ந்தூற்றார் விலகுங்கால் உண்டு துணையெனக் கால்கொடுப்பாய் என இயைத்துப், பொருள்கொள்ளுதல் நன்குபொருந்தும் காலன் கைப்படாமல் என்னைக் காப்பாய் என்பார் "காலகாலா" என்றும், பிறவிப் பெருங்கடலில் வீழாமல் துணைசெய்வாய் என்பார் "சுழியலினாய்", என்றும், வினையரவின் விடத்திற் சாகாது போற்றுவாய் என்பார் "விழுங்காலகாலா" என்றும் கூறினார் என்க.

கூடலிழைத்தல்.

கஅ. விரையகலக் கொன்றைச் சுழியலர்கோன் மீண்டேன்
புரையகலக் கண்களிக்கப் போந்து—வரையகலங்
காட்டுமே லென்னைக் கலந்திறுகத் தன்னோடுங்
கூட்டுமேற் கூடலே கூடு.

விரைஅகல் அக்கொன்றை—நன்மணம் விரிந்த அந்த கொன்றைமலர் மாலையினை. சுழியலர் கோன்-சுழியல் நகரத்தவரது தலைவனாகிய திருமேனிநாதன். புரை—குறை; ஈண்டு சாயலொடு மணமாமை தளர்ந்ததாகிய குறை. திருவடையாள மாலையாகலின் "அக்கொன்றை" என உலகறிசுட்டார் கூறினர்.

"கூடலாவது—வட்டமாகக் கோட்டைக்கீறி அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து, இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டாற் கூடுகை, ஒற்றைப்பட்டால் கூடாமை என்று சங்கேதம்" என்றருளிச் செய்வர் நாச்சியார் திருமொழியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியனத் தரும்பதத்தில்.

கஅ. கூடு மிளமையும்பொற் கொங்கையினர் கூட்டுறவும்
மாடுங் குறித்தைவர் வாய்விழுந்தும்—பாடு
விழுற்புல்லி னீர்விடலாம் மெய்ச்சுழிகைத் தானு
கழுற்புல்லி னீர்விடலாங் கட்டு.

கூடு மிளமையும்-சீரத்தையும் யெளவனத்தையும்; கூடு-சரீரம் அன்றி, நன்றாகக்கூடிய இளமையையும் எனக்கொள்ளலாம். பொற்கொங்கை-பொன்னுபரணங்களை அணிந்த முலை; அழகிய முலை; பொன் போன்று தேமல்படர்ந்த முலை. மாடும்-செல்வத்தையும். பாடு-பிரயாசம். விழுற் புல்லில் நீர் விடலாம்-விழலுக்கிறைத்த நீர் போன்ற தன்மைத்தாகும். கட்டு- "நாசமான பாச"த்தினது பந்தம். பின்னாண்டடி திரிபு என்னும் சொல்லணியுடையது.

கசு. கட்டுச் செடிப்புலனைக் காய்ந்து சுகதுக்கம்
விட்டுப் பசையறுத்த மேலோர்க்குங்—கட்டுப்
படாதுயரும் பூமிசன் பாதமுநான் கண்டேன்
அடாதுயரு மென்பாற் கடுத்து.

செடிப்புலனைக் காய்ந்து கட்டு—(ஞானமாகிய பைங்கூழைத் தலைஎடுக்கவொண்ணாது மூடி அழிக்கும்) ஐம்புலன்களாகிய பூண்டை காய்ந்து களைந்து. கட்டுதல்-களைதல். துயரும் என் பார்க்கு அடுத்து அடா-(பிறவித்)துன்பமும் என்னிடத்து வந்து வருத்தா.

உo. அடுக்கும் பிறவிக் கருங்கடலுக் கம்பி
படுக்கு மனவிருட்குப் பானு—மடுக்குஞ்
சதிபுற்ற கல்வினைக்கோர் சாயகமாஞ் சூலப்
பதிபுற்ற நாதன் பதம்.

சூலப்பதி-திருச்சுழியலுக்குள்ள பெயர்களில் ஒன்று. அம்பி-தோணி. பானு-சூரியன். மடுக்கும்சநி-(நாகிலை)தள்ளவல்ல வஞ்சனை. சாயகம்-அம்பு. இச்செய்யுளை,

"இடர்க்கடலுக் கோட மிதயவிருட் சென்றாழ்
உடற் பகையை வேராறுக்கு மொள்வாள்-இடப்புறத்தைச்
சூல்வண்ண மேகச் சாகுழலுக் கீந்தருளும்
பால்வண்ண நாதன் பதம்"-என்ற செய்யுளோடும்,

"துணையெனப் படுவ வுயிர்க்கள வரிய தொல்லைவெவ் வினைவரை துளைக்கும்
கணையெனப் படுவ நீந்தரும் பிறவிக் கருங்கடல் கடப்பதற் கமைந்த
புணையெனப் படுவ கட்டுவீ டென்று புகன்றிடப் படுவவே தில்லை
யிணையெனப் படுவ பாலையூர்ப் பெருமா னிருபதத் தாமரை மலரே"

என்ற திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடலோடும் ஒப்புநோக்குக. இத்திருச்சுழியல் வெண்பா வந்தாதியின் செய்யுட்களும், கவிஞர் பெருமானாகிய பிள்ளையவர்கள் செய்யுட்களும், ஓரோவிடத்துப் பொருளால் ஒத்துக்கிடக்கின்றமை அறியத்தக்கது.

௨௧. பதந்தொடரு மன்னம்; பொறியரியும் பைந்தார்
விதந்தொடரு மென்குழலை வேட்டு—நிதந்தொடரும்;
பண்புடையா ளானாற் பானே! துணைமாலை
நண்புடையா ளாமே நமக்கு.

அன்னம் பதந்தொடரும்-அன்னமானது (தேவியின் நடையைக் கற்க) அவளது பாதத்தைத் தொடர்ந்து செல்லாநிற்கும். பொறி அரி-பொறியையுடைய வண்டு; பண்புடையாள் ஆனால்-இப்படிப்பட்ட (அன்னந்தொடரும் பாதமும், பொறியரி தொடரும் கூந்தலுமுடைய)வளானால். நமக்கு-தேவரீருக்கு. இது இப்பொருள் குறித்தலை "நெருநலினும் வந்தவரோ நாமேன்ன" என்ற கல்வியிற் பெரியாரது வாக்கினால் அறிக.

பொறியரி (இலக்குமியையுடைய திருமால்) தொடரும் பாதமும் அன்னம் (பிரமன்) தொடரும் சடைமுடியையுடைய தேவரீருக்கு, பொறியரி (வண்டு) தொடருங் கூந்தலும் அன்னம் (அன்னப்புள்) தொடரும் பாதமுமுடைய துணைமாலை எவ்வாறு கண்புடையாளாவாள்? என்றவாறு.

"பொறியரி தொடரு மருமலர்த் தாளோன் பொலியனந் தொடர்சடா முடியோ
யறிபுநின் கொழுநன் பொறியரி தொடரு மலர்க்குழ லினைநடை யன்னந்
செறிதரத் தொடர்மென் பதத்தினை யெவனீ தேவொடு மாறுளாய் சொல்லோ
குறிபயி லளிசூழ் பொழிற்றிரு வானைக் காவகி லாண்டநா யகியே"

என்ற பிள்ளையவர்களது செய்யுள், இச்செய்யுளினை அடியொற்றியது.

௨௨. நம்மை வலாரியயன் நாரணனு நாமத்தைச்
செம்மை பெறப்புனைந்து சேமிப்பான்—வெம்மைப்
படநாகம் பூண்டானைப் பைந்நாகத் தின்கீழ்க்
கடனாகக் கைதொழுதாற் கண்டு.

வலாரி-இந்திரன். சேமிப்பான்-காப்பான். நாகம்-புன்னாகமாம். பைந்நாகத்தின் கீழ்க்கண்டு கடனாகக் கைதொழுதால் எனவியையும். புன்னைமரத்தின் கீழ் வீற்றிருக்கும், திருமேனிப்பிரானை வணங்குபவர், இந்திரன், பிரமன், திருமால், இவர்களது பதவியை யடையப் பெறுவார்கள் என்று இச்செய்யுட்குப் பொருள் காண்க.

௨௩. கண்டு களிக்கக் கழலு மணிச்சிலம்பும்
பண்டு தரிபுரியும் பட்டுடையும்—கொண்டு
பொடியோடு சாந்தொளிரப் பூமீச! போந்தன்
கொடியோடுங் காட்சி கொடு.

கண்டுகளிக்க-அடியேன் தரிசித்துக் களிக்குமாறு. நிகம்பாத்தை விலக்கப் "பண்டுதரிபுரியும்" என்றார். மணிச்சிலம்பு-அழகிய சிலம்பு; மணிப்பரல் பொருந்த சிலம்பு. கொடி-பூங்கொடி.

போன்ற துணைமாலை. கழலும், உரியும், பொடியும், திருமேனி நாதன் அணிவது; சிலம்பும், பட்டும், சாந்தும் தேவி அணிவது. இச்செய்யுளை அடியொற்றி

"அடியனேன் மனத்துக் கழலொடு சிலம்பு மதளொடு
பட்டும்வெள் ளியநுண்
பொடியொடு சாந்துஞ் சடையொடோ திமமாய்ப் பொலிதரப்
பெறுவதெந் நாளோ
தொடியிடை மடவார் கொவ்வைவா யிதழுங் குறியகட்
கொழுஞ்செழுங் கரும்புங்
கடிபடச் செவிட்டா விரதமூற் றெடுக்குங் கலைசைவாழ்
சிதம்பரேச் சுரனே"

என்பர் கலைசைச் சிதம்பரேசுவர் மாலையில், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

உச. கொடுவிடஞ் சோறு கொடுவரித்தோல் கூறை
படுவிடப் பைந்நாகம் பைப்பூண்—நடுவிடம்
நீறுதருங் காடென்னிற் புன்னை நீழலார்க்குப்
பேறுதரும் வீறுண்டோ பேசு.

கூறை-தரிக்கும் உடை. கொடுவரித்தோல்-புலியின்தோல். படுவிடப்பைந்நாகம்-கொல்லுநச்சுப் பையையுடைய பாம்பு. நடுவிடம்-நடனசபை. பேறுதரும்வீறு-பாக்கியத்தைத்தரும் வல்லமை. சோற்றுக்கும், துணிக்கும் வகையில்லாமல், விடத்தை தின்று தோலைப் போர்த்துக்கொண்டிருப்பவரும், வீடில்லாமல் மரத்தினிழலிலே உறைபவரும், பாம்பையணிந்து சுடுகாட்டில் நடனம்புரிபவருமாகிய திருமேனிநாதர், தம்மையடைந்தார்க்கு என்ன பாக்கியத்தை தரப்போகிறார் என்றவாறு. இது, பழித்தது போலப் புகழ்ந்தது. இச்செய்யுள்

"ஏறுவது கொல்லே றெரிசுடலை யாடரங்கு
கூறைபுலித் தோன் மணிப்பூண் கோளரா—நாறு
கரந்தை யணிகருவைக் காபாலிக் கென்பால்
வரந்தரவே றுண்டோ வகை"

என்ற செய்யுளை அடியொற்றியது.

௨௯. பேசி லெவரே பெருவலியர்? பூரிசா!
மாசின் மலையான் மனைமுதடுத்த—தேசிற்
பிணைக்கேற்ற மாலோ பெருநகரைச் சூல
முனைக்கேற்ற நீயோ மொழி.

மாசின்மலை-மேகங்கள் தவழப்பெற்ற மலை. பிணைக்கேற்ற மால்-நப்பின்னைப்பிராட்டிக்கு ஏற்றவனான கண்ணனாகிய திருமால். தேசிற் பிணைக்கேற்ற மால் என்றதனால், பெண்களை நாடி, மேனி மினுக்கித்திரியும் கண்ணன் நின்னைப்போல் ஆயுதம் எடுத்து ஆனிரையையும் காக்கவல்ல வீரனன்று என்பதாக, "எவரே பெருவலியர்" என்ற வினாவிற்கு விடையும் உரைவைத்தார்.

கரும்பை நோக்கித் தலைவியிரங்கல்.

௩௰. மொழியுங் குழைவார்ந்தீர் முத்தமிழச் செய்யுள்
வழியுமா சாரமுநீர் வாய்ந்தீர்—கழியுமக்குக்
கோலஞ்செய் மாச்சுழியார் கோவுக் கெதிர்நில்லாக்
கோலஞ்செய் வேளிணக்கங் கோது.

மொழியும் குழைவு ஆர்ந்தீர்-வார்த்தைகளும் வணக்கமாகப் பொருந்தப் பெற்றீர். (இலைக்குழைகள் நிரம்பப்பெற்றீர்) முத்தமிழச் செய்யுள்வழியும் ஆசாரமும் நீர் வாய்ந்தீர்-மூவகைப்பட்டதாகிய தமிழ்ச்செய்யுள் நூல்களிலே கூறப்படும் நன்னெறியையும், நல்லொழுக்கத்தையும் நீர் அமையப்பெற்றுள்ளீர் (வயல்களில் முத்து சிந்திப்பதிய நீங்கள், வழிகின்ற மிக்க சாரத்தையும் பொருந்தியுள்ளீர். கழி உமக்கு-(இவ்வாறு செந்நெறிச் சேர்ந்துள்ள) கரும்புகளாகிய உங்களுக்கு, கோலம் செய்-அழகு பொருந்திய மாச்சுழியார் கோவுக்கு-திருச்சுழியற்பிரானுக்கு, நில்லா கோல் அஞ்சு எய் வேள்-எதிர்நிற்கமாட்டாத ஐயம்புபொழியும் மன்மதனது, இணக்கம் கோது-நட்புத்தீதே. தமிழச்செய்யுள்-அ-வேற்றுமைப் புணர்ச்சியில் வந்த சாரியை. இணக்கம் என்றது மன்மதனுக்கு வில்லாயிருக்குந்தன்மையை.

உஎ. கோதை மடவார் குவிமுலைவீழ் வண்டனும்
பேதை முடிக்குன் பிறங்குகழற்—போதைப்
புனைவனே முத்திபுரப் பூமீசா! நீவாய்
இனைவனே சொல்லாய் எனக்கு.

முத்திபுரம்-திருச்சுழியலுக்கு ஒரு பெயர். கோதை மடவார்-பூமாலை போலும் மெல்லியலாராகிய இளமங்கையர். அன்றி, கூந்தலையுடைய மங்கையருமாம். வீழ்தல்-விரும்புதல். "திருவீழ் நுண்பூண்" என்றார் புறத்திலும். வண்டன்-தூர்த்தன். குவிமுலைவீழ் வண்டனும் பேதை என்பதற்கு-குவிமுலையாகிய கோங் கரும்பிலே வீழ்ந்துபட்ட வண்டையொத்தனாகிய அறிவிலி என்று பொருள் கூறினுமாம். அப்பொழுது மடவார் என்பது பரத்தையரைக்குறிக்கும்.

உஅ. என்னை நிகர்ப்பவரார் எதிங் கெனக்கரிது
முன்னை மறையறியா முன்னவனைப்—புன்னை
நிழலடியிற் கண்குளிர நெஞ்சுருகி யேத்திக்
கழலடியிற் கைகுவித்தேன் கண்டு.

"நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" என்று ஆழ்வார் பெருமிதந்தோன்றக்கூறி இன்புற்றது போல, இவரும், திருமேனிநாதனைத் தரிசித்தமையின் பெருமிதங்கொண்டு "என்னை நிகர்ப்பவரார்? எதிங்கெனக் கரிது?" என்று கூறுகிறார். மனமொழி மெய்களால் வணங்கினேன் என்பார் "நெஞ்சுருகி ஏத்திக் கைகுவித்தேன்" என்றார் என்க.

பிரிவாற்றாத தலைவி நிலைக்குத் தோழி இரங்கல்.

உகூ. கண்டு சினைமுத்தங் கண்மயங்கத் தாஞ்செறுத்து
வண்டுஞ் சிலம்பனமும் வாதாட—விண்டு
புரிவளைதிர்க்கும் புனல்வயலூர் கோமான்
சரிவளைக்கு நல்குமோ தார்.

சினை-அன்னமீன்ற முட்டையும், முத்தம்-சங்கமீன்ற முத்துக்களும், கண்மயங்க-நீர்த்துறையிலே கலந்து மாறுபடினவாக

'வெண்டும் சிலம்பனமும்-சங்கமும், சிலம்பொலிபோல் ஒலிக்கும் அனப்பறவையும், தாஞ்செறுத்து வழக்காட-தமக்குள்ளே யெதிர்க்கிட. புரிவளை-வலம்புரிச் சங்கமானது, கண்டு விண்டு தீர்க்கும்-அவ்வழக்கைப் பார்த்து விலக்கி அவற்றின் வழக்கை நீர்க்கற்கிடமான. புனல் வயலூர்க்கோமான்-நீர்வளஞ்செறிந்த வயலூரில் (திருக்கழியலில்) வீற்றிருக்கும் பிரான்' சரிவளைக்குத்தாகல் தரோ-கழன்றுவிழும் வளையல்யுடைய இவ்விளம் பெண்ணுக்குந் கொன்றைமலர் மாலையைத்தருமோ? என்றவாறு. சரிவளை-வினைத்தொகை அன்மொழி. சங்கும் அன்னமும் வழக்கிடுகையில், இவ்விரண்டும் மதிக்கத்தக்க வலம்புரிச்சங்கு அவை அஞ்சி அகலும்படி அவற்றின் நடுவிற் சென்றதையே, வழக்குத் தீர்த்ததாகக் குறித்தார். பிரிந்த நிலையில் தலைவி தலைவனது மாலையைப் பெற்றாயினும் மகிழக்கருதியதனைக் குறித்து "நல்குமோதார்" என்றது. இது தனது மாலை இவளுடம்பிற் படும்படி கலவியின்பத்தைத் தந்தருள்வனோ என்ற குறிப்பாம். இச்செய்யுள்

"அரிவளை பொன்மகி ழாயிழைக் கீயுங்கொ லந்திவந்து
முரிவளை முத்துஞ் சினையு மயங்க முறைசெலுத்து
வரிவளை யும்மன்ன முந்தம்மி லேவழக் காடவலம்
புரிவளை யூடறுக் குங்குரு கூரெம் புரவலனே" என்ற

கல்வியிற் பெரியாரது கவித்துறைச் செய்யுளை அடியொற்றியது.

௩௰. தார்கெழு மாலிக்கந் தண்டாளம் பூணாத
கார்கெழு வெவ்விடக் கட்செவியைச்—சீர்கெழு
பூணாகக் கொள்ளப் புவனேசா! மற்றுந்தக்
கோணாகஞ் செய்தவமென் கூறு.

தார்கெழு-மாலையாகப் பொருந்துதற்குரிய. கெழு-சாரியைச் சொல்; பொருந்துதல் என்னும் பொருள்தந்து நின்றது. சிலப்பதிகாரப் பதிகத்தில் "முடிகெழுவேந்தர்" என்புழி, 'கெழு' என்பதற்கு, இவ்வாறே கொள்வர், அடியார்க்குநல்லார். கோள்நாகம்-கொல்லுதற் றொழிலுடைய நாகம்.

தொடரும்-

உ

இறை யருள் வாழ்க.

உடல் இயலும் உடல் நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B A., L.T., ஆசிரியர்,
போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், உரத்தநாடு.

முன்றொடர்ச்சி, துணர் 3, பக்கம் 299.

மூன்றாம் படலம்.

தசைக் கூட்டம்.

தசைகளின் வகை தொகை:—நமது உடலின் எலும்புகளை இயக்குவன ஐந்நூற்றிற்கு மேற்பட்ட தசைகளே. இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயிருள்ள பொறி (Machine) ஆகும். இவை பொறிகளைப்போல் வேலையுஞ்செய்து சூடு முண்டாக்குவன. எனினும் நம்மாலாக்கப்பெற்ற பொறிகளினும் பன்மடங்கு திறமை (Efficiency) வாய்ந்தன. எவ்வாறெனின், கொடுக்கப்பட்ட எரிபொருளைக் (Fuel) கொண்டு மிகக் குறைந்த சூடும் மிகுந்த வேலையுஞ் செய்வன தசைகளேயன்றி நம்மாலாக்கப்பெற்ற பொறிகளல்ல. இத்தகைத் திறமைவாய்ந்த பொறிகள் நம்முடலிற் குறைவாயில்லை. நம்முடல் நிறையில் நூற்றிற்கு 41 பங்கு தசைகளாமெனின் அவை மற்றைய பகுதிகளாய எலும்பு, குருதி, நரம்பு, தோல் முதலியவற்றினும் மிகுந்திருப்பது தெளியப்படும். இவைகளாற்றான் நாம் உணவு தேடி, சமைத்து, உண்டு, சமிக்க வைக்கிறோம். இவைகளே குருதி ஓட்டம், மூச்சுவிடுதல் முதலிய

உயிர்த்தொழில்களைச் செய்கின்றன. நாம் பேசவும், நடக்கவும், வேலை செய்யவும் உதவுவன இவைகளே. இத்தசைகளில் இருவகையுண்டு. ஒன்று கட்டுப்படுவன (Voluntary) மற்றொன்று கட்டுப்படாதன (Involuntary). கட்டுப்படுந்தசைகளே உள்ளம் நினைத்தபடி நடப்பன. கை, கால், தலை, முண்டம் முதலிய உறுப்புக்களை வெளியிலிருந்து இயக்குவன இவைகளே. இவ்வாறின்றிக் குருதியேற்றம், நீளிப்பை, நுரையீரல் முதலிய உள்ளுறுப்புக்களை இயக்குவன உடலினுட் புறத்துள்ள கட்டுப்படாத தசைகள். இவைகளின் வேலைகளை நாம் நினைத்தபடி நிறுத்திவைக்க வியலாது. இவ்வாறு இவ்விருவகைத் தசைகளும் தொழின்முறையில் மாறுபடுவதன்றி அமைப்பிலும் மாறுபடுகின்றன. கட்டுப்பட்ட தசைகள் வரியுடையன (Striped). கட்டுப்படாதவைகளில் வரியில்லை (Unstriped). [ஈற்றிலுள்ள படத்தைப் பார்க்க]. ஒவ்வொரு தசையும் பல தசை நார்கள் (Fibres) சேர்ந்து உண்டாயிருக்கின்றது. ஒவ்வொரு தசை நாரிலும் பலதசைக் கூடுகளிருக்கின்றன. இவை இணைக்கப் பெற்றிருக்கும் வியப்பே வியப்பு!

நீட்டி முடக்குந் தசைகள் :—எல்லா எலும்புகளும் மூட்டுகளில் இயங்குவதைக் காணலாம். இயக்கம் எலும்புகள் நீளுவதாலும், முடங்குவதாலும், திரும்புவதாலும் உண்டாகிறது. இவ்வாறு எலும்புகளை இயக்குவன தசைகளே. தசைகள் ஒவ்வொரு மூட்டின் அருகே மூட்டின் இருபுற எலும்புகளிலும் இணைக்கப் பெற்றிருக்கின்றன. எடுத்துக் காட்டாக முழங்கை மூட்டை எடுத்துக்கொள்வோம். இம் மூட்டாற்றான் முன்கை நீண்டு முடங்குகிறது. இதை நீட்ட ஒரு தசையும் முடக்க ஒரு தசையும் தனித்தனியே உண்டு. இவைகளுக்கு நீட்டி (Extensor) முடக்கி (Flexor) என்னும் பொதுப்பெயருண்டு. முன்கையை நீளவைப்பது முண்டா என்னும் இருமுதலி (Bicep). இதன் ஒரு புறம் மேற்கை அடியிலும் மற்றொருமுனை கீழ்க்கை அடியிலும் இணைக்கப்பெற்றிருக்கின்றன. இதனால் இது சுருங்கும்பொழுது கீழ்க்கை முடக்கப்பட்டு மேற்கையிடங் கொண்டு வரப்படுகிறது. இவ்வாறு முடங்கிய கையை நீட்ட வேண்டு

மாயின் மும்முதலி (Tricep) சுருங்குகிறது. இதுவும் இரு முதலியைப் போலவே மேற்கை எழும்புகளின் அடியிலேயே இணைக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் இது மேற்கையின் பின்புறமாக இருக்கிறது. இத்தகைய ஏற்பாடே மற்ற தசைகளிலும் மூட்டுகளிலுமுளது. இவ்வாறு இயங்குந் தசைகளை எலும்புகளுடன் இணைக்க வேண்டுமன்றோ? இதற்காக மிக உறுதியுடைய தசைக்கயிறுகள் (Tendons or Sinews) தசைகளின் ஒவ்வொரு முனையிலு மிருக்கின்றன.

தசை நல வழி :—எத்தசை மிகுதியாக வேலை செய்கிறதோ அதற்குக் குருதியும் மிகுதியாகப் பாய்கிறது. இதனால் அதன் கூடுகள் பெருத்துப் பல்குகின்றவாதலின் அத்தசையும் பருத்து வலிவடைந்து கருஞ்சிவப்பு நிறமடைகிறது. வேலை செய்யாத தசையோ சிறுத்து வலிவற்று வெளுத்துப் போகிறது. ஆதலின் தக்க தசைப்பயிற்சி மிகவும் இன்றியமையாததே. இளமையில் தக்க தசைப்பயிற்சியால் தசைகளை எளிதில் பருத்து வலிவடையச் செய்யலாம். ஆதலின் இளமையில் கட்டாயமாகக் கற்க வேண்டியவற்றுள் தசைப்பயிற்சியை முதன்மையானதாகக் கொள்ளல் வேண்டும். முதுமையில் பயிற்சியால் தசைகளைப் பருக்கவைத்தல் அவ்வளவு எளிதன்றேனும் தக்க முயற்சியால் பயனடையலாம்.

நமது உடலிற்கு வரும் பலவித நோய்களில் மூன்றிலொரு பங்கு தசைப்பயிற்சியின்மையால் உண்டாகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இக்காலத்தில் கற்றோர் பலர் குறைவாக நடமாடுவதால் தசைகளுக்கு மிகக் குறைந்த வேலையைக் கொடுத்து வலிவிழக்கச் செய்கின்றனர். இத்துடன் நில்லாது எக்காலமும் படித்து அல்லது எழுதிக்கொண்டிருப்பதினால் கண்களுக்கும் மூளைக்கும், நாளொன்றிற்கு நான்கு அல்லது ஐந்து முறைக்குக் குறையாதுண்பதினால் சமிக்கும் உறுப்புகளுக்கும் அளவிற்கு மிஞ்சிய வேலையைக் கொடுத்துக் களைப்படைந்து நலியச் செய்கின்றனர். இதனால் இவர்கள் நோய்க் களஞ்சியமாகின்றனர். இன்னோர் எத்துணை வலிமைதரும் மருந்துகளை (Tonics) உண்டும்

என்ன பயன்? வலிமைதரும் மருந்துகளால் மட்டும் வலிமை உண்டாவதாயின் யாவரும் புட்டி புட்டியாக உண்டு வீமர் ஆகுமார் ஆய்விடலாமே! இல்லை! இல்லை!! வலிமை முயற்சியாலும் பயிற்சியாலும் உண்டாகுமேயன்றி மருந்துகளால் மட்டும் ஒருக்காலும் உண்டாகாது. மருந்துகள் உடற்கு ஒத்தனவாயிருந்தால் மட்டும் சிறிது ஊட்டங் கொடுக்கலாமேயன்றி வேறொரு நன்மையுஞ் செய்ய வல்லனவல்ல. ஆதலின் அவைகளையே நம்பியிராது பயிற்சி செய்தல் வேண்டும். இன்னும் ஊளைச்சதையோ, தொந்தியோ, விழுந்திருப்பவர்கள் உடற்பயிற்சி பெரிதுந் தேவையுடையவர்களென்பதை அவைகளே காட்டுகின்றன. ஏனெனில் ஊளைச்சதை தொந்தி சரிதல்* ஆகிய இவ்விரண்டும் உடலின் நலனையாவது வலிமையாவது குறிக்காது தசைகளும் வயிறும் நிலை மாறியிருத்தலாகிய அழகின்மையையே (Deformity) குறிக்கின்றன. இந் நிலைமாறல்களும் மாறு உடற்பயிற்சியால் நீங்கிவிடுமாதலின் இவைகளை யுடையோர் அழகும் வலிவும் நலனும் பெற இனியாவது முயலுவார்களாக.

இவ்வாறு உடற்பயிற்சியில்லாது நலிகின்றவர்க்கு மாறாகச் சிலர் தசைகளைப் பருக்கவும் வலிவடையவும் வைத்தலே கண்ணுங் கருத்துமாகத் தசைப்பயிற்சிப் பொறிகளை (Spring Dumb-bells, Developers, Weights etc.) இயக்குவதிலேயே காலங் கழிக்கின்றனர். இதனால் கடித்தனத்தைத் தவிர வேறுபயனின்று. இன்னும் உற்று நோக்கின் தசைகளைப் பருக்க வைப்பதால் அவைகளை ஊட்டி வளர்க்குந் செலவுமிகுதி; அவைகளுண்டாக்கும் நச்சுப்பொருளும் மிகுதியே யாதலின் இத்தீமைகள் தவிர வேறு நன்மை யொன்றுமிலது. இனி வலிவு மிக மிக, நீண்ட வாழ்வுண்டாகுமாவென்று பார்த்தால் அதுவுமில்லை.

---

* இதனையே அருணகிரிநாதர்

‘நோந்திரிய மயிரே வெளிற நிரை
தந்தமசைய முதுகேவளைய இதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர்—நகையாடி
தொண்டு கிழவனிவனாரென்று’ என்னுமவரென்று குறிக்கின்றனர்.

மகளிர் ஆடவரினும் குன்றிய வலிவுடையரேனும் வாழுந்திறன் (Vitality) மிகுதியுடையோராவர்; நீண்ட ஆண்டு வாழுகின்றனர்; குருதி இழப்பை (Loss of Blood) மிகப் பொறுக்கும் வன்மையுடையர்; குளிர், வெயில், பசி, நச்சுப்பொருள்கள் இவைகளைத்தாங்கும் தன்மை மிகுதியாக வுடையவராவர். ஆதலின் தசை வலிவிற்கும் வாழ்விற்கும் ஒரு பொருத்தமுமில்லை. இவையன்றி உலகில் தசைகளின் வலிவைவிடத் திறமையே (Skill) மிகப் பலன் தருகின்றது. பாரம் மிகுதியாகச் சுமந்து மாடுபோல் உழைப்பவர்களைவிட நுட்பமான வேலை செய்கிறவர்களுக்கன்றோ கூலி மிகுதி. ஆதலின் வலிமையைப் பெருக்குவதில் மிகுதியாகப் பாடுபடுவதைவிடத் திறமையைப் பெருக்கப் பழகுதலே நன்று. தசைகளை இயக்குவன நரம்புகளேயாதலின் தசைகளின் திறமையைப் பெருக்க நரம்புகள் திறமையடையும்படி பழகுதலே பெரிதாம். *

இதனால் தசைப்பயிற்சி வேண்டியதில்லை யென்று நினைத்து விடக்கூடாது. அளவிற்கு மிஞ்சிய பயிற்சியே வேண்டாததாம். உடலுழைப்பில்லாது உள்ள உழைப்பையே கைக்கொண்டு நலியுங் கற்றோருக்கும், உள்ள உழைப்பில்லாது உடல் உழைப்பையே மேற்கொண்டிருக்கும் மற்றோருக்கும் என்ன வேற்றுமை? இருவரும் ஒன்றை வளர்த்து மற்றொன்றை நலியவிடுகின்றனர். இரண்டையும் ஒக்கவளர்க்க முயல்பவரே அறிஞராவர். இன்னர் போதுமான உடற்பயிற்சியினாலும், விம்முதலினாலும் (Hardening the muscles) † தசைகளில் முறுக்கேற்றி வைத்துக்கொண்டிருத்தல் வேண்டும்.

---

* இவ்வாறு பழக்குபவரே தச்சர், கொல்லர், கொத்தர், சித்திரமெழுதுவோர், கடிகார வேலைக்காரர், தாள் கட்டடவேலைக்கார (Book-binder) நெசவுத்தொழிலாளர் முதலியோர்.

† தசைப்பயிற்சி செய்ய வியலாத பொழுது படுத்த, உட்கார்ந்த, அல்லது நின்றபடியே உள்ள முயற்சியால் தசைகளை விம்ம வைத்தல் உடற்கு நலந்தரும்.

சிலர் எழுதுகோலைப் பிடிக்கும் போது உலக்கையைப் பிடிக்கும் வலியுடனும், தளர்ச்சியுடன் உட்கார்ந்திருக்க வேண்டிய நிலையில் மல்லுக்கு நிற்கும் முறுக்கோடும், உடலைப்பல வழியில் வீணே வளைத்துக் கொண்டும், பயனில்லாது துன்புறுகின்றனர். இன்னோர் இவ்விலை வழிகளிற் களைப்புறுந் தசைகளைத் தளர்த்தி விடப் பழகுதல் வேண்டும்.

தசைப்பயிற்சி :—இவை மூன்று வகை. முதல்வகையாகிய பயிர்த்தொழில், தோட்டவேலை, தச்சு, கொத்து முதலிய வேலைகள் தசைப் பயிற்சியுடன் ஊதியந்தருவன. சிலம்பம், மல், குதிரை யேற்றம், பந்தாட்டம் முதலிய விளையாட்டுகள் தசைப்பயிற்சியுடன் உள்ளத்திற்கின்பம் (Recreation) தருவன. இவற்றையே கற்றோர் விரும்புவர். கைகால் வீசல் (Drill), விட்டப்பயிற்சி (Gymnastics), நிறைப்பயிற்சி (Dumb-bells) முதலியன ஊதியமாவது இன்பமாவது தருவனவல்ல. எனினும் வேறு வகையிற் பயிற்சியடையாத சிலதசைகளைப் பயிற்ற இதுவே தக்கவழி. நடப்பதாலும் மாடிப்படி யேறுவதாலும் கால் தசைகளுக்கும், கைவேலைகளால் கை, நெஞ்சுத் தசைகளுக்கும் பயிற்சி பலருக்கு உண்டெனும், யாவருக்கும் உள்ளுறுப்புக்களாய கல்லீரல், நினிப்பை, குடர்கள், குண்டிக்காய் (Kidneys), முதலியன அடையும் பயிற்சி குறைவே. இதற்காகவே கைகால் வீசல் முதலிய பயிற்சிகள் இன்றியமையாதன. இவ்வாறு பயிலும் பொழுது இடையிடையே மூச்சுப்பயிற்சி செய்து கொண்டுவரின் நுரையீரல்களும் முற்றும் பயிற்சியடைவதன்றி மூச்சு வாங்காது.

களைப்பு :—தசைகள் தமக்குக் குருதிகொண்டுவரும் உணவுப் பொருள்களையும் உயிர்க்காற்றையுங் கொண்டே நமக்கு வேலை செய்கின்றன. தசைகள் வேலைசெய்யும் பொழுது பயன்படும் உணவுப்பொருள் சர்க்கரையுங் கஞ்சிப்பொருளு (Starch)மே யாகும். இப்பொருள்கள் உயிர்க்காற்றின் உதவியால் நீராவிப் பொறியில் (Steam Engine) நிலக்கரி எரிவதுபோல் எரிந்து தசைகளை வேலை செய்யும்படி செய்கின்றன. இதனால் நீராவிப் பொறியிற் சூடுண்டாவது போல் வேலைசெய்யுந் தசையிலுஞ்

சூடுண்டாகிறது. இதனுற்றான் உடற்பயிற்சியாவது கடும்வேலை யாவது செய்யும்பொழுது நம் உடலில் மிகுதியாகச் சூடுண்டாகிறது. இன்னுங் கரி எரியும்போது சாம்பல் உண்டாவதுபோல், உணவுப்பொருள் எரிவதனுல் சில நச்சுப்பொருள்களுண்டாகின்றன. இப்பொருள்கள் தசைகளையியக்கும் நரம்புகளை மயக்கிவிடுவதாற் களைப்புண்டாகிறது. சிறிது நேரங் களைப்பாறினுல் இந்நச்சுப் பொருள்களைக் குருதி நீக்கிவிடும். களைப்பாறும்பொழுது தசைகளைத் தளர்த்திவிட்டுச் (Relax) செயலற்றுக் கிடப்பது போலிருந்தால் சடுதியில் இளைப்பாறிவிடலாம். மிகுதியாக வேலை செய்யின் இந்நஞ்சு மூளைக்கும் பாவித் தூக்கமுண்டு பண்ணுகிறது. நெடுநாள் வேலை செய்யாதிருப்பவர்கள் வேலை செய்யில் தசைகளில் வலியை யுண்டாக்குவன நச்சுப்பொருள்களே. இவை இரண்டொரு நாளிற் காரந்துவிடும். சடுதியில் நீக்கவேண்டுமாயின் வெந்நீரொத்து அல்லது வெந்நீர் முழுக்கு, உடம்பு பிடித்தல் முதலிய வழிகளால் நீக்கிவிடலாம். உடல் பிடித்தல் தகுதியான தசைப்பயிற்சியுமாகும். வேறு பயிற்சியில்லாதவர் இதையாவது செய்து கொள்ளலாம். இளைஞர் அளவிற்கு மிஞ்சிய வேலையினுல் களைத்து இளைத்துப்போவார்கள். இன்னுர் பின்னர் முழுவளர்ச்சியை யடைய முடியாதாதலின் அவர்களிடம் மிகுதியான வேலை வாங்குதல் பெருங்கொடுமையே.

மயக்கப் பொருளும் தசைகளும்:—கள், சாராயம் முதலிய குடிகள் தசைகளுக்கு வலிமை தருமென்று நினைப்பது தவறு. உண்மையில் குடியர்கள் வலிமையை இழந்துவிடுகிருர்கள். குடிக்காதவர்கள் வேலைசெய்யும் அளவும் நேரமும் குடிக்கிறவர்களாற் செய்யமுடியாததைக் கண்கூடாகக் காணலாம். இன்னுங் குடி, தசைகளை வேகவைக்கிறது என்பதை மருத்துவர் அறுக்கும் பொழுது (Operation) கண்டுபிடித்திருக்கிருர்கள். இஃதன்றி இக்குடி தசையை இறுக்கி வேலைசெய்யுஞ் செயலற்றதாகச் செய்கிறது. சாராயம் தசையை இறுகச்செய்யுமென்பதைப் பாம்பு, தேள் முதலிய சிற்றுயிர்களைப் பொருட்காட்சிசாலை (Museum) யில் சாராயக்குப்பியிலடைத்து வைத்திருப்

படையைக் கொண்டு தெளியலாம். புகையிலை, கஞ்சா, அபின் முதலியவைகளும் தசைகளை மெலியவும் வலிமை யிழக்கவுஞ் செய்கின்றன.

முதல் உதவி :—தசை பிறப்பட்டால் அவ்விடத்தை அசைக்காது வைத்திருந்து வெள்ளைத்துணித் துண்டால் மூடிக் குளிர் நீரால் நனைக்க வேண்டும். தசை புரண்டிருந்தாலும் அசைக்காதிருப்பதுடன் கட்டுக்கட்டி வைத்திருக்கவேண்டும்.

நான்காம் படலம்.

குருதி ஓட்ட உறுப்புக்கள்.

குருதியின் இருபெருஞ் செயல்கள் :—நமது உடலின் வெளியுறுப்புகள் அடிக்கடி வேலை செய்வதாலும், உள்ளுறுப்புகள் அல்லும் பகலும் வேலை செய்து கொண்டிருப்பதாலும் இவைகள் தேய்கின்றன. தேயும் ஒவ்வொரு இடத்தையும் வளர்க்கவும், கழிபொருள்களை நீக்கவும் ஓர் பொருள் வேண்டும். இப்பொருள் ஒவ்வொரு நுண்ணிய கூட்டிற்குஞ் செல்ல வேண்டியதாயிருப்பதால் நீர்ப்பொருளா (Liquid) கவே இருக்க வேண்டுமன்றோ? ஒரு ஊரை உண்பிப்பதற்கும் கழுவுவதற்கும் எவ்வாறு தண்ணீர் வேண்டியதாயிருக்கிறதோ அவ்வாறே நம்முடற்கும் குருதி வேண்டியதாயிருக்கிறது.

இரு ஏற்றங்களும் அவைகளின் அமைப்பும் :—ஓர் ஊரின் ஒவ்வொரு வீட்டிற்கும் அதன் அறைகளுக்கும் நீர் செல்ல வேண்டுமானால் எவ்வாறு ஒரு பெரும் ஏற்றம் (Pump) தேவையோ அவ்வாறே நம்முடலின் ஒவ்வொரு கூட்டிற்குங் குருதியை இறைக்க ஓர் ஏற்றந்தேவை. ஒவ்வொருவரும் பயன்படுத்திய அழுக்கு நீர் எங்ஙனம் நீர் நிலைகள், கடல்களிற் கலந்து பின்னர் அவ்விடமிருந்து நீராவியாக மாற்றப்பெற்றுத் தூய்மை யடைகிறதோ, அவ்வாறே நமது உடல் பயன்படுத்திய அழுக்குக்

குருதியைத் தூய்மைப்படுத்தும்படி நுரையீரலுக்கு அனுப்ப மற்றொரு ஏற்றமுந்தேவை. இவ்விரு ஏற்றங்களுஞ் சேர்ந்ததே நம் நெஞ்சினுள் லப்டப் என்று அடித்துக் கொண்டிருக்குங் குருதி ஏற்றம். இது ஒவ்வொருவரிடத்தும் அவரவர் மூடிய கையத்தனை பெரியதாயிருக்கிறது. இவ்வேற்றங்கள் உலகிலுள்ள ஏற்றங்கள் போல் அமைக்கப்படாமல் பைகள் போலமைந்து, தம் மியற்கையாகவே விரியும்போது குருதி இவற்றுட் பாய்வதும், தாமாகவே சுருங்கும்போது குருதி இறைப்பது உண்டாகின்றன.

குருதியேற்றத்தின் அமைப்பும், குழாய்களும் :— நீரை இறைக்க ஊற்று, கிணறு போன்ற நீர் நிலை வேண்டியது போல் இரு ஏற்றங்களும் இறைப்பதற்காகக் குருதியைச் சேமிக்கக் காதுகள் போன்ற இருகுருதி ஊற்றுப்பைகள் (Auricle) இருக்கின்றன. ஊற்றுகளின் மேல் ஏற்றம் போடப்பட்டிருப்பதை எங்கும் பார்த்திருப்பீர்கள். நம் வியப்புவாய்ந்த குருதியேற்றத்தில் இதற்கு நேர்மாறாக இரு ஊற்றுகளின் அடியிலும் இரு சால்கள் (Ventricle) அமைக்கப் பெற்றிருக்கின்றன. இச்சால்கள் சுருங்கிக் குருதியை இறைக்கும் பொழுது குருதிமேலுள்ள ஊற்றிற்குச் சென்றுவிடாதபடி சால்களுக்கும், ஊற்றுகளுக்குமிடையே ஒவ்வொரு முக்கூறுடைய ஒருவழிக்கதவுகள் (Triscupid Valves) இருக்கின்றன. இவையாவுஞ் (ஊற்றுகள், சால்கள், கதவுகள்) சேர்ந்ததே குருதியேற்றம். இதிலுள்ள இரு ஏற்றங்களும் இடம் வலமாக அமைந்திருக்கின்றன. இவ்வேற்றங்களிறைக்கும் குருதி, பாய் குழாய்கள் (Arteries) வழியே பாய்ந்து பின்னர் இக்குழாய்களிலிருந்து பிரியும் எண்ணிறந்த மயிர்க்குழாய் (Capillaries) வழியே செல்கிறது. இம்மயிர்க் குழாய்களில் 2000த்தை ஒன்றின் பக்கத்திலொன்றாக நெருக்கி வைத்தால் ஒரு அங்குலம் குறுக்களவுடையனவாகும். இதனால் இவற்றின் நுண்மை புலனும். பின்னர் இம்மயிர்க்குழாய்கள் ஒன்று சேர்ந்து வடிகுழாய் (Veins) ஆகின்றன.

குருதியின் ஒரு முழுச்சுற்று (Circulation of Blood):— குருதி உடலினுள் சுற்றிச் சுற்றிச் சென்றுகொண்டேயிருப்பதால்

அச்சுற்றிற்கு முதலுமில்லை, முடிவுமில்லை. எனினும் எளிதிலுணர்தற்காக இடது அறைப்பையில் துவங்கி, குருதி செல்லும் வழியெல்லாம் செல்வோம். இவ்வறைப்பை நிறைந்ததும் இது சுருங்குகிறது. உடனே இதிலுள்ள குருதி கீழுள்ள ஒருவழிக் கதவைத் திறந்துகொண்டு இடது சாலினுட் பாய்ந்து அதை நிரப்புகிறது. நிரம்பியதும் இது சுருங்குகிறது. சுருங்கும்போது குருதி மேலுள்ள அறைப்பைக்குச் செல்லாதபடி ஒரு வழிக்கதவு அடைத்துக் கொள்ளுகிறது. இதனால் குருதி வேறு வழியின்றிப் பெரிய பாய்குழாயுட் (Aorta) புகுகிறது.* இக்குழாய் பல கிளைகளாகப் பிரிந்து தலை, கை, கால், வயிறு, குடல் முதலிய பேருறுப்புகளுக்குப் பாய்கிறது. ஆங்கு, பலப்பலகிளைகளாகப் பிரிந்து அக்கிளைகளுக்குக் கிளைகளுண்டாய்க் கடைசியில் மிகச் சிறுபுழையுடைய மயிர்க்குழாயாகிறது. ஈண்டே குருதி பல கூடுகளுக்குப் பாய்வதால் அக்கூடுகள் வேண்டிய உணவுப்பொருள்களை யெடுத்துக்கொண்டு கழிபொருள்களைத் தள்ளி விடுகின்றன. இதனால் குருதி அழுக்கடைகிறது. முன் எறு குழாய்கள் பிரிந்து பிரிந்து எவ்வாறு மயிர்க்குழியாயினவோ அதற்கு மாறாக இப்பொழுது பல மயிர்க்குழாய்கள் ஒன்று சேர்ந்து சிறு வடிகுழாயாகவும் இவை பல சேர்ந்து பெரும் வடிகுழாயாகவும் ஆகின்றன. இவ்வாறு தலை, கைப்புறத்திருந்து வரும் வடிகுழாய்கள் ஒன்று சேர்ந்து மேற்பெருவடிகுழாய் (Superior Vena Cava) ஆகியும் மற்றைய கீழுறுப்புகளிலிருந்து வருங் குழாய்கள் ஒன்று சேர்ந்து கீழ்ப்பெருவடிகுழாய் (Inferior Vena Cava) ஆகியும் இவ்விரு பெருங்குழாய்களும் அழுக்குக் குருதியை வலது அறைப்பையுட் கொட்டுகின்றன. இது நிறைந்ததும் சுருங்கிக் கீழுள்ள ஒருவழிக்கதவைத் திறப்பித்து வலது சாலுட்குருதியைக் கொட்டுகிறது. இது நிறைந்து சுருங்கி மேற்கண்ட கதவை அடைக்கச்செய்து குருதியை நுரையீரற் பாய்குழாய் (Pulmonary Artery) வழியே நுரையீரலுக்குட் செலுத்துகிறது.† ஈண்டு

*† இவ்வாறு பாயும்போது அக்குழாய் முதலில் உள்ள ஒரு வழிக் கதவைத் திறந்துகொண்டு பாய்கிறது. இக்கதவு இன்றேல் மறுமுறை சால்விரியும்போது பாய்குழாயுட் சென்ற குருதி திரும்பிச் சாலுட்கொட்டி விடும்.

முன்போல் பல மயிர்குழாய்களாய்ப்பிரிந்து, தூய காற்றுடன் கலந்து தூய்மையடைந்து, முன்போலவே பிரிந்த மயிர்க்குழாய் ஒன்று சேர்ந்து நுரையீரல் வடிகுழாய் (Pulmonory Vein) வழியே இடது ஊற்றுப்பையை அடைகிறது. அடைந்ததும் முன்போல் மறுசுற்றுச் சுற்றுகிறது. இவ்வாறே எப்பொழுதுஞ் சுற்றிக்கொண்டேயிருக்கிறது. இச்சுற்று எளிதில் நடைபெறக் குழாய்கள் யாவும் மிக வழுவழுப்பாயிருந்து ஏற்றத்தின் வேலையை எவ்வளவு குறைக்கக் கூடுமோ அவ்வளவு குறைக்கின்றன. வலது ஏற்றம் நுரையீரலுக்கு மட்டும் இறைப்பதால் சிறிதாயும், இடது ஏற்றம் உடல் முழுவதும் இறைப்பதால் பருத்து வலிவுடையதாயுமிருக்கின்றன.

பாய் குழாய்க்கும் வடி குழாய்க்குமுள்ள வேற்றுமைகள் :—(1) பாய் குழாய் தூய குருதியே கொண்டு செல்லும். வடிகுழாய் அழுக்குக் குருதியே கொண்டு செல்லும். எனினும் நுரையீரற் பாய்குழாய் அழுக்குக் குருதியையும் நுரையீரல் வடிகுழாய் தூய குருதியையுங் கொண்டு செல்லும் மாறுபாடுடையன. (2) பாய் குழாயில் குருதி எப்பொழுதும் இருந்துகொண்டே யிருக்கிறது. இதனால் இடது சால் குருதியை இறைக்கும் பொழுது, பாய் குழாயில் முன்னிருந்த குருதி புதிதாய் இறைக்கப்பட்ட குருதிக்கு இடங்கொடுக்க இயலாது. இதற்காகப் பாய்குழாய்கள் அகன்று மீளுந்தன்மை (Elasticity) யுடையனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின் இடது சால் குருதியை இறைத்ததும் அதற்கண்மையிலுள்ள ஏறுகுழாய் புதுக்குருதிக்கு இடங்கொடுக்க விரிகிறது. பின்னர் இப்பங்கு சுருங்கிக் குருதியை அடுத்த பங்கிற்குத் தள்ளுகிறது. இவ்வாறு ஏறு குழாயின் ஒவ்வொரு சிறுபங்கும் அடுத்தடுத்து வரிசையாகத் தள்ளிக்கொண்டே செல்வதால் குருதியும் அதுபோல் குதித்துக்கொண்டே செல்கிறது. இவ்வாறு செல்வதை மணிக்கட்டுகளிலும், பொட்டுகளிலும், காதின் முன்னும் குரல்வளைப் பக்கங்களிலுமுள்ள பாய்குழாய்களின் மேற்கைவைத்துத் துடிப்பதாற் கண்டுகொள்ளலாம். இத்துடிப்பை மணிக்கட்டில் நாட்டு மருத்துவர் சோதனை செய்

வதைக் "கைபார்த்தல்" (Pulse) என்கிறோம். வடிகுழாய் இவ்வாறு அகன்று மீளுந்தன்மையுடைத்தன்று. அதில் இத்துடிப்புமில்லை. எனெனின் அழுக்குக் குருதி ஒரு படித்தாகவே குருதியேற்றத்திற்குப் பாய்ந்து கொண்டே இருக்கிறது. (3) குருதியேற்றம் இறைப்பதாலுண்டாம் உதைவு (Pressure) குருதி மயிர் குழாய்க்குச் செல்லு முன்னேயே அற்றுப் போவதால் குருதியை வடிகுழாய் வழியே செலுத்துவதற்கு வேறு அமுக்கல் இலது. ஆதலின் வடிகுழாயில் குருதிவலிவற்று மெதுவாகச் செல்லுகிறது. இவ்வடிகுழாய்கள் தசையினூடே செல்வதால் தசை வேலை செய்யும் பொழுது இக்குழாய்கள் அமுக்குண்டு, அமுக்குண்டவிடத்தின் முன்னும் பின்னும் குருதி தள்ளப்படும். குருதி, ஏற்றத்தை நோக்கி முன் தள்ளப்படுதல் நலமே. குருதி, பின் தள்ளப்படின் ஏற்றத்தை நோக்கிச் செல்லாதபடி தடுக்கப்படும். இதனால் ஏற்றத்தின் வேலை தவங்கும். தவங்காதிருக்குமாறு வடிகுழாய்களிற் பைபோன்ற ஒருவழிக் கதவுகளிருக்கின்றன. உங்கள் சட்டைப் பையைப் பாருங்கள். அதன்மேலிருந்து கையைவிட்டால் பை தானாகவே திறக்கும். கீழிருந்து தடவிக்கொண்டு மேற்சென்றால் அது தானாகவே மூடிக்கொள்ளும். இவ்வாறே இவ்வொருவழிப் பைகள் யாவும் குருதி ஏற்றத்தை நோக்கித் திறந்து கொண்டிருப்பதால் குருதி அவ்வழியே செல்வழி மூடிக்கொண்டும், எதிர்நோக்கிச் செல்கையில் தாமாகவே திறந்து குழாயை அடைப்பதால் குருதி கீழ்விழாதபடி தடுத்துக்கொண்டுமிருக்கின்றன. இத்தகையபைகள் பாய்குழாய்களிலில்லை. (4) பாய்குழாய்கள் உடலின் உட்புறத்தில் புதைந்திருக்கின்றன. வடிகுழாய்கள் மேற்பரப்பிலிருக்கின்றன.

குருதியேற்றத்தின் கடிவாளங்கள் :—ஏற்றம் நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை ஓயாது துடிநேரம் ஒன்றிற்கு ஆண்களுக்கு 70 முறையும், பெண்களுக்கு 80 முறையும், சிறு குழந்தைகளுக்கு 120 முறையும் துடிக்கிறது. நன்றாய் வளர்ந்த நடுத்தர மனிதனுடலில் சுமார் 16 சேர் குருதியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பிற்குக் குருதி உணவளிப்பதால் உறுப்பின் வேலை மிகுந்

தால் குருதியும் மிக வேண்டுமன்றோ? ஆனால் குருதியின் அளவு நிலையென்று மிகாது. அதற்கு பதிலாக அவ்வுறுப்பிலுள்ள எறுகுழாய் பெருத்து அங்கு குருதி மிகுதியாய்ச் செல்கிறது. நாம் படிக்கும் பொழுது மூளையும், நடக்கும்பொழுது கால்களும், சாப்பிட்டவுடன் தீனிப்பையுங் குடர்களும் மிகுதியாக வேலை செய்வதால் அவ்வவைகள் அவ்வப்பொழுது மிகுந்த குருதியை யடைகின்றன. இதனால் சாப்பிட்டதும் ஏன் படிக்கக்கூடா தென்பது நன்கு விளங்கும். எல்லா உறுப்புக்களும் ஒருங்கே உழைக்கும் போது எல்லா உறுப்புக்களுக்கும் ஒரே முறையில் மிகுந்த குருதியைக் கொடுப்பதற்காக எற்றம் விரைவாயும் வலி வுடனும் வேலை செய்கிறது. எல்லா உறுப்புகளும் வேலை செய் யாக் காலத்து எற்றத்தின் வேலையுங் குறைவே. தூங்கும் பொழுது இதன் வேலை மிகக்குறைவு. விழித்துக்கொண்டு படுத் திருக்கும்போது சிறிது மிகும். உட்கார்ந்திருக்கும் போது இன் னும் மிகும். நிற்கும் போது இதனினும் மிகும். நடக்கும் போது முன்னையினும் மிகும். ஓடும்போதுங் கடுந்தொழில் செய் யும் போதும் எல்லாவற்றினும் மிகும். இவ்வாறு எறக் தாழ வேலை செய்யும்படி கட்டளைகளையிடுவது உயிர் முடிச்சு (Medulle Oblongatta). இது தன் கட்டளைகளை இதனுடன் எற்றத்தை இணைக்கும் இரு எற்ற நரம்புக்கயிறுகளாற் (Vagus Nerves) செலுத்துகிறது. எவ்வுறுப்பு மிகுதியான வேலை செய்யினும் அஃது இவ்வுயிர் முடிச்சிற்குத் தெரிவிக்கும். இது இந்நரம்புக் கயிறுகளால் எற்றத்தை வேண்டியபடி இயக்குவதுடன் வேலை செய்யும் உறுப்புக்குச் செல்லும் எறு குழாயையும் நமக்குத் தெரியாமலே பெரிதாக்கிவிடும். என்ன விந்தை! இம்முடிச்சு எற்ற நரம்புக்கயிறுகளை நன்றாய்த் தளர்த்தி விட்டுவிட்டால் எற்றம் சிறிது நேரம் வேகமாய்த் துடித்துப் பின் களைத்து நின்று விடும். இதனால் நாம் சிறிது நேரம் செயலற்றுக்கிடக்கிறோம். திடீரென்று பயந்தாலும் அதிர்ச்சியடைந்தாலும், வலியடைந்தா லும் இஃதுண்டாகிறது. இவ்வாறன்றி உயிர் முடிச்சு எற்ற நரம்புக்கயிறுகளை சிறிது தளர்த்தினல் சிறிது வேகத்துடனும், பெரிது தளர்த்தினல் பெரிய வேகத்துடனும் தளர்த்திய அளவுக்

முத்தக்க விரைவாய் வேலை செய்வதால், ஏற்றம் ஓர் குதிரை போன்றும் அதன் இரு நரம்புக்கயிறுகளும் இரு கடிவாளங்கள் போன்றுமுள.

தசைப்பயிற்சியும், மூச்சுவிடலும் ஏற்றத்திற்குதவும் வழி :— தசைகள் வேலை செய்யும்போது அதிலுள்ள இரத்தக் குழாய் பிழியப்படுகிறதென்றும், குருதி பின்னிடையாவண்ணம் ஒருவழிப்பைகள் தடுக்கின்றனவென்றும், அதனால் வேலை செய்யும் ஒவ்வொரு தசையும் குருதியை யிறைக்கும் ஓர் ஏற்றமாகிறதென்றுங் கண்டோம். ஒருவனிழுக்கும் வண்டியை மற்றொருவனுஞ் சேர்ந்து இழுத்தால் வண்டி விரைவாய்ச் செல்வதுபோல் தசைகள் வேலை செய்யும் பொழுது ஏற்றம் இவ்வாறு உதவி பெற்று விரைவாய் வேலை செய்கிறது. மூச்சு இழுக்கும்பொழுது நெஞ்சு பெருப்பதால் குருதி அதற்கு மிகுதியாய்ச் செல்கிறது. விடும்பொழுது குறுகுவதால் குருதி அதிலிருந்து வெளிப்படுகிறது. இவ்வாறு மூச்சுவிடும்பொழுது நெஞ்சும் ஒரு ஏற்றமாகிறது. இன்னும் நெஞ்சு பெருக்கும் பொழுது அதன்கீழுள்ள ஈரல்தாங்கி கீழிறங்குவதால் அது நிணிப்பை, கல்லீரல், குடர்கள் இவைகளை அமுக்கி அழுக்குக் குருதியை ஏற்றத்திற்குப் பாயச் செய்கிறது. ஆனால் வயிற்றை இறுக்கிக் கச்சை ஒட்டியாணம் முதலியவைகளாற் கட்டிவிடுவோமாயின் வயிற்றுத் தசைச்சுவர் (Abdominal wall) வலுவற்றுப் போவதால் கீழிறங்கும் ஈரல்தாங்கி வயிற்றுச்சுவரை அமுக்குமேயன்றி மேற்கண்ட உள்ளுறுப்புக்களை அமுக்கி அழுக்குக் குருதியை இவைகளிலிருந்து பிழியாது. ஆதலின் இக்கொடிய பழக்கங்களை விடல் வேண்டும். மூச்சுப் பயிற்சியையுங் கையாள (Breathing Exercise) வேண்டும். உடற்பயிற்சிகள் செய்யும்போது ஒவ்வொன்று முடிந்ததும், ஏற்றத்தை நோக்கித் தோலைத் தேய்த்தல் அழுக்குக் குருதி ஓட்டத்திற்குதவியாகும்.

குருதிச்சுற்று மிகுவதாலாகும் பயன்கள் :— தசைப்பயிற்சியினாலும், மூச்சுப்பயிற்சியினாலும் குருதிச்சுற்று மிகுமென்று கண்டோம். அதனாலாகும் அரும்பயன்களாவன :—

(1) நமது தோலின் கூடுகள் புதுப்பிக்கப்படுகின்றன. குருதியாலும் வேர்வையாலுங் கழுவப்படுதலின் அது (தோல்) சிகப்பாகவும் வழுவழுப்பாகவும் மாறுகிறது.

(2) உடலிற் கொழுப்பு மிகுந்திருந்தால் அது எரிக்கப்படுகிறது. குறைந்திருந்தால் குருதிகொண்டுவரும் உணவுப்பொருள்களிலிருந்து சேர்த்து வைக்கப்படுகிறது. இவ்வாறு கொழுப்பை அளவு படுத்துகிறது.

(3) தசைகள் நன்றாய் ஊட்டப்பெற்றுப் பெரியனவாகவும், வலிவுடையனவாகவும் உறுதியுடையனவாகவும் ஆக்கப்படுகின்றன.

(4) எலும்புக்கூடு வலிவுண்டாக்கப்பெற்ற தசைகளால் நிமிர்ந்த நிலையிலிருக்கிறது. கூன் முதலிய நிலைமாறுதல் நீங்குகிறது. எலும்புகளுக்குள்ளும் குருதி மிகுதியாய்ப் பாய்வதால் அவை உறுதியடைகின்றன.

(5) தூய, புதிய குருதி மிக்க உயிர்க்காற்றுடன் மூளையில் பாவுவதால் ஆங்குள்ள ஒவ்வொரு மயிர்குழாயும் கூடுகளுங் கழுவப்பெற்று உள்ளம் குளிருகிறது. அதன் ஆற்றல் இரண்டு மூன்று மடங்கு மிகுகிறது.

(6) நுரையீரல் விரிந்து மார்பு பெருகுகிறது.

(7) குருதி யேற்றம் வலுவடைகிறது.

(8) உணவு நன்றாய் எரிக்கப்பட்டுப் பசியுண்டாகிறது.

(9) ஊன் நீரோட்டம் (Lymphatic Circulation) மிகுகிறது.

(10) இத்தகைய பல நன்மைகளால் உள்ளத்துவகை உண்டாகிறது. பயனில சொல்லுதல், சோம்பல், சுருட்டுப் பிடித்தல், பொடி, புகையிலை போடல் முதலிய தீய பழக்கங்களைக் குறைக்கிறது.

ஆதலின் குருதியோட்டத்தை மிகச்செய்வது உடலையும் உள்ளத்தையும் தூண்டி விடுதலை யொக்கும். எனவே தக்க பயிற்சி செய்பவரே தக்க வாழ்வு வாழ்பவராவர். செய்யாதவர் கடைப் பிணத்திற்கொப்பாவர்.

ஏற்றத்திற்கு உறுதிபயக்கும் வழி:— உழைக்காத தசை வலுக்காது. குருதி யேற்றமும் ஓர் தசையே யாதலின் அதை வலுக்கச் செய்ய அதற்கு எப்பொழுதுஞ் செய்யும் உழைப்புக்கு மேல் உழைப்புக் கொடுக்க வேண்டும். ஆனால் நாம் எண்ணிய அளவில் ஏற்றம் மிகுந்து துடிக்காது. அதை உழைக்க வைக்கும் வழி மேற்காட்டியபடி தசைப்பயிற்சியும் மூச்சுப்பயிற்சியுமே யாகும். நெடுநாளாக உடற்பயிற்சி செய்யாதவர் திடீரென்று பயின்றால் ஏற்றத்துடிப்பு தாறுமாறாகலாம். இஃதுண்டாகாத படி சிறிது சிறிதாகப் பயில வேண்டும். பயிற்சி அளவிற்கு மிஞ்சியதன்றெனத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் பயிற்சி முடிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஏற்றத்துடிப்பு எப்பொழுதும் போலாகவேண்டும்.

குருதியிலுள்ள முப்பொருள்களும் அவற்றின் வேலைகளும்:— குருதிச்சொட்டு ஒன்றைப் பெருக்கிக் காட்டுங் கண்ணாடியில் வைத்துப் பார்ப்போமாயின், அதனுள் முப்பொருள்களைக் காணலாம். அவையே (க) நிறமற்ற நீர்ப்பொருளாய (Liquid) ஊனீர் (Plasma or Lymph) (உ) செங்கூடுகள் (Red Corpuscles) (ங) வெண்கூடுகள் (White Corpuscles) ஆகும். இவற்றுள் (1) ஊனீரே குருதியை நீர்ப்பொருளாக வைத்திருப்பது. இதுவே தன்னிடையும் சமிக்கப்பெற்ற உணவுச் சாற்றையும் தாங்கிச் சென்று எல்லாக் கூடுகளையும் ஊட்டுகிறது. இதுவே கழி பொருள்களைக் கவர்ந்து செல்வது. (உ) செங்கூடுகள் இவ் வூனீரிலே மிதப்பதால் குருதிக்குச் சிவப்பு நிறத்தைக் கொடுக்கின்றன. குன்றிசித்தலை பருமனுள்ள குருதியில் இரண்டாவ கோடாயிரக் (Millions) கணக்கான கூடுகளிருக்கின்றன. இதன் தொகை உடல் நலத்தைப் பொறுத்திருக்கிறது. இது குறைந்துள்ளவர் வெளுத்துப்போய், எளிதில் மூச்சுவாங்குவதுடன்

தலைவலியால் வருந்துகின்றனர். இத்தகையோர் சில நாட்கள் இரும்புச்சத்தை யுண்டால் நலமடைகின்றனர். இவ்விரும்புச் சத்தே இக்கூடுகளைச் சிவப்பாகவும், புல் இலைகளைப் பச்சையாகவும் ஆக்குகிறது. ஒரு செங்கூட்டைத் தனித்தெடுத்துப் பார்ப்போமாயின் மஞ்சளாயிருக்கும். ஆனால் பல சேர்ந்தே சிவப்பு நிறமடைகிறது. இவை உட்குழிந்து வட்டமாயிருக்கின்றன. இவை எலும்புமூளையின் கூடுகளிலிருந்து உண்டாகின்றன வென்று கண்டோம். இவற்றின் இன்றியமையாத வேலை உயிர்க்காற்றை நுரையீரலிலிருந்து ஒவ்வொரு தசைநாருக்கும் அதன் கூடுகளுக்கும் கொண்டு போய்க் கொடுப்பதேயாகும். நாம் ஓயாது மூச்சு விடுவதின் முடிவான பயனை நம்முடலின் உட்புறத்தில் காற்றுப் படாது, வெளிச்சம்படாது ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் கூடுகள் மூச்சுவிடும் பொழுது தான் நாம் அடைகிறோம். ஆதலின் இச்செங்கூடுகள் எவ்வளவு இன்றியமையாதன பாருங்கள்! இவை தாமாகவே ஓடுகிறதில்லை. குருதி ஓட்டத்தால் ஓடுகின்றன. இவை மயிர்க்குழாயைவிட்டு வெளியிற் செல்லா. எனினும் மயிர்க்குழாய்களின் புரைவழியே இவை வெளியிலுள்ள கூடுகளுக்கு உயிர்க்காற்றை அனுப்புகின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும் பிறந்தது முதல் ஆறுவாரம் வரை ஓயாதுழைத்துப்பின் இறக்கின்றன. (3) வெண்கூடுகள் நொடிக்கு நொடி மாறிக் கொண்டேயிருக்குந் தாறுமாறான உருவுடையன. இவை மிகச் சிறிதே வெண்மையாயும் மிகுதியாய் நிறமற்றதாயுமுள்ளன. குண்டூசித்தலையளவு குருதியில் 4000 வெண்கூடுகளிருக்கின்றன. இவற்றை உண்டாக்குவன மண்ணீரலும் (Spleen) கழுத்து அக்குள் (Armpit) இவற்றிலுள்ள ஊனீர்ப்பைகளுமாம். இவ்வுறுப்புகள் வெண்கூடுகளை நாம் சாப்பிட்டதும் மிகுதியாக உண்டு பண்ணுகின்றன ; உணவிலுள்ளவும் நம்முடற்கு இறுதியைத் தரத்தக்கவுமாய நச்சுக்கூடுகளுடன் சண்டையிட்டு அவைகளைக் கொல்லவேண்டியதாயிருத்தலின். இன்னும் மூச்சுவிடுவதாலும், சிரங்கு காயம் முதலியவற்றாலும் குருதியுட் புகும் நச்சுக்கூடுகளை இவை எங்கே எங்கே யென்று தேடித்திரிந்து கொல்கின்றன. இவை குருதியில் மட்டுமல்ல: குருதிக் குழாய்களுக்கு வெளியிலு

முள்ள நச்சுக்கூடுகளையுங் கொல்ல இருக்குமிடந்தேடி குருதிக் குழாய்களினூடே இயற்கையாக வழியில்லாவிடத்தும் வழி பண்ணிக்கொண்டு செல்லுமியல்புடையன. நம் சிரங்கு, காயங் களில் சீழ் கோக்கிறதே. அது எதனால் தெரியுமா? எண்ணிறந்த வெண்கூடுகள் இச்சிரங்கு காயங்களின் வழியே உட்புகும் நச்சுக் கூடுகளைக்கொன்று தாமும் மாண்டதனாற்றான். தாய் நாட்டிற்குச் செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் வீரர்களைப் போல் நம்முடற் காகத் தம்முயிரையும் பொருட்படுத்தாது சண்டையிடும் இக்கூடுக ளின்றேல் நம்முடல் எத்தனை நாள் வாழ்ந்து விடும்! நம்முடல் கொசுக்காய்ச்சல் (Malaria) முதலிய நச்சுநோயால் வருந்தும் பொழுது எத்துணை பெரியபோர் உடல் முழுவதும் நடக்கிறது தெரியுமா? சர்மானிய போரும் (German War) அதற்கீடா காது. இப்போரில் வெண்கூடுகள் வெற்றி பெற்றால் நாம் வழி விழுந்தேனும் வாழ்வோம். இன்றேல் நம்முயிர்க்கிறுதியே! இது மட்டுமா? நம்முடலில் எங்கேனும் ஒரு ஊறு நேரின் குருதி கசிந்து கசிந்து ஒழுகிவிடலாமன்றோ? இவ்வாறு நடவாதபடி அவ்வூறு நடந்த செய்தி வெகுவிரைவில் உடல் முழுவதும் பரவு கிறது. உடனே இவ்வெண்கூடுகள் மிகுதியாக உண்டாக்கப் படுகின்றன. இவை வெளிப்பட்ட குருதியை உறையவைத்து (Coagulate) குருதிக்குழாயிலுண்டான ஓட்டையை அடைத்து விடுகின்றன. இவ்வாறு குருதி தன்னிடத்துள்ள முப்பொருள் ளால் உடலின் கூடுகளுக்குக்காற்று, நீர், உணவு அளிப்பதற்கும், கழிபொருள்களைக் கவர்ந்து செல்வதற்கும், நச்சுப்பொருள்கள் பெருகாதபடி அழிப்பதற்கும், அறுபட்ட ஓட்டைகளை அடைப் பதற்கும் உதவுதால் இதைப்போன்ற பயனளிக்கும் வேறு எந்த நீர்ப்பொருளையும் உலகிற் காணவே முடியாது.

ஊனீர்ச்சுற்று (Lymphatic Circulation):—குருதி பாய் குழாய், வடி குழாய், மயிர்க்குழாய்களில் மட்டும் சென்று கொண்டிருந்தால் இக்குழாய்களுக்கு வெளியே இக்குழாய்களைத் தொடாமலே யிருக்கும் எண்ணிறந்த கூடுகளுக்கு உணவு செல்ல முடியுமா? முடியாதல்லவா? ஆதலின் குருதிச்சுற்றால் பய

னற்றுப் போமாதலின் குருதி பயன்படுமாறு அதிலொருபங்கு மயிர்க்குழாய்களினின்றும் ஒழுகுகிறது. இவ்வாறொழுகுவது ஊனீரே. குருதியல்ல. இவ்வூனீர் தசைக்கூடுகளைச் சுற்றிப்பரவுகிறது. இதிலிருந்து கூடுகள் வேண்டியவற்றை எடுத்துக்கொள்ளுகின்றன. எடுத்துக்கொண்டது போக மீதி மயிர்க்குழாய்களுக்குள் திரும்பிவரமுடியாது. ஏனெனில் இக்குழாய்களுள் ஏற்றத்தின் அழுக்கல் மிகுந்திருக்கிறது. இவ்வாறு ஊனீர் ஒழுக்கால் குருதியிலுள்ள நீர்ப்பொருள் குறைந்து கெட்டியாகுமன்றோ? அன்றியும் தசை நார்கள் ஒழுகிய எல்லா ஊனீரையும் பயன்படுத்துகிறதில்லை யாதலின் எஞ்சிய ஊனீர் தங்குவதால் அவை வீங்கிவிடும். தங்கிய பங்கும் பயனற்றுப்போம். இத்தீமைகள் உண்டாகாதபடி உடல் முழுதும் ஊனீர்க்குழாய்கள் (Lymphatics) இருக்கின்றன. இவையும் மயிர்க்குழாய்கள் போன்ற பல சிறு குழாய்களும், இவை பல சேர்வதாலாகும் பெருங் குழாய்களுமாயிருக்கின்றன. கூடுகள் பயன்படுத்திய பங்கு நிற்க எஞ்சிய ஊனீர் உடலின் எல்லாப் பங்குகளிலிருந்தும் சென்று சேர்ந்து சேர்ந்து கடைசியில் இரு பெருங் குழாய்களுஞ் சேர்ந்து பின்னர் கழுத்துப் பட்டை எலும்புகளினடியிலுள்ள இரு வடி குழாய்களிலுள்ள அழுக்குக் குருதியுடன் கலக்கின்றன. இவ்வாறு கலக்கும் பொழுதுள்ள ஊனீர் கழிபொருள்களையும், பயன் படுத்தப்படாத உணவுப் பொருள்களையு முடையது. இவற்றுள் கழிப்பொருள்கள் நீக்கப்பெறும். உணவுப் பொருள்கள் குருதியுடன் சென்று மறுபடியும் பயன் படுத்தப்படும். இவ்வாறு எப்பொருளும் வீணாகப் படாது நம்முடலில் வெகு செட்டாய்ச் செலவழிக்கப்படுவது என்ன நன்மை பாருங்கள்! வடிகுழாயில் அழுக்குக் குருதி செல்வதற்கு உடற்பயிற்சி எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறே ஊனீரோட்டத்திற்கும் உடற்பயிற்சியே இன்றியமையாதது. இஃதில்லாது இவ்வோட்டம் ஒழுங்காய் நடவாததினால் றுன் யானைக்காலுண்டாகிறது. ஊனீரிலுள்ள கழிபொருள்களை நீக்குவன ஊனீர்க் குழாய்களினிடையே யுள்ள ஊனீர்ப்பைகளே (Lymphatic Glands) இவை இடுப்பிலும் அக்குளிலும் மிகுந்திருக்கின்றன. இவைகளிலுள்ள ஊனீர்க்கூடுகள் (Lymph cells)

தாம் பெருகி வெண்கூடாகின்றன. இப்பைகளுட் பெரிது ஈரல் தாங்கியின் கீழ். நிணிப்பைக்கு இடதுபக்கத்துள்ள நீலச் சிவப்பான மண்ணீரல். ஈண்டுங் கழிபொருள்கள் மிகுதியாய் எரிக்கப் படுகின்றன.

குருதியைத் தூய்மையாக்கும் மூன்றுறுப்புகள்:—இவையே (1) நுரையீரல், (2) கல்லீரல். (3) குண்டிக்காய் (Kidneys) ஆகும். இவற்றுள் நுரையீரல் கரிக்காற்றை (Carbondioxide) நீக்குகிறது; கல்லீரல் நச்சுப்பொருள்களை எரித்துப் பித்தநீர் (Bile) ஆக்குகிறது; குண்டிக்காய் மூத்திர உப்பு (Urea), நீர் இவற்றை நீக்குகிறது. இவற்றின் விரிவை முறையே மூச்சுறுப்புகள், சமிக்கும் உறுப்புகள், கழிவாய்களென்னுந் தலைப்பின் கீழ்க் கண்டு கொள்க.

மயக்கப் பொருள்களின் மாண்பு:—புகையிலையால் இருதயம் முதலில் கடுமையாய்த் துடிக்க, பின்னர்ச் சிறிது நின்று, பின் சிறிது கடுமையாய்த் துடிக்கும். இதற்குப் புகையிலைத் துடிப்பு (Tobacos Heart) என்று பெயர். இதனால் இருதயம் வலியிழக்கிறதென்பதை அறியலாம். சாராயச்சத்து (Alcohol) தோலையும் தசைகளையும் வெந்து சிவக்கச்செய்கிறது. இதனால் இருதயம் மிகுதியாய்த் துடிக்கிறது. இன்னும் இது இருதயத்தைக் கொழுக்கவைத்து, சோம்பலுண்டாகி வலுவிழக்கச் செய்கிறது. இது மட்டுமோ? இது செங்கூடுகள் சுமந்து செல்லும் உயிர்க் காற்றை அதினின்றும் பிரியாதபடி செய்கிறதால் குடியர்களின் தசைக்கூடுகள் தக்க அளவு உயிர்க்காற்றைப் பெறாது திணறு கின்றன. வெண்கூடுகளும் குடியர்களின் நலத்திற்காகச் சண்டை யிடுவதேயில்லை. தந்நலமுங்கருதாத குடிகாரர்களுக்காக அவை தம்முயிரைக் கொடுக்க விரும்புவதில்லையோ, அன்றி அவையும் மயங்கி விடுகின்றனவோ தெரியவில்லை. எவ்வாறாயினுங் குடி காரர்களின் குருதி நலமும் உயிர்க்குறுதியுங் கெடுவதிற் குறை வில்லை.

குருதி இழத்தலுக்கு முதலுதவி:—பாய்குழாய் அல்லது வடிகுழாய் அல்லது மயிர்க்குழாய் அறுவதால் குருதியை இழக்க

நேரும். பாய்குழாயறுந்திருந்தால் ஒழுகும் குருதி நல்ல சிவப்பாயிருக்கும்; நீரொழுக்குப் போன்று விடாது பாயும். மயிர்க்குழாய் அறுந்திருந்தால் குருதி கசியும். நல்ல சிவப்பாகவேனும் கருஞ் சிவப்பாகவேனு மிருக்கும். குருதியை இழத்தலினால் வலிவின்மை, குருதியின்மையும் (Bloodlessness), மயக்கமும், இன்னும் மரணமும் உண்டாகலாம். ஆதலின் முதலுதவி சடுதியிற் செய்யவேண்டும். குருதி கட்டியாகும் (Conjealing) தன்மை யுடையதால் ஒழுகிய குருதி கட்டியாகி ஒழுக்கைத்தானே நிறுத்திக்கொள்ளும். இக்கட்டியைப் பெயர்க்கலாகாது. ஒழுகுமிடத்தை நன்றாய் அமுக்கி குருதி ஒழுக்கை நிறுத்தி விடலாமாகையின் தூய விரலால் அல்லது துணியால் வீண்பொழுது போக்காது குருதி ஒழுகுமிடத்தை நன்றாய் அமுக்க வேண்டும். இன்னும் அறுபட்டது பாய் குழாயாயின் அறுபட்ட விடத்திற்குச் சிறிது மேல் அல்லது கீழாக எற்றத்தின் பக்கமாக அமுக்க வேண்டும். ஏனெனில் குருதி எற்றத்திலிருந்தே பாய்குழாய்க்கு வருகிறது. அறுபட்டது வடிகுழாயாயின் முற்கூறியதற்கு எதிர்ப்பக்கமாக அமுக்கல் வேண்டும். காயம்பட்ட பங்கை உயர்த்துவதால் குருதி அப்பங்கில் குறைந்து பாயும். குருதியிழப்புங் குன்றும். இறுக்கிக் கட்டியிருக்குந் துணியைத் தளர்த்தி விட்டால் குருதி எல்லாப் பங்கிற்கும் விரவிப் பாவுமாகையால் குருதியிழப்புக் குறையும். காயம்பட்ட பங்கை அசைக்காதிருத்தல் நன்று. மிகக் குளிர்ந்த நீர் அல்லது பனிக்கட்டி நீரை காயத்தின்மேல் துணியால் பிழிதல் குருதிக் குழாயைச் சுருக்கிக் குருதி இழப்பைக் குறைக்கும். காப்பி, தேநீர் முதலிய குடிகள் எற்றத்தை விரைவாய் வேலை செய்யச் செய்யுமாதலின் இவைகளைக் கொடுக்கக் கூடாது. கையால் அமுக்குவதில் ஒழுக்கு நிற்காவிடில் ஒரு கைக்குட்டையை எடுத்து, நடுவில் முடியிட்டு, முடிச்சை, அமுக்கவேண்டிய குருதிக் குழாயின்மேல் வைத்து ஒரு சிறுகுச்சி அல்லது எழுதுகோலைச் செருகி முறுக்கினால், கட்டு இறுகும். இறுகவே குழாயின் மேலுள்ள முடி குழாயை அமுக்குவதால் ஒழுக்கு நின்றுவிடும். இது நின்றதும் முறுக்குதலை நிறுத்திவிட்டு அக்குச்சியை அப்படியே வைத்திருக்க மற்

இறுகக் கட்டிக்கட்ட வேண்டும். அரை மணி நேரத்தின்பின் இரண்டாங்கட்டை யவிழ்த்து முறுக்கைச் சிறிது தளர்த்திப் பார்க்க வேண்டும். குருதி ஒழுக்கு நின்றிருந்தால் கட்டை தளர்த்தியபடியே வைத்திருக்கலாம். ஆனால் எடுத்துவிடக் கூடாது. நிற்காவிட்டால் முன்போல் இறுக்கிவிட வேண்டும். முற்சொல்லியபடி கட்டை முறுக்கியும் நிற்காவிட்டால் எந்தப் பெருங்குழாயிலிருந்து குருதி ஒழுகுகிறதோ அதை அமுக்க வேண்டும். இதற்குத் தக்க பழக்கம் வேண்டும். குருதி ஒழுக்கு மிகினும் குருதிக்குப் பதிலாக உப்புநீரைக் குருதிக்குழாய் வழியே புகட்டின் (Injection) உடலிற் குருதியோட்டம் நின்று விடாது. உயிர் துறக்காது நாளாவட்டத்தில் நலனுறலாம். இவ்வாறே பேதி (Cholera) மிகினும் உப்புநீரைக் குருதிக்குழாயுட்புகட்டி உயிரைக் காப்பாற்றலாம்.

ஐந்தாம் படலம்.

மூச்சு உறுப்புகள்.

மூச்சுறுப்புகள் யாவை?:—அழுக்குக் குருதி நுரையீரலில் தூய காற்றுடன் கலந்து தூய்மையடைகிறதென்று முன்பு கண்டோமல்லவா? இத்தூய காற்று நுரையீரலை எவ்வழிச் சென்றடைகிறதென்பதை ஆராய்வோம். மூச்சுக்காற்று முதலில் மூக்கின் வழியே ஏறுகிறதென்பது உங்களுக்குத் தெரியும். பின்னர் சிறு குழாய்களின் வழியே கீழிறங்கி தொண்டைக்கு (Pharynx) வருகிறது. இதன் கீழ் முன் பின்னாக இரு குழாய்களிருக்கின்றன. முன்னையது மூச்சுக்குழாய் (Trachea); பின்னையது உணவுக்குழாய் (Gullet). மூச்சுக்குழாயின் உச்சியில் ஒலிப்பெட்டி (Larynx) இருக்கிறது. இதுதான் நீங்கள் அண்ணாந்து நீர் குடிக்கும்போது ஏறியிறங்குவது. இதனுள் குறுக்காக இரு ஒலிக்கயிறுகள் (Vocal chords) இருக்கின்றன. இவற்றினிடையே உள்ள வழிக்குக் குரல்வளை (Glottis) என்று பெயர். நீங்கள் உண்ணும் பொழுது உணவுப் பொருள்கள்

இவ்வளைக்குள் விழுந்து விடாதபடி மூடிக் கொள்வதற்காக குரல்வளைமூடி (Epiglottis) இருக்கிறது. ஆனால் மூச்சு இழுக்கும் பொழுது இம்மூடி நிமிர்வதால் வளை திறந்து கொள்கிறது. உடனே மூச்சுக்காற்று உள்ளே மூச்சுக்குழாய்வழியே செல்கிறது. இக்குழாய் 4 அங்குல நீளமுடையது. இது நெஞ்செலும்பின் உச்சிக்கு நேராக இரண்டாய்ப் பிரிகிறது. இவ்விரு குழாய்களுள் ஒன்று முப்பங்குகளாலாய (Three-lobed) வலது நுரையீரலுக்கும் மற்றொன்று இரு பங்குகளாலாய இடது நுரையீரலுக்குஞ் செல்கிறது. அங்கு இவை பல சிறு குழாய்களாகப் பிரிகின்றன. இவைகளுக்கு மூச்சுக்கிளைக் குழாய்கள் (Bronchial tubes) என்று பெயர். இவைகளில் ஒவ்வொன்றும் மரங்களைப் போல் கிளைகிளைகளாகப் பிரிவதால் நுரையீரல் முழுவதும் இக்கிளைக் குழாய்கள் பரவி யிருக்கின்றன. ஒவ்வொரு குழாய் முடிவிலும் எண்ணிறந்த காற்றறைகள் (Air cells) நெருங்கியிருக்கின்றன. இவ்வறைகள் அமைந்திருப்பதைப் பார்த்தால் எண்ணிறந்த திராட்சைக் கொத்துகள் போன்றிருக்கும். இக்காற்றறைகளின் சுவர்களினிடையே எண்ணிறந்த மயிர்க் குழாய்கள் வலை விரித்தது போற்பரவியிருக்கின்றன. இக்குழாய்களின் வழியே அழுக்குக் குருதிவந்து காற்றறைகளுக்குள் வந்திருக்குந் தூய காற்றுடன் கலந்து தூய்மையடைந்து பின்னர் குருதியேற்றத்திற்குச் செல்கிறது. காற்றும் குருதியால் அழுக்கடைந்து மூச்சுவிடும் பொழுது வெளியே செல்கிறது.

மூச்சு இழுத்து விடும் வகை:—நீங்கள் மூச்சை இழுக்கும் பொழுது நெஞ்சுக்கூடு பெருக்கிறதை அறிவீர்கள். ஏன் பெருக்கிறதென்றால் காற்று உள்ளே செல்கிறது; அதனால் பெருக்கிறதென்பீர்கள். இது முழுத்தவறு. ஏனெனில் காற்று தானாகவே நெஞ்சுக்கூட்டினுட் சென்று பெருக்கவைக்கும் இயல்புடையதன்று. இவ்வியல்பு காற்றிற்கிருந்தால் இறந்தவனும் மூச்சுவிடலாமன்றோ? ஆதலின் நெஞ்சுக்கூடு பெருப்பதாற்றான் மூச்சை இழுக்கிறீர்களென்பதை உணருங்கள். இவ்வாறு பெருக்கவைக்குந்தன்மை உயிருடைப் பொருள்களுக்கே உள.

இத்தன்மை நம்மில் சால்தாங்கி, வயிற்றுச்சுவர், பழுக்களுக் கிடையேயுள்ள தசைகள் ஆகிய இத்தசைகளை இயக்குகிறது. மேது நுரையீரலை ஒரு துருத்திக் கொப்பிடுவோமாயின் நம்முயிர்த் தன்மையைத் துருத்தியை இயக்கும் ஓர் மனிதனுக்கு ஒப்பிடலாம். இத்தன்மையால் தளிப்புக்க கிண்ணம் போன்ற சால்தாங்கி சுருங்கி, தட்டையாய்க் கீழிறங்குகிறது. இதனால் இதனுடன் இணைக்கப் பெற்ற நுரையீரலின் அடிப்புறம் கீழிழுக்கப்படுகிறது. இதே பொழுதில் பழுக்களினிடையிலுள்ள வெளிப்புறத் தசைகள் சுருங்குவதால் பழுக்கள் மேற்புறமாகவும் முன்புறமாகவும் விரி கின்றன. இப்பழுக்களுடன் நுரையீரல் இணைக்கப் பெற்றிருப்ப தால் இவ்விரிவினால் நுரையீரலின் மேற்புறம் மேலும் முன்புறம் முன்னும் இழுக்கப்படுகின்றன. ஆதலின் நுரையீரல் நாலாப் பக்கமும் விரிகிறது. இவ்விரிவை துருத்தியின் வாயை விரிப் பதற் கொப்பிடலாம். உடனே காற்று தானது பலனால் விரிக்கப் பட்ட துருத்திக்குள் புகுவது போல், இடங்கொடுக்கும் நுரை யீரலுக்குள்ளும் (காற்று) புகுகிறது. இதனால் மூச்சு இழுத்தல் (Inspiration) உண்டாகிறது. இவ்வாறு இழுக்கும் பொழுது சால்தாங்கி கீழ்ச்சென்றதல்லவா? அது கல்லீரல், தீனிப்பை, குடர் இவைகளை அமுக்குகிறது. இவையின்றுங் கீழுஞ் செல்வ தற்கு வழியின்றி முன்னுள்ள வயிற்றுச் சுவரைத் தள்ளுகின்றன. இவை யாவுந் தசைகளின் முயற்சியால் நடைபெறுகின்றன.

நுரையீரல் விரியும் பொழுது அதன் எண்ணிறந்த மீளுந் தன்மையை (Elasticity) உடைய தசை நார்களாலாக்கப்பட் டிருத்தலின் விரைவில் சுருங்கிப் பழைய பருமனையடைகின்றன. பழுக்களும் அவைகளினிடையே உள்ள மீளுந்தன்மையுடைய எலும்புக் குருத்துகளால் கீழும் உள்ளும் இழுக்கப்படுகின்றன. மீளுந்தன்மையுடைய வயிற்றுச்சுவர் உள்ளுறுப்புகளை அமுக்குவ தால் அவை சால்தாங்கியைமுட்டி மேற்றள்ளுகின்றன. இவ் வாறு பல வழியாலும் நுரையீரல் சுருக்கப்படுவதால் மூச்சு விடு கிறோம். இவ்வாறு மீளுந்தன்மையுடைய தசைகளாலும் எலும் புக்குருத்துகளாலும் நுரையீரல் முன்னிருந்த நிலையை யடைவ-

தால் மூச்சுவிடுதல் (Expiration) தசைகளின் முயற்சியின்றித் தாலுகவே நடக்கிறது. நாம் வலியுடன் மூச்சுவிடுகிறதுமுண்டு. இருமல், தும்மல், பாடல், பேசல், வேலைசெய்து களைத்து மூச்சு வாங்குதல் முதலிய செயல்களைச் செய்யும்போது, வயிற்றுச் சுவர் வழக்கத்திற்கு மிகுதியாய் உட்சென்று உள்ளுறுப்புகளை அமுக்குவதால் அவை ஈரல் தாங்கியை மிகுதியாய் முட்டி மேற் றள்ளுகின்றன. பழுக்களின் இடையிலுள்ள உட்புறத் தசைகள் மிகுதியாய்ச் சுருங்குவதால் நெஞ்சுக்கூடு விழும், உள்ளும் மிகுதி யாய் அமுங்குகிறது. இதனுல் நுரையீரல் மிகுதியாய்ச் சுருங்கி மூச்சும் மிகுதியாய் வெளிப்படுகிறது.

நெஞ்சு மூச்சும் வயிற்று மூச்சும் முழு மூச்சும் :—வயிற்றை இறுக்கி ஆடை கட்டிவிடுவதால் நுனி நெஞ்சினுல் மட்டும் மூச்சு விட நேருகிறது. நுனி நெஞ்சுக்கூட்டிற்கு விரியுந்தன்மை சிறிதேயாதலின் இப்பழக்கம் வருத்தத்தைத் தருவதாய் இருப்ப துடன் களைப்பை எளிதில் உண்டுபண்ணும். இஃதன்றி நுரை யீரலின் கீழ்ப்பங்கு அகன்று பெருத்தும் மேற்பங்கு கூரிதாய்ச் சிறுத்து மிருப்பதால் இவ்வாறு நுனி நெஞ்சினுல் மூச்சுவிடுவது நுனி நுரையீரலைமட்டும் இயக்கி மிகக் குறைந்த பயனையே அளிக் கும். உடல் நலனும் எளிதிற் குன்றும். இக்கொடிய பழக்கம் துடி யிடையோடு விளங்க முயலும் பல பெண்களுக்குண்டு. இதற்கு மாருகச் சில ஆடவர்கள் ஆடையைத் தூக்கி நெஞ்சுப்புறத்தில் இறுக்கிக் கட்டுவதாலும், முதுகைக் கூனிக் கொள்வதாலும் வயறு பெருத்து நெஞ்சுக்கூடு சூம்புவதுமன்றி அடிவயிற்றுல் மூச்சு விடும்படியாகும். இதனுல் மார்பு பல மிழந்துவிடுவ தன்றி மூச் சின் முழுப்பயனையு மடையமுடியாது. இவ்விரண்டு கொடிய பழக்கங்களையும் விட்டு மூச்சுவிட உதவும் எல்லா உறுப்புகளையு மியக்கி முழுமூச்சு விடுபவரே வலிமை, நலம் எய்துவர். இஃ தன்றி மூச்சுப்பயிற்சியை நீர் மூழ்கு முன்னும் பின்னும், சாப்பிடு முன்னும், தசைப் பயிற்சி செய்யு முன்பின்னும் செய்பவர் மிகுதி யான நலமெய்துவர். இவ்வாறு செய்ய நிமிர்ந்து நின்றுகொண்டு அல்லது உட்கார்ந்துகொண்டு மூச்சை எவ்வளவு இழுக்க முடியுமோ அவ்வளவு இழுத்து, அடக்க முடியும்வரை அடக்கி,

விடக்கூடியவரை விட்டுப் பின் இழுக்காதிருக்கக் கூடியவரை இருந்து பழகல் வேண்டும். இதுவே ஒரு முழுமூச்சாகும். இவ்வாறு எவ்வளவுக் கெவ்வளவு செய்கிறோமோ அவ்வளவும் நல்லது. இழுக்கும்போதும் விடும்போதும் எவ்வளவு மெதுவாகச் செய்கிறோமோ அவ்வளவிற்கு நயமதிகம்.

மூச்சின் அளவு:—நாம் நாடிநேரம் (Minute) ஒன்றிற்குப் பதினெண்முறை ஏறக்குறைய மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறோம். இது எற்றக்குறைய நாடித்துடிப்பின் எண்ணிக்கையிற் காற்பங்கு ஆகும். நாமோ இரவில் குறைவாகவும், பகலில் மிகுதியாகவும், பகற் வெளிச்சத்தில் இன்னும் மிகுதியாயும் அழுந்தும் மூச்சுவிடுகிறோம். நங் கண்ணைக் கட்டிவிட்டால் நம் மூச்சு எதனாலேயோ குறைகிறது. நடுவயதுடைய ஆடவரினுங் கிழவர் குறைவாயும், மகளிர் மிகுதியாயும் குழந்தைகள் இன்னும் மிகுதியாயும் மூச்சு விடுகின்றனர். வெயிலின் கடுமைக்குத் தக்கவாறு மூச்சு மிகுகிறது. பொது அளவுடைய (Average) நுரையீரல் மூச்சை எப்பொழுதும்போல் இழுக்கயின் 230 பரும அங்குல (C. in) க்காற்றையுடையது. விட்டபின் 200 பரும அங்குலக் காற்றையுடையதாதலின் 30 பரும அங்குலக் காற்று இயற்கை மூச்சால் போய் வந்துகொண்டிருக்கிறது. மூச்சை எவ்வளவு வெளிவிடக் கூடுமோ அவ்வளவு விட்டபின்னும் 100 பரும அங்குலக்காற்று நுரையீரலிற்றங்குகிறது. இவ்வாறே கூடுமான வரை இழுத்தால் 330 பரும அங்குலத்துக்கு மேற்படாது. ஆதலின் முயன்று மூச்சு விடுவதால் 130 ப. அ. போயும் 130 ப. அ. வந்துகொண்டு மிருக்கிறது.

இழுத்துவிட்ட காற்றுகளின் வேற்றுமை:—நாம் இழுக்கும் தூயகாற்றில் நூற்றில் நான்கு பங்கு உப்புக்காற்றும், ஒரு பங்கு உயிர்க்காற்றும், சிறிதே கரிக்காற்றும் நீராவியு மிருக்கின்றன. இவ்வாறு உட்கொண்ட காற்றிலுள்ள உயிர்க்காற்றில் காற்பங்கு குருதியிற் சேருகிறது. உப்புக்காற்று அப்படியே வெளிவந்து விடுகிறது. கரிக்காற்றும், நீராவியும், வெப்பமும் மிகுகின்றன. இவற்றை விளக்க வெளிவிடுங்காற்றை ஆடிக் குழாய் (Glass Tube) வழியே சுண்ணாம்பு நீரில் ஊதினால் அது பால் போலா

கிறதால் கரிக்காற்றின் மிகை வெளியாம்; ஒரு குளிர்ந்த கற்பலகையில் மூச்சு விடுவோமாயின் அதில் எண்ணிறந்த சிறு நீர்த்துளிகள் படிவதால் நீராவி மிகுந்திருத்தல் தெளியும்; ஒரு வெப்பமட்டின் (Thermometer) கூட்டில் (Bulb) மூச்சு விடுவோமாயின் அது வெப்பமிகையைக் குறிப்பதால் வெப்பின் மிகை புலனும். நம்முடலில் நாளொன்றுக்கு 3 சேர் நிறையுடைய உயிர்க்காற்று குருதியுட் கலக்கிறது; 6 சேர் பருமனுடைய நீர் வெளிப்படுகிறது.

மூச்சுவிடுவதேன்?:—நம்முடலும் ஒரு மெழுகுவத்தியைப் போல் எரிந்து கொண்டே யிருக்கிறதென்றால் நீங்கள் வியப்புறுவீர்கள்! ஒரு மெழுகுவத்தி எரிவதற்குத் தூயகாற்று வேண்டுமென்பதும் அக்காற்றிலுள்ள உயிர்க்காற்றை எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக கரிக்காற்றையும், நீராவியையும், வெப்பையுங் கொடுக்கிறதென்பதும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். இதைத் தான் நம்முடலும் செய்கிறதே யொழிய வேறில்லை. ஆதலின் நம்முடல் கொழுந்துவிட்டு விரைவாய் எரியாவிடினும் மெதுவாய் எரிகிறதென்பது தெளிவே. இவ்வெரிச்சல் நுரையீரலில் நடக்கிறதென்று நினைப்பீர்கள். அது பெருந் தப்பு. நுரையீரலில் ஒரு பண்டமாற்றல் நடக்கிறதே யன்றி எரிச்சல் அல்ல. ஆங்கு குருதி கொண்டுவரும் நச்சுக்காற்றையும், நீரையும், வெப்பையும் காற்றிற்குக் கொடுத்துவிட்டுக் காற்றிலுள்ள உயிர்க்காற்றை எடுத்துக் கொள்ளுகிறது. ஆயின் எரிச்சல் எங்கு நடக்கிறதெனின், உடல் முழுவதுமே ஒவ்வொரு அணுக்கூட்டிலும் நடக்கிறது. இதற்கு வேண்டிய விறகு நாம் உண்ணும் உணவே. இதைக் குருதியே கொண்டு கொடுக்கிறதென்று கண்டோம். இன்னும் எரிதற்கு வேண்டிய உயிர்க்காற்றையும் இக்குருதியே தன்னிடத்துள்ள செங்கூடுகளாற் சுமந்து செல்கிறது. ஒவ்வொரு செங்கூடும் மிக நுண்ணியதேயாயினும் அது கொண்டு செல்லும் உயிர்க்காற்றின் அளவு அதை விட எத்தனையோ மடங்கு பெரிதே. காற்று மிகுதியால் தீயும் மிகுவதுபோல் நம்முடலும் நல்ல காற்று ஏராளமாய்க் கொடுக்கப்பெற்றால் (உயிருடன்) எரிதலும் மிகும். இவ்வாறு குருதி எரிய வைப்பதன்றி, எரிவதால் உண்டாகும்

கரிக்காற்றையும் அதுவே எரிச்சல் அளியாதபடி நீக்குகிறது. இவ்வாறு நீக்குவது அதிலுள்ள அப்பள உப்பின் (Soda) உதவியாற்றான். இவ்வுப்பு நம் குருதியில் இலதேல் நாம் புழுங்கி இறக்க வேண்டியதுதான். ஆதலின் உடல் முழுவதும் எரிகிறதன்றி, மூச்சும் விடுகிறதென்பதை இனியாவது நம்புவீர்களா? இதற்குதவியாகத்தான் நுரையீரலிற் பண்டமாற்றல் நடக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டீர்களா?

பண்டமாற்றல் நடக்கும்வழி:— செடி கொடிகள், மரங்கள், பல சிற்றுயிர்களெல்லாம் இலைகளினாலும் தோல்களினாலும் மூச்சு விடுகின்றன. தவளையின் தோல் கூட இவ்வாறு பயன்படுமாறே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உயிர்கள் அறிவாற்றலால் (பருமனாலல்ல) பெரிதாக ஆக இத்தோல் மூச்சு போதுகிறதில்லை. நமது தோலின் பரப்பு 19 சதுர அடிதானிருக்கிறது. ஆனால் நமது நுரையீரலின் எல்லா மூச்சறைகளையும் ஒவ்வொன்றாக எடுத்து அவைகளின் சுவரை வளைவில்லாதபடி கூறு கூறாக அறுத்து இடைவெளி விடாது பரப்பினால் 2000 சதுர அடி இருக்கிறதெனில் நம் தோல் இதற்கு எம்மாத்திரம்? இவ்வளவு பரப்புடைய தோலை சிறு இடத்தில் அடக்கி வைக்கவே நுரையீரல் பலப்பல அறைகளாகத் தடுக்கப்பட்டிருக்கிறதென்பது தெரிகிறதா? என்ன அருமையான ஏற்பாடு! இத்தகைய பொறிவைக் குறிக்கும் ஏற்பாடுகள் முன்னும் பார்த்திருப்பீர்கள்; பின்னும் பார்ப்பீர்கள்! இத்தனை சதுர அடியுள்ள அறைச் சுவர்களிலும் நுரையீரலுக்கு வருங் குருதி பரப்பப்படுகிறது. நாம் இழுக்குங் காற்றும் இவ்வறைகளுக்குட் செலுத்தப்பட்டு இத்தனை சதுர அடிகளின் மேலும் பரப்பப்படுகிறது. இவையிரண்டும் முட்டிய இரண்டொரு மாத்திரையில் (Second) முற்கூறிய பண்டமாற்றல் நடக்கிறது. என்ன விரைவு! நடந்ததும் குருதி தன் தலைவர்களாகிய கூடுகளுக்கு உயிர்க்காற்றைச் சுமந்து செல்கிறது. காற்றும் அழுக்குடையதாகக் கருதப்பட்டு வெளியிற் றள்ளப்படுகிறது. பின்னர் முன்போல் தூயகாற்று இழுக்கப்பட்டு பிறகு வரும் அழுக்குக் குருதியுடன் பண்டமாற்றல் செய்கிறது. இத்தொழில் ஒரு மாத்திரையும் விடாது நடந்துகொண்டே யிருக்கிறது.

நம்மைக்கேட்டா? நாம் முயன்றோ? வருந்ியா? இல்லவே யில்லை! தானாகவே, எளிதாகவே, நாம் நினைக்காமலே நடை பெறுகிறது. இது பெரும் வியப்பன்றோ!

காற்றோட்டம் :— இவ்வாறு நடக்கும் பண்டமாற்றலால் நம்முடற்கு ஊதிய முண்டாக வேண்டுமாயின் குருதி உயிர்க் காற்றை எவ்வளவுக் கெவ்வளவு அடையக்கூடுமோ அவ்வளவு அடையவேண்டுமன்றோ? 'சட்டியி லிருந்தா லன்றோ அகப்பை யில்வரும்' என்னும் பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். காற்று தூயதா யிருந்தா லன்றோ குருதிக்கு உயிர்க்காற்று மிகுதியாய்க் கிடைக்கும். அழுக்குக்காற்றில் மிகச்சிறிதே கிடைக்குமன்றோ! இது மட்டுமா? அழுக்கு நீரால் அழுக்கைக் கழுவ முடியுமா? தூயநீரன்றோ வேண்டும். இவ்வாறே அழுக்குக் குருதியைக் கழுவத் தூயகாற்று எவ்வளவு இன்றியமையாதது? இதைக் கருதாது அழுக்குக் காற்றை யிழுத்தால் குருதியிலுள்ள அழுக்கு நீங்குவதில்லை. இஃதன்றி அக்காற்றில் அழுக்குப்பொருள் எத்தனை யுளவோ அத்தனையில் ஒவ்வொன்றிலும் ஒரு பகுதி குருதியுட் கலக்கிறது. என்ன மோசம்! இதை உணர்ந்த பின்னாவது கெட்ட காற்றை இழுக்காதிருப்பீர்களா? இழுக்கா திருக்க எது தூயகாற்று எது அழுக்குக் காற்றென்று கேட்பீர் கள். மூச்சு முதலில் முதல் ஏன் மூக்கு வழியாய்ப் போகிற தென்று தெரியுமா? மூக்கு தூயகாற்று இது, அழுக்குக்காற்று இதுவென்று தெரிவிப்பதற்காகவே யிருக்கிறது. மூக்கிற்கு எக் காற்று பிடிக்கவில்லையோ அக்காற்று உங்களுக்கும் உதவா தென்பது திண்ணம். பலர் கூடு மிடங்களாகிய பள்ளிக்கூடம், அரங்கு (நாடகக் கொட்டகை), சொற்பொழிவுக்கூடம் முதலிய விடங்களில் தக்க சாளரங்க ளமைக்கப்பெறாது காற்றோட்ட மில்லாதிருந்தால் அங்குள்ள காற்றின் கெடுதியை உங்கள் மூக்கு உங்களுக்கு அறிவிக்கிறதன்றோ? இவ்வாறே சாளரங்களில்லாத இருட்டறை, பண்டசாலை (Store Room) கோயில் முதலியவை களினுட் புகுந்ததும் ஒரு நிணறலும் மூக்கிற்கு அருவருப்பும் உண்டாகிறதல்லவா? அவ்விடத்தை நச்சுக்கூடமாகக் கருதி

உடனே வீட்டு விலகுங்கள். இதற்கு மாறாகத் திறந்த வெளியிலிருக்கும்பொழுது எவ்வளவு உள்ளக்கிளர்ச்சி உண்டாகிறது! ஆதலின் சர்மனியரைப்போல் வீட்டிற்கொரு தோட்டமுண்டாக்கிக்கொண்டு பொழுது முழுவதையும் அதிலே போக்குவது எவ்வளவு நன்மை! இதை உங்கள் மூக்கு வெறுக்குமா? இல்லையே! ஆதலின் உடல் நலத்தையடைய இதுவே நல்ல வழி. இன்னும் உங்கள் மூக்கு என் பூவின் மணத்தையும், புழுகு, மான்மதம் முதலியவற்றின் மணத்தையும் விரும்புகிறது தெரியுமா? இம்மணங்களைக் கொடுக்கும் நெய்ப்பொருள் நச்சுக்கூடுகளைக் கொல்லும் வன்மையுடையதாயிருக்கின்றன. இனியாவது நீங்கள் மகிழ்ச்சியை மட்டுங் கருதாது பயனையுங் கருதியே பூவை விரும்புவீர்களென்று நம்புகிறேன்.

மூக்கின் பெருமைகள்:—இவ்வாறு நல்வழி காட்டுவதுடன் நில்லாது மூக்கானது இன்னும் பல்வழிகளிற் பயன்படுவதற்காகவும் வியப்பைத் தரும் ஏற்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. மூக்கினுள் உச்சியில் மூன்று தொளைகளிருக்கின்றன. யாவற்றிற்கும் மேற் றுளையிலேதான் நாற்றத்தை யுணர்த்தும் நரம்புக ளிருக்கின்றன. நடுவழி மிகுந்த வளைவுடன் உட்புகும் காற்று இயற்கையாய் இவ்வழியாகவே செல்லும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. கீழ்வழி வெளிச்செல்லுங் காற்றிற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது மிகச் சிறிய நீளமுடையதே. வெளிச்செல்லுங் காற்று மிகப் பளுவானதால் இவ்வழியிற்றான் செல்லுகிறது. நடு வழி ஏன் மிக வளைந்திருக்கிறது தெரியுமா? இதில் நெடுநேரம் உட்செல்லுங் காற்றுப்படுவதற்காகவே. இவ்வாறு படுவதால் இவ்வழியின் பரப்பிலுள்ள எண்ணிறந்த மயிர்க்குழாய்களிற் செல்லுங் குருதியின் உதவியால் இக்காற்று ஈரமும், சூடுமடைகிறது. இதனால் நுரையீரலுக்கு எவ்வளவு நன்மை தெரியுமா? வறண்ட காலத்தில் காற்றின் வாட்சியும், குளிர் நாட்களில் காற்றின் குளிரும் நுரையீரலுக்குத் தெரியாது. இன்னும் இச்சூடு எத்தனை நச்சுக்கூடுகளைக் கொல்லுகின்றது! மூக்கின் வழியாய்ச் சென்ற காற்றை வாயினுட் குழாய் வைத்துப் பிடித்துப் பார்த்தால் நச்சுக்கூடுகள் அற்றிருப்பதைக் காணலாம்! என்ன

நன்மை!! இவையன்றி இவ்வழியிலிருக்கும் மயிர்களை நீங்கள் பயனற்றதாக நினைப்பீர்கள். மயிர்வினைஞனைவிட்டு நீக்கவும் முயல்வீர்கள். ஆனால் இவை காற்றிலுள்ள தூசியை வடிகட்டு கின்றன. இதற்குதவி செய்வன இவ்வழியிலமைந்துள்ள சளித்தோல்கள். இவைகளிலுள்ள சளிக்கூடுகள் சளியைத் தயாரிக்கின்றன. இச்சளி நச்சுக்கூடுகளையும் தூசியையும் சிறைப்படுத்தி, கூடுகளைக் கொல்லுந்தன்மையுடையதால் கொன்று காயவைத்து படல் படலாக உதிருவதை அறிவீர்கள். உங்கள் விரல்களாலுந் தோண்டி எறிவீர்கள். அப்பொழுது இவை எவ்வளவு அழுக்குடன் வெறுக்கத்தக்கனவாயிருக்கின்றன? இப்படியிருப்பது இவை தூசியை வடிக்கட்டுவதனாலன்றோ? ஆதலின் மூக்கு வழியாய்ச் செல்லுங் காற்று மூக்கைத் தாண்டியதும் தூயதாகவும், ஈரமுடையதாகவும், வெப்புடையதாகவும், ஏறத்தாழத் தூசியற்றதாயுமிருக்கிறது. ஏறத்தாழத் தூசியற்றது என்றது எதற்காக வெனின் சிலர் தூசி மிகுந்துள்ள பட்டினங்களிலும், தெருக்களிலும், இடங்களிலும் புகை மிகுந்துள்ள பொறிகளின் அண்மையிலும் இருந்து எப்பொழுதும் தூசி, புகை இவற்றையே இழுத்துக்கொண்டிருக்கின்றனர். இன்னாருக்காக மூக்கு எவ்வளவு வேலைதான் செய்யும்? மூக்குமட்டுமா? மூச்சுக்குழாயிலும், மூச்சுக்கிளைக் குழாய்களிலும் உள்ள வழியிலுள்ள கூடுகள் ஒவ்வொன்றும் கண்ணிமை மயிர்போன்ற மயிருடையன. இம்மயிர்கள் உயிருள்ள துடுப்புகளைப் போன்று உட்செல்ல வரும் தூசிகளை வெளியே தள்ளிக்கொண்டே யிருக்கின்றன. இதனுலும் தூசி தடுக்கப்படுகிறது. இவ்வாறு மூச்சின் வழியிலுள்ள மயிர்களும், சளியும் தம் பேரில் வஞ்சனையின்றி முடிந்த வரையில் தம்மாலியன்ற உதவியைச் செய்கின்றன. முற்றிலுந் தடுக்க முடியாததின் பிழை இவ்வாறு வாழத்தகாத இடங்களில் வாழ்பவனுடையதே. மூக்கினுடையதல்லவே அல்ல. இனி இவைகளைத் தப்பிச் செல்லுந் தூசி நுரையீரலிற் படிந்து விடுகிறது. இதனால் பிறக்கும் பொழுது முத்து வெள்ளையைப் போன்ற வெண்மையுடைய நுரையீரல் நாளாவட்டத்தில் பட்டினத்தானுக்குக் கற்பலகையைப் போன்றும், கரிவேலை (Coal miner) க்காரனுக்குக்

சாய கறுப்பாயும் மாறுகிறது. இதனால் நுரையீரலின் வேலைக்கு இத்துணை கெடுதி! இக்கேடு சிறிதும் நேராதபடி காத்துக்கொள்வோர் வீடுகள் தெருக்கள் முதலியவைகளைத் தண்ணீர் தெளிக்காது அல்லது சாணம் போடாது கூட்டமாட்டார்கள். ஏனென்றால் இவையில்லாது கூட்டினால் பெருங்குப்பைகள் விலக்கப்படுமேயன்றிச் சிறு தூசிகள் பறந்து பின் சிறிது நேரத்திற்கெல்லாம் தரையிற் படிந்துவிடும். பின் மனிதர் நடமாடும்பொழுது இத்தூசி பறந்து காற்றை அழுக்குப்படுத்துகிறது. இக்கேட்டை நீக்கவே சில பணக்காரர் மின்சார உரிஞ்சி (Electric Sweeper) யைப் பயன் படுத்தித் தூசியைப் பறக்காதபடி உரிஞ்சிவிடச் செய்கின்றனர்.

மூச்சுவிடத் தெரியாதவர்கள் :—முற்கூறியபடி பல அரும் பயனளிக்கும் மூக்கை எத்துணைபேர் இகழ்ந்து மூக்கால் மூச்சு விடாது வாயினால் விடுகின்றனர்! இதனாலடையுந் தீமையை இவர்கள் உணர்வார்களாயின் நடுநடுங்கி ஊத்தைவா யங்காத்தலை விட்டுவிடுவார்களென்பது திண்ணம். ஆனால் பலர் தாம் செய்வது கெடுதி யென்று தெரிந்தும் அவற்றை நீக்கும் ஆண்மையற்றவர்களாயிருக்கின்றனர். இப்பேடிகளுக்கு நாம் ஈதுரைக்கவில்லை. உள்ள உறுதியுடையோர்க்கே உரைக்கின்றோம். இன்னார் தெரிந்து நீக்கக்கூடிய வாய்மூச்சினாலுண்டாங் கேடுகளாவன :—(க) வாயால் உள்ளிழுக்கப்படுங் காற்று போதிய வெப்பு, ஈரமடையாது; அதிலுள்ள நச்சுக்கூடுகள் மாளா. (உ) தூசி அப்படியே சென்று விடும்; வடிகட்டப்படாது. இன்னும் வாயிலுள்ள நாற்ற முண்டுபண்ணும் பொருளும், அழுக்கும் நுரையீரலுட் செல்லும். (ங) வாய்வழியே மூச்சு விரைவில் செல்வதால் நுரையீரல் நெடுநாழி பெருத்திருப்பதில்லை. இதனால் எளிதில் இளைப்புண்டாகிறது. (ச) இன்னும் இதனால் மூச்சடக்க முடியாதாகையால் உணவு மெல்லாது விரைவில் விழுங்கப்படுகிறது. (இதன் கேடுகளைப் பின்னால் பார்க்க) (ரு) மூக்கிலுள்ள சளித்தோல் வறண்டு சுருங்கிக் குருதியோட்டமற்றுப் போவதால் சளிபிடிக்கிறது. (சு) குரல் கடிக்கிறது. (எ) மூக்கிற் செல்லுங்காற்றாலேயே நாம் நாற்றத்தை யுணருகிறோமாதலின் வாயால் மூச்சு

விடுபவர்க்கு நாற்றந் தெரியாது. (அ) சிலசுவை நாற்றத்தைப் பொறுத்திருக்கின்றவாதலின் இன்னார்க்கு இச்சுவையும் விளங்காது. ஆதலின் இன்னார் உணவிற் றக்க சுவையுண்டாக்க மிகுதியாய்க் காரப்பொருளைப் பயன்படுத்தி உடலைக் கெடுத்துக்கொள்ளுகின்றனர். இத்துணைகேடு விளைக்கும் இக்கொடிய பழக்கத்தை நீக்க வாயை எப்பொழுதுங் கெட்டியாய் மூடிக்கொள்ளல் வேண்டும். தூங்கும்போது நம்மை யறியாது வாய்திறந்து கொள்ளுமாதலின் இதை நீக்கத் தலைக்கணையை உயரமாக வைத்துக்கொண்டு முதுகின்மேற் படுத்துறங்க வேண்டும். அல்லது தாளைத் திறக்காதபடி தலையுடன் சேர்த்துக் கட்டிவிட வேண்டும். சில சிறுவர் மூக்கினுள் சதை வளர்வதால் (Adenoids Growth) வாயால் மூச்சுவிடுகின்றனர். இவ்வளர்ச்சியைத் தக்க மருத்துவரினுதவியால் சுரண்டிவிட்டால்தான் இன்னார் மூக்கால் மூச்சு விடுவர்.

மூக்கின் தூக்கம் :— பகலில் மூக்கினுதவியால் காற்றின் தூய்மை அல்லது அழுக்கை அறிகிறோம். இனி இரவில் நாம் தூங்கும் போது நம் மூக்கிற்கு என்ன தெரியுமென்று நினைத்துப் பாருங்கள். அதுவும் நல்லது கெட்டது ஒன்றுந் தெரியாது உங்களைப்போலவே உறங்குகிறதல்லவா ? அப்பொழுதும் நீங்கள் மூச்சுவிடுகிறீர்களே. உங்கள் மூக்கு வந்ததை விழுங்கிக் கொண்டேயிருக்குமே. அது தூசியைப் பெரிதும் நீக்குந்தன்மையுடையதேனும் நச்சுக்காற்றை நீக்குந் தன்மையுடையதன்றே இதற்கென் செய்வதென்று கவலையுண்டாகிறதன்றோ? ஆம், கவலையுறுங்கள். தீமை நேராதபடி முன்னேற்பாடு செய்து கொள்ளுங்கள். இவ்வாறு செய்து கொள்ளாதோரே இரவுக்காற்று கெட்டதென்று நினைத்தனர். இது தவறு. உண்மையில் இரவுக்காற்று பகற்காற்றினும் தூயதாயும், தூசி, புகை குறைந்ததாயுமிருக்கிறது. ஏனெனில் மனிதர் நடமாடுவதும், நெருப்பெரிவதும், பொறிகள் வேலை செய்வதும் இரவிற் குறைவே. பின் தூங்குமிடங்களிலுள்ள காற்றை நாமே கெடுக்கிறோம். ஒருவன் ஐந்து பருமடிப் பருமனுள்ள அறையில் ஒரு மணி நேரம் தங்கியிருந்தால் பின்

அங்குள்ள காற்றின் நிலை அவன் பயன்படுத்தத் தகுந்ததன்று. ஆதலின் அக்காற்றை மாற்றவேண்டும். இதற்குச் சாளரங்கள் எவ்வளவு இன்றியமையாதன? இவ்வாறிருக்க ஒரு சிற்றறையிற் பலர் உறங்குவது என்னமறிவீனம்! இவ்வாறு தங்குவோர் கக்கியதை நக்குவதுபோல் தாம் வெளிவிட்ட காற்றைத் தாமே இழுக்க வேண்டுமன்றோ? ஆதலின் தனித்துறங்குவதே நன்று. தூங்குமிடமும் திறந்த வெளியாயிருத்தல் நன்று. அன்றி அறையிற் றூங்கநேரின் அது பெரிதானதாயும், உயரமானதாயும், வேண்டிய சாளரங்களையுடையதாயும் இருக்கவேண்டும். தூயகாற்று வர அறையின் கீழ்ப்புறத்தில் சாளரங்களும், அழுக்குக்காற்று செல்ல மேற்புறத்தில் சாளரங்களும், புகைப் போக்கிகளுந் தேவை. என்ன குளிராயிருந்தாலும் சாளரங்களை நன்றாய்த் திறந்து வைக்கவேண்டும். முகத்தை மூடிக்கொண்டு தூங்கலாகாது. நீங்கள் மிகுதியாய்த் தங்குமோரிடம் உங்கள் படுக்கையறையே யாதலின், ஈண்டே நீங்கள் உங்கள் வாழ்நாளில் மூன்றிலொருபங்கைக் (நாளொன்றிற்கு ௮ மணிநேரத்தைக்) கழிக்கின்றீராதலின் இவ்வாறு கழிக்கும்பொழுது காற்று கெடின் உங்கள் மூக்கு இதை உங்களுக்கு உணர்த்தாதாதலின் இவ்விடத்தை எவ்வளவு தூயதாய் வைத்திருக்க வேண்டு மென்பது படுகிறதா? மற்றையோரினும் நோயாளியே இவ்விடத்தைப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் அவன் மிகுதியான காற்றை அழுக்குப் படுத்துகிறான்; அவனுக்கு வேண்டிய காற்றின் அளவும் மிகுதியே; அவன் தூங்குகிற பொழுதும் மிகுதியே யாகும்.

தும்மல்:—இது எப்பொழுது, எப்படி, ஏன் உண்டாகிறதென்று உற்று நோக்குங்கள். நாம் இழுக்குங் காற்றில் தூசி மிகுந்திருந்தாலும், நமக்குச் சளி பிடித்திருந்தாலும், ஆடையின் நுனியைத் திரித்து மூக்கினுள் விட்டுக் குடைந்தாலும் இஃதுண்டாகிறதல்லவா? உண்டாகும்பொழுது வெகு விரைவாயும் மிகுதியாயுங் காற்று வெளித்தள்ளப்படுவதைக் காண்பீர்கள். இது நெஞ்சக்கூடு வெகு விரைவாய்ச் சுருங்கி, ஈரல் தாங்கியும் வெகு விரைவாய் உட்குழிவதால் உண்டாகிறது. உடற்சுத் திரை

செய்யும் உணவு கக்கப்படுவதுபோல் (வாந்தி) நுரையீரலுக்குத் தீமைதரும் தூசிக்காற்றும், சளி பிடித்திருக்கும்பொழுது அதன் குழாய்களை அடைக்கவரும் சளியும், ஆடையின் நூலியால் குடையும் போது மூக்கினுட் புகப் பார்க்கும் பொருளும் தும்மும்போது வெகு விரைவாய்த் தள்ளப்படுங் காற்றினுல் அடித்துத் தூரத்தப்படுவது என்ன நன்மை!

விக்கல் :—இது தும்முதலுக்கு எதிரிடை. இதில் காற்று உள்ளே விரைவாய்ச் செல்லுகிறது. இது நமக்கு இன்பந் தருவதில்லையாதலின் இதை அடக்க முயலுகிறோம். இதை அடக்கும் பலவழிகளுள் எளிதானதும் விரைவிற் பயனளிப்பதும் யாதெனில் மூச்சை எவ்வளவு வெளியில் விடமுடியுமோ அவ்வளவு விட்டுப் பின் மூச்சை உள்ளே இழுக்காது எவ்வளவு இழுக்காது அடக்க முடியுமோ அவ்வளவு அடக்கியிருத்தலே யாகும். இவ்வாறு ௩, ௪, முறை செய்யின், இது விக்கும் முயற்சிக்கு எதிர் முயற்சியாதலின், விக்கல் நின்றுவிடும்.

ஒலிப்பெட்டியும் ஒலியும் :—இது மூச்சுக்குழலின் மேலிருக்கிறது. இது எலும்பு போன்ற, ஆனுல் எலும்பைவிட மெதுவான எலும்புக்குருத்தினுல் (Cartilege) செய்யப்பட்டிருக்கிறது. ஆனுல் முதியோரின் பெட்டியில் சுண்ணும்பு மிகுத்திருப்பதால் குரல் கடித்திருக்கிறது. இப்பெட்டியில் இரு ஒலிக்கயிறுகளிருக்கின்றன. மூச்சை இழுக்கும் பொழுது இவைகளுக்குக் கட்டளை பிறப்பதால் அகன்று காற்று உள்ளே செல்ல இடங் கொடுக்கின்றன. இவையே ஒலியுண்டாக்குவன. ஒலியுண்டாக்குமுன் மூச்சையிழுத்து நுரையீரலைக் காற்றுல் நிரப்பிக்கொள்கிறோம். நுனிநுரையீரலை மட்டும் விரைவில் நிரப்பிக்கொண்டால் சிறிது பொழுதே பேச இயலும். அடிநுரையீரலையுஞ் சேர்த்து நிரப்பிக்கொண்டால் ஒரு மூச்சில் நீண்ட பொழுது பேசலாம். இவ்வாறு நிரப்பிக்கொண்டபின் இக்காற்றையடக்கி வேண்டிய அளவு விட்டு இக்கயிறுகளை மீட்டி ஒலியுண்டாக்கச் செய்கிறோம். ஒலியின் அளவு, நீளம், வன்மைக்குத் தக்கவாறு இக்கயிறுகள்

(௨.) சுருட்டுப் பிடிப்பதனால் சிறிது புகையும், புகையின் காரமும் இழுக்குங்காற்றுடன் நுரையீரலுட் சென்று நச்சுப் பொருளைக் குருதிக்குக் கொடுத்துக் கெடுக்கிறது. இவ்வாறு கெடுப்பதில் சுருட்டினும் தாள்சுருட்டு (Cigarette) வன்மையுடையது. சுருட்டுப் புகையினும் தாள்சுருட்டுப்புகை அவ்வளவு காரமானதன்று என்றாலும் இக்காரமின்மையே சிலரை இதை விழுங்கும்படி தூண்டுகிறது. இவ்வாறு விழுங்குவதால் இப்புகை நுரையீரலுட் சென்று 2000 சதுர அடி பரவி, நச்சுப் பொருளை குருதிக்குள் மிகுதியாகச் செலுத்துகிறது. ஆனால் சுருட்டுப்புகையின் காரமே இவ்வாறு விழுங்காதபடி தடுப்பதால் அவ்வளவு கெட்டதன்று. ஆதலின் விளையாட்டிற்காகவும், பெருமையைக் காண்பிப்பதற்காகவும் தாள் சுருட்டுப் புகையை வாயால் விழுங்கி மூக்கால் விடுவோர் அடையுங் கேட்டிற்களவில்லை. அதிலும் சிறுவர்களடையுங் கேட்டிற்களவேயில்லை.

(௩.) புகையிலையைப் பாக்கு வெற்றிலையுடன் போடுவதாலும் அதன் காரம் சிறிது நுரையீரலுக்குஞ் சென்று கெடுதியை விளைக்கிறது. இவ்வாறு போட்டுக்கொள்வோர் அண்மையிலிருந்தால் அன்னார் பேசும்பொழுது எவ்வளவு காரமான காற்று வெளிப்படுகிறது பாருங்கள்.

(௪.) குடி:—இது நுரையீரலையும் குருதிக் குழாய்களையும் வலுவிழக்கச் செய்கிறது. குடி மிகின் மூச்சுறுப்புக்களை இயக்கும் உயிர் முடிச்சை மயக்கிவிடுவதால் மூச்சு நின்றுபோய் உயிரிழக்கச் செய்கிறது. இம்முடிச்சு இயற்கையாகவே குருதியிலுள்ள நச்சுக்காற்றின் சிறு மிகுதியையும் உணரும். இவ்வுணர்ச்சியால் நச்சுக்காற்றின் மிகுதிக்குத் தக்கவாறு மூச்சை மிகுதிப் படுத்துகிறது. இவ்வுணர்ச்சியைக் குடி கெடுத்துவிடுவதால் நச்சுக்காற்று மிகினும் மூச்சை மிகுதிப்படுத்தாது உயிர்க்கிறுதி யுண்டாவதும் வியப்பாகுமோ?

திக்குமுக்காடுபவர்க்கு முதலுதவி:—உணவுக்குழாய் மூச்சுக் குழாயைத் தாண்டிச் செல்கிறது. தாண்டுகிறவிடத்தில் இரண்

டும் சேருகின்றன. யாதேனுமொன்றை விழுங்கும் பொழுது மூச்சுக்குழாய் குரல்வளைப்பெட்டிமூடியால் மூடப்படுகிறது. மூச்சுவிடும் பொழுது இது திறக்கப்படுகிறது. இவ்வாறு ஒன்று மூடும்பொழுது ஒன்று திறக்கும் ஏற்பாடு எப்பொழுதும் நன்றாகவே வேலை செய்கிறது. ஆனால் விழுங்கும்பொழுது பேச, அல்லது சிரிக்க முயலுவீர்களாயின் ஒரேபொழுதில் இரண்டையுந் திறக்கல் நிமையாதலின் இவ்வேற்பாடு குழப்பமடைகிறது. அப்பொழுது மூச்சுக்குழாயும் திறந்திருப்பதால் உணவுப்பொருள் உள்ளே செல்கிறது. இப்பொருளால் மூச்சுக்குழாய் அடைபடுவதால் மூச்சுவிடமுடியாது. உடனே மூச்சுறுப்புகள் விரைவாய்க் காற்றை வெளிவிட்டு இப்பொருளைத்தள்ள முயல்கின்றன. இதைத்தான் புரையேறுதலென்கிறோம். இவ்வாறு ஏறும்பொழுது சில வேளை குரல்வளைக்குள்ளே சென்ற சோற்றுப் பருக்கை விரைவாய்த் தள்ளப்படுவதால் மூக்குவழியே வந்து விடுகிறதன்றோ? இவ்வாறு குரல்வளைக்குட் செல்லும் பொருள் காசு, கட்டுப்பல் (False Teeth) முதலியவைகளைப்போல் பெரிதாயிருந்தால் மூச்சு சிறிதும் விடமுடியாது, திக்குமுக்காடும். இதனால் இறந்தும்படலாம். இதை நீக்கப் பக்கத்திலிருப்போர் துணிவுடன் இரண்டொரு விரலைத் தொண்டைக்குள் விட்டு, அப்பொருளை முடிபுமாயின் கொக்கியால் மாட்டி யிழுப்பதுபோல் வெளியே கொண்டுவரவேண்டும். முடியாவிடில் குரல்வளைக்கப்பால் உள்ளே தள்ளிவிடவேண்டும். அல்லது அவனைக் குனியவைத்து மெதுவாய் முதுகில் குத்தினாலும் அது வெளியே வந்து விழுந்துவிடும். இவ்வாறு வெளிவந்த பின்னும் அவன் மூச்சு விடாதிருந்தால் செயற்கைமூச்சு (Artificial Respiration) விடவைத்தல் வேண்டும்.

செயற்கை மூச்சு:—உங்களுக்கு நீந்தத்தெரியுமா? தெரியாதாயின் தண்ணீரில் விழுந்து விட்டால் இறக்கத்தான் வேண்டுமென்று நினைப்பீர்கள். இல்லை! ஒருவரும் உதவிக்கில்லாவிடினும் உதவி கிடைக்கும் வரை நீரில் மிதக்க ஒருவழியுண்டு. அஃதெவ்வாறெனில் காலையுங் கையையும் ஆட்டாமலிருக்க வேண்டும். முதுகின்மேல் படுத்துக்கொண்டு தலையை அண்ணாந்து

மூக்கையும் வாயையும் உயர்த்த வேண்டும். மூச்சை நன்று யிழுத்துச் சிறிது சிறிதாக விட்டு மார்புக்கூட்டைப் பருக்க வைத்திருக்கவேண்டும். கையைத் தண்ணிருக்குள்ளேயே வைத்திருக்க வேண்டும். இவ்வாறு துணியுடன் செய்தால் மிதந்து கொண்டிருக்கலாம். ஆனால் இதைச்செய்யாது ஒருவன் நீரினுள் முழுகிவிட்டால் அவனைப் பல மணி நேரத்திற்குப் பின்னெடுத்தாலும் செயற்கை மூச்சால் உயிர்ப்பிக்கலாம். இதற்காக அவனுடைய வாய்க்குள் கையைவிட்டு மண், மணல், புல்லிருந்தால் எடுத்துவிட்டுப் பின் நுரையீரலுக்குட் சென்றிருக்கும் நீரை நீக்க வேண்டும். இதற்கு, சிறு குழந்தையாயின் காலைப் பிடித்துக் கொண்டு தலைகீழாக இரண்டொரு மாத்திரை தொங்கவிட்டு சிறிது குலுக்கலாம். பெரியோனாயின் இடுப்புத்துணியைப் பிடித்துத் தூக்கிக் குலுக்கலாம்; மிகப்பருத்த உடலுடையவனாயிருந்து தூக்க முடியாவிடின் பீப்பாய், கல்லுருளை (Roller), விருத்த மரம் முதலியவைகளிற் குப்புறத் தலைகீழாகப் படுக்க வைக்கலாம். நீர் வெளிப்பட்டதும் ஈரத்துணியைக் களைந்து உலர்ந்த துணியால் மூடி. பிறகு மூச்சுண்டாக்க வேண்டும். இதற்கு இருவழியுண்டு. (க) மருத்துவர் சில்வெச்டர் முறை (Dr. Sylvester's Method). இதன்படி அவனை மல்லாந்து படுக்கவைத்துத் தோள்பட்டையினடியில் துணியைச் சுருட்டி மெத்தெனவைத்துக் கைகளை மடக்கி நெஞ்சுக் கூட்டின் இருபுறத்திலுஞ் சேர்த்து வைக்கவேண்டும். இதனால் மூச்சு விடுபடும். பின் மெதுவாக, ஒருபடித்தாகக் கைகளை நேர்மேலே நீட்டி, நீட்டியபடியே பின்புறம் தலைக்கு நேராகக் கொண்டு வர வேண்டும். இதனால் மூச்சிழுத்தல் உண்டாகிறது. இவ்வாறு நாடிநோய் ஒன்றிற்கு மனிதனாயின் ௰௫ விழுக்காடும் குழந்தையாயின் 20 விழுக்காடும் செய்யவேண்டும். செய்யும்பொழுது ஒருவனை விட்டு நாக்கைச் சிறிது வெளியே இழுத்துப் பிடிக்கச் சொல்லவேண்டும். இன்றேல் மூச்சின்வழி, நாக்கால் அடைபடுமாதலின் இச்செயற்கை மூச்சால் பயனில்லை. (உ) ஆசிரியர் சேபரின் (Schaper's Method) முறை மற்றொன்று. இதன்படி அவனைக் குப்புற நீட்டிப் படுக்கச்செய்து கைகளிரண்டையும்

தலைக்கு நேராக நீட்டிவிட வேண்டும். அவனுக்குப் பக்கத்தில் அவன் முகத்தை நோக்கி முட்டியிட்டு நாம் உட்காரவேண்டும். பின்னர் அவன் முதுகின் அடியில் இடுப்பின் இரு பக்கத்திலும் நம் இருகைகளையும் வைத்து நம்முடலை முன்றள்ளி அதன் நிறையால் அவன் இடுப்பை அழுத்தச்செய்ய வேண்டும். இதனால் அவன் மூச்சுவிடுவான். பின் கையைத் தளர்த்தி உடலைப் பின்னுக்குத்தள்ளி நம் குதியின்மேல் உட்கார்ந்து பளுவை அவன்மீது படாது விலக்க வேண்டும். ஆனால் கையை அவன் மேலேயே வைத்திருக்க வேண்டும். இதனால் மூச்சு உள்ளே இழுபடும். இவ்வாறு நாடிநேரம் ஒன்றிற்கு 12 முதல் 15 விழுக்காடு வரை நீரில் விழுந்தவனின் ஆண்டிற்குத் தக்கவாறு செய்யவேண்டும். இம்முறையில் நாக்கைப் பிடிக்க வேண்டியதில்லை, தானே வெளி வந்து விடுமாதலின். கையைக் கீழ்ப்பழுக்களின் மேல் வைத்திருக்க வேண்டும். இம்முறைகளால் விழுந்தவன் மூச்சுவிடத் துவங்கினால் அவன் மூச்சுவிட்டு இழுப்பதற்கிசைய நாமும் செயற்கை மூச்சைவிடச்செய்ய வேண்டும். நன்றாய் மூச்சு விடுவானாயின் இவ்வுதவியை நிறுத்தி விடலாம். பின் அவன் உடலில் வெப்புண்டாக்கவும், குருதி யோட்டத்திற்குதவியாகவும் கை கால் உடம்பை ஏற்றப் பக்கமாகத் தேய்க்க வேண்டும். பின் கம்பளம் அல்லது துணியால் மூடி இருபக்கத்திலும், காலிலும் வெந்நீர்க்குப்பியை வைத்து வெப்புண்டாக்க வேண்டும். அவனுக்கு அறிவு வந்தவுடன் சிறிது வெந்நீர் அல்லது காப்பி அல்லது தேநீர் கொடுக்கலாம். அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்து மூச்சு மறுபடியும் நின்றால், மறுபடியுஞ் செயற்கை மூச்சுண்டாக்கவேண்டும்.

தொடரும்.

உ

திருச்சிற்றம்பலம்.

மணிமேகலை.

திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், நாங்குனேரி.

சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறவைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதாவது மணிமேகலை தக்க பருவமடைந்தது கண்ட நற்றாய் யாது செய்வதென மாதவியிடம் கேட்க, அவள் மணிமேகலையைக் கோதைத்தாமம் குழலொடு களைந்து துறவு பூணச்செய்தாள் என்பதே. கண்ணகி கோயில்கொண்டகாலத்து அது காணவந்த தேவந்தி இச்செய்தியைச் சேரனிடம் சொன்னதாகையால் அதன் முன்னரேயே மணிமேகலை துறவெய்தியவளாவாள். இதனால் மணிமேகலை முண்டிதக்கோலத்தோடிருந்தாளென வறியலாம். பருவமடையுமுன் சித்திராபதியுடனிருந்த மணிமேகலை அதன்பின் மாதவியுடனிருந்தாள். இதற்கு முழுதும் மாறுபட்ட செய்தியே மணிமேகலையிற் காணப்படுவது. அதில் மாதவியுடனேயே மணிமேகலையிருந்ததாகத் தெரிய வருகிறது. அவளைத் தன் வீட்டிற்குக் கொண்டுவந்து பொருள் தேடச் சித்திராபதி பலமுறை முயல்கிறாள். இவ்வாறு முயலும் சித்திராபதியுடன் மணிமேகலையிருந்து பருவமடைந்திருந்தால் அவளை மாதவியிடம் அவள் அனுப்பியிருக்கவே மாட்டாள். சிலப்பதிகாரமோ இத்தகைய குணமுடைய சித்திராபதியைப் பற்றிக் கூறவில்லை. அதில் மணிமேகலையைக் 'கணிகையர் கோலங் காணாதொழிக' வென்று மாதவி கூறியபடி அவள் பருவமடைந்தவுடன் அவளை யாது செய்வதெனச் சித்திராபதி மாதவியிடம் வினவுகிறாள். உடனே மணிமேகலையின் கோதைத்தாமம் குழலொடுகளைந்து போதித்தானம் புரிந்தறம்படுத்துகிறாள் மாதவி. இதனால் சித்திராபதி மாதவியின் தாய்போல் நடந்தமைபுலனாகிறது.

மணிமேகலையிலோ சித்திராபதி குணமும் மாதவி குணமும் முழுதும் மாறுபடுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்றது. அவ்விழாக்காலத்திற் பண்டை வழக்கப்படியே ஆடுதற்பொருட்டு மணிமேகலையும் மாதவியும் வாராமையால் மனம் புழுங்கிய சித்திராபதி வயந்தமாலையை யழைத்து நீ மாதவிபாற் சென்று விழாவிற்கு வாராதிருத்தல்பற்றி இவ்வூரார் கூறும் பழிமொழியை அவளுக்குச் சொல்லிவா என்றனுப்பினள். ஊரார் பழிமொழியை யாதெனக் கவனிப்போம்.

வயந்தமாலை மாதவியிடம் சென்று,

"உன்னொ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்"

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
வோவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையுங்
கற்றுத் துறை போகிய பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது நாணுடைத் தென்றே
அலகின் மூதூ ரான்றவ ரல்லது
பலர்தொகு புரைக்கும் பண்பில் வாய்மொழி
நயம்பா டில்லை நாணுடைத்தென்"றுள்.

(மணி II 17—19 ; 30—36.)

இதனால் நாடகக் கணிகையர்க்குரிய நடனமெல்லாம் கற்றுத் துறைபோகிய மாதவி அரங்கேறி நடித்து நம்மை மகிழ்வியாமல் இவ்வாறு தன் குலத்திற்கு இழுக்காம் தவம்பூண்டாளென்றறிய விருப்பதால் மாதவி நடனத்திற்கு வாராமைபற்றியதே பயங்கொழுமாநகரமோர் வறியலாம். உன்னொடு இவ்வூருற்றதொன் றுண்டுகொல் என்றதனாலே மாதவி மட்டுமே தவவொழுக்கம் பூண்டவளாகக் காணப்படுகின்றாள். மணிமேகலை தவவொழுக்கம் பூண்டவளாகக் காணப்படவில்லை. ஏனெனில் எச்சுரை அவளைப் பற்றியில்லை. ஆனால் தவவொழுக்கம் பூணுவதற்காக அவள் தவவொழுக்கம் பூண்ட தன் தாயுடனேயே வசிக்கிறாள்.

மணிமேகலை அப்பொழுதுதான் பருவமடைந்ததாகத் தெரிய வருகிறது. ஏனென்றால், சித்திராபதி அவளைத் தன் வசப்படுத்திப் பொருள்தேட வெண்ணுகிறாள். அதனுடன் துறவுபூண்ட தன் மகள் மாதவியையும் கூடத் தன்வழிப்படுத்த முயலுகிறாள். பதி னெட்டாவது பாட்டில் மணிமேகலை அம்பலமடைந்ததை கேட்ட சித்திராபதி,

"மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது
நகுதக் கன்றே நன்னெடும் பேரூ
ரிதுதக் கென்போர்க் கெள்ளுரை யாயது" (8-10)

என்றதனால் மாதவி மட்டுமே தவவேடம்பூண்டிருந்ததை வலியுறு கிறது. மேலும், சித்திராபதி,

"மாதவி யீன்ற மணிமேகலை வல்லி
போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
உதைய குமர னுலகாள் வண்டின்
சிதையா வுள்ளஞ் செவ்விதி னருந்தக்
கைக்கொண்டு" (25—29)

என்றதனாலே அவள் எவ்வாறாவது பொருள்தேடு மாசையுடைய வளாயிருந்தாளென்பது தெளிவாகும். அவள் மணிமேகலையை யெப்படியாவது உதயகுமரன் தேரிலேற்றி வருவேனென்று சூள் செய்து அவனிடஞ்சென்று,

"நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
துதைய குமரனெனு மொருவன் டுனிஇய
விரைவொடு வந்தேன்" (58—61)

என்று கூறியதால் மணிமேகலை அப்பொழுதுதான் பக்குவ மடைந்தவளென்றும், அதனால் அவளின்ப நுகர உதய குமரனைத் தூண்டினளென்றும் அறியலாம். சித்திராபதி மணிமேகலையை நடிக்கச்செய்து ஆடவர்களை இழுத்து அவளின்பம் நுகர்வித்துப் பொருள் தேடவே அவளை அவள் தாயுடன் அழைத்தாளென் பது, அவளை உதயகுமரனிடம்,

"ஆடவர் காணா நல்லரங் கேறி
ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவில் அருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சம் கொண்டகம் புக்குப்
பண்டேர் மொழியிற் பயன்பல வாங்கி
வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை" (103—109)

என உரைத்தலால் விளங்கும். இதனால் மணிமேகலையும் மாதவியும் ஆடவாராதனாலேயே வருந்தி வயந்தமாலையைத் தூது போக்கினவளாவளென்றும், மாதவி ஆடவாராமை கருதியே வாராளெனென்றும் நன்கு தெளியலாம். ஆகையால் இவ்வேச்சுவை கோவலனிறந்த பிறகு சித்திரையிலாக இருக்கவேண்டும். சித்திராபதியோ உதயகுமானிடம் மணிமேகலையைச் சேர்க்க மிக முயன்றாள். உதயகுமான் தன்னிடம் ஆசை கொண்டிருந்தமை மணிமேகலையுமறிவாள். இது சுதமதியுடன் பூஞ்சோலை சென்றவிடத்து உதயகுமான் வருகிறானென்றறிந்த அவள்,

"சித்திரா பதியோ டுதய குமானுற்
றென்மேல் வைத்த உள்ளத் தானென
வயந்த மாலை மாதவிக் கொருநாட்
கிளந்த மாற்றங் கேட்டே னாதலின்" (மணி IV 79-82)

எனக் கூறுவதாலறியப்படும். அப்பொழுது அவளைப் பெறமுடியாது அவன் சித்திராபதியால் அவளை யடைவேனென்று போகிறான். இவ்வாறு முன்னும் முயன்ற உதயகுமாரனையே சித்திராபதி பின்னரும் தூண்டி அவளைத் தன்தேரிலேற்றிவரச் சொல்லுகிறாள். அவன் அவள் சூழ்ச்சியிற் போயவன் மடிந்தமையும் அதனால் மணிமேகலை சிறைப்பட்டுப்பின் அரசமாதேவியிடமுள்ளாளென்பதையுமுணர்ந்து பொருளாசையால் அவளை மீட்டும் தன் வீட்டிற் கிட்டுவா வெண்ணி அரசமாதேவியிடம் செல்கிறாள். சென்றவள் "நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை என்மனைத் தருக" என வேண்டுகிறாள். அரசன் மனைவியோ தவவொழுக்கத்திற் கருத்துடைய மணிமேகலை உன் எண்ணப்படி உன் வீடு வாராளென்கிறாள்.

இதுகாறு மாராய்ந்தவற்றால், சித்திராபதி பணப்பேய் பிடித்தவளென்றும், அதனால் துறவுபூண்ட மாதவியையும் அவளுடன் கூடியிருந்து அப்பொழுதுதான் பருவமடைந்திருந்த மணிமேகலையையும் தன்வழிப்படுத்திப் பொருள்தேட முயன்றாளென்று மறியலாம். இத்தன்மையள் மணிமேகலை கூறும் சித்திராபதி. ஆனால், சிலப்பதிகாரங் கூறும் சித்திராபதியோ இத்தன்மையளல்லள். அவள் தன்னுடன் கூடியிருந்த மணிமேகலை பருவமடைந்ததைக் கண்டு மாதவர் பள்ளியடைந்து அங்கிருந்த முண்டிதக்கோலத்தளான மாதவியிடம் "உன் மகள் பருவமடைந்தாள்," "தலைக்கோ லானசான் பின்னுள ளாகவும், குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார், யாது நின்கருத் தென்செய் கோவென" (சிலப். XXX. 20—22) உரைக்கின்றாள். இதனால் மணிமேகலை கூறும் சித்திராபதியும் சிலப்பதிகாரம் கூறும் சித்திராபதியும் குணத்தானும் செயலானும் மாறுபடுகின்றமை காண்க.

இனி மணிமேகலையின் செய்தியை யாராய்வோம். மேற்கூறியவாறு சித்திராபதி சொல்லக் கேட்ட மாதவி தன் மகளை,

"வருகவென் மடமகள் மணிமேகலை யென்
றுருவி லாளன் ஒருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்."

(சிலப். XXX. 24—28)

கண்ணகி கோயில் கொண்டதற்கு முன் இவ்வாறு மணிமேகலை கூறவில்லை. "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை, அருந்தவப் படுத்தலல்ல தியாவதும், திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாள்" (மணி. II. 55—57) என்றும், "அணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய—தாயோ கொடியள்" (III. 149—150) என்றும், "ஊழ்தருதவத்தள் சாப சரத்தி" (V. 16) என்றும், "தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த" (VII. 13) என்றும் காணப்படுபடிகளால் அவள் பொதுவாகத் தன்னம்மையுடனிருந்து பரத்தைமைத் தொழில் விடுத்துத் தவவழிப்பழகினவ

ளாவள் என்பது அறிய இருக்கின்றது. ஏனென்றால் அவள் கச்சிக்குப்போன பிறகே "தவத்திறம் பூண்டு தருமங்கேட்டுப், பவத்திற மறுகென........நோற்றனள்." (XXX. 263—264)

மேலும் மணிமேகலா தெய்வம் "சுதமதி தன்னைத் துயி லிடை நீக்கி..........மணிமேகலையாம், அதிசான்முனிவ னற வழிப்படூஉ-மேதகு முதிர்ந்த திளங்கொடிக் காதலின்" என்றும், "ஏதமில் நெறிமக ளெய்திய வண்ணமு, முரைப்பாய் நீயவள் பின்றிற முணரும்" என்று முரைத்ததை நோக்கின், மணிபல்லவம் போனபொழுதுதான் மணிமேகலை அதிசான் முனிவனற வழிப்படும் ஏதமுதிர்ந்து அவ்வேதமில்நெறி யெய்தியவளாவ ளென்றறியலாம். ஆனால் அவள், சிலப்பதிகாரம் கூறும் வண்ணம் கூந்தல் களைந்து தவ வழிப்பட்டிலள். ஏனெனில் பலவிடத்தும் 'மதுமலர்க் குழலியொடு' (III. 16) என்றும், 'மதுமலர்க்குழலாள் மணிமேகலைதான்' (V. 92) என்றும், 'மையமலர்க்குழலி' யென்றும், (XII. 5), 'நறுமலர்க்கோதாய்' (XII. 56) என்றும், 'தோட்டலர்க்குழலியை' (XX. 13) என்றும் 'மதுமலர்க் குழலி' (XXI. 4) 'தோட்டலர்க் குழலி' (XXI. 10) யென்றும் 'நறுமலர்க் கூந்தல் நங்கை நீயும்' (XXVI. 62) என்றும் மணிமேகலையிற் கூறப்படுதலினாலே வஞ்சிபோய்க் கண்ணகியை கண்டு கச்சிபுகும்வரை அவள் குழலுடனேயே இருந்தவளாவள். ஏதோ இவள் சிறப்பித்தழைக்கப்படுகிறாள், உண்மையில் இவளுக்குக் கூந்தல் இல்லையென்றால் அது பிழை. என்னை? மணிமேகலாதெய்வம் அவளை மணிபல்லவத்து விட்டபொழுது விழித்தெழுந்த அவள் தந்தையை நினைத்துக் "நாற்றலைக் கூந்தல் குலைந்து பின்வீழ, ஆற்றினள் கூவி யழுதன ளேங்கி" (VIII. 36—37.) என்றதனால் அவள் மதுமலர்க்குழலியாகவே யிருந்தனள். கச்சியில் அறங்கேட்டிருந்தபொழுதுகூட அவள் கூந்தல் களைந்தமை கேட்கப்படவில்லை. இதனுற் சிலப்பதிகாரங் கூறும் மணிமேகலை வேறு, மணிமேகலை நூல் கூறும் மணிமேகலை வேறு என்றறியலாம். சிலப்பதிகாரம் கண்ணகி கோயிலடைவிற்கு முன்னரே மணிமேகலை குழல்களைந்து புகாரில் தவவழிப்

பட்டாளென்கின்றது. மணிமேகலை நூலோ கச்சியுக்குக், கண்ணகி கோயில் கொண்டதற்கு வெகுநாள் கழித்துத் தவவழிப்பட்டாளென்றும், மணிமேகலையை ஆடலுக்கழைத்தது போலவே மாதவியையும் சித்திராபதி ஆடலுக் கழைத்தாளாகையாலும் ஊரார் மாதவி ஆடவாராமைபற்றி ஏசினாராகையாலும், மணிமேகலை நூல் முழுவதும் கூந்தல் களையாதிருந்தமை காணப்படுதலினாலும் மாதவியும் கூந்தல் களையாமலே இருந்தவளாவள். மேலும் அவள் கூந்தலிலாதிருந்தமை மணிமேகலையிற் கேட்கப்படவில்லை. இதனால் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கொள்கையானும் மாறுபடுகின்றன.

மேற்குறித்த ஆராய்ச்சியால் மணிமேகலைநூலிற் காணப்படும் செய்திகள் சிலப்பதிகாரத்திற்கு முற்றும் மாறுபடுகின்றமை தெளிவாகிறது.

மணிமேகலை கூறும் காவிரிப்பூம்பட்டின விழா முதலிய செய்திகள் கண்ணகி கோயில் கொண்டதற்குச் சிலவாண்டுகளுக்கு முன் அதாவது கோவலன் மாண்ட மறுசித்திரையிலே நடந்தன போலக் காணப்படினும் அதற்கு மறுசித்திரையிற் புகாரழிந்தபின் கண்ணகியை மணிமேகலை வணங்குகின்றாளாகையால் அதற்குள் கண்ணகி கோயில் கொண்டு சிலவாண்டுகளாயின போலவும் செய்திகள் உள்ளன. இவ்வாறு சிலப்பதிகாரத்துக்கு முழுதும் மாறுபட்டுள்ளமையால் இளங்கோவடிகளுக்குக் கோவலன் வரலாறுரைத்த சாத்தனாரால் மணிமேகலை யெழுதப்படவில்லை. அவர் மணிமேகலையை இளங்கோவடிகள் கேட்டார் என்பது பிழை. அவர் தமக்குப்பெருமை கருதி அவ்வாறெழுதியவராவர். இளங்கோவடிகள் சாத்தனார் முன்னிலையிற் சிலப்பதிகாரத்தை யரங்கேற்றினரென்பதை யறிந்த மணிமேகலையாசிரியர் இளங்கோவடிகள் முன்னிலையில் மணிமேகலை அரங்கேற்றப்பட்டதெனப் பிழை கூறினர். இளங்கோவடிகள் மணிமேகலை துறவைப் பாடவெண்ணிச் சாத்தனாரிடம் சொல்ல அவர் முன்னரே அதைப்பாடி முடித்து விட்டதாகக் கூறுகிறதொன்று அடியார்க்கு நல்லார் கூறுதற்கு இரண்டு நூலினும் சான்றுகளில்லை. ஆகையால் ஆசிரியர்

திருவள்ளுவர் பெயரானெழுந்த ஞானவெட்டியைத் திருவள்ளுவர் பாடினரென வழங்குவது போலவே மணிமேகலையும் சாத்தனர் பாடினரென்று கூறி அதனுடன் அவர் பாடியமை பற்றி ஒரு கதையும் கட்டி வழங்குவாராயினர். அதைக்கேட்டறிந்த அடியார்க்கு நல்லார் அதை யெழுதியவராவர்.

சிலப்பதிகாரத்துக்கு முந்தியநூல் மணிமேகலையாயிருப்பின் அதிற்காணப்படும் உதயகுமரன் சாவும் புகாரழிவும் சிலப்பதிகாரத்திற் காணப்படாமை வியப்பே. சோழ பாண்டிய விலங்கையரசர் செயல்களை யெல்லாம் கூறும் சிலப்பதிகாரம் இவை உண்மையில் அதன்முன் நடந்திருக்குமேல் இவற்றைக் கூறுதிராது. மேலும் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்கு முந்திய நூலென்றல் அதில் கண்ணகியை மணிமேகலை வணங்கினளென்ற செய்தி காணப்படுவதால் அச்செய்தி கண்ணகியை வணங்கினவரை யெல்லாம் கூறும் சிலப்பதிகாரத்திலும் காணப்படல் வேண்டும். அவ்வாறு சிலப்பதிகாரம் கூறவுமில்லை. ஆகையால் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்குச் சில நூற்றண்டுகளுக்குப் பிந்திய நூலென்பது அங்கையின் நெல்லிக்கனியாகிறது. சிலப்பதிகாரத்தைப்போலல்லாமல் மணிமேகலையில், பல வடசொற்கள் விரவியுள்ளன; அதன் நடையும் மிகமாறுபட்டுள்ளது. சிலப்பதிகாரக்காலத்து வடமொழி தமிழோடு விரவவில்லை. மணிமேகலைக் காலத்தோ வடமொழி தமிழோடு மிகுதியும் விரவி விட்டது. சிலப்பதிகாரக் காலத்து மதப்போரில்லை, மணிமேகலையின் காலத்தோ மதப்போர் காணப்படுகிறது; அதன் ஆசிரியராகிய சாத்தனரொன்பவரோ மதப்போரில் ஈடுபட்ட பௌத்தராகக் காணப்படுகிறர். அவர் தம்காலத்துப் பௌத்த மதம் குன்றுவது கண்டு இந்நான்முகத்தால் அதைத் தாங்கலாமென எண்ணி இதை யெழுதியவராவர்.

இதுகாறுமாராய்ந்தவற்றல், சிலப்பதிகாரத்துக் காணப்படும் சாத்தனரால் மணிமேகலை யெழுதப்பெறவில்லை யென்பதும் சிலப்பதிகாரத்திற்குச் சிலநூற்றுண்டுகளுக்குப் பிற்பட்ட நூலே மணிமேகலை யென்பதும் இனிது புலனாகின்றன.

உ

ஓம் சிவம்.

ஓவியமும் தமிழரும்.

திருவாளர் மு. வே. மா. உலக ஊழியர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், பூளைமேடு.

*ஓவியம் என்னும் சொல் பண்டைத்தமிழ் மொழி. ஓவியம், ஓவம், ஓவு என்பன ஒரு பொருட் கிளவிகள். இவ்வோவியம் என்னும் சொல் பலவகை வண்ணங்களாலும், வட்டம் கோணம் முதலிய வடிவங்களாலும் அழகுபெற அமைக்கும் உருவத்தைக் குறிக்கும். இதனைக் கைத்தொழில் என்று கூறுப; கையால் எழுதப்படும் தொழிலாதலின். அது பொருந்தாது; என்னை? கையினால் எழுதுதல் மாத்திரை அமையாமல் பலகலையும், பல கலைக்கும் அறிதல் வேண்டுமாதலானும், அவை அறிந்தோன் எழுதிய ஓவியங்களே பாராட்டப்படுகின்றன ஆதலானும், அவை யறியார் எழுதிய ஓவியங்கள் அஃதின்மையானும் என்க. எனவே, ஓவியம் கல்வி என்னும் துறையினும், கைத்தொழில் என்னும் துறையினும் அடங்குமாறு அறிக. ஓவியம் கல்வி, கைத்தொழில் என்னும் இருதுறைகளில் ஒருவாறு அடங்குமேனும் அவை இரண்டும் ஓவியத்தில் அடங்கும் என்று துணிந்து கூறலாம். பின்னர்க் கூறியதனுல் ஓவியத்தை நிலைக்களனாகவும், அவை இரண்டினையும் அதனிடத்துவதியும் பொருள்களாகவும் கூறலாகும். அவ்வாற்றை விளக்குதும்.

கல்வி இருவகைத்து. ஒன்று எண். ஒன்று எழுத்து. கல்வியை எத்தனை வகையாகப்பிரிக்கினும் அவ்வாறு பிரிக்கப் பட்ட அவை எல்லாம் இவை இரண்டினுள்ளே அடங்கும் என்

* கிழி முதலிய ஐந்து பெயராய் ஓவியத்தை உணர்த்தும்.

பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. அதனான் அன்றே "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்." என்னும் முதியாள் மொழியும், "எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்னும் பெரியான் மொழியும் எழுந்தன. இவ்வாறு இரண்டாய் வகைப்படுத்தப்பட்ட கல்வி ஓவியச் சுவரில் எழுதிய ஓவியமாக நின்று நிலவுகின்றது. எவ்வாறெனில் வகைப்பட்ட அவை இரண்டும் வரிவடிவில் எழுத்துக்களுள்ளும், அவ்வெழுத்துக்களால் ஆகிய சொற்களுள்ளும், கிற்றுக்களுள்ளும் அடங்க அவை ஓவியங்களுள் அடங்குகின்றன ஆதலான் என்பது. பரிபாடலுள் "எழுத்து நிலை மண்டபம்" என்னும் சொற்றொடருக்குப் பரிமேல் அழகர் சித்திரமண்டபம் என்று பொருள் கூறியிருத்தலும் இதனை வலியுறுத்துதல் அறிக.

எண்ணும், எழுத்தும் தாம் வரிவடிவம்பெறுத மிக்க பழங் காலத்து உள்ளத்தின் தொழிலாகிய எண்ணத்திலும், உறுப்பின் தொழிலாகிய மெய்ப்பாட்டுக்குறியினும், வாயின் தொழிலாகிய மொழியிலும் நிகழ்ந்தனவே ஆதலின் அவை நிலையியகளாக அது ஆதல் எவ்வாற்றான் இயையுமெனின்! நன்று சொன்னாய் எண்ணும், எழுத்தும் என்னும் அவ்விரண்டும் முறையே பண்பி லும், தொழிற் பண்பிலும் அடங்குகின்றன. ஐம்பொறி உதவி யால் அறியும் காட்சி அளவானும், அக்காட்சியளவையின் துணை கொண்டு அறியும் கருதலளவையானும், பிற அளவைகளினாலும் காணப்படும் பொருளிடத்து உள்ள, இயற்கையாய், தான் இருத் தற்கு இடமாகிய ஒரு பொருள் இறப்பினும் தான் இறவாது மற்றைப் பொருள்களிற் கலந்து நிற்பதாய் ஐம்பொறிக்காட்சிக்கு அப்பாற்பட்டதாய் உளக்காட்சிக் கெளிதாய் இருப்பது எண். இவ்வாற்றான் எண் பண்பினுள் அடங்குதலை அறிக. எழுத்து தொழிற் பண்பென்பது வெளிப்படை. பொருள் இன்றேல் பண்பும், தொழிலும் இல. பொருள் உண்டேல் பண்பும், தொழிலும் உள. பொருளின் சாயலே ஓவியம். பொருளைக் கண்டவிடத்து அப்பொருளின் சாயலாகிய ஓவிய உருவம் அகத் தில் தோன்றுதலானும், ஓவியத்தைக் கண்டவிடத்து அவ்வோ வியத்தால் உணர்த்தப்படும் பொருளின் உருவமும், பொருளும்

அகத்தில் உலாவுதலானும், பொருளும், ஓவியமும் வேற்றுமை நயத்தான் வேறெனத் தோன்றினும் ஒற்றுமை நயத்தான் ஒன்றே. ஆதலின், எண்காணப்படுதற்கும், கல்வி தோன்றுதற்கும் இடமாகிய பொருளுக்குக் கூறிய இலக்கணங்களை மாட்டேற்றுதல் என்னும் நூற் புணர்ப்பினால் அப்பொருளொடு வேறல்லாத ஓவியத்திற்குக் கூட்டுக. அவ்வாறு கூட்ட அத்தகைய பழங்காலத்தும் ஓவியக்கடலுள்ளே எண்ணும், எழுத்தும் என்னும் முத்தும், மணியும் மறைந்து கிடந்தன என்பது தெற்றென விளங்குதலை அறிக.

இனி, ஓவியம் கைத்தொழில் எல்லாவற்றிற்கும் தாயாகும். எவ்வாறெனில் அறைபுதும். கைத்தொழில் சிற்பத்தொழில், நூற்றற்றொழில், நெய்தற்றொழில், தச்சுத்தொழில், கம்மத்தொழில் முதலியவாய் மிகப்பலவாம். இத்தொழில்கள் புரிதற்கு உரிய கருவிகள் எல்லாவற்றையும் ஈன்றது ஓவியமே. ஆதலின் இத்தொழில்கள் எல்லாவற்றையும் ஈன்றது ஓவியமே. ஆதலால் ஓவியத்தாய்க்கு இவைகள் பிள்ளைகளானவாறு காண்க. மிகச் சிறந்த சிற்பம் ஓவியத்தின் திரிபென்றே கூறலாம். ஏனை ஒவ்வொரு தொழிலும் ஓவிய அடிப்படையின் மேல் எழுந்த மாளிகைகளாகும். சிற்பத்தொழில் புரிவோர்க்கே ஓவிய அறிவு வேண்டும். ஏனைத்தொழில் புரிவோர்க்கு ஓவிய அறிவு வேண்டியதில்லை. ஆதலின் எல்லாத் தொழில்கட்கும் ஓவியத்தொழில் தாயாவது யாண்டை எனின்? அறியாது கூறினாய், ஓவியம் கண்ணால் பார்க்கப்பட்டுக் கையால் எழுதப்படுவதுமாத்திரமன்று. கண்ணால் பார்த்ததோர் பொருளை மனத்தால் பலமுறை நினைத்து உள்ளத்தில் அமைத்துப் பின்னர் வெளிப்படுத்தப்படும் ஓவியமும், செவியால் கேட்டு உள்ளத்தில் அமைத்துப் பின்னர் உருவாக்கப் படும், ஓவியமும், உள்ளத்தால் உள்ளி உள்ளிப் பின்னர் உரைக்கும் ஓவியமும் எனப் பலவகைப்படும். ஆதலால் அமையும் என்பது.

மரக்கொல் தச்சன் ஒருவன் ஓவியம் எழுதத்தெரியாதவனாயினும் ஒரு பொருளின் அமைப்பைப்பார்த்து அதுபோல்

மாத்தால் உருவம் செய்கின்றான்; கருங்கைக்கொல்லன் ஒருவன் ஓவியம் எழுதல் அறியானாயினும் ஒரு பொருளைப் பார்த்து இரும்பை முரித்துக் கொன்று தான் பார்த்த பொருள் போன்ற தோர் உருவத்தைச் செய்கின்றான். பணக்காரனொருவன் இம் முறையில் அமைத்துத் தால்வேண்டுமென்று கூற நன்கலந்தருங் கம்மியன் ஒருவன் அவன் கூறியாங்குப் பொன்னும், மணியும், முத்தும் கொண்டு நன்கலஞ் செய்கின்றான். புலவன் ஒருவன் தன் புலமை மிகுதியால் உள்ளத்தால் உள்ளி உள்ளிக் கவியாகிய ஓவியத்தைச் செய்கின்றான். இவ்வாற்றான் ஒவ்வொரு தொழிற் முறைபில் அமரும் ஒவ்வொருவரும் ஓவியப்புலவரானமையறிக. இவர்களுட் பாவலன் கைத்தொழிலாளி அல்லனேனும் ஓவியப் புலவனாகக் கருதப்படுகின்றானாதலின் ஈண்டெடுத்துக் கூறினும்.

"இடிகொள் வேழத்தை எயிற்றுடன் எடுத்துடன் விழுங்கும்
கடிய மாசுணம் கற்றறிந் தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதத் தேறப்
படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பன பாராய்."

இச் செய்யுளை என் ஓவியம் என்று கூறலாகாது. இச் செய்யுளையாத்த கம்பனை ஓவியப்புலவன் என்று ஏன் கூறுதல் ஒன்றாது. இதனை நாம் படிக்கும் போது இடியும், அதன் முழக்கமும்; யானையும் அதன் பிளிறலும், மலைப்பாம்பும், அப் பாம்பு யானையை ஒருசேரத் தங்குதடையின்றி விழுங்கலும், அப் பாம்பின் கொடுமையும்; நூல்களும், நூல்களைக் கற்றறிந்த புலவரும், அவரடக்கமும்; துறவுப்பெரியாரும், அவரது நோன்பி னாற்றலும், அப்பெரியாரிடத்து அன்புபூண்டு கிடக்கும் பாம்பின் அடக்கப்பணியும், அப்பெரியாரின் செலவும், அவர் செல்லும் படிகளும், மலையும், பக்கமலையும், சீதையும் இவற்றையெல்லாம் அவட்கு இராமன் காட்டுமாறும் நம்முளத்தகத்தும், நங்கண் முன்னும் நிற்கின்றனவலவோ? இங்கு காட்டியவற்றான் கருத லளவையால் உணர்தற்பாலவாய அடக்கம் முதலியவும் இச்செய் யுட் படத்தில் விளங்குகின்றவாறு கண்டுமகிழ்க. இவ்வளவை

யும் சுருங்கிய நாலடியளவுள்ள ஒரு நெடிலடிக்கிழியில் அமைத்துக் காட்டும் இவ்வோவியப் புலவரின் மாட்சி என்னே! என்னே!

"உயிராவணம் இருந்து உற்றுநோக்கி, உள்ளக்கிழியின் உரு எழுதி உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத்தந்தால் உணரப் படுவாரோடு ஒட்டிவாழ்தி"

இச்செய்யுளைத் தமிழ்நாடு செய்த நோன்பினால் தமிழ் மொழியில் அருளிய பெரியார், உருவம் எழுதுங்கால் எழுதுவோரும், கருவியும், எழுதப்படும் பொருட்கிடமாகிய இடமும் அசைந்தால் ஓவியம் அழகுகெடும் ஆதலின் உயிராமல் இருந்து எழுதக் கூறி யாணையிட்டிருக்கின்றனர். அது நிற்க அது பின்னர் கூறுதும். இவ்வடிகள் தம்முள்ளத்தில் கடவுள் வடிவினையும் அசைவின்றி எழுதியமை பெறப்படுகின்றதன்றோ? இத்தகைய பெரியாரும் ஓவியப்புலவர் என்று தம்மை ஒத்துக்கொள்ளுவாராயின் ஓவியப் புலவருள் ஏனையோரை அடக்குதல் குற்றமாக ஆகவுங் கூடுமோ என்னும் ஐயம் தோன்றுகின்றவாற்றை அறிஞர் அறிக.

இனி, யாண்டாண்டு அழகு காணப்படுகின்றதோ ஆண்டாண்டெல்லாம் ஓவியம் உண்டென்று அறிக. இதுவரை, ஒவ்வொரு தொழிலிலும் ஓவியத்தொழில் கலந்து நிற்கின்றதென்று கூறினும். இனி, ஓவியத்தின் இயற்கைப் பெருமையினைப்பற்றிச் சில கூறுவாம்.

ஓவியம் பார்ப்பவரின் கண்ணையும், கருத்தையும் கவருகின்றது; அவ்வழியே அவர்களுடைய உள்ளத்தில் உவகை அரும்புவிக்கின்றது. அதனால் அவர்கட்கு அது இன்பத்தை அளிக்கின்றது. இன்ப ஆக்கத்தால் துன்ப நீக்கம் அளிக்கின்றது. ஓவியத்தை உற்றுநோக்கிப் பழகிவந்தால் உள்ளத்தை ஒருவழிப் படுத்தல் கைகூடும் என்று பெரும்புலமை சான்ற மறைமலையடிகள் முதலிய புலவர் பெருமக்கள் கூறுவாராயின் ஓவியத்தின் பெருமையை எவ்வாறு எடுத்துரைத்தல் ஒல்லும். எடுத்துரைக்க முடியாதென்பதை ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாக் கடவுட்கு ஆயிரம் திருவுருவம் எழுதியும், அமைத்தும், வார்த்தும் தமிழர்

வழிபடுதலால் அறிக. என்னை? கடவுளது பெருமையை உரைக்க முடியாவாறு போல அக்கடவுளின் அருட்டிருவுருவினை விளக்கும் ஓவியத்தின் பெருமையையும் எடுத்துரைத்தல் முடியாதாகலான் என்பது. உரையாலும், உளத்தாலும், உணர்வாலும் பற்றப் படாத கடவுளையும் ஓவியத்தில் அமைக்குமிடத்து அவ்வோவியத்தின் பெருமை பெரிதே! பெரிதே! பல்லாயிரநாழிகைத் தொலைவி லுள்ள நாடுகளையும், மலைகளையும், கடல்களையும், நகரங்களையும், ஊர்களையும், மக்களையும், ஏனை உயிருடைப் பொருள்களையும், உயிரில் பொருள்களையும் ஓரிடத்தில் இருந்து கொண்டு எளிதில் உணர்வது ஓவியத்தினாலே என்றால் ஓவியம் எத்துணைச் சிறப் புடையது! எத்துணைச் சிறப்புடையது!!

இனி, இவ்வோவியத்தை வரையும் புலவன் எத்தகையன் என்பதனை ஆராய்வாம். சிறந்ததோர் ஓவியத்தைக் கண்ட விடத்து இவ்வோவியத்தைச் செய்தவன் எம் மகன் கொல்லோ' என்று வியப்புடன் அவனைக்காண நம் மனம் விழைகின்றது. இதனால் ஓவியப் பெருமை எல்லாம் ஓவியப் புலவன் பெருமை யாகவே கொள்ளப்படுதல் அறிக. ஒரு முழுவினை ஓவியன் வரைய வேண்டுமாயின் அம்முழுவின் அளவினையும், அமைப்பினையும், நிறங்களினையும், வார்க்கட்டினையும், அவன் கூர்ந்து அறிந்திருந் தால் அன்றி எவ்வாறு அதனை அவன் வரைதல் கூடும். ஒரு மரத்தினை ஒருவன் எழுதவேண்டின் அதன் கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள் முதலியவற்றை அவன் எவ்வளவு நுணுகி அறி தல் வேண்டும். மக்கட்குக் கூறிய உறுப்புக்கள் உடையராக இருப்பினும் தாம் வாழுமிடங்களின் தட்ப, வெப்பங்களால் பெரி தும் மாறுபாடுடையராய் வரும் மக்களை உருவத்தில் அமைக்குங் காலும், அவ்வொரு நாட்டுமக்களுள்ளும் எண்ணிறந்த வேறு பாடுடையராய் வரும் தனித்தனி மக்களை உருவத்தில் அமைக்குங் காலும் அவன் எவ்வளவு உற்றுணரும் ஆற்றல் உடையனும் இருத்தல் வேண்டும். எனவே ஒவ்வொரு பொருளையும் தனித் தனி அறிந்து அப்பொருளை முன்னர் உள்ளத்தில் எழுதிப் பின் னர்க் கையினால் எழுதும் ஆற்றல் வாய்ந்தவனாகின்றான். எனவே அவன் நுண்ணுடலும், பருவுடலும் ஒற்றுமையுடையனவாய்

வருவழியொழுகுகின்றன. ஒரு பொருளின் உறுப்பியல்பினை நாற்புலவன் ஒருவன் வாயினால் உரைத்துணர்த்துகின்றான். ஓவியப்புலவன் ஒரு பொருளின் உறுப்பியல்பினைக் கையினால் எழுதி உணர்த்துகின்றான். நாற்புலவன் கேட்பவர்க்கு உணர்த்துகின்றான். ஓவியப்புலவன் பார்ப்பவர்க் குணர்த்துகின்றான். நாற்புலவனுக்கும் ஓவியப்புலவனுக்கும் இவ்வளவே வேறுபாடு. உணர்த்தும் முறையில் நாற்புலவனுக்கும் ஓவியப் புலவனுக்கும் ஒற்றுமையிருத்தல் உணர்க.

ஓவியப் புலவன் ஒவ்வொரு பொருளின் உடலமைப்பையும் நிறமுதலியவற்றையும் அறிந்திருத்தலேயன்றி மாநிலவளாக அறிவும், வரலாற்று அறிவும் வாய்க்கப் பெற்றவனாய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்டுப் பொருள்களையும் வரைய வேண்டியவனாயிருத்தலின் அவனால் மாநிலவளாக அறிவு இன்றியமையாமல் வேண்டப்படுவதொன்றே எனினும் வரலாற்று அறிவு வேண்டியதன்றாம் பிறவெனின், அற்றன்று. என்னை? வினை உயிரில் பொருளையும், உயிருடைப் பொருளையும் போலானுய் மனிதன் நாளும், நாளும் அறிவு வளரப்பெற்று வருகின்றானாதலின் அறிவின் குறைவுக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப அவன் ஒழுக்கங்களும், உடலமைப்பும் பிறவும் மாறுபடுகின்றன, ஆதலின் அறிதல் வேண்டும் என்பது. இத்துணை அறிவுடைமை வாய்க்கப் பெறலேயன்றி ஒவ்வொரு உயிர்ப்பொருளின் எண்ண அலைகளையும் தான் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறு அறியும் மதுகை இல்லாமையான் அன்றே இக்காலத்து ஓவியர் சிலர் ஓடாப் பொன்னையும், ஓட்டையும் ஒப்பநோக்கும் பெரியாராகிய திருநாவுக்கரசுநாயனார்க்குப் பொற்கலங்கள் அணிவிக்கின்றனர். பொன்னைத்துறந்த பெரியார்க்குப் பொற்பணிகளை வலிந்துபூட்டி எழுதப்பட்ட அவ்வுருவத்தில் தெய்வத்தன்மை யாண்டிருக்கும்.

"இடையறுப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின் படையறுத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்தநெஞ்சும் நடையறுப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல் தொடையறுச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்"

இச் செய்யுட்கிழியில் அப்பெரியார் திருவுருவமும், திருவரு ளும் விளங்குகின்றனவா? அப்பொருந்தா ஓவியத்தில் அவை விளங்குகின்றனவா? அந்தோ! அந்தோ! இன்னார் நந்தமிழ் நாட்டுத் திருநெறிப்பெரியாரை வாயினால் வைது பேசும் மாக்களி னும், தாள்களிற் பிதற்றும் தண்ணளியிலரினும் தமிழ் நாட்டுக்குத் தீங்கிழைக்கின்றனர். என்னை? அவ்வாறு வையும் மாக்களும், எழுதும் மூகையரும் இம்மையிற் றுன்பமும், மறுமையில் நிரய மும் எய்துகின்றனரேயன்றிப் பெரியார் உருவத்திற்கும், அவ் வுருவைப்போற்றும் அடியார்க்கும் அவ்வுருவமைநளும் அருளுக் கும் யாதும் தீங்கு செய்திலர். ஓவியர் முன்னவை பெறுவாரல்ல ரேனும், பின்னவை புரிகின்றனராதலின் என்க.

இனி, ஓவியர், மக்களுட் சிறந்தார்க்குக் கூறிய பண்புடை மையுள் ஒன்றாகிய பொறுமைக்கு உறைவிடமாதல் வேண்டும்; ஒருபொருளைப் பலமுறை ஆய்ந்தறிதற்கும், அப்பொருளின் உரு வைத் திருத்தமாய் எழுதுவதற்கும் அது இன்றியமையாமல் வேண்டப்படுதலின். இனி, மெய்யுணர்வென்னும் வீட்டிற்கு வாயிலாகிய ஒருமையுள்ளம் உடைய ஓவியனே சிறந்தவனாவான். இதனால் அன்றே "பல்லூழ் இவை இவை நினைப்பின் வல் லோன் ஓவத்தெழு தொழில் போலும்" (பரிபா—உக.) என் னும் மொழிகள் தோன்றலாயின. மன ஒருமையுடன் ஒருவன் எழுதிய ஓவியங்களை பார்ப்பவரை மன ஒருமையில் இருத்தும். அவ்வாறு மன ஒருமையுடன் எழுதப்படாத ஓவியங்கள் பார்ப்ப வரின் உள்ளங்களை அலைக்கும். எவ்வாறெனின், காதலனும், காதலியும் ஒரு நினைவுடன் மணந்து பெற்ற ஒருவர் இவ்வுலகில் எல்லாரானும் நன்குமதிக்கப்படுகின்றனர். எல்லாருக்கும் நல் லறிவு ஈகின்றனர். அது போல உளமும், கண்ணும், கையும் ஒருவழிப்பட்டு எழுதுதலினால் உளதாகிய ஓவியம் தன்னைப் பார்த்தவரை மகிழச் செய்விக்கின்றது. அன்றியும் உள ஒருமை யும் அளிக்கின்றது. ஓவியப்புலவனைத் தந்தையாகவும், ஓவி யத்தை மகவாகவும் கூறுதல் பொருந்தும். இக்கருத்தான் அன்றே சிற்பிகளைப் பிதா என்று கூறுப. அன்றியும் தூய

உள்ளத்தின் வழி உளதாகிய சொல் தூயதாமாறு போலத் தூய உள்ளம், கண், கைகளால் உளதாகும் ஓவியமும் தூய்மை அளித்தலைப் பெறுதல் இயல்பன்றோ? தூய்மை என்றது ஈண்டு உள ஒருமையை. அதன் வழியே அது தோன்றுதலின். விதை ஒன்று விதைக்கப் பயிரொன்று தோன்றுதன்றோ? தந்தை இயல்பு மைந்தன் இயல்பு என்றுரைத்தல் நந்தண்டமிழ் மொழிக்கு உண்டன்றோ.

இனிச் சிறந்த ஓவியப்புலவன் ஒருவாற்றல் படைத்தற் கடவுளோடும் ஒப்புமையுடையனாகின்றான். படைத்தற்கடவுள் உடலைப் படைக்கின்றான். ஓவியப்புலவனும் உடலைப்படைக்கின்றான். அன்னோனும் உயிரைப்படைத்திலன். இன்னோனும் உயிரைப்படைத்திலன். இவ்வாயில் ஏற்றுமை மிக்கிருத்தல் காண்க. அன்னோன் உயிர்படைக்கின்றான் என்று பெரியோர் கூறுகின்றவாறு எனின், உயிர்களை மறைத்துப் பின்னர் விடுத்தலை நோக்கி அவ்வாறு கூறுகின்றனர் என்க. இது ஒருவகை மரபாம். மறைத்துவிடுத்தலை "விழுங்குயிர் உமிழ்ந்தனை" (புறம்பயம் தேவாரம் திருமுறை 2) என்னும் பெரியார் வாக்கான் உணர்க. நிற்க. இருவருக்கும் வேறுபாடு என்னை எனின் அன்னோன் படைக்கும் உடல் உயிரின்துணையால் இயங்குகின்றது. உயிர் உறைதற்கு இடமாகின்றது. இன்னோன் எழுதும் ஓவிய உடலுக்கு அவை இல.

இனி, கடவுளையும் ஓவியப்புலவன் என்று ஓர் பெரியார் "உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்து இருக்கும் உயிர் ஓவியமே" (மீனாட்சியம்மை பிள்ளை—வருகை) என்று கூறியுள்ளமை அறிந்து மகிழ்க. இதனுள் ஓவியம் எழுதும் புலவன் எழுதும் முறையையும், அன்னோனே தன் ஓவியத்தைக் கண்ணிமைக்காது பார்த்து மகிழும் மகிழ்ச்சியையும், அவன் அசைவற்று உள ஒருமையுடன் இருக்கும் நிலைமையையும் அழகொழுக மொழிந்துள்ளமை நோக்கி மகிழ்க. உயிர்ப் பொருட்களின் மெய்ப்பாட்டினையும் ஓவிய உருவில் காட்டும் ஆற்றல் ஓவியப்புலவனுக்குளதெனின் அன்னோன்

சிறப்பினை அறிவார்யாரே. இது காறும் கூறியவாற்ருல் ஓவியப் புலவன் இயல்பும், அவன் பெருமை இத்துணை என்று வரையறுக்க முடியாமையும் சொல்லப்பட்டன.

இனி, இவ்வோவியக்கலையைத் தமிழ் நாட்டார் எவ்வகையில் அறிந்திருந்தனர், இப்பொழுது எவ்வகையில் அறிந்திருக்கின்றனர் என்பன ஒரு சில கூறி இக்கட்டுரையை முடிக்குதும். பண்டைத் தமிழர் ஓவியக்கலையை நன்கு உணர்ந்திருந்தனரா? இல்லையா? என்பனவற்றிற்குச் சான்ருக உள்ளன அம்மக்களுள் அறிவுடையாரால் செய்யப்பட்ட பழந்தமிழ்ச் செய்யுட்களேயாம் என்பதனை யாரும் மறுர். பிறவும் உளவேனும் அத்துணைச் சிறப்பில. பண்டைத் தமிழ்ப் புலவர் ஓவிய உலகிலேயே நன்கு வதிந்திருந்தனர். மிக்க பழம் பாட்டுக்களில் ஓவியத்தைப்பற்றிக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவராகிய சித்தலைச் சாத்தனர் தாம் இயற்றிய மணிமேகலையில், ஓவியச் செய்வினை அமையப்பெற்றுள்ள சக்கரவாளக் கோட்டம் என்ற ஒரு நிலையம் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தது என்று கூறியுள்ளார். அதனுள் ஓரிடத்து

> "நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்
> நல்லவழி எழுதிய நலங்கிளர் மாடமும்."

எனக் கூறியுள்ளார்.

இதனுள் எழுதும் இயல் நலம் அமைய "நல்லவழி எழுதிய"து என்று கூறியது நாம் உற்று நோக்குங்கால் நமக்கு எவ்வளவு அழகு பயக்கின்றது. "வூரா நற்றேர் ஓவியப் படுத்து" எனக் கூறியுள்ளார். இதனுள் வூரப்படாமல் அசைதலின்றி நிறுத்தப்பட்ட தேரை அசையாத ஓவியத்திற்கு உவமை கூறியுள்ளார். இனி, ஓவியங்கள் விளக்கமான சுண்ணத்தால் எழுதப்பட்டிருந்தன என்றும், அவ்வோவியங்களை எழுதியவர் சதுரப்பாடு கெழீஇயவராயிருந்தனர் என்றும், மக்கள் அவ்வோவியங்களைக் கண்டு அவற்றின் அழகில் ஈடுபட்டுக் களிகூர்ந்து நின்றிருந்தனர் என்றும் பொருள்பொதிய

"தெருள் கதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்" என்று கூறியுள்ளார்.

சோழன் மகன் உதயகுமரன் எனப்படுவான் மணிமேகலை யின்னுருவின் சாயலைப் பளிக்கறைப்புறத்துக் கண்டு அதனைச் சித்திரக்கைவினை என்று பிறழக்கருதினன் என்று கூறியருளினார். இதனால் அக்காலத்துச் சித்திரங்கள் நிறைந்த அழகுடையனவாய் வரையப் பட்டிருந்தன என்பது பெறப்படுகின்றதன்றோ?

"குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி" எனவாய்

திற்கும் ஓர்மலர் வனம்

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவாறு"

போல் தோன்றும் என்று கூறுவாராயின் ஓவியத்தைப் பண்டைத் தமிழர் கொள்ளைகொண்டு நுகர்ந்தனர் என்று கூறுதல் பொருந்தும். அதனால் அன்றோ அறியாதோர் புதிய பொருளைக் கண்ட விடத்துப் 'பொல்லாத ஓவியமோ' என்னும் பழமொழி தமிழ் நாட்டில் நிலவுகின்றது. (பொல்லாத ஓவியம்-துளைபடாத ஓவியம்) சுருங்கக்கூறின் இச்சித்தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஓவியக்கடலுள் மூழ்கிக் கரை தெரியாராய் மயங்குகின்றார் என்று கூறுதல் பொருந்தும்.

இனி, சங்கப் புலவருள் ஒருவர் பெயர் பெருஞ்சித்திரனார் என்று வழங்கப்பட்டதென்றால், தமிழர் ஓவியக்கலையில் எவ்வளவு பற்றுடையராயிருந்திருத்தல் வேண்டும்.

இனி, கனவிற்பாடிய நல்லிசைக்கபிலனார் செல்வக்கடுங்கோ *வாழியாதனைப் பாடிய பாட்டினுள் தமது உயிர்த்தோழனு யிருந்து இறந்தவனாகிய பாரி என்னும் வள்ளலைச் சிறப்பித்துக் கூறுமுகத்தான் அவன் வீட்டினை "ஓவத்தன்ன வினைபுனை நல் லில்" (பதிற்-6) எனக் கூறியுள்ளார். இதனுள் பாரியின் வினை புனை வீட்டிற்கு ஓவியத்தை உவமையாகக் கூறியிருத்தல் நம்மாற் பாராட்டும் தகுதியுடையதாகும். குடக்கோ இளஞ்சேரல் இரும் பொறை என்னும் சேர அரசனைப் பெருங்குன்றூர்க்கிழார் என் னும் புலவர் தாம் பாடியபோழ்து அவனது உருவமுருடைய நகரத்திற்கு ஓவியத்தை உவமையாக "ஓவத்தன்ன உருகெழு நெடு நகர்" (பதிற்—88) எனக்கூறியுள்ளார். இனி இவ்வாறே சான்றோர் ஓவியத்தைப்பற்றிக் கூறியுள்ள பகுதிகளை எடுத்து எழுதிக்கொண்டிருப்பின் இக்கட்டுரை விரிந்து செல்லுதலின் இவ்வாறு காட்டுதலை நிறுத்துகின்றும்.

இவ்வாறு பழங்காலத்து ஓவியம் சிறப்புற்றிருந்தமைக்கு ஏற்றவான ஓவிய இயல்களைத் தம் மகத்துடைய நூல் சில இருந் திருத்தல் வேண்டும். அத்தகைய நூல்கள் கடற்கோளால் இறந் தொழிந்தவேனும் ஓவியச் செந்நூல் என்னும் ஒரு நூல் மாத்திரம் சங்ககாலத்திற்குச் சற்று முன்னரும் இருந்ததாக அறிகின்றோம். "ஓவியநூலுள் நிற்றல் இருத்தல், கிடத்தல், இயங்குதல் என் னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள" (சிலப். வேனில்-25, 26) என்று கூறுதற்கண் ஓவிய நூலென்று ஒரு நூல் உண்டென்று அடியார்க்கு நல்லார் வரையும் உரையும், "ஓவியச் செந்நூல் உரைநூற்கிடக்கையும்" என்னும் மணிமேகலையடியும் இதனை வற்புறுத்துகின்றன. இவற்றுள் சாத்தனார் ஓவியச்செந்நூல்

* இவன் இயற்பெயர் செல்வக்கடுங்கோ என்பது வெளிப்படை. ஐங்குறு நூற்று முப்பத்தில் முதலடிமுழுதும் 'வாழி ஆதன்' என்னும் அடைமொழிகள் கூறப்பட்டிருத்தலானும், அம்மொழிகள் சேர அரசனைக் குறித்தலானும் "கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் எழுதி" என்றாற் போல் அவ்வரசனுக்குப் பெயராயினமையைத் திருத்தல் கூடுமோ என்று எண்ண இடமுண்டு. எனினும் அந்நூலாலும், அந்நூல் உரையாலும் 'ஆதன் அவினி' என்னும் சேரன் அறியப்படுகின்றான். இருவரும் ஒருவராக இருத்தல் கூடுமோ என்னும் ஐயமும் உதிக்கின்றது.

என்றும்: அடியார்க்கு நல்லார் ஓவியநூல் என்றும் கூறியிருத்தல் ஆராய்ச்சிக்குரித்து. மணிமேகலை என்னும் பொருட்டொடர் நிலைச்செய்யுள் சீத்தலைச் சாத்தனரால் செய்யப்பட்டது என்பதனை யாரும் மறார். அன்னர் ஓவியச்செந்நூல் என்று ஒன்று இருந்தது என்று கூறியிருப்பாராயின் அவர் காலத்தினும் பலநூற்றாண்டு கட்கு முன்னர் அந்நூல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு கலைக்கு நூர் இயநூல் எழுதப்பட்டிருக்கிறதென்றால் அக்கலை தோன்றி எத்துணையோ ஆண்டுகட்குப் பின்னரே அந்நூல் எழுதப்படல் வேண்டும் என்று மொழிநூலாசிரியர் மொழிகின்றனர். எனவே, அந்நூல் தோன்றுவதற்கு எத்துணையோ ஆண்டு கட்கு முன்னரே ஓவிய அறிவு தமிழ் நாட்டில் தலை சிறந்து நின்றது என்பது போதருகின்றதன்றோ? என்னை? பிறிதோர் மொழியில் நின்றும் மொழிபெயர்த்திருத்தல் கூடாதோ எனின்? அவ்வாறு கூறல் வழுவாம்; நறுந்தமிழ் மொழிகளால் பெயரிடப் பட்டு ஓவியச் செந்நூல் என்று வழங்கியமையின் என்க.

இவ்வாறு ஓவியக்கலையில் சிறப்புற்றிருந்த தமிழ் மக்கள் வழித் தோன்றியாருள் இது பொழுது அக்கலையில் பெயர் பெற்றவர் யாரேனும் உளராவெனின், ஒருவரும் இலர் என்று துணிந்து கூறலாம். ஓவியத்தொழிற்றுறை போகிய தமிழர் சிலர் இக் காலத்து உளராலோ எனின் பழங்காலத்தை நோக்க இக்காலம் எத்துணையோ பங்கு அறிவுடையாரைப் பெற்றிருக்கின்றது. ஆதலின் அது அமைவுடைத்தே. எனினும், அத்தகைய பழங் காலத்து இக்கலைத்துறையிற் சிறப்புற்றிருந்த தமிழ் மக்களின் வழித்தோன்றல்களை அத்தகைய பழங்காலத்து இக்கலைத்துறை யிற் சிறப்பிலாயிருந்த பிறநாட்டு மக்களின் வழித்தோன்றி யவரோடு பொருத்தி நோக்கின், நந்நாட்டு மக்கள் எத்துணையோ மடங்கு பின்னிறங்கியுள்ளார். ஆதலின், தமிழ் மக்கள் இக் காலத்து அத்துறையில் இன்னும் முன்னேற்றமடையவில்லை என்று கூறுதல் வழுவன்று. கலாசாலைகளில் ஓவிய ஆசிரியர்க்கு அளிக்கும் ஊதியமும் அவர்கட்கு அளிக்கும் மதிப்புமே, தமிழ் மக்கள் இக்கலையைப் பேணவில்லை என்பதற்குச் சான்றுபகரும்.

தமிழ் மக்கள் தமிழ் ஓவியக்கலைக்குப் புத்துயிர் அளித்து வாழ வேண்டுமாறு எல்லாம்வல்ல தமிழ்த்தாயின் இணையடி பரவுகின்றாம்.

திருச்சிற்றம்பலம்.

ஒரு கல்வெட்டு.

திருவாளர், பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

வேனிற்கால விடுமுறையில் யாத்திரையாகத் திருவெஞ்சமாக் கூடலூர் சென்றிருந்தபோது அங்குக் கடவுள் கோயிலிலுள்ள கல்வெட்டுகளிற் சிலவற்றை யெழுதிக்கொண்டு வந்தேன். அவற்றுளொன்று இங்குத் தெரிவிப்பது.

இது, விகிர்தேசப் பெருமான் திருக்கோயிற் கோமுகியின் கீழ்பாற் சுவரிலுள்ளது. முன்பொருகால் நந் தமிழ்ப் பொழிலில் வெளிவந்த இவ்வூர்க் கல்வெட்டைப் போலவே இதுவும் கோனேரின்மை கொண்டான் தந்த ஓலையாகும்.

இதிலிருந்து அக்கால வழக்கங்கள் சில அறிந்து கொள்ளலாம். 'ஒருகால், இக்கோயிற் பொருளைக் கடன்கொடுத்து, ஒரு ஊருக்குப் பொது நன்மைக்கிருந்த ஒரு நிலம் ஒற்றிகொள்ளப் பட்டதென்றும், சிலநாளிற் கடன்கொண்டோர் பொருளைத் திருப்பிக்கொடுத்துவிடவே கோயிலூழியக்காரர் அப்பொருளுக்கு வேறு நிலம் வாங்க வேண்டுமென்று அரசனை வேண்டிக் கொண்டார்களென்றும், அரசனும் அதற்கிணங்கி, அப்பொருளைத் தன் அரசியல் வேலைக்காரர்க்குரிய பொருளிற் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்கு விடப்பட்டிருந்த நிலத்தில் இருவேறு இனமான விளைநிலத்தை அப்பொருளுக்கு ஈடாகக் கொடுத்தானென்றும், அவ்வாறு கொடுத்த நிலமும் ஏனை நிலங்கள் போல எவ்விதவரியு

கரிஷ்றி முந்நாட்டாகவே எண்ணப்படக் கொடுத்தானென்றும், அந்நிலம் ஆறுகலம் விதைப்பாடு உடையதென்றும் அதன் விலை நாற்றிருபது அச்சு (ரூபாய்) என்றும் இது தெரிவிக்கின்றது.

இக் கல்வெட்டு வருமாறு:—

சுவரிலுள்ளபடி.

1 ஸ்ரீராஜகேஸரி

2 ஸ்வஸ்தி வத ஸ்ரீதிரிபுவனசசககரவததி கோனெரினமைகொணட

3 ரன அருளுடையார திருவெஞ்சமாககூடலநாயனாரகோயில

4 றதேவகனமிகளுககு நமமொலை குடுத்தபடியாவது இநநாய

5 ஞாஸ்ரீபணடாரத்தில அசு இடுவிககோம சொழசருபபெதி
மஙகலத

6 துணையாமைக காணி ஒறறி கொணடு அவ்வூராளகள
அவவசசுஸ்ரீப

7 ண்டாரததுககு ஒடுககினமையில இவவசசுக்கு நிலங்கொள
ளவெவறு

8 யமென்று இத்திருக கொயிலற தெவகனமிகள. நமமை
வந்து அறிவி

9 ததமையில இபபொருள ஸ்ரீயககபழஞசலாகை அச்சு நாற
றிருபது

10 ம நமசசுககு*கத நஙகனமிகளாககக கொணடு இவவசசு
கடக்கு விடடாங

11 லமாவது விரசொழ மணடலத்து வெங்காலநாடு உழுந்தன
குறிச

12 சியான முடிகொணட சொழபுரதது நமககுத திறப

13 பாயச செயகப பறறாய வருகிற இருபததைசயவெலிநிலத

14 தி-ஆனைகாழிப பொயயிற கிழ ஆனைகாழி நெலவிதைகாற
செயநெலவிதைத முககலம இபமுககலத்து

குறிப்பு:—10-ஆம் வரியில் உடுக்குறியிட்டவை தவறியெழுதினவையா யிருத்தல் வேண்டும்.

15 க்கு எலலையாவது கிழககெலலைககுபபறறு ஆனைகாழிக கவறகு மேறகுககுடிபபறறி ஆனைகாழிககுத தெறகு தாழ

16 தாழஞ செயவாரதநிறகவறகுக கிழககு தாழஞ செயவாரத நிறகவறகு வடக்கு இநநானகெலலைககு உளபட

17 ட நெலவிதை முககலமும ஒரு பூததரையில காடடெழு மாயில நெலவிதைத முககலததுககு எலலை

18 யாவது குடிபபறறில மசககனுககு மேககு கிழககு நோக கிப பொனகவறகு வடககு வடகூறறிலகாட

19 டெழுமாபபொனகவறகுக கிழககு வடகூறறிலகாட டெழு மாவுககுத தெறகு இநநான்கெலலைககுடப

20 டடநெலவிதை (......) நெலவிதை அறுகலததுககும முடி கொண்ட சொழபுரததில வநத இறைகழி புரவுசிறறு

21 யம எலலைவயுகவை எபபெறபபடடதும செனனிவெட்டி செயயாரகவும முநநீர் துறநது உழுவாரகளாகவும இநநெலவிதை

22 த அறுகலததுககும அறற விலையால ஸ்ரீயககிபழுஞசலாகை அசசு நாறறிருபது மநஙகநமிகளுர கெறககைக கொண

23 டமையில இநநெலவிதை அறுகலமும யாணடு பதினமூன் றுவதுகார முதல சுறறுப புலபொகாமுற்றாடடுநெ

24 தவதானமாகக குடுததமையிற சநதிராதிததவரை † செம்பி லுஞ சிலையிலும வெடடிககொள்ளப பெறுவதாகநம

25 ஓலை குடுததொம இவை எலலாமவலல சொழ மூவெந்த வே ளான எழுதது இவைவ வாணராய தெவனெழுததுஇ

20-ஆம் வரியில் உடுக்குறியிட்ட விடத்திலுள்ளதைப் படிக்க முடியவில்லை. அவ்விடத்தில் ஆநாரல் என்ற எழுத்துக்கள் இருக்கின்றன.

24-ம் வரியில் † இவ்விடத்தில் 'செல்வதாக' என்ற சொல் இருக்கவேண்டும்.

26 வைரியாக‡ நாகதேவன எழுதது இவைகெதாரய தெவ
னெழுதது இவைகளபபாயராயன எழுதது இவை
காடுவெட்டி எழுதது.

இதன் திருத்தம்.

ஸ்ரீராஜகேசரி

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி, கோனேரின்மை கொண்டான், ஆளுடையார் திருவெஞ்சமாக்கூடல் நாயனார் கோயிற் றேவகன்மிகளுக்கு நம் ஓலை கொடுத்தபடியாவது :—

இந்நாயனார் (1) ஸ்ரீ பண்டாரத்தில் அச்சு இட்டு விக்கிரம சோழச் சதுர்ப்பேதி மங்கலத்து ஊராண்மைக் காணி ஒற்றிக்கொண்டு அவ்வூராள்கள் (2) அவ்வச்சு ஸ்ரீ பண்டாரத்துக்கு ஒடுக்கினமையில், இவ்வச்சுக்கு நிலங்கொள்ள வேண்டுமென்று இத்திருக் கோயில் (3) தேவகன்மிகள் நம்மை வந்து அறிவித்தமையில், இப்பொருள் (4) ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு நூற்றிருபதும் நம்மச்சுக்கு (5) நங்கன்மிகள்
கைக்கொண்டு இவ்வச்சுகட்கு விட்டநிலமாவது :—

வீரசோழ மண்டலத்து (6) வேங்கால நாட்டு (7) உழுந்தன் குறிச்சி யான (8) முடிகொண்ட சோழ புரத்து நமக்குத் (9) திறப்பாய்ச் (10) சேவகபற்றாய் வருகிற இருபத்தைவ் வேலி நிலத்தில், (11) ஆனைகாழிப்போய்யில், கீழ் ஆனைகாழி கெல்விதை கார் செய் நெல் (12) விதைமுக்கலம்.
இம் முக்கலத்துக்கு எல்லையாவது :—

கிழக்கெல்லைக்குப் பற்று ஆனைகாழிக் (13) கவற்கு மேற்கு; குடிப்பற்றி ஆனைகாழிக்குத் தெற்கு; (14) தாழஞ்செய்வாரத்திற் கவற்குக் கிழக்கு; தாழஞ்செய்வாரத்திற் கவற்கு வடக்கு இந்நான் கெல்லைக்குட்பட்ட நெல் விதைமுக்கலமும்,

---

26-ம் வரியில் ‡ இவ்விடத்தில் சிதைந்தவை 'ராய' என்ற எழுத்துக்களாக இருக்கலாம்.

(15) ஒருபூத்தரையில் (16) காட்டெழுமாவில் நெல்விதை முக்கலத்துக்கு எல்லையாவது :—(17) குடிப்பற்றில், (18) மசக்கலுக்கு மேற்கு ; கிழக்கு நோக்கிப்போன கவற்கு வடக்கு ; வடகூற்றில், காட்டெழுமாப்போன கவற்குக் கிழக்கு ; வடகூற்றில், காட்டெழுமாவிற்குத் தெற்கு இந்நான் கெல்லைக்குட்பட்ட நெல் விதை (முக்கலம். இந்நெல் விதை முக்கலமும் ஆனைகாழில் நெல் விதை முக்கலமும் ஆக) நெல் விதை அறுகலத்துக்கும் முடிகொண்ட சோழபுரத்தில் வந்த (19) இறைகழி, புரவு, சிற்றுயம், எல்லை, உகவை யெப்பேர்ப்பட்டதும் (20) சென்னிவெட்டிச் செய்யாராகவும். (21) முந்நீர் துறந்து உழுவார்களாகவும்.

இந்நெல் விதை யறுகலத்துக்கும் அற்றவிலையால் ஸ்ரீ யக்கி பழஞ்சலாகை யச்சு நூற்றிருப்பதும் நங்கன்மிகளுக்கேறக் கைக்கொண்டமையில், இந்நெல் விதை யறுகலமும் யாண்டு பதின் மூன்றுவது கார் முதல் (22) சுற்றுப்புல்போகா முற்றூட்டும் தேவதானமாகக் கொடுத்தமையிற் சந்திராதித்தவரை (செல்வதாகச்) செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளப்பெறுவதாக நம்மோலை கொடுத்தோம்.

இவை (23) எல்லாம்வல்ல சோழமூவேந்த வேளான் எழுத்து.

இவை வாணராயதேவன் எழுத்து.

இவை (24) தியாகராய நாகதேவன் எழுத்து.

இவை (25) கேதராய தேவன் எழுத்து.

இவை களப்பாயராயன் எழுத்து.

இவை காடுவெட்டி எழுத்து.

இவற்றின் விளக்கம்.

(1) ஸ்ரீ பண்டாரம்—திருக்கோயிற் பொருள் வைப்பு (Treasury) (2) அச்சு—நாணயம் (ரூபாய் போன்றவை); (3) தேவகன்மிகள்—கோயிற் றொழில் புரிவோர்; (4) ஸ்ரீ யக்கிபழஞ் சலாகை—அக்காலத்து வழங்கிய நாணயம். இன்றும் சிலவிடத்தில் வீராக்கியன்பணம் என்று பழைய நாணயம் காணப்படுகிறது. இது அதுவாயிருக்கலாம் (5) நக்கன்மிகள்—அரசாங்க உத்தியோகத்திலிருப்பவர். (6) வெங்காலநாடு-கொங்குமண்டலத்தின் உண்ணாடுகளில் ஒன்று, கரூர்த்தாலூக்காவின் பெரும்பாகம். உழுந்தன் குறிச்சி—இப்பெயருடைய வூர் இப்போது காளிக்குறிச்சியென வழங்குகிறது. (8) முடிகொண்ட சோழபுரம்—இப்போது முடிகோணம் என வழங்குகிறது. இவ்வூரில் இத்திருவெஞ்சமாக்கூடற் கோயிலுக்குரிய மானியமாக இன்றைக்கும் 10 எக்கர்ப் பரப்புள்ள நிலம் இருக்கிறது என்கின்றனர். (9) திறப்பு—தெரியவில்லை.* (10) சேவகப்பற்று—அரசாங்க உத்தியோகருக்குச் சம்பளத்துக்காக விடப்பட்ட மானியம். பல வூர்களில் சில நிலங்கள் இவ்வாறு அழைக்கப்படுவதை இன்றைக்கும் காணலாம். (11) ஆனைகாழிப் போய்—விளைநிலத்தின் பெயர். ஆங்கில ஆட்சியார் நிலத்தை யளவு செய்து அவற்றை ஒன்று இரண்டு (1-ஆம் நெம்பர் 2-ஆம் நெம்பர்) எனக்குறித்து வழங்குதற்கு முன் ஒவ்வொரு நிலமும் ஏதேனும் ஓரோர் காரணத்தால் ஒவ்வொரு பெயரிட்டு வழங்கிவந்த தென்பது யாவருமறிவர். சடையப்ப முதலியார் ஊராகிய வெண்ணெய்நல்லூரில் கழுநீர் பாய்ந்தான் என்னும் பெயரோடு ஒரு செய் இன்றும் இருப்பதாகவும் அது கம்பர் பாடிய

" முட்டி லட்டில் முழக்குற வாக்கிய
நெட்டு லைக்கழு நீர்கெடு நீத்தம்தான்
பட்ட மென்கழு கோக்குப டப்பைபோய்
கட்ட செங்நெலின் காறுவ வர்த்துமே

---

* இனாம், சுரோத்திரியம் முதலாயவற்றின் வேறுபட்டு அரசியலாருக்கு இறைபெறுவதில் முழு உரிமையும் உடைய நிலங்கட்கு, இவ்விடங்களில், திறப்பு எனும் பெயர் வழங்கப்பெறுகின்றது.

என்னும் செய்புளை நினைப்பூட்டுவதாகவும் காலஞ்சென்ற பின்னை, நாராயணனார் எழுதியிருப்பது இங்குக் கருதத்தக்கது. (12) விதை முக்கலம்—முக்கல நெல்விதைத்தற்குரிய நிலம். நில அளவைக் கூறும் போது நீட்டலளவையாற் கூறாமல் 'ஒரு கோட்டை விதைப்பாடு,' 'ஒருபடி காடு' 'இரண்டுவள்ளப்பூமி' என இன்றும் வழங்கிவருவது காண்க. (13) கவல்—இன்றும் ஊர்களில், விளைநிலத்தைச் சார்ந்து, சிறுவரிவிதிக்கப்பட்டுள்ள நிலங்களுக்கு இப்பெயர் உண்டு. இங்குக் குறிக்கப்பட்டதும் அதுவே போலும்? (14) தாழஞ்செய்வாம்—இதுவும் நிலத்தின் பெயர். (15) பூத்தரை—இதுவும் விளைநிலத்தின் பெயர். (16) காட்டெழுமா—'மா' நீட்டளவைப் பெயர். (17) குடிப் பற்று—கல்வெட்டு 15-ஆம் வரியில் 'பற்று ஆனைகாழி' என வருவதால்—அரசாங்கத்தார் வசம் இருக்கும் நிலத்திற்குப்பற்று என்றும், அதனைக் குடிகள் பற்றிப்பயிர்செய்யின் அதற்குக் குடிப்பற்று எனவும் வழங்கியதாதல் வேண்டும். (18) மசக்கல்—தெரியவில்லை. (19) இறைகழி, புரவு, சிற்றாயம், எவ்வை, உரவை—இவை வெவ்வேறு வரிகளின் பெயர்கள். (20) சென்னி வெட்டிச் செய்யாராகவும்—இன்னதென விளங்கவில்லை. (நம் ஆணையை மீறிச் செய்யலாகாது என்பதாயிருக்கலாம்.) (21) முந்நீர் துறந்து உழுதல்—ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் இவற்றைப் பாய்ச்சுவதனால் ஒருவரியுமிறுக்காமலே உழுதல். முந்நீர் என்பது இவ்விடத்தில் வரியைக் குறிக்கிறது. முற்றூட்டாய்த் தேவதானமாகக் கொடுத்தமையால் இவ்வாறு எழுதப்பட்டது. இக்கல்வெட்டு 23, 24-ஆம் வரிகளைப் பார்க்க. (22) சுற்றுப் புல்போகா முற்றூட்டு என்று வருமிடமெல்லாம் சுற்றுப்புல் போகா என்று அடை கொடுத்துக் கூறப்படுவதைப் பல கல்வெட்டுகளிலும் காணலாம். (23) எல்லாம் வல்ல மூவேந்த வேளான்—அரசாங்கத்துப் பல்வேறு வேலைகளையும் மேற்பார்த்தற்குப் பலதுறைகளிலும் வல்லவனாய் (All round Master) இருத்தல் பற்றி இப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். (24, 25) தியாகராய நாகதேவன், கேதராயன்—திருவெஞ்சமாக்கூடலூர்க்கருகில், நாகன்பள்ளி, கே(த்)தன்பட்டி யென்ற ஊர்கள் இன்னும் இருக்கின்றன. இவைகள் அவர்களுக்கு விட்ட ஊர்களாயிருக்கலாம்.

௨

கடவுள் துணை.

உயிர்ப்பண்புகளும் வீட்டு வாயில்களும்.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், தமிழ்ப்புலவர்,
சலகண்டபுரம்.

வியக்கத்தக்க பல்வகை வண்ணம், வடிவு, தோற்றங்களை யுடைய உடல்களை நிலைக்களமாகக்கொண்டு வாழும் உயிர்க்குலங்களனைத்தும், தத்தம் வாழ்விற்கு அவ்வப்போது தேவையாகும் பல பண்டங்களைத் தேடுதற்காக, நாடோறும் ஓயாது தொழில் புரிகின்றன. அத்தொழிலும், அவற்றின் மனவிருப்பத்தை ஒட்டி நிகழ்வன. விருப்பமும், இஃது ஆக்கம் தருவது, இஃது கேடு பயப்பது என அறிந்து, ஆக்கப்பாட்டிற் கேற்றதெனத் துணிந்த பொருட்களின்மேல் நிகழ்வது. ஆகவே, அறிவு, விழைவு, செயல் என்னும் இம்மூன்று பண்புகளும் எல்லாவுயிர்கட்கும், மேன்மேலுயரும் வாழ்க்கை நலத்திற்கென்றே நன்கு அமைந்துள்ளன வென்பது புலனாகின்றது. ஓர் சிற்றெறும்பு, தனக்கேற்ற இரை இஃது, இன்னவிடத்திலுள்ளதென அறிந்து, அதைத் தன்பாழியிற் சேர்த்து உணவு கிடையாக்காலை உண்ணலாமென விரும்பித் தனது குறிய கால்களை விசையாய்ப் பெயர்த்து ஊர்ந்து செல்கின்றதன்றோ? அங்ஙனமே நாமும் காலத்திற்கேற்ப வேண்டுவனவற்றை அறிந்து, அடையவிரும்பிப் பலமுயற்சிகள் புரிந்திட்டு கின்றேம். உண்மை காணும் நோக்கத்தோடு ஊன்றிக் கருதுவோமாயின், அறிவு முதலிய இம்முப்பண்புகளும், நம்முடல் நலம் பெறுதற்கு மாத்திரமல்ல, இவ்வுலகவின்பங்கட்கு மிகமேலாகிய

ஒப்புயர்வில்லா மெய்ப்பேரின்ப மளித்து நம்மை ஈடேற்றும் சீரிய கருவிகளாகப் பயன்படுவனவுமாமென அறிந்து மகிழலாம். அஃதியாங்ஙனம்? என்பதனை விரித்துக் கூறவே இக்கட்டுரை எழுகின்றது.

நிறுத்த முறைக்கும் இயற்கைக்கும் பொருந்த அறிவைக் குறித்து முதலிற் சில கூறுதும். அறிவித்தற்குரிய சிறந்த கருவி யாது? அஃது அறிவு என்பதொருதலே. இவ்வறிவின் வழித் தாய் நாம் அறிந்து கொள்ளும் வகைகளை நோக்குவாம். அவை அடியிற் காட்டியவாறு பலதிறத்தன.

(க) புறத்தேதோன்றும் உலகப்பொருட்களையும் அவற்றின் தன்மைகளையும் விழிமுதலாய ஐம்புலன்களினுதவியால் கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும், நேரேயறிவது. (இது காட்சியளவை.)

(உ) ஒன்றோடொன்றியையுடையவாகக் குறி பிறழாது பிணைந்து தோன்றும் பொருட்களுள், ஒன்று காட்சிப்பட்டு, ஏனையது புலப்படாவழியும், பிரிந்து நில்லாதவற்றினியற்கை குறித்து, அக்காணாத பொருளையும் கண்டாலொப்ப உண்டெனக் கருதி அறிதல். (இஃது கருதலளவை.)

(ங) ஒருவர் கூறும் வாய்மொழியைச் செவியுற்றாயினும், ஓர் நூலைக் கற்றாயினும், முன்னறியாதவற்றை நம்பி அறிதல். (இஃது ஆகமவளவை எனப்படும்.)

(ச) இங்ஙனம், கற்றகேட்டவற்றுள் உரைக்கப்பெறாத வற்றையும் சொல்லுங் குறிப்பு நோக்கி யுணர்ந்துகோடல். (இஃது அருத்தாபத்தியளவை என்பது.)

(ரு) அறியப்படாத பொருளை அறிவித்தற்கு அறியப்பட்ட பொருட்களுள் ஒப்பாவதொன்றை எடுத்துக்காட்டி "அஃது இதனை யொக்கும்" என உணர்த்த உணர்தல். (இதனை உவமை யளவை என்ப.)

இங்ஙனமே பல அளவைகள் மேலுமுளவேனும், மேற் குறித்தவற்றுளொன்றா யடங்குதலின் வேறு விரித்தல் வேண்டா.

இவ்வகை அளவைகளாற் பொருட்டன்மைகளைப் புலப்படுத்தும் அறிவு, உயிரினோடொருங்கியைந்துள்ளதேயாம். சிலர், புத்தி யென்னும் உட்கருவி (அந்தக்கரணங்)களுள் ஒன்றினை அறிவாமெனா மயங்குவர். அது பொருந்தாது. மனத்தால் நினைந்த பின்னரோ அறிவு தலைப்படுமென்பதுந் தவறே. என்னை? இஃதொன்று தோன்றுகின்றதெனப் புலன்களின் வழித்தாய்ப் பொதுக் (நிர்விகற்பம்) காட்சியால் அறிந்த பின்னரே இஃதி யாதோ? என மனம் நினைவதன்றி ஒன்றனையும் அறியாமுன்னம் நினைப்பு நிகழாமை காண்டலின். இவ்வாற்றால் அகக்கருவி நான்கனுள் ஒன்றாம் புத்தியும், உயிர்க்கேயுரிய சிறப்பியல்பாகிய அறிவும் வெவ்வேறாதல் பெற்றாம்.

இவ்வரும் பெறலுண்மையைத் தமிழுஞ் சைவமும் தலைசிறந்தோங்க உதித்தருளிய நம் மெய்கண்டசிவம் "—நீ சத்தாகாய் பேசின்—அசத்தாமலை—நீ யறிந்து செய்வினைகணீ யன்றி வேற சத்தாத்—தானறிந்து துய்யாமைதான்." என்றோதியருளிய வாற்றாலும், மாதவச் சிவஞானயோகிகள் மாபாடியத்துள் "ஆன்மா, அந்தக் கரணங்களோடு இயைபின்றி, உடனாய் நிற்கும் வித்தை மாத்திரையே கருவியாகக் கொண்டு வாயில்களை அதிட்டித் தவ்வழி யெதிரே தோன்றுவதோர் விடயத்திற் பொதுவகையான் இஃதோர் பொருளென் றறிதலாகிய நிருவிகற்பக்காட்சி முற்பட நிகழுமன்றே! அதன் பின்னர் ஆன்மா, மனத்தை யதிட்டிக்க மனமானது சித்தமாய் நின்று இஃது யாதாகற்பாற்று? என ஒன்றைத் தூக்கிச் சிந்தித்துப்பின்னர் இஃது குற்றியாகற்பாற்று; மகனாகற்பாற்று; என ஒன்றைச் சங்கற்பித்தும், அஃதாமோ? அன்றோ? என ஐயுற்றும் நிச்சயித்தற்கேதுவாகிய வேட்கையை விளைத்து நிற்கும். அதன் பின் ஆன்மா, அகங்காரத்தை அதிட்டிப்ப அகங்காரமானது, குற்றியென்றாதல், மகனென்றாதல் ஒன்றைநிச்சயிப்பேன் நான், என்னும் அகந்தை விளைத்து நிச்சயித்தற்கண் முயலும் ஊக்கத்தை உண்டாக்கி அதற்கேதுவாகப் பிராணவாயு

வையும் இயக்கி நிற்கும். அதன்பின் ஆன்மா, புத்தியை அதிட்டிப்பப் புத்தியானது, இவன் மகன், இதுகுற்றி, இதுகுடம்; இது ஆடை என அவ்வப்பொருள்களைப் பெயர் சாதி முதலியன பற்றிச் சிறப்புவகையாற் றுணிதலாகிய சவிகற்பக்காட்சியே ஈண்டு நிச்சயித்தலெனப்படுமென்க." எனத் தமிழ்மணம் தெய்வச்சைவச் செவ்வியொடு கமழும் அமிழ்த வாக்கால் தெளிவுபெற விரித்தோதியருளியவாற்றானும் உணர்க. இங்ஙனம் ஒன்றைப்பொது வகை (நிர்விகற்ப)க் காட்சியாலுணர்த்தும் அறிவும், சிறப்பியல்பு (சவிகற்ப) விளங்கவறிவுறுத்தும் புத்தியும் ஒன்றுகாவென்றும், இவற்றுள் முதற்கணிறுத்த அறிவே உயிர்க்குரிய இயல்பாம் பண்பென்றும் ஐயமறத் தெளியப்படும்.

அறிவாலறிந்த பின்னர் அப்பொருட்களைப் பெறுமாறு வலிக்கும் நிலையே விழைவைத்தருமெனினும், அவ்விழைவும் முன்னில்லாத தொன்றன்று. அறிவேபோல விழைவும் உயிர்க்கியல்பாய பண்பேயாம். இவ்வுண்மை "இனி வித்தையான் ஞானசத்தி விளங்கி விடயங்களை அறியலுறும் ஆன்மாவுக்கு இச்சை நிகழ்ந்தன்றிப் போகநுகர்ச்சி செல்லாமையின், வித்தையினின்றும் தோன்றி, ஆன்மாவின் இச்சாசத்தியை விளக்கிப் புத்தி குணங்களின் அவைராக்கியமெனப்படும் ஆராக நிகழ்ச்சிக்கு எதுவாய் நிற்பது அராகதத்துவம்" என மாபாடியத்துக் கூறப் படுதலால் துணியப்பெறும்.

இங்ஙனம் அறிந்து விழைந்த பின்னர், காதலித்த பொருளைப் பெறுதற்குச் சுறுசுறுப்பாக முயலும் செய்கை தொடங்குகின்றது. இச்செய்கையும், உடலுறுப்புக்களின் தொழிற்பாடேயாயினும், அவற்றை அவ்வாறியக்கும் கருவியாய மிக நுண்ணிய இயக்கம் உயிர்க்கியல்பாகவுள்ளதாம். என்னை? எங்ஙனம் அறிவதற்கும் விரும்புதற்கும் ஏற்ற நுண்ணிய கருக்கள் உயிர்க்கியல்பாதல் துணித்துணரப்பெறுமோ அங்ஙனமே செய்கைக்கும் முதற்கருவுண்டென்கை தேற்றமாதலானும், அறிவு இச்சை செயலென்னுமிம்மூன்றும் ஒன்றன்பின்னொன்றாய் அடைவே தொடர்ந்து நிகழக்காண்டலானும், உயிர்க்கு இயல்பாக இயங்கும்

ஆற்றல் இவ்வழி உடலுறுப்புக்களை இயக்குமாறின்றாகலானும் என்க. இவ்வுண்மை "மாயையின் வயிற்றுண் மன்னி வரும் செயல் ஞான மிச்சை—யெயுமக் கலாதி மூன்று லேகதே சத்தி யெய்த்திங்—காயுமுக் குணங்க ளந்தக் கரணங்க ளாதி யெல்லாங்—காயமெய்த் தங்க ளாகிக் கலந்துட னிற்கு மான்மா" எனச் சிவஞான சித்தியாரினும்,

"இனிக், கலாதத்துவமாவது, மூலமலத்தின் மறைப்புண்டு சூனியம்போ லின்ற ஆன்மாக்களுக்குப் போகநுகர்ச்சியின் பொருட்டு மலசத்தியிற் சிறிதே நீக்கி ஆன்மாக்களுக்குக் கிரியா சத்தியை விளக்குவது." என மாபாடியத்தும் கூறப்படுதலால் அறியத்தக்கது.

இதுகாறும் கூறிப்போந்தவாற்றால், உயிர்கள் இயல்பாகவே அறிவு, விழைவு, செயல் என்னும் மூன்று சிறப்புப் பண்புகளையும் "ஓர் நறுமலரின் நிறமும், அதன்கட் பொதிந்த தேனும், அத னிற்றெழுன்றும் மணமும் போல"ப் பிரிவறப்பெற்றுள்ளன (மலரின் நிறம்போல அறிவும், தேன்போல விழைவும், மணம் போலச் செயலும்) என்றும், உயிர்களைப் பிணித்துச் சூழ்ந்துள்ள இருண்மலத்தால் இம்முப்பண்புகளும் விளங்கிப் பயன்தராமையின், பொருட்கடலாம் இறைவன் மாயையானுதவும் வித்தை அராகம் கலை என்னும் இம்மூன்று தத்துவங்களும் முறையே அறிவு, விழைவு, செயலென்னும் இப்பண்புகளை அவ்விருண் மலத்தைச் சிறிது நீக்குமாற்றால் விளக்கி யுதவுதலால் அவை உலக வாழ்க்கைக்குதவுவனவாகின்றன என்றும் விளக்கப்பட்டது.

இப்பண்பு மூன்றனுள் அறிவு, விழைவின் நிகழ்ச்சிகள், குறிப்பு மெய்ப்பாடுகளானும், செயல் ஒன்றும் காட்சிக்கு வெளிப் படையாகவும் பிறர்க்குப் புலனாம்.

உயிர்கட்குப் போலவே கடவுளுக்கும் இயல்பாக அறிவு, இச்சை, செயல், ஆற்றல் (சத்தி) உண்டெனச் சைவநூல் இயம்பும். உயிரும் இறைவனும் இம்முப்பண்புகளை இயற்கையாக உடைமையால் தம்முள் நிகராதல் செல்லாது. அறிவிக்க ஒன்றை

அறியும் இயல்பு உயிரினது: எவற்றையும் தானே அறியும் ஆற்றலியற்கை இறைவனது; தன்னலங்கருதுவது உயிரின்வேட்கை அனைத்துயிர்க்கும் அருள்சுரப்பது இறைவன் வேட்கை; சிறு தொழில் புரிவதுயிர்க்குரியது: முடிவிலாற்றல் இறைவனது ஆகலான். இறைவனது அளவிடற்கரிய அறிவு இச்சை ஆற்றல்களுக்கும் எனைத்தேவர்களுள்ளிட்ட எல்லாவுயிர்களின் அறிவு முதலியவற்றிற்கும் உள்ள வேற்றுமையைக்குறித்து நமது மணிவாசகப் பெருமானார், "அறுவகைச் சமயத் தறுவகையோர்க்கும்-வீடுபேறாய்நின்ற விண்ணோர் பகுதி—ஈடம்புரையுங் கிழவோன்." எனத் திருவாய் மலர்ந்தருளியதூஉம் காண்க. மேலும் "அவனுக்கிவனுமசித்தாமே." எனச்சித்தியாரினும், இறைவன் பெருமைக்கு முன் எல்லாவுயிர்களும் அறிவில் பொருட்கள்போற் சிறுமையுறுவன" எனத் தெருட்டப்பட்டது.

இனி, இவ்வறிவு முதலிய சிறப்பியல்புகளால் உயிர், வீடு பேறுறுதல் எவ்வாறென்பதனைக் கூறுமுன் நினைவு கூரத்தக்க தொன்றுண்டு. எல்லாவுயிர்களும், தம்மியற்கையறிவு காட்டுந் துறைகளில் விருப்பம் மூளப் பல்வகைப் பொருட்களைத் தேடியின்பந்துய்ப்பான் நாடோறும் மிக முயன்று எண்ணியவளவிற் பெருகவோ சிறுகவோ ஒருவாறு பெறினும், அவ்வளவில் அமையாது, பெற்றவற்றினும் மிக நல்லன உயர்ந்தனவென வேறு சிலவற்றைக் குறிக்கொண்டு, அவற்றையும் பெறுதற்கு எற்ற முயற்சிகள் புரிந்து இங்ஙனமே கடலலைத்துரும்பென அலைந்தலைந்து தளர்ந்து, இறுதியிலேனும் மன அமைதி பெறுமல், அந்தோ! கொன்னே மாய்கின்றனவே! இதற்கென்னே பொருட்டு? குறைவறப் பொருளுடையார்க்கும், இருநிலம் ஒருங்கு புரக்கும் ஒரு தனி வேந்தர்க்கும் மேலும் பலபொருட்களை அடைதற்கண் அவா நிகழுமெனின், அப்பாழ்த்த அவாத்தான், எதனைப்பெறின் அடங்குவதெனத் தெரிந்திலதே! இவ்வுலகந்தான், உயிர்களைக் கண்மயக்குறுத்திப் பற்பல பொருட்களைக் காட்டிக் காட்டி அலைத்துச் சலிப்புறச்செய்து அடையும் பேறு யாதோ? தனக்கோராக்கமுமின்றிப் பிறரை அல்லலுறுத்தும் அதன் குறிக்கோள் யாதாகும்? எனக் கவலையுடன் கருதுவோமாயின் ஒன்று புலப்

படும். அது, பகலவன் காயும் பாலை நிலத்தில், நண்பகலில், உண்ணும் நீர் வேட்டோர் முன்பு, நன்னீர்பெருகி நுரையுகவோடு வருவது போன்று தோன்றும் கானல்நீரே யன்ன இவ்வுலகப் பொருட்களை நம்பி அவாவுவோரும், அப்பேய்த்தேர் நீருண்டு நீர் வேட்கை தணிதல் எத்துணை மெய்ம்மையோ அத்துணை மெய்ம்மையாக அவாவடங்கப் பொருள்பெற் றமைகுவர் என்பதே. இவ்வாராய்ச்சியின் முடிபுதான் யாதோவெனின்? உலகப் பொருட்களை நாடோறும் அவாவி நீண்டு எத்துணைக் காலந் துன்புறினும் இன்பமடைதலியலாது. புலன்கள் உலகப் பொருட்களிற் றொடருந்துணையும் துன்பமும் நம்மைத் தொடராநிற்கு மென்றே கூறலாம்.

அற்றேல், இறைவன் செய்த பேருதவியால் தமக்கியல்பாகிய அறிவு முதலியன விளங்கி ஆற்றல் பெற்று, உயிர்கள், மேலும் தமக்குத் தாமே இன்னலை விளைத்துக் கொள்வனவென முடிவதால், இறைவன் கருணைக்குப் பயன் இவைதாம் போலும்! எனக் கொள்ளாமோ வெனிற் கொள்ளாம். என்னை? இவ்வறிவு முதலியனவகளை வேறு துறையில் செலுத்தப்பெறின் வீடு பெற்றுயவளிக்க உயிர்களை என்றும் போா இன்பத்தோடு இடையீடறப் பின்னிப் பிணைத்துய்விக்கும் வன்மையினவுமாதலின். அஃதெவ்வாறு? இவ்வினாவுக்கு விடையன்றே இக்கட்டுரையின் இலக்காவது.

பிறவியுளதுணையும் துன்பமிகுதிக்கிடையே யன்றித் தனித்த இன்பம் எய்தலாகாமையானும்; பிறவிகள் வினைதர வருதலின் பிறவி நீக்கத்திற்கு வினைகளின் நீக்கம் இன்றியமையாது வேண்டப் படுதலானும்; வினைகளும் மேலைச்செய்த நிற்பன (சஞ்சிதம்) இப்போது துய்ப்பவுரியன (பிராரப்தம்) பின் துய்ப்ப ஈட்டுவன (ஆகாமியம்) என முப்பாற்பட, அவற்றுள் இடைப்பகுதி துய்த்தே தீர்வதன்றி விலக்கலாகாததாயும், முற்பகுதி, பிற்பகுதி சுருங்கித் தீர்வுழித்தானே யழிவதாயும் இருத்தலின், பின்துய்ப்ப ஈட்டும் வினை (ஆகாமியம்) யொன்றனைத் தொலைப்பின் அஃதே பிறவிதீர்த்து வீடு பெறுவதற்கேற்றதாக அமைதலானும்; இவ்

வுடலில் இவ்வுலக நுகர்ச்சிகளைத் துய்க்கும்போதே மேலைக்கென ஈட்டும் வருவாய் வினையை (ஆகாமியம்) நீக்கு மொருகுறியே கொண்டொழுகல் வீடுபேற்றை யவாவியோர்க்குப் பொருந்துவ தாமென்கை தேற்றம். உண்மை இவ்வாறிருத்தலின், அவ்வினை பெருகுவுளதாமோ அக்கருவியின் தலையை நசுக்கல் வேண்டப்படும்.

மனிதர்களின் அறிவு விழைவு செயலென்னும் மூன்றும் உலகப் பொருட்களை அவாவிச் செல்லுதலே பற்றுக்கோடாக, விளையும் வருவாய் வினையை (ஆகாமியம்) மாற்றவேண்டின், அவ் வறிவு முதலியன தவறுநெறியிற் செல்லாது செவ்விய நெறியிற் செலுத்தப்படல் வேண்டுமென்பதாகின்றது. அச்செப்பமான நெறியாது என எண்ணித்துணிதலே வீடுபேற்றிற்கு வழிகாட்டும் எல்லாச் சமய நூற்களும் கொண்ட நோக்கமாம்.

இனி எந்த மறைகளும் ஆகமங்களும் சமய நூற்களும், வீடு பேற்றிற்குக் கூறும் (ஒன்றை யொன்றொவ்வியும் ஒவ்வாமலு முள்ள) அனைத்துப் பொருட்களும், அறிதரு தொகுதி (ஞான காண்டம்) விழைவுத்தொகுதி (பத்திகாண்டம்) செய்வினைத் தொகுதி (கரும காண்டம்) என முப்பகுதிகளுளொன்றாகவே முடியும். ஏனெனின் அறிவு விருப்பம் செயலென்னும் உயிர்ப் பண்புகளாலேயே யன்றி வேறெவ்வாற்றானும் உய்யும் வழியின் மையான் என்க.

தானே பரம் எனக்கூறும் வேதாந்த நூற்கள், அறிவான் இறைவனைத் தானாகக்கருதுமாறு கூறி ஞானப்பகுதியின் வழிப் படும். கடவுளின் தாட்டாமரைகட்கு ஆராவன்பு பூண்டு தன்னை யும் மறந்த அவசங்கோடல் வீடுபேறு தரும் எனச் செப்புவன வைணவ முதலிய சமய நூற்கள். இது பத்தியின் பாலதாம். எவ்வினை புரியினும் அவற்றாலாம் பிற்பயனில் விருப்பமுறாது கடவுட் பொருட்டே செய்துவருதல் வீடுபயக்கும் என மொழி வன கீதை முதலியன. இது செயல்பற்றியது. இவ்வாற்றான், அறிவு, வேட்கை, செய்கைகளை இறைவன்பாற் படுத்தின் உயிர் கள் துன்பம் நீங்கி வீட்டின்பமடையும் என்பதுணர்க.

திண்ணப்பராகிய கண்ணப்பரது செய்கையைப் பொறுது வருந்திய சிவகோசரியார் கனவில், காளத்தியிறைவன் தோன்றி அக்கண்ணப்பருக்குத் தன் பாலுள்ள அன்பின் பெருக்கை அறிவித்தபிடத்தே இறைவன் கூற்றாக நம் அருண்மொழித்தேவர்

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லாம் நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்."

என, அவரது அறிவு விழைவு செயல்கள் இறைவன் வயத்தனவாதலை விளக்கியருளினர். இச்செய்யுளில் "கண்ணப்பரது வடிவம் முழுதும் அன்புமயமாகவே விளங்கிற்று" என்பது குறிக்கவே "அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு" எனவுரைக்கப்பட்டது. "அன்பு பிழம்பாய்த் திரிவாரவர் கருத்தின் அளவினரோ" என வேறோரிடத்தும் இங்ஙனமே கூறப்பட்டது. இதனால் கண்ணப்பர் வேட்கையனைத்தும் குடுமித்தேவர் பாலே குழுமிச்சென்று தன்னை அயர்த்து நின்றதென வுறுகின்றும். மற்று, அவரது அறிவு வேறொன்றனையும் உணராது இறைவனையே உணர்ந்து நின்றது. அவரது செய்கைமுற்றும் பயன் கருதாமலும், கொள்ளுவது, தள்ளுவது என்னும் பகுப்புணாமலும் உறங்குவோன், கைவிதிர்ப்பது போன்று நிகழ்ந்தன. இறைவன் கண்கெடத் தன்கண்ணைக் கூரம்பால் துத்திப்பெயர்த்த போதும் துன்பப்புலப்பாடறவிருந்த அவரது நிலைமை யுரைக்கடங்குவதொன்றன்றே! "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்" என அருளி, மணிவாசகப் பெருமானாரும், கண்ணப்பருடைய பண்புத்தற்கிழமையாகிய வன்பைப் பண்பியாகிய அவரோடு வேற்றுமையறக் கொண்டு பாராட்டிப் போந்தனராயின், அறிவு வேட்கை செயலென்னும் மூன்று பண்புகளையும் இறைவற்கே காணிக்கையாக்கிய நம் கண்ணப்பர் பெருமை, கசிந்து கசிந்துருகி நினைப்போரை இறைவனடிக் கிடுபடுக்கும் தகுதியதாதற் கையமுளதோ? ஆந்தபெ ரதிவுங்கண்களே கொள்ள—" எனவரும் பெரிய புராணத் திருவிருத்தமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிற் றில்லைப்பதியில் அம்பலவாணனைச் சேவித்தகாலை, அவரது

அறிவாதி மூன்றும் ஒரேபடித்தாய் இறைவனை நாடி இன்புற்றுத் திளைத்த நிலையையே காட்டும். திருவாசகத்து நம் மணிவாசகனார்

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின்றிருப்பாதப் போதுக்காக்கி,
வந்தனையுமம் மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம்புலன்களார
வந்தெனையாட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தமியனேற்கே".

என, இறைவன், தமது அறிவு முதலிய மூன்றனையும் தன்வயப் படுத்தாட்கொண்டதை நினைந்துருகுகின்றனர்.

இதனுள் 'சிந்தனை நின்றனக்காக்கி' என்பது அறிவை இறைவன் கவர்ந்து தன்னையே நினைக்குமாறருளியதையும், 'கண்ணிணை நின்றிருப்பாதப் போதுக்காக்கி' என்பது அப்பெருமான்பாற் கொண்ட வேட்கை "பருகுவது போலும் ஆர்வத்தோடு தமக்குப் புகலிடமாகிய தாட்டுணைகளையே விழிகளால் நோக்குமாறருளியதையும், "வந்தனையும்......வார்த்தைக்காக்கி" என்பது, செயலனைத்தும் இறைவனை வழிபாடாற்றற்கே யாக்கியதனையும் தெரிவித்து, அறிவு, விழைவு, செயலென்னும் இம்மூன்றும் இறைவன் தன்பாற் படுத்தமை கூறப்பட்டிருத்தலறிக.

சிவஞானபோதம் முதலிய அறிவுநூற்களில் மிக நுட்பமாகவும், எல்லாச்சமய நூற்களின் திரண்ட தெள்ளிய பொருட்களாகவும் காணப்படுவன, யாம் மேற்கூறிய அறிவாதி மூன்றும் இறைவன்பாற்பட ஒழுகும் நெறிபற்றியனவே யல்லது வேறில்லை என்பதனை ஒரு சிறிது விளக்கி, இக்கட்டுரை கூறியவற்றைத் தொகுத்துச் சுட்டி முடிவுறுத்துவாம்.

தொடரும்.

தமிழக நிலைமையும் தமிழர் கடமையும்.

திருவாளர் S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A., B.L.
மதுரை.

பாரதநாடு பாரதீனப்பட்டுப் பருவந்த பல நூற்றாண்டுகளுக்கும் பின்னும் நேற்றளவு தன்னரசு தாங்கி நின்ற தமிழகம் இன்று அந்நியராட்சியில் அவசமுற்று அலக்கணுற்று உறங்குகின்றது. அடுத்த பிற நாகரிகமனைத்தும் கெடுத்து அவற்றின் நலந் தமதாக்கித் தேக்கித்திரியும் ஆரிய வகுப்பினரின் மூலப் படையை முனியாமல் முன் நேசபாசத்தாற் கட்டி வசமாக்கி அவர் தேவபாடையை மறப்பித்துத் தமிழ் பயிற்றித் தம்மவராக்கி மகிழ்ந்த தமிழகம், இன்று தமிழையே வெறுத்தொதுக்கி ஆங்கிலத்தில் மயங்கியலைகின்றது. பண்டைநாள் மேலை உரோமை யவனரும் கீழைச் சீனசாவகரும் ஊன் உடை உவப்பிற்குரிய பல் பொருளும் வேண்டுதொறும் விரும்பிவர அளந்தறியா வளந்தலை நின்ற தமிழகம், இன்று காடாத்தின் (பர்மாவின்) மிகையரிசி பெறினன்றி பட்டினி நோன்பின்பாடு திகழப்பயில்கின்றது. முன் தன் கலத்தில் வெண்முத்தும் சந்தனமும் கலிங்கமோடு பொருளனைத்தும் பிறநாடு புகுத்தி நிதி வளர்த்து வந்த தமிழகம், தற்காலம் வறுமையுந்த தம்மக்களையே கூலிகளாய்க் கடல் கடத்தி அந்நியருக்காளாக்கி அலமருகின்றது. விளையுள்வளம் உவட்டாமல் விரும்பி வினைத்திறம் வளர்ந்துச் சாலமனும் தருக்குடைய உரோம பெருமன்னருமே காதலிக்கப் பல் பொருளும் வழங்கிய நம் தமிழகம், இப்போது கையாறு மேற்கொண்டு பிறர் எச்சில் பெரிதுவந்து பிழைக்கின்றது. தென்பாண்டியனை வடவாரியர்

பழித்ததனைப் பரதேசப்பார்ப்பனராற் கேட்டவுடன் படையொடு சென்று அவரையடர்த்து வென்று அடக்கித் தமிழர் தறுகண்மை என்றும் நின்று நிலவ இமயத்தில் விற்பொறித்துத் தம்மவர் புகழ் காத்த சேரரின் வீறுவளர்த்த தமிழகம், தற்போது அந்நியராதிக் கம்பெருக்குவதில் போட்டியிடும் பெருமக்கள் நிலைக்களனாய் நிற்கின்றது. என்றும், "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" எனும் பொய்யாப் பொருளுரை பேணி, "உள்ளத்தனையர் உயர்வு" எனும் மெய்ம்மையை வற்புறுத்தி ஊக்கித் தம்மக்களைப் புகழொடு வளம் பெருக்கி வாழ்வித்த தமிழகம், இன்று சாதி வெறிக்கட் காதல் கொண்டொழுகும் உட்கப்படா ஒளியிழந்த மக்களால் பாடிழந்து பரதவிக்கின்றது. முன் வள்ளுவன் தன்னை உலகி னுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு, இப்போழ்து அறிவுலகத்தாரால் அகற்றப்பெற்று, உரனோடு ஒழுக்கமும் ஒழுக விட்ட பேதையர் ஊதியம் பெருக்க எழுந்து எழுந்திறக்கும் நவீன கங்களில் ஈடுபட்டு மதிவளம் வறண்டு வருந்துகின்றது. முன் சமணரொடு சோனகருஞ் சோதராக்கொண்டு மகிழ்ந்து அனை வருமாம் தமிழச் சமுதாய நலமொன்றே குறியாக்கித் தழைத் துயர்ந்த தமிழகம், தற்காலம் தம்மொடு தாம்பொருது அழியச் சண்டையிடும் மூலபலச் சமயங்கள் முறிந்து விளிபடுகளனாய் நிற்கின்றது. சிறை நலனும் சீரும் இலது எனினும், மாந்தர் உறைநிலத்தில் யார்க்கும் அவரை ஒட்டல் அரிதாவதாகவும் ஆரியப் படைவென்று விலக்கிப் பிறராட்சியறியாத கன்னிநாடாய் நின்ற நாமிருக்கும் நாட்டினிலே பிறர்க்கடிமை நாமே பேணும் பெற்றி யினைத் தமிழகம் தற்காலம் படைத்துமுளது.

என்னே இவ்விபரீதம்! எண்ணரிய தொல்லைநெடும் பல் லாண்டு ஈடழியாது இருந்து உயர்ந்த தமிழ் நாடு, இக்காலம் மிகச் சிறிய சின்னாளில் தேம்பி மெலிந்தேங்கி நிலையினிழிந்து நாகரிக வுலகினிலே தலையினிழிந்த மயிராகித் தடுமாறக் காரணத்தை வினவுதல் நம் கடமையன்றோ? நோயுற்றேன் என்று உணரார் பிணியகற்றப்போவதில்லை. நோய் நாடி நோய்முதல் நாடி வாய் நாடி வாய்ப்பச் செய்வார்க்கன்றிப் பிணிதணிக்கும் பெற்றியில்லை. எல்லையறு தொல்லை நெடும்புகழோடு வளமண்ட வாழ்வுகந்த

நாம் இன்று பஞ்சமொடு நோய்படுத்துப் பஞ்சையராய் வள நாட்டில் வருந்தவானேன்? இருபுனலும், வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லாறும் அமைந்துள்ள நமது நாட்டில் அவந்த ராய் நாம் அலமருவோமோ? காவிரியும் பொருநையொடுவைகை யும் வளஞ்செய்யும் இயற்கையினைமறுக்கவில்லை. மழையின்றும் பிழைப்பதில்லை. பிழையா விளையுள்தரும் வளநிலங்கள் குறைய வில்லை. பெரும் பொருளால் பெட்டகதாகி அருங்கேட்டால் அற்று விளைவது தமிழ்நாடு. அப்படியிருந்தும் நாடாவளமுடைய நமது நாட்டில் நாமின்று மிடிமையோடு அடிமையிலே யெய்து வானேன்?

இன்று நம்மை ஆளும் அந்நியர் நம்மை வெம்முனையில் வென்றதாகச் சரிதமில்லை. ஆளுபவர் நம் மொழியைத் நாம் வெறுக்கப் பணிக்கவில்லை. நாம் ஒருவரை ஒருவர் பழித்து அலை வருத்தும் சிறுமையினை விளைத்திடுமாறு அவர் நமக்கு விதிக்க வில்லை. நாட்டின் நிதியனைத்தும் நிதம் கவர்ந்து செலும் அந்நிய ருக்காளாகி நம்மவரை நாம் பகைத்து இகல் வளர்த்துப் பொரு தழியப் போர்வம் கொள்வதேனோ? நெடுங்காலம் நின்றுவரும் காழ்த்தமாம் ஒருகணத்தில் யாராலும் ஒழிவதில்லை. உள்ளுரத் தைச் செல்லரிக்கப் புறக்காழ்போல் நிற்குமரம் அலைப்பவரின்றியும் அழிந்துபடும். தமிழ்ச் சமுதாயம், ஒற்றுமையுரத்தைச், சாதி மதமாற்சரியச் செல்லினுக்கு விருந்தாக்கி உட்டுளைப்பட்டு ஊன் அழிந்த புழைமுங்கிற் பண்ணையென நிற்கின்றது. இழிவுயர்வு படைத்த ஈரிரண்டு வருணமுறை தமிழகம் முன்னறியாத இறம் பூதன்றோ? சோதரர்கள் நாரணனை வழிபட்டால் சைவருக்குப் பகைவரெனக் கருதுவானேன்? மறுசமய நலங்கருதி வருசமயங் கள் இந்வாழ்வில் இன்னலெலாம் விளைக்க இகல் வளர்க்க இடந் தருவதற்கு அவசியமும் முறையும் உண்டோ? மாற்சரியக் குன் மத்தால் சமுதாயப் பெருவாழ்வின் நல்லுணவை நாம் இன்று வெறுக்கின்றோம். உணவற்ற உடல் நாளும் மெலியும். அதனை நோயெளிதில் நலியும். தமிழச் சமுதாயம் நின்றோங்கித் தழைவ தற்குப் பகையிடமாம் பலகலையும் வேரற நாம் பறித்தல் வேண் டும். உணவுகக்க உண்மையினில் நல்ல பசி வளர்த்தல் வேண்டும்.

ஒரு சிலரைக் கீழாக்கி நாமுயர்வேம் என்பார்க்கு விடுதலை நாள் என்றுமில்லை. தமிழரெலாம் சோதரராம் என்பது நம் எவர்க்கும் பொதுநின்று உயிர்ப்பிக்கும் மனப்பாங்காயமைதல் வேண்டும். பொய்ம்மை நமதாயினும் என்றுமதைக்காயும் நிலை எய்தல் வேண்டும். மெய்ம்மை பிறரிடங்காணில் அதைத மேற்கொள்ள விரைதல் வேண்டும்.

அன்பு சிவம், சங்கமத்துட் சாதியில்லை-என்று பல முழங்கு பவர் நந்தனரை யெரிப்புகுத்தி யன்றி ஒரு சோதரராக்கொள் ளாமை கருதல் வேண்டும். யாழ்ப்பாண அடிகளை முன் கோவில் தொறும் வெளிநிறுத்தி வழிபாட்டிற்குட்புகுதல் சைவநெறி தானுமா? தமிழகத்தைத் தழைப்பிக்க மருந்தாமா? என்பதனை நடுநிலையில் கருதல் வேண்டும். நாவுக்கரசு நாயனரையும் வாயிற் படியில் விலக்கி வேறிடம் புகுத்தியதைப் பேணும்வரை பார்ப் பனரைச் சாதி மறக்கவைத்தல் நம்மவர்க்குச் சாத்தியமா? சாதித்தருக்கிற்குப் பழந்தமிழ் நூல் உண்மையினில் இடந்தருமா? திருப்பாணுழ்வாரைத் தோட்சுமந்த விர்ப்பனரால் பெருமிதங் கொள்ளும் வைணவர்கள் தற்காலம் சாதியினைப் பேசுவதும் பொருத்தந்தானு? எப்பெயர்கொண்டு எதைத்தொடினும் அது கடவுட்குவப்பேயாகும். எல்லவரும் இறைவனுக்குப் பொது மக்கள். மக்கள்தமைப் பேணுபவர் இறைவனுக்கே உண்மை வழிபாடு செய்வார் என்ற உயர் சமய உண்மை உரைத்துவரும் நந்தமிழச் சோதரர்கள் பேச்சளவில் நிறுத்தி அவை பொருளற்ற பொய்யுரைபோலாக ஒழுகும்வரை நாம் ஒற்றுமை வளர்ப்பதில்லை. தமிழகமே நமக்கெல்லாம் ஊரன்னை; தமிழரெலாம் ஒருப்பட்டுயர்ந் துயர்வதற்கேயுரிய பல சோதரராம்; என்ற உண்மை நம்மனத்தே யூன்றல் வேண்டும். தமிழினிலும், தமிழகத்தும் அனைவருக்கும் மெய்யன்பு பெருகவேண்டும். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே யன்றி நம்மில் ஒற்றுமைநீங்கில் அனைவருக்கும் தாழ்வே என்றதை நாம் எல்லாரும் பொதுவோர்தாய்ப் போற்றல் வேண்டும்.

தொடரும்.

முருகன் சிறுவிளையாடல்.

திருவாளர் L உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 179-வது பக்கம்.)

'வேட்டுவர் வெய்யர், நில்லாது கடிதேக ஓடுமின்' என்று இவள் உரைத்தது, அவரால் எனக்குவரும் ஏதத்தினை அஞ்சியன்றே? என்பால் இவட்கு வெறுப்புண்டெனின் இவ்வாறு கூறுவளோ? கூறிடாளன்றே. அதனால் என்னிடத்து இவள் வைத்துள்ள அன்புடைமையை வெளிப்படுத்தினாளாயிற்று; என மகிழ்வெய்தி நின்ற முருகேசன், வேண்டும்போது வேண்டுருக் கொள்ளும் வித்தகனாதலின், தவத்துறை மேவிய சைவமுதிய வராக உருக்கொண்டு, வேட்டுவத்தலைவற்கெதிர் சென்று, 'வாகை பெரிதாக வளம்பல எய்துக' என்று வாழ்த்தி நீறு நல்கினன்.

நீறுபெற்ற குறிஞ்சிமன்னன் நிலமுறப்பணிந்து நின்று, 'குறவருமருளும் இக்குன்றத்தில் அரிதின் முயன்று வருந்திவந்த முதியீர்! வேண்டியதை ஒல்லையிற் சொல்லுவீர்' என்றனன்.

'மேதக்கோய்! இதக்கேள்! உள்ள மயக்கும் உடலின் முதிர்ச்சியும் ஒருங்ககல, நின் வரைக்குமரியை எய்தி இனிதாடவேண்டிக் கடிது வருகின்றேன்' என்றான் கந்தன்.

கந்தன் கவர்பொருள்பட மொழிந்ததை உணராத கானவர் கோன், 'ஐயரே! உமது எண்ணம் அதுவானால், நீர் நவின்ற

தீர்த்தத்தை நீத்தலுமாடித், தமியளாயிருக்கும் எங்கள் நேரிழைக்கொரு துணையா யிருப்பிர்' என, 'மன்னவ! அன்னது அழகி' தென் றுரைத்தனன் அண்ணல்.

வெற்பனும், தன்மகள்பாலெய்தி முன்னையிற்போலத் தின்பன பலவும் நல்கிப், பெருந்தவரை அருந்துணையாக வைத்து, வனசரரோடு வல்லையின் மீண்டனன்.

அவன் சென்றபின்னர், முநியோன் வடிவுற்ற முருகன் 'முருந்தன முறுவற் றிருந்திழை! நான் இனி என் செய்குவேன்; நலிகின்றது பசிநோய்' எனத், தேனும் கனியும் தினைமாவும் தரத் தெவிட்டவுண்டு, 'நீர் வேட்கை பெரிதுடையேன்' என்றனன்.

அப்படியாயின் இவ் வரையினுக் கப்பால் எழு மலைகளுண்டு. அவற்றைக் கடந்துசென்றால் ஒரு தெண்ணீர்ச் சுனை தென்படும். அதன்கண் நீர் பருகி இங்கு வருதிர் என்றனள் வள்ளி.

'பூட்டுவிற்போலும் புருவமுடைப் பூவையே! நாப் புலர்தலால் நீர் வேண்டினேன். நானோ என்றால் கிழவன், அன்றியும் புதியவன். அதனால் இம் மலையிற் செல்லும் வழியறியேன். ஆதலால் நின் கால் வருந்துமெனக் கருதிக் காலம்போக்காது நீ ஒல்லையின் முன்சென்று நன்சுனை காட்டுதி' என்றான் அறுமுகங்கரந்த கள்வன்.

முருகனது சூழ்ச்சி தேராத மொய்குழல், எந்தாய்! வருக என அழைத்துச் சென்று வரைபலவுங் கடந்து விரைகமழ் சுனை நீர் காட்ட, வேனிலால் மெலிந்தான்போல நீர் பருகி, மெல்லியால்! நீர் வேட்கை நீங்கிற்று. மன வேட்கை தவிர்ந்திலது. அதனைத் தணிப்பையாயின் என் குறை முடிந்தது என்று கும்பிட்டு நின்றனன் குழுவன்.

ஐயனது செய்கையைக் கண்ட நங்கை, நகைத்து உயிர்த்துச் சீறி நடுங்கி, மாதவத்தீர்! தவவேடந் தாங்கித் தகாதன இயம்பி நின்றீர். உம்முடைய நீர்மையை நினைக்கின், பார்வைக்குப் பாலாகத் தோன்றிப் பருகியபின் ஆவிபோக்கும் நஞ்சின் நீர்மை

யேயல்லாது பிறிதில்லை. கொய்தினை காப்பேனை மெய்தழுவக் கருதிக் கைதொழுது நிற்றல் கடனன்று. கானவர் இச் செய்கை காலில் தீதாக வன்றோ முடியும். நாணற்பூவென நரைத்தும் நல்லுணர்வு சற்றுமில்லாத நீர் எதற்கு மூத்தீர்? இழிகுலத் தேனை விரும்பிப் பித்துக்கொண்டார்போலப் பிதற்றுகின்றீர். இவ் வேடர் கோத்துக்கெல்லாம் கொடும்பழியைச் செய்தீரே. புனத்திற் புள்ளுமாவும் தினைக்குரல் கவரும். நான் முந்திச் செல்வேன், நீரும் நடந்தருளும்' என்றுரைத்துச் செல்லத் தொடங்கினள்.

பொன்னனையாள் முன்செல்லுந் திறநோக்கி, 'இனி என் செய்வது என் றிரங்கினன். தந்திமுகத் தண்ணா! முன்னே வருவாய்' என நினைத்தனன் முருகன்.

அவ்வளவில், முந்திச் செல்கின்ற மொய்குழலாட்கு எதிரே விநாயக வேழம், அலையெறி கடல்போல் முழங்கி மலையென வந்துற்றது.

என்செய்வாள் எந்திழை? அச்சமோடு மீண்டு, கைவத வேடங்கொண்ட கந்தனை வந்தணுகி, எந்தாய்! இவ்வேழத்தி னின்றும் காத்தருள்வீர்; நீர் சொல்லியவண்ணம் செய்வேன்' என்றுரைத்து ஒருபாற் சேர்ந்து தழுவிக்கொண்டனள்.

அன்னகாலையில் என்னையாளுடைய அண்ணல், கடவுட் களிற்றினை வழிபட்டு வணங்கி 'நீ வந்திடலால் மணக்கவலொழிந்தது, வள்ளியுஞ் சேர்ந்தனள். எம்பெருமான்! மீண்டெழுந்தருள்க' என்றுமளவில், 'இனியது' எனவுரைத்து யானைமுகன் ஏகினான்.

கந்தன் கன்னிமயில் அனையாட்குக் கருணைசெய்து, படைக்கலம் தாங்கிய பன்னிருகரமும், முழுமதியன்ன மூவிருமுகமும், அருண்மழை பொழியும் ஆறிரு கண்ணும், வேலும் மயிலும் விளங்கத் தொல்லுருக் காட்டி நின்றனன்.

கண்காண வெளிநின்ற கந்தன் திருவுருவை வணங்கிப்பாவித் தேவரும் காண்டற் கரிய பெருமானை ஏழையேன் காணப் பெற்றது என்னென விம்மித மெய்தி, இன்னவனென் றறியா திகழ்ந்தேனே யாதாகுமோ என நடுநடுங்கிச் செங்கை குவித்து, உடல் வியர்ப்ப, வலியவந்தாண்ட அருட்டிறத்தினை நினைந்து நினைந்து, ஆராத காதல் பெருக நின்று, 'வேலவரே! இவ்வுருவை முன்னே நீர் காட்டிக் கருணைபுரியாது இத்துணையும் கொன்னே கழித்தீர்; கொடியனேன் செய்த குற்றமெல்லாம் இன்னே தலித்து என்னை யாண்டு கொள்ளும்' என்றாள்.

'முன்னே மாயவன் மகளாகிய நீ, நம்மை மணக்குமாறு நற்றவம் செய்தனை; அதனால் இம்மைதனில் உன்னை எய்தினோம்' என்றுரைத்து அம்மைதனைத் தழுவி ஐயன் அருள்புரிந்து, 'மங்கை நல்லாய்! உங்கள் புனந்தனில் முன்னே சென்று உறைக, யாமும் வருவே' மென, விடைகொண்டு அடிபணிந் தேகினள் இறைவி.

சென்ற வள்ளி ஏனற்புனத்துள்ளேகி இருத்தலும், பாங்கி வந்துபணிந்து தோற்றமும் ஒழுக்கமும் மாற்றமும் செய்கையும் முன்னையின் வேறுபட்டிருப்பக்கண்டு, 'இப்புனம் அழிதர நீ எங்ஙன் ஏகினை செப்புதி' என, 'வேனிலான் மெலிந்து சுனையாடப் போந்தனன்' என, நன்று! நன்று! ஆடினோரை, விழி சிவப்பவும் வாய்வெளுப்பவும் மெய்வியர்வரும்பவும் கைவளை நெகிழவும் செய்திடும் சுனை எவ்விடத்திருந்தது' இயம்புவாய் எனச் சொல்லிய இதனையைச் சுளித்துநோக்கி, 'உன்னை நற்றுணையாகக்கொண்டு இங்குற்ற எனக்கும் ஒரு குற்றம் உரைத்தனை கொடியை' என இவ்வாறு பாங்கியுந் தலைவியும் தம்மிற் பகர்ந்து நிற்குமளவில், செவ்வி இஃதெனத் தேர்ந்த செவ்வேள்.

'கோட்டிய சிலையினன் குறிகொள் வாளியன்
தீட்டிய குறியவாள் செறித்த கச்சினன்
வேட்டம தழுங்கிய வினவ லோனெனத்
தாட்டுணை சிவந்திடத் தமிய னேகினான்.'

வேட்டமாடி வருந்தினோன்போல வாளிபூட்டிய வில்லும் வாளும் கைக்கொண்டு காட்டினை சிவப்பத் தமியனாகப் போந்து, காந்தள் போலுங் காத்தினீர்! யான் எய்த கணையாற் சோரிபாயப் பெருமுழக்கொடு ஒரு களிறு இங்குப் போந்ததுண்டாயிற் புகலுரின் என்றனன்.

இவ்வாறு இறையவன் வினவி நிற்பக்கண்ட தோழி, 'ஐய ! உமது வன்மையை உம்மை யொத்தவர்க்கு உரைப்பதேயன்றி எப்போதும் ஏழையர்க்கு இசைப்பதால் என்னபயன்' என்றுரைத்திட்டு, ஐயர் வேட்டை வந்திடுவதும் நம் தையல் புனத்தைக் காத்திடுவதும் உண்மையே. இவ்விருவர் கொண்ட காதலையும் இன்னவர் கண்களே உரைத்திடும் என்று மதிப்பளாயினள்.

தொடரும்.

உ

புகழேந்தி—ஒட்டக்கூத்தர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்துக் கல்லூரிச் சிறுர் நடிப்பதற்குக் காலநிலையை ஒட்டி எழுதப்பெற்றதோரு சிறு நாடகம்.

காட்சி. க.

இடம் :—பாண்டியன் அரசவை.

உரியோர்:—வீரபாண்டியன், அவன் மகள் செந்தமிழ்ச்செல்வி, புகழேந்தியார், முருகனுர், மாறனுர், மருதனுர், ஒட்டக்கூத்தர், ஏவலாளர்.

பாண். புலவர்காள்! செந்தமிழன்னைக்கு, இன்று எவையேனும் புதிய அணிகள் இயற்றியிருக்கின்றீர்களா?

முரு. அரசே! நம் செந்தமிழ்ச் செல்வியார், தமிழ்த்தாயின் சிறப்பினைக் குறித்து ஒரு வெண்பா வியற்றியுள்ளார்.

பாண். நன்று! அம்மா! அதனைக்கூறு, கேட்போம்.

செல். அப்பா! எளியேன் இயற்றியதும் ஒருபாட்டு ஆகுமா? அதனையும் இப்புலவர் பெருமக்கள்முன் கூறுவதா? அஃதிருக்கட்டும்; இப்புலவர்களியற்றிய அரிய செய்யுட்களையும், பெரிய ஆராய்ச்சிகளையும் கேட்டு மகிழ்வோம்.

புக. அன்னாய் வாழி! உன் செய்யுளையே முதலில் கேட்கும் அவாவுடையேம். அன்புகூர்ந்து கூறுவாயாக.

செல். தந்தாய்! உங்கள் பணி இதுவாயின், ஏதோ அதனைக் கூறுகின்றேன்.

வெண்பா.

உறியன் வரையில் ஒழுகுசுவைத் தேனே!
பொதியி லிளங்காலின் பொற்போ!—மதுகரங்கள்
நன்றூ மலர்நாடு நல்கு திருமணமோ!
என்றே தமிழின் எழில்!

மரு ஆ! என்ன அழகிய வெண்பா! "வெண்பாவிற்புகழேந்தி" என்பாரின் அன்பார்ந்த மாணவியன்றோ! சேரநாட்டுத் தேன், பாண்டியநாட்டுத் தென்றல், சோழநாட்டு மலர் இவற்றால் எய்தும் இன்பங்களைத் தருவது தமிழ் என்று பொருள்படுகின்றது. என்ன அழகிய வெண்பா! எங்கே அம்மா! இன்னொருமுறை அவ்வெண்பாவினைக் கூறு.

செல். உறியன் வரையில்.........தமிழின் எழில்.

முரு இவ்வெண்பாவில் ஐம்புல வின்பங்களையும் அமைத்துப் பாடிய அழகு வியக்கத்தக்கது. தேன் என்றதால் சுவையும், தென்றல் என்றதால் மெய்யின்பமும், மதுகரங்கள் நன்றூம் என்றதால் இனிய ஒலியும், மலர் என்றதால் அழகிய காட்சியும், திருமணம் என்றதால் நறிய மணமும் கூறியிருப்பது உற்று நோக்கத்தக்கது. (அவ்வெண்பா வினைக்கூறல்.)

மாற. புலவர்காள்! இவ்வினிய வெண்பாவில் உள்ள உள்ளுறை ஒன்றை உற்று நோக்கினீர்களா? சோழநாடு திருமணம் நல்குமாமோ! இத்திருமணம் பூவின் நறுமணம்தானோ? அன்றி மணமக்கள் திருமணமோ? "மதுகரங்கள் நன்றூம் மலர்நாடு நல்கு திருமணமோ" என்பதை உற்று நோக்குங்கள்.

செல். இப்புலவர்க்கு இதுதான் வழக்கம். எதனிலும் உள்ளுறை என்று இல்லாதவைகள் பொருத்திக் கூறுவார்.

புக. ஓகோ! மாறனார் கூறுவது, நமது செந்தமிழ்ச்செல்வி எண்ணிக்கூறியது ஆயினும், எண்ணாததாயினும், தமிழ்த் தாயினருளால் அவ்வெண்பாவில் அமைந்து, நம்மை ஒரு புதிய ஆராய்ச்சிக்குக் கொண்டுவந்துவிட்டது. அரசே! நமது செல்விக்கு மணப்பருவம் எய்தியதுமுதல், இது வரையில் எதிர்நோக்கியிருந்த திருமணப்பேச்சு இன்று நம் தமிழ்த்தாயின் அருளால் மாறனார் வழியாக வெளி வந்திருக்கின்றது. ஆகவே, அரசே! நாம் இன்று அது பற்றி எண்ணிமுடித்தல் வேண்டும்.

செல். ஐயன்மீர்! நான் போகின்றேன். நீங்கள் இயற்றி வரும் செய்யுட்களைக் கேட்டுமகிழ வந்தேன். நீங்கள் ஏதேதோ பேசுகின்றீர்கள். நான் போகின்றேன்.

புக.—அம்மா! சற்று இரு. நாங்கள் எடுத்த காரியத்தை ஒரு முடிவு செய்துகொண்டு பின்னர் உன் விருப்பின்படி நாங்கள் இயற்றியுள்ள செய்யுட்களைக் கூறுவோம்.

பாண். புலவீர்காள்! நமது செல்வியின் திருமணம்பற்றி உங்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் கூறுங்கள்.

முரு. பண்டுதொட்டே பாண்டியரும் சோழரும் கொண்டு கொடுத்துவரும் உரிமைச்சுற்றத்தார்கள். நமது செல்வியின் பாட்டிலும் திருவருட் செயலால் அக்குறிப்புத் தோன்றியுளது.

மரு. குலோத்துங்க மன்னனது கல்வி, அறிவு, வீரம், அருள்; ஆட்சித்திறமைகளை நீங்கள் அறிவீர்கள்.

மாற. குலோத்துங்க மன்னனும் நம் செல்வியும் ஒத்தவுருவும், திருவும், அறிவும், மணத்திற்கேற்ற வயதும் உடையவர்கள்.

ஏவ. ஆமாங்க மகாராசா. சோழராசா முடிசூட்டுக்கு நாமெல்லாம் போயிருந்தபோது, அங்கேயிருந்த பூங்காவனத்தில்

அந்த இளவரசும் நம் செல்வியம்மாளும் பேசிக்கொண்டிருந்தாங்க........பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை, மாப்பிள்ளைக்கேற்ற பெண்ணுங்க.

செல் ஏ! ஏன்டா! பிதற்றுகிறாய்.

ஏவ. மகாராசா! இந்தநாய் சொல்லுவது பொய்யா மெய்யா என்று இந்தப்பயல் நாகனைக் கேட்டால் தெரியும். நாங்களிரண்டுபேருந்தான் அம்மாளுக்குக் காவலாகப் போயிருந்தோம்.

நாக ஆமாங்க மகாராசா! போயிருந்தோம். பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை, மாப்பிள்ளைக் கேற்ற பெண்ணுதானுங்க.

வா-காவ. மகாராசா! சோழநாட்டிலிருந்து யாரோ ஒருபுலவர் வந்திருக்கிறார். அவர் பெயர் ஒட்டக்கூத்தராம்.

பாண். நன்று! அவரை இங்கு வரச்செய். (பின்னர்ப் புலவர்களை நோக்கி) புலவர்களே! சோழநாட்டுப்புலவர் திலகராய ஒட்டக்கூத்தரின் அருமை பெருமைகள் யாவையோ?

முரு. அரசே! அவரது இயற்பெயர் ஆனந்தக்கூத்தர் என்பது. முருகவேளின் அருள்பெற்றவர். கன்னலோ! பாகோ! என்னக் கவித்தமிழ்பொழியும் மாண்பினர்.

மாற. அரசே! அவர் செங்குந்தமரபினர். செங்குந்த மரபினரை, கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய சிலங்களினால் உயரச் செய்தவர். அவர்களுடைய வீரதீரத்தை உலகிற்குக் காட்டவேண்டி 'ஈட்டி எழுபது' என்றொரு நூலை இயற்றி, அதனை அம்மரபினர் ஆயிரவர் தலைமீதிருந்து அரங்கேற்றியவர்.

மரு. அரசர் பெருமானே! பொய்ப்புலவர்கள் யாரேனும் புலவர் எனத்தம்முன் வருவாராயின், அவர் தம் செருக்குதலை வீட்டி ஓட்டுபவர்.

புக. அப்புலவர் பெருமான் சோழ அரசபரம்பரையின் நன் மதிப்பை நெடுங்காலமாகப் பெற்றவர். இப்போதிருக் கும் குலோத்துங்க மன்னன் இவர் தம் மாணவனே. ஒருசமயம் இப்புலவர் குலோத்துங்கனைப்பாடத்தொடங்கி

"ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரான்"

என்று கூறவே, அது கேட்ட குலோத்துங்க மன்னனும்,

"என்று நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேஎன்னைச்
சொல்லுவரே."

என்று பாடப் பெற்றவர். அம்மட்டோ! தாம் பாடிய அப்பாட்டின் உண்மையை உலகத்திற்கு மெய்ப்பிக்க வேண்டி, ஆண்டிற்கு ஒருநாள், அச்சோழன், ஒட்டக் கூத்தப்புலவர் அடிக்கீழ் அமர்ந்து உலாவருகின்றான் என் றால் அப்புலவரின் பெருமையைஎன்னென்பது அரசே!

"எத்தனை புலவ ரோமுன் இறைவரை வசம் செய்துற்றார்
அத்தனை பேருள் ஆரும் அருந்தமிழ் ஒட்டக்கூத்தன்
ஒத்தவர் முடிமேல் தன்தா ளுறவைத்த தில்லையில்லை
இத்தனை அதிட்ட மன்னோர்க்கு இசைந்தமை எற்றந்தானே."

ஏவ. அரசே! சோழநாட்டுப்புலவர் ஒட்டக்கூத்தர் இதோ வந்து விட்டார்.

பாண். வருக! வருக! அமர்க! அமர்க! நீங்களும், அரச ரும், பிறரும் நலந்தானே. உங்கள் ஆட்சியும் குடிகள் மாட்சியும் சிறந்து நிற்கின்றனவா?

ஒட். அரசே! வாழ்க! வாழ்க! அங்கு யாவரும் நலனே! அரசாட்சிக்கும், குடிமாட்சிக்கும் ஒரு குறையும் இல்லை. இங்கு நீங்களும், அரசியும், செல்வியும், புலவர்களும், பிறரும் நலனுற்றிருக்கின்றீர்களா? கோல்வளம், குடி வளம் குறைவிலாது ஓங்குகின்றனவா?

பாண். உங்கள் அருளால் யாவரும் நலமே! ஒருகுறையுமிலது. புலவர் ஏறே! சிறியேனைப் பொருள்செய்து இங்கு அருமையாக எழுந்தருளியது எனக்கும், இங்குள்ள புலவர்கட்கும் மிக்க பெருமையையும் மகிழ்ச்சியையும் தருவதாகும்.

ஒட். அரசே! அருமையாக வந்தேனென்று கூறி, யான் அடிக்கடி வாராததோர் குறையினை எனக்குக் காட்டிய நன்றினை பற்றி மகிழ்ந்து, அக்குறையினைப் பொறுத்திட வேண்டுகின்றேன். அரசே! நமது செந்தமிழ் தெய்வத்தின் அருளால் இனி எனக்கு அடிக்கடி இங்கு வந்து போகும் நற்பேறு கிடைக்குமென எண்ணுகின்றேன்.

பாண். புலவர் பெருமானே! அஃதென்ன! அங்ஙனம் நிகழின் அது எனது நற்பேறேயாகும் தாங்கள் குறித்தது என்னையோ?

ஒட். அரசே! பாண்டிய மன்னர்கட்கும் சோழ மன்னர்கட்கும் பலதலைமுறையாக இருந்துவரும் நட்பினையும் உறவினையும் நான் தங்கட்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. இறைவனது இருவிழிகள் எனத்தகும் சூரிய சந்திர மரபினர் என்று நீங்கள் கூறப்படுவதொன்றே உங்கள் பெருமையையும், உலகிற்கு நீங்கள் நட்புற்றுச் செய்துவரும் நன்மையையும் காட்டுமன்றோ? உங்கள் நட்பை, என்றென்றும் நிலவுமாறு உங்களுக்குள் அவ்வப்போது எய்தும் சுற்றமுடைமை வளர்த்து வருகின்றது. தமிழ்த்தாயின் அருளால் எங்கள் இளவரசுக்கும், உங்கள் இளவரசிக்கும் உரிமைச்சுற்றமும், உருவும், திருவும், மணப்பருவமும் அமைந்து விளங்குகின்றன. இதுபற்றிய வேண்டுகோளுக்கே யான் இங்கு வந்தவனுவேன்.

மாற. அரசே! இன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் பாருங்கள். எல்லாம் தமிழ்த்தாயின் தண்ணருளே யன்றோ?

பாண். புலவரீரே! இதுபற்றி நீங்கள் இவ்வளவு தூரம் வருவானேன்? உங்கள் பணியினை யான் மறுத்துரைப்பதும் உண்டோ? உங்கள் விருப்பின்படியே செய்வோம். யான் எங்கள் செல்வியைத்தர இசைவது, உங்கள் பாங்க ஆட்சிக்கு அன்று, விரிந்த திருவிற்கு அன்று, சிறந்த வீரத்திற்கு அன்று, குலோத்துங்கன் உமது அரிய மாணவனென்ற அந்த ஒருநலத்திற்கேயாகும்.

ஒட். அரசே! அங்ஙனமே உங்கள் செல்விக்கும் இயற்கையில் அமைந்துள்ளபல சீர்களினும் சிறந்ததொன்று அச்செல்வி இப்புலவர் பெருமானின் மாணவியாக இருந்தமையாகும்.

பாண். புலவர்பெருமானே! ஆம். ஆம். அஃதுண்மையினும் உண்மையே.

செல்வி. அப்பா! புலவர்கள் இயற்றிய அரிய செய்யுட்களைச் சொல்லச் செய்கின்றேனென்று சொன்னீர்களே? வேறுஎதேதோ பேசிக்கொண்டிருக்கின்றீர்களே? புதிதாக வந்திருக்கின்ற புலவர்பெருமானையாவது ஒரு செய்யுள் கூறச் சொல்லுங்களே.

மரு. அம்மா! நன்று கூறினாய்! ஐயீர்! கூத்தரே! எங்கள் செல்வியை மணக்கும் தனிச்சீர் உங்கள் அரசனுக்கு உளது என்பதை இந்தச் செல்வி எற்கும்படி ஒரு அம்மானையில் வைத்துப் பாடுங்கள்.

ஒட். அம்மா! செல்வி! உங்கள் அத்தை மகன் பெருமையை எடுத்துப் பாடுகின்றேன் கேள்.

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானை
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை
வீரருக்குள் வீரன் ஒருமீனவனோ அம்மானை

வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானை
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டியனா டம்மானை.

புக. புலவர் பெருமானே! யான் மறுமொழி கூறலாமோ?

ஒட். தடையில்லை. தாங்கள் கருதியவாறே நன்று கூறலாம்.

புக. திருநெடுமா லவதாரம் சிறுபுலியோ அம்மானை
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்த தம்மானை
ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானை
கரையெதிரே டேறியதும் காவிரியோ அம்மானை
கடிப்பலகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை
பாவைபடித் ததும்சோழன் பதந்தனிலோ அம்மானை
பாண்டியனார் பராக்கிரமம் பகரெளிதோ அம்மானை.

ஒட். ஓ! மிக நன்றாக வுளது. இத்தகைய பெரும் புலவரின் மாணவியாகிய ஓர் மணியினை யாங்கள் அடைவது ஒரு பெரும் நற்பேறேயாகும்.

ஏவ. மகாராசா! வணக்கம்! நம் அரசியார் இங்குள்ள எல்லோரையும் உணவருந்த அழைக்கின்றனர்.

காட்சி. உ.

இடம் :—சோழன் அரண்மனை.

உரியோர் :—குலோத்துங்கன், கூத்தர், போலிப்புலவர்கள், ஏவலன்.

ஒட். அரசே! வாழ்க! வாழ்க! இந்தக் கலைமகள் திருநாளில் புலவர்கட்குப் பரிசில் தந்துவரும் இத்திருவிழா, உங்கள் மாபில் நெடுங்காலமாக நடந்து வருவதாற்றன், நமது தாய்மொழிப் பயிற்சி இவ்வளவு மேன்மையுற்றிருக்கின்றது. எத்தனையோ புலவர்கள் இத்திருவிழாவிற்கு வந்து தங்கள் புலமைத் திறங்களைக்காட்டிப் பெரும் பெரும் பரிசில்களும் பட்டங்களும் பெற்றுச் சென்றுள்ளார்கள். அரசே! இத்திருவிழா உண்மைப் புலவர்களை ஊக்கப்படுத்துவதற்கென்றே தோன்றியதாயினும் அதனை உணராமல், பாவம், போலிப்புலவர்கள் சிலரும் வந்து, தங்கள் பொழுதையும் நமது பொழுதையும் வீணாக்கி விடுகின்றார்கள். ஐயோ! பாவம்.

குலோ. ஆம் ஆம் புலவரேறே! அங்ஙனம் உலகினை ஏமாற்றி வரும் போலிப்புலவர்களைச் சிறைப்படுத்தி, வேண்டும் பயிற்சிகள் செய்வித்து, அடுத்த கலைமகள் விழாவிற்குள் ஏதாவது கற்றுவரச்செய்திருக்கும் உங்கள் ஏற்பாடு, மிகச் சிறந்ததாகிவிட்டது. போலிப்புலவர்கள் வருவது வர வரக் குறைந்துபோயிற்று. சிறைப்பட்ட புலவர்களும், ஏதோ, ஒருவாறு கற்றுக்கொண்டு போகின்றனர்.

ஏவ. மகாராசா! ஒரு புலவர் கூட்டம் வருகின்றது.

குலோ. வரச்சொல். (வருதல்)

ஒட். புலவர்களே! வருக! வருக! அமர்க! அமர்க! ஐயன்மீர்! நீங்கள் கலைமகள்விழாப் பரிசு பெற வந்திருக்கும் புலவர்கள் போலும்.

ஆயவர். ஆம். ஆம். நாங்கள் வெகு தூரங்களிலிருந்து வந்துளோம். தக்க பரிசுகள் தந்து அனுப்புவீர்களாக.

ஒட். ஐயிர்! நீங்கள் யாவர்! உங்கள் ஆராய்ச்சிகளைத் தெரிவியுங்கள்.

ஆய. ஐயிர்! நான் கோட்டையூர் குண்டுச்சட்டிப்புலவர் மகன் கன்றுக்குட்டிப் புலவர். எனக்கு இலக்கணக் கவிராயர் என்றும் பெயருண்டு.

ஒட். அப்படியா! தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரம் கூறுங்கள்.

ஆய. பாடுபட்டுத் தேடிப் பணத்தை அறஞ்செய்யும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—

ஒட். ஓ! ஓ! இதுதான் தொல்காப்பியச் சூத்திரமோ.

ஆய. இன்னும் இருப்பதையும் கேட்டுப் பேசுங்கள்.

—கூடுவட்டிச்
செட்டி கடையிலோ சேர்மான பண்டிலோ
விட்டுச்செல் லுங்களந்த விண்.

ஒட். ஐயிர்! போதும், போதும். இருங்கள்.

ஆய. ஐயா! நானும் போதும் போதும் என்னும்படி எனக்குப் பரிசு தருதல் வேண்டும்.

ஒட். இருக்கட்டும். ஐயிர்! தாங்கள் யார்?

தச்சர். பந்தநல்லூர் சந்தக்கவிச் சுந்தராசாரியார்.

ஒட். தங்கட்கு எத்துறையில் சிறந்த புலமையுண்டு?

தச்.—'சந்த........ஆசாரி' எனும் இந்தப் பேரே அந்தக் கேள்விக்குத் தந்திடாதோவிடை.

ஒட். நல்லது. ஒரு சந்தக்கவி பாடுங்கள்.

கொக்குக் கொக்குக் கொக்குக் கொக்கென் றிருமாமுன்
திக்கித் திக்கித் திக்கிப் பேசித் திகையாமுன்
தக்குத் திக்கென் றுடுந் தாதியர் தமதில்லம்
புக்குப் புக்குப் புக்கே யமனடி புகுவீரே.

ஒட். ஓ. நல்ல பொருளமைதி! அமருங்கள். தாங்கள் யாவர்? தங்கள் புலமையினைச் சிறிது காட்டுங்கள்.

கொல்லர். ஐயா. யான் வல்லம் செல்லப்ப ஆசாரி மகன் திரு வேங்கடப்புலவர். விசுவப்பிராமணன். சகத்குரு—

ஒட். அவையெல்லாம் இருக்கட்டும். தங்கட்கு எத்துறையில் சிறந்த பயிற்சியுண்டு?

கோல். தல புராணங்கள் பாடுவதில் எங்கள் வமிசத்தினர் பேர் பெற்றவர். எலுமிச்சம்பழக் கவிஞர், நார்த்தம்பழக்கவி ஞர் என்று கேள்விப்பட்டிருக்கலாம். எலுமிச்சம்பழக் கவிஞர் பேரன் இஞ்சிக்கவிராயர் என்றும் என்னை சொல்லு துண்டு. ஐம்பது தல புராணங்கள் பாடியிருக்கிறேன்.

ஒட். இருக்கட்டும். தலபுராணங்கள் பாடுவதற்குரிய இலக் கணங்கள் யாவையோ?

கோல். அந்த இலக்கணங்களை யெல்லாம் சுருக்கி எங்கள் பாட்டனர் ஒரு பாட்டிலடக்கிவைத்திருக்கிறார். அதனைக் கூறுகிறேன் கேளுங்கள்.

கேளப்பா தலபுராணம் என்றொருத்தன்
கிட்டினால் அவனூரும் அதனைச் சுற்றிக்
கிடக்கின்ற பலவூரும் கேட்டுக் கொள்ளு
கிட்டியதோர் நதிகேளு கோயில் கேளு
பாழப்பா அவ்வூரொன் றுலு மிலைதைப்
பகருதிருத் தலமாக்கிப் பாடு சுற்றிப்

படிமுரர்கள் எவற்றினையும் பநிகளாக்கு
பாடிடுவாய் காடுநகர்ப் படலமெல்லாம்
அளப்பா பாமரன ஆறெறன் முழுவும்
ஆகாச கங்கையென அதனையாக்கி—

ஒட். ஐயீர் போதும். தாங்கள் யார்? தங்கள் புலமை யாது?

வேளாளர். மருதூர்கிழாஅர் போர் மாலிக்கப் புலவர். எங்கள் பாட்டனர் வைத்திருந்த இலக்கணம் இன்னம் இருக்கின்றது. அவர் பிறியன்று, ஐயர் அதனை எடுத்து அதன் மேலே எழுதியிருக்கும் பேரைச்சொல்லி அர்ப்பணம் செய்திடுவார்.

ஒட். அப்படியா? என்ன பேர் சொல்லுவார்?

வேளா. எதோ தொலகாபபியம நாம லட்சணசாஸ்திரே அர்ப்பியாமே அர்ப்பியாமே என்பர்.

ஒட். (தனக்குள்) ஓ. ஓ. தொல்காப்பியம், புள்ளியில்லா தெழுதப்பட்டிருக்கின்றதைப் படிக்கும் முறை! ஐயீர்! தங்கள் புலமை யாதோ?

வேளா. ஐயா! நாம் வரகவிதான், படிப்புச் சுருக்கந்தான். ஆயினும் பாட்டு நன்றாகப் பாடுவேன்.

ஒட் அப்படியா! எப்படியாவது ஒரு பாட்டுக் கூறுவீராக.

வேளா. சொல்லாரும் அவ்வொட்டக் கூத்தப் புலவர்
துணையிருந்தால்
செல்லாரு எய்தும் பணம்தனம் எல்லாம்
நிரம்பவரும்
அல்லாது போனல் அடிமே லடியாய்
அடித்துத்தள்ளிப்
பொல்லாத அந்தச் சிறைச்சாலையிற்கொண்டு
போடுவரே.

ஒட். மிக அரிய பாடல்! ஐயீர் தாங்கள் யாவரோ? பிறவிக் குருடரோ. தங்கள் புலமை யாதோ?

குருடர். ஐயா! யாம்

மன்னவர்தம் சிண்டினையும் மடக்கிப்பற்றி
மடித்தலத்தில் வைத்திடுமோர் சாதியாவேம்—

ஒட். நல்லது. தங்கள் புலமைத் திறத்தினை தெரிவியுங்கள்.

குரு. நாம் நமது அரசன்மீது ஒரு பாட்டுப்பாடி வந்திருக்கிறோம்.

ஒட். மிக்க மகிழ்ச்சி. இதுகாறும் இப்புலவர்கள் ஒருவரும் எமது மன்னனைப் பாடினால்லர். எங்கே அதனைக் கூறுங்கள் பார்ப்போம்.

குரு. செக்கச் சிவந்த செந்தா மரைமலர்த் திருவிழுெடும்
ஒக்கப் பிறந்த ஒருபெரு மாதினை உற்றவனே!

ஒட். ஓய்! போதும் நிறுத்தும்! ஓ சேவகா! இவர்கள் எல்லோரையும் நமது சிறைச்சாலையிற் கொண்டுபோய்ச் சேர்த்து விடு. ஓ போலிப் புலவர்களே! நீங்கள் ஓராண்டினில் அங்கு நம்மால் ஏற்படுத்தப் பெற்றுள்ள ஆசிரியரிடம் நன்கு கற்றுவந்து தேறவேண்டும். தேறினால் உங்களுக்குப் பரிசில் தந்து விட்டு விடுவோம். இன்றேல் மீண்டும் சிறைப்படுத்தி வைப்போம். போமின்.

ஏவலாள! விரைவிற் கொண்டு போ.

காட்சி. ௩.

இடம் :—சோழன் அரண்மனை.

உரியோர் :—சிறையிலிருந்து வெளிவரும் புலவர்கள், குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஏவலர்.

குல. *புலவர்களே! செந்தமிழ்த்தாயின் திருமகனாகிய புகழேந்திப் புலவர் நமது தவப்பயனாலேயே சிறைச்சாலைக்கு வந்திருந்தார் எனல் வேண்டும். பாண்டிய நாட்டிலிருந்து சோழ நாட்டிற்கு வந்துகொண்டிருந்த புகழேந்தியாரை, பாவி கூத்தன்! வழி மறித்துச் சிறைக்கு அனுப்பினனாமே!*

தச். *ஆம், ஐயா, அவர் எவ்வளவு அன்புடன் நமக்கு நாடோறும் கல்வி பயிற்றி வந்தனர்! நீடுவாழ்வாராக என அவரை வாழ்த்துவதன்றி நாம் அவருக்குச் செய்யக் கிடக்கும் கைம்மாறு யாது?*

கோல். *ஐயா! அவர்தம் புலமைதான் என்ன புலமை! ஒட்டக்கூத்தர் ஒட்டக்கூத்தரென உலகம் புகழ்வதெல்லாம் புகழேந்தியின் புகழை அறியாததாலேயாகும். அரசர் பவனி வந்த போது இருவர் தகுதியும் வெளிப்பட்டு விட்டதன்றோ!*

குரு. *ஐயா! நான்தான் புலவர் பெருமானுக்கு மிகவும் கடமைப்பட்டுளேன். புறக்கண் இலனேனும், அகக்கண்ணை எனக்குத் திறந்துவிட்ட தெய்வம், புகழேந்தியன்றோ! ஐயா! பவனியன்று நடந்த செயல்களை எனக்கு விளக்கமாகச் சொல்லுவீர்களா?*

வேளா—*அரசர் பவனி, சிறைச்சாலை வாயிலில் வந்துநின்றது. புகழேந்திப்புலவர், சன்னலின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். அரசர் பார்த்தார். அதோ அங்கு நிற்பார், பாண்டிநாட்டுப் புலவர் தலைவரன்றோ? என்று கேட்டார். அதற்குப் புலவர்................நினைவில்லையே, ஒரு பாட்டுக் கூறினர்.*

குய. நான் சொல்லுகிறேன்.

மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழல்முன் கனைகடலின்
மீனிற்கு மோஅந்த வெங்கட் சுரு மூனம் வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோ னுதயத்திற் றார்மன்னனே

என்பதாகும்.

வேளா. ஆம் ஆம். நினைவு வந்து விட்டது. அது கேட்ட அரசர், புகழேந்தியாரை நோக்கினர். அக்குறிப்பறிந்த புகழேந்தியார், அரசனைநோக்கி அதனை வெட்டிப் பாடலாமா? அன்றி ஒட்டிப்பாடலாமா? எனக் கேட்டனர். அரசர் ஒட்டிப்பாடுக வென, புகழேந்தியார்,

மானவன் நானந்த வாளரி வேங்கையாம் வற்றிச்செத்த
கானவன் நானந்த எரியும் தழலாம் கனைகடலின்
மீனவன் நானந்தக் வெங்கட் சுருவதாம் வீசுபனி
தானவன் நானந்தக் கதிரோ னுதயம் தார்மன்னனே

என்று பாடினர்.

தச். அது கேட்ட அரசன், உடனே கதவைத் திறக்கச்செய்து, புகழேந்தியாரை வரவேற்று, ஒட்டக்கூத்தரோடு அருகே உட்கார வைத்துக்கொண்டு, அரண்மனை எகினன். அவ்வளவு தான் அங்கு நடந்தது.

கோல். அப்புறம் அரண்மனையில் நடந்த செய்திகள் தெரியீரோ?

குரு. அவை என்ன கூறுங்கள்.

கோல். அரண்மனை செல்வதற்குள், பாண்டிய நாட்டிலிருந்து வந்த பணிப்பெண் ஒருத்தி, அரசிக்கு நடந்தவெல்லாம் கூறிவிட்டாளாம். அரசிக்குக் கோபமுண்டாக, தன் அரண்மனை வாயிலை அடைத்துவிடச் செய்தனளாம். அதனை அறிந்த அரசன், கூத்தர், புகழேந்தி எனும் இருவரொடும் சென்றனராம். முதலில் அரசியின் கோபத்

தைத் தணிக்குமாறு, அரசன் வேண்டியவாறு, ஒட்டக்கூத்தர் பாடினாராம். அரசி, மிக்க சினங்கொண்டு, ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத்தாள்' என்று கூறி, இன்னொரு தாழ் இட்டனளாம். அதன்மேல், அரசன் புகழேந்தியாரை வேண்டிக்கொள்ள, அவர் ஒரு பாட்டுக் கூறினாராம். அதுகேட்டு மகிழ்ந்த அரசி, கதவைத்திறக்கச் செய்து, எல்லோரையும் வரவேற்றுக் கொண்டனளாம். ஒட்டக்கூத்தர், அரசியிடம் பொறுத்திட வேண்டிக் கொண்டனராம். புகழேந்தியார் அன்று தொட்டு, அரசவையில், குலோத்துங்கன் வலது பக்கத்தில் அமர்ந்து விளங்குகின்றனராம்.

ஏவ. ஐயன்மீர்! அரசரும் அரசியும் புலவர்களும் அவைக்கு வருகின்றனர். (வந்தமர்தல்)

அரச. புலவர்களே! நீங்கள், கடந்த ஓராண்டில் எக்குறையுமின்றி இனிது பயின்று வந்தீர்களா?

புல. ஆம். ஆம். உமாமகேசன் அருளால் எங்கட்கு எத்தகைய குறையுமில்லை. நன்கு பயின்று வந்தோம்.

குய. அரசே! யாம் இப்போது, ஒட்டக்கூத்தரை எதிர்த்து முன் நிற்கச் சித்தமாயுளோம்.

ஒட். அப்படியா?

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்த வரடா?

குய. கூனை யுங்குட முந்தண்டுச் சட்டியும்
பானை யும்வனை யந்குசப் பையல் யான்.

அரச. என்ன மிடுக்கான விடை. செல்வி! அந்குசப் பையல் என்ற நன்னுரையினை நோக்குவாய்.

அரசி. ஆம். ஆம், குசப்பையல்; யானை என்றதற்கேற்ப அங்குசப் பையல், மிக அழகிது.

ஒட். ஓயிர்! மாணிக்கப் புலவரே! நீரும் எதிர்த்து முன் நிற்க வந்தவர்தாமோ! அன்றி முன்போற்பாடி ஓடி ஒளிய வந்தவரோ?

வேளா. கோக்கண்டு மன்னர் குறைகடற் புக்கிலர் கோக நகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூமுழுதும்
காக்கின்ற மன்னன் கவியொட்டக்கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே.

அரச. 'மன்னன் கவியொட்டக் கூத்த'! என்கின்றார் இப் புலவர்; 'மன்னனது புலவன்' என்று பொருள் கூறு வதினும் மன்னனாகிய புலவன் என்று பொருள் கூறிற் சிறந்ததாகும்.

புக. அரசே! புலவரைப் போற்றும் உமது மாண்பு வியக்கத் தக்கது.

ஒட். ஓ. பொட்டைடயரோ! உமது செய்தி என்ன?

விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலுவிலுத்துப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் றாய்பொட்டை யாய்புகலாய்!

குரு. கண்பொட்டை யாயினு மம்பட்ட ஏன்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே.

அரச. ஓ. ஓ. இவர் விடை கூத்தரையன்றி யாவரையும் திடுக் கிடச் செய்திடுகின்றதே!

அரசி. ஆம். அதனை அவர், நீயும் திடுக்கிட என்றதில் உள்ள உம்மையாற் சொல்லுகின்றாரே.

அரச. ஓ. ஓ! நீயும் திடுக்கிட என்று கூறுகின்றாரோ!

ஒட். ஐயிர்! திருவேங்கடப் புலவரே! உமது செய்தி என்னையோ?

கோல். செல்லன் புதல்வன் திருவேங் கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லுவோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டமாட்டிப் பகைவர் முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே.

ஒட். ஐயிர்! போதும், போதும். உமது கவியைக் குறைகூறுவார் இங்கு யாருமிரார். ஐயிர்! சந்தக்கவிராயரே! உமது செய்தி என்னவோ?

தச். சொன்னசந் தக்கவி யாவரும் சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யேதென்று போதி லெதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த வாய்ச்சியினால்
கன்னசந் தங்களி னிற்கவி யாப்பைக் கடாவுவனே.

அரசி. 'கவியாப்பு' என்ற சொல்நயம் வியக்கத்தக்கது.

அரச. ஆம். ஆம். இப்புலவர்கள் எல்லோரும் நன்றாகச் செய்யுட்கள் பாடுவதினால், இவர்கள் நன்கு பயின்றுளார்களென்பது தெரிகின்றது.

குய. எல்லாம் இந்தப் புகழேந்தியார் திருவருளே. அவர் நீடு வாழ்வாராக.

அரச. அப்படியா? புலவரேறே! எமது சிறைச்சாலை உமது திருவடியைத் தீண்ட என்ன தவஞ் செய்ததோ! அன்றி, இப்புலவர்கள் தாம் என்ன தவஞ் செய்தனரோ?

அரசி. அவரைச் சிறைப்படுத்தி இப்புலவர்கள் பாட்டுக்களைப் பெற உங்கள் புலவர், ஏன்? நமது புலவர், ஒட்டக்கூத்தர் என்ன தவஞ் செய்தனரோ?

ஒட். அரசி! செல்வியாரே! யான் முன்னமே பிழைபொறுத்திட வேண்டினேனே? அன்றியும், அதன் பயனையும், நீங்கள் கூறியதுபோல், இன்று பெற்றுவிட்டேனே! இனி, என்னை நாணிடச் செய்தல் வேண்டாமன்றோ.

அரச. (கூத்தரைப் பார்த்து) நல்லது. புலவரேறே! இப்புலவர்கட்கெல்லாம் தக்க பரிசுகள் தந்தனுப்புங்கள்.

காட்சி. ௬.

இடம். ஒட்டக்கூத்தப்புலவர் இல்லம்.

உரியோர். கூத்தர், வேற்றுருக்கொண்ட புகழேந்தி, கூத்தரின் புதல்வி, ஏவலன், முற்காட்சிகட்குரிய பிறர்.

கூத்தர் மகள். அப்பா! இதோ வைத்தியர் வந்திருக்கின்றனர். எழுந்து கை காட்டுங்கள். (காட்டல்)

புக. ஐயிர், காலையில் மருந்துண்டீர்களா? நேற்றையதற்கு இன்று, சற்று வெப்பின் வேகம் தணிந்திருப்பதாகத் தெரிகின்றதே.

ஒட். ஆம், கொஞ்சம் தணிவு தான், தலைவலி மிகக் குறைவு, ஐயிர்! யார் யாரோவந்து ஏதேதோ தந்து, வாய் வயிறெல்லாம் வேகும்படி செய்து விட்டார்கள். தாங்கள் கொடுத்தவரும் மருந்தினாற்றான் வெப்பும், இருமலும் குறைந்து வருகின்றன. உங்கட்கு மிக்க வந்தனம். நீங்கள் செய்யாமற் செய்த இப்பேருதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

புக. ஐயிர்! நான் ஒன்றும் செய்துவிட வில்லை. ஏதோ என் கையிலிருக்கும் ஒரு சிறுமருந்தினைத் தங்கட்குத் தந்து வந்தேன். தமிழ்த் தாய்க்குப் பெருமையளித்துவரும் தங்கட்கு, இத்தமிழுலகினரெல்லாம் கடமைப் பட்டிருக்கின்றனர். அத்தமிழுலகத்திலுள்ளவர்களில் யானும் ஒருவனே. எனக்கும் அக்கடமை யுண்டல்லவா?

ஒட். ஐயிர்! தாங்கள் கூறியபடி நான் தமிழ்த்தாய்க்குப் பெருமை யொன்றும் செய்துவிடவில்லையே. தமிழ்ப் புலவர் என்று வரும் பலரைச் சிறையிலிட்ட கொடும் பாவியாகிய யான் எங்ஙனம் தமிழ்த்தாய்க்குப் பெருமை செய்தவன் ஆவேன்? சிறுமைசெய்தவனே யாவன்.

புக. தங்கள் செய்கை ஒரு விதத்தில் நல்லதுதானே. போலிப் புலவர்களாக வருபவர்களை, ஓராண்டு சிறை புகுத்திக் கல்வி கற்பவராச் செய்துவந்தீர்கள். அங்ஙனம் கற்றுத் தேறியவர்கட்குப் பரிசளித்து வெளி விட்டீர்கள். இச்செய்கையிற் குறைகள் இல்லையே. உங்கள் செய்கையால் உண்மைப் புலவர்கள் ஆகியோர் எத்தனையோ பேர்.

ஒட். ஆம், என்றும் உலகம் போற்றாத செய்கையன்றோ இது. உலகத்தோடு ஒட்டி நடக்கக் கல்லாது போயினேன். என் செய்வேன். பாவம், போலிப்புலவர்கட்கு மட்டும் இடையூறு செய்தேனல்லேன். உண்மைப் புலவர் ஒருவருக்கும் தீங்கு செய்து விட்டேன்.

புக. அவர் யார்? அவருக்கு என்ன தீங்கு செய்தீர்கள்?

ஒட். பாண்டிய நாட்டுப் புலவர் தலைவராகிய புகழேந்தியாரையும் சிறையிலிட்டு வைத்தேன். அத்தீச்செய்கை என் நெஞ்சைச் சுட்டு வந்ததாலேயே எனக்கு இவ்வெப்புநோய் உண்டாயிற்றென்றே கூறலாம். பாவம்! எண்ணிய தொன்று, உண்மை யொன்றாக முடிந்தது.

புக. அவர் எத்தகையர்? எண்ணியதென்ன? முடிந்ததென்ன?

ஒட். புகழேந்தி என்பாரைத் தெரிந்துகொள்ளாத தமிழர்களும் உண்டோ? தமிழ்த்தாயின் முதல் மகன் அவரேயன்றோ! கலைமகள் அருளைப் பெற்றுள்ள அவரை யொத்தார் ஒருவர் உளரோ! அவரையும் சிறையிலிட்டு வைத்தேன் பாவியேன். —

புக. அவர், பாண்டி நாட்டில் பெரும்புலவராக இருக்கலாம். உங்கள் முன்னிலையில் சூரியன் முன் மின்மினிதானே! அவரையும் சிறையிலிட்டுப் பயிலச் செய்வதும் தக்கது தானே.

ஒட். ஐயோ! அறியாது கூறினீர், அவர்தான் சூரியன், நானே மின்மினி. புலமைகுறித்து அவரைச் சிறையிட்டேன் அல்லேன்.

புக. பின் எதற்காகவோ!

ஒட். பாண்டிய மன்னன் அவைக்களத்திலிருந்த அமைச்சன் ஒருவன், புகழேந்தி இங்கு வந்து, எங்கள் அரசன் அருளைப்பெற்று, என்னைச் சிறைப்படுத்த வருகின்றார் என அஞ்சல் அனுப்பினன். அவர் தம் பெரும் புலமையை யான் அறிவேன் ஆதலின், அவர் அங்ஙனஞ் செய்துவிடக் கூடும் என்று எண்ணி, முன் ஏற்பாடாக, அவரைச் சிறையிட்டு வைத்து, உண்மை அறிய முயன்றேன். தெய்வத் திருவருளால் நடந்தன பல. உண்மையை ஆராய்ந்தறிந்த போது, அவர் அங்ஙனம் எண்ணி வந்தவர் அல்லர் என்றும், தமது மாணவியாகிய எங்கள் அரசியைப் பார்த்துப் போகவே வந்தவரென்றும், புகழேந்திப்புலவர் அங்கிருப் பதால் தங்கட்குச் செல்வாக்கில்லை யென்று கண்ட அமைச்சன், அந்த அஞ்சலை அனுப்பினனென்றும் அறிந்து கொண்டேன். அந்தோ! அப்புலவர்பால் மன்னிப்புப் பெற்றுக் கொள்ளாமலும் இறக்க நேரிட்டுளதே! மன்னிப்புப் பெற்றிருப்பேனாயின் ஆறுதலுடன் இறப் பேன்.

புக. அப்படியா. அந்த அமைச்சன் வேலையா இது!

புதல்வி. அப்பா! பாற் கஞ்சி கொண்டுவந்திருக்கிறேன். சிறிது பருகுங்கள்.

ஒட். ஓ. இப்பாவிக்குக் கஞ்சியும் வேண்டுமா?

புக. நன்றாயிருக்கிறது. சிறிது பருகுங்கள்.

ஒட். இக் கஞ்சியே யன்று, புகழேந்திப் புலவரின் அமிழ்தம் போன்ற வெண்பாக்களில் ஒன்றைப் பிழிந்து கொடுத்தா லும் எனக்கு வேண்டாம்.

புக. (தன்னுருக்கொண்டு) ஓ. புலவர்களே! இவ்வுரையே என்னை உண்மைப் புலவருக்குகின்றது! இதற்கே தவங்கிடந்தேன். யானே தங்கள் அருளைப் பெற்றுள்ள புகழேந்தி.

ஒட். புலவீர்! என்னைப் பொறுத்தருளல் வேண்டும். இன்னா செய்தார்க்கு மினியவே செய்யும் சான்றோராகிய பெருந் தகையீர்! உமக்குப் பற்பல வணக்கம்.

ஏவ. புலவீர்காள்! நமது அரசரும், அரசியும், பாண்டிய மன்னரும், வேறு சில புலவர்களும் தங்களைப் பார்க்க இதோ வருகின்றார்கள்.

ஒட். என் நோய் முழுவதூஉம் நீங்கிற்று. இன்றே நன்னாள் இன்றே கலைமகள் திருநாள். (யாவரும் வருதல்) வருக! வருக! அமர்க! அமர்க! உங்கள் வருகையால் எனது இற்றில் தமிழ்த்தாயின் பேரில்லம் ஆகிவிட்டது. எல்லீரும் நெடிது வாழ்வீர்களாக!

தமிழ்த்தாய் வாழ்த்து.

வாழி திருமக ளோடு கலைமகள் கூடு கரந்தையில் வளர்சங்கம்!
வாழி யதனுயி ராய தலைவனு மாம கேசனு மொருசிங்கம்!
வாழி எமதுகல் லூரி யிதனிடை மேவி யறிவுறு சிறுவோரே!
வாழி மதியுய ராசி ரியர்கள்மா நேச ரேனும்அருள் பெரியோரே!
வாழி கலைமகள் நாளி லுயரிடம் மேவு பெருநிலக் கிழவோனே!
வாழி முருகனே யாகு மேனவெழில் வீரமுதலுறும் இளையோனே!
வாழி மிகவரு ளோடு விழவிதிற் கூடி மனமகிழ் அவையோரே!
வாழி தமிழனை! வாழி யிருநிலம்! வாழி எமதிறை! மிகவாழி!
